# அழகப்பா பல்கலைக்கழகம்

தேசியத் தர நிர்ணயக் குழுவின் மூன்றாம் சுற்றுத் தர மதிப்பீட்டில் A+(CGPA:3.64)
தகுதியும் மனிதவள மேம்பாட்டு அமைச்சகம் - பல்கலைக்கழக மானியக்குழுவின்
முதல் தரப் பல்கலைக்கழகம் மற்றும் தன்னாட்சித் தகுதியும் பெற்றது

காரைக்குடி– 630003.

தொலைநிலைக்கல்வி இயக்ககம்

# M.A HISTORY

32133

# CONTEMPORARY WORLD SINCE 1945 AD

# சமகால உலகம் கி.பி. 1945 இல் இருந்து

.

Copy Right Reserved For Private Use Only

**Author:**
**Dr. AR. Saravanakumar**
Head i/c
Department of History
Alagappa University
Karaikudi

**"The Copyright shall be vested with Alagappa University"**

**All rights reserved. No part of this publication which is material protected by this copyright notice may be reproduced or transmitted or utilized or stored in any form or by any means now known or hereinafter invented, electronic, digital or mechanical, including photocopying, scanning, recording or by any information storage or retrieval system, without prior written permission from the Alagappa University, Karaikudi, Tamil Nadu.**

**Reviewer:**
**Dr. G. Paranthaman**
Assistant Professor in History
Department of History
Alagappa University
Karaikudi.

# SYLLABI-BOOK MAPPING TABLE

## சமகால உலகம் கி.பி. 1945 இல் இருந்து - 1

| Syllabi | Mapping in Book |
|---|---|
| **அலகு - 1:** | |
| இரண்டாம் உலகப்போருக்குப் பின் உலகம் - ஐ.நா. சபை – தோற்றம் பணிகள்- சாதனைகள | **1-16** |
| **அலகு - 2:** | **17-25** |
| பண்ணாட்டு உறவு கொள்கைகள் பொருள் - இயல்பு – ராஜதந்திரம் | |
| **அலகு - 3:** | **26-40** |
| ராஜதந்திர வகைகள் - சமநிலை கொள்கை - கூட்டுப் பாதுகாப்பு | |
| **அலகு - 4:** | **41-57** |
| ஆசியா, ஆப்பிரிக்காவில் தேசியக்கொள்கை - ஆசியா, ஆப்பிரிக்காவில் புதிய நாடுகள் தோற்றம் - ஆசிய எழுச்சி - சீனா, ஜப்பான், இந்தோனேசியா. | |
| **அலகு – 5:** | **58-77** |
| இந்தியா - ஆப்பிரிக்க நாடுகளின் எழுச்சி - காலனி ஆதிக்கம் சிதைவு – புதிய காலனி ஆதிக்கம் | |
| **அலகு - 6:** | **78-93** |
| பிராந்தியவாதக்கொள்கை – ஐரோப்பிய பொருளாதார சமுதாயம் - ஐரோப்பிய ஐக்கியம் - அரேபிய சங்கம் - ஆப்பிரிக்க ஐக்கிய அமைப்பு | |
| **அலகு – 7 :** | **94-122** |
| அணி சேராக்கொள்கை – காமன் வெல்த் நாடுகள் - OAS –OPEC – ASEAN – SAARC – IBSA – BRICS | |
| **அலகு - 8 :** | **123-138** |
| ஆயுதப்போட்டி – படைக்குறைப்பு உடன்படிக்கைகள் - NPT – SALT – SALT-II – START-I - START-II - பண்ணாட்டு அரசியலில் அணு ஆதங்களின் தாக்கம் - சமூக – பொருளாதார நிலை. | |

**அலகு - 9:** **139-154**

இருமுனை அரசியல் - பனிப்போர் முடிவு – காரணங்கள் - நிலைகள் - பண்ணாட்டு உறவில் ஏற்படும் தாக்கம்.

**அலகு - 10:** **155-164**

வல்லரசுகளின் போட்டி - பனிப்போர் முடிவு – சோவியத் ரஷ்யாவின் சிதைவு

**அலகு - 11:** **165-178**

ஜெர்மனியின் மறு கூட்டமைப்பு – றுவுழு – உலகமயம் - இருதுருவ உலகக்கொள்கை

**அலகு - 12:** **179-194**

சமகால அரசியல் சிக்கல்கள் - உலக நாடுகளில் அமெரிக்காவின் பங்கு – கொரியப்போர் - வியட்னாம் போர்

**அலகு-13:** **195-208**

காங்கோ பிரச்சினை – கியூபா சிக்கல் - இந்திய-சீன பிரச்சினை - இஸ்ரேல்-அரேபிய சிக்கல்

**அலகு - 14:** **209-228**

ஈரான்-ஈராக் சிக்கல் - வளைகுடாப்போர் – இஸ்லாமிய நாடுகளின் அமைப்பு – உலக தீவிரவாதம் - தீவிரவாதப்போர்.

# பொருளடக்கம்

**அலகு-1 இரண்டாம் உலகப்போருக்குப் பின் உலகம் 1-16**

1.0 அறிமுகம்

1.1 நோக்கங்களை

1.2 இரண்டாம் உலகப்போர் கி.பி 1945 பின்

1.2.1 அமைதி உடன்பாடுகள்

1.3 ஐக்கிய நாடுகள் சபை, உருவாக்கம், செயல்பாடுகள், சாதனைகள்

1.3.1 ஐ.நா. சபை உருவாக்க பின்பற்றப்பட்ட அடிப்படை தத்துவங்கள்

1.3.2 ஐக்கிய நாட்டு சபை ஆற்றும் பணிகள

1.3.3 சர்வதேச நீதிமன்றம்

1.3.4 ஐக்கிய நாடுகளின் பிரகடனம்

1.3.5 ஐக்கிய நாட்டு சபையும் கூட்டுப் பாதுகாப்பும்

1.4 உங்கள் முன்னேற்றத்தை சோதிக்கும் வினாக்களுக்கான விடைகள

1.5 சுருக்கவுரை

1.6 முக்கிய வார்த்தைகள்

1.7 சுய மதிப்பீடு வினாக்கள் மற்றும் பயிற்சிகள்

1.8 மேலும் படிக்க

**அலகு-2 பன்னாட்டு உறவுகளின் கருத்துகள் 17-25**

2.0 அறிமுகம்

2.1 நோக்கங்கள்

2.2 பன்னாட்டு உறவுகளின் கருத்துகள்

2.2.1 பன்னாட்டு உறவுகளின் அணுகு முறைகள்

2.3 பொருள் மற்றும் இயல்பு

2.3.1 பன்னாட்டு உறவின் பொருள்

2.3.2 பன்னாட்டு உறவின் இயல்பு

1.3.3 பன்னாட்டு உறவின் நோக்கமும் தன்மையும்

2.4 இராஜதந்திரம

2.5 உங்கள் முன்னேற்றத்தைச் சோதிக்கும் வினாக்களுக்கான விடைகள்

2.6 சுருக்கவுரை

2.7 முக்கிய வார்த்தைகள்

2.8 சுயமதிப்பீடு வினாக்கள் மற்றும் பயிற்சிகள்

2.9 மேலும் படிக்க

**அலகு-3 இராஜதந்திரத்திம் 26-40**

3.0 அறிமுகம்

3.1 நோக்கங்கள்

3.2 இராஜதந்திரத்தின் வகைகள்

3.2.1 இராஜதந்திரத்தின் தன்மை

3.2.2 இராஜதந்திரத்தின் பரிணாம வளர்ச்சி

3.2.3 இரகசியக் கோட்பாடு

3.2.4 திறந்த அல்லது ஜனநாயகக் கோட்பாடு

3.2.5 தனிப்பட்ட முறையிலானக் கோட்பாடு

3.2.6 மாநாட்டுக் கோட்பாடு

3.3 அதிகாரச் சமநிலை

3.3.1 அதிகாரச் சமநிலையின் குணநலன்கள்

3.3.2 அதிகாரச் சமநிலையை நிலை நிறுத்தும் வழிமுறைகள்

3.3.3 அதிகாரச் சமநிலையும் சமநிலையாளரும்

3.3.4 அதிகாரச் சமநிலையின் நன்மைகளும் தீமைகளும்

3.4 கூட்டுப் பாதுகாப்பு

3.4.1 கூட்டுப் பாதுகாப்பும் கூட்டு நடவடிக்கைகளும

3.4.2 கூட்டுப் பாதுகாப்பும் அதிகாரச் சமநிலையும்

3.4.3 கூட்டுப்பாதுகாப்பும் இராணுவ ஒப்பந்தங்களும்

3.4.4 கூட்டுப்பாதுகாப்பு அமைப்புகள்

3.5 உங்கள் முன்னேற்றத்தைச் சோதிக்கும் வினாக்களுக்கான விடைகள்

3.6 சுருக்கவுரை

3.7 முக்கிய வார்த்தைகள்

3.8 சுயமதிப்பீடு வினாக்கள் மற்றும் பயிற்சிகள்

3.9 மேலும் படிக்க

**அலகு - 4 ஆசியா மற்றும் ஆப்பிரிக்கத் தேசியவாதம் 41-57**

4.0 அறிமுகம்

4.1 நோக்கங்கள்

4.2 ஆசியா மற்றும் ஆப்பிரிக்கத் தேசியவாதம்

4.2.1 ஆசியா தேசியவாதம்

4.2.2 ஆப்பிரிக்கத் தேசியவாதம்

4.3 ஆசியா மற்றும் ஆப்பிரிக்காவில புதிய நாடுகளின் அவசர நிலை

4.4 ஆசியா தேசியவாதத்தின் எழுச்சி

4.5 சீனா தேசியவாதத்தின் எழுச்சி

4.6 ஜப்பான் தேசியவாதத்தின் எழுச்சி

4.7 இந்தோனேஷியா தேசியவாதத்தின் எழுச்சி

4.8 உங்கள் முன்னேற்றத்தைச் சோதிக்கும் வினாக்களுக்கான விடைகள்

4.9 சுருக்கவுரை

4.10 முக்கிய வார்த்தைகள்

4.11 சுயமதிப்பீடு வினாக்கள் மற்றும் பயிற்சிகள்

4.12 மேலும் படிக்க

**அலகு 5 ஆப்பிரிக்கா மாநிலங்களின் எழுச்சி 58-77**

5.0 அறிமுகம்

5.1 நோக்கங்கள்

5.2 இந்திய தேசியத்தின் எழுச்சி

5.3 ஆப்பிரிக்கா மாநிலங்களின் எழுச்சி

5.3.1 ஆப்பிரிக்க எழுச்சிக்கான முக்கிய காரணங்கள்

5.3.2 மேற்கத்திய நாடுகளின் எதிர்ப்

5.4 காலனித்துவ அமைப்பின் சிதைவு

5.5 நவகாலனித்துவம்

5.6 உங்கள் முன்னேற்றத்தை சோதிக்கும் வினாகக்ள்

5.7 சுருக்கவுரை

5.8 முக்கிய வார்த்தைகள்

5.9 சுய மதிப்பீடு வினாக்கள் மற்றும் பயிற்சிகள்

5.10 மேலும் படிக்க

**அலகு - 6 பிராந்தியவாதத்தின் கருத்துகள் 78-93**

6.0 அறிமுகம்
6.1 நோக்கங்கள்
6.2 பிராந்தியவாதத்தின் கருத்துகள்
6.2.1 ஐக்கிய நாட்டுச் சபையும் பிராந்திய ஏற்பாடுகளும்
6.3 ஐரோப்பிய பொருளாதாரச் சமூகம்
6.4 ஐரோப்பிய ஒன்றியம்
6.4.1 ஐரோப்பிய ஒன்றியத்தின் நோக்கம்
6.4.2 உறுப்பு நாடுகள்
6.4.3 ஐரோப்பிய யூனியனின் அமைப்பு
6.4.4 ஐரோப்பிய யூனியனின் நடவடிக்கைகள்
6.5 அராப் லீக்
6.6 ஆப்பிரிக்க சங்கத்தின் அமைப்பு
6.7 உங்கள் முன்னேற்றத்தைச் சோதிக்கும் வினாக்களுக்கான விடைகள்
6.8 சுருக்கவுரை
6.9 முக்கிய வார்த்தைகள்
6.10 சுயமதிப்பீடு வினாக்கள் மற்றும் பயிற்சிகள்
6.11 மேலும் படிக்க

**அலகு- 7 கூட்டுச் சேராக் கொள்கை 94-122**

7.0 அறிமுகம்
7.1 நோக்கங்கள்
7.2 கூட்டுச் சேராக் கொள்கை
7.2.1 கூட்டுச் சேராக் சொள்கையின் தோற்றம்
7.2.2 கூட்டுச் சேராக் கொள்கையின் நோக்கமும், அதன் தன்மையும்
7.3 பொதுநல அரசுகள்
7.3.1 பொது நல அரசுகள் அமைப்பின் வளர்ச்சி
7.3.2 பொது நல அரசுகள் அமைப்பில் புதிய நாடுகள் சேருதல்
7.3.3 காமன்வெல்த் அமைப்பின் நோக்கம்
7.3.4 காமன்வெல்த்தின் தன்மை
7.3.5 காமன்வெல்த் அமைப்பின் செயல்பாடுகள்
7.3.6 காமன்வெல்த் நாடுகளின் தலைவர்கள் கூட்டம்
7.3.7 பொது நல அரசின் துறைகள்
7.4 அமெரிக்க மாநிலங்களின் அமைப்பு (OAS)
7.5 பெட்ரோலிய ஏற்றுமதி நாடுகளின் அமைப்பு(OPES)
7.6 தென்கிழக்கு ஆசிய நாடுகளின் சங்கம் (ASEAN)
7.7 பிராந்திய ஒத்துழைப்புக்கான தெற்காசிய சங்கம்(SAARC)
7.8 இந்தியா பிரேசில் தென் ஆப்பிரிக்கா(IPSA)
7.9 பிரேசில், ரஷ்யா, இந்தியா, சீனா, தென் ஆப்ரிக்கா(BRICS)
7.10 உங்கள் முன்னேற்றத்தை சோதிக்கும் வினாகக்ள்
7.11 சுருக்கவுரை
7.12 முக்கிய வார்த்தைகள்
7.13 சுய மதிப்பீடு வினாக்கள் மற்றும் பயிற்சிகள்
7.14 மேலும் படிக்க

**அலகு 8 ஆயுதக்குறைப்பு** **123-138**

8.0 அறிமுகம்
8.1 நோக்கங்கள்
8.2 ஆயுத இனம்
8.3 ஆயுதக்குறைப்பு ஒப்பந்தங்கள்
8.4 அணுசக்தி கட்டுப்பாடற்ற ஒப்பந்தம்
8.5 அணு ஆயுதப் பரவல் தடை ஒப்பந்தம்
8.6 மூலோபய ஆயுத வரம்பு பேச்சு
8.7 மூலோபய ஆயுதக் குறைப்பு ஒப்பந்தம்
8.8 அணு ஆயுதங்களின் குறைப்பு ஒப்பந்தம்
8.9 விரிவான அணுசக்தி சோதனை தடை ஒப்ப்நதம்
8.10 சர்வதேச அரசியலில் அணு ஆயுதங்களின் தாக்கம்
8.11 உங்கள் முன்னேற்றத்தைச் சோதிக்கும் வினாக்களுக்கான விடைகள்
8.12 சுருக்கவுரை
8.13 முக்கிய வார்த்தைகள்
8.14 சுயமதிப்பீடு வினாக்கள் மற்றும் பயிற்சிகள்
8.15 மேலும் படிக்க

**அலகு-9 கெடுபிடிப்போர்** **139-154**

9.0 அறிமுகம்
9.1 நோக்கங்கள்
9.2 இருமுனை அரசியல்
9.3 கெடுபிடிப்போர்
9.3.1 கெடுபிடிப்போரின் காரணங்கள்
9.3.2 கெடுபிடிப்போரின் நிலைகள்
9.3.3 கெடுபிடிப் போர்க்கால நிகழ்ச்சிகள
9.4 சர்வதேச உறவுகளில் அதன் தாக்கம்
9.4.1 தூரக்கிழக்கில் கெடிபிடிப்போர்
9.4.2 தென் கிழக்காசியாவில் கெடுபிடிப்போர்
9.4.3 தென் கிழக்கு ஆசியப்பாதுகாப்பு ஒப்பந்தம்
9.4.4 இந்திய உபகண்டத்தில் கெடுபிடிப்போர்
9.4.5 மத்தியகிழக்கில் கெடுபிடிப் போர்
9.4.6 ஐரோப்பாவில் கெடுபிடிப்போர்
9.4.7 ஆப்பிரிக்காவில் கெடுபிடிப்போர்
9.4.8 லத்தீன் அமெரிக்காவில் கெடுபிடிப்போர்
9.4.9 கியூபா நெருக்கடி
9.5உங்கள் முன்னேற்றத்தைச் சோதிக்கும் வினாக்களுக்கான விடைகள்
9.6 சுருக்கவுரை
9.7 முக்கிய வார்த்தைகள்
9.8 சுயமதிப்பீடு வினாக்கள் மற்றும் பயிற்சிகள்
9.9 மேலும் படிக்க

**அலகு-10 நாடுகளுக்குகிடையிலான போட்டிகள்** **155-164**

10.0 அறிமுகம்
10.1 நோக்கங்கள்
10.2 நாடுகளுக்குகிடையிலான போட்டிகள்

10.3 கெடுபிடி போரின் முடிவு
10.4 சோவியத் ஒன்றியத்தின் சரிவு
10.5 உங்கள் முன்னேற்றத்தை சோதிக்கும் வினாகக்ள்
10.6 சுருக்கவுரை
10.7 முக்கிய வார்த்தைகள்
10.8 சுய மதிப்பீடு வினாக்கள் மற்றும் பயிற்சிகள்
10.9 மேலும் படிக்க

**அலகு-11 ஜெர்மனியின் மறு இணைவு 165-178**

11.0 அறிமுகம்
11.1 நோக்கங்கள்
11.2 ஜெர்மனியின் மறு இணைவு
  11.2.1 இரண்டாம் உலகப்போருக்குப்பின் ஜெர்மனி
  11.2.3 ஜெர்மானிய மறு இணைவின் பல்வேறு நிலைகள்
  11.2.4 அரசியல் இணைவு
11.3 உலக வர்த்தக அமைப்பு
11.4 உலகமயமாதல்
11.5 யுனிபோலார் உலகின் கருத்து
11.6 உங்கள் முன்னேற்றத்தை சோதிக்கும் வினாக்
11.7 சுருக்கவுரை
11.8 முக்கிய வார்த்தைகள்
11.9 சுய மதிப்பீடு வினாக்கள் மற்றும் பயிற்சிகள்
11.10 மேலும் படிக்க

**அலகு-12 சமகால அரசியல் பிரச்சனைகள் 179-194**

12.0 அறிமுகம்
12.1 நோக்கங்கள்
12.2 சமகால அரசியல் பிரச்சனைகள்
12.3 உலக விவகாரங்களில் அமெரிக்காவின் பங்கு
12.4 கொரியா போர்
12.5 வியட்நாம் போர்
12.6 உங்கள் முன்னேற்றத்தை சோதிக்கும் வினாக்
12.7 சுருக்கவுரை
12.8 சுய மதிப்பீடு வினாக்கள் மற்றும் பயிற்சிகள்
12.9 மேலும் படிக்க

**அலகு-13 நாடுகளுக்குகிடையிலான போட்டிகள் 195-208**

13.0 அறிமுகம்

13.1 நோக்கங்கள்

13.2 காங்கோ விவகாரம்

13.3 கியூபான் நெருக்கடி

13.4 இந்தோ - சீனா மோதல்

13.5 அராப் - இஸ்ரேல் மோதல்

13.6 உங்கள் முன்னேற்றத்தை சோதிக்கும் வினாகக்ள்

13.7 சுருக்கவுரை

13.8 முக்கிய வார்த்தைகள்

13.9 சுய மதிப்பீடு வினாக்கள் மற்றும் பயிற்சிகள்

13.10 மேலும் படிக்க

**அலகு 14 பயங்கரவாதம் 209-228**

14.0 அறிமுகம்

14.1 நோக்கங்கள்

14.2 ஈரான் - ஈராக் மோதல்

14.3 வளைகுடா போர்

14.4 இஸ்லாமிய நாடுகளில் அமைப்பு

14.5 சர்வதேசப் பயங்கரவாதம்

14.6 பயங்கரவாதத்திற்கு எதிரானப்போா

14.7 உங்கள் முன்னேற்றத்தை சோதிக்கும் வினாக்

14.8 சுருக்கவுரை

14.9 முக்கிய வார்த்தைகள்

14.10 சுய மதிப்பீடு வினாக்கள் மற்றும் பயிற்சிகள்

14.11 மேலும் படிக்க

**மாதிரி வினாக்கள் 229**

# தொகுதி I இரண்டாம் உலகப்போருக்குப் பின்

# அலகு 1 இரண்டாம் உலகப்போருக்குப் பின்

1.0 அறிமுகம்
1.1 நோக்கங்கள
1.2 இரண்டாம் உலகப்போர் கி.பி 1945 பின்
  1.2.1 அமைதி உடன்பாடுகள்
1.3 ஐக்கிய நாடுகள் சபை, உருவாக்கம், செயல்பாடுகள், சாதனைகள்
  1.3.1 ஐ.நா. சபை உருவாக்க பின்பற்றப்பட்ட அடிப்படை தத்துவங்கள்
  1.3.2 ஐக்கிய நாட்டு சபை ஆற்றும் பணிகள
  1.3.3 சர்வதேச நீதிமன்றம்
  1.3.4 ஐக்கிய நாடுகளின் பிரகடனம்
  1.3.5 ஐக்கிய நாட்டு சபையும் கூட்டுப் பாதுகாப்பும்
1.4 உங்கள் முன்னேற்றத்தை சோதிக்கும் வினாக்களுக்கான விடைகள
1.5 சுருக்கவுரை
1.6 முக்கிய வார்த்தைகள்
1.7 சுய மதிப்பீடு வினாக்கள் மற்றும் பயிற்சிகள்
1.8 மேலும் படிக்க

## 1.0 அறிமுகம்

முதல் உலகப்போருக்குப் பின் வல்லரசுகளும் போரில் வெற்றி பெற்ற பிற நாடுகளும் பாரிசிற்கு அருகிலுள்ள வெர்செயில்ஸ் மாளிகையில் கூடி அமைதி ஒப்பந்தங்களைத் தயாரித்தது போல் இரண்டாம் உலகப் போருக்குப் பின் தயாரிக்கப்படவில்லை. பிரிட்டன், பிரான்ஸ், அமெரிக்கா, ரஷியா ஆகிய வல்லரசுகள் உடன்படிக்கை நிபந்தனைகளைத் தயாரித்து அச்சு நாடுகளையும் அதனுடனிணைந்த நாடுகளையும் ஏற்றுக் கொள்ளுமாறு செய்தன. ஜெர்மனியுடன் அதிகாரபூர்வமாக இறுதியான அமைதி உடன்பாடு செய்து கொள்ளப்படவில்லை. எனினும் 1945 ஜூலையில் பாட்ஸ்டாம் என்ற இடத்தில் வல்லரசுகள் கூடி சில தற்காலிக ஏற்பாடுகளைச் செய்தன. பிற நாடுகளை இத்தாலி, பல்கேரியா, ஹங்கேரி, ருமேனியா, பின்லாந்து, ஆஸ்திரியா, ஜப்பான் ஆகியவற்றுடன் தனித்தனியாக ஒப்பந்தங்கள் செய்து கொள்ளப்பட்டன.

## 1.2 இரண்டாம் உலகப்போர் கி.பி 1945 பின்

### 1.2.1 அமைதி உடன்பாடுகள்



**Chrchil,Winston; Truman,Harry; Stalin, Joseph**

**(a)பாட்ஸ்டாம் மாநாடு 1945 :**

ஜெர்மனியின் வீழ்ச்சிக்குப்பின் ரஷிய அதிபர் ஸ்டாலின், அமெரிக்க அதிபர் ட்ரூமன், பிரிட்டிஷ் பிரதமர் அட்லி ஆகியோர் பெர்லினுக்கு அருகிலுள்ள பாட்ஸ்டாம் என்ற இடத்தில் 1945 ஜூலை 17 முதல் ஆகஸ்ட்

குறிப்பு

2 வரை கலந்து பேசி ஜெர்மனி மீதான தற்காலிக ஏற்பாடுகள் சிலவற்றை முடிவு செய்தன. அதன்படி,

- நேச நாடுகளின் வெளிநாட்டமைச்சர்கள் அடங்கிய கவுன்சில் இத்தாலி, ருமேனியா, பல்கேரியா, ஹங்கேரி, பின்லாந்து ஆகிய நாடுகளுடனான உடன்படிக்கைகளைச் செய்யும்.
- ஜெர்மனி நான்கு மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டு, அவை ஒவ்வொன்றும் பிரிட்டன், பிரான்ஸ், அமெரிக்கா, ரஷ்யா ஆகிய வல்லரசுகளின் இராணுவக் கட்டுப்பாட்டின்கீழ் வைக்கப்படும்.
- (iii) இராணுவ சம்பந்தப்பட்ட தொழிற்சாலைகள் அனைத்தும் அழிக்கப்படும்.
- (iv) ஜெர்மனியில் நாஜிக் கட்சி முற்றிலும் ஒழிக்கப்பட வேண்டும்.
- (v) ஜெர்மனியில் மக்களாட்சி முறைமைகள் படிப்படியாக புகுத்தப்பட்டு உள்ளாட்சித் துறைகளிலிருந்து படிப்படியாக அனைத்துத் துறைகளிலும் புகுத்தப்பட வேண்டும்.
- (vi) போர் இழப்பீடாக ரஷியாவிற்கு ஜெர்மனியிலுள்ள தொழிற் சாலையந்திரங்கள் வழங்கப்பட்டன.
- (vii) பல அக்கிரமங்கள் புரிந்த நாஜிக்கட்சி மற்றும் அச்சு நாட்டுத் தலைவர்களை போர்க் குற்றவாளிகளாக விசாரித்து தண்டனை வழங்க வேண்டும்.
- vili) போலந்தில் தடைகளற்ற சுதந்திரமான தேர்தல் நடத்தி அதில் வெற்றி பெறும் கட்சியிடம் ஆட்சிப் பொறுப்புக்களை ஒப்படைக்க வேண்டும்.

**(b)இத்தாலி :**

இத்தாலியுடன் செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கையின் படி,

- செயின்ட் பெர்னார்டு, மௌன்ட் தாபோர், செபர்டன், மௌன்ட் சினிஸ், டியூடா, பெய்கா ஆகிய பிரதேசங்களை இத்தாலி பிரான்சிற்கு அளிக்க வேண்டும்.
- டெடிகோனஸ் தீவுகள் மற்றும் ரோட்ஸ் தீவுகளை கிரீசிற்கு கொதிக்க வேண்டும்.
- இத்தாலியில் முற்றிலுமாக படைக் குறைப்புச் செய்யப்பட்டது.
- ஆப்பிரிக்காவிலுள்ள தனது குடியேற்றங்களை இழந்தது.
- போர் இழப்பீடாக ரஷியாவிற்கு ஏழு ஆண்டுகளில் 100 மில்லியன் டாலர் வழங்க வேண்டும்.

**(c)பல்கேரியா :**

பல்கேரியாவுடன் செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கையின்படி அந்நாட்டின் எல்லை 1945 ஜனவரியில் உள்ளது போல் இருக்க வேண்டும். முற்றிலுமாக படைக்குறைப்புச் செய்ய வேண்டும். கிரீசிற்கு 45 மில்லியன் டாலரும், யூகோஸ்லாவியாவிற்கு 25 மில்லியன் டாலரும் இழப்பீடாக 8 ஆண்டு காலத்தில் கொடுக்க வேண்டும்.

**(d)ஹங்கேரி :**

ஹங்கேரியுடன் செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கையின் படி அந்நாட்டின் எல்லை 1938 ஜனவரியில் உள்ளதுபோல் குறைக்கப்பட வேண்டும். டான்யூப் ஆற்றிற்கு மேற்கிலுள்ள மூன்று ஊர்களை கோஸ்லாவியாவிற்குக் கொடுக்க வேண்டும். முற்றிலுமாகப் படைக் குறைப்புச் பயப்பட வேண்டும். ரஷியாவிற்கு 200 மில்லியன் டாலரும்

குறிப்பு

செக்கோஸ்லோவாகியாவிற்கும், யூகோஸ்லாவியாவிற்கும் தலா 50 மில்லியன் டாலரும் இழப்பீடாகக் கொடுக்க வேண்டும்.

**(e) ருமேனியா**

ருமேனியாவின் எல்லை 1941 ஜனவரியில் உள்ளது போலிருக்க வேண்டும். படைக்குறைப்பு செய்யப்பட்டது. ரஷியாவிற்கு எட்டாண்டு காலத்திற்குள் 300 மில்லியன் டாலர் இழப்பீடாகக் கொடுக்க வேண்டும்.

**(f) பின்லாந்து**

பின்லாந்துடன் செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கைப்படி அந்நாட்டின் எல்லை 1941 ஜனவரியில் உள்ளதுபோல் இருக்க வேண்டும். 1940ல் அந்நாடு ரஷ்யாவுடன் செய்து கொண்ட உடன்படிக்கை கௌரவிக்கப்பட வேண்டும். ஹேங்கோ பற்றிய தனது குத்தகை உரிமையை ரஷியா விட்டுக் கொடுத்து பெரிக்கலா - உட்பகுதியில் கப்பற்படைதளம் வைக்க அனுமதிக்க வேண்டும். அதன் படைகள் குறைக்கப்பட வேண்டும். ரஷியாவிற்கு 300 மில்லியன் டாலரை எட்டாண்டு காலத்திற்குள் இழப்பீடாகக் கொடுக்க வேண்டும்.

**(g)ஆஸ்திரியா**

ஆஸ்திரியாவுடனான அமைதி ஒப்பந்தம் பத்தாண்டுகளுக்குப் பின் 1955-ல் தான் கையெழுத்தானது. அதன்படி அதன் எல்லைகள் 1938 ஜனவரியில் உள்ளபடி ஆக்கப்படவேண்டும். ரஷியாவிற்கு ஆறாண்டு காலத்திற்குள் 150 மில்லியன் டாலர் இழப்பீடாகக் கொடுக்க வேண்டும். ஆஸ்திரியா ஒரு நடுநிலை நாடாக நடத்தப்பட வேண்டும் என்பதும் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

**(h)ஜப்பான் :**

ஜப்பான் ஆறாண்டு காலம் அமெரிக்க இராணுவ ஆக்கிரமிப்பின்கீழ் வைக்கப்பட்டது. தளபதி மக் ஆர்தர் அதன் நிர்வாகத்தை நடத்தி புதிய அரசியலமைப்பு. வகுத்துக் கொடுத்தார். - 1951 - செப்டம்பர் 8-ல் சான்பிரான்சிஸ்கோவில் அமைதி ஒப்பந்தம் கையெழுத்தானது. அதன்படி கீழ்க்கண்ட முடிவுகள் செய்யப்பட்டன.

- கொரியாவின் சுதந்திரம் அங்ககரிக்கப்பட வேண்டும்.
- பார்மோசா மற்றும் பெஸ்கார்டஸ் தீவுகள் சீனாவிற்கு கொடுக்கப்பட வேண்டும்.
- சகாலின் தீவும் குரில் தீவுகளும் ரஷியாவிற் கொடுக்கப்பட்டன.
- சீனாவின் மீதான ஜப்பானிய உரிமைகள் அனைத்தும் கைவிடப்பட வேண்டும்.
- ஜப்பான் நேசநாட்டினருக்கு இழப்பீடு கொடுக்கவேண்டும் என்பது கொள்கையளவில் ஏற்றுக் கொள்ளப்பட்டாலும், அவ்வாறு இழப்பீடு கொடுப்பது ஜப்பானின் பொருளாதாரத்தை சீர்குலைத்து விடுமாதலால் பரஸ்பரம் பேச்சு வார்த்தை மூலம் அது ஏற்பாடு செய்யப்பட வேண்டும்.
- போர்க் காலத்தில் இழைத்த குற்றங்களுக்காக ஜப்பான் ஆட்சியாளர்கள்

**உங்கள் முன்னேற்றத்தைச் சரிபார்க்கவும்**

1. இரண்டாம் உலகப்போரைப் பற்றியக் கருத்துகளை குறிப்பிடுக?
2. இரண்டாம் உலகப்போருக்குப் பின் ஏற்பட்ட அமைதி உடன்பாடுகள் பற்றி விவரிக்கவும்?

குறிப்பு

## 1.3 ஐக்கிய நாட்டு சபை

1945-ஆம் ஆண்டு சேன்பிரான்சிங்கோ என்ற இடத்தில் வைத்து ஐக்கிய நாட்டு சபை ஆரம்பிக்கப்பட்டது. ஐ.நா. சபை ஆரம்பிப்பதற்கு முன்னோடியாக உலக அரங்கில் பல மாநாடுகள் நடந்தேறின. சர்வதேச சங்கத்தின் குறைபாடுகளை நிவர்த்தி செய்யவும், போரைத் தவிர்க்கவும், பன்னாட்டுப் பிரச்சனைகளுக்கு சுமூகமான அளவில் தீர்வுகாணவும், உலகில் நாடுகளுக்கிடையே சமூக பொருளாதார ரீதியில் சம நிலையைத் தோற்றுவிக்கவும் பன்னாட்டு அளவில் ஒரு அமைப்பைத் தோற்றுவிக்கும் எண்ணம் இரண்டாம் உலகப் போர் நடைபெற்றுக் கொண்டிருக்கும் காலகட்டத்தில் உருவானது. இவ்வெண்ணத்தின் அடிப்படையில் நடந்தேறிய மாநாடுகள், உருவாக இருக்கும் பன்னாட்டு அமைப்பிற்கான கோட்பாட்டினை நிர்ணயிக்கும் நடவடிக்கைகளை மேற்கொண்டதோடு, அவ்வமைப்பின் துணைச் செயலாண்மைப் பிரிவுகளாகிய உணவு மற்றும் விவசாய அமைப்பு, வளர்ச்சிக்கான சர்வதேச வங்கி, சர்வதேச நிதி மற்றும் சர்வதேச நீதிமன்றம் போன்றவற்றைப் பற்றி ஆலோசித்தது.



ஐக்கிய நாட்டு சபை

### 1.3.1 ஐ. நா. சபை உருவாக்க பின்பற்றப்பட்ட அடிப்படை தத்துவங்கள்

ஐ.நா. சபை பின் கூறப்பட்டுள்ள ஏழு அடிப்படைத் தத்து வங்கள் மூலம் உருவாக்கப்பட்டது. அவை :

- அங்கத்துவ நாடுகள் அனைத்தும் சம இறைமை வாய்ந்தவை.
- (ii) அங்கத்தினர்கள் உரிமைகளையும் தங்களுடைய அங்கத்துவத்தால் பெறவேண்டுமெனில், ஐ. நா. சாஸனத்தில் கூறப்பட்டுள்ள கடப்பாடுகளை தவறாமல் பின்பற்றல் வேண்டும்.
- (iii) பன்னாட்டு சமாதானத்திற்கு பங்கம் ஏற்படாத அளவில் பிரச்சனைகளை அங்கத்தினர்கள் சமாதான வழிமுறைகளில் தீர்வுசெய்துகொள்ள வேண்டும்.
- (iv) பன்னாட்டு உறவுகளை நிலை நிறுத்த வலிமையை பயன்படுத்துதலை நாடுகள் தவிர்க்க வேண்டும்.
- (V) பன்னாட்டு சமாதானத்தை நிலை நிறுத்த ஐ.நா. சபை மேற்கொள்ளும் அத்தனை நடவடிக்கைகளையும் அங்கத்துவ நாடுகள் ஆதரிக்க வேண்டும். ஐ.நா. சபையின் நடவடிக்கைகளை எதிர்க்கும் நாடுகளுக்கு எந்நிலையிலும் துணை நிற்க கூடாது.
- (vi) அங்கத்தினர்கள் அல்லாத நாடுகளும் இத்தத்துவங்களைப் பின்பற்றும் அளவிலான சூழ்நிலைகளை பன்னாட்டு அரங்கில் தோற்றுவிக்க வேண்டும்.

- (vii) ஒரு நாட்டின் உள் நாட்டு விவகாரத்தில் ஐக்கிய நாட்டு சபை எந்நிலையிலும் தலையிடக் கூடாது என்பதாகும்.

### 1.3.2 ஐக்கிய நாட்டு சபை ஆற்றும் பணிகள்

ஐக்கிய நாட்டு சபை ஆற்றும் பணிகளை இரு வகையாகப் பிரிக்கலாம். அவை அரசியல் சாராதவை, அரசியல் சார்ந்தவை என்பவையாகும். ஐ.நா. சபையன் பல்வேறு அமைப்புக்களின் மூலம் சமாதானத்தை நிலை நிறுத்துதல் அரசியல் சாராத பணியாகும். சுமூகமான ரீதியில் பிரச்சனைகளுக்குத் தீர்வு காண்பது மற்றும் போரைத் தவிர்த்தல் ஆகியவை அரசியல் சார்ந்த பணியில் அடங்கும். சமாதானத்தை நிலை நிறுத்தி சுமூகமாகப் பிரச்சனைகளைத் தீர்வு செய்ய ஐக்கிய நாட்டு சபை நான்கு நிலையில் செயல்புரிகிறது. பன்னாட்டு பிரச்சனைகள் பெரும் போராய் உருவெடுக்காமல் தடுத்து நிறுத்த இராணுவ நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் முதல் நிலையாகும். பன்னாட்டு பிரச்சனைகளை தடை செய்து, சமாதான முறைிலான தீர்வு ஏற்படுத்த, சமாதான நிலை நிறுத்த நடவடிக்கைகளை மேற்கொள்ளும் காவல் பணிகள் இரண்டாவது நிலையாகும். அரசியல் விவேக நடவடிக்கைகள் மூலம் பன்னாட்டு பிரச்சனைகளுக்கு பேச்சுவார்த்தை மற்றும் நடுவர் தீர்ப்பு முறையின் அடிப்படை யில் தீர்வு காண்பது மூன்றாவது நிலையாகும். பன்னாட்டு அரங்கில் நாடுகளுக்கிடையே படைக்குறைப்பை ஏற்படுத்தி போரைத் தவிர்த்து சமாதானத்தை ஏற்படுத்தல் நான்காவது நிலையாகும்.

பன்னாட்டு சமாதானத்தை நிலை நிறுத்தி உலக நாடுகளுக்கு பாதுகாப்பு அளிக்கும் பெரும் பொறுப்பு ஐக்கிய நாட்டுச் சபைக்கு கொடுக்கப்பட்டுள்ளது. இப்பொறுப்பை ஏற்று நடத்தும் பொறுப்பு பாதுகாப்புச் சபைக்கு அளிக்கப்பட்டாலும், பொது அவையும் பெரும் பொறுப்பு ஏற்றுசெயல்படுகிறது. பொது அவையால் பெரிய பிரச்சனைகளுக்குத் தீர்வு அளிக்க முடியாவிட்டாலும், பன்னாட்டு அரங்கில் பதட்டத்தைக் குறைக்க முயற்சிகள் மேற்கொள்ளுகின்றன. ஐக்கிய நாட்டு சபை பன்னாட்டுப் பிரச்சனைகளுக்குத் தீர்வுகாண, நடு நிலையாளராய் பணிபுரிந்து உலக அரங்கில் பல பெரும் போர்களைத் தவிர்த்துள்ளது. 1947-ஆம் ஆண்டு நெதர்லாந்துக்கும், இந்தோனேசியாவுக்கும் இடையே போர் ஆரம்பித்தது.

ஐக்கிய நாட்டு சபை பேச்சு வார்த்தைகள் மூலம் இரு நாடுகளுக்கும் இடையே போர் நிறுத்தத்தை ஏற்படுத்தியது. ஹேக் என்ற இடத்தில் ஐ.நா சபையை நடு நிலையாளராய் வைத்து ஒரு மாநாடு நடத்தப்பட்டது. முடிவில் 1949-ஆம் ஆண்டு இந்தோனேசியா சுதந்திரம் பெற்றது. 1948-ஆம் ஆண்டு நடந்த அரேபிய இஸ்ரேல் போரில் ஐ.நா. சபை தலையிட்டது. வட கொரியா தென் கொரியா மீது படையெடுத்தபோது ஐ. நா. படை ஆக்கிரமிப்பாளரைத் தண்டிக்க அனுப்பப்பட்டது. வட கொரியா படைகள் துரத்தப்பட்டது.. ஐ.நாவும் வடகொரியாவும் ஒரு போர் நிறுத்த ஒப்பந்தத்தை செய்து கொண்டது, சூயஸ் கால்வாய் பிரச்சனையில் ஆங்கிலோ - பிரெஞ்சு படைகள் எகிப்தைத் தாக்கியபோது ஐ.நா. சபை இஸ்ரவேலுக்கும் எகிப்திற்கும் இடையே ஒரு சண்டை நிறுத்த ஒப்பந்தத்தை பேச்சு வார்த்தைகளின் மூலம் ஏற்படுத்தி கொடுத்தது. காங்கோ பிரச்சனைக்கு பெல்ஜியத்துடன் பேச்சுவார்த்தை நடத்தி சுமூகமான ஒரு தீர்வை ஐ.நா சபை ஏற் படுத்தியது. சைப்ரஸில் பதட்ட நிலையைத் தணிக்க ஐ.நா-வின் சமாதானப் படைகள் பெரிதும் உதவின. கிரீசுக்கும் துருக்கிக்கும் இடையே போர் எழுந்தபோது, சைப்ரஸ் தீவை தனது கட்டுப் பாட்டின் கீழ் ஐ.நா.. கொண்டுவந்து, பிரச்சனைக்கு சுமூகமான தீர்வை

குறிப்பு

உருவாக்கியது. 1965-ஆம் ஆண்டு இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையே போர் நடந்தபோது, சண்டை நிறுத்தத்திற்கான ஏற்பாட்டை ஐ.நா. மேற்கொண்டதோடு, அவ்வேற்பாட்டின் செயல்பாட்டை ஐ.நா பிரதி நிதிகள் மூலம் மேற்பார்வை செய்தது. ரொடீஷியா, நமீபியா போன்ற ஆப்பிரிக்க நாடுகளின் விடுதலைக்காக ஐ.நா. பெரும் முயற்சிகளை மேற்கொண்டது. தெற்கு ஆப்பிரிக்காவில் நிலவிய இனவெறிக் கொள்கைக்கு எதிராக பல தீர்மானங்களை ஐ.நா. சபை மேற்கொண்டது. படைக் குறைப்பு நடவடிக்கைகள் மூலம் பன்னாட்டளவில் சமாதானத்தை ஏற்படுத்த, படைக்குறைப்பு குழு ஒன்றை ஐ. நா உருவாக்கியது. காப்பீட்டு பகுதிகளையும், சுயாட்சி அந்தஸ்தைப் பெறாத பகுதிகளையும், ஐ.நா. சபை நேரடியாக கவனித்து வந்தது. இப்பகுதிகளின் விடுதலைக்காக முயற்சித்து வருகிறது. கடந்த ஆண்டு நடைபெற்ற ஈராக்கியப் போரில் ஐ.நா சபை பெரும் பங்கு வகித்தது.

இவ்வாறு, உலகின் பல பகுதிகளில் சண்டை நிறுத்தத்திற்காக பல்வேறு முயற்சிகளை ஐ.நா. சபை மேற்கொண்டு வருகிறது. பிரச்சனைகளுக்கு சமாதான தீர்வுகளை ஏற்படுத்தியுள்ளது. வலிமை, மேற்பார்வை, நடுவர் தீர்ப்பு, பேச்சு வார்த்தை, சமரசம் போன்ற வழிமுறைகளின் வாயிலாக பிரச்சனைகளுக்கு நேரடி தீர்வும், பாதுகாப்புச் சபை, பொது அவை ஆகிய அமைப்புக்களின் தீர்மானங்கள் வாயிலாக பிரச்சனைகளுக்கு மறைமுக தீர்வும் ஐ. நா. அளித்துள்ளது. இத்தீர்வுகளின் வாயிலாக உலகின் பல பகுதிகளில் பதட்ட நிலை தணிக்கப்பட்டுள்ளது. இம்முயற்சிகளின் வாயிலாக பன்னாட்டரங்கில் சமாதானத்தை நிலை நாட்டும் முயற்சியை ஐக்கிய நாட்டுசபை மேற் கொண்டு வருகிறது.

### 1.3.3 சா்வதேச நீதிமன்றம்

சர்வதேச சங்கத்தின் நிரந் தர நீதிமன்றத்தின் மாதிரிப் படிவத்தில் பன்னாட்டு நீதிமன்றம் உருவாக்கப்பட்டுள்ளது. ஹேக் என்ற இடத்தில் அமைந்துள்ள இந்நீதி மன்றத்தில், பல்வேறு நாடுகளைச் சாாந்த பதினைந்து நீதிபதிகள் இடம் பெறுகின்றனர். இந்நீதிபதிகள் பொது அவை அவை அங்கத்தினராலும் பாதுகாப்புச் சபை அங்கத்தினராலும் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். இந்நீதிமன்றம் அளிக்கும் தீர்ப்பை அங்கத்துவ நாடுகள் ஏற்கின்றன. இம்முடிவுகளுக்கு எதிராக பிற தீர்ப்பாயங்களைப் பயன்படுத்தும் உரிமை அங்கத்துவ நாடுகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. பொது அவை, பாதுகாப்பு சபை, பிற குழுக் கள் கேட்கும் காரியங்களின் மேல் நீதிமன்றம் ஆலோசனை வழங்குகிறது.

ஐ.நா.வின் நான்கு உறுப்புக்களும் அரசுகளை அங்கத்தினராகக் கொண்டவையாகும். ஆனால், பன்னாட்டு நீதிமன்றமும், தலைமைச் செயலகமும் தனி நபர்களின் உதவியுடன் பணி புரிகின்றன ஐ.நா வின் நீதித் துறையின் முக்கிய அம்சமாகத் திகழ்வது பன்னாட்டு நீதிமன்றம். சட்டத்தை அடிப்படையாகக் கொண்டு நீதி வழங்கும் இந்நீதிமன்றம், தன்னாட்சி கொண்டுள்ள அரசுகளிடையே எழக்கூடிய சட்டம் சார்ந்த தகராறுகளை விசாரணை செய்கின்றது. அரசியல் சார்ந்த தகராறுகளை இந்நீதிமன்றம் விசாரணை செய்யக்கூடாது. ஒரு தனி அமைப்பாகத் திகழும் இந்நீதிமன்றம் அதற்கென ஒரு சாசனத்தைக் கொண்டுள்ளது. ஐ.நா வின் அங்கத்துவ நாடுகள் யாவும் இந்நீதிமன்றத்தின் அடிப்படைச் சட்டத்திற்குக் கட்டுப்பட்டவை ஆகும். ஐநா.வின் உறுப்பினரல்லாத ஒரு நாடு இந்நீதிமன்றத்துக்கு மேல்முறையீடு செய்யவேண்டுமெனில் அவ்விஷயம் பாதுகாப்புக் குழுவின் சிபாரிசுக்கேற்ப பொதுச்சபையால் ஏற்றுக் கொள்ளப்படவேண்டும். நெதர்லாந்திலுள்ள திஹேக் (The Hague) என்னும்

நகரில் இந்நீதிமன்றம் செயல்பட்டுவருகின்றது. ஆனால், தன் விருப்பத்திற்கேற்ப இந்நீதிமன்றம் எங்கு வேண்டுமானலும் கூடலாம். இந்நீதிமன்றத்தின் செலவினங்கள் யாவும் ஐ. நா வின் பொறுப்பாகும். இந்நீதி மன்றத்தின் விசாரணைகள் யாவும் வெளிப்படையாக நடத்தப்படும் போதிலும், ரகசிய மாகவும் விசாரணைகள் நடத்தப்படலாம். இந்நீதிமன்றத்தால் அளிக்கப்படும் தீர்ப்பு இறுதியானது. இத்தீர்ப்புக்குப் பின் மேல் முறையீடு செய்ய முடியாதெனினும் அதனை மறுபரிசீலனை செய்யக் கோரலாம். அங்ஙனம் மறுபரிசீலனை செய்யவேண்டுமெனில தகராறில் சம்பந்தப்பட்ட நாடுகள் அதற்குரிய காரணங்களைத் தெரியப். படுத்தவேண்டும். இம் மறுபரிசீலனை பத்து ஆண்டுகளுக்குள் செய்யப்படல் வேண்டும். தீர்ப்பு வழங்கும் பொழுது நீதிபதிகளின் வாக்குகள் சமபாகக் காணப்படட்டால் முடிவு கட்டும் வாக்கை நீதி மன்றத்தின் தலைவர் அளிப்பார்.

**நீதிமன்றத்தின் அமைப்பு :**

பன்னாட்டு நீதி மன்றம் 15 நீதிபதிகளைக் கொண்டுள்ளது இவர்களில் 3ல் 1 பகுதியினர் மூன்றாண்டிற்கு ஒரு முறை பதவியினின்று ஓய்வு பெறுகின்றனர். பல்வேறு நாட்டினங்களையும் சேர்ந்த சிறப்பு மிக்க சட்ட வல்லுநர்கள் தான் இந்நீதிமன்றத்தில் நீதிபதிகளாக நியமிக்கப்படு கின்றனர். இந்நீதிபதிகள் ஒன்பதாண்டிற்கெனத் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். இவர்களைப் பொதுச்சபையும் பாதுகாப்புக் குழுவும் தனித்தனியே வாக்களித்து பெரும்பான்மை வாக்கின் அடிப்படையில் தேர்ந்தெடுக்கின்றன பதவி விலகல், மரணம் போன்ற காரணங்களால் காலி இடங்கள் எழும்போது அதனை நிரப்புவதற்கென பிரத்தியேகத் தேர்தல்கள் நடத்தப்படுகின்றன. ஒரே நாட்டைச் சேர்ந்த இருவர் ஒரே சமயத்தில் இந்நீதிமன்றத்தின் நீதிபதிகளாகச் செயல்பட முடியாது. பதவியினின்று ஓய்வு பெற்ற ஒருவர் உடனடியாக மீண்டும் தேர்ந்தெடுக்கப்படலாம். அதன் விடுமுறைக்காலம் தவிர பிற நாட்களில் இந்நீதிமன்றம் தொடர்ந்து செயல்படுகின்றது. இந்நீதிமன்றத்தின் குறைவெண் வரம்பு (quorum) ஒன்பது.

### 1.3.4 ஐக்கிய நாடுகளின் பிரகடனம்

ஐ.நா சபை சட்டம் இயற்றும் அதிகாரம் கொண்ட ஒரு மேம்பட்ட அரசு அமைப்பு அல்ல. ஆனால், இறைமை வாய்ந்த அரசுகள் ஒருங்கிணைந்து தோற்றுவித்த பன்னாட்டு அமைப்பாக காணப்படுகிறது. பல்வேறான கலாச்சாரங்களையும் சமூக அமைவுகளையும் பிரதிபலிக்கும் நாடுகளின் உலக அமைப்பாக கருதப்படுகிறது. அங்கத்துவ நாடுகளைச் சார்ந்த மக்களின் கூட்டு விருப்பங்களை இவ்வமைப்பு வெளிப்படுத்துகிறது. ஐக்கிய நாட்டு சபையின் சாஸனம் III விதிகளையும் ஒரு முகவுரையையும் கொண்டது. முகவுரை ஐக்கிய நாட்டு சபையின் உணர்வுகளை வெளிப்படுத்தும் ஆவணமாக காட்சியளிக்கிறது. சுமூகமாக செயல்படும் ஒரு உலக சமூகத்திற்கான கோட்பாடுகளை இம் முகவுரை எடுத்தியம்புகிறது. முதலாவது விதி அங்கத்துவ அரசாங்கங்களின் பொது குறிக்கோளை விளக்கியுள்ளது. ஐக்கிய நாட்டு சபை எந்த அடிப்படைத் தத்துவத்தில் அமைக்கப்பட்டுள்ளன என்பதனை இரண்டாவது விதியில் காணலாம். 55-வது விதி முகவுரையில் கூறப்பட்டுள்ள சமூக பொருளாதார குறிக்கோட்களுக்கு செயல்வடிவம் அளித்துள்ளது. அவ்விதி பன்னாட்டு பொருளாதார மற்றும் சமூக ஒத்துழைப்பை வலியுறுத்துகிறது. அவ்வொத்துழைப்பை எய்த அங்கத்துவ அரசுகள் ஆற்றவேண்டிய கடமைகளை 56-வது விதி விளக்குகிறது.

ஐக்கிய நாட்டு சபையின் கடப்பாட்டை ஏற்றுக்கொண்ட சமாதானத்தை விரும்பும் நாடுகள் ஐம்பத்தொரு நாடுகள் சாஸனத்தை ஏற்றுக்கொண்டு, உடன்பாட்டில் கையொப்பமிட்டு தம்மை ஐ.நா. சபையில் அங்கத்தினராக்கிக் கொண்டது. பிற நாடுகள் பாதுகாப்பு சபையின் பரிந்துரையின் அடிப்படையில் பொது அவையால் ஐ.நா சபையில் அங்கத்தினராய் சேர்க்கப்பட்டன. இன்று சமாதானத்தை விரும்பும் பெரும்பாலான உலக நாடுகள் தம்மை ஐ.நாவில் அங்கத்தினராய் ஆக்கிக்கொண்டுள்ளது. அங்கத்தினர்களைப் பொது அவையிலிருந்து வெளியேற்ற பாதுகாப்பு சபையின் பரிந்துரையின் அடிப்படையில் பொது அவை ஒரு தீர்மானம் மேற்கொள்ள வேண்டும். பொதுவாக ஐ.நா சாஸனத்தில் கூறப்பட்டுள்ள தத்துவங்களை தொடர்ந்து மீறும் நாடுகள் வெளியேற்றப்படும்.

ஐ.நா-வின் குறிக்கோட்களை எய்த ஆறு அடிப்படை உறுப்புக்கள் ஐ .நா அமைப்பின் கீழ் இயங்குகின்றன. அவை் பொது அவை (General Assombly) பாதுகாப்பு சபை (The Security Coun cil) பொருளாதார மற்றும் சமூக சபை (The Economic and Social). காப்பீட்டு சபை (The Trusteeship Council) பன்னாட்டு நீதிமன்றம் (The International Control Justice) செயலகம் (The Secretariat) என்பவையாகும்.

**(a) பொது அவை:-**

அங்கத்துவ நாடுகள் அத்தனையும் இதன் உறுப்பினர்கள். ஒவ்வொரு அங்கத்துவ நாடும் ஐந்து பிரதி நிதிகளை பொது அவைக்கு அனுப்பலாம். ஆனால் ஒரு அங்கத்துவ நாட்டிற்கு ஒரு வாக்குதான் உண்டு. முக்கிய பிரச்சனைகளில் தீர்வு செய்ய 2 பங்கு பெரும்பான்மை பொது அவையில் தேவை. பொது அவை ஒரு வருடத்திற்கு ஒரு முறை கூடுகிறது. பொதுச்செயலாளர் விசேட கூட்டங்களை பாதுகாப்பு சபையின் பரிந்துரையின் அடிப்படையில் அல்லது பெருவாரியான பொது அவை உறுப்பினர்களின் வேண்டுகோளுக்கிணங்க கூட்டலாம். ஆறு குழுக்களாகப் பிரிந்து தனது பணிகளை ஆற்றுகிறது. பொது அவை ஐ.நா. சாஸானம் வரையரைச் செய்த காரியங்களை பொது அவை கவனிக்கிறது. அக்காரியங்கள் பற்றிய பரிந்துரைகளை பாதுகாப்பு சபைக்கு அல்லது சம்பந்தப்பட்ட நாடுகளுக்கு செய்கிறது. காப்பீட்டு குழுவின் பணியை பொது அவை மேற்பார்வை செய்கிறது. பாதுகாப்பு சபையின் தற்காலிக உறுப்பினர்களை பொது அவை தேர்ந்தெடுக்கிறது. பொருளாதார மற்றும் சமூக குழுவிற்கு 18 உறுப்பினர்களை அவை தேர்ந்தெடுக்கிறது. காப்பீட்டு குழுவிற்கும் இதர துணைச் செயலாண்மைக் குழுக்களுக்கும் உறுப்பினர்களை தேர்ந்தெடுக்கிறது. பொது அவையும் பாதுகாப்பு சபையும் தனித்தனியாக வாக்களித்து 15 நீதிபதிகளை பன்னாட்டு நீதிமன்றத்திற்கு தேர்ந்தெடுக்கிறது. பாதுகாப்பு சபையின் பரிந்துரையின் பேரில் பொது அவை பொதுச்செயலரை நியமனம் செய்கிறது.

ஐ.நா.வின் அனைத்து அங்கத்துவ நாடுகளின் பிரதி நிதிகளைக் கொண்டது பொதுச்சபை. ஒவ்வொரு அங்கத்துவ நாடும் பொதுச்சபைக்கு ஐந்து பிரதி நிதிகள் வீதம் அனுப்பலாமெனினும் அவை ஒவ்வொன்றிற்கும் ஒரு வாக்கு மட்டுமே அளிக்கப்பட்டுள்ளது. முக்கியமான விஷயங்களைக் குறித்து முடிவெடுப்பதற்குப் பொதுச் சபையின் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையின் ஆதரவு தேவை. பொதுச்சபை அதன் ஒவ்வொரு கூட்டத் தொடருக்கும் ஒரு தலைவரையும், ஒரு துணைத்தலைவரையும் தேர்ந்தெடுக்கின்றது. இச்சபை ஆண்டிற்கொருமுறை சாதாரணமாகக் கூடுகின்றது. செப்டம்பர் மாதத்தில் துவங்கும் கூட்டத் தொடர் மூன்று மாதங்கள் நடக்கின்றது. பொதுச் சபையின் உறுப்பினரில்

குறிப்பு

பெரும்பான்மையினர் விரும்பினாலும் அல்லது பாதுகாப்புக்குழு விரும்பினாலும், ஐ. நா.வின் தலைமைச் செயலாளர் இச்சபையின் சிறப்புக் கூட்டங்களைக் கூட்டலாம். பொதுச்சபையின் பணிகளைப் புரிவதற்கென ஏழு குழுக்கள் உள்ளன. அவை பின்வருமாறு :

- அரசியல் மற்றும் பாதுகாப்புக் குழு (The Political and Security Committee)
- பொருளாதாரம் மற்றும் நிதி சம்பந்தப்பட்ட குழு (Economic and Financial Committee)
- சமூக, மனிதாபிமான மற்றும் கலாச்சாரக் FO (Social. Humanitarian and Cultural Committee)
- பொறுப்பாண்மைக் குழு (Trusteeship Committee)
- நிர்வாகம் மற்றும் திட்டம் பற்றிய குழு (Administrative and Budgetary Committee)
- சட்டக்குழு (Legal Committee)
- சிறப்பு அரசியல் குழு (Special Political Committee)

ஒவ்வொரு குழுவின் கூட்டங்களும் தனித்தனியே நடக்கின்றன. பொதுச் சபையின் அங்கத்துவ நாடுகள் யாவும் இக்கூட்டங்களில் பங்கு கொள்ளலாம்.

**பணிகளும் அதிகாரங்களும் : -**

- சாசனத்தின் வரம்பிற்குட்பட்ட எந்த விஷயங்களையும் ஆராய். வதற்குப் பொதுச்சபை அதிகாரம் கொண்டுள்ளது. இது மட்டுமின்றி அதன் குழுக்களின் அதிகாரங்களையும், பணிகளையும் சம்பந்தப்பட்ட விஷயங்களையும் இச்சபை பரிசீலிக்கலாம். ஆனால், பாதுகாப்புக் குழு தலையிட்டுள்ள விஷயங்கள் பொதுச் சபையின் பரிசீலனைக்குக் கொண்டுவரப்பட முடியாது.
- ஒரு விஷயத்தை ஆராய்ந்து அது சம்பந்தப்பட்ட சிபாரிசுகளை அங்கத்துவ நாடுகட்கோ, பாதுகாப்புக் குழுவிற்கோ அல்லது இரண். டிற்குமோ அனுப்பும் உரிமை பொதுச் சபைக்கு உள்ளது.
- ஐ.நா. வின் இதர நிறுவனங்களிலிருந்து கிடைக்கப்பெறும் வருடாந்திர அறிக்கைகளையும் விசேட அறிக்கைகளையும், இது பரிசீலிக்கின்றது. மேலும், இச்சபை வரவு செலவுத் திட்டத்தை ஆமோதித்து ஒவ்வொரு அங்கத்துவ நாடும் மொத்தச் செலவினங்களில் ஏற்றுகொள்ள வேண்டிய விகிதத்தை நிர்ணயிக்கின்றது. இது மட்டுமின்றி சிறப்பு நிறுவனங்களின் வரவு செலவுத் திட்ட மதிப்பீடுகளையும் இச்சபை பரிசீலிக்கின்றது
- பொறுப்பாண்மைக் குழுவை இச்சபை மேற்பார்வை செய்கின்றது

ஐநா. வின் இதர உறுப்புக்களின் அங்கத்தினர்களைத் தேர்ந்தெடுக்கின்றது. உதாரணமாக

பாதுகாப்புக் குழுவின் பத்து தற்காலிக உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கின்றது. பொருளாதாரம் மற்றும் சமூகக் குழுவின் பதினெட்டு உறுப்பினர். களைத் தேர்ந்தெடுக்கின்றது. பொறுப்பான்மைக் குழுவின் உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கிறது. பொதுச் சபையும் பாதுகாப்புக் குழுவும் தனித்தனியே வாக்களித்துப் பன்னாட்டு நீதிமன்றத்தின் பதினைந்து நீதிபதிகளைத் தேர்ந்தெடுக்கின்றன. பாதுகாப்புக் குழுவின் சிபாரிசுக்கேற்பப் பொதுச் செயலாளரை நியமனம் செய்கின்றது. ஐ நா. வின் சாசனத்தைத் திருத்தி அமைப்பதில் பொதுச்சபை சில அதிகாரங்களைக் கொண்டுள்ளது. பொதுச் சபை இருவழிகளில் ஏதாவது ஒன்றைப் பின்பற்றி முடிவுகள்

குறிப்பு

எடுக்கலாம். ஆதை பின்வருமாறு : ஆஜராகி, வாக்களிக்கும் உறுப்பினரில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை ஆதரவுடன் பாதுகாப்புக் குழுவின் தற்காலிக உறும். பினரைத் தேர்ந்தெடுத்தல். பொருளாதாரம் மற்றும் சமூகக் குழு, ஐ நா. வில் ஒரு நாட்டிற்கு அங்கத்துவம் அளித்தல் அல்லது அதனின்று ஒரு நாட்டை புறம் தள்ளல் போன்ற முக்கியமான விஷயங்களில் முடிவெடுப்பதற்கு மேற்கூறிய இரண்டாவது முறை பின்பற்றப்படுகின்றது. சாதாரண விஷயங்கள் யாவும் பெரும்பான்மை ஆதரவுடன் தீர்மானிக்கப்படுகின்றன.

**மதிப்பீடு :**

சட்டப்பூர்வமான அதிகாரமும், அரசியல் பூர்வமான அதிகாரமும் பொதுச் சபைக்கு உள்ளன. ஆரம்பத்தினின்று இச்சபை ஒரு முக்கிய மான பங்கு பெற்று வந்துள்ளது. பன்னாட்டு அரங்கமாகத் திகழும் இச்சபை ஐ. நா. வின் மிகப்பெரிய உறுப்பாகும். சாசனத்தின் வரப்பிற் குட்பட்ட எவ்விஷயத்தைக் குறித்தும் விவாதம் நடத்த இச்சபை உரிமை கொண்டுள்ளது. ஒரு முடிவைச் செயற்படுத்துவதற்கான நடவடிக்கைகளைப் பாதுகாப்புக் குழு மட்டுமே எடுக்க முடியுமெனினும், 1950- ஆம் வருடத்தில் நிறைவேற்றப்பட்ட "அமைதி காப்பதற்கென் ஒன்றிணைதல்" ("Uniting For Peace"') என்ற தீர் மானம் பொதுச் சபையின் அதிகாரங்களை விரிவு படுத்தியுள்ளது எனலாம். கொரியாவில் கம்யூனிசத் தலையீடு, 1956. ஆம் வருட சூயஸ் பிரச்னை , ஹங்கேரியில் சோவியத் தலையீடு, 1958- ஆம் வருட லெபனான் பிரச்னை , 1960-ம் வருட காங்கோப் பிரச்னை ஆகியவை பொதுச்சபையால் மிகத் திறம்படக் கையாளப்பட்டன. வல்லரசுகளிடையே 1950-க்குப் பின் தோன்றிய கருத்து வேற்றுமை காரணமாகப் பாதுகாப்புக் குழு அதன் வலிமையை இழந்ததனால் பொதுச் சபையின் அரசியல் சம்பந்தப்பட்ட பணி எதிர் பார்த்ததைவிட பன்மடங்கு, அதிகரித்துள்ளது. இன்னும் சொல்லப் போனால் பாதுகாப்புக் குழுவின் பின்னால் காணப்படுவது பொதுச் சபையாகும்.

**(b) பாதுகாப்பு சபை :-**

ஐ.நா. சபையின் செயற்குழுவாக இச்சபை கருதப்படுகிறது. ஆரம்பத்தில் 11 உறுப்பினர்களைக் கொண்டதாக இச்சபை காணப்பட்டது. 1965-ஆம் ஆண்டு இச்சபையின் அங்கத்துவம் பதினைந்தாக விரிவுபடுத்தப்பட்டு, இப்பதினைந்து அங்கத்தினருள் ஐவர் நிரந்தர உறுப்பினர்கள். அமெரிக்கா, சோவியத் யூனியன், இங்கிலாந்து, பிரான்சு, சீனா ஆகியவை நிரந்தர உறுப்பினர்கள். பிற பத்து உறுப்பினர்களும் பொது அவையில் பாகம் உறுப்பினர்களின் ஆதரவுடன் இரண்டு ஆண்டுகளுக்கு தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். வழிமுறைச் சம்பந்தப்பட்ட காரியங்கள் ஒன்பது உறுப்பினர்களின் ஒப்புதலைப் பெற்றால் நிறை வேறுகிறது. பிற காரியங்களுக்கு ஒப்புதல் பெறும் போது, ஒன்பது உறுப்பினர்களில் ஐந்து நிரந்தர உறுப்பினர்கள் அடங்கவேணடும். ஒரு நிரந்தர உறுப்பினர் எதிராக வாக்களித்தாலும் அந்தக் காரியத்தை நிறைவேற்ற இயலாது. நிரந்தர உறுப்பினரின் எதிர் வாக்கு தடுப்பாணை (Veto) என்றழைக்கப்படுகிறது.

உலகில் அமைதியையும் பாதுகாப்பையும் நிலை நாட்ட வேண்டிய முக்கியப் பொறுப்பு பாதுகாப்புக் குழுவிற்கு உள்ளது ஐ. நா. வின் ஆட்சித் துறையாகச் செயல்படுவது, பாதுகாப்புக் குழு ஆகும். ஆரம்த்தில் இக்குழுவில் ஐ. நா. வின் பதினொரு உறுப்பினர்கள் அங்கத்துவம் கொண்டிருந்தனர். 1965- ஆம் ஆண்டு இவ்வுறுப்பினரது எண்ணிக்கை

பதினைந்தாக உயர்த்தப்பட்டது. இப்பதினைந்து உறுப்பினர்களில் ஐவர் நிரந்தர உறுப்பினராவர். அமெரிக்கா, சோவியத் யூனியன், இங்கிலாந்து, பிரான்சு, சீனா ஆகிய ஐந்தும். தான் நிரந்தர உறுப் பினர்கள். எஞ்சியுள்ள 10 உறுப்பினர்கள், இரண்டாண்டுப் பதவிக் காலத்திற்கென பொதுச் சபையின் 3ல் 2 பங்கு பெரும்பான்மை ஆதரவுடன் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். பாதுகாப்புக் குழுவின் தற்காலிக அங்கத்துவம் பிராந்திய அடிப்படையில் கொடுக்கப்படுகின்றது. (ஆசிய, ஆப்பிரிக்கப் பகுதி-5. கிழக்கு ஐரோப்பா-1, தென் அமெரிக்கா-2, மேற்கு ஐரோப்பாவும் இதர நாடுகளும்-2). உறுப்பினர் பதவியினின்று ஓய்வு பெறும் நாடுகள் உடனடியாக இக்குழுவிற்கு மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட . முடியாது. தற்காலிக உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கும் பொழுது அதற்கெனப் போட்டியிடும் நாடுகள் உலக அமைதிக்கு ஆற்றியுள்ள பணி மற்றும் பிராந்தியப் பிரதி நிதித்துவம் ஆகியவை கணக்கிலெடுக்கப்படுகின்றன.

**வாக்கெடுப்பு முறை:**

- பாதுகாப்புக் குழுவில் ஒவ்வொருவருக்கும் ஒரு வாக்கு கொடுக்கப்பட்டுள்ளது.
- நடைமுறை சார்ந்த விஷயங்களைக் குறித்து இக்குழு தீர்மானம் எடுப்பதற்கு ஒன்பது உறுப்பினர்களின் ஆமோதிப்பு வாக்குகள் தேவை.
- இதர விஷயங்கள் : முக்கியமான விஷயங்கள் (Substantial Mat ters) சம்பந்தப்பட்ட முடிவுகள் எடுப்பதற்கும் ஒன்பது உறுப்பினர்களின் ஆமோதிப்புத் தேவை. ஆனால், இந்த ஒன்பது வாக்குகளுள் எல்லா நிரந்தர உறுப்பினர்களின் ஏகமனதான சம்மதமும் அடங்கவேண்டும். ஒரு நிரந்தர உறுப்பினருக்கெதிராக நடவடிக்கை எடுக்கத் தீர்மானிக்கப்படும் பொழுது அந் நிரந்தர உறுப்பினர் வாக்கெடுப்பில் கலந்து கொள்ளாவிடில் அதனை மறுப்பா ணையாகக் கருதமுடியாது
- முக்கியமான விஷயங்களைக் குறித்து வாக்கெடுப்பு நடத்தப்படும் பொழுது நிரந்தர உறுப்பினர்களுள் ஒருவர் அதற்கு எதிராக வாக்களித்தால் அது மறுப்பாணை (Veto) என்று கருதப்படும்.

**பணிகளும் அதிகாரங்களும்:**

- பன்னாட்டு அமைதியையும், பாதுகாப்பையும் பராமரிப்பது தான் பாதுகாப்புக் குழுவின் அடிப்படைப் பணி ஆகும்.
- ஒரு சச்சரவில் ஈடுபட்டுள்ள நாடுகள் கலந்துரையாடல்கள் மூலமாகவோ அல்லது சமரசம் மூலமாகவோ அல்லது நீதித்துறையின் தீர்ப்பிற்கேற்பவோ அல்லது பிராந்திய நிறுவனங்களின் மூலமாகவோ அல்லது அமைதியான வேறெந்த வழிகள் மூலமாகவோ தமது சச்சரவுகளைத் தீர்த்துக் கொள்ள வேண்டுமென்று பாதுகாப்புக் குழு கூறலாம்.
- பன்னாட்டு அமைதிக்குப் பங்கம் விளைவிக்கக் கூடும் என்று இக் குழு கருதும் எந்தத் தகராறைக் குறித்தும் அல்லது சூழ் நிலையைக் குறிததும் விசாரணை நடத்த இக்குழுவிற்கு அதிகாரம் உள்ளது.
- அடிபணிய வைக்கும் நடவடிக்கை எடுக்குமாறு அதன் உறுப்பினரை இக்குழு கேட்டுக்கொள்ளலாம். இந் நடவடிக்கைகள் பின் வருமாறு மேற்கொள்ளப்படலாம் :

குறிப்பு

- முழுமையாக அல்லது அரைகுறையாக பொருளாதார உறவைத்துண்டித்தல்.
- செய்தித் தொடர்பைத் துண்டித்தல்.
- ராஜதந்திர உறவுகளைத் துண்டித்தல்.

மேற்கூறிய நடவடிக்கைகள் பலனளிக்கவில்லையென்றால் தாக்குதல் நடத்தும் நாடுகளைத் தண்டித்து தாக்கு தலைத் தடுப்பதற்கென ஐ நா வின் படைகளைப் பயன்படுத்தலாம். விமானப்படை, கடற்படை, தரைப்படை போன்றவற்றைப் பயன்படுத்தி நேரடி நடவடிக்கைகளோ (Direct action) அல்லது அச்சுறுத்துதற்குரிய படைத்துறைச் செயல்முறைகளையோ பயன்படுத்தலாம். ஐ,நா வின் உறுப்புகள் இவ்விஷயங்களில் தகுந்த நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று ஐ. நா. சாசனம் குறிப்பிடுகின்றது படைகளும் பொருட்களும் கடந்து செல்வதற்கான வழி உரிமைகள் அளிக்க வேண்டுமென்றும், மேலும் படைகளும் போர்க் கருவிகளும் அளிக்கவேண்டு மெனவும் பாதுகாப்புக் குழுவின் வாயிலாக அங்கத்துவ நாடுகளுக்கு விண்ணப்பிக்க பொதுச்சபை அதிகாரம் கொண்டுள்ளது. ஒவ்வொரு நாடும் இதற்கென ஐ. நா. வுடன் விசேட ஏற்பாடுகள் செய்துகொள்ளவேண்டும் தீர்மானங்களைச் செயல்படுத்துவது சம்பந்தமான நடவடிக்கைகளையும், பாதுகாப்பு சம்பந்தப்பட்ட நடவடிக்கைகளையும் கண்காணிப்பதற்கெனப் பாதுகாப்புக் குழுவில் படைத்துறை அலுவலர் குழு (Military Staff Committee) ஒன்று காணப்படுகின்றது. இக்குழுவில் நிரந்தர உறுப்பினரின் படைத்தலைவர் களோ அல்லது அவர்களது பிரதி நிதிகளோ அங்கத்துவம் வகிப்பர். தமது பாதுகாப்பிற்கென அங்கத்துவ நாடுகள் தனியாகவோ அல்லது இணைந்தோ நடவடிக்கை எடுப்பதை ஐ. நா வின் சாசனம் தடை செய்யவில்லை. ஆனால், இவ்விஷயம் பாதுகாப்புக் குழுவின் கவனத்திற்கு உடனடியாகக் கொண்டுவரப்படல் வேண்டும்.

**திருத்தி அமைக்கும் அதிகாரம் (Amending Power) :**

பாதுகாப்புக் குழுவின் ஆமோதிப்பைப் பெற்றபின் தான் ஐ. நா. வின் சாசனம் திருத்தி அமைக்கப்படமுடியும். இங்ஙனம் திருத்தி அமைப்பதற்குப் பாதுகாப்புக் குழுவின் ஒன்பது உறுப்பினர்களின் ஆமோதிப்பு வாக்கும். ஐந்து நிரந்தர உறுப்பினர்களின் ஒப்புதல் வாக்குகளும் இன்றியமையாதது. பன்னாட்டு நீதிமன்றத்தின் நீதிபதிகளைப் பாதுகாப்புக்குழு தேர்ந்தெடுக்கின்றது. சட்டம் சம்பந்தப்பட்ட எவ்விஷயங்களைக் குறித்தும் இந்நீதிமன்றத்தின் கருத்தைக் கேட்க இக்குழு அதிகாரம் பெற்றுள்ளது. பொதுச் சபையைப் போலன்றித் தொடர்ந்து செயல்படும் இக்குழுவின் தலைமைச் செயலகம் நியூயார்க்கில் உள்ளது.

**மதிப்பீடு :**

எதிர்பார்த்த அளவு பாதுகாப்புக் குழு வெற்றி பெறவில்லை. இதற்கான காரணம் மிகத் தெளிவானது. இரண்டாவது உலகப் போரின் போது வல்லரசுகளிடையே காணப்பட்ட ஒத்துழைப்பும், ஒற்றுமையும் போர் முடிந்தபின் தொடரவில்லை. இரண்டாவது உலகப் போருக்குப்பின் வல்லரசுகளிடையே போட்டி காணப்படலாயிற்று. இதனால் தனித்தனி மறுப்பாணையைக் கொண்ட ஐந்து நிரந்தர உறுப்பினரை உடைய பாதுகாப்புக் குழு செயல் திறன் இழந்துவிட்டது. வல்லரசுகளிடையே தோன்றிய கருத்து வேற்றுமைகள் பொதுச் சபையின் முக்கியத்திற்கு வழிகோலின நடைமுறையில் பாதுகாப்புக் குழு ஒரு தேவையற்ற உறுப்பாக மாறிவிட்டது.

குறிப்பு

பன்னாட்டு சமாதானத்தையும் பாதுகாப்பையும் நிலை நிறுத்தல் இச்சபையின் தலையாய கடமையாகும். நாடுகளுக்கிடையேயான தகராறுகளை இச்சபை பேச்சுவார்த்தைகள் மூலமோ, மத்தியஸ்தத்தின் மூலமோ, தீர்ப்பாயத்தின் மூலமோ அல்லது பிராந்திய அமைப்புக்களின் மூலமோ சுமூகமாக தீர்வுச் செய்ய முயற்சிக்கிறது. பன்னாட்டு அரங்கில் பிரச்சனைகள் எழுந்தால் பாதுகாப்பு சபை புலனாய்வு செய்கிறது. ஆக்கிரமிக்கும் நாடுகள் மீது தடை விதிக்கும் அதிகாரம் இதற்கு உண்டு. பொது அவையும் பாதுகாப்பு சபையும் தனித்தனியாக வாக்களித்து பன்னாட்டு நீதி மன்றத்திற்கு 15 நீதிபதிகளைத் தேர்ந்தெடுக்கிறது.

**(c) பொருளாதார மற்றும் சமூக குழு**

மக்களின் பொது வான வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துதல் இக்குழுவின் கடமை இக்கடமையை முறையாக ஆற்ற மக்களின் பொருளாதார, சமூக, கல்விச் சம்பந்தப்பட்ட பிரச்சனைகளை தீர்வு செய்ய முயற்சிக்கின்றது. மனித உரிமைகளை பெருக்கி, எல்லா இனத்தாருக்கும் அடிப்படை சுதந்திரத்தை வழங்க இக்குழு நடவடிக்கைகள் மேற்கொள்ளுகிறது. விரிவான பல பணிகள் இதனுடைய அதிகார எல்லைக்குள் அமைவதால், இக்குழு பொதுவாக ஒருங்கிணைவுப் பணிகளை மட்டும் ஆற்றுகின்றது. இதனுடைய துணைக் குழுக்களுக்கு பெருவாரியான செயல்பாட்டுப் பணிகளை ஆற்றும் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டுள்ளது.

**(d) காப்பீட்டுக்குழு :-**

சுயாட்சி அரசாங்க அமைப்புக்களைப் பெறாத பகுதியினுடைய முன்னேற்றத்தை இக்குழு கவனிக்கிறது. காப்பீட்டு பகுதிகள், காலனிப் பகுதிகள் போன்ற இடங்களில் வாழும் மக்களின் சமூக, பொருளாதார, அரசியல் வளர்ச்சியை இக்குழு பொறுப்பேற்று நடத்துகிறது. இப்பகுதிகளில் வாழும் மக்களின் பொது விருப்பத்திற்கு இக்குழு முக்கியத்துவம் வழங்குகிறது. இவ்வகையான பணிகளை ஆற்றி இப்பகுதியில் வாழும் மக்களுக்கு சுயாட்சி அரசுகளை உருவாக்கி அளிக்க இக்காப்பீட்டு குழு முயற்சிக்கிறது.

**(e) செயலகம்**

ஐ.நா. சபையின் செயற்பாட்டு பிரிவாக இது விளங்குகிறது. ஐ.நாவின் அன்றாடப் பணிகள் செயலகத்தால் ஆற்றப்படுகிறது. அங்கத்துவ நாடுகளிலிருந்து இதன் பணியாளர்கள் நியமனம் செய்யப்படுகின்றார்கள். இதனுடைய தலைமை அலுவ லகம் நியூயார்க்கில் அமைந்திருக்கிறது. கிளை அலுவலகம் ஜெனீவாவில் காணப்படுகிறது. பொதுச் செயலாளர் செயலகத்தின் தலைவராவார். பொதுச் செயலரின் பதவிக்காலம் ஐந்தாண்டாகும். அலுவல்களைத் திறப்பட ஆற்ற செயலகத்தில் எட்டு துறைகள் காணப்படுகின்றன. பன்னாட்டு நிர்வாகத்திற்கு செயலகம் பொறுப்பேற்கின்றது

### 1.3.5 ஐக்கிய நாட்டு சபையும் கூட்டுப் பாதுகாப்பும்

ஐக்கிய நாட்டுச் சபையின் சாஸனத்தில் பன்னாட்டரங்கில் கூட்டுப்பாதுகாப்பு நடவடிக்கைகள் மூலம் சமாதானம் நிலை நிறுத்தப்படல் தெளிவாக எடுத்தியம்பப்பட்டுள்ளது. ஆனால், இம்முயற்சியில் ஐக்கிய நாட்டுச் சபை முழு அளவில் வெற்றி பெறவில்லை. ஐ.நா. சபையின் கூட்டுப் பாதுகாப்பு நடவடிக்கைகளை உலக அறிஞர்கள் பலர்

*Self-Instructional Material*

குறிப்பு

விமர்சித்துள்ளனர். பேராசிரியர் மொர்கென்தா கூற்றுப்படி கூட்டுப் பாதுகாப்பு தத்துவம் நடைமுறைக்கு ஒவ்வாத ஒரு பாயகரமான தத்துவமாகும். இம்முறையால் போர்கள் ஸ்தலபார்களாய் அமையாமல் உலகப் போராக மாறும் அபாயம் உருவாகிறது என்று மொர்கென்தா கூறுகிறார்.

ஐக்கிய நாட்டு சபையின் சாஸனம் எடுத்தியம்பும் கூட்டுப்பாதுகாப்பு சில குறைபாடுகளைத் தன்னகத்தே கொண்டுள்ளது. தலாவதாக, இம்முறை சமாதானத்தைக் குலைக்கும் நாட்டிற்கு திராக சமாதானத்தை விரும்பும் நாடுகள் அத்தனையும் ஒருங்ணையவேண்டும் என்பதனைக் கூறுகிறது. எனவே உண்மையாக நிலை வகிக்க விரும்பும் நாடுகளுக்கு ஐ. நா. வில் இடமில்லை எனவே நடுநிலை வகிக்க விரும்பிய சுவிட்சர்லாந்து ஐக்கிய நாட்டு வையில் சேரவில்லை. இரண்டாவதாக, சுயபாதுகாப்பு விருப்பங்ளை கூட்டு பாதுகாப்பு இலட்சியங்களை அடைய விட்டுக் கொடுத்தல் வேண்டும் என்று இத்தத்துவம் கூறுகிறது. இதனை இறைமை எய்ந்த அரசுகளால் ஏற்க முடியாது. மூன்றாவதாக, கெடுபிடிப் போர் நடந்துவரும் இக்கால கட்டத்தில் கூட்டுப் பாதுகாப்பு என்பது ஐ.நா. சபையால் செயல்படுத்த முடியாத ஒரு தத்துவமாகும். பாதுப்புச் சபையில் தடுப்பானை அதிகாரத்தை நிரந்தர உறுப்பினர்கள் பன்படுத்திக் கூட்டுப் பாதுகாப்பு நடவடிக்கைகளைத் தடை செய்யலம். நான்காவதாக, கூட்டுப் பாதுகாப்பு நடவடிக்கைகளில் பயன் பறுவது சிறிய நாடுகளாய் இருந்தாலும், பெரிய நாடுகளின் ஒத்துழைப்பின்றி ஐ. நா.வால் கூட்டுப் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள இயலாது.

**உங்கள் முன்னேற்றத்தைச் சரிபார்க்கவும்**

1. ஐ.நா சபையின் முக்கிய நோக்கம் என்ன?
2. ஐ.நா சபையின் அமைப்புகளைப் பற்றி குறிப்பிடுக?

## 1.4 உங்கள் முன்னேற்றத்தைச் சோதிக்கும் வினாக்களுக்கான விடைகள்

- இரண்டாம் உலகப் போருக்குப் பின் சமாதான ஒற்றுமைக் கோட்பாடுகள் உலக நாடுகள் முழுவதிலும் தோற்றுவிக்கப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது.
- நேச நாடுகளின் வெளிநாட்டமைச்சர்கள் அடங்கிய கவுன்சில் இத்தாலி, ருமேனியா, பல்கேரியா, ஹங்கேரி, பின்லாந்து ஆகிய நாடுகளுடனான உடன்படிக்கைகளைச் செய்தது
- ஜெர்மனி நான்கு மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டு, அவை ஒவ்வொன்றும் பிரிட்டன், பிரான்ஸ், அமெரிக்கா, ரஷ்யா ஆகிய வல்லரசுகளின் இராணுவக் கட்டுப்பாட்டின்கீழ் வைக்கப்பட்டது.
- பன்னாட்டு சமாதானத்தை நிலை நிறுத்த ஐ.நா. சபை மேற்கொள்ளும் அத்தனை நடவடிக்கைகளையும் அங்கத்துவ நாடுகள் ஆதரிக்க வேண்டும். ஐ.நா. சபையின் நடவடிக்கைகளை எதிர்க்கும் நாடுகளுக்கு எந்நிலையிலும் துணை நிற்க கூடாது என்புத முக்கியத்துவ ஒன்றாகக் கருதப்படுகின்றது
- பொது அவை பாதுகாப்பு சபை பொருளாதார மற்றும் சமூக குழு காப்பீட்டுக்குழு பன்னாட்டு நீதிமன்றம் செயலகம் போன்றவையாகும்

## 1.5 சுருக்கவுரை

முதல் உலகப்போருக்குப் பின் வல்லரசுகளும் போரில் வெற்றி பெற்ற பிற நாடுகளும் பாரிசிற்கு அருகிலுள்ள வெர்செயில்ஸ் மாளிகையில் கூடி அமைதி ஒப்பந்தங்களைத் தயாரித்தது போல் இரண்டாம் உலகப் போருக்குப் பின் தயாரிக்கப்படவில்லை. பிரிட்டன், பிரான்ஸ், அமெரிக்கா, ரஷியா ஆகிய வல்லரசுகள் உடன்படிக்கை நிபந்தனைகளைத் தயாரித்து அச்சு நாடுகளையும் அதனுடனிணைந்த நாடுகளையும் ஏற்றுக் கொள்ளுமாறு செய்தன. ஜெர்மனியுடன் அதிகாரபூர்வமாக இறுதியான அமைதி உடன்பாடு செய்து கொள்ளப்படவில்லை. எனினும் 1945 ஜூலையில் பாட்ஸ்டாம் என்ற இடத்தில் வல்லரசுகள் கூடி சில தற்காலிக ஏற்பாடுகளைச் செய்தன. பிற நாடுகளை இத்தாலி, பல்கேரியா, ஹங்கேரி, ருமேனியா, பின்லாந்து, ஆஸ்திரியா, ஜப்பான் ஆகியவற்றுடன் தனித்தனியாக ஒப்பந்தங்கள் செய்து கொள்ளப்பட்டன.

ஐ.நாவின் செயல்பாட்டை நோக்கும் போது, பல வெற்றி ஊளடகங்களை ஐ. நா. சபை உலக அரங்கில் பெற்றுள்ளது என்றாலும் உலக மக்கள் எதிர்பார்த்த அளவிலான வெற்றிகளை ஐ. நா. சபையால் அடைய முடியவில்லை. பிரச்சனைகளுக்கு இவ்வமைப்பால் நிரந்தர தீர்வு கொண்டுவர முடியாவிட்டாலும் பலநேரங்களில் பதட்டநிலைகளை பன்னாட்டரங்கில் ஐ.நா. தீர்த்து வைத்துள்ளது. இவ்வாறான முக்கியத்துவம் பெற்ற உலக அமைப்பை ஒதுக்கிதள்ளாமல், மாறிவரும் கால சூழலுக்கு ஏற்ப மாற்றி அமைத்தல் அவசியம் என்பதுக் குறிப்பிடத்தக்கது

## 1.6 முக்கிய வார்த்தைகள்

இரண்டாம் உலகப்பின் 1945-ஆம் ஆண்டு சேன்பிரான்சிங்கோ என்ற இடத்தில் வைத்து ஐக்கிய நாட்டு சபை ஆரம்பிக்கப்பட்டது. ஐ.நா. சபை ஆரம்பிப்பதற்கு முன்னோடியாக உலக அரங்கில் பல மாநாடுகள் நடந்தேறின. சர்வதேச சங்கத்தின் குறைபாடுகளை நிவர்த்தி செய்யவும், போரைத் தவிர்க்கவும், பன்னாட்டுப் பிரச்சனைகளுக்கு சுமூகமான அளவில் தீர்வுகாணவும், உலகில் நாடுகளுக்கிடையே சமூக பொருளாதார ரீதியில் சம நிலையைத் தோற்றுவிக்கவும் பன்னாட்டு அளவில் ஒரு அமைப்பைத் தோற்றுவிக்கும் எண்ணம் இரண்டாம் உலகப் போர் நடைபெற்றுக் கொண்டிருக்கும் காலகட்டத்தில் உருவானது.

## 1.7 சுயமதிப்பீடு வினாக்கள் மற்றும் பயிற்சிகள்

### சுருக்கமான கேள்விப் பதில்கள்

1. இரண்டாம் உலகப் போரைப் பற்றி மதிப்படுக?
2. 1945க்கு பின் உலகின் சமாதானக் கொள்கையைப் பற்றி குறிப்பு வரைக?

### விரிவான கேள்விப் பதில்கள்

1. ஐ.நா சபையின் சாதனைகளைப் பற்றி கட்டுரை வரைக?
2. இரண்டாம் உலகப் போருக்குப் பின் ஏற்பட்ட உலக மாற்றங்களைப் பற்றி குறிப்பிடுக

குறிப்பு

## 1.8 மேலும் படிக்க


- Dorothy Irving.(2007). *This Too Is Diplomacy.* Author House.
- George F. Kennan and John J. Mearsheimer.(2012). ***American Diplomacy: Sixtieth-Anniversary Expanded Edition.*** University of Chicago Press; Enlarged edition.
- Nicholas Griffin. (2015). ***Ping-Pong Diplomacy: The Secret History Behind the Game That Changed the World .*** Skyhorse.
- William Appleman Williams. (1962). ***The Tragedy of American.*** Diplomacy Delta. 2nd edition

# அலகு 2 பன்னாட்டு உறவுகளின் கருத்துகள்

2.0 அறிமுகம்
2.1 நோக்கங்கள்
2.2 பன்னாட்டு உறவுகளின் கருத்துகள்
 2.2.1 பன்னாட்டு உறவுகளின் அணுகு முறைகள்
2.3 பொருள் மற்றும் இயல்பு
 2.3.1 பன்னாட்டு உறவின் பொருள்
 2.3.2 பன்னாட்டு உறவின் இயல்பு
 1.3.3 பன்னாட்டு உறவின் நோக்கமும் தன்மையும்
1.4 இராஜதந்திரம
1.5 உங்கள் முன்னேற்றத்தைச் சோதிக்கும் வினாக்களுக்கான விடைகள்
1.6 சுருக்கவுரை
1.7 முக்கிய வார்த்தைகள்
1.8 சுயமதிப்பீடு வினாக்கள் மற்றும் பயிற்சிகள்
1.9 மேலும் படிக்க

## 2.0 அறிமுகம்

தற்கால உலகில் எந்த ஒரு மனிதனும் சமுதாயத்திலிருந்து பிரிந்து தனியாக ஒரு வாழ்க்கையை அமைத்துக் கொள்வது என்பது முடியாத காரியமாகும். மனிதன் சமுதாயமாக வாழத்தொடங்கிய போதுதான் அரசு (state) என்ற நிறுவனம் தோன்றியது. எந்த ஒரு சமுதாயமும் ஒரு அரசியல் முறையமைவு இல்லாமல் இயங்க முடியாது. எனவே தான் அந்த சமுதாயத்தை அரசு என்ற நிறுவனம் தோன்றி ஒழுங்குபடுத்தியது. இனத்தாலும், மொழியாலும், மதத்தாலும் ஒருங்கிணைந்த மக்கள் அரசு என்ற இந்த அமைப்புக்கு உட்பட்டு வாழ ஆரம்பித்தனர். அதாவது அரசின் எல்லைக்கு உட்பட்டே மனிதர்களின் உறவுகள் அமைந்தன. இதே போலத்தான் இன்றைய உலகில் அரசுகளுக்கிடையே உறவுகள் அமைந்துள்ளன. அறிவியல் தொழில்நுட்பவளர்ச்சி பொருளா தாரச் சார்பு நிலை ஆகியவற்றின் காரணமாக அரசு களுக்கிடையே உறவுகள் பல்வேறு விதமாக அமைந்துள்ளன. இதனால் பல்வேறு நாடுகளுக் கிடையிலான உறவுகளை வரையறுக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. அதுவே பன்னாட்டு உறவுமுறையாக வளர்ச்சி பெற்றது. இத்தகைய உறவுகளின் வளர்ச்சி பற்றிய படிப்பே பன்னாட்டு உறவுகள் எனப்படுகிறது. பன்னாட்டு உறவு என்பது மனிதனின் சமுதாயமாக வாழும் பண்பின் உயர்நிலை என்று கருதலாம்.

## 2.1 நோக்கங்கள்

மனித இனத்தின் வாழ்விற்கும் மேம்பாட்டிற்கும் இப்படிப்பு மிகவும் அவசியமாகிறது. அரசுகளுக்கிடையே உள்ள உறவுமுறைகளில் உள்ள நுட்பத்தை வெளிப்படுத்துவதையே நோக்கமாகக் கொண்டுள்ளது. எத்தகைய உறவுமுறையை ஊக்கப்படுத்துவது, எவற்றைக் கண்டனம் செய்வது போன்ற விஷயங்களைத் தெளிவு படுத்த இது உதவுகிறது என்பதை பின்வருமாறு விளக்கப்படுகின்றுது.

குறிப்பு

## 2.2 பன்னாட்டு உறவுகளின் கருத்துகள்(The Concept of International Relations)



பன்னாட்டு உறவுகளின் கருத்தரங்க மாநாடு

பொதுவாக பன்னாட்டு உறவுகள் மற்றும் பன்னாட்டு அரசியல் (international polities) ஆகிய வார்த்தைகள் ஒரே பொருளில் பயன்படுவதைக் காணலாம். ஆனால் உண்மையில் இரண்டும் மாறுபட்ட பொருளில்தான் பயன்படுத்தப்பட வேண்டும். இரண்டு சொற்றொடர்களுக்கும் வேறுபாடுகள் உள்ளன. இந்த வேறு பாடுகளை பன்னாட்டு உறவுகள் பாடம் படிக்கும் மாணவர்கள் அறிந்து கொள்ள வேண்டும்.

பன்னாட்டு அரசியல் என்பது நாடுகளுக்கிடையிலான உறவுகள் ராஜதந்திரம் ஆகியவை மட்டும் பற்றியதாகும். அதாவது இதன் பரப்பு. குறுகியதாகும். ஆனால் பன்னாட்டு உறவுகள் என்பது விரிவானது. இதில் பல அம்சங்கள் இடம் பெறுகின்றன. பன்னாட்டு உறவுகளில் சமுதாய, பொருளாதார, அரசியல் மற்றும் பண்பாட்டுச் செயல்கள் கருத்தில் கொள்ளப்படுகின்றன. அதாவது ஒரு நாட்டு மக்களின் செயல்கள் பிற நாடுகளில் வாழும் மனித சமுதாயத்தில் எத்தகைய தாக்கத்தை , ஏற்படுத்துகிறது என்றும் அதனால் ஏற்படும் பிரச்சனைகளை எப்படி தீர்க்கலாம் என்றும் பன்னாட்டு உறவுகள் என்ற பாடம் விளக்குகிறது.

### 1.2.1பன்னாட்டு உறவுகளின் அணுகு முறைகள்

#### (a) வரலாற்று அணுகுமுறை: (Historical approach)

பன்னாட்டு உறவுகளைப் படிப்பதில் பல அணுகுமுறைகள் பின்பற்றப்படுகிறது. அவைகளில் முக்கியமானது வரலாற்று அணுகு முறையாகும். பன்னாட்டு உறவுகளை வரலாற்று ரீதியாகப் பயில்வதே வரலாற்று அணுகுமுறை எனப்படும். இது மிகவும் பழமையான முறையாகும். இந்த அணுகுமுறையில் ஒரு குறிப்பிட்ட காலம் எடுத்துக் கொள்ளப்பட்டு அக்காலத்தில் நடைபெற்ற நிகழ்ச்சிகள் ஆய்வு செய்யப்படுகின்றன. உதாரணமாக இரண்டாம் உலகப் போருக்கு முன்பு வரை உலக அரங்கில் ஐரோப்பிய நாடுகளே முக்கியத்துவம் பெற்றிருந்ததால் பன்னாட்டு உறவில் அந்த நாடுகளுக்கே முக்கியத்துவம் கிடைத்தன. ஆனால் இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு ஆசிய, ஐரோப்பிய நாடுகளும் முக்கியத்துவம் பெற்றுள்ளன. இதனால் வரலாற்று அணுகுமுறையில் மாற்றம் ஏற்பட்டு உள்ளது. வரலாற்று அணுகுமுறை மூலம் பன்னாட்டு உறவுகளைப் படிப்பதால் பல நன்மைகள் ஏற்படுகின்றன. இந்த காலங்களில் ஏற்பட்ட தோல்விகளையும் அந்த தோல்விகளுக்கான காரணங்களை யும் புரிந்து

கொள்ள உதவுகிறது. நாட்டை வழி நடத்தும் ஆட்சி யாளர்கள் நல்ல நல்ல முடிவுகளை எடுக்கவும் இது உதவியது. வரலாற்று அணுகுமுறையால் பல பயன்கள் கிடைக்கின்றன.

### (b) நிறுவன அணுகுமுறை :(Institutional approach)

பன்னாட்டு உறவுகள் பன்னாட்டு நிறுவனங்கள் மூலமாகவே நடத்தப்படுகின்றன. இப்படி பன்னாட்டு நிறுவனங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து பயிலும் அணுகுமுறையே நிறுவன அணுகுமுறையாகும். முதல் உலகப்போருக்குப் பிறகு மிகப்பெரிய நோக்கங்களுடன் பன்னாட்டளவில் உருவாக்கப்பட்ட முதல் நிறுவனம் சர்வதேச சங்கம் ஆகும். இந்த நிறுவனம் ஒரு அமைப்பையும் செயல் முறையையும் பெற்றிருந்தது. ஆனால் இந்த அமைப்பில் சேர்ந்த நாடுகள் தங்களிடையே காணப்பட்ட முரண்பாடு களால் சர்வதேச சங்கத்திற்கு முழுமையாக ஒத்துழைக்க மறுத்தன. இதனால் தான் அடுத்த பன்னாட்டு அமைதி நிறுவனம் தோல்வி யடைந்தது. இவை எல்லாவற்றையும் படிப்பதே நிறுவன அணுகு முறையாகும். அதே போல இரண்டாம் உலகப்போருக்குப் பிறகு சர்வதேச சங்கத்தில் காணப்பட்ட குறைபாடுகளை நீக்கி, ஒரு வலிமையான சர்வதேச அமைப்பான ஐக்கிய நாடுகள் சபை உருவாக்கப்பட்டது. தற்போது பன்னாட்டு உறவுகளில் இந்த ஐ.நா சபை முக்கிய பங்காற்றி வருவது குறிப்பிடத்தக்க தாகும்.

### (c) நடக்கை அணுகுமுறை : (Behavioral approach)

அரசுகளின் நடக்கைகளின் அடிப்படையிலும் பன்னாட்டு உறவுகளைப் பயில முடியும். பொதுவாக அரசுகளின் நடக்கை பல்வேறு விதங்களில் அமைந்துள்ளன. பன்னாட்டு உறவுகளின் ஒவ்வொரு அம்சத்திலும் அரசுகளின் நடக்கை மாறுபடலாம். இத்தகைய நடக்கையை அடிப்படையாகக் கொண்ட அணுகுமுறை நடக்கை அணுகுமுறை எனப்படும். நடக்கை அணுகுமுறை இரண்டாவது உலகப் போருக்குப் பிறகு முக்கியத்துவம் பெற்றது. இந்த அணுகுமுறையை ஆதரிப்பவர்கள் ஒவ்வொரு அரசும் தனக்கென தனியான தேசிய குணநலனையும் நடக்கையையும் பெற்றிருப்பதாக நம்புகின்றனர். இந்த அணுகுமுறையின் அடிப்படையில் சில சிந்தனையாளர்கள் முறையமைவுக் கோட்பாடு, செய்தித் தொடர்பு கோட்பாடு போன்ற கோட்பாடுகளை உருவாக்க முற்பட்டனர். சமூக அறிவியல்களில் நடக்கை அணுகுமுறை ஒரு நவீன அறிவியல் கருவியாகக் கருதப்படுகிறது. இந்த முறையில் சில நன்மைகள் உள்ளன. ஆனால் அடிக்கடி மாறும் தன்மை பெற்றிருப்பதால் நடக்கை அணுகுமுறைக்கு அதிக முக்கியத்துவம் அளித்தல் கூடாது.

### (d) வலிமை அணுகுமுறை: (Power approach)

அரசுகள் தங்களுக்கென சில நலன்களைக் (-வைெநசநளவள ) கருத்தில் கொண்டே செயல்படுகின்றன. அந்த நலன்களை அடைய போராடவும் தயாராக உள்ளன. இந்த போராட்டத்தில் வலிமை முக்கிய அம்சமாக அமைந்துள்ளது. பன்னாட்டு உறவு என்பது வலிமைக்கான போராட்டத்தைப் பற்றிய படிப்பே ஆகும். இதுவே வலிமை அணுகு முறையின் அடிப்படைக் கருத்தாகும். இது மெய்யியல் அணுகுமுறை (சநயடளைவ யீசழயஉா) என்றும் அழைக்கப்படுகிறது. இந்த அணுகுமுறை வலிமைக்கும் வலிமை சார்ந்த அரசியலுக்கும் முக்கியத்துவம் அளிக்கிறது. இந்த முறையை மார்கத்தோ (ஆயசபநவொநர) என்பவர் தீவிரமாக

ஆதரிக்கிறார். ஆனால் மனிதன் வலிமைக்கு மட்டும் முக்கியத்துவம் அளிப்பதில்லை. மனிதனது செயல்களை முடிவு செய்வதில் கொள்கை (idoslogy) முக்கிய பங்கு வகிக்கிறது என்பதை மறுக்க முடியாது. வலிமையை மெய்யியல் கோட்பாட்டாளர்கள் ஒரு முடிவு (end) என்றே கருதுகிறார்கள். ஆனால் அது முடிவை நோக்கிய ஒருவழிமுறையே (means) ஆகும்.

இவ்வாறு பன்னாட்டு உறவுகளைப் பயில்வதற்கு பல வழிகளும் அணுகு முறைகளும் உள்ளன. ஒவ்வொரு அணுகுமுறையும் சில குறைகளையும் நிறைகளையும் பெற்றுள்ளது. ஆனால் பால்மர் பெத்தின் என்பவர்கள் பன்னாட்டு உறவுகளைப் பயில பழமையான அணுகுமுறை, அறிவியல் அணுகுமுறை என இரண்டைக் குறிப்பிடு கிறார்கள். பழமையான அணுகுமுறை என்பது பொருளுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது. வழிமுறை (அநடதழன) பற்றி அது கவலைப்படுவதில்லை . அறிவியல் அணுகு முறையில் வழிமுறைக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது. இந்த இரண்டு அணுகுமுறை களையும் கலந்து பயன்படுத்தலாம் என்று பால்மரும், பெர்க்கின்சும் கருதுகிறார்கள்.

பன்னாட்டு உறவுகள் பல படிப்புகளுடன் தொடர்புடைய தாகவும், நடக்கை சார்ந்ததாகவும், ஒப்பீட்டு முறை சார்ந்ததாகவும், அறிவியல் பூர்வமாகவும் வளர்ந்து வருகிறது. பன்னாட்டு உறவின் மூலம் ஐ.நா. சபை அணிசார இயக்கம், சார்க் நாடுகள் அமைப்பு, காமன் வெல்த், ஆப்பிரிக்க ஒற்றுமை நிறுவனம், ஐரோப்பிய யூனியன் போன்ற அமைப்புகள் உருவாகி உள்ளன. இந்த அமைப்புகள் எல்லாம் நாடுகளுக்கிடையே நல்ல உறவை ஏற்படுத்தி உலகில் அமைதியையும், சமாதானத்தையும் ஏற்படுத்த வேண்டும் என்பதே உலக மக்களின் எதிர்பார்ப்பாகும்.

**உங்கள் முன்னேற்றத்தைச் சரிபார்க்கவும்**
1.பன்னாட்டு உறவுகளின் கருத்துகளை குறிப்பிடுக?
2.பன்னாட்டு உறவுகளின் அணுகுமுறையைப் பற்றி விவரிக்கவும்?

## 2.3 பொருள் மற்றும் இயல்பு (Meaning and Nature)

தற்கால உலகில் பல்வேறு அரசுகள் உள்ளன. ஒவ்வொரு அரசும் மக்கள், எல்லை, அரசாங்கம், இறைமை ஆகிய நான்கு அடிப்படை உறுப்புகளால் அமைந்துள்ளது. அரசுகளுக்கிடையே நிலவியல், பொருளியல், சமூகவியல் மற்றும் அரசியல் மாறுபாடுகள் அதிகமாகக் காணப்படுகின்றன. ஒவ்வொரு அரசிலும் வாழ்கின்ற மக்கள் தங்களுக்கென ஒரு அரசியல் கலாச்சாரத்தைப் பெற்றுள்ளனர். ஒவ்வொரு அரசும் தனக்கென சில நலன்களைக்கருத்தில் கொண்டு செயல்படுகிறது.

### 1.3.1 பன்னாட்டு உறவின் பொருள்

ஒரு அரசின் நலன்கள் மற்ற அரசுகளின் நலன்களிலிருந்து மாறுபடலாம். இதன் காரணமாக நாடுகளுக்கிடையே நலன்களின் அடிப்படையில் மோதல் ஏற்படுகிறது. எனவே உலகில் வாழும் மக்கள் அனைவரும் அமைதியாகவும், சமாதானமாகவும், போர் அழிவுகள் இல்லாத வாழ்க்கையை வாழ வேண்டுமானால் உலக நாடுகளுக்கிடையே உறவு அவசியம் என்பதை மனித சமுதாயம் உணர்ந்தது. நாடுகளுக்கிடையிலான மோதல்களைத் தடுத்து சுமூகமான உறவு நிலையை மேற்கொள்ளச் செய்யப்படும் நடவடிக்கைகள் பற்றிய படிப்பே பன்னாட்டு உறவுகள் என்று

கூறலாம். பன்னாட்டு உறவுகள் என்பது நாடுகளுக்கிடையே காணப்படும் பிரச்சனைகளுக்கான தீர்வுகள் அல்லது மாறாக அவற்றைப் பொருள் நோக்கு அடிப்படையில் அணுகுவதற்கான ஒருவரையறுக்கப்பட்ட முறையே ஆகும்.

பன்னாட்டு உறவுகள் என்பது இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட அரசுகளுக்கிடையிலான அதிகாரப் பூர்வமான உறவுகளைப் பற்றியது என்று கூறுவது குறுகிய அணுகுமுறையாகும். இந்த விளக்கம் அரசுகளின் தலைவர்களும், அதிகாரிகளும் செய்து கொள்ளும் அதிகாரப் பூர்வமான உறவுமுறைச் செயல்களைப் பற்றி மட்டுமே குறிப்பிடுவதாக அமைந்துள்ளது. ஆனால் பன்னாட்டு உறவுகள் என்பது அரசுகளுக்கிடையிலான எல்லா உறவுமுறைகளையும், எல்லைகளையும் தாண்டி மக்களிடையே ஏற்படும் உறவுமுறை களையும் குறிப்பதாக உள்ளது. சில அரசியல் அறிஞர்கள் பன்னாட்டு உறவுகள் என்ற படிப்பு நாடுகளின் சக்தியையும் வெளிஉறவுக் கொள்கைகளையும் பற்றியது என்று கருதுகின்றனர். மற்றும் சிலர் அரசுகளின் எல்லையைக்கடந்த எல்லா விதமான உறவு முறைகளைப் பற்றியதே என்று கருது கின்றனர். ஆனால் இத்தகைய உறவுமுறைகள் அரசியல், பொருளாதார, சமுதாய, சட்டவியல் சார்ந்தவையாகவோ, தனிப் பட்டவையாகவோ, அல்லது அதிகாரப் பூர்வமானவையாகவோ அமையலாம். இப்படி பல விளக்கங்கள் கொடுக்கப்பட்டாலும் இறைமை பெற்ற அரசுகளுக்கிடையிலான உறவுகளே பன்னாட்டு உறவின்மையக்கருத்தாக உள்ளது.

### 1.3.2 பன்னாட்டு உறவின் இயல்பு

உலக நாடுகளுக்கிடையே பண்பாடு, பொருளாதாரம் ஆகிய துறைகளில் இணக்கமான உறவுகள் நிலவுகின்றன. ஆனால் அரசியலில் இவ்வித இணக்கம் காணப்படுவதில்லை . அரசியலில் அதிகாரம் (power) என்பதே மையமாக அமைந்துள்ளது. அரசுகள் அதிகாரப் போட்டியில் ஈடுபடுகின்றன. பன்னாட்டு உறவுகள் என்பது நாடுகளுக்கிடையிலான இணக்கமானமற்றும் இணக்கமற்ற உறவுகளைப்பற்றிப்படிப்பதேயாகும்

ஆரம்ப காலத்தில் பன்னாட்டு உறவுகள் என்ற படிப்பானது அரசியல் ராஜதந்திர வரலாற்றைப் பற்றியதாக மட்டுமே அமைந்து இருந்தது. ராஜதந்திரம் என்பது ஒரு நாட்டின் ஆட்சியாளர் மற்றும் சில அமைச்சர்கள் ஆகியோர் கைகளிலே அடங்கியிருந்தது. பன்னாட்டு உறவுகள் பற்றிய நுட்பங்களை மக்கள் அறிந்து கொள்ள வாய்ப்பில்லை. அரசுகளுக்கிடையே செய்யப்பட்ட ஒப்பந்தங்கள் ரகசியமாகவே வைக்கப்பட்டன. அவைகளை ஆட்சியாளர்கள் மட்டுமே அறிந்திருந்தனர். அவர்கள் தங்கள் நாட்டின் தேசிய நலன்களைப் பராமரிப்பதில் மட்டுமே கவனம் செலுத்தினர். எனவே பன்னாட்டு உறவுகள் என்பது அரசியல் ராஜதந்திரத்தின் வெற்றி அல்லது தோல்வி பற்றிய படிப்பாகவே இருந்தது.

பன்னாட்டு உறவுகளின் பரப்பெல்லை விரிவடைந்தது. முதல் உலகப் போருக்குப் பிறகு அமைக்கப்பட்ட சர்வ தேச சங்கம் பன்னாட்டு உறவுகளின் பரப்பெல்லையை விரிவடையச் செய்தது. இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர் அதன் பரப் பெல்லை மேலும் விரிவடைந்தது. உலக அமைதி நிறுவனமான ஐக்கிய நாடுகளின் செயல்பாடுகளால் பன்னாட்டு உறவுகள் மேலும் முக்கியத்துவம் பெற்றது. அடிமைப்பட்டுக் கிடந்த ஆசிய ஆப்பிரிக்க நாடுகளின் எழுச்சியும் சுதந்திரமும் பன்னாட்டு உறவுகள் பாடத்திற்கு ஒரு புதிய பரிமாணத்தை அளித்தன. இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு அமெரிக்காவுக்கும் சோவியத் யூனியனுக்கும் இடையே ஏற்பட்ட பனிப்போர் மற்றும் அணிசேரா இயக்கம், காமன்வெல்த் அமைப்பு,

சார்க் அமைப்பு ஆகியவை பன்னாட்டு உறவுகளின் பரப்பைவிரிவாக்கியுள்ளன.

மாறிவரும் இன்றைய உலகில் "பன்னாட்டு" உறவுகள் என்ற பாடம் தனி ஒரு இயலாக வளர்ந்துள்ளது. அதிக முக்கியத்துவம் பெற்று வருகிறது. இந்த இயலில் பன்னாட்டு உறவுகள் தொடர்பான பல கோட்பாடுகள் உருவாக்கப்பட்டுள்ளன. அதில் நாடுகள் உலக அளவில் பின்பற்ற வேண்டிய நீதி நெறிமுறைகளும், அரசியல் உறவு களும் வரலாற்றுத் தொடர்புடன் விளக்கப்படுகின்றன. இவ்வியல் நாளுக்கு நாள் வளர்ந்து கொண்டு வருவதற்கு பல காரணங்களைக் குறிப்பிடலாம். நாடுகளிடையே காணப்படும் விழிப்புணர்வு, பொருளியல் மற்றும் வேளாண்மை வளர்ச்சி, தொழில் நுட்ப வளர்ச்சி, வாணிபப்போட்டி ஆகியவை புதிய புதிய கருத்துக்களை பன்னாட்டு உறவில் புகுத்துவதால் இந்த இயல் வளர்ச்சியடைந்து கொண்டே தான் உள்ளது.

உலக சமுதாயத்தின் மாறிவரும் நிலை பற்றிய படிப்பே பன்னாட்டு உறவுகள் எனப்படுகிறது. பன்னாட்டு உறவில் உள்ள மூலக்கூறுகள் என்று கருதப்படுபவை வருமாறு: ஒரு நாட்டின் அரசியல் முறை, அந்த அரசியல் முறையைப் பாலிக்கும் காரணி கள்,வல்லரசுகள் உள்ளிட்ட ஒட்டு மொத்தமான உலக நாடுகளின் வெளி உறவுக் கொள்கைகள் அண்மைக் கால பன்னாட்டு உறவு களின் வரலாறு, உலகம் முழுவதற்கும் பொதுவான, நிலையான ஒரு அமைப்பை ஏற்படுத்துதல் போன்றவையாகும்.

### 1.3.3 பன்னாட்டு உறவின் நோக்கமும் தன்மையும்

தற்கால உலகம் சிக்கலும், ஆபத்தும் நிறைந்ததாக உள்ளது. நாடுகளுக்கிடையே அணு ஆயுதப் போட்டி நிலவுகிறது. பொருளாதார மற்றும் அரசியல் ஆதிக்கப் போட்டி உச்சகட்டத்தை அடைந்துள்ளது. எல்லாவற்றிற்கு மேலும் பயங்கரவாதச் செயல்கள் உலகையே ஆட்டிப்படைத்து வருகிறது. உலகத்தில் நிலையான அமைதி ஏற்பட வழியில்லையா என்ற ஏக்கம் ஏற்படுகிறது. உலக அமைதிக்கான வலுவான வழிமுறையை இன்னும் காணமுடியவில்லை என்பதே பன்னாட்டு உறவு என்ற இந்த படிப்பின் முக்கியத்துவத்தை அதிகப்படுத்துகிறது.

மனித இனத்தின் வாழ்விற்கும் மேம்பாட்டிற்கும் இப்படிப்பு மிகவும் அவசியமாகிறது. அரசுகளுக்கிடையே உள்ள உறவுமுறைகளில் உள்ள நுட்பத்தை வெளிப்படுத்துவதையே நோக்கமாகக் கொண்டுள்ளது. எத்தகைய உறவுமுறையை ஊக்கப்படுத்துவது, எவற்றைக் கண்டனம் செய்வது போன்ற விஷயங்களைத் தெளிவு படுத்த இது உதவுகிறது. அணு ஆயுதப் பெருக்கம் மற்றும் பயங்கர வாதம் ஆகியவை பற்றிய அச்சத்தையும் அதனைப் போக்க வேண்டிய பொறுப்புகளையும் உணர்த்துவது இந்தப் படிப்பின் முக்கியமான நோக்கமாக உள்ளது.

மக்களாட்சி நடைபெறும் நாடுகளில் தங்கள் நாட்டின் வெளிஉறவுக் கொள்கை பற்றி தெரிந்து கொள்ள மக்கள் உரிமை பெற்றுள்ளார்கள். ஏனென்றால் ஒவ்வொரு நாட்டின் மேம்பாடும், வளர்ச்சியும் அதன் வெளி உறவுக் கொள்கையை சார்ந்தே உள்ளது. எனவே ஒரு குறிப்பிட்ட வெளிஉறவுக் கொள்கையைப்பின்பற்றுமாறு அரசை மக்கள் வற்புறுத்தலாம். அத்தகைய செயல்பாட்டிற்கு பன்னாட்டு உறவுகள் பற்றிய படிப்பு அவர்களைத் தயார்படுத்துகிறது. உலகில் ஏற்படும் போர்களைத்தடுத்து அமைதிக்கான வழிமுறை களைக்கான மக்களைத் தூண்டுவதும் இப்படிப்பின் நோக்கமாக கருதலாம்.

பன்னாட்டு உறவுகள் என்ற படிப்பு வரலாறு, அரசியல், அறிவியல் போன்ற படிப்புகளில் இருந்து சமீப காலத்தில் தோன்றிய ஒரு படிப்பாகும். இது வரலாறு, அரசியல், நிலவியல், புள்ளியல், சட்டவியல், பொருளாதாரம் போன்ற படிப்புகளைச் சார்ந்து உள்ளது. ஆனாலும் தற்போது இது ஒரு தனிப்பிரிவு படிப்பாக வளர்ச்சி யடைந்துள்ளது. உலகிலுள்ள எல்லா அரசுகளின் செயல்பாடு களையும் உள்ளடக்கி உள்ள ஒரு படிப்பாக உள்ளது. அரசுகளின் தன்மையும் செயல்பாடுகளும் மாறும்போது பன்னாட்டு உறவுகளின் மையக் கருவும் மாறுகிறது. எதிர்காலத்தைப் பற்றிய பிரச்சனை களையும் ஆய்வு செய்கின்ற ஒரு அவசியமான படிப்பாக இது திகழ்கிறது.

## 2.4 இராஜதந்திரம்(Diplomacy)

ஒரு நாட்டின் வெளிநாட்டு தூதரகங்களில் பணிபுரிவோர் பொதுவாக அரசியல் விவேகிகள் என்றழைக்கப்படுகின்றனர். ஒருநாட்டின் விருப்பு வெறுப்புக்களை வெளிநாடுகளில் பிரதிபலிக்கும் அரசாங்கத்தின் கண்களும் காதுகளுமாய் அரசியல் விவேகிகள் கருதப்படுகின்றனர். பண்டையகாலத்தில் உயர்குடியைச் சார்ந்தோர் அரசியல் விவேகிகளாய் நியமனம் செய்யப்பட்டனர். இன்று அந்நிலை மாறிவிட்டது. திறமையை அடிப்படையாய் கொண்டு, போட்டித் தேர்வுகளின் அடிப்படையில் அரசியல் விவேகிகள் சமுதாயத்தின் எல்லாப் பிரிவுகளிலிருந்தும் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். ஒரு நாட்டின் இராஜதந்திரிகள் தாங்கள் பணிபுரியும் நாட்டில் சில விசேட உரிமைகளையும் சலுகைகளையும் பெற்று வாழ்கின்றனர்.

பொதுவாக இராஜதந்திரிகள் இருவகைப் பணியாற்றுகின்றனர், அவை அரசியல் விவேகப் பணி (Diplomatic service) கான்சுலார்பணி (Consular service) என்றழைக்கப்படுகிறது. பிரதிநிதித்துவம், பேச்சுவார்த்தை ஆகிய பணிகள் அரசியல் விவேகப்பணிகள் என்றும், பிறநாடுகளில் வகிக்கும் தங்களுடைய நாட்டு குடிமக்களின் நலனைப் பேணுதல் கான்சுலார் பணி என்றும் வகைப்படுத்தப்பட்டுள்ளது. அரசியல் விவேக நடவடிக்கைகளில் ஈடுபடும் அதிகாரிகள் பலதரப்பட்ட பணிகளை ஆற்றுகின்றனர். தாய்நாட்டிற்கும் பணியில் அமர்த்தப்பட்டிருக்கும் நாட்டிற்கும் இடையே கருத்துக்களை பரிமாறும் தூதுவர்களாய் செயல்படுகின்றனர். இக்கருத்து பரிமாறல் மூலம் சிலவேளைகளில் பெரிய மாற்றங்களை நாடுகளுக்கிடையே வரலாற்றில் தோற்றுவிக்கின்றனர். எனவே இவர்கள் சில நேரங்களில் வரலாற்றின் தொலைபேசி பெண்கள் (“The telephone girls of history”) என்றழைக்கப்படுகின்றனர். “தன்னுடைய நாட்டிற்காக வெளிநாட்டில் பொய் பேச அனுப்பப் பட்டுள்ள உண்மையுள்ள நேர்மையான குடிமகன் தான் தூதுவன்” என்று ஹென்றிவாற்றன் என்பார் கூறியுள்ளார். பொதுவாக அரசியல் விவேகி மூன்று முக்கியப்பணிகளை ஆற்றுகின்றார். அவை: பிரதிநிதித்துவம், பேச்சுவார்த்தை , செய்தி திரட்டி அறிக்கை சமர்ப்பித்தல் என்பவையாகும். கௌடில்யரின் அர்த்தசாஸ்திரத்தில் பிரச்சாரம் அரசியல் விவேக நடவடிக்கைகளுக்கு எவ்வாறு பயன்படுகிறது என்பதனை விளக்கமாய் கூறியுள்ளார். நாட்டிற்கு உள்ளும், வெளியும் பொதுமக்கள் கருத்தை திரட்ட பிரச்சாரம் மிகவும் தேவை. மக்களாட்சி நாட்டிலும் எதேச்சதிகார நாட்டிலும் அரசியல் விவேக நடவடிக்கைகளின் செயல்பாட்டிற்கு பிரச்சாரம் மிகவும் தேவை. தவறான பிரச்சாரம் அபாயகரமான விளைவுகளை பன்னாட்டு உறவுகளில் தோற்றுவிக்கிறது. இதனை பின்வரும் இயலில் வகைப்பபடுத்தப்படுகின்றன.

குறிப்பு

**உங்கள் முன்னேற்றத்தைச் சரிபார்க்கவும்**
3.பன்னாட்டு உறவுகளின் பொருள் மற்றும் இயல்புகளை பற்றி குறிப்பிடுக?
4.பன்னாட்டு உறவுகளில் இராஜதந்திரத்தைப் பற்றி சிறு குறிப்பு வரைக?

## 2.5 உங்கள் முன்னேற்றத்தைச் சோதிக்கும் வினாக்களுக்கான விடைகள்

- பன்னாட்டு அரசியல் என்பது நாடுகளுக்கிடையிலான உறவுகள் ராஜதந்திரம் ஆகியவை மட்டும் பற்றியதாகும். அதாவது இதன் பரப்பு. குறுகியதாகும். ஆனால் பன்னாட்டு உறவுகள் என்பது விரிவானது. இதில் பல அம்சங்கள் இடம் பெறுகின்றன. பன்னாட்டு உறவுகளில் சமுதாய, பொருளாதார, அரசியல் மற்றும் பண்பாட்டுச் செயல்கள் கருத்தில் கொள்ளப்படுகின்றன.

- பன்னாட்டு உறவுகளின் அணுகு முறைகள் வரலாற்று அணுகுமுறை நிறுவன அணுகுமுறை நடக்கை அணுகுமுறை வலிமை அணுகுமுறை என்பனவாகும்.

- பன்னாட்டு உறவுகள் என்பது நாடுகளுக்கிடையே காணப்படும் பிரச்சனைகளுக்கான தீர்வுகள் அல்லது மாறாக அவற்றைப் பொருள் மற்றும் இயல்பு அடிப்படையில் அணுகுவதற்கான ஒருவரையறுக்கப்பட்ட முறையே ஆகும்.

- ஒரு நாட்டின் வெளியுறவுக் கொள்கையை செயல்படுத்தும் முறை இராஜதந்திரம் என்று தற்காலத்தில் சொல்லப்படுகிறது. வெளியுறவுக் கொள்கை உருவாக்கலும் அரசியல் இராஜதந்திரத்தில் அடங்குகிறது.

## 2.6 சுருக்கவுரை

- பன்னாட்டு உறவுகள் என்ற படிப்பு வரலாறு, அரசியல், அறிவியல் போன்ற படிப்புகளில் இருந்து சமீப காலத்தில் தோன்றிய ஒரு படிப்பாகும். இது வரலாறு, அரசியல், நிலவியல், புள்ளியல், சட்டவியல், பொருளாதாரம் போன்ற படிப்புகளைச் சார்ந்து உள்ளது. ஆனாலும் தற்போது இது ஒரு தனிப்பிரிவு படிப்பாக வளர்ச்சி யடைந்துள்ளது.
- உலகிலுள்ள எல்லா அரசுகளின் செயல்பாடு களையும் உள்ளடக்கி உள்ள ஒரு படிப்பாக உள்ளது. அரசுகளின் தன்மையும் செயல்பாடுகளும் மாறும்போது பன்னாட்டு உறவுகளின் மையக் கருவும் மாறுகிறது. எதிர்காலத்தைப் பற்றிய பிரச்சனை களையும் ஆய்வு செய்கின்ற ஒரு அவசியமான படிப்பாக இது திகழ்கிறது.

## 2.7 முக்கிய வார்த்தைகள்

- பன்னாட்டு உறவுகள் பற்றிய படிப்பு அவர்களைத் தயார்படுத்துகிறது. உலகில் ஏற்படும் போர்களைத்தடுத்து அமைதிக்கான வழிமுறை களைக்கான மக்களைத் தூண்டுவதும் இப்படிப்பின் நோக்கமாக கருதலாம்.

*Self-Instructional Material*

- பயங்கரவாதச் செயல்கள் உலகையே ஆட்டிப்படைத்து வருகிறது. உலகத்தில் நிலையான அமைதி ஏற்பட வழியில்லையா என்ற ஏக்கம் ஏற்படுகிறது. உலக அமைதிக்கான வலுவான வழிமுறையை இன்னும் காணமுடியவில்லை என்பதே பன்னாட்டு உறவு என்ற இந்த படிப்பின் முக்கியத்துவத்தை அதிகப்படுத்துகிறது.

## 2.8 சுயமதிப்பீடு வினாக்கள் மற்றும் பயிற்சிகள்

**சுருக்கமான கேள்விப் பதில்கள்**

1. இராஜதந்திரம் என்றால் என்ன?
2. பன்னாட்டு உறவுகளைப் பற்றி விளக்குக?

**விரிவான கேள்விப் பதில்கள்**

3. பன்னாட்டு உறவுகளின் தன்மையைப் பற்றி குறிப்பிடுக?
4. பன்னாட்டு உறவுகளில் இராஜதந்திரத்தின் பங்கைக் குறிப்பிடுக?

## 2.9 மேலும் படிக்க


- Dorothy Irving.(2007). This Too Is Diplomacy. Author House.

- George F. Kennan and John J. Mearsheimer.(2012). American Diplomacy: Sixtieth-
Anniversary Expanded Edition. University of Chicago Press; Enlarged edition.

- Karen A. Mingst, Heather Elko McKibben , Ivan M. Arreguín-Toft (2018). Essentials
Of International Relations (Eighth Edition). W. W. Norton & Company.

- William Appleman Williams. (1962). The Tragedy of American. Diplomacy Delta.
2nd edition

குறிப்பு

# அலகு 3 இராஜதந்திரத்திம்

3.0 அறிமுகம்
3.1 நோக்கங்கள்
3.2 இராஜதந்திரத்தின் வகைகள்
3.2.1 இராஜதந்திரத்தின் தன்மை
3.2.2 இராஜதந்திரத்தின் பரிணாம வளர்ச்சி
3.2.3 இரகசியக் கோட்பாடு
3.2.4 திறந்த அல்லது ஜனநாயகக் கோட்பாடு
3.2.5 தனிப்பட்ட முறையிலானக் கோட்பாடு
3.2.6 மாநாட்டுக் கோட்பாடு
3.3 அதிகாரச் சமநிலை
3.3.1 அதிகாரச் சமநிலையின் குணநலன்கள்
3.3.2 அதிகாரச் சமநிலையை நிலை நிறுத்தும் வழிமுறைகள்
3.3.3 அதிகாரச் சமநிலையும் சமநிலையாளரும்
3.3.4 அதிகாரச் சமநிலையின் நன்மைகளும் தீமைகளும்
3.4 கூட்டுப் பாதுகாப்பு
3.4.1 கூட்டுப் பாதுகாப்பும் கூட்டு நடவடிக்கைகளும
3.4.2 கூட்டுப் பாதுகாப்பும் அதிகாரச் சமநிலையும்
3.4.3 கூட்டுப்பாதுகாப்பும் இராணுவ ஒப்பந்தங்களும்
3.4.4 கூட்டுப்பாதுகாப்பு அமைப்புகள்
3.5 உங்கள் முன்னேற்றத்தைச் சோதிக்கும் வினாக்களுக்கான விடைகள்
3.6 சுருக்கவுரை
3.7 முக்கிய வார்த்தைகள்
3.8 சுயமதிப்பீடு வினாக்கள் மற்றும் பயிற்சிகள்
3.9 மேலும் படிக்க

## 3.0 அறிமுகம்

அரசியல் சூழ்ச்சி (அல்லது) இராஜதந்திரம் (Diplomacy) என்ற பதத்திற்கு பல்வேறான பொருள் விளக்கங்கள் அளிக்கப்பட்டுள்ளன. ஹெரால்டு நிக்கல்சன் என்ற அரசியல் அறிஞர் “அரசியல் விவேகம்” (Diplomacy) என்ற ஒரு நூல் எழுதியுள்ளார். அந்நூலில் அரசியல் விவேகம் பொதுவாக ஐந்து சொற்களை குறிப்பதாக அமைகிறது என்று கூறியுள்ளார். முதலாவது, வெளிநாட்டுக் கொள்கையுடன் நெருங்கிய தொடர்பு கொண்டதாக இது காணப்படுகிறது. இரண்டாவது, நாடுகளுக்கிடையேயான பேச்சுவார்த்தையை இது குறிக்கிறது. மூன்றாவது, நாடுகளுக்கிடையேயான பேச்சுவார்த்தையை ஒழுங்குபடுத்தி நடத்தும் அமைப்பு முறையை இது குறிப்பிடுகிறது. நான்காவது, இது வெளிநாட்டு சேவை என்ற பொருளையும் உணர்த்துகிறது. ஐந்தாவது, பன்னாட்டரங்கில் பேச்சுவார்த்தை திறம்பட நடத் தும் திறனை குறிப்பதாக இச்சொல் பொருள்படுகிறது. சுதந்திர அரசுகளின் அரசாங்கங்களுக்கிடையேயான அதிகாரப்பூர்வமான உறவுகளை அறிவார்ந்த அளவில் சாதூர்யமாக செயல்படுத்துதலை இராஜதந்திரம் குறிக்கிறது என்று சர் ஏர்னஸ்ட் சேட்டௌ என்ற அறிஞர் கூறியுள்ளார்.

தற்கால நடைமுறைக்கு இப்பொருள் விளக்கங்கள் பொருந்தாது என்று பலராலும் நிராகரிக்கப்பட்டுள்ளது. பன்னாட்டு உறவுகளை பேச்சுவார்த்தைகளின் மூலம் நிர்வகிப்பது அரசியல் விவேகம் என்று தற்காலத்தில் பொருள் விளக்கம் கொடுக்கப்பட்டுள்ளது. இவ்வுறவுகளை தூதுவர்கள் சீரமைத்து மேலாண்மை செய்கிறார்கள். பொதுவானநிலை, விசேடநிலை என இருநிலைகளில் அரசியல் விவேகத்திற்கு குயின்சி ரைட் என்பார் பொருள் விளக்கம் அளித்துள்ளார். பேச்சு வார்த்தைகளின் மூலம் இணங்கவைத்தல் அரசியல் விவேகம் என்று பொதுவான நிலையில் பொருள் விளக்கம் இதற்கு அளிக்கப்பட்டுள்ளது. தேசிய நலனை கருத்தில்

கொண்டு ஈடுபாட்டுடன் பன்னாட்டு உறவினை செயல்படுத்தல் அரசியல் விவேகம் என்று விசேட நிலையிலான பொருள் விளக்கம் கூறுகிறது. போர் போன்ற பிரச்சனைகளை பேச்சு வார்த்தைகளின் மூலம் தவிர்த்தல் அரசியல் விவேகத்தின் முக்கிய கடமையாக இருக்கிறது.

## 3.1 நோக்கங்கள்

இப்பொருளடக்கத்தின் வழியாக பின்வரும் பாடத்திட்டத்தின் நோக்கங்களைப் பற்றி விவரிக்கப்படுகின்றது

- ஒரு நாட்டின் வெளியுறவுக் கொள்கையை செயல்படுத்தும் முறை இராஜதந்திரம் என்று தற்காலத்தில் சொல்லப்படுகிறது. வெளியுறவுக் கொள்கை உருவாக்கலும் அரசியல் இராஜதந்திரத்தில் அடங்குகிறது.

- சுருங்கக்கூறின் நாடுகளுக்கிடையேயான உறவுகளை அதிகாரச்சமநிலை நிர்வகிக்கிறது. பன்னாட்டு அரசியலில் நாடுகள் தங்களுடைய நலனை வளர்க்கவும், வெளியுறவுக் கொள்கையின் பல்வேறு நோக்கங்களை எய்தவும் பலவகையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுகின்றன.

- இவ்வகை நோக்கங்களை எய்த நடக்கும் போராட்டங்களில் அரசியல் விவேகத்தின் மூலம் கருத்து வேறுபாடுகள் அகற்றப்பட்டு, சமூக நிலைத் தோற்றுவிக்கப்படுகிறது. ஒரு மனிதனுக்கு மூளை எவ்வளவு முக்கியமானதோ, அதைப்போன்று ஒரு நாட்டிற்கு கூட்டுப்பாதுகாப்பு முக்கியமான ஒன்றாக கருதப்படுகிறது.

## 3.2 இராஜதந்திரத்தின் வகைகள் (KINDS OF DIPLOMACY)

இருபதாம் நூற்றாண்டின் அரசியல் விவேகத்தில் மூன்று முக்கிய காரியங்களைப் பார்க்க முடிகிறது என்று ஹெரால்டு நிக்கல்சன் என்ற அறிஞர் கூறியுள்ளார். அவை தேசிய சமூக அமைப்புக்களின் வளர்ச்சி, பொதுமக்கள் கருத்தின் முக்கியத்துவம், செய்தித் தொடர்பில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் என்பவையாகும். தேசிய சமூக அமைப்புக்களின் வளர்ச்சி அரசியல் விவேகத்தினுடைய தேவையை உணர்த்துகிறது. பொதுமக்கள் கருத்தின் முக்கியத்துவம் அரசியல் விவேக நடவடிக்கைளில் உயர்குடியினருக்கு இருந்த செல்வாக்கினைக் குறைத்தது. செய்தித் தொடர்புகளில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் அரசியல் விவேகிகள் அல்லது தூதுவர்கள் செய்திகளைச் சுமந்து செல்லும் பணியாளர்களாக மாற்றியுள்ளது. தூதுவர்களின் உதவியின்றி நாட்டின் தலைவர்கள் ஒருவரோடொருவர் தொடர்புகளை ஏற்படுத்தி செய்திகளை பரிமாறிக்கொள்கின்றனர்.

இவ்விரண்டிற்கும் சில தொடர்புகள் இருந்தாலும், இரணடும் ஒன்றிற்கொன்று வேறுபட்டது. வெளிநாட்டு கொள்கை வெளிநாட்டு உறவிற்கு தேவையான செயல்பாட்டு அம்சங்களைக் கொடுக்கிறது. வெளிநாட்டுக் கொள்கையை செயல்படுத்த உகந்த அமைப்பினையும் பணியாளர்களையும் இராஜதந்திரம் அளிக்கிறது. வெளிநாட்டுக் கொள்கை உருவாக்கலில் அரசியல் விவேகிகளுக்கு நேரடி பங்கு கிடையாது. தங்களுடைய நாடுகளின் வெளியுறவுத் துறை உருவாக்கும் வெளிநாட்டுக் கொள்கைகளை அரசியல் விவேகிகள் செயல்படுத்துகிறார்கள். இராஜதந்திரம் வெளிநாட்டுக் கொள்கையும் ஒன்றிலிருந்து ஒன்று

வேறுபட்டிருந்தாலும் இரண்டும் ஒன்றிற்கொன்று நெருங்கிய தொடர்பு கொண்டது. வலுவற்ற அரசியல் விவேகம் ஆற்றல் மிக்க வெளிநாட்டுக் கொள்கையை செயலிழக்கச் செய்கிறது வலிமைமிக்க அரசியல் விவேகம் வெளிநாட்டுக் கொள்கையின் குறைபாடுகளை இலகுவாக அகற்றுகிறது. வெளிநாட்டுக் கொள்கை வெளியுறவுச் சம்பந்தமான செயல் திட்டத்தை வழங்குகிறது. அரசியல் விவேகம் அச்செயல் திட்டத்தின் செயல் பாட்டிற்கான வழிமுறைகளை வகுத்தளிக்கிறது.

### 3.2.1 இராஜதந்திரத்தின் தன்மை

ஒரு நாட்டின் வெளிநாட்டு தூதரகங்களில் பணிபுரிவோர் பொதுவாக அரசியல் விவேகிகள் என்றழைக்கப்படுகின்றனர். ஒருநாட்டின் விருப்பு வெறுப்புக்களை வெளிநாடுகளில் பிரதிபலிக்கும் அரசாங்கத்தின் கண்களும் காதுகளுமாய் அரசியல் விவேகிகள் கருதப்படுகின்றனர். பண்டையகாலத்தில் உயர்குடியைச் சார்ந்தோர் அரசியல் விவேகிகளாய் நியமனம் செய்யப்பட்டனர். இன்று அந்நிலை மாறிவிட்டது. திறமையை அடிப்படையாய் கொண்டு, போட்டித் தேர்வுகளின் அடிப்படையில் அரசியல் விவேகிகள் சமுதாயத்தின் எல்லாப் பிரிவுகளிலிருந்தும் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். ஒரு நாட்டின் அரசியல் விவேகிகள் தாங்கள் பணிபுரியும் நாட்டில் சில விசேட உரிமைகளையும் சலுகைகளையும் பெற்று வாழ்கின்றனர்.

பொதுவாக அரசியல் விவேகிகள் இருவகைப் பணியாற்றுகின்றனர், அவை அரசியல் விவேகப் பணி (Diplomatic service) கான்சுலார்பணி (Consular service) என்றழைக்கப்படுகிறது. பிரதிநிதித்துவம், பேச்சுவார்த்தை ஆகிய பணிகள் அரசியல் விவேகப்பணிகள் என்றும், பிறநாடுகளில் வகிக்கும் தங்களுடைய நாட்டு குடிமக்களின் நலனைப் பேணுதல் கான்சுலார் பணி என்றும் வகைப்படுத்தப்பட்டுள்ளது. அரசியல் விவேக நடவடிக்கைகளில் ஈடுபடும் அதிகாரிகள் பலதரப்பட்ட பணிகளை ஆற்றுகின்றனர். தாய்நாட்டிற்கும் பணியில் அமர்த்தப்பட்டிருக்கும் நாட்டிற்கும் இடையே கருத்துக்களை பரிமாறும் தூதுவர்களாய் செயல்படுகின்றனர். இக்கருத்து பரிமாறல் மூலம் சிலவேளைகளில் பெரிய மாற்றங்களை நாடுகளுக்கிடையே வரலாற்றில் தோற்றுவிக்கின்றனர். எனவே இவர்கள் சில நேரங்களில் வரலாற்றின் தொலைபேசி பெண்கள் (“The telephone girls of history”) என்றழைக்கப்படுகின்றனர். “தன்னுடைய நாட்டிற்காக வெளிநாட்டில் பொய் பேச அனுப்பப் பட்டுள்ள உண்மையுள்ள நேர்மையான குடிமகன் தான் தூதுவன்” என்று ஹென்றிவாற்றன் என்பார் கூறியுள்ளார். பொதுவாக அரசியல் விவேகி மூன்று முக்கியப்பணிகளை ஆற்றுகின்றார். அவை: பிரதிநிதித்துவம், பேச்சுவார்த்தை , செய்தி திரட்டி அறிக்கை சமர்ப்பித்தல் என்பவையாகும். கௌடில்யரின் அர்த்தசாஸ்திரத்தில் பிரச்சாரம் அரசியல் விவேக நடவடிக்கைகளுக்கு எவ்வாறு பயன்படுகிறது என்பதனை விளக்கமாய் கூறியுள்ளார். நாட்டிற்கு உள்ளும், வெளியும் பொதுமக்கள் கருத்தை திரட்ட பிரச்சாரம் மிகவும் தேவை. மக்களாட்சி நாட்டிலும் எதேச்சதிகார நாட்டிலும் அரசியல் விவேக நடவடிக்கைகளின் செயல்பாட்டிற்கு பிரச்சாரம் மிகவும் தேவை. தவறான பிரச்சாரம் அபாயகரமான விளைவுகளை பன்னாட்டு உறவுகளில் தோற்றுவிக்கிறது.

### 3.2.2 இராஜதந்திரத்தின் பரிணாம வளர்ச்சி

இந்தியாவில் அரசியல் விவேக நடவடிக்கைகள் வேதகாலத்திலிருந்து செயல்பட்டு வருகிறது. அரசியல் விவேக நடவடிக்கைகள் மூலம் நாடுகளுக்கிடையே உறவுகள்

வரையறுக்கப்பட்டதாக ராமாயணம் மற்றும் மகாபாரதம் ஆகியவற்றில் பல இடங்களில் கூறப்பட்டுள்ளது. கௌடில்யாவின் அர்த்தசாஸ்திரத்திலும் இதை பற்றிய பல சான்றுகளைக் காணலாம். அர்த்தசாஸ்திரத்தில் தூதுவர்களின் பணிகளைப்பற்றிய விளக்கம் விரிவாக வழங்கப்பட்டுள்ளது. அப்பணிகளை இன்றும் அரசியல் விவேகிகள் புரிகின்றனர். அரசியல் விவேகத்தில் பரிணாமவளர்ச்சி மூன்று காலக்கட்டங்களில் நடந்தேறியுள்ளது. முதற்காலக்கட்டம் கி.மு.476ஆம் ஆண்டிலிருந்து கி.பி.1450 ஆண்டிற்கு இடைப்பட்ட காலமாகும். இக்காலக்கட்டத்தில் நாடுகள் தமக்கிடையே உறவுகளை தற்காலிகமாக ஏற்படுத்தியது.

பண்டைய கிரேக்க நாட்டில் பல நகர அரசுகள் காணப்பட்டன. அவைகளுக்கிடையேயான உறவுகள் நிரந்தரமான அரசியல் விவேக நடவடிக்கைகள் மூலம் உறுதி செய்யப்படவில்லை அக்காலக்கட்டத்தில் அரசியல் விவேக நடவடிக்கைகள் முதியவர்களால் மேற்கொள்ளப்பட்டன. பெரும்பாலும் வாய்மொழிப் பேச்சுவார்த்தைகளே நடந்தேறின. இரண்டாவது காலகட்டம் கி.பி.1450-ஆம் ஆண்டிலிருந்து ஆரம்பமாகியது. இக்காலக்கட்டத்தில் அரசியல் விவேக நடவடிக்கைகள் நிரந்தர அமைப்புக்களால் மேற்கொள்ளப்பட்டது. 16-ஆம் நூற்றாண்டில் ஏறக்குறைய எல்லா ஐரோப்பிய அரசர்களும் நிரந்தரமான அரசியல் விவேக நடவடிக்கைக்கான நிர்வாக அமைப் புக்களை ஏற்படுத்தினர். மூன்றாவது காலகட்டம் முதல் உலகப் போருக்குப்பின் ஆரம்பமானது. இக்காலக்கட்டத்தில் ஜனநாயக அரசியல் விவேகம் ஆரம்பானது. லெனின், உயில்சன் ஆகியத் தலைவர்கள் மறைவற்ற திறந்த அரசியல் விவேக நடவடிக்கைகளை ஆதரித்தன. தற்காலத்தில் நாடுகளுக்கிடையேயான உறவுகளை நாடுகளின் தேசிய விருப்பங்களும் தொழில்நுட்பமும் பெருமளவில் மாற்றியமைத்துள்ளது. இன்று மாநாடுகளின் அடிப்படையில் அரசியல் விவேகம் முக்கியத்துவம் வாய்ந்து காணப் படுகிறது, இதனடிப்படையில் இருதுருவ அரசியல் நடவடிக்கைகள் செயலிழந்து பலமுனை அரசியல் விவேக நடவடிக்கைகள் செல்வாக்குப் பெற்றுத் திகழ்கின்றன. அரசியல் விவேக நடவடிக்கைகள் பலவகைப்படுகின்றன. ஒவ்வொரு வகையிலும் சில நன்மைகளும் தீமைகளும் காணப்படுகின்றன.

### 3.2..3 இரகசிய இராஜதந்திரக் கோட்பாடு : (The concept of Secret Diplomacy)

இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பகாலம்வரை இக்கோட்பாடு உலக அரங்கில் செல்வாக்குப் பெற்று திகழ்ந்தது. இம்முறையில் நாட்டின் உயர்குடி மக்களால் அரசியல் விவேக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இம்முறையால் மேற்கொள்ளப்பட்ட இரகசிய உடன்பாடுகள் முதல் உலகப்போருக்கு முன்னரும், உலகப்போர் நடந்து கொண்டிருந்த பொழுதும் தாங்கமுடியாதத் துயரினை சாதாரண மனிதனுக்கு இவ்வுலகில் ஏற்படுத்தியது. இதற்கு உதாரணமாக முதல் உலகப்போர் ஏற்பட அடிப்படைக்காரணமாய் அமைந்த பிராங்கோ ரஷ்ய உடன்பாட்டையும், முக்கூட்டு உடன்பாட்டையும் எடுத்தியம்பலாம். இரகசிய அரசியல் விவேக நடவடிக்கைகளால் ஜப்பானும் இத்தாலியும், செய்து கொண்ட இரகசிய ஒப்பந்தங்களை பாரிஸ் சமாதான மாநாடு சிந்திக்க வேண்டிய நிலை பெரும் பிரச்சனைகளைத் தோற்றுவித்தது. மேலும் இரகசிய அரசியல் விவேக நடவடிக்கைகள் பன்னாட்டு அரங்கில் உலக நாடுகளுக்கிடையே சந்தேகங்களை ஏற்படுத்தியது. இவ்வகையான அரசியல் விவேக நடவடிக்கைகளின் தவறுகளை அகற்ற சர்வதேச சங்கத்தின் சாஸனத்தில் பின்வரும் விதி இணைக்கப்பட்டது. சர்வதேச சங்கத்தின் அங்கத்துவ நாடுகள் தமக்குள் உடன்பாடுகள் செய்து கொண்டால்,

அவ்வுடன்பாடுகளை சர்வதேச சங்கத்தின் செயலகத்தில் பதிவு செய்து, அச்செயலகம் மூலம் அவ்வுடன்பாடுகளை பிரசுரித்தல் வேண்டும்.



### 3.2.4 திறந்த அல்லது ஜனநாயக் இராஜதந்திரக் கோட்பாடு : (The concept of open or democratic diplomacy)

இம்முறை 20-ம் நூற்றாண்டின் ஆரம்ப காலகட்டத்தில் திறம்பட செயல்பட ஆரம்பித்தது. மக்களுடைய பிரதிநிதிகளால் வெளிப்படையாய் நடத்தப்படும் அரசியல் விவேக நடவடிக்கை களை இது குறிக்கிறது. இம்முறையிலும் சில குறைபாடுகள் காணப்படுகின்றன, அரசியல் விவேக சாதுர்யங்களை முழு அளவில் அறியாத சாதாரண மக்கள் பிரதிநிதிகளாய் அரசியல் விவேக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவது இம்முறையின் முக்கிய குறைபாடாகும். மேலும் இம்முறையில் அரசியல் விவேகிகள் பொதுமக்கள் கருத்தை அறிந்து அதனடிப்படையில் முடிவுகளை மேற்கொள்கின்றனர். இதனால் காலதாமதம் ஏற்படுகிறது. இக்குறைபாடுகள் இருந்த போதிலும் பல நிறைவுகள் இம்முறையில் காணப்படுகின்றன. பிறநாடுகளுடன் தங்களுடைய நாடு கொண்டுள்ள தொடர்பினை பொதுமக்கள் அறிய இம்முறை வாய்ப்பளிக்கிறது. பன்னாட்டு உறவுகளில் ஏற்படும் பிரச்சனைகளை வெளியரங்கமாய் எடுக்கும் முடிவுகள் மூலம் சுலபமாக தீர்வு செய்ய முடியும்.

### 3.2.5 தனிப்பட்ட முறையிலான இராஜதந்திரக் கோட்பாடு (The Concept of Personal Diplomacy)

பண்டைய நாட்களில் நாட்டின் தலைவர்கள் தங்களுடைய தூதுவர்கள் அல்லது பிரதிநிதிகள் மூலம் அரசியல் விவேக நடவடிக்கைகளை மேற்கொண்டனர். இன்று செய்தி மற்றும் போக்குவரத்து தொடர்புகளின் வளர்ச்சி இந்நிலையை மாற்றியமைத்துள்ளது. இன்றைய காலகட்டத்தில் துரித செய்தி மற்றும் போக்குவரத்து தொடர்பு வசதிகளினால் ஒரு நாட்டின் தலைவர் தனிப்பட்ட முறையில் இன்னொரு நாட்டின் தலைவரோடு நேரடி தொடர்பு கொண்டு வருங்காலத்தைப் பற்றிய முடிவுகளை உலக அரங்கில் நேரடியாக மேற்கொள்ள முடியும். இம்முறை இரண்டாம் உலகப் போர் நடந்து கொண்டிருந்த காலத்திலிருந்து உலகில் பிரபலமாகியது. இரண்டாம் உலகப் போர் நடந்து கொண்டிருந்தபோது பலமுறை நேசநாடுகளின் தலைவர்களாகிய ஸ்டெலின், ரூஸ்வெல்ட், சர்ச்சில் ஆகியோர் சந்தித்து வருங்காலத்தைப் பற்றிய பல முக்கிய முடிவுகளை மேற்கொண்டனர். உலக அரங்கில் முக்கியமான முடிவுகளை மேற்கொள்ளும்போது சம்பந்தப்பட்ட நாடுகள் சில சலுகைகளை வழங்கவேண்டும். அச்சலுகைகளை உலக நாடுகளின் தலைவர்கள் மட்டும் தான் அறிவிக்க முடியும். தனிபட்ட அரசியல் விவேக நடவடிக்கைகளை நேரடியாக நாடுகளின் தலைவர்கள் மேற்கொள்ளும் போது, அவ்வப்போது சலுகைகளை அறிவித்து, முடிவுகளை துரிதமாக மேற்கொள்ள முடியும்.

### 3.2.6 மாநாட்டு இராஜதந்திரக் கோட்பாடு (The Concept of Diplomacy by Conference) :

குறிப்பிட்ட இடைவெளிகளுக்குள் சில நாடுகள் ஒருங்கிணைந்து மாநாடுகள் உலக அரங்கில் நடத்தி, முடிவுகள் மேற்கொள்வதை இம்முறை குறிக்கிறது. முதல் உலகப் போருக்குப் பின் உருவாக்கப்பட்ட சர்வதேச சங்கம் இம்முறையிலான அரசியல் விவேக நடவடிக்கைகளை உலகில் புகுத்தியது. இன்று இரண்டாம் உலகப்போருக்குப் பின் உருவாக்கப்பட்ட ஐக்கிய நாட்டுசபை இம்முறையை உறுதிப்படுத்தியுள்ளது. வடக்கு அட்லாண்டிக் ஒப்பந்த அமைப்பு தென்கிழக்கு ஆசிய ஒப்பந்தஅமைப்பு வார்சா ஒப்பந்தம் போன்றவை இம்முறையை உலக அரங்கில் நிலைபெற செய்துள்ளது. உலகின் பலப்பகுதிகளிலும் இன்று பத்தாயிரத்திற்கும்

மேலான இவ்வகை மாநாடுகள் ஒவ்வொரு ஆண்டும் நடந்தேறி வருகிறது. இவ்வாறு பன்னாட்டு அரசியலில் முக்கியத்துவம் வாய்ந்த அரசியல் விவேகத்தின் முக்கிய நோக்கம் தேசியநலனை சமாதானமுறையில் முன்னேற்றுவதாகும். உலக அரங்கில் முக்கிய நாடுகள் பிற நாடுகளின் அரசியல் நடவடிக்கைகளில் பங்கேற்பதை தங்கள் அடிப்படை அரசியல் நோக்கமாக கொண்டுள்ளன. தங்களுடைய செல்வாக்கை நிலை நிறுத்துவதன் மூலம் தான் பிற நாடுகளின் அரசியல் செயல்பாட்டில் பங்கேற்க இயலும். செல்வாக்கை அரசியல் விவேக நடவடிக்கைகளின் மூலம் தான் நிலை நிறுத்த முடியும். அமெரிக்கா 1945-ஆம் ஆண்டிற்குப் பிறகு ஆசிய ஆப்பிரிக்க நாடுகள் மீது தனது அரசியல் விவேக நடவடிக்கைகள் மூலம் செலுத்திய செல்வாக்கை இதற்கு உதாரணமாக கூறலாம். இவ்வாறு வல்லரசுகள் தங்கள் செல்வாக்கை உலக அரங்கில் அரசியல் விவேக நடவடிக்கைகள் மூலம் பரவலாக்கலை நோக்கமாக கொண்டுள்ளது. ஆனால், புதிதாய் சுதந்திரம் பெற்ற சிறிய அரசுகள் அரசியல் விவேக நடவடிக்கைகள் மூலம் தங்கள் நாட்டைப் பாதுகாப்பதையும், பொது நலனைப் பேணுதலையும் நோக்கமாக கொண்டுள்ளது. இவைகள் அரசியல் விவேகத்தின் அரசியல் சார்ந்த நோக்கங்களாகும்.

பொருளாதார மற்றும் வணிக, நலன்களை அரசியல் விவேக நடவடிக்கைகள் மூலம் வளர்ப்பது அரசியல் சாராத அரசியல் விவேகமாகும். தொழிற் புரட்சிக்குப்பின் வாணிபம் சார்ந்த அரசியல் விவேக நடவடிக்கைகள் தீவிரம் அடைந்துள்ளன. அந்நடவடிக்கைகள் மூலம் நாடுகள் சந்தைகளைப் பிடிப்பதையும், மூலப்பொருட்களைப் பெறுவதையும் நோக்கமாக கொண்டுள்ளன. நாட்டின் முக்கியத் தலைவர்கள் பிற நாடுகளுக்கு விஜயம் செய்து, அந்நாடுகளோடு சுமூக உறவுகளை ஏற்படுத்துகின்றனர். இது அரசியல் விவேக நடவடிக்கைகளில் முக்கியமானதாகக் கருதப்படுகிறது. சுருங்கக்கூறின் அரசியல் விவேக நடவடிக்கைகள் உலக அரங்கில் ஒரு நாட்டிற்கு நன்மதிப்பை ஏற்படுத்திக் கொடுக்கிறது. நாடுகளுக்கிடையே சுமூக உறவை நிலைநிறுத்தி, உலக சமாதானத்திற்கு வழிவகுக்கிறது.

**உங்கள் முன்னேற்றத்தைச் சரிபார்க்கவும்**

1.இரஜதந்திரத்தின் வகைகளைக் குறிப்பிடுக?

2..இரஜதந்திரம் ஒரு கட்டுரை வரைகை?

## 3.3 அதிகாரச் சமநிலை (Balance of power)

பன்னாட்டு அரங்கில் தேசிய அரசுமுறை நிலவும் வரை அதிகாரச் சமநிலைத் தத்துவமும் நிலவும், கிரேக்க அரசின் காலம் தொட்டு இக்கோட்பாடும் உலகில் செயல்பட்டு வருகிறது என்று சிலர் கூறுகின்றனர். ஆனால் 19-ம் நூற்றாண்டிலிருந்து தான் இக்கோட்பாடு தீவிரமாக செயல்பட ஆரம்பித்தது. 19-ம் நூற்றாண்டின் இறுதியிலிருந்து இக்கோட்பாடு ஆற்றலிழந்து காணப்படுகிறது. இக்கோட்பாடு பன்னாட்டு உறவிற்கு அடிப்படையாய் திகழ்கிறது. பன்னாட்டு அரசியலைக் கட்டுப்படுத்தும் ஒரு சக்தியாக அதிகாரச் சமநிலை காணப்படுகிறது. பன்னாட்டு பாதுகாப்பிற்கு தேவையான ஒரு கோட்பாடாக இது கருதப்படுகிறது. சிறிய அரசுகள் தங்கள் இறைமையை இக்கோட்பாட்டால் சீரிய முறையில் பாதுகாத்துக் கொள்ளுகின்றன.

''அதிகாரச் சமநிலை'' என்ற சொற்றொடருக்கு பொருள் விளக்கம் அளித்ததில் சிந்தனையாளர்களிடையே கருத்திசைவு ஏற்படவில்லை.

குறிப்பு

முடிந்த அளவிற்கு அதிகாரத்தை உலக நாடுகளுக்கிடையே பகிர்ந்து அளித்தலை இக்கோட்பாடு குறிக்கிறது என்று பேராசிரியர் மொர்கென்தா குறிப்பிடுகிறார். பன்னாட்டு குடும்ப அமைப்பில் அங்கத்துவம் வகிக்கும் உலக நாடுகளுக்கிடையே அதிகாரத்தின் அடிப்படையில் ஒரு சமநிலையை தோற்றுவித்த, எந்தவொரு நாடும் தனது விருப்பத்தை பிற நாடுகள் மீது திணிக்காமல் தடைச் செய்வதை அதிகாரச் சமநிலை குறிக்கிறது என்று பேராசிரியர் சிட்னி பி.ஃபே கூறியுள்ளார். உலக அரங்கில் நாடுகள் தங்கள் அதிகாரத்தை மேம்படுத்த அதிகாரப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளன. அப்போராட்டத்தில் ஈடுபட்டுள்ள நாடுகள் தனியாகவோ கூட்டாகவோ வலிமைப் பெற்று திகழ்கின்றன. இதனால் வலிமையற்ற சிறிய நாடுகளை நசுக்கிவிடும் வாய்ப்பு ஏற்படலாம். வலிமையற்ற நாடுகளின் இறைமைக்கு ஆபத்து ஏற்படலாம். இந்நிலை ஏற்படாமல் பல நாடுகள் ஒருங்கிணைந்து பாதுகாப்பிற்காக ஏற்படுத்தும் அதிகாரத்தின் அடிப்படையிலான ஒருங்கிணைவு அதிகாரச் சமநிலையைக் குறிக்கிறது. இக்கூட்டமைவுகளினால் உலக அதிகாரம் சரிசமமாக பகிரப்படுகிறது. நாடுகள் ஆக்கிரமிப்பாளராக மாறும் நிலைத் தவிர்க்கப்படுகிறது.

### 3.3.1அதிகாரச் சமநிலையின் குணநலன்கள் :

மாறுபாடான குணநலன்களைக் கொண்டு அதிகாரச் சமநிலைத் திகழ்கிறது. ஒரே நேரத்தில் இரு நிலைகளில் செயல்படுகிறது. முதலாவது, அதிகாரச் சமநிலை அமைதி நிலையையும் அதேநேரத்தில் பொறாமை நிலையையும் கொண்டு திகழ்கிறது. நாடுகள் ஒருங்கிணைந்து, சமநிலையைத் தோற்றுவித்து, ஆக்கிரமிப்பைத் தவிர்த்து அமைதியை நிலைநாட்டுகிறது. ஆனால் சமநிலை உருவாக்க ஒருங்கிணைந்திருக்கும் ஒருங்கிணைவில் ஈடு பட்டிருக்கும் நாடுகளின் அதிகாரம் சமமாக இருப்பதில்லை. சில நாடுகள் பிற நாடுகளைக் கண்டு பொறாமையுறும் அளவிற்கான அதிகாரம் கொண்டு திகழ்கிறது. இரண்டாவது. அதிகாரச் சமநிலையைத் தோற்றுவிக்க கடைப்பிடிக்கப்படும் முறைகள் நிரந்தரமானவைகள் அல்ல. மூன்றாவது அதிகாரச்சமநிலை இருக்கின்ற உரிமைகளையும் தவறுகளையும் பாதுகாத்தலைக் குறிக்கிறது. ஆனால், அதே நேரத்தில் மாற்றங்களை இக்கோட்பாடு எதிர்ப்பதில்லை. மாறிவரும் சூழலுக்கு ஏற்ப அணிதிரண்டுள்ள நாடுகள் அதிகாரத்தைப் பெருக்க முயற்சிகள் மேற்கொள்ளுகின்றன. நான்காவது அதிகாரச்சமநிலையை குலைக்க ஒரு நாடு ஆக்கிரமிப்பை மேற்கொள்ளுகிறது. அதிகாரச் சமநிலையை குலைப்பதற்கும், நிலை நிறுத்துவதற்கும் போர் ஒரு கருவியாக பயன்படுத்தப்படுகிறது. ஐந்தாவது, நாடுகளின் சுதந்திரத்தையும், இறைமையையும் பாதுகாத்தல் இக்கோட்பாட்டின் குறிக்கோளாகக் கருதப்படுகிறது. ஆறாவது, அதிகாரச் சமநிலை கோட்பாட்டின் செயல்பாட்டில் தீவிரமாய் பங்கேற்பவர்கள் வல்லரசுகள், சிறிய அரசுகள் இப்போட்டியை கண்டுகளிக்கும் அமைதியான பார்வையாளர்களாகவே செயல்படுகின்றனர். கடைசியாக, அதிகாரம் நிலையற்ற தன்மைப் படைத்ததாய் இருப்பதால், தற்கால சூழ்நிலைகளுக்கும் பொருந்தாத ஒன்றாக காணப் படுகிறது.

### 3.3.2 அதிகாரச் சமநிலையை நிலை நிறுத்தும் வழிமுறைகள்

இவ்வாறு உலக அரங்கில் முக்கியத்துவம் வாய்ந்த அதிகாரச் சமநிலை பல வழிமுறைகள் மூலம் நிலை நிறுத்தப்படுகிறது. அவை பின் வருபவையாகும்.

**(a) உடன்பாடுகளும் எதிர் உடன்பாடுகளும் :**

ஆக்கிரமிப்பு நடத்தும் நாடுகளை எதிர்க்க ஒரு நாடு பிறநாடுகளுடன் நட்புறவு ஏற்படுத்தி உடன்பாட்டின் அடிப்படையில் கூட்டமைவை ஏற்படுத்துகிறது. அக்கூட்டமைவைக் கண்டு அச்சம் கொண்டு பிறநாடுகள் சில ஒருங்கிணைந்து அதிகாரச் சமநிலையை நிலை நிறுத்த உடன்பாடுகளை ஏற்படுத்துகின்றன. இவ்வுடன்பாடு எதிர் உடன்பாடு என்றழைக்கப்படுகிறது. உடன் பாடுகளை பால்மர் மற்றும் பெர்கின்சு என்னும் அறிஞர்கள் இருவகையாக வகைப்படுத்துகின்றனர். அவை தற்காப்பிற்கான உடன்பாடு (Defensive Albence) எதிர்த்து தாக்குவற்கான உடன்பாடு (Offensive Albence) என்பவையாகும். அங்கத்துவ நாடுகளுக்கு சாதகமாக அதிகாரச் சமநிலையை நிலை நிறுத்த செய்து கொண்ட உடன்பாடு தற்காப்பிற்கான உடன்பாடு என்றும், அங்கத்துவ நாடுகளுக்கு சாதகமாக அதிகாரச் சமநிலையை குலைக்க செய்து கொண்ட உடன்பாடு எதிர்த்து தாக்குவதற்கான உடன்பாடு என்றும் அழைக்கப்படுகிறது. எவ்வாறெனினும் உடன் பாடுகள் அதிகாரச்சமநிலைக் கோட்பாட்டின் ஒரு வழிமுறையாகக் கருதப்படுகிறது.

**(b) இழப்பீடு வழங்கல் :**

நாடுகள் போரினாலும் இதர காரணங்களாலும் இழந்த காரியங்களை திரும்ப வழங்க ஏற்பாடு செய்வதன் மூலம், அந்நாடுகளை ஒரு கூட்டமைவில் கொண்டுவரலாம். அவ்வாறு கொண்டு வருவதன் மூலம் அதிகாரச் சமநிலையைத் தோற்றுவிக்க முடிகிறது. பொதுவாக இழப்பீடுகள் நிலப்பகுதிகள் மூலம் வழங்கப்படுகிறது.

**(c) போர் தளவாட பெருக்கமும் படைக் குறைப்பும்**

போர் தளவாடப் பெருக்கத்தால் உலக நாடுகளுக்கிடையே நிலையற்ற அதிகாரச் சமநிலைத் தோற்றுவிக்கப்படுகிறது. அமெரிக்கா போர் தளவாடத்தைப் பெருக்கியவுடன் சமநிலையைத் தோற்றுவிக்க சோவியத் யூனியன் போர் தளவாடங்களைப் பெருக்கியது. சோவியத் யூனியன் போர் தளவாட பெருக்க முயற்சிகளை மேற்கொண்டது. இதனால் உலகில் பதட்ட நிலை தோன்றியது. நிலையற்ற அதிகாரச் சமநிலை ஏற்பட்டது. இந்நிலையைப் போக்க போட்டியிடும் நாடுகளுக்கிடையே விகிதாச்சார ரீதியில் படைக்குறைப்பு ஏற்படுத்தி நிலையான அதிகாரச் சமநிலை தோற்றுவிக்க கொள்கைகள் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**(d) தலையீடு மற்றும் தலையிடாக் கொள்கைகள் :**

அதிகாரச் சமநிலை குலைக்கப்படாத வரை நாடுகள் ஒன்றின் உள்விவகாரத்தில் இன்னொன்று தலையிடாத கொள்கையை கடைப்பிடிக்கிறது. கூட்டமைவில் இருந்து ஒரு நாடு வெளியேறினால் அதிகாரச் சமநிலையில் குலைவு ஏற்படலாம். அந்நிலையில் வெளியேறிய நாட்டை மீண்டும் கூட்டமைவில் இணைக்க அந்நாட்டின் உள்நாட்டு விவகாரங்களில் தலையிடும் சூழ்நிலையும் உருவாகலாம். எனவே அதிகாரச் சமநிலையைத் தக்கவைக்க இம்முறையும் பயன்படுத்தப்படுகிறது.

**(e) நடுநிலைப் பகுதி :**

அதிகாரச் சமநிலை கோட்பாட்டின் செயல்பாட்டில் பங்கேற்கும் வெவ்வேறு கூட்டமைவுகளைச் சேர்ந்த வல்லரசுகளுக்கிடையே நடுநிலை

குறிப்பு

வகிக்கும் வலுவற்ற ஒரு நாடு அமைந்திருந்தால் அந்நாடு நடுநிலைப் பகுதி என்றழைக்கப்படுகிறது. அந்நாட்டின் முக்கியப் பணி வல்லரசுகளுக்கிடையே முரண்பாடுகளை குறைத்து, நேரடி மோதலைத் தவிர்த்தலாகும். ஜெர்மனிக்கும் ரஷ்யாவிற்கும் இடையே போலந்து அமைந்திருப்பதே இதற்கு எடுத்துக்காட்டாக கூறலாம்.

**(f) பிரித்தாளும் முறை :**

அதிகாரச் சமநிலையை நிலை நிறுத்த இது ஒரு சிறந்த வழிமுறை, இங்கிலாந்து இம்முறையைப் பின்பற்றி குடியேற்ற நாடுகளை தனது ஆதிக்கத்தின் கீழ் உறுதியாய் வைத்திருந்தது.

### 3.3.3 அதிகாரச் சமநிலையும் சமநிலையாளரும் (Balancer) :

பன்னாட்டு அரங்கில் உலக நாடுகளின் அதிகாரப் போட்டியில் தன்னை இணைத்துக் கொள்ளாத நடுநிலைக் கடைபிடிக்கும் நாடு சமநிலையாளர் பணியை ஆற்றுகின்றது. அதிகாரச் சமநிலை பாதிக்கப்படவில்லையெனில் சமநிலையாளர் தலையிடமாட்டார். ஆனால் அதிகாரச் சமநிலை ஏதாவது ஒரு நாட்டிற்கு சாதகமாக குலைக்கப்பட்டால், பாதிக்கப்பட்ட நாட்டுடன் சமநிலையாளர் தன்னை இணைத்துக்கொள்வார். அங்கனம் இணைத்து அதிகாரத்தை சமநிலைக்கு கொண்டுவருவார். சமநிலையாளர் பொறுப்பேற்கின்றவர் போதிய அதிகாரம் கொண்டவராய் இருத்தல் வேண்டும். இன்றேல் அவரால் இப்பணியை சீரிய முறையில் ஆற்ற இயலாது. இரண்டாம் உலகப்போருக்கு முன் இப்பணியை இங்கிலாந்து ஆற்றிவந்தது. இன்று வல்லரசுகளுக்கிடையே இப்பணியை தனிப்பட்ட ஒரு நாடு ஆற்றாமல், கூட்டுச்சேரா நாடுகளின் அணி ஓரளவு ஆற்றி வருகிறது. அதிகாரச் சமநிலை பண்டைய காலத்தில் செயல்பட்ட வேகத்தில் இன்று செயல்படவில்லையெனினும், பல நன்மைகளை அது அளிக்கிறது. அதே நேரத்தில் சில தீமைகளும் காணப்படுகின்றன.

### 3.3.4 அதிகாரச் சமநிலையின் நன்மைகளும் தீமைகளும் :

1. வலிமையற்ற சிறிய நாடுகளுக்கு இக்கோட்பாட்டின் உதவியுடன் தங்கள் இறைமையையும் சுதந்திரத்தையும் பாதுகாக்க முடிகிறது.
2. உலகில் நாடுகளுக்கிடையே முரண்பாடுகள் அகற்றப்பட்டு சமாதானம் தோற்றுவிக்கப்படுகிறது.
3. ஆக்கிரமிப்புக்களைத் தடைச் செய்ய இக்கோட்பாடு உதவுகிறது.
4. அதிக அதிகாரம் பெற்று மிகுந்த செல்வாக்கைப் பெற்று எந்த நாடும் பன்னாட்டு அரங்கில் செயல்பட முடியாது. அதிகாரச் சமநிலைக் கோட்பாடு பன்னாட்டுச் சட்டங்களுக்கு நாடுகளை கீழ்ப்படியச் செய்கிறது. கூட்டு நடவடிக்கைகளைக் கண்டு பயமுற்று சட்டங்களை நாடுகள் மதிக்கின்றன.

இத்தனை நன்மைகளைக் கொண்ட இக்கோட்பாடு சில தீமைகளையும் கொண்டுள்ளது. மொர்கென்தாவின் கூற்றுப்படி மூன்று குறைகள் காணப்படுகின்றன. அவை நிலையற்ற தன்மை, போலித்தன்மை, போதாமை ஆகியவையாகும். அதிகாரம் மாறுபடும் தன்மை படைத்ததால், நிலையற்ற நிலை அதிகாரச் சமநிலையால் தோற்றுவிக்கப்படுகிறது. அச்ச உணர்வின் அடிப்படையில் சமாதானம் தோற்றுவிக்கப்படுகிறது இது இக்கோட்பாட்டின் போலித் தன்மையைக் காட்டுகிறது. ஆதிக்க ஆட்சியை குலைக்கவும், நிலை நிறுத்தவும் போரை ஓர் ஆயுதமாய் பயன்படுத்துவதால், சமாதானத்தை நிலைநிறுத்த இது போதாத ஒன்றாக கருதப்படுகிறது.

இத்தனைக் குறைபாடுகள் காணப்பட்டாலும், பன்னாட்டு அரசியலில் ஒதுக்கி தள்ள முடியாத ஒரு கோட்பாடாக அதிகாரச் சமநிலை காணப்படுகிறது. பண்டைய உறுதிப்பாட்டை இக்கோட்பாடு இழந்தபோதிலும், அதனுடைய செயல்பாடு நன்மை பயக்கும் ஒன்றாக கருதப்படுகிறது. இன்று பன்னாட்டு அரங்கில் நிலவும் சூழ்நிலைகள் இக்கோட்பாட்டை சரியாக இயங்கவிடுவதில்லை என்றாலும் நாடுகளின் இறைமை காக்கப்பட இக்கோட்பாடு மிகவும் அவசியம். இது கடவுள் உலகிற்கு அளித்த ஒரு நன்கொடை அல்ல, மனிதனின் சுறுசுறுப்பான தலையீட்டால் உருவாக்கப்பட்ட ஒன்றாகும்.

| உங்கள் முன்னேற்றத்தைச் சரிபார்க்கவும் |
|---|
| 3.அதிகாரச் சமநிலையின் முக்கியத்துவத்தைப் பற்றி விவரிக்கவும்? |
| 4.அதிகாரச் சமநிலையின் வழிமுறைகளைக் குறிப்பிடுக? |

## 3.4 கூட்டுப் பாதுகாப்பு (Diplomacy)

இருபதாம் நூற்றாண்டில் இவ்வுலகம் இரண்டு உலகப் போர்களை சந்தித்து விட்டது. இவ்விரு போர்களும் கணக்கிலடங்கா உயிர் சேதங்களையும் பொருள் சேதங்களையும் ஏற்படுத்தியது. இனிமேல் உலகம் இன்னொரு உலகப் போரைச் சந்தித்தல் கூடாது என்ற எண்ணத்துடன் போரைத் தவிர்க்க பல நடவடிக்கைகள் உலக அரங்கில் மேற்கொள்ளப்படுகின்றன. அவற்றில் ஒன்று கூட்டுப் பாதுகாப்பாகும். உலக அமைதியை குலைக்கவும், ஒழுங்கை தகர்க்கவும் மேற்கொள்ளப்படவிருக்கும் தாக்குதல்களைத் தவிர்க்கவும் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்களைச் சமாளிக்கவும் உலக அரங்கில் சமாதானத்தை நிலைநாட்டவும் மேற்கொள்ளப்படும் கூட்டு நடவடிக்கையே கூட்டுப் பாதுகாப்பு ஆகும் என்று ஜார்ஜ் ஸ்வர்ஜன்பெர்ஜர் என்ற அறிஞர் ‘‘அதிகார அரசியல்’’ என்ற தனது நூலில் எழுதியுள்ளார். சுருங்கக்கூறின் உலகில் உள்ள ஒரு நாடு பிற நாடுகளுக்கு எதிராக தடைச் செய்யப்பட்ட காரியத்தை செய்து ஆக்கிரமிப்பு நடத்தினால், அச்செயலுக்கு எதிராக பிறநாடுகள் மேற்கொள்ளும் கூட்டு நடவடிக்கையே கூட்டுப்பாதுகாப்பாகும்.

கூட்டுப் பாதுகாப்பு நடவடிக்கைகள் போரைத் தடுக்கும் ஆற்றல் பெற்றிருக்க வேண்டுமெனில் கூட்டு நடவடிக்கை கடுமையாக இருத்தல் வேண்டும். கூட்டு நடவடிக்கை மேற்கொள்ளும் நாடுகள் வலிமை மிக்கவையாக திகழவேண்டும். ஆக்கிரமிப்பில் ஈடுபட்ட நாடு அஞ்சுகின்ற அளவிலும், மீண்டும் அந்நடவடிக்கைகளை மேற்கொள்ளாமல் இருக்கின்ற அளவிலும் இருத்தல் வேண்டும். கூட்டு நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கும் நாடுகள் பாதுகாப்பு“ என்ற ஒரே நோக்கத்தை அடிப்படையாய் கொண்டு செயல்பட வேண்டும். கூட்டுச் சேர்ந்துள்ள நாடுகள் தங்கள் அரசியல் சுயநலனை பொது நலனிற்காக விட்டு கொடுக்கும் மனப்பக்குவத்துடன் செயல்பட வேண்டும். மேற்கூறிய நிலை கூட்டுச் சேரும் நாடுகளிடையே உருவானால் கூட்டுப்பாதுகாப்பு வெற்றி பெறும்.

### 3.4.1 கூட்டுப் பாதுகாப்பும் கூட்டு நடவடிக்கைகளும்

போரைத் தவிர்த்து உலக அமைதியை நிலைநாட்ட கூட்டுப் பாதுகாப்பு அவசியம். ஆக்கிரமிப்பை மேற்கொள்ளும் நாட்டை உலக சமாதானத்தை குலைக்கும் நாடு என்று கருதி, சமாதானத்தை நிலைநாட்ட விரும்பும் நாடுகள் அத்தனையும் ஒருங்கிணைந்து அந்நாட்டின் முயற்சிகளை முறியடிக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்வதை கூட்டுப் பாதுகாப்பு

குறிப்பு

குறிக்கிறது. உலக அரங்கில் நடந்தேறும் அத்தனை கூட்டு நடவடிக்கைகளும் கூட்டுப்பாதுகாப்பு சம்பந்தப்பட்ட நடவடிக்கைகள் ஆகாது. கூட்டுப்பாதுகாப்பிற்கான கூட்டு நடவடிக்கைகள் ஒரு குறிப்பிட்ட வரையறைக்குள் தான் செயல்படுகிறது. கூட்டு நடவடிக்கை களை மேற்கொள்ளும் நாடுகள் எவ்வளவு ஒரு ஈடுபாட்டுடன் அந்நடவடிக்கைகளில் தங்களை ஈடுபடுத்துகிறதோ, அதைப் பொறுத்து தான் கூட்டுப்பாதுகாப்பின் வெற்றி தோல்வி அமைகிறது. மேலும் கூட்டுப்பாதுகாப்பு நடவடிக்கைகள் வெற்றிபெற வலுதாக்குதல் நடைப்பெற்றவுடன் காலந்தாழ்த்தாமல் கூட்டு நடவடிக்கையும் ஆரம்பிக்க வேண்டும்.

கூட்டு நடவடிக்கைகள் பல வழிகளில் நடந்தேறுகின்றன, பொதுவாக தடைகள் (sanctions) மூலம் கூட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. பலவிதமான தடைகளை வலுதாக்குதல் புரிந்த நாட்டின் மீது கூட்டு நடவடிக்கையில் ஈடுபடும் நாடுகள் விதிக்கின்றன. இத்தடைகளில் பொருளாதார தடைகள் மிகமுக்கியமானது. கூட்டு நடவடிக்கைகள் வெற்றி பெற்ற நாடுகள் தங்கள் இறைமையையும் சுதந்திரத்தையும் விட்டுக்கொடுக்க வேண்டும் என்றில்லை. கூட்டு நடவடிக்கைகளில் பங்கேற்கும் நாடுகள் சில சொந்த நலன்களை மட்டும் கூட்டு முயற்சிக்காக விட்டு கொடுக்க வேண்டும்.

### 3.4.2 கூட்டுப் பாதுகாப்பும் அதிகாரச் சமநிலையும் :

கூட்டுப்பாதுகாப்பும் வல்லரசுகளின் அதிகாரச் சமநிலையும் ஒன்றையொன்று எதிர்ப்பதாகவும், அதே நேரத்தில் ஒன்றிற்கொன்று உதவுவதாகவும் காணப்படுகிறது. இரு கோட்பாடுகளும் கொண்டுள்ள நோக்கங்கள் வேறுபடுகின்றன. கூட்டுப் பாதுகாப்பின் நோக்கம் ஆக்கிரமிக்கும் நாட்டிற்கெதிராக சமாதானத்தை விரும்பும் நாடுகளை ஒன்று திரட்டி கூட்டு நடவடிக்கை மேற்கொள்வதாகும். கூட்டுப்பாதுகாப்பு ஆக்கிரமிப்போருக்கு எதிராக ஒரு உலக நாடுகளின் அணியை பன்னாட்டு அரங்கில் திரட்டுகிறது. ஆனால் அதிகாரச் சமநிலையின் அடிப்படையில் ஒன்றையொன்று எதிர்க்க சமவலிமையுள்ள இரு அணிகள் பன்னாட்டு அரங்கில் திரட்டப்படுகிறது.

### 3.4.3 கூட்டுப்பாதுகாப்பும் இராணுவ ஒப்பந்தங்களும் :

உலக அரங்கில் சில பிராந்தியங்களில் அமைந்திருக்கும் நாடுகள் ஒருங்கிணைந்து தங்களுக்குள் சில இராணுவ ஒப்பந்தங்களைச் செய்துகொள்கின்றன. அவ்வொப்பந்தங்களின் அடிப்படையில் கூட்டுப் பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன, பெருவாரியான பிராந்திய ஒப்பந்தங்கள் பின்வருகின்ற அளவில் கூட்டுப்பாதுகாப்பிற்கான வழிவகுக்கிறது. பிராந்திய அமைப்புக்களின் ஒரு அங்கத்துவ நாட்டின் மீது அப்பிராந்திய அமைப்பிற்கு உட்படாத ஒரு வெளிநாடு ஆக்கிரமிப்பு நடத்தினால், அவ்ஆக்கிரமிப்பை பிராந்திய அமைப்பில் அங்கத்துவம் பெற்றுள்ள பிறநாடுகள் தங்கள் மீதான ஆக்கிரமிப்பாக கருதி, ஆக்கிரமிப்பிற்குள்ளான நாட்டினை பாதுகாத்து, ஆக்கிரமிப்பு முயற்சிகளை முறியடிக்கிறது.

இன்று உலகில் பிராந்திய அமைப்புக்களுக்கு அதிக முக்கியத்துவம் வழங்கப்பட்டுள்ளது. ஐ.நா அமைப்பின் தீர்மானங்கள் சில பிராந்திய ஒப்பந்தங்களை அங்கீகரிக்கும் அளவில் காணப்படுகின்றன இவ்வாறு முக்கியத்துவம் வாய்ந்த பிராந்திய இராணுவ ஒப்பந்தங்களாலும் கூட்டுப் பாதுகாப்பை வலுவுடன் நிலை நிறுத்தமுடியவில்லை உலகில்

இராஜதந்திரத்திம்

குறிப்பு

நிலவும் கூட்டுப்பாதுகாப்பிற்கான பல பிராந்திய இராணுவ ஒப்பந்தங்களில் (NATO) நேட்டோ ஒப்பந்தம் மட்டும் ஆற்றல் மிக்க ஒன்றாக காணப்படுகிறது. எவ்வாறெனினும் பிராந்திய இராணுவ ஒப்பந்தங்களில் பங்கேற்கும் அங்கத்துவ நாடுகள் தாமாக முன்வந்து நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லையெனில் கூட்டுப்பாதுகாப்பைச் செயல்படுத்த முடியாது.

### 3.4.4 கூட்டுப்பாதுகாப்பு அமைப்புகள் :

இன்றைய உலகில் கூட்டுப்பாதுகாப்பிற்காக காணப்படும் அமைப்புக்களாக மூன்றினை எடுத்தியம்பலாம். அவை ஐரோப்பிய ஒற்றுமை ஏற்பாடு (The Concert of Europe) சர்வதேச சங்கம் (The League of Nations) ஐக்கிய நாட்டுசபை (The united Nations) என்பவையாகும்.

#### (a)ஐரோப்பிய ஒற்றுமை ஏற்பாடு :

1815-ஆம் ஆண்டிற்குப் பிறகு ஐரோப்பாவில் முக்கிய நாடுகள் உறுதியற்ற முறையில் ஒருங்கிணைந்து ஐரோப்பிய ஒற்றுமை ஏற்பாட்டை உருவாக்கின. முதல் உலகப் போர் ஆரம்பிக்கும் காலகட்டம் வரை இவ்வேற்பாடு செயல்பட்டது. அக்கால கட்டத்தில் இவ்வேற்பாட்டில் சக்திவாய்ந்த ஒரு அமைப்பாக திகழ்ந்தது. ஐரோப்பாவிலும் குடியேற்ற நாடுகளிலும் ஐரோப்பிய நாடுகளின் தனிப்பட்ட விருப்பங்களின் அடிப்படையில் கருத்து முரண்பாடுகள் ஏற்பட்டால் அவற்றை முன்னறிந்து தடைச் செய்யும் ஆற்றலை இவ்வேற்பாடு பெற்றிருந்தது. கிரிமியன் போர், ரஷ்ய துருக்கிப் போர் போன்றவற்றை இவ்வேற்பாட்டால் தடைச்செய்ய முடியாவிட்டாலும், பால்கன் பகுதியிலுள்ள பிரச்சனைகளை இது வெற்றிகரமாக தீர்த்துவைத்தது. முதல் உலகப் போருக்கு முன் ஐரோப்பா இரு இராணுவ அணியாக பிரிந்த பொழுது இவ்வேற்பாடு செயலிழந்தது.

#### (b)சர்வதேச சங்கம் :

முதல் உலகப் போருக்குப்பின் சர்வதேச அளவில் கூட்டுப் பாதுகாப்பை சர்வதேச சங்கம் உருவாக்கும் என்று உலக தலைவர்கள் எண்ணினர். உண்மையான ஒரு பொது அதிகார அமைப்பை சர்வதேச சங்கம் வளர்க்கும் என்று நம்பினர். ஆனால் சர்வதேச சங்கத்தால் கூட்டுப்பாதுகாப்பை செயல்படுத்த முடியவில்லை, அமெரிக்காவும், இதர சிறிய நாடுகளும் சர்வதேச சங்கத்தில் தங்களை இணைக்காதது இதற்கு காரணம், ரஷ்யாவும், ஜெர்மனியும் முதலாவது சர்வதேச சங்கத்தில் சேர்த்துக் கொள்ளப்படவில்லை. எனவே இச்சங்கம் மேற்கொண்ட கூட்டு நடவடிக்கைகள் குறித்த முடிவுகளால் அங்கத்தினர் அல்லாத நாடுகளைக் கட்டுப்படுத்த முடியவில்லை. ஹிட்லரின் எழுச்சி இச்சங்க செயல்பாட்டை பாதித்தது. ஜெர்மனியின் ஆக்கிரமிப்பு கொள்கையை கண்டித்தவுடன் ஜெர்மனி சர்வதேச சங்கத்தில் இருந்து வெளியேறியது. ஜப்பான் மஞ்சூரியாவைப் பிடித்தவுடன் கண்டிக்கப்பட்டது. ஜப்பான் சர்வதேச சங்கத்தில் இருந்து வெளியேறியது. ரஷ்யா பின்லாந்தை தாக்கியது. அதைக் கண்டித்தவுடன் ரஷ்யா வெளியேறியது. சர்வதேச சங்கத்தால் கூட்டுபாதுகாப்பை உருவாக்க முடியவில்லை. செயலிழந்த நிலையில் சர்வதேச சங்கம் காணப்பட்டது. உலகம் இரண்டாம் உலகப்போரைச் சந்தித்தது.

குறிப்பு

**(c) ஐக்கிய நாட்டு சபை :**

இரண்டாம் உலகப் போருக்குப்பின் சர்வதேச சங்கத்தைப் போன்று பெரிய எதிர்பார்ப்புகளுடன் ஐ.நா. சபை உருவாக்கபட்டது. சர்வதேச சங்கத்தை விட ஐ. நா விலுவுள்ள ஒரு அமைப்பாக திகழ்கிறது. எனினும், ஐ.நாவில் வல்லரசுகளுக்கு அளிக்க பட்டுள்ள சலுகைகள் ஐ.நாவை வெற்றிகரமாய் செயல்படவிடாமல் தடைச் செய்கிறது. கூட்டுப்பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ள முடியாத அளவில் தடுப்பாணை அதிகாரத்தை வல்லரசுகள் பயன்படுத்தின. இது ஒரு குறைபாடாக கருதப்படுகிறது. மேலும், ஐ. நா பன்னாட்டு அளவில் ஆங்காங்கே பிராந்தியங்களில் செய்து கொள்ளப்பட்ட இராணுவ ஒப்பந்தங்களுக்கு அங்கீகாரம் அளித்துள்ளது. எனினும். 1950-ஆம் ஆண்டு கொரியப் பிரச்சனையை சமாளிக்க ஐ.நா மேற்கொண்ட கூட்டுப்பாதுகாப்பு நடவடிக்கையும், அதன் வெற்றியும் புதிய நம்பிக்கையை தோற்றுவித்துள்ளது. அதைத் தொடர்ந்து இன்றைய உலகில் ஐ.நா பன்னாட்டரங்கில் சமாதானத்தை நிலைநிறுத்த பல கூட்டு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

**உங்கள் முன்னேற்றத்தைச் சரிபார்க்கவும்**

5.கூட்டுப் பாதுகாப்பும் கூட்டு நடவடிக்கைகளும் விவரிக்கவும்?

6.கூட்டுப் பாதுகாப்பு அமைப்புகளைப் பற்றிக் குறிப்பிடுக?

## 3.5 உங்கள் முன்னேற்றத்தைச் சோதிக்கும் வினாக்களுக்கான விடைகள்

- பன்னாட்டு உறவுகளை பேச்சுவார்த்தைகளின் மூலம் நிர்வகிப்பது அரசியல் விவேகம் என்று தற்காலத்தில் பொருள் விளக்கம் கொடுக்கப்பட்டுள்ளது.

- இருபதாம் நூற்றாண்டின் அரசியல் விவேகத்தில் மூன்று முக்கிய காரியங்களைப் பார்க்க முடிகிறது என்று ஹெரால்டு நிக்கல்சன் என்ற அறிஞர் கூறியுள்ளார். அவை தேசிய சமூக அமைப்புக்களின் வளர்ச்சி, பொதுமக்கள் கருத்தின் முக்கியத்துவம், செய்தித் தொடர்பில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் என்பவையாகும்.

- அரசியல் விவேகத்தின் பரிணாம வளர்ச்சி இரகசிய இராஜதந்திரக் கோட்பாடு திறந்த அல்லது ஜனநாயக அரசியல் விவேக கோட்பாடு தனிப்பட்ட முறையிலான அரசியல் விவேக கோட்பாடு மாநாட்டு அரசியல் விவேக கோட்பாடு அதிகாரத்தை உலக நாடுகளுக்கிடையே பகிர்ந்து அளித்தலை இக்கோட்பாடு குறிக்கிறது
- அதிகாரச் சமநிலை அமைதி நிலையையும் அதேநேரத்தில் பொறாமை நிலையையும் கொண்டு திகழ்கிறது. நாடுகள் ஒருங்கிணைந்து, சமநிலையைத் தோற்றுவித்து, ஆக்கிரமிப்பைத் தவிர்த்து அமைதியை நிலைநாட்டுகிறது.

- உலக அமைதியை குலைக்கவும், ஒழுங்கை தகர்க்கவும் மேற்கொள்ளப்படவிருக்கும்
தாக்குதல்களைத் தவிர்க்கவும் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்களைச் சமாளிக்கவும் உலக அரங்கில் சமாதானத்தை

நிலைநாட்டவும் மேற்கொள்ளப்படும் கூட்டு நடவடிக்கையே கூட்டுப் பாதுகாப்பு ஆகும்

- ஆக்கிரமிப்பை மேற்கொள்ளும் நாட்டை உலக சமாதானத்தை குலைக்கும் நாடு என்று கருதி, சமாதானத்தை நிலைநாட்ட விரும்பும் நாடுகள் அத்தனையும் ஒருங்கிணைந்து அந்நாட்டின் முயற்சிகளை முறியடிக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்வதை கூட்டுப் பாதுகாப்பு குறிக்கிறது.

## 3.6 சுருக்கவுரை

- நாட்டின் முக்கியத் தலைவர்கள் பிற நாடுகளுக்கு விஜயம் செய்து, அந்நாடுகளோடு சுமூக உறவுகளை ஏற்படுத்துகின்றனர். இது இராஜதந்திர நடவடிக்கைகளில் முக்கியமானதாகக் கருதப்படுகிறது.

- சுருங்கக்கூறின் இராஜதந்திர நடவடிக்கைகள் உலக அரங்கில் ஒரு நாட்டிற்கு நன்மதிப்பை ஏற்படுத்திக் கொடுக்கிறது. நாடுகளுக்கிடையே சுமூக உறவை நிலைநிறுத்தி, உலக சமாதானத்திற்கு வழிவகுக்கிறது.

- அதிகாரச் சமநிலை கோட்பாட்டின் செயல்பாட்டில் தீவிரமாய் பங்கேற்பவர்கள் வல்லரசுகள், சிறிய அரசுகள் இப்போட்டியை கண்டுகளிக்கும் அமைதியான பார்வையாளர்களாகவே செயல்படுகின்றனர். கடைசியாக, அதிகாரம் நிலையற்ற தன்மைப் படைத்ததாய் இருப்பதால், தற்கால சூழ்நிலைகளுக்கும் பொருந்தாத ஒன்றாக காணப்படுகிறது.

- பல நாடுகள் ஒருங்கிணைந்து பாதுகாப்பிற்காக ஏற்படுத்தும் அதிகாரத்தின் அடிப்படையிலான ஒருங்கிணைவு அதிகாரச் சமநிலையைக் குறிக்கிறது. இக்கூட்டமைவுகளினால் உலக அதிகாரம் சரிசமமாக பகிரப்படுகிறது. நாடுகள் ஆக்கிரமிப்பாளராக மாறும் நிலைத் தவிர்க்கப்படுகிறது.

- இன்றைய உலகில் கூட்டுப்பாதுகாப்பிற்காக காணப்படும் அமைப்புக்களாக மூன்றினை எடுத்தியம்பலாம். அவை ஐரோப்பிய ஒற்றுமை ஏற்பாடு (The Concert of Europe) சர்வதேச சங்கம் (The League of Nations) ஐக்கிய நாட்டுசபை (The united Nations) என்பவையாகும்.

- கூட்டுப்பாதுகாப்பும் வல்லரசுகளின் அதிகாரச் சமநிலையும் ஒன்றையொன்று எதிர்ப்பதாகவும், அதே நேரத்தில் ஒன்றிற்கொன்று உதவுவதாகவும் காணப்படுகிறது. இரு கோட்பாடுகளும் கொண்டுள்ள நோக்கங்கள் வேறுபடுகின்றன. கூட்டுப் பாதுகாப்பின் நோக்கம் ஆக்கிரமிக்கும் நாட்டிற்கெதிராக சமாதானத்தை விரும்பும் நாடுகளை ஒன்று திரட்டி கூட்டு நடவடிக்கை மேற்கொள்வதாகும்.

## 3.7 முக்கிய வார்த்தைகள்

- அதிகாரச் சமநிலை: உடன்பாடுகளும் எதிர் உடன்பாடுகளும் இழப்பீடு வழங்கல் போர் தளவாட பெருக்கமும் படைக் குறைப்பும்

தலையீடு மற்றும் தலையிடாக் கொள்கைகள் நடுநிலைப் பகுதி பிரித்தாளும் முறை.

குறிப்பு

- ஐ.நா மேற்கொண்ட கூட்டுப்பாதுகாப்பு நடவடிக்கையும், அதன் வெற்றியும் புதிய நம்பிக்கையை தோற்றுவித்துள்ளது. அதைத் தொடர்ந்து இன்றைய உலகில் ஐ.நா பன்னாட்டரங்கில் சமாதானத்தை நிலைநிறுத்த பல கூட்டு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. கூட்டுப்பாதுகாப்பு அமைப்புகள் ஐரோப்பிய ஒற்றுமை ஏற்பாடு சர்வதேச சங்கம் ஐக்கிய நாட்டு சபை ஆகும்.

- இந்தியாவில் அரசியல் விவேக நடவடிக்கைகள் வேதகாலத்திலிருந்து செயல்பட்டு வருகிறது. அரசியல் விவேக நடவடிக்கைகள் மூலம் நாடுகளுக்கிடையே உறவுகள் வரையறுக்கப்பட்டதாக ராமாயணம் மற்றும் மகாபாரதம் ஆகியவற்றில் பல இடங்களில் கூறப்பட்டுள்ளது. கெடில்யாவின் அர்த்தசாஸ்திரத்திலும் இதைப் பற்றிய பல சான்றுகளைக் காணலாம். அர்த்தசாஸ்திரத்தில் தூதுவர்களின் பணிகளைப் பற்றிய விளக்கம் விரிவாக வழங்கப்பட்டுள்ளது.

## 3.8 சுயமதிப்பீடு வினாக்கள் மற்றும் பயிற்சிகள்

**சுருக்கமான கேள்விப் பதில்கள்**

1. இராஜதந்திர வகைகளைப் பற்றி ஒரு சிறு குறிப்பு வரைக?
2. அதிகாரச் சமநிலை என்பதன் பொருளை விளக்குக?
3. கூட்டுப்பாதுக்காப்பின் பல்வேறு வரையறைகள் பற்றி சுருக்கமாக விளக்குக?

**விரிவான கேள்விப் பதில்கள்**

1. கூட்டுப்பாதுக்காப்பின் சிறப்பியல்புகளை மதிப்பீடு செய்க?
2. கூட்டுப்பாதுக்காப்பு என்றால் என்ன? 1950 முதல் இதன் செயல்பாடு எவ்வாறு இருந்தது என்பதை விளக்குக?

## 3.9 மேலும் படிக்க


- Dorothy Irving.(2007). ***This Too Is Diplomacy.*** Author House.
- George F. Kennan and John J. Mearsheimer.(2012). ***American Diplomacy: Sixtieth-Anniversary Expanded Edition.*** University of Chicago Press; Enlarged edition.
- Nicholas Griffin. (2015). *Ping-Pong Diplomacy: The Secret History behind the Game That Changed the World* . Skyhorse. William Appleman Williams. (1962). ***The***
- ***Tragedy of American.*** Diplomacy Delta. 2nd edition

# அலகு 4 ஆசியா மற்றும் ஆப்பிரிக்கத் தேசியவாதம்

4.0 அறிமுகம்
4.1 நோக்கங்கள்
4.2 ஆசியா மற்றும் ஆப்பிரிக்கத் தேசியவாதம்
    4.2.1 ஆசியா தேசியவாதம்
    4.2.2 ஆப்பிரிக்கத் தேசியவாதம்
4.3 ஆசியா மற்றும் ஆப்பிரிக்காவில புதிய நாடுகளின் அவசர நிலை
4.4 ஆசியா தேசியவாதத்தின் எழுச்சி
4.5 சீனா தேசியவாதத்தின் எழுச்சி
4.6 ஜப்பான் தேசியவாதத்தின் எழுச்சி
4.7 இந்தோனேஷியா தேசியவாதத்தின் எழுச்சி
4.8 உங்கள் முன்னேற்றத்தைச் சோதிக்கும் வினாக்களுக்கான விடைகள்
4.9 சுருக்கவுரை
4.10 முக்கிய வார்த்தைகள்
4.11 சுயமதிப்பீடு வினாக்கள் மற்றும் பயிற்சிகள்
4.12 மேலும் படிக்க

## 4.0 அறிமுகம்

மேலை நாடுகளின் நாகரீகம் அறிவியல் உதவியுடன், புதிய கண்டுப் பிடிப்புகளின் ஆதரவுடன் வளர்ச்சியடைந்தவுடன் உலக பண்பாட்டு உச்சியில் அமர்ந்தது. மேலும் கடல் கடந்து பயணம் செய்து தங்கள் வாணிபத்தையும், பண்பாட்டையும் வளர்க்க வேண்டும் என்ற ஆர்வமும், நம்பிக்கையும் படைத்த மேலை நாட்டினர் இடைக்காலத்தில் ஆசிய கண்டத்தில் நுழைந்து, பலர் குடிபெயர்ந்து குடியேற்றங்களை நிறுவினர். ஏறத்தாழ ஐந்நூறு ஆண்டுகள் ஆசியா மேலை நாட்டினர் செல்வாக்குக்குட்பட்டிருந்தது. தாய்லாந்தைத்தவிர, பெரும்பான்மையான ஆசிய நாடுகள் மேலை நாட்டினர் ஆட்சியின் கீழ்க் கொண்டு வரப்பட்டன. இக்காலத்தையே ஆசிய நாடுகளின் பிற்போக்கான இழி நிலை காலம் என்று கூறலாம்.

## 4.1 நோக்கங்கள்

ஆசியர்கள் எல்லோரும் ஓர் குடும்பம் எனும் எண்ணம் பண்டைய காலத்திலோ, அல்லது இடைக்காலத்திலோ இருந்ததாகத் தெரியவில்லை. இந்தியப் பண்பாடுகள் பரவிய பகுதிகளை பேரிந்தியா (Greater India) என்றும், சீனபண்பாடு தழுவிய பகுதிகளை சிறு சீனா (Little China) என்றும், இஸ்லாம் பரவத்தொடங்கியவுடன் இஸ்லாமிய நாடுகள் என்றும் தான் அழைத்துவந்தனர். ஆகையால் ஆசியக்கண்ட பண்பாட்டு ஒருமை யுணர்ச்சியும், விழிப்புணர்ச்சியும் எழுச்சியும் இருபதாம் நூற்றாண்டில் தான் ஐரோப்பியக் குடியேற்றக் ஆட்சிகளை எதிர்க்கும் போது முதன் முதலாக தெளிவாகத் தோன்றியது எனக்கூறலாம். இவ்வாறு தெளிவாக ஆசிய ஒருமையுணர்ச்சி பெயரளவில் தோன்றிய பிறகு தான் இரண்டாம் உலகப் போரில் ஜப்பான் , ஆசியா, ஆசியர்களுக்கே எனும் உணர்ச்சியை முதலாவதாகத் தூண்டியது.

ஆசிய நாடுகளின் நாட்டுரிமை உணர்ச்சி சிலத்தனித் தன்மைகள் அடைந்ததாக இருந்தது. பொதுவாக ஐரோப்பிய நாடுகளில் மக்களின் நாட்டுரிமை உணர்ச்சி தங்கள் நாட்டின் மேல் உள்ள நாட்டுப் பக்தியுள்ள ஒருமை உணர்ச்சியாக வெளிப்பட்டது. ஆனால் ஆசிய நாட்டு மக்களிடையே பொதுவாக, நாட்டுரிமை உணர்ச்சி இவ்வியற்கை அழகுடன் மலரவில்லை எனக்கூறவேண்டும். மேலை நாட்டு குடியேற்ற ஆதிக்கத்தை

குறிப்பு

எதிர்க்கும் குறிக்கோள் தான் நாட்டுரிமை உணர்ச்சி தோன்றுவதற்கும், ஒருமை உணர்ச்சி மலருவதற்கும் காரணமாக இருந்தது. தாய்லாந்து போன்ற ஒரு சில சிறிய நாடுகளே இம்மாதிரியான சூழ்நிலையில் தோன்றிய நாட்டுரிமை உணர்ச்சிக்கு விதிவிலக்காக இருந்தன. என்பதை நோக்கமாக கொண்டுள்ளது.

## 4.2. ஆசியாவின் தேசீயம்:

பல நூற்றாண்டுகளாக இழி நிலையுடன் சுய உணர்வில்லாமல் தூங்கிக்கொண்டிருந்த ஆசியா மீண்டும் விழிப்புணர்ச்சி பெற்று தன் மானமுள்ள உணர்ச்சிக்கடல் அலைகளாக பொங்கியெழும் நிலையை ஆசியாவின் எழுச்சி எனக் குறிப்பிடுகின்றோம். உலக முன்னேற்றத்திற்கு பலசிறப்பான பண்பாடுகளையும், சமயத்தையும், அளித்த பெருமை ஆசிய நாடுகளுக்கு உண்டு. ஆனால் பண்டைய காலத்தில் நாகரீக உச்சியில் இருந்த ஆசியா படிப்படியாக கீழே இறங்கி பதினெட்டாம் நூற்றாண்டளவிலே மிகச் சீர்கேடான நிலையை அடைந்தது. யூதமதம், புத்தமதம், கிறித்துவ சமயம், இஸ்லாம், சொராஸ்டிரிய மதம், (Zorastrianism) மேலும் இந்துமதம், கன் பூசிய தத்துவம் முதலியவைகளை அளித்த ஆசியா இடைக்காலத்திலே முதல் நிலையை முற்றிலும் இழந்தது. மெசொபோடாமியா-பாரசீகம், சிந்து சமவெளி, வடகிழக்கு சீனா முதலிய இடங்களில் உலக நாகரீகம் உதித்தது எனப் பெருமைப்பட்ட ஆசியா பிற்பாடு இழி நிலையை அடைந்தது. பண்டைய கிரேக்க, ரோமானியப் பேரரசுகளின் பண்பாடுகளின் வளர்ச்சிக்கு உதவிய ஆசியா பிறகு பண்பாட்டு வளர்ச்சி யின் இடுகாடாக மாறியது.

மேலை நாடுகளின் நாகரீகம் அறிவியல் உதவியுடன், புதிய கண்டுப் பிடிப்புகளின் ஆதரவுடன் வளர்ச்சியடைந்தவுடன் உலக பண்பாட்டு உச்சியில் அமர்ந்தது. மேலும் கடல் கடந்து பயணம் செய்து தங்கள் வாணிபத்தையும், பண்பாட்டையும் வளர்க்க வேண்டும் என்ற ஆர்வமும், நம்பிக்கையும் படைத்த மேலை நாட்டினர் இடைக்காலத்தில் ஆசிய கண்டத்தில் நுழைந்து, பலர் குடிபெயர்ந்து குடியேற்றங்களை நிறுவினர். ஏறத்தாழ ஐந்நூறு ஆண்டுகள் ஆசியா மேலை நாட்டினர் செல்வாக்குக்குட்பட்டிருந்தது. தாய்லாந்தைத்தவிர, பெரும்பான்மையான ஆசிய நாடுகள் மேலை நாட்டினர் ஆட்சியின் கீழ்க் கொண்டு வரப்பட்டன. இக்காலத்தையே ஆசிய நாடுகளின் பிற்போக்கான இழி நிலை காலம் என்று கூறலாம்.

பிற்போக்கான காலம் என இவ்வாண்டுகளை ஏன் குறிப்பிடுகிறோம், என்றால் ஆசியா தனது சுய நினைவை இழந்தது மேலும்படிப்படி யாகத்தனது பண்பாட்டை இழக்கத் தொடங்கியது. மேலை நாட்டுப்பண்பாட்டை பின்பற்றத் தொடங்கியது. மேலை நாட்டுப் பண்பாட்டை பின் பற்றிய ஆசியாவிற்கு இருவிளைவுகள் ஏற்பட்டன. தனது நாட்டுப் பண் பாட்டை இழந்து, மேலை நாட்டுப் பண்பாட்டைப் பின்பற்றத்தொடங்கியவுடன் இவ்விரு பண்பாட்டுக் கலவையின் கலவையாக ஓர் புதுப்பாங்கான பண்பாடு உருவாகியது: மேலை நாட்டிலுள்ள சில சிறப்புப் பண்பாடுகளை ஆசிய நாடுகள் ஏற்றுக் கொண்டதால் நட்டுரிமை விழிப்புணர்ச்சி, மலரத்தொடங்கியது. ஆகையால் தான் ஆசியாவில் ஐரோப்பியர்கள் ஆட்சி புரிந்த காலத்தை ஆசியாவின் புதிய அனுபவ திருப்புமுனையாக கருதலாம்.

*Self-Instructional Material*

புவியியல் அமைப்பு ஆசியாவிற்கு ஓர் தனித்தன்மையை அளித்திருக்கின்றது. கிழக்கே பசிபிக் பெருங்கடலைத் தழுவியிருக்கும்

பகுதிகளிலிருந்து மேற்கே மத்திய தரைக் கடலை சூழ்ந்திருக்கும் பகுதிகள் வரை உள்ள நாடுகளையும், வடக்கே ஆர்டிக் பெருங்கடல் பகுதியில் உள்ள நாடுகளிலிருந்து தெற்கே இந்துமாப்பெருங்கடலால் சூழப்பட்ட பகுதிகள் வரை உள்ள நாடுகளைத் தான் பொதுவாக ஆசிய கண்டம் என அழைக்கின்றோம். இப்பகுதிகளிலெல்லாம் ஒரே மாதிரியான தட்பவெப்ப நிலை கிடையாது. ஒரே மாதிரியான இனப்பிரிவினர் கிடையாது.

ஒரே சமயப்பண்பாடு மட்டும் கிடையாது ஒரே மாதிரியான வரலாற்று அனுபவமும் கிடையாது:இப்பகுதியில் உள்ள மக்களை ஆசியர்கள் என ஏன் அழைக்கின்றோம் என்றால் அவர்கள் ஆசிய கண்டத்தில் வாழ்கின்றார்கள். ஆனால் ஆசிய கண்டத்தில் வாழ்பவர்கள் எல்லாம் ஆசியர்கள் என நாம் அழைப்பதில்லை. உதாரணமாக ஆசியாவில் வாழும் ஐரோப்பியர்களையோ, ஆப்பிரிக்கர்களையோ ஆசியர்கள் என நாம் அழைப்பதில்லை. ஆசியாவில் பண்டைய காலத்திலிருந்து வாழ்ந்துவரும் ஒரு குறிப்பிட்ட இனக்குழுவினர்களைத்தான் ஆசியர்கள் என்று அழைக்கின்றோம். ஆகையால் ஆசியர்களிடையே இனவேறுபாடு இருந்தாலும் இன ஒருமைப்பாடும் இருப்பதாக நாம் கருதலாம். ஆப்பிரிக்கர்களுக்கும், ஐரோப்பியர்களுக்கும், ஆசியர்களுக்கும் உள்ள உருவ அமைப்பிலிருந்தே இவ்வேறு பாட்டினை எல்லோரும் அறிந்து கொள்ள முடியும். அதாவது ஆசிய இனம் எனும் ஓர் இனத்தை ஆசியர்கள் அல்லா இனத்தினரோடு ஒப்பிட்டு நாம் நன்றாக அறிந்து கொள்ள முடிகின்றதே தவிர ஆசிய இனங்களிடையே உள்ள சில ஒற்றுமைகளிலிருந்து நாம் எளிதாக தெரிந்து கொள்ள முடிவதில்லை என கூறலாம்.

இரண்டாவது ஆசியாவில் பண்டைய காலத்தில் இந்து சமயமும், புத்த சமயமும், பிறகு இஸ்லாம் சமயமும் சிறப்பானசில பொதுபண்பாடுகளை எல்லா ஆசிய மக்களுக்கும் அளித்திருக்கின்றன. குடும்ப அமைப்பின் பண்பாடுகள், ஆண்- பெண் உறவின் கோட்பாடுகள், தந்தை, தாய், மேலும் முன்னோர் வழிபாடு, குருவழிபாடு, தலைவர் வழிபாடு, தாய்குலத்தின் மகிமை, ஆண் குலத்தின் உயர் உரிமைகள், உணவு தயாரிக்கும் முறை-போன்ற பல பொது பண்பாடுகளை இன்று கூட எல்லா ஆசியர்களிடமும் நாம் காணலாம். இஸ் லாம் தோன்றுவதற்கு முன் இப்பொதுப்பண்பாடுகள் ஆசியர்களிடையே மேலும் மிகுதியாக இருந்தன எனக்கூறலாம். ஆகையால் உற்று நோக்கினால் சில பொது ஆசியப்பண்டாடுகளை அன்றாட வாழ்க்கை முறையில் காணலாம்.

மூன்றாவதாக எல்லா ஆசியர்களும் ஐரோப்பிய குடியேற்ற காலத்தின்போது ஐரோப்பிய பண்பாடுகளை அந்நிய பண்பாடு எனக்கருதினார்கள். ஆனால் இன்று பல ஐரோப்பியப் பண்பாடுகளை ஏற்றுக்கொண்டிருக்கின்றார்கள் ஐரோப்பிய குடியேற்ற ஆட்சியை ஒழிக்க வேண்டும் என்னும் பொதுவான ஓர் விழிப்புணர்ச்சி ஆசியர்களிடையே தோன்றி, குறிப்பாக இருபதாம் நூற்றாண்டில் ஆசியர்களிடையே ஓர் ஒற்றுமையுணர்ச்சியை உருவாக்கியது எனக்கூறலாம். இவ் விழிப்புணர்ச்சி மலரும் காலத்தில் பொதுவாக இவ்வித இயக்கங்கள் தோன்றின. பண்டைய வழிமுறைகளைத் தட்டியெழுப்பிய இயக்கம், மேலை நாட்டுக் கருத்துக்களை பின்பற்றவேண்டும் எனத் தீவிரமாக உழைத்த இயக்கங்கள். முடிவில் இவ்விரண்டும் கலந்த பண்பாட்டுக்கலவை மக்களை ஈர்த்தது. ஆகையால் இருபதாம் நூற்றாண்டில் நாட்டுரிமை இயக்கங்கள் தோன்றிய போது ஆசிய நாட்டுத் தலைவர்கள் இந்தியர்களுக்கும், சீனர்களுக்கும், இந்தோனேசியர்களுக்கும், அரேபியர்களுக்கும், ஜப்பானியர்களுக்கும், மற்றும் ஏனைய ஆசியர்களுக்கும் உள்ள ஒற்றுமையைப் பற்றியும்,

**குறிப்பு**

அவர்களின் பொது முதல் எதிரி ஐரோப்பிய இனத்தாரின் குடியேற்றக் கொள்கை என்றும் வலியுறுத்தத் தொடங்கினார்கள். இதன் விளைவாக ஆசியர்கள் எல்லாம் ஓர் குடும்பம் எனும் விழிப்புணர்ச்சி தேரன்றி அதுவே இருபதாம் நூற்றாண்டில் ஆசியாவின் எழுச்சி அலை கடலாக பரவியது. ஆசியர்கள் எல்லோரும் ஓர் குடும்பம் எனும் எண்ணம் பண்டைய காலத்திலோ, அல்லது இடைக்காலத்திலோ இருந்ததாகத் தெரியவில்லை. இந்தியப் பண்பாடுகள் பரவிய பகுதிகளை பேரிந்தியா (Greater India) என்றும், சீனபண்பாடு தழுவிய பகுதிகளை சிறு சீனா (Little China) என்றும், இஸ்லாம் பரவத்தொடங்கியவுடன் இஸ்லாமிய நாடுகள் என்றும் தான் அழைத்துவந்தனர். ஆகையால் ஆசியக்கண்ட பண்பாட்டு ஒருமை யுணர்ச்சியும், விழிப்புணர்ச்சியும் எழுச்சியும் இருபதாம் நூற்றாண்டில் தான் ஐரோப்பியக் குடியேற்றக் ஆட்சிகளை எதிர்க்கும் போது முதன் முதலாக தெளிவாகத் தோன்றியது எனக்கூறலாம். இவ்வாறு தெளிவாக ஆசிய ஒருமையுணர்ச்சி பெயரளவில் தோன்றிய பிறகு தான் இரண்டாம் உலகப் போரில் ஜப்பான் , ஆசியா, ஆசியர்களுக்கே எனும் உணர்ச்சியை முதலாவதாகத் தூண்டியது

**ஆப்பிரிக்காவில் தேசீயம்:**

இக்காலக்கட்டத்தில் ஆசியாவில் எழுந்த தேசிய உணர்வு, ஆப்பிரிக்காவிலும் தன் தாக்கத்தை ஏற்படுத்தியது. இந்த ஆசிய நாடுகளும் ஆப்பிரிக்க நாடுகளும் பொதுவான ஒரு வரலற்றை கொண்டிருக்கின்றன. மேலும் இவ்விரு கண்டங்களிலுள்ள மக்கள் தொகை, உலக மக்கள் தொகையில் ஒரு கணிசமான அளவுள்ளதாக இருக்கிறது. இதுகாறும் பன்னாட்டு



**ஆப்பிரிக்காவில் இரண்டாம் உலகப் போருக்குப் பின்**

அரசியலில் எத்தகைய ஒரு குறிப் பிடத் தகுந்த பங்கையும் ஏற்றிராத இந்நாடுகள், திடீரென்று உலக அரசியலில் நுழையவே, அங்கு பல மாற்றங்கள் ஏற்படலாயின. எனினும் 1945 -ஆம் ஆண்டு வாக்கிலும்கூட, அங்கு குறிப்பிடத்தக்க வகையில் தேசிய உணர்வு காணப் பட்டதாகக் கூறமுடியாது. ஆயினும் பெரும்பாலான ஆசிய நாடுகள், புத்துணர்வு பெற்றபோது, ஆப்பிரிக்காவிலும் ஒரு சில மாற்றங்கள் ஏற்படலாயின. 1945 ஆம் ஆண்டு மான்செஸ்டரில் கூட்டப்பட்ட ஐந்தாவது ஆப்பிரிக்க நாடுகளின் மகாநாட்டில் விடுதலை வேட்கையின் குரல் முதன்முதலாக எழத்தொடங்கியது. டியுபய்ஸ், பட்மேர், என்க்ருமா, கென்யாட்டா, அவோலோவோ போன்ற தலைவர்கள் சுதந்திரத்திற்காகக் குரல் கொடுத்தனர். இத்தகைய கூக்குரல்களை ஆதிக்க அரசாங்கங்கள் பெரிதும் மதிக்காவிடினும் சிறிது காலம் கழித்து அதுகுறித்து பெரிதும் கவலை கொள்ளலாயின. 1945 ஆம் ஆண்டு தொட்டு அங்கு வளரத் தலைப்பட்ட

தேசிய உணர்வு விசுவரூபம் எடுத்தது. அதன் விளைவாக அடுத்த 25 ஆண்டு காலத்திற்குள் பெரும்பாலான ஆப்பிரிக்க நாடுகள் விடுதலை பெற்றன. இவ்வாறு இந்நாடுகள் விடுதலை பெற்றதற்கு நான்கு முக்கிய காரணங்கள், காணப்படுகின்றன.

முதலாவதாக, இந்தியாவும் பாகிஸ்தானும் 1947-ஆம் ஆண்டு விடுதலை பெற்றதை அடுத்து. பல இனத்தினரைத் தன்னகத்தே கொண்ட காமன்வெல்த் அமைப்பு (Multiracial Commonwealth) ஒன்று உருவாகின. இந்திய விடுதலைப் போராட்டமும் பிரெஞ்சுக் காலனியாக விளங்கிய இந்தோ-சீனப்பகுதிகளில் இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு ஏற்பட்ட மாற்றங்களும், 1949-ஆம் ஆண்டு சீனாவின் மக்கள் குடியரசு நிறுவப் பட்டதும், அதனை அடுத்த 1955-ஆம் ஆண்டு கூட்டப்பட்ட பாண்டுங் மகா நாடும் ஆப்பிரிக்க ஆசிய நாடுகளிடையே ஒரு உறவுப்பாலத்தை ஏற்படுத்தியது. .

இரண்டாவதாக இக்காலக்கட்டத்தில் தோன்றிய கெடுபிடிப்போரும் இந்நாடுகளின் விடுதலையைத் தீவிரப்படுத்தின. ஆப்பிரிக்காவில் ஆதிக்கம் செலுத்திய நாடுகளில் பெரும்பாலானவை மேலை நாடுகளின் அணியில் காணப்பட்டன. இம் மேலை நாடுகளின் தலைவராக அமெரிக்கா காணப் பட்டதால், சோவியத் யூனியன், அந்நாடுகள் ஆப்பிரிக்க நாடுகளின் மீது கொண்டிருந்த ஆதிக்கத்தை தொடர்ந்து கண்டனம் செய்துவந்தது. அத்துடன் ஆப்பிரிக்க நாடுகளின் விடுதலைக்கு சோவியத் யூனியன் மிகுந்த ஊக்கம் அளித்து வந்தது. இத்தகைய சோவியத் சவால்களைச் சமாளிக்கும் வண்ணம் அமெரிக்காவும் ஆப்பிரிக்க நாடுகளுக்கு விடுதலை அளிக்குமாறு தன்னுடைய நண்பர்களைத் தூண்டியது.

மூன்றாவதாக, ஒரு சில ஆப்பிரிக்க நாடுகளின் மனப்பாங்கு இக் காலக்கட்டத்தில் வளர்ச்சி அடைந்ததும் இதற்கு ஒரு காரணமாகும். அங்கு 1945-ஆம் ஆண்டு வாக்கில் காலனி ஆதிக்கமும் ஒரு மந்த நிலையை அடைந்தது. நகரங்களில் வாழ்ந்து வந்த கல்வியறிவு பெற்ற மக்களிடையே விடுதலை வேட்கை வளரத் தொடங்கிறது. அதுவரை பெற்று வந்த அவமானங்களுக்கு ஒரு முடிவு காண அவர்கள் விரும்பினார்கள். அத்தகைய முயற்சிகளில் ஈடுபட முயன்றபொழுது, அவர்கள் பல தடை களைச் சந்திக்க நேரிட்டது. எனவே அவர்கள் தேசியத் தலைவர்களின் அறைகூவல்களுக்குச் செவிசாய்த்தனர். அந்நாட்டில் வாழ்ந்து வந்த குடியானவர்களும் அக்காலக்கட்டத்தில் பெரும் துன்பங்களை ஏற்றிருந்ததால் அவர்களுடைய நிலங்களை நிலச் சுவான்தார்கள் அபகரித்துக் கொண்டதும், இரண்டாம் உலகப் போருக்குப் பின் ஏற்பட்ட பண வீக்க மும், அதனை தொடர்ந்து அவர்கள் அதுகாறும் பெற்றுவந்த கூலி (wages) குறைய நேரிட்டதும் தங்களைத் தேசிய இயக்கத்தில் இணைத்துக்கொள்ள அவர்களைத் தூண்டியது. நான்காவதாக, ஆதிக்க ஆட்சியாளர்கள் எழுந்து வந்த தேசிய உணர்வை அடக்குமுறை கொண்டு ஒழிக்கத்தலைப்பட்டதும் தேசிய உணர்வு அதிகரித்ததற்குக் காரணமாகும். விழிப்புணர்வு வளர வளர, அடக்கு முறையைக் கண்டு அஞ்சுவது நீங்கியது. இதன் காரணமாக, பெரும்பாலான ஆப்பிரிக்க நாடுகள் விடுதலைப் பாதையை நோக்கி, நடைபோட்டன.

## 4.3 ஆசியா மற்றும் ஆப்பிரிக்காவில புதிய நாடுகளின் அவசர நிலை ஆப்பிரிக்க - ஆசிய :

நீண்ட நாட்களாக ஆப்பிரிக்க வளர்ச்சியில் ஆசியா மிகுதியும் அக்கறை காட்டி வந்துள்ளது. எப்போதும் இல்லாத வகையில் இப்போது ஆப்பிரிக்க நாடுகள் ஆசியாவிடம் மிக அதிகமாக எதிர்பார்க்கின்றன.

குறிப்பு

உலகப் போர்களுக்குப் பின்னர் ஆசிய ஆப்பிரிக்க நாடுகளில் ஏற்பட்டுள்ள எழுச்சி மிக்க குறிப்பிடத்தக்க ஒன்று. இன்று உலக அரசியல் என்பது ஐரோப்பா மற்றும் அமெரிக்காவுடன் மட்டும் அமைந்து விடாது. ஆசியா மற்றும் ஆப்பிரிக்காவையும் சேர்த்தே சார்ந்திருக்கிறது. அண்மையில் விடுதலை பெற்றுள்ள ஆப்பிரிக்க நாடுகள், மேற்கத்திய நாடுகளைப் பொறுத்த வரையில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவை பல வழிகளிலும் உதவுவதன் மூலம் ஆப்பிரிக்கா - ஆசிய நாடுகளைத் தம் முன் நீடித்து வரும் இரண்டு வல்லரசுக் கூட்டங்களுக்குள் ஈர்த்துக் கொள்ள மேற்கத்திய நாடுகள் முயன்று வருகின்றன. சில நாடுகளைப் பொறுத்த அளவில் அவர்களின் இம்முயற்சி வெற்றியை அளித்துள்ளது. இருப்பினும் மேற்கத்திய மற்றும் கிழக்கத்திய வல்லரசு நாட்டுக் கூட்டங்கள் தமது அணிகளுள் அனைத்து ஆப்பிரிக்க - ஆசிய நாடுகளையும் கொண்டு வர இயலாதுள்ளன. ஆப்பிரிக்க ஆசியக் கண்டங்களிலுள்ள பல்வேறு நாடுகளும் பெரும்பாலும் கூட்டுச் சேராக் கொள்கையையே பின்பற்றி வருகின்றன. நடுநிலை நாடுகள் இதன் மூலம் சிறந்த பயனைப் பெறுகின்றன. இரு பெரும் ஆதிக்க வல்லரசுக் கூட்டங்களிலிருந்தும் உதவிகளைப் பெற்று தத்தம் நாடுகளை வளர்ச்சிப் பணியில் ஆக்கரீதியில் முன்னேற்றிக்கொள்ள இக்கொள்கை உதவுகிறது.

ஆசிய-ஆப்பிரிக்க நாடுகளிடையே நிலவும் ஒருமைப்பாடும், ஒற்றுமையும் அமெரிக்காவிற்கும் ருஷ்யாவிற்கும் ஒரு பரபரப்பை ஊட்டுவதாக உள்ளன. இந்நாடுகளின் வளர்ச்சிப் பணிகளுக்கு உதவுவதன் மூலம் ருஷ்யாவும், இவற்றைத் தமது அரங்குகளில் ஈர்த்துக் கொள்ள முயன்றே வருகிறது. ஆப்பிரிக்க - ஆசிய நாடுகளின் ஒருமைப்பாடும். ஒற்றுமையும் ஒரு காலத்தில் மேற்கத்திய நாடுகளுக்கும் ருஷ்யவிற்குமிடையேயான நட்புறவிற்கும் கூட வழி வகுக்கலாம். காரணம் ஆசிய - ஆப்பிரிக்க நாடுகளிள் ஒற்றுமை - பல்வேறு காரணங்களின் அடிப்படையில் - வல்லரசுகளின் விருப்பங்களுக்கு உகந்ததாக இல்லை. ஐக்கிய நாட்டுச் சபையின் உறுப்பினர் எண்ணிக்கையில் ஆப்பிரிக்க-ஆசிய நாடுகள் மிகுந்திருப்பது இவ்வல்லரசுகளை ஏற்கனவே உறுத்தத் தொடங்கிவிட்டது.

**உங்கள் முன்னேற்றத்தைச் சரிபார்க்கவும்**

1.ஆசியா மற்றும் ஆப்பரிக்க தேசியவாதத்தின் எழுச்சி பற்றி சிறு குறிப்பு வரைக?

## 4.4 ஆசிய தேசியவாதத்தின் எழுச்சி

ஆசிய நாடுகளின் நாட்டுரிமை உணர்ச்சி சிலத்தனித் தன்மைகள் அடைந்ததாக இருந்தது. பொதுவாக ஐரோப்பிய நாடுகளில் மக்களின் நாட்டுரிமை உணர்ச்சி தங்கள் நாட்டின் மேல் உள்ள நாட்டுப் பக்தியுள்ள ஒருமை உணர்ச்சியாக வெளிப்பட்டது. ஆனால் ஆசிய நாட்டு மக்களிடையே பொதுவாக, நாட்டுரிமை உணர்ச்சி இவ்வியற்கை அழகுடன் மலரவில்லை எனக்கூறவேண்டும். மேலை நாட்டு குடியேற்ற ஆதிக்கத்தை எதிர்க்கும் குறிக்கோள் தான் நாட்டுரிமை உணர்ச்சி தோன்றுவதற்கும், ஒருமை உணர்ச்சி மலருவதற்கும் காரணமாக இருந்தது. தாய்லாந்து போன்ற ஒரு சில சிறிய நாடுகளே இம்மாதிரியான சூழ்நிலையில் தோன்றிய நாட்டுரிமை உணர்ச்சிக்கு விதிவிலக்காக இருந்தன.

இரண்டாவதாக இந்திய நாட்டிலே மகாத்மா காந்தி அவர்கள் சாத்வீக, வன்முறையற்ற நாட்டுரிமைப்போர் முறையை பயன்படுத்தினார். இதுவே முதலாவதாக உலகத்தில் இப்புதுமுறை பயன் படுத்தப்பட்டது. இம்முறை மற்ற ஆசிய, குறிப்பாக ஆப்பிரிக்க நாடுகளின் நாட்டுரிமைப்

போரின் வழிகாட்டியாக இருந்தது. அமெரிக்காவில் நீக்ரோ இனத்தலைவர் மார்டின் லூதர் கிங்கூட காந்தியின் சாத்வீக முறையை அரசியலில் பயன்படுத்தினார்.

மூன்றாவதாக ஆசிய நாட்டு மக்களின் சமூக, பொருளாதார நிலை இழிவான நிலையில் இருந்தால் ஆசிய நாட்டுரிமை இயக்க கோட்பாடுடன் சோஷலிஸ கொள்கையும் இணைக்கப்பட்டது. ஆகையால் ஆசிய நாடுகளின் நாட்டுரிமை இயக்கத்தில் மூன்று சிறப்பான கொள்கைகளை நோக்கலாம். (1) அயல் நாட்டு அரசியல் குடியேற்றத்தை எதிர்க்கும் குறிக்கோள் (2) அயல்நாட்டு பொருளாதார குடியேற்ற கொள்கைகளை எதிர்க்கும் நோக்கம் (3) நாட்டுரிமை பெறுதல், சோஷலிஸ சமுதாயத்தை உருவாக்குதல்.

நான்காவதாக பொதுவாக ஆசிய நாட்டு நாட்டு ரிமை இயக்கக் கோட்பாடுடன் மேலை நாட்டு மக்களாட்சி இயக்கக் கொள்கை இணைக்கப்பட்டது. ஆகையால் முடியாட்சியின் கீழ் வளர்ந்த ஆசிய நாடுகளில் நாட்டுரிமை இயக்கத்தின்போது முதன் முதலாக குடியாட்சி தத்துவம் அறிமுகப்படுத்தப்பட்டு பரப்பப்பட்டது.

ஐந்தாவதாக ஆசிய நாட்டு நாட்டுரிமை இயக்கங்கள் மேலை நாட்டு தத்துவங்களால் ஊக்குவிக்கப்பட்டப்போதும், பொதுவாக, அவ்வியக்கங்கள் தங்கள் நாட்டு பண்புகளையும் தட்டியெழுப்பும் உணர்ச்சி இயக்கங்களாகவும் இருந்தன. ஆகையால் ஆசிய நாட்டு நாட்டுரிமை இயக்கங்கள் ஆசிய நாடுகளின் பண்பாடுகளுடன் ஒரு சேரக் கலக்கப்பட்டதாக இருந்தன் வெறும் அரசியல் இயக்கங்களாக மட்டும் இயங்கவில்லை .

ஆறாவதாக ஆசிய நாட்டு நாட்டுரிமை இயக்கங்கள் உலக நாடுகளின் ஒத்துழைப்பு ஒற்றுமை உணர்ச்சி கோட்பாடுகளை ஏற்றுக்கொண்டதாக இயங்கின. ஆகையால் இவ்வியக்கங்கள் எல்லாம் உலக சமாதானக் கொள்கையை முழுமனதாக ஏற்றுக் கொண்டன.

ஏழாவதாக பொதுவாக ஆசிய நாட்டு நாட்டுரிமை இயக்கங்கள் எல்லாம் ஒரே காலத்தில் தோன்றி வளர்ச்சியடைந்ததால் அவை ஏனைய ஆசிய நாட்டு நாட்டுரிமை இயக்கங்களுக்கு ஆதரவு தெரிவித்தன. சில சமயங்களில் இந்தியா போன்ற நாடுகள் சில நாட்டுரிமை இயக்கங்களில் ஓரளவு பங்கெடுக்கவும் முன்வந்தன என்றால் மிகையாகாது. மேலும் ஆசிய நாட்டு சமூக பண்பாட்டுச் சூழ் நிலை பொதுவுடமைக் கொள்கை பரவுவதற்குச் சாதகமாக இருந்தது. சீனாவியட்நாம், கம்போடியா முதலிய நாடுகள் படிப்படியாக பொதுவுடமை நாடுகளாக மாறின.

ஆனால் பெரும்பான்மையான ஆசிய நாடுகள் பொதுவுடமையை முழுமனதாக ஏற்றுக் கொள்ள மறுத்தாலும், அதன் சில சிறப்பான கோட்பாடுகளை ஏற்றுக் கொண்டன. மேலும் பொதுவுடமை நாடுகளுடன் நெருங்கிய நட்புறவு வைத்துக் கொள்ளவும் முன்வந்தன. இதன் பயனாகத் தோன்றிய புதுவித அயல் நாட்டுக் கொள்கைதான் அணிசார அயல் நாட்டு கொள்கை (Non-alignment). இக்கொள்கையை முதன் முதலாக உலக நாடுகளுக்கு அறிமுகப்படுத்திய பெருமை ஜவஹர்லால் நேருவை சார்ந்ததாகும். ஆசிய நாடுகளின் எழுச்சியின் சின்னமாக இன்னும் விளங்குவது இக்கொள்கையாகும். இக்கொள்கையைப் பயன்படுத்துவதால் ஒரே சமயத்தில் பொதுவுடமை நாடுகள் மேலை நாடுகள் முதலியவைகளிட மிருந்து உதவித்தொகை பெற முடிகின்றது.

குறிப்பு

அண்மைக் காலத்தில் தோன்றிய மற்றொரு சிறப்பான எழுச்சி ஆசியப் பொதுவுடமை நாடுகளிடையே உருவான நாட்டுரிமை, தன் மான அரசியல் உணர்ச்சியாகும். பொதுவுடமைக் கோட்பாட்டில் நாட்டுரிமை உணர்ச்சிக்கு இடமில்லை உலக பாட்டாளிகளின் ஒருமையுணர்ச்சிக்குத்தான் இடமுண்டு. ஆனால் 1960-ஆம் ஆண்டிற்கு பிறகு உருவான ருசிய-சீன மனஸ்தாபம் இத்தத்துவம் நடைமுறையில் கொண்டுவர முடியாது: நாட்டுரிமை உணர்ச்சி ஆசியப்பொதுவுடமை நாடுகளிடையே இயல்பாக அமைந்திருக்கின்ற ஓர் அழியா உணர்ச்சி என சீனா, வியட்நாம், கம்போடியா முதலிய பொதுவுடமை நாடுகள் எடுத்துக் காட்டியிருக்கின்றன. அதேபோல இந்தோனேசியா, பாகிஸ்தான் முதலிய நாடுகளின் அனுபவத்தைப் பார்த்தல் மேலை நாட்டுக் குடியாட்சி முறையை ஆசிய நாடுகளில் ஒருவித மாற்றம் இல்லாமல் நடைமுறையில் செயல்படுத்த முடியாது. இம்முறை குறிப்பிட்ட ஆசிய நாட்டின் அரசியல் பண்பாட்டிற்கு ஏற்றவாறு அமைக்கப்பட்டால்தான் பெயரளவிலாவது செயல்பட முடியும் என இந்நாடுகளில் நடந்த நிகழ்ச்சிகள் மூலம் தெரிந்து கொள்ளலாம்.

மேலும் ஆசிய நாடுகளின் ஒற்றுமையுணர்ச்சி ஒற்றுமை உணர்ச்சியாக மாறுவது கடினம் என அண்மைக்கால ஆசிய நாட்டு வரலாறு கற்பிக்கின்றது ஒருமை உணர்ச்சி வேகத்தில் ஆசிய நாடுகள் முதலில் 1947-ம் ஆண்டு மார்ச்சு மாதம் அரசு நேரடியாக சம்பந்தப்படாத ஆசிய நாட்டு உறவு மாநாடு (Asian Relations Conference) ஒன்றை புதுடெல்லியில் அமைத்தன. இந்த மாநாட்டில் பின்வரும் தீர்மானங்கள் இயற்றப்பட்டன.

- ஆசிய நாடுகளின் விவகாரங்களைப் பற்றியும், அந்நாடுகளுக்கும், மற்ற உலக நடவடிக்கைகளுக்கும் உள்ள உறவினைப் பற்றியும் ஆராய்ச்சி செய்வதற்கு ஆதரவு அளித்து அந்நாடுகளின் முன்னேற்றத்திற்கு உதவுவது.
- ஆசிய நாடுகளுக்கும், மற்ற உலக நாடுகளுக்கும் உள்ள நட்புறவையும் ஒத்துழைப்பையும் வலுப்படுத்த முயற்சி செய்வது.
- ஆசிய மக்களின் முன்னேற்றத்திற்காகப் பாடுபடுவது.

ஆசிய நாட்டு உறவுக்கூட்டம் தீர்மானங்களைச் செயல்படுத்துவதற்கு ஆசிய நாடுகள் முயற்சி செய்தன என 1953 ஆம் ஆண்டில் இந்தோனேசியாவில் கூடிய பாண்டுங் மாநாடு (Bandung Conference) எடுத்துக்காட்டிற்று. இம்மா நாட்டில் குடியேற்றக் கொள்கையை (colonialism) தீவிரமாக் எதிர்க்கும் ஒருமை உணர்ச்சி ஆசிய நாடுகளிடையே தொடர்ந்து வெளிப்பட்டது. ஆனால் மற்ற செயல்களில், குறிப்பாக பொதுவுடமை . அல்லாத விவகாரங்களில் அவர்களுக்குள் ஒருமையுணர்ச்சி தோன்றவில்லை.

கடந்த சமீபகால முப்பது ஆண்டு ஆசிய நாடுகளின் உறவினை நோக்கினால் பாண்டங் மாநாடு விரும்பிய, முயற்சி செய்த ஒருமையுணர்ச்சி மலர்வதற்குப் பதிலாக, பிளவு மனப்பான்மை மிகுதியாக வளர்ச்சியடைந் திருக்கின்றது என்பது தெளிவாகத் தெரிகின்றது. பாண்டுங் மாநாட்டின் (1955) போது, உதாரணமாக இந்தியாவிற்கும் சீனாவிற்கும், இந்தோனேசியாவிற்கும், சீனாவிற்கும், ஈரானுக்கும், ஈராக்கிற்கும், இந்தோனேசியாவிற்கும், மலேயாவிற்கும் ஒற்றுமை உறவு இருந்தது ஆனால் 1960- ஆம் ஆண்டுகளிலே இதே பகையாகமாறிற்று. இந்தோனேசியா மலேசியாவின் மேல் 1963-1965ஆம் ஆண்டுகளில் படையெடுத்தது. தவிர

**குறிப்பு**

இந்தியாவிற்கும் பாகிஸ்தானுக்கும், பாகிஸ்தானுக்கும் வங்காள தேசத்திறகும், எகிப்திற்கும், மற்ற அரபு நாடுகளுக்கும் இடையே மனத்தாங்கல் ஏற்பட்டது. ஆசியாவை பண்பாட்டு நோக்குடன் அணுகினால் முப்பிரிவுகளாகப். பிரிக்கலாம். சீனப்பண்பாட்டினை பின்பற்றும் கிழக்காசியா, இந்திய பண்பாட்டுடன் வளர்ந்த தென், தென் கிழக்காசியா, இஸ்லாமிய குறிப்பாக அரேபிய மேற்காசியா, தவிர இஸ்லாம் ஆசியா நாடுகள், இந்து, புத்தசமய நாடுகள் கடவுள் நம்பிக்கையற்ற, பொதுவுடைமை நாடுகள் என்றும் ஆசியாவை முப்பிரிவுகளாகப் பிரிக்கலாம்.

மேற்கு ஆசியா இன்று உலக அரசியல் அரங்கில் மிக முக்கிய பங்கு வகிக்கிறதென்றால் அதற்கு முக்கிய காரணம் அதன் எண்ணை வளமே. அந்த வளத்தைச் சுரண்டுவதற்கு மேற்கு நாடுகள் அங்கு தங்கள் மேலாதிக்கத்தை நிலை நாட்டியிருந்தன. இரண்டாம் உலகப் போருக்குப் பின் அரபு நாடுகளில் எழுந்த தேசிய உணர்ச்சி அந்த மேலாதிக்கத்தை உதறித் தள்ளியது. சௌதி அரேபியா, ஈராக், சிரியா, லெபனான் வளைகுடா நாடுகள் ஆகியவை எண்ணைவளமிக்க மேற்கு ஆசிய நாடுகள் இன்று தன்னுரிமை பெற்று விளங்குகின்றன. எண்ணையின் இன்றியமையாத தன்மையை நன்கு புரிந்து கொண்டு, அதனை ஒரு ராஜதந்திரக் கருவியாக்கி மேலை நாடுகளை தங்கள் கருத்துக்கு இணங்கச் செய்வதில் ஓரளவு வெற்றி பெற்றுள்ளன. கெடுபிடிட் போர்க்காலத்தில் அப்பகுதியில் செல்வாக்குப் பெற அமெரிக்கா, ரஷியா ஆகிய வல்லரசகள் முயற்சி எடுத்தன. அமெரிக்கா, ஐசன்ஹோவர் கோட்டாடு என்ற கொள்கையை வகுத்துக் கொண்டு அப்பகுதியில் கம்யூனிச ஊடுருவலுக்கு எதிராக பொருளியல் உதவிப் படை உதவி அளிக்கத் தயார் என்று அறிவித்தது. மேலும் "சென் டோ (CENTO) எனப் பட்ட பாக்தாத் படை ஒப்பந்தத்தை ஏற் படுத்தியது. ரஷியா இதற்குப் போட்டியாக மேற்கு ஆசிய நாடுகளுக்கு படைக்கருவிகளை வழங்கியது.

மேற்கு ஆசியாவில் இன்று பெரும் சிக்கலாக இருப்பது இஸ்ரேலின் ஆக்கிரமிப்புக்களாகும் 1967, 1973-ஆம் ஆண்டுப் போர்களில் அரபு நாடுகளுக்கு எதிராகப் போரிட்டு வெற்றி பெற்ற அந்நாடு, ஜெருசலேம் கோலன் ஹைட்ஸ், மேற்கு ஜோர்டான் பகுதிகளை ஆக்கிரமித்துக் கொண்டது. இதில் கடைசியாகக் குறிப்பிட்ட இடத்தில் வாழ்ந்து கொண்டிருந்த பாலஸ் தீனிய அரேபியர்கள் இன்று நாடற்ற அகதிகளாக அலைந்து திரிகின்றனர். எஸ்ஸார் அராபத் என்பார் தலைமையில் பாலாஸ் தீன விடுதலை இயக்கம் என்ற அமைப்பை உருவாக்கி தங்கள் பிறந்த மண்னை விடு விக்கப் போராடி வருகின்றனர். இந்தப் போராட்டத்தில் அமெரிக்காவின் ஆதரவு இஸ்ரேலுக்கு இருக்கும் போது ரஷியா மற்றும் கூட்டுச்சேரா நாடுகளின் ஆதரவு பாலஸ்தீனியர்களுக்கு இருக்கிறது. இப்பிரச்சினை காரணமாக அப்பகுதியில் அமைதியின்மை தலைதூக்குகிறது.

தென்கிழக்கு ஆசியாவில் இந்தியா, நேபாளம், பர்மா ஸ்ரீ லங்கா மலேஷியா, சிங்கப்பூர், இந்தோனேஷியா, இந்தோ-சீனா (லவோஸ் வியட் நாம், கம்போடியா) பிலிப்பைன், சயாம் போன்ற நாடுகள் உள்ளன, இவற்றில் சயாம் நீங்கலாக பிறநாடுகளனைத்தும் இரண்டாம் உலகப்போர் முடியும் வரை மேற்கு ஏகாதிபத்திய ஆட்சியின் கீழ் இருந்தவை. இந்நாடுகளில் தேசியத்தலைவர்கள் தோன்றி தேசிய இயக்கங்களை உருவாக்கி, போராட்டங்கள் நடத்தி அன்னிய ஆதிக்கத்தை அகற்றினர். அவருள், இந்தியாவில் காந்தியடிகள். ஜவஹர்லால் நேரு. பர்மாவில் ஆங்சான், இந்தோனேஷியாவில் சுகர்னோ, வியட்நாமில் ஹோ-சிமின் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

தூரக்கிழக்கு எனப்பட்ட கிழக்கு ஆசியாவில் சீனா, கொரியா, மங்கோலியா, ஜப்பான் ஆகிய நாடுகள் அடங்கியுள்ளன. இவற்றுள் இரண்டாம் உலகப்போருக்குப்பின் ஜப்பான் ஆறாண்டு காலத்திற்கு அமெரிக்கா ஆக்கிரமிப்பின் கீழ் இருந்தது. 1951-ல் கையெழுத்தான சான். பிரான்சிஸ்கோ அமைதி ஒப்பந்தத்திற்குப்பின் அந்நாடு முழு உரிமை பெற்ற நாடாக வளர்ச்சியுற்றது. உலகம் வியக்கும் வண்ணம் பொருளியியலில் முன்னேற்றம் பெற்று இன்று உலக அரங்கில் சிறப்பான இடம் வகிக்கின்றது. சீனாவில் மசேதுங் தலைமையில் கம்யூனிஸ்டுகளுக்கும், சியாங்கேஷர் தலைமையில் கோமின்டாங் கட்சியினருக்குமிடையில் நடைபெற்ற உள் நாட்டுப்போரில் கம்யூனிஸ்டுகள் வெற்றி பெற்றனர். இவ்வெற்றி ஆசியா முழுவதிலும் கம்யூனிசத்திற்கு புதிய உத்வேகம் அளித்தது. தோல்வியுற்ற சியாங்கேஷேக் பர்மோசா தீவிற்குப் பின்வாங்கி அங்கு தம் ஆட்சியை நிலைநாட்டிக் கொண்டார். சீனா முழுமைக்கும் தானே உண்மையான அதிகாரபூர்வமான அரசு என்று அறிவித்துக்கொண்டார். அமெரிக்கா தொடர்ந்து சியாங் அரசையே உண்மை சீன அரசாக அங்கீகரித்து வந்தது. ஆனால் பெரும்பான்மையான ஆசிய நாடுகள் கம்யூனிஸ்ட் சீனாவை அங்கீகரித்தது குறிப்பிடத்தக்கது.

இரண்டாம் உலகப் போருக்குப் பின் வல்லரசுகளுக்கிடையில் மூண்ட கெடுபிடிப்போர் நேரடிப்போராக மீளும் அபாயம் கொரியாவில் ஏற்பட்டது. போர் முடிவுற்றதும் வடகொரியா ரஷிய ஆக்கிரமிப்பின் கீழும் தென்கொரியா அமெரிக்க ஆக்கிரமிப்பின் கீழும் வந்தன. இரு வல்லரசுகளிடையிலும் கடுமையான கருத்து வேறுபாடுகள் நிலவியதால் கொரியா இணைவதற்கான வாய்ப்புகள் குறைந்து கொண்டு வந்தன. நாளடைவில் வடகொரியாவில் கம்யூனிஸ்ட் அரசும் தென் கொரியாவில் அமெரிக்க சார்பு அரசும் நிறுவப்பட்டன. 1950-ல் திடீரென வடகொரியா தென்கொரியா மீது படையெடுத்தது. உடனே இது ஐ. நா. சபைக்கு எடுத்துச் செல்லப்பட்டது. அங்கு தென்கொரியா மீதான ஆக்கிரமிப்பை அகற்ற படை உதவி அளிக்க முடிவு செய்யப்பட்டது. ஐ. நா. படைகள் ஆக்கிரமிப்பை ஆகற்றிய போதிலும் கொரியச் சிக்கலுக்கு நிரந்தரத் தீர்வு காண இயலவில்லை. இதேபோல் வியட்நாமிலும் கம்யூனிஸ்டுகளுக்கும் அமெரிக்க சார்பு அரசிற்குமிடையில் உள் நாட்டுட்போர் நடைபெற்றது. அமெரிக்கா நேரடியாகத் தலையிட்டும் கூட கம்யூனிஸ்டுகளைத் தோற்கடிக்க முடியவில்லை. இறுதியில் அங்கு கம்யூனிஸ்டுகள் வெற்றி பெற்றது குறிப்பிடத்தக்கது.

கம்யூனிஸ்டுகளின் விரிவாக்கம் கண்டு அதிர்ச்சியடைந்த அமெரிக்கா தென் கிழக்கு ஆசிய பாதுகாப்பு ஒப்பந்தம் (SEATO) ஒன்றை உரு வாக்கியது. அதில் பிலிப்பைன், தாய்லாந்து, பாகிஸ்தான் போன்ற ஆசிய நாடுகள் மட்டும் சேர்ந்தன. இது கம்யூனிசத்திற்கு எதிரான ஒப்பந்தமாகும். இதில் இந்தியா, பர்மா, இந்தோனேஷியா போன்ற ஆசிய நாடுகள் சேராதது குறிப்பிடத்தக்கது. ஆகையால் ஆசிய நாடுகளின் எழுச்சி என்று பின்வரும் நிகழ்ச்சிகளை குறிப்பிடுகிறோம்.

- மேலை நாட்டு குடியேற்ற ஆட்சியை எதிர்த்து நாட்டுரிமைப்போராட்டம் நடத்திய சூழ்நிலை
- இப்போராட்ட சூழ் நிலையே ஆசிய நாடுகளின் ஒருமையுணர்ச்சியினை தூண்டிவிட்ட. ஓர் புது வரலாற்று திருப்பம்.
- ஜப்பானின் மறுமலர்ச்சி, தன்னம்பிக்கை. அதிகார வளர்ச்சி, வீழ்ச்சி (இரண்டாம் உலகப் போருக்குப்பின்), மீண்டும் 1945- ஆம் ஆண்டிலிருந்து பொருளாதார வளர்ச்சி.

- பொதுவுடமையின் வளர்ச்சி, பிளவு மனப்பான்மை , இடைவிடா. முயற்சி எடுத்துக்காட்டாக சீனா, வியட்நாம், கம்போடியா.
- அமெரிக்கக் குடியரசின் குடியேற்றக் கொள்கைக்கு எதிராக இடை விடாது இருபது ஆண்டுகளுக்கு மேல் வியட்நாம் நடத்திய வெற்றிகரமான நாட்டுரிமை போர்.
- சோஷலிஸ மனப்பான்மை வளர்ச்சியடைவதற்கான பிற்போக்கான சமூக, பொருளாதார சூழ் நிலை. ஆகையால் பொதுவுடமையை ஏற்காத நாடுகளில் கூட சோஷலிஸ கொள்கை பின்பற்ற முயற்சி யெடுக்கப்படுகின்றன.
- இந்தியாவின் சாத்வீக நாட்டுரிமை போராட்டம், அணிசேரா அயல் நாட்டுக் கொள்கை முதலிய புதுப்பாங்கான அரசியல் முறைகள்.
- மேற்கு ஆசியா நாடுகளில் பெட்ரோலியத்தின் செல்வாக்கால் ஏற்பட்டிருக்கிற பொருளாதார முற்னேற்றம்.
- மேலை நாட்டு குடியாட்சி முறை போன்ற கோட்பாடுகளால் ஏற்பட்ட வினைவுகள்.

இம்மாதிரியான எழுச்சி அலைகள் தோன்றுவதற்கு முன் ஆசிய நாடுகள் உறங்கிக்கிடந்தன. தன் மானமில்லா, சுய நினைவற்ற அடிமைக் கூட்டங்களாக நடமாடிக் கொண்டிருந்தன. ஆனால் 19-ஆம் நூற்றாண்டில் குறிப்பாக 20-ஆம் நூற்றாண்டில். இவர்கள் உயிர் பெற்றெழுந்து, விழிப்புணர்ச்சி மலர்ந்து, சுய நினைவப் பெற்று, நாட்டுரிமையை மீட்டு, தன்னம்பிக்கையுடன் தன்னாட்சி, தன்னிறைவு பாதையில் பயணம் செய்யத் தொடங்கி விட்டனர் ஆகையால் தூங்கியவன் விழித்து எழுந்து நடமாடத் தொடங்கியது போல தூங்கிக் கொண்டிருந்த ஆசிய நாடுகள் விழித்து எழுந்து தன் மானத்துடன் நடமாடும் நூற்றாண்டைதான் ஆசிய எழுச்சி என்கிறோம். குடியேற்றக் கொள்கையை எதிர்க்கும் உணர்ச்சி ஆறுகளால் அமைக்கப்பட்ட ஆசிய ஒருமையுணர்ச்சி, அக்குடியேற்ற பிசாசுக் கூட்டங்கள் மறைந்தவுடன், மீண்டும் பிளவு உணர்ச்சிகளாக மாறிவிட்டது. ஆகையால் இன்று தனித்தனி பாதைகளிலே, தன் மான விழிப்புணர்ச்சிகளுடன், தன்னம் பிக்கையுடன் ஆசிய நாடுகள் ஆசிய ஒற்றுமை உணர்வு எனும் மனப்பான்மையை முழுவதும் விட்டுவிடாமல் பயணம் செய்து கொண்டிருக்கின்றன. எழுச்சியே வளர்ச்சிக்கு காரணம் என நன்கு தெரிந்து கொண்டிருக்கின்றன. ஆனால் பிரிவு மனப்பான்மை பிளவு சூழ்நிலையை உருவாக்கி, முடிவில்லா பிரிவுக்கூடுகளைக்கட்டி வளர்த்து எழுச்சியை வீழ்ச்சியாய் மாற்றி விடும் என்ற வரலாற்றுப் படிப்பினையை இந்நாடுகள் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். இதற்கு எடுத்துக்காட்டாக விளங்குவது தான் இன்று ஆப்கனிஸ்தானில் உள்ள சோவியத் உருசியா ஆக்கிரமிப்பு.

## 4.5 சீனா தேசியவாதத்தின் எழுச்சி

தூரக்கிழக்குப் பகுதியில் காணப்படும் மிக முக்கியமான நாடுகளில் சீனாவும் ஒன்றாகும். இரண்டாம் உலகப் போரில் நேச நாடுகளுடன் இணைந்து போரிட்டு வெற்றி அடைந்த போதிலும், அங்கு பல உள் நாட்டுப் பிரச்சனைகள் காணப்பட்டன. அத்தருணத்தில் சீனா பிளவுகள் பல நிறைந்த நாடாக இருந்தது. போரில் ஈடுபட்டதன் விளைவாக அதன் பொருளாதார நிலை மிகவும் பாதிக்கப்பட்டிருந்தது. அப்பொழுது சீனாவில் ஆட்சி புரிந்து கொண்டிருந்த சியாங்-கே ஷேக்கின் தேசீய அரசாங்கத்தினால், அமெரிக்காவின் ஆதரவுடன், முக்கியமான பல நகரங்களைத் தன் கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருக்க முடிந்ததெனினும், மா-சே-துங்கின் தலைமையின் கீழான சீனப்பொதுவுடைமை யாளர்களின் சவால்களை

அதனால் சிறிது காலமே சமாளிக்க முடிந்தது. தேசிய அரசாங்கத்திற்கும் பொதுவுடைமையாளர்களுக்கும் இடையே நல்லுறவை வளர்ப்பதற்கு அமெரிக்கா எடுத்துக்கொண்ட முயற்சிகள் தோல்வியுறவே 1946-ஆம் ஆண்டில் அங்கு உள் நாட்டுப்போர் தோன்றியது. ஏற்கனவே சீனாவின் பெரும்பாலான பகுதிகளைத் தன் வசம் வைத்திருந்த பொதுவுடைமையாளர்கள், மஞ்சூரியாவையும், வட சீனாவையும் தங்கள் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்தனர். 1948-ஆம் ஆண்டின் இறுதியில், ராணுவ வலிமைச் சமநிலை மாவோவிற்குச் சாதகமாக மாறியது. 1949-ஆம் ஆண்டு பொதுவுடைமையாளர்கள் வெற்றி பெறவே சியாங்-கே ஷேக் தைவானுக்குச் சென்று அங்கு தன் ஆட்சியை அமைத்தார்.

1949-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் பொதுவுடைமையாளர்கள் பீகிங்கில் புதிய ஆட்சியைத் தோற்றுவித்தனர். மா-சே-துங்கின் கீழ் நிறுவப்பட்ட புதிய ‘சீன மக்கள் குடியரசு’உலகிலுள்ள அனைத்துப் பொதுவுடைமை நாடுகளுடன் அரசியல் உறவுகளை ஏற்படுத்தியது. 1950-ஆம் ஆண்டு சீனா ‘நட்பு, கூட்டுறவு, மற்றும் பரஸ்பர உதவி’ ஆகியவற்றிற்காகச் சோவியத் யூனியனுடன் 30 ஆண்டு உடன்படிக்கை ஒன்றை செய்து கொண்டது. இவ்வாறு சீனா, சோவியத் யூனியனுடன் இணைந்தது, ஆசியாவிலும் மற்றும் பிற கண்டங்களிலும் ஒரு பெரும் தாக்கத்தை (impact) உண்டு பண்ணியது. பிற ஆசிய நாடுகள் சமுதாயப் புரட்சிகள் பற்றியும் சமதர்ம நாடுகளுடன் உறவுகள் வைத்துக்கொள்வது பற்றியும் சிந்திக்கத் தலைப்பட்டன. சீனாவில் பொதுவுடைமைக் கட்சி அடைந்த வெற்றி ஆசியாவின் பிற பகுதிகளில் காணப்பட்ட பொது வுடைமையாளர்களைச் சீனப் பொதுவுடைமையாளர்கள் கையாண்ட முறைகளைப் பின்பற்ற ஊக்குவித்தது. இதன் விளைவாக பர்மா, இந்தோனேசியா, இந்தோ சீனா, பிலிப்பைன்ஸ் மற்றும் இந்தியாவின் ஒரு சில பகுதிகள் ஆகியவற்றில் பொதுவுடைமைத் தத்துவம் வளரலாயிற்று.

**உலக விவகாரங்களில் சீனாவின் பங்கு :**

1950ஆம் ஆண்டு, பொதுவுடைமை நாடான வடகொரியா, தென் கொரியாவைத் தாக்கியது. வடகொரியாவைச் சீனாவும் சோவியத்யூனி யனும் ஆதரித்தன. தென்கொரியாவை அமெரிக்காவும் பிற முதலாளித்துவ நாடுகளும் இதர சில நாடுகளும் ஆதரித்தன. ரஷ்யா அப்பொழுது ஐ.நா சபை நடவடிக்கைகளில் பங்கேற்கத் தவறியதால், வடகொரியாவின் மீது ஐ நாவின் படைகள் போர்தொடுக்க வழிவகுக்கப்பட்டது. ஐ.நாவின் படைகள் ‘யாலு’ நதியை கடந்த பொழுது அப்போர் சீனாவிற்கும் அமெரிக்காவிற்குமிடையேயான நேரடிப் போராக மாறியது. சீனப்பொது வுடமைத் தத்துவம் பரவுவதைத் தடுப்பதற்காகத் தென்கிழக்கு ஆசியப் பகுதியில் அமெரிக்கா ஒரு புதிய வெளியுறவுக் கொள்கையைப்பின்பற்றத் தலைப்பட்டது. 1951க்கும் 1954-ற்கும் இடைப்பட்ட காலத்தில் ஜப்பான், பிலிப்பைன்ஸ், தென்கொரியா மற்றும் பார்மோசா (தைவான்) ஆகிய நாடுகளுடன் அமெரிக்கா இராணுவ ஒப்பந்தங்களைச் செய்துகொண்டது. இதுதவிர அமெரிக்கா ஐக்கிய நாடுகள், தாய்லாந்து, பிலிப்பைன்ஸ் பாகிஸ்தான், இங்கிலாந்து, ஆஸ்திரேலியா, நியூஸிலாந்து மற்றும் பிரான்சு ஆகிய நாடுகள் ஒன்றிணைந்து தங்களுடைய பல நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்கெனக் கூட்டாக ‘தென்கிழக்கு ஆசிய ஒப்பந்த அமைப்பை’ (SEATO) நிறுவின.



ஐ.நா. சபையில் சீனாவின் நுழைவைத் தடுப்பதென அமெரிக்க ஐக்கிய நாடுகள் தீர்மானித்தது. சீனாவின் புதிய பொதுவுடைமை அரசிற்கு அங்கீகாரம் அளிப்பதற்குக் கூட அமெரிக்கா மறுத்தது அத்துடன் பல

பொருளாதாரத்தடைகள் மற்றும் அரசியல் கட்டுப்பாடுகள் ஆகியவற்றின் துணை கொண்டு உலக அரங்கில் சீனாவைத் தனிமைப்படுத்த அமெரிக்கா முயன்றது. இந்தோ சீனப் பகுதியில் பிரான்சிற்கும் பொதுவுடைமைக் கட்சி ஆதரவு பெற்ற ஹோ-ச்சி-மின் (Ho-chi-min) கீழான வியட்நாமிற்கும் (Vietminh) தகராறு மூண்டபொழுது அமெரிக்காவும், சீனாவும் முறையே இவ்விறு நாடுகளையும் ஆதரித்தன. 1954-ஆம் ஆண்டு நடந்த ஜெனீவா கருத்தரங்கின் பயனாக இந்தோ-சீனப் பிரச்சனை தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டது. இத்தருணத்தில் சியாங் கேஷேக் வசமிருந்த ∴பார்மோசாவை விடுவிக்கும் வகையில் சீனா தேசிய அரசிற்குச் சொந்தமான பிற தீவுகளின் மீது குண்டுவீசியது. அமெரிக்கத் தலையீட்டின் காரணமாகச் சீனாவின் முயற்சி தோல்வியடைந்தது.

1955 ஆம் ஆண்டு வரலாற்றுப் புகழ்மிக்க ‘பாண்டுங்’ (Bandung) மாநாடு இந்தோனேசியாவில் நடத்தப்பெற்றது. அம்மா நாடு ஆசிய நாடு களிடையே காணப்பட்ட பதட்ட நிலையை குறைக்கவும் அவைகளிடையே விட்டுக்கொடுக்கும் மனப்பான்மையை வளர்க்கவும் வழிவகைகள் செய்தது. பல ஆசிய நாடுகளை இணைந்து செயல்படத் தூண்டிய இம்மாநாட்டில் சீனா, இந்தியா போன்ற நாடுகளின் தலைமை அமைச்சர்களான சூ-யென் லாய் மற்றும் ஜவஹர்லால் நேரு ஆகியோர் முக்கிய பங்கேற்றிருந்தனர். எனினும் 1957-ஆம் ஆண்டிற்குள் ‘பாண்டுங்’மாநாட்டில் தோன்றிய இந்நல்லெண்ண உணர்வுகள் செத்து மடிந்தன. சீன நில ஆக்கிரமிப்புக் கொள்கையைத் தொடங்கியதை ஒட்டி அது 1959, 1962-ஆம் ஆண்டு களில் இந்தியாவைத் தாக்கியது. அக்காலக்கட்டத்தில் சீன-சோவியத் உறவுகளும் நலிவுறலாயின. ∴பார்மோசா மற்றும் இந்தியாவிற்கு எதிரான போர் ஆகியவற்றில் சோவியத்யூனியன் சீனாவை ஆதரிக்கத் தவறியதால் அதனைச்சீனாசந்தேகக் கண்களுடன் நோக்கலாயிற்று. இவ் விரு நாடுகளுக்குமிடையே பொதுவுடைமை கோட்பாட்டின் தத்துவார்த்த விளக்கம் குறித்து பல மாறுபட்ட கருத்துக்கள் தோன்றலாயின. ஒன்றை யொன்று புதிய ஏகாதிபத்திவாதிகள் என்றும், ரிவிஸனிஸ்ட் என்றும் சாடிக்கொள்ளத் தொடங்கின. 1963-ஆம் ஆண்டு சோவியத் யூனியன் அமெரிக்காவுடன் அணு ஆயுத பரிசோதனைத்தடை ஒப்பந்தத்தில் கையொப்பமிட்ட பொழுது சோவியத் யூனியனுக்கும் சீனாவுக்குமிடையே யான பிளவு மேலும் விரிவடைந்ததுடன் அவைகளிடையே அடிக்கடி எல்லைத்தகராறுகளும் தோன்ற ஆரம்பித்தன.

1960-ஆம் ஆண்டிற்குப் பிறகு ஆப்பிரிக்கா, லத்தீன் அமெரிக்கா மற்றும் ஆசியாவிலுள்ள வளர்ந்து வரும் நாடுகள் மீது சீனா தன் கவனத்தைத் திருப்பிற்று. ஆனால் இம்முயற்சியில் அதனால் குறிப்பிடத் தகுந்த வெற்றி ஏதும் அடைய இயலவில்லை. இவ்வாறு பன்னாட்டு விவகாரங்களில், சில ஏமாற்றங்களை அடைந்த பொழுதும், 1964 ஆம் ஆண்டு அது அணுகுண்டை வெடித்ததன் மூலம், இழந்த தன்கௌரவத்தை ஓரளவு மீட்டுக் கொண்டது. அங்கு நடந்த கலாச்சார புரட்சியும் கட்சிக் குள்ளாகவே நடைபெற்ற அதிகாரப்போட்டியின் விளைவாகத் தோன்றிய புதிய தலைமையும் சீனாவை ஓர் புதிய வல்லரசாக மாற்ற முனைந்தது. மீண்டும் 1969-ஆம் ஆண்டு சீனா புதிதாகத் தோன்றிய நாடுகளுடன் உறவுவைத்துக் கொள்ள முயன்றது. உலகின் வலிமைச்சம நிலை முறையில் ஏற்பட்ட மாற்றங்களின் விளைவாகச் சீனா அமெரிக்காமீது கொண்டிருந்த கடினமான மனோபாவத்தை மாற்றிக் கொள்ள வேண்டிய நிலை ஏற் பட்டது. எனவே அது அமெரிக்காவுடன் நெருங்கி ஒத்துழைக்க விருப்பம் காட்டியது. சீனாவிற்கு விஜயம் செய்யுமாறு அமெரிக்க குடியரசுத்தலைவர் நிக்சனுக்கு ஓர் அழைப்பு அனுப்பப்பட்டது. நிக்சனின் சீன விஜயம் மற்றும் அதனைத் தொடர்ந்து ஏற்பட்ட பிற நிகழ்ச்சிகள்

குறிப்பு

ஆகியன இவ்விரு நாடு களிடையேயான உறவுகளைச் சீர்படுத்த உதவின. இப்புதிய நட்பின் காரணமாகச் சீனா ஐ.நா. சபையின் அங்கத்தினராக ஆக்கப்பட்டது.

## 4.6 ஜப்பான் தேசியவாதத்தின் எழுச்சி

ஆசியாவிலேயே, ஜப்பான் மட்டும் தான் மேலை நாடுகளின் நுணுக். கங்களைப் பின்பற்றியதோடு, அவைகளின் வலிமையையும் சோதிக்கத் துணிந்தது. அதிர்ஷ்டவசமாகத் தன்னுடைய கலாச்சாரங்களை அது காப்பாற்றிக் கொண்டது மட்டுமல்லாமல், மேல் நாட்டு முறைகளைப் பின். பற்றித் தன்னை- நவீனப்படுத்திக்கொள்ளவும் செய்தது. ஏகாதிபத்திய நடவடிக்கைகளில் தன் பங்காகச் சீனாவையும் (1894) ரஷ்யாவையும் (1904) தாக்கியது. இவ்விரு தாக்குதல்களிலும் அது வெற்றி கண்டது. 1937 மற்றும் 1941-ஆம் ஆண்டுகளில் ஜப்பானுக்கும் சீனாவிற்குமிடையே இருபெரும் போர்கள் தோன்றின. தன் ஏகாதிபத்திய வேட்கையைத்தணித்துக் கொள்வதற்காகப் பசிபிக் பகுதியில் அது அமெரிக்காவிற்கும், தென் கிழக்கு ஆசியப்பகுதிகளில் ஐரோப்பிய அரசுகளுக்கும் சவால் விடுத்தது.

இரண்டாம் உலகப் போரின் போது ஆசியாவின் பெரும்பகுதி ஜப்பான் வசமிருந்தது. 1945-ஆம் ஆண்டு, ஹிரோசிமாவிலும் நாகசாகியி லும் இரு அணுகுண்டுகள் வீசப்பட்டதைத் தொடர்ந்து, ஜப்பானின் மனப்பாங்கு மாறியது. ஜப்பான் பெருத்த அழிவுக்குள்ளாக்கப்பட்ட பொழுது, அது அமெரிக்க தளபதி மக் ஆர்தரிடம் சரணாகதி அடைந்தது. தோற்கடிக்கப்பட்ட ஜப்பான் அமெரிக்கத் துருப்புகளின் ஆணைகளுக்கு அடிபணிந்தது. அமெரிக்கப்படையின் தலைமையின் கீழ் ஜப்பான் ஜன நாயகப்படுத்தப்பட்டது. அத்துடன் அதன் ராணுவ வலிமையும் குறைக்கப் பட்டது. ஆனால் அதே சமயத்தில் ஆசியா கண்டத்தின் பிற நாடுகளில் ஏற்பட்ட வன்முறைச்செயல்களும், குழப்பங்களும் மற்றும் தகராறுகளும் ஜப்பானைப் பாதிக்காவண்ணம் காக்கப்பட்டது. ஜப்பானும் இச்சந்தர்ப் பத்தைப் பயன்படுத்திக் கொண்டு போரினால் தனக்கு ஏற்பட்ட பொருளாதார இழப்பை சரி செய்தவுடன் ஆசியாவிலேயே தொழில் நுட்பத் துறையில் மிகவும் முன்னேற்றம் அடைந்த நாடாகவும் உள்ளது.

ஜப்பானுக்கும். அமெரிக்காவுக்குமிடையேயான உறவுகள் எப்பொழுதும் முழுமையானதாகவோ சுமூகமானதாகவோ இருந்ததாகக்கூற முடியாது. ஜப்பானை எப்பொழுதும் தன் கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருக்க வேண்டும் என்ற அமெரிக்காவின் எண்ணம் தற்பொழுது ஜப்பானில் ஆட்சேபிக்கப்படுகிறது. ஜப்பான் தன்னை ஆயுதப்படுத்திக் கொள்வதைத் தடுக்க அமெரிக்கா விழைவதும் அதனுடைய இராணுவ வலிமையின் வளர்ச்சியைத் தடுப்பதற்கு அமெரிக்கா மேற்கொள்ளும் முயற்சிகளும் ஜப்பானியரிடையே மனக்கசப்பை ஏற்படுத்தியுள்ளன.

சில ஆண்டுகளுக்கு முன்பு வரை ஜப்பான் தன்னுடைய பாதுகாப் பிற்கு அமெரிக்காவையே நம்பியிருந்தது. ஜப்பான் அமெரிக்காவுடன் செய்து கொண்ட பாதுகாப்பு ஒப்பந்தத்தை அங்கு காணப்பட்ட இடது சாரி அணியினர் மிகத் தீவிரமாக எதிர்த்தனர். உள் நாட்டில் இவ்வொப் பந்தத்திற்கு எதிர்ப்புகள் இருந்த போதிலும் ஜப்பான் வல்லரசுகளுடன் சேர்ந்து அணு ஆயுதப்பரவல் தடை ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டது. தன்னிடம் இருக்கக் கூடிய வசதிகளைச் சிறப்பாகப் பயன்படுத்தியதன் மூலம் ஆசியாவில் பொருளாதாரத்தில் சிறந்துவிளங்கும் நாடுகளில், ஜப்பான் முதலிடத்தை வகிக்கின்றது. ஆரம்பகாலங்களில் அமெரிக்க அயல் நாட்டுக் கொள்கையையே தன் கொள்கையாக ஜப்பான் பின்பற்றி

குறிப்பு

வந்தமையால், சீனப் பொதுவுடமை அரசிற்கு அது அங்கீகாரம் வழங்க மறுத்தது. எனினும் சீனாவுடன் ஓரளவு வர்த்தகத் தொடர்புகளை ஜப்பான் கொண்டிருந்தது. 1969-ஆம் ஆண்டிற்குப் பிறகு ஜப்பான் தன்னிச்சையான வெளிநாட்டுக் கொள்கையைப் பின்பற்றி வருகின்றது. தன் பொருளா தாரம், தொழில் நுட்ப மேன்மை ஆகியவற்றின் துணை கொண்டு உலகில் தனக்கென ஓர் சிறப்பான இடத்தைப் பிடிப்பதைத் தவிர வேறு எண்ணங்கள் அதற்கு தற்பொழுது இருப்பதாகக் கூறமுடியாது.

## 4.7 இந்தோனேஷியா தேசியவாதத்தின் எழுச்சி

இந்தோனேசியா, டச்சுக்காரர்களின் ஆதிக்கத்தின் கீழிருந்தவரை எந்தவொரு முன்னேற்றமும் அடையவில்லை, அந்நாட்டு மக்களின் வறு மையையும், படிப்பறிவின்மையையும் நீக்க அவர்கள் யாதொரு முயற்சியும் மேற்கொள்ளவில்லை. இருப்பினும் அந்நாட்டின் தேசிய உணர்வு வளர் வதை அவர்களால் தடுக்க இயலவில்லை . 1908 முதல் 1926-ஆம் ஆண்டு வரையுள்ள காலத்தில் அந்நாட்டின் தேசிய விடுதலைப் போராட்டத்தை மூ இஸ்லாமியர்கள் சங்கம்" முன்னின்று நடத்தியது. பின்னர் டாக்டர் சுகர் னோ இந்தோனேசியத் தேசியக் கட்சியைத் துவக்கி, போராட்டத்தின் தலைமையை ஏற்றதுடன் போராட்டம் மதச் சார்பற்றதாக மாறியது. அச்சமயத்தில் இரண்டாம் உலகப்போர் தோன்றவே இந்தோனேசியாவை ஜப்பான் கைப்பற்றி அங்கு ஒரு போர்க்கால அரசாங்கத்தைத் தோற்று வித்தது. போரின் முடிவில் ஜப்பான் தோல்வியுறவே, போர்க்கால அர சாங்கத்தின் ஒரு அங்கத்தினராகிய டாக்டர் சுகர்னோ இந்தோனேசியா ஒரு சுதந்திர நாடு எனப் பிரகடனம் செய்தார், பல உலகத்தலைவர்களின் வேண்டுக்கோளுக்கிணங்கவும் தேசியவாதிகளின் போராட்டத்திற்குப் பின்னும், இந்தோனேசியா சுதந்திர நாடாக மலர்ந்தது. டாக்டர் சுகர்னோ நாட்டின் தலைவராகவும், டாக்டர் ஹட்டா உதவித் தலைவராகவும் தெரிந்தெடுக்கப்பட்டனர். 1957-ஆம் ஆண்டு சுகர்னோ தன்னுடைய வழிகாட்டப்படும் ஜன நாயகத்தை (guided democracy) அங்கு புகுத்தினார். அடிக்கடி மேற்கொள்ளப்பட்ட கம்யூனிச ஊடுருவல்கள் இந்தோனேசியாவின் அமைதியைக் குலைத்த வண்ணமிருந்தன.1965-ஆம் ஆண்டு கம்யூனிஸ்டுகள் அதிகாரத்தைக் கைப்பற்ற முயற்சிகள் மேற்
கொண்டனர். அத்தருணத்தில் ஜெனரல் சுகர்னோ ஆட்சிக்கு வரவே சுகர்னோவின் புகழ் கொஞ்சம் கொஞ்சமாக மங்கத் தொடங்கியது. டாக்டர் சுகர்னோ 1976 ஆம் ஆண்டு மறைந்தார்.

**உங்கள் முன்னேற்றத்தைச் சரிபார்க்கவும்**
2.சீனா தேசியவாதத்தின் எழுச்சி பற்றி சிறு குறிப்பு வரைக?

## 4.8 உங்கள் முன்னேற்றத்தைச் சோதிக்கும் வினாக்களுக்கான விடைகள்

ஆசிய-ஆப்பிரிக்க நாடுகளிடையே நிலவும் ஒருமைப்பாடும், ஒற்றுமையும் அமெரிக்காவிற்கும் ருஷ்யாவிற்கும் ஒரு பரபரப்பை ஊட்டுவதாக உள்ளன. இந்நாடுகளின் வளர்ச்சிப் பணிகளுக்கு உதவுவதன் மூலம் ருஷ்யாவும், இவற்றைத் தமது அரங்குகளில் ஈர்த்துக் கொள்ள முயன்றே வருகிறது. ஆப்பிரிக்க - ஆசிய நாடுகளின் ஒருமைப்பாடும். ஒற்றுமையும் ஒரு காலத்தில் மேற்கத்திய நாடுகளுக்கும் ருஷ்யவிற்குமிடையேயான நட்புறவிற்கும் கூட வழி வகுக்கலாம். காரணம் ஆசிய - ஆப்பிரிக்க நாடுகளின் ஒற்றுமை - பல்வேறு காரணங்களின் அடிப்படையில் - வல்லரசுகளின் விருப்பங்களுக்கு உகந்ததாக இல்லை.

ஐக்கிய நாட்டுச் சபையின் உறுப்பினர் எண்ணிக்கையில் ஆப்பிரிக்க-ஆசிய நாடுகள் மிகுந்திருப்பது இவ்வல்லரசுகளை ஏற்கனவே உறுத்தத் தொடங்கிவிட்டது.

தூரக்கிழக்குப் பகுதியில் காணப்படும் மிக முக்கியமான நாடுகளில் சீனாவும் ஒன்றாகும். இரண்டாம் உலகப் போரில் நேச நாடுகளுடன் இணைந்து போரிட்டு வெற்றி அடைந்த போதிலும், அங்கு பல உள் நாட்டுப் பிரச்சனைகள் காணப்பட்டன. அத்தருணத்தில் சீனா பிளவுகள் பல நிறைந்த நாடாக இருந்தது. போரில் ஈடுபட்டதன் விளைவாக அதன் பொருளாதார நிலை மிகவும் பாதிக்கப்பட்டிருந்தது.

## 4.9 சுருக்கவுரை

எழுச்சி அலைகள் தோன்றுவதற்கு முன் ஆசிய நாடுகள் உறங்கிக்கிடந்தன. தன் மானமில்லா, சுய நினைவற்ற அடிமைக் கூட்டங்களாக நடமாடிக் கொண்டிருந்தன. ஆனால் 19-ஆம் நூற்றாண்டில் குறிப்பாக 20-ஆம் நூற்றாண்டில். இவர்கள் உயிர் பெற்றெழுந்து, விழிப்புணர்ச்சி மலர்ந்து, சுய நினைவப் பெற்று, நாட்டுரிமையை மீட்டு, தன்னம்பிக்கையுடன் தன்னாட்சி, தன்னிறைவு பாதையில் பயணம் செய்யத் தொடங்கி விட்டனர் ஆகையால் தூங்கியவன் விழித்து எழுந்து நடமாடத் தொடங்கியது போல தூங்கிக் கொண்டிருந்த ஆசிய நாடுகள் விழித்து எழுந்து தன் மானத்துடன் நடமாடும் நூற்றாண்டைதான் ஆசிய எழுச்சி என்கிறோம். குடியேற்றக் கொள்கையை எதிர்க்கும் உணர்ச்சி ஆறுகளால் அமைக்கப்பட்ட ஆசிய ஒருமையுணர்ச்சி, அக்குடியேற்ற பிசாசுக் கூட்டங்கள் மறைந்தவுடன், மீண்டும் பிளவு உணர்ச்சிகளாக மாறிவிட்டது. ஆகையால் இன்று தனித்தனி பாதைகளிலே, தன் மான விழிப்புணர்ச்சிகளுடன், தன்னம் பிக்கையுடன் ஆசிய நாடுகள் ஆசிய ஒற்றுமை உணர்வு எனும் மனப்பான்மையை முழுவதும் விட்டுவிடாமல் பயணம் செய்து கொண்டிருக்கின்றன. எழுச்சியே வளர்ச்சிக்கு காரணம் என நன்கு தெரிந்து கொண்டிருக்கின்றன. ஆனால் பிரிவு மனப்பான்மை பிளவு சூழ்நிலையை உருவாக்கி, முடிவில்லா பிரிவுக்கூடுகளைக்கட்டி வளர்த்து எழுச்சியை வீழ்ச்சியாய் மாற்றி விடும் என்ற வரலாற்றுப் படிப்பினையை இந்நாடுகள் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். இதற்கு எடுத்துக்காட்டாக விளங்குவது தான் இன்று ஆப்கனிஸ்தானில் உள்ள சோவியத் உருசியா ஆக்கிரமிப்பு.

## 4.10 முக்கிய வார்த்தைகள்

ஆசியா தேசியவாதம், ஆப்பிரிக்கத் தேசியவாதம், ஆசியா மற்றும் ஆப்பிரிக்காவில புதிய நாடுகளின் அவசர நிலை, ஆசிய தேசியவாதத்தின் எழுச்சி, சீனா தேசியவாதத்தின் எழுச்சி, ஜப்பான் தேசியவாதத்தின் எழுச்சி, இந்தோனேஷியா தேசியவாதத்தின் எழுச்சி.

## 4.11 சுயமதிப்பீடு வினாக்கள் மற்றும் பயிற்சிகள்

**சுருக்கமான கேள்விப் பதில்கள்**

1. தேசியவாதம் என்றால் என்ன?
2. ஜப்பான் தேசியவாதத்தின் எழுச்சி பற்றி விளக்குக?

**விரிவான கேள்விப் பதில்கள்**

1. ஆசிய தேசியவாதத்தின் எழுச்சி பற்றி குறிப்பிடுக?
2. ஆசியா மற்றும் ஆப்பிரிக்காவில் புதிய நாடுகளின் அவசர நிலையை பற்றி கட்டுரை வரைக குறிப்பிடுக?

## 4.12 மேலும் படிக்க

Brahma Chellaney. (2010). ***Asian Juggernaut: The Rise of China, India, and Japan***. HarperBusiness.

- Elie Kedourie. (1971). ***Nationalism in Asia and Africa.*** Psychology Press.

- Harsh v. Pant. (2010**). *China Ascendant: Its Rise and Implications***, Harper Collins India.
- Leng, Tse-Kang, Aoyama, Rum.( 2018). ***Decoding the Rise of China Taiwanese and Japanese Perspectives.*** Palgrave Macmillan.

# அலகு 5 ஆப்பிரிக்கா மாநிலங்களின் எழுச்சி

5.0 அறிமுகம்
5.1 நோக்கங்கள்
5.2 இந்திய தேசியத்தின் எழுச்சி
5.3 ஆப்பிரிக்கா மாநிலங்களின் எழுச்சி
5.3.1 ஆப்பிரிக்க எழுச்சிக்கான முக்கிய காரணங்கள்
5.3.2 மேற்கத்திய நாடுகளின் எதிர்ப்பு
5.4 காலனித்துவ அமைப்பின் சிதைவு
5.5 நவகாலனித்துவம்
5.6 உங்கள் முன்னேற்றத்தை சோதிக்கும் வினாகக்ள்
5.7 சுருக்கவுரை
5.8 முக்கிய வார்த்தைகள்
5.9 சுய மதிப்பீடு வினாக்கள் மற்றும் பயிற்சிகள்
5.10 மேலும் படிக்க

## 5.0 அறிமுகம்

உலக நாடுகளிலுள்ள மக்கள் சமுதாயம் மற்றும் அரசியலில் புதிய மாற்றங்களைக் கொண்டு வருவதில் தீவிரமாய் இருந்தனர். அவர்களிடையே தீவிரமான நாட்டுப்பற்று காணப்பட்டது. நாட்டின் நலனைப் பேணிப் பாதுகாப்பதில் அவர்கள் மிகுந்த அக்கறை கொண்டிருந்தனர். நாட்டிற்கு புத்துயிர் அளிக்க முயன்ற பொழுது, அவர்கள் பல தடைகளைச் சந்திக்க வேண்டியிருந்தது. அதே தருணத்தில் தங்களுடைய குறிக்கோள்களுக்கும், அவற்றைச் செயல்படுத்தும் பொழுது அவர்கள் கண்ட வெற்றிக்குமிடையே ஏராளமான இடைவெளியிருப்பதையும் அவர்கள் உணர்ந்திருந்தனர். இந்த இடைவெளி பெரும் பாலான காரியங்களில் மனக்கசப்பையும், கவலையையும், ஓர் நிலையற்ற தன்மையினையும், பல முரண்பாடுகளையும் அவர்களிடத்தே தோற்றுவித்தது. இருப்பினும், தாங்கள் எண்ணிய குறிக்கோள்களை அடைவதற்கு அவர்கள் மேற்கொண்ட தீவிர முயற்சிகளும், அவர்களிடையே காணப்பட்ட தளராத மன உறுதியும் பாராட்டப்பட வேண்டிய ஒன்றாகும். ஆசியாவின் சில பகுதிகளைப் பற்றி நாம் இங்கு ஆராய்வோம்.

## 5.1 நோக்கங்கள்

ஆசிய நாடுகளிடையே ஏற்படும் உலக தேசியவாதத்தின் எழுச்சியைப் பற்றியும் காலனித்துவத்தைப் பற்றியும் எடுத்துரைப்பதாக அமையபடபெற்றுள்ளது

## 5.2 இந்திய தேசியத்தின் எழுச்சி

இந்தியாவிலும கம்யூனிசம் பரவுவது தடுக்கப்பட்டது என்பது சர்ச்சைக் குறியது. ஆனால் தென் கிழக்கு ஆசியப்பாதுகாப்பு ஒப்பந்தத்தில் பாகிஸ்தான் சேர்ந்ததன் மூலம் கெடுபிடிப்போரின் மூலம் இங்கும் தேசிய எழுச்சி இந்திய உபகண்டத்தினுள் கொண்டு வரப்பட்டது. பாகிஸ்தான் அவ்வொப்பந்தப்படி பெற்ற படை உதவிகளைக் கொண்டு கம்யூனிசத்தை எதிர்க்கவில்லை மாறாக இந்தியாவிற் கெதிராகப் 1965-ல் போர்தொடுத்தது. முடிந்துபோன காஷ்மீர் பிரச்சினைக்கு உயிரூட்டி அதனை ஐ.நா. சபையில் கிளப்பியது. தங்கள் ஒப்பந்தக் கூட்டாளியான பாகிஸ்தானை அமெரிக்கா அங்கு ஆதரித்தது. இதனால் இந்தியப் பாகிஸ்தான் உறவு சீர்கெட்டது. 1971-ல் பங்களாதேஷ் பிரச்சினை காரணமாக மூண்ட இந்திய பாகிஸ் தான் போரின்போது அமெரிக்கா தனது ராணுவ ஒப்பந்த நாட்டிற்கு உதவிபுரிய விரைந்தது. இச்சமயத்தில் ரஷியா இந்தியாவிற்கு ஆதரவளித்தது.

## 5.3 ஆப்பிரிக்கா மாநிலங்களின் எழுச்சி

ஆப்பிரிக்கா இரண்டு வகைகளில் இன்னும் இருண்ட கண்டமாகவே இருந்து வருகிறது ஆப்பிரிக்க மக்களில் பெரும்பாலோர் நீகிரோவர்களாகவும், கறுப்பர்களாகவும் உள்ளனர். அன்றியும் இக்கண்டம் குறித்து இன்னும் பெரும்பாலோர்க்கு அதிகமாகத் தெரியவில்லை. ‘‘ஆப்பிரிக்காவைப். பற்றிய மிக இருண்ட உண்மை என்னவெனில், அக்கண்டம் பற்றிய நமது அறியாமையே’’. ஆப்பிரிக்காவில் பல அடிப்படை மாறுதல்கள், பல்வேறு அளவுகளில் நிகழ்ந்து வருகின்றன. இத்தகைய மாறுதல்கள் ஆப்பிரிக்கர் வாழ்வைப் பெரிதும் பாதித்துள்ளன. ஜான் குந்தர் (John Gunther) அவர்கள் கூறுமாறு, ஆப்பிரிக்கா வெடித்தெழும் நிலையிலுள்ள பூஞ்சைக் காளான்களின் (Yeast) தொகுப்பினை ஒத்ததாக உள்ளது. இதன் புளிப்புத்தன்மை அரசியல் அல்லது பொருளாதாரக் காரணங்களால் அமையாது, சமுதாய, பண்பாட்டு மற்றும் சமயக் காரணங்களாலேயே அமைகின்றன. இது மாந்திரீக மூடநம்பிக்கையிலிருந்து விடுபட்டு, வளமை மிக்க நாகரீகத்தை நோக்கி எடுத்து வைக்கப்பட்ட ஒருதப்படி (Step) எனலாம். இங்குள்ள இலட்சோப லட்சக்கணக்கான மக்களின் மனப்பாங்கு, திடீரென குழப்பமான தொல்பழங்கால நிலையிலிருந்து நவீன சமுதாயத்தில் காணப். படும் ஆக்கிரமிப்பு நிலைக்கு மாற்றப்பட்டுள்ளது.

சர்வதேசக் கெடுபிடிகளும் சமுதாயச் வழக்குகளும் மிகுந்துள்ள இக்கால கட்டத்தில், ஆப்பிரிக்காவும் தொல்லைகளை மிகுவிக்கும் நிலை.யிலேயே இருப்பது நாம் வருந்தத்தக்க ஒன்றே. இத்தகைய நமது வருத்தத்தில் நியாயமும் உண்டு. தமது பழைய வழிகளிலான வாழ்க்கை முறையிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ள ஆயிரக்கணக்கான ஆப்பிரிக்கர்கள் தமது விதியை நிர்ணயிக்கின்ற புதிய மாறிவரும் சமுதாயத்தில் தமக்குரிய இடத்தினைப் பெறாதிருக்கின்றனர். இருப்பினும் இக்கண்டம் முழுவதும் ஆப்பிரிக்கர்கள் இயங்கிய வண்ணமே உள்ளனர். தாம் எங்கே செல்லுகின்றோம் என்ற திட்டவட்டமான இலக்கின்றியே ஏதோ ஒரு திசையில் இவர்கள் சென்ற வண்ணமே உள்ளனர். நிலையற்ற தன்மை, குழப்பம், உறுதியற்ற தன்மை ஆகிய அனைத்திற்கும் அவர்களிடையே இப்போது முகிழ்த்துள்ள எழுச்சி உணர்வே காரணம் எனலாம். ‘‘பண்டைக் காலத்திற் போல, ஒரு பொது நம் பிக்கையின் அடிப்படையில் இக்கண்டம் முழுதும் இணைந்துள்ளதாகத் தோற்று கிறது. இருப்பினும் அனைவராலும் ஒப்புக்கொள்ளப்பட்ட ஒரு நம்பிக்கையின்மையின் அடிப்படையிலேயே இக் கண்டம் இனணந்துள்ளதாக நமக்கு அடிக்கடி தோன்றும்.(பால்மர் மற்றும் பெர்கின்ஸ்)

**ஆப்பிரிக்காவில் குடியேற்றங்கள் அமைக்கப்படுதல் :**

கடற்கரை ஓரங்களில் குடியேற்றங்களை அமைத்துக் கொண்ட ஐரோப்பியரிடையே 19-ம் நூற்றாண்டின் இறுதியில் ஒரு பெரும் ஆப்பிரிக்க ஆக்கிரமிப்புப் போட்டி“ உருவானது. ஆப்பிரிக்கக் கண்டம் முழுவதையுமே பிரிட்டன், பிரான்சு, பெல்ஜியம், போர்ச்சுக்கல், ஸ்பெயின், ஜெர்மனி போன்ற வல்லரசுகள் தமக்குள் கூறுபோட்டுக் கொண்டன. 1914 ஆம் ஆண்டில் ஆப்பிரிக்கா முழுவதுமே ஐரோப்பியர்களின் குடியேற்றப் பகுதிகளாக மாறின. ஆப்பிரிக்க மக்கள் தொகையில் 40-ல் ஒரு பகுதியினராக இருந்த ஐரோப்பியர் எஞ்சிய பகுதியினராகிய ஆப்பிரிக்கர்களை அடக்கி ஆண்டு கொண்டிருந்தனர்.

குறிப்பு

**ஆப்பிரிக்காவில் தோன்றிய தேசிய எழுச்சிக்கான காரணங்கள் :**

ஆப்பிரிக்க நாடுகளின் மீது மேற்கத்திய பண்பாட்டின் தாக்குதல், கிறிஸ்தவ சமய பரப்பாளர்களின் பணி ஆகியவைகளே தேசிய உணர்வின் தூண்டுகோலாக அமைந்தன. மற்றும் ஏகாதிபத்திய நாடுகளின் சுரண்டல் கொள்கை, வெள்ளையர்களின் இனவெறி, இன ஒதுக்கல் கொள்கை போன்றவைகளின் விளைவாக ஆப்பிரிக்க நாடுகளிடையே தேசிய உணர்வு தளைத்தோங்கியது.

- ஐரோப்பியர்களுடைய வருகையால், கல்வியறிவையும், அறிவு ஒளியையும் பெற்ற ஆப்பிரிக்கர்களிடையே ஐரோப்பியர்களின் விடுதலை உணர்வு தோன்றி வளர்ந்ததில் ஆச்சரியத்திற்கு இடமில்லை.
- தமது தாயகத்தில் குடியேறியதோடு மட்டுமல்லாமல், தமது நாட்டைச் சுரண்டி, ஐரோப்பிய நாடுகள் பெற்றுள்ள மேம்பாடு,ஆப்பிரிக்கர்களை ஆத்திரமடையச் செய்தது.
- 1945-க்கு முன்னர் துபாய்ஸ் என்ற அமெரிக்க நீக்ரோ எழுத்தாளரும், மார்க்ஸ் கார்வே என்ற அமெரிக்க அரசியலறிஞரும் மக்களிடையே உரிமை உணர்வினை தட்டியெழுப்பினர்.
- அந்த உணர்வினால் ஏற்பட்ட விழிப்புணர்ச்சி அந்நியர்கள் தங்கள் நாட்டில் நடத்தும் பெரும் சுரண்டல் மீதும். தாங்கள் அந்நியர்களால் நடத்தப்படும் முறையின் மீதும். இனத் தாழ்ச்சி மற்றும் பாகுபாடு மீதும் அவற்றால் ஏற்பட்ட எடுத்துரைக்க இயலா இன்னல் மீதும் பெரு வெறுப்புக் கொள்ளச் செய்தது. அதுவே ஆப்பிரிக்கர்களை நெருக்கமாக இணையச் செய்தது.
- இரண்டாம் உலகப்போருக்குப் பின்னர் உலக அமைதியைக் காத்திட அமைக்கப்பட ஐ.நா. சாசனத்தில் மனித உரிமைகள் ஆப்பிரிக்கர்களிடையே விடுதலை உரிமை உணர்வினைத் தூண்டியது.
- மேலும் ஆசியக் கண்டத்தில் ஒன்றின் பின் ஒன்றாக ஏகாதிபத்தியங்கள் வீழ்ச்சியடைந்து நாடுகள் விடுதலை பெறுவதைக் கண்ணுற்ற ஆப்பிரிக்கர்களிடையே விடுதலை தாகம் அதிகரித்தது.

**(a)ஆப்பிரிக்கா நாடும், மக்களும் :**

உலகிலுள்ள மிகப்பெரிய கண்டங்களுள் இரண்டாவது இடத்தைப் பெறும் ஆப்பிரிக்கா, உலகின் மொத்த நிலப்பரப்பில் ஐந்தில் ஒரு பங் கினைத் தன்னகத்தே கொண்டுள்ளது. இது அமெரிக்க ஐக்கிய நாடுகளைவிட நான்கு மடங்கு பெரியது, இக்கண்டத்தில் அமைந்துள்ளதும், உலகத்தின் மிகப் பெரியதுமாகிய சஹாரப் பாலைவனம் பரப்பளவில் அமெரிக்க ஐக்கிய நாடுகளுக்குச் சமமானது. இது ஏறத்தாழ ஆப்பிரிக்கக் கண்டத்தின் கிழக்கிலும் மேற்கிலுமுள்ள கடல்களைத் தொடும் மணற்பரப்பாக, ஆப்பிரிக்கக் கண்டத்தைச் சமமில்லாத இரண்டு பகுதிகளாகப் பிரிப்பதாக இருக்கிறது. புவியியல், வரலாறு மற்றும் பண்பாட்டு அடிப்படையில் வட ஆப்பிரிக்கா ஐரோப்பாவுடனும், இஸ்லாமிய சமயத்தின் வழியாக மத்திய கிழக்கு நாடுகளுடனும் சஹாராவிற்குத் தெற்கிலுள்ள தென் ஆப்பிரிக்காவுடனான உறவைவிட மிக நெருக்கம் கொண்டுள்ளது. ஆப்பிரிக்காவின் பெரும்பான்மையான பாகம் பீடபூமியாக, ஏறத்தாழ 2000 அடி உயரம் கொண்டதாக உள்ளது தன் நாட்டின் பல

**குறிப்பு**

நகரங்கள் ஆகாய வழிகளால் இணைக்கப்பட்டிருந்தாலும் நதிகள் பலவற்றால் பிரிக்கப்பட்டிருந்தாலும், கிழக்கிலும், வடகிழக்கிலும் நைல் நதியாலும், தென் கிழக்கில் ஜாம்பஸி நதியாலும் நடுவில் காங்கோ நதியாலும், மேற்கு மத்திய ஆப்பிரிக்காவில் நைஜர் மற்றும் செனேகள் நதிகளாலும் பிரிக்கப்பட்டுள்ள போதும் இன்னும் தனது நிலப்பரப்பில் பெரும்பாலும் அணுக முடியாத நிலையில் உள்ளது. இதன் பதினாறாயிரம் மைல் நீளக்கடற்கரையில் இடை.யிடையே சில துறைமுகங்களே உள்ளன.

ஆப்பிரிக்காவின் மக்கட்தொகை ஏறத்தாழ 22 கோடியாகும். அரசியலடிப்படையில் அல்லாது மக்களின் அடிப்படையில், ஆப்பிரிக்கா நிச்சயமாக ஆப்பிரிக்கர்களுக்கே உடைமையானது. இங்குள்ள மக்களில் ஏறத்தாழ அனைவரும் ஆப்பிரிக்க இனத்தவரே. மனித இன ஆய்வறிஞர்களின் கருத்துப்படி இங்குள்ள மூன்று முக்கிய இனங்கள் ஹேமைட்டுகள் (Hamites), நீகிரோவர்கள் (Negroes) மற்றும் பாண்டுகள் (Pantus) ஆகியவையே. பாண்டு என்னும் சொல் இன அடிப்படையில் அல்லாது மொழியடிப்படையில் தோன்றியது. இச்சொல் ஆப்பிரிக்க மக்களிற் பெரும் பான்மையோரைக் குறிப்பதாக உள்ளது. அம்மக்கள் கறுப்பு நிறத்தவராக சஹாரப் பாலை வனத்திற்குத் தெற்கில் வசித்து வருகின்றனர். இந்தியாவைத் தம் தாய் நாடாகக் கொண்ட சுமார் ஆறு இலட்சம் மக்கள் தென் ஆப்பிரிக்க யூனியனிலும், கிழக்கு ஆப்பிரிக்காவிலும் வாழ்ந்து வருகின்றனர். நம்பத்தக்க கணக்கீட்டின்படி ஏறத்தாழ ஐந்து இலட்சம் ஐரோப்பியர்களே ஆப்பிரிக்காவில் உள்ளனர்.

ஆப்பிரிக்காவின் பெரும்பகுதி பின்தங்கிய நிலையிலும், அம்மக்கள் ஏழ்மையிலும் உழலுகின்றனர். அவர்தம் வாழ்க்கைத் தரம் மிகவும் தாழ்ந்ததாகவும், தனிநபர் வருவாய் மிகக்குறைவானதாகவும் உள்ளன. ஆப்பிரிக்கர்களில் பலர் இன்றும் கூடத் தமது இனத்தலைவர்களின் கீழும், ஐரோப்பிய எஜமானர்களின் கீழும், தமது அறியாமைக்கும், மூடநம் பிக்கைகளுக்கு அடிமைகளாகவே உள்ளனர். கட்டாய வேலை வாங்கும் முறை போர்த்துக்கீசியருக்குச் சொந்தமான ஆப்பிரிக்கப் பகுதியில் இன்றும் கூட நடைமுறையிலுள்ளது. சுரங்கப் பிரதேசங்களிலும் வேறு சில ஒதுக்குப் புறங்களிலும் வாழும் மக்களின் வாழ்க்கை நிலை ஏறத்தாழ அடிமை நிலையையே ஒத்துள்ளது. இக்கண்டத்தின் பல பகுதிகளில் வாழும் மக்களின் ஆயுட்காலம் மிக மிகக் குறைவானதாகவே உள்ளது. நோய்களை எதிர்த்து இம் மக்கள் நிகழ்த்தும் போராட்டங்கள் விவரிக்க வெண்ணாதவை. இப்பணியில் டாக்டர் ஆல்பெர்ட் சுவைட்சர் அவர்கள் ஆற்றியுள்ள தொண்டு அளப்பரியது.

மிகுதியான ஆப்பிரிக்கர்கள் போதிய உணவு, உடை, இருப்பிட வசதியற்று உழன்று வருகின்றனர். தமக்கென எந்த உடைமையையும் பெற்றிலர். பெரும்பான்மையோர் கல்வியறிவற்றவர். இங்கு பேசப்பட்டு வரும் 700க்கும் அதிகமான மொழிகளுள் அம்ஹாரிக், தாமசெக், பாமுன் மற்றும் வை-ஹாட் ஆகிய நான்கு மொழிகளும், அராபிய மொழியுமே ஐரோப்பியர் வருகைக்கு முன் எழுத்து வடிவம் பெற்றவை. பல்வேறு நோய்களாலும் ஆப்பிரிக்கர் அவதியுறுகின்றனர். மலேரியா, தூங்குநோய் குடிநீர் தூய்மையின்மையால் பரப்பப்படும் பில்ஹாரிஸியாஸிஸ் நோய் (ஏறத்தாழ மூன்றிலொரு பங்கினர் இந்நோயால் அவதியுறுகின்றனர்), புழுக்களால் ஏற்படும் நோய்கள், தொழுநோய், சத்துணவுக் குறைவால் ஏற்படும் நோய்கள் ஆகியவற்றால் அல்லலுறுகின்றனர், இவ்வாறு எந்தச் சராசரி ஆப்பிரிக்கரும் ஒரு நோயாளியாகவே உள்ளார்.

குறிப்பு

இம்மக்களிடையே காணப்படும் அரசியல், பொருளாதார நிலையி.லுள்ள வேறுபாடுகளை விட பண்பாடு, சமுதாய வேறுபாடுகள் சற்று ஆழமானவை. பலர் இன்னும் காட்டுமிராண்டித்தனமான வாழ்க்கை நிலையில் நீடித்த போதும் மிகச் சிலர் நவநாகரீக வசதியுடன் வசதிகளுடன் ஆடம்பரமான நகரங்களான அலக்சாண்டியரியா, கசபிளாங்கா ஆகியவற்றில் வாழ்ந்து வருகின்றனர். ஏறத்தாழ ஆறு கோடி மக்கள் முஸ்லிம்கள். இரண்டு கோடியே பத்து இலட்சம் மக்கள் பகன்கள் பலதிறப்பட்ட அரசியலமைப்புக்களின் கூட்டுச் சேர்க்கையாக ஆப்பிரிக்கா அமைந்துள்ளது. இங்கு சுதந்திர நாடுகளும், சுயாட்சி பெற்ற டொமினியன்களும், பகுதியளவில் டொமினியன்களான காப்பு நாடுகளும், குடியேற்றங்களும், தர்மகர்த்தா ஆட்சிமுறை நாடுகளும், அரசியல் அந்தஸ்து இன்னும் குழப்பமான நிலையிலுள்ள பகுதிகளும், இன்னும் நிலமானிய அடிப்படையிலும், பழங்குடியினர் மரபிலும் இயங்கிவரும் பெரு நிலப்பரப்புக்களும் உள்ளன.

பல்வேறு வளங்களைப் பொறுத்த அளவில் ஆப்பிரிக்கா இன்னும் ஒரு பற்றாக்குறை நாடாகவே உள்ளது. குறிப்பாக எண்ணெய், நீர் ஆகியவை பற்றாக்குறையாக உள்ளன. இருப்பினும் இக்கண்டத்தில் வேறுபல வளங்கள் மிகுதியாகவே உள்ளன. நீர் மின்சக்தியே பல்வேறு முக்கிய பணிகளுக்குமான அத்தியாவசியச் சக்தியாக உள்ளது. இருப்பினும் அனைத்து நீர் மின்சக்தி வாய்ப்புக்களும் பயன்படுத்தப்படுகின்றன என்று சொல்வதற்கில்லை. சுமார் 15 கோடி குதிரை விசை அளவு மின்சக்தியைக் காங்கோ நதி மட்டுமே அளிக்க வல்லது. உலக உற்பத்தியில் 98%வைரமும், 80% கோபால்ட்டும், 75%சிசலும், 70% பனை எண்ணையும், 50மூ தங்கமும், 25% மாங்கனீசும், 20% செம்பும் தகரமும் இங்கு கிடைக்கின்றன. இவை தவிர கணிசமான அளவு யுரேனியம் காங்கோ மற்றும் தென் ஆப்பிரிக்கப் பகுதிகளில் கிடைக்கிறது ஆப்பிரிக்காவில் அனைத்து உலகிற்கும் பல் லாண்டுகளுக்கு விநியோகிக்கத்தக்க அளவில் இரும்புத் தாதுவும் கிடைக்கிறது.

ஆப்பிரிக்காவின் மூன்றிலொரு பங்கு நிலப்பரட்பு வெப்ப மண்டலக் காடுகளாலானது இக்காடுகளில் உறுதியான மஹோகனி, எண்ணெய் வளமிக்க பனை போன்ற மரங்கள் மிகுதியாகவுள்ளன. வறண்ட காட்டுப் பகுதிகளில் தொழிற்சாலைகளுக்குப் பயன்படும் பசைப் பொருட்கள் ஆகியவை கிடைக்கின்றன. புல் நிலங்கள் மிகுந்துள்ள புதர் பகுதிகளின் பொருளாதார மதிப்பு குறைவானதே. இருப்பினும் இங்கு தான் ஆறு கோடிக்கும் அதிகமான கால் நடைகள் - செம்மறியாடுகள், ஆடுகள், ஒட்டகங்கள் ஆகியவை வளர்க்கப்படுகின்றன. அன்றியும் சோளம் போன்ற தானிய வகைகளும் விளைகின்றன. ஆப்பிரிக்காவிலிருந்து கிடைக்கும் கச்சாப் பொருட்களின் வரத்து இல்லாவிட்டால் மேற்கு ஐரோப்பிய நாடுகளின் நிலை மிக மோசமாக இருக்கும். ஜான்குந்தர் அவர்கள் கூறுமாறு, ‘‘ஏற்கனவே கிடைத்து வரும் பல்வேறு பொருட்களுக்காக மட்டுமின்றி, மேம்படுத்தப்பட வேண்டிய பல் வேறு வளங்களும் மண்ட்டிக்கிடக்கின்ற ஆப்பிரிக்கா மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததே

**(b)உலகோர் அறியும் வகையில் ஆப்பிரிக்கா :**

தொன்மை மிக்க மனித இனங்கள் சிலவற்றின் தோற்றுவாயாக இருந்தபோதும், ஆப்பிரிக்காவின் கடந்த காலம் பற்றி மிகக் குறைவாசுவே உலகார் அறிந்துள்ளனர். அண்மையில் ‘‘உகாந்தா, கென்யா, டிரான் சுவால் ஆகிய இடங்களில் கண்டெடுக்கப்பட்டுள்ள பொருட்கள், மனித இனத்தின் பிறப்பிடம்- ஆசியா அல்ல-ஆப்பிரிக்காவே என்பதை வலுப்படுத்தியுள்ளன‘‘.

குறிப்பு

பண்டைக் காலந்தொட்டு நாகரீக மக்களுடன் தொடர்பு கொண்டிருந்த ஆப்பிரிக்க பகுதி, சஹாராவின் வடபுற நிலப்பரப்பேயாகும் நைல்நதிப் பள்ளத்தாக்கு ஐயாயிரம் ஆண்டுகட்கு முற்பட்ட தொன்மைமிகு நாகரீகத்தின் பிறப்பிடமாகும். இதற்கடுத்ததாக மூவாயிரம் ஆண்டுகட்கு முற்பட்ட நாகரீக வளர்ச்சியைப் பெற்ற ஆப்பிரிக்கப் பகுதி எதியோப்பியாவாகும்.

கி.பி. ஏழாம் நூற்றாண்டிற்கும் பதினொன்றாம் நூற்றாண்டிற்கும் இடைப்பட்ட காலத்தில் வட ஆப்பிரிக்காவில் அரேபியர்களால் இஸ்லாம் மதம் அறிமுகப்படுத்தப்பட்டது. அங்கிருந்து முகமதியர் தெற்கு ஐரோப்பிய நாடுகளின் மீது படையெடுத்தனர். அவர்களை கி.பி. 15ஆம் நூற்றாண்டு வரை ஐரோப்பாவிலிருந்து வெளியேற்ற முடியவில்லை. இவர்கள் ஐரோப்பாவிலிருந்து வெளியேற்றப்பட்ட காலகட்டத்தையொட்டி கி.பி. 1448 இல் பர்த்லோமியோ டயஸ் நன்னம்பிக்கை முனையைச் சுற்றியும், கி.பி. 1498 இல் வாஸ் கோ-ட- காமா நன்னம்பிக்கை முனை வழியாக இந்தியாவிற்குக் கடல் வழியையும் கண்டுபிடித்தனர். இதனைத் தொடர்ந்து முதலில் வட ஆப்பிரிக்கப் பகுதிகளோடு மட்டுமே அமைந்துவிட்ட ஐரோப்பியரின் தொடர்புகள், ஆப்பிரிக்காவின் பிறபகுதிகளுக்கும் விரைவாகப் பரவ ஆரம்பித்தன. இம் முயற்சிகளும் கூட ஆரம்ப காலத்தில் ஆப்பிரிக்க கரையோரப் பகுதிகளிலேயே மிகுந்து நின்றன. பின்னர் 17- ஆம் நூற்றாண்டில் இக்கால போயர்கள், ஆப்பிரிக்கானர்கள் ஆகியோரின் மூதாதையராகக் கருதப்படும் டச்சுக்காரர்களால் கேப் குடியேற்றம் ஏற்படுத்தப்பட்டது.

### (c) மக்களை இணைக்கும் கூறான தேசீய உணர்வு :

புவியியலடிட்படையில் ஒன்றுபட்டிருந்தாலும், அரசியல் பண்பாட்டு அடிப்படையில் ஆப்பிரிக்காவில் ஒருமைப்பாடு இல்லை என்றே கூறலாம். தன்னிடையேயுள் பல் வேறு வேறுபாடுகளிலிருந்து ஆப்பிரிக்கா அரசிய.லடிப்படையில் ஒரே அமைப்பாக முகிழ்த்து வருகிறது் ஒரு ஆப்பிரிக்க ஆளுமை எழுகிறது முதல் உலகப்போரின் முடிவில் ஆசியாவில் தோன்றியதுபோல, இரண்டாம் உலகப் போரின் முடிவில் ஆப்பிரிக்காவில் இத்தகைய ஒரு தேசீய விழிப்பு ஏற்பட்டுள்ளது. கல்விப் பெருக்கத்தாலும், அறிவு வளர்ச்சியாலும் ஆப்பிரிக்காவின் தேசிய உணா்வு மிக உன்னதமான நிலையை எட்டியுள்ளது. இத்தேசீய உணர்வை தடுத்து நிறுத்திவிட முடியாது என்பதே உண்மையாகும் ஆனால் ஆப்பிரிக்காவின் மிகுதியான நிலப்பரப்பினர் இவ்வுணர்வினை - அதாவது தன்னாட்சி உணர்வை வளர்த்துக் கொள்ள இன்னும் ஆயத்தமாக வில்லை. ஆப்பிரிக்காவிலுள்ள அனைத்துக் குழப்பங்களுக்கும் சிகரமாக இருப்பது இக்குழப்பமே.

### (d) குடியேற்றவாதிகளது அதிகாரத்தின் மீதுகொண்ட வெறுப்பு : (புரட்சிகரமான தூண்டுதல் )

குடியேற்றவாதிகளின் கடைசிப்பிடிப்பாகத் திகழ்வது ஆப்பிரிக்கா ஆனால் இந்தப் பிடிப்பும் கூட பல நிலைகளில் தளர்ந்தே உள்ளது. எனவே குடியேற்ற அமைப்பினை ஆதரிப்போர், அப் முறையை எதிர்ப்போரின் வெறுப்பிற்குள்ளாகின்றனர். இன்றுள்ள பன நிலையில், குடியேற்ற அமைப்பு குறித்து நல்லபடியாகக் கூறும் ஆப்பிரிக்கர்கள் எண்ணிக்கை மிக மிகக் குறைவே. ஆனால் இக்குடியேற்றமுறை ‘இருண்ட கண்டமாகிய“ ஆப்பிரிக்காவிற்குப் பல நன்மைகளை விளைத்துள்ளது. அன்றியும் ஆப்பிரிக்கர்கள் தாம் விடுதலை பெற்ற பின்னரே எய்தத்தக்க கல்வி,

குறிப்பு

சமுதாய, பொருளாதார, அரசியல் முன் னேற்றங்கள் பல வற்றைக் குடியேற்றவாதிகள் தமது ஆட்சிக் காலத்திலேயே அங்கு விளைத்துள்ளனர். ''குடியேற்ற நாட்டு ஆதிக்கம் என்பது, தேவையான ஆனால் பயங்கரமான ஒரு சூறாவளியாக அமைந்து, புதிய அமைப்பிற்கு ஆயத்தப்படுத்தும் வகையில் பழையனவற்றை வழித்து எடுத்துச் செல்லுவதாயிற்று''. இது புதிய ஒரு அமைப்பினை உருவாக்குவதற்கு அவசியமான ஒரு புரட்சிகரமான தூண்டுதலை, அளித்தது. "குடியேற்ற நாடுகளின் அமைப் பிற்கு அறவழியிலும், பொருளியல் வழி பிலும் நியாயம் கற்பிக்கும் ஒரே ஏது வாக இந்தப் புரட்சிகரமான தூண்டுதலே நின்றது (பால்மர் மற்றும் பெர்கின்ஸ்) '

இரண்டாம் உலகப் போரில் ஆப்பிரிக்கர் ஆற்றிய பெருந்தொண்டும், மேற்கத்திய வல்லாசுகளிடையே ஏற்பட்ட பிளவும், ஆப்பிரிக்கரைப் பிறரது சுரண்டலினின்றும், விடுதலைப்பாதைக்கு ஈர்த்துச் சென்றது. இவற்றுடன் சமுதாய முற்போக்கு நிலை அரசியல் சக்தி, ஆப்பிரிக்காவில் வாழும் அந்நிய நாட்டுச் சிறுபான்மையோர் எய்தியுள்ள பொருளாதார மேம்பாடு ஆகியவை, கல்வியறிவற்ற பெரும்பான்மையான ஆப்பிரிக்கர்களை வெறுப்புறச் செய்தன. எனவே இன்னோரன்ன காரணங்களால் எழுச்சியுற்ற ஆப்பிரிக்கர் கள், இரண்டாம் உலகப் போரின் பின் அந்நியர் பிடியிலிருந்து தம்மை விடுவித்துக்கொள்ள ஆர்வம் கொண்டனர்.

**(e)ஐரோப்பியர் வருகைக்கு முந்தைய நிலை :**

இரண்டாம் உலகப் போரின் பின் ஏற்பட்ட தேசீயம் அந்நியர் எதிர்ப்பு ஆகிய உணர்வுகள், ஆப்பிரிக்காவில் ஐரோப்பியர் வருகைக்கு முந்தைய காலத்தை பொற்காலமாகவும் ஐரோப்பியர் மேலாதிக்கக் காலத்தை இருண்ட காலமாகவும் சித்தரிப்பதில் முடிந்தது. இக்காலத்தும் நில விவரும் ஆப்பிரிக்கர் பண்பாடும் சமுதாய முறைகளுமே உயர்ந்தவை என்பதை உறுதிப்படுத்த விழையும் ஆப்பிரிக்கரின் எண்ண ஓட்டத்தின் எதிரொலியாகவே இவை அமைந்தன. ஆனால் இவ்வெண்ணம் சற்று மிகையானதாகவே நாம் கொள்ளலாம். இவ்வெண்ணம் பழமையில் ஆப் பிரிக்கரின் நிலையிற்கண்ட குறைகளையும், அண்மைக்காலத்து ஆப்பிரிக்கர் வளர்ச்சிக்கேற்ற தேவைகளையும் சரிவரக் கணிக்க வகை செய்யவில்லை.

**(f)நிறவேற்றுமை :**

எல்லா வகைகளிலும் ஆழ்ந்து கவனித்தால், இக்கண்டத்தில் காணப் படும் மிக முக்கியமான சிக்கல் இனத்தைப் பற்றியதே. இது பூர்வீக மக்களான கறுப்பு ஆப்பிரிக்கர்களுக்கும், அவர்களை அடக்கி ஆள முற்பட்ட ஐரோப்பிய வெள்ளையருக்குமிடையே நிலவி வரும் உறவுகளைப் பொறுத். தது. பல நூற்றாண்டு காலயாக அந்நிய நாட்டினருடன் கொண்ட உறவின் வழி பெற்ற அனுபவங்கள், ஆப்பிரிக்கருக்கு அவர்களின் மீது நம்பிக்கையின்மையையும், வெறுப்பையும், பழிவாங்கும் உணர்வையும் பெருக்கிற்று. தென் ஆப்பிரிக்காவில் நிகழ்ந்துவரும் அண்மைக்கால நிகழ்ச்சிகள இவ்வுணர்வை வலுப்படுத்து வனவாகவே உள்ளன. இந்நிகழ்ச்சிகள் ஆப்பிரிக்கர், வெள்ளையரிடையே அமைதி வழியான "சகவாழ்வு" உணர்வு வளர்வதையோ அன்றி ஆப்பிரிக்காவின் பல் வேறு சிக்கல்களைத் தீர்ப்பதற்கான சர்வதேச ஒத்துழைப்பை ஈர்ப்பதிலோ தடைக்கற்களாகவே உள்ளன. மற்ற எல்லாச் சிக்கல்களையும் விட நிறவேற்றுமையே ஆப்பிரிக்கரின் அதிருப்திக்கான அடிப்படைக்காரணம் எனலாம். ஆப்பிரிக்கரிடையே தாழ்வு மனப்பான்மையை வளர்ப்பதும், இதன் அடிப்படையில் வெடித்தெழும் கிளர்ச்சிகளுக்கு ஆதாரமாக இருப்பதுவும்

குறிப்பு

ஆகும். வெள்ளையர் கறுப்பர் ஆகிய இருவரிடையேயும் வெறுப்பினைப் பெருக்குவது இந்நிற வேற்றுமையே.

**(g)பண்பாட்டுப் பிணக்குகள் : -**

விரைவான மாறுதல்கள், பண்பாட்டுப் பிணக்குகள் பழைய அமைப்புக்களுடனான மோதுதல்கள், மாறுபட்ட பண்பாடுகள் கொண்ட பல்வேறு இன மக்களின் வழக்காறுகளில் நிலவிவரும் மாறுதல்கள் ஆகியவை தற்போதைய சமுதாயச் சூழ்நிலையைக் குழப்புவனவாக உள்ளன. மேற்கத்தியர் ஆப்பிரிக்காவில் குடியேறியமையால் ஏற்பட்ட மிக அடிப்படையான விளைவு, ஆப்பிரிக்காவில் ஒரு புதிய அமைப்பு உருவானதும் சமுதாயக் கட்டுக் கோப்புகளைச் சீர்குலைத்ததுமே ஆகும். ஆப்பிரிக்கப் பழங்குடியினர் வாழ்க்கைமுறை நவீன நாகரீக வாழ்க்கையோடு இயைந்ததல்ல. அறியாமை, மூடநம்பிக்கைகள், தனித்தன்மை மழுக்கப்படுதல், பழமையில் தீவிர நம்பிக்கை இயற்கை வளங்களைச் சரிவரப் பயன்படுத்தாமை, சத்தில்லா உணவு, சிதைந்த உடல் நலம், ஆன்மீக உணர்வின்மை ஆகிய சழக்குகள் அவர்களிடையே மண்டிக் கிடக்கின்றன.

பழங்குடி வாழ்க்கை முறை இன்றும் ஆப்பிரிக்காவின் பல பகுதிகளில் நிலவி வருகிறது. வெளிப்படையாகவோ அன்றி மறைமுகமாகவோ அதன் செல்வாக்கு இன்னும் காணப்படுகிறது. பொருளியலடிப்படையில் மிகவும் மூன்னேறியுள்ள சில பகுதிகளில் வாழும் ஆப்பிரிக்கர்கள் கூட, தமது பண்டைய வாழ்க்கை முறைகளுக்கு முரணாக இருக்கின்ற காரணத்தால், அவற்றை ஒதுக்கி, இன்னும் தமது பழங்குடி வாழ்க்கை முறைகளையே பின்பற்றி வருகின்றனர். ஆனால் கிராமப் புறங்களிற்கூட பழங்குடி வாழ்க்கை முறை நசிந்துவிட்ட நிலையிலேயே இருக்கிறது. நகர்ப்புறங்களில் அது முரண்பட்ட நிலையிலே உள்ளது. எதனாலும் இதை முழுமையாகக் காத்திட இயலாது.

நகரச் சீர்திருத்தம், தொழில் மயமாக்கல் ஆகியவற்றால் விளைந்துள்ள முன்னேற்றங்கள் ஆப்பிரிக்காவிற்குப் புதுப் பொலிவைச் சேர்த்துள்ளன. ஆப்பிரிக்கா முழுவதிலும் மக்கள் இடம் விட்டு இடம் பெயர்ந்து வருகின்றனர். இது கிராமப்புறங்களில் தொடங்கி, நகரங்களில் பரவி, மாநகரங்களில் செழித்து நிற்கிறது. இது வெறும் எண்ணிக்கை அடிப்படையிலான மாறுதல்களை மட்டும் குறிப்பதாக நில்லாது, சமுதாய உறவுகளிலேயே மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளது“ “காலவோட்டத்தில் இந்நகரச் சீர்திருத்தங்கள் பொதுவாக நற்பயனையே விளைக்கும். ‘‘நகாங்களாகிய வாயிலின் வழியே ஆப்பிரிக்க நவீன உலகிற்குள் அடியெடுத்து வைக்கிறது’’. ஆனால் ஆரம்பகாலத்தில் நகரசீர்திருத்தம் தொழில்மயமாக்கல் ஆகிய முயற்சிகளின் விளைவுகள் பிற நாடுகளிற்போல, தீய பயனுடையவையாகவே இருந்தன. சமுதாயக் குழப்பங்கள், வலுவற்ற நிலை, மக்கட்பெருக்கம் மிகுந்துள்ள புதிய நகர் மையங்களில் பொதுவாகக் காணப்படும் இதர தீமைகள் ஆகியவற்றில் இதன் எதிரொலிப்பைக் காணலாம்.

**(h)அடிமை வாணிகம் :**

கி. பி. 1562 முதல் 18-ஆம் நூற்றாண்டின் ஆரம்ப காலம் வரை ஏறத்தாழ 250 ஆண்டு காலமாக ஆப்பிரிக்க வரலாற்றிற்குக் களங்கம் சேர்க்கும் கூறாக அடிமை முறை இருந்து வந்தது. உளவியல் மற்றிதர அடிப்படையில் இவ்வடிமை முறை பின் முக்கியத்துவத்தைக் குறைத்து மதிப்பிடவியலாது, அடிமை வாணிப முறை ஆப்பிரிக்க வாழ்வைப் பிடித்த

*Self-Instructional Material*

குறிப்பு

ஒரு நோயாக நீடித்தது. பல நூற்றாண்டுகளாக உரம் கொண்ட ஆப்பிரிக்கர்கள் அடிமைகளாகப் பிடிக்கப்பட்டு அராபியர்களால் மத்திய கிழக்கு நாடுகளுக்கும், ஐரோப்பியர்களால் மேற்கிந்திய, தென் அமெரிக்க மற்றும் அமெரிக்க ஐக்கிய நாடுகளுக்கும் அனுப்பப்பட்டு வந்தனர். இம்முறை நீடித்ததற்கான சமாதானம் கூறுவோரும் இருந்தனர். அவர்கள் கூற்றுப்படி காட்டு மிராண்டிகளால் கொல்லபட்டு உண்ணப்படுவதை விட அடிமைகளாக நாடு கடத்தப்படுவது மேலானதே. உள்நாட்டளவிலான அடிமைமுறை 19-ஆம் நூற்றண்டுவரை நீடித்தே வந்தது.

**மேற்கத்திய நாடுகளின் எதிர்ப்பு:**

ஆப்பிரிக்கர்களின் எதிர்ப்பினை சமாளிக்கும் வகையில் குடியாதிக்க நாடுகள் மூன்று வழிகளைப் பின்பற்றின. குடியேற்ற நாடுகளுக்குப் படிப்படியாக விடுதலை அளித்தல் முதல்வழி, கோல்டுகோஸ்ட் (இக்கால கானா) சூடான் மற்றும் நைஜீயா ஆகிய நாடுகளைப் பொறுத்த அளவில் பிரிட்டன் இவ்வழியையே பின்பற்றியது ஆப்பிரிக்கரின் விடுதலை வேட்கையை நசுக்கி நொறுக்குதல் என்பது இரண்டாவது வழி. வெள்ளையருக்கும், அவர்களல்லாத இதரர்க்கும் இடையே ஏற்படும் மோதுதல்கள் இந்த அடிப்படையிலானவையே. இந்த இனவெறிக் கொள்கை தென் ஆப்னிக்காவின் ரொடீஷிய அரசால் உருவாக்கப்பட்டு மிகக்சமீப காலம் வரை செயலாக்கப்பட்டது. ஆப்பிரிக்க மக்களையும், ஆளும் ஆதிக்க வர்க்கத்தினருக்கு ஒப்ப வாழ்க்கை நிலையை, சமுதாய சமத்துவத்தை எய்த உதவுதல். இவ்வழியை பிரான்சு நாடு பின்பற்றி வருகிறது.

**(a)பிரிட்டிஷ் ஆப்பிரிக்கா :**

‘‘ஆப்பிரிக்கக் குடியேற்ற நாடுகளை காமன் வெல்திற்குள்ளான பொறுப்புடன் கூடிய தன்னாட்சி முறைக்கு உருவாக்கிக்கொள்ள உதவுவதே ஆப்பிரிக்காவைப் பொறுத்த அளவில் ஆங்கில அரசு பின்பற்றி வரும் அதிகாரப் பூர்வமான கொள்கையாகும். வேறெந்தக் குடியேற்ற நாடும் இவ்வளவு தெளிவாகவும், வெளிப்படையாகவும் தமது குடியாதிக்கக் கொள்கைகளை வெளிப்படுத்தவோ அன்றி செயல்படுத்தவோ இல்லை. ஆனால் ஆங்கிலேயர்கள் இவ்வாக்குறுதி குறித்துத் தமக்குள் பல்வேறு குழப்பங்களும், கருத்து வேறுபாடுகளும், முரண்பாடுகளும் கொண்டவராக உள்ளனர். இக் குழப்பங்கள் குடியேற்ற நாடுகளிடையேயும் காணப்படுகின்றன. ஆங்கில அரசின் கொள்கைக்கும், செயலாக்கத்திற்குமிடையே பெரும் வேற்றுமைகள் மலிந்து நிற்க அவர்கள் காணுகின்றனர்.

**(b)பிரெஞ்சு ஆப்பிரிக்கா :**

நீண்ட காலமாக காலனி என்னும் சொல்லை பிரெஞ்சு மக்கள் ஆண்டு வருகின்றனர் குடியேற்ற நாடுகளைப் பொறுத்த அளவில் பிரான்சு பின்பற்றி வரும் நெறியை நாம் “தன் மயப்படுத்துதல் என்ற ஒரே சொல்லில் அடக்கலாம். 1944-இல் நடைபெற்ற ஒரு மாநாட்டில்“தன்மயமாக்கல் என்ற கொள்கைக்குப் பதிலாக பிளவுபடாத ஒரே பிரான்சு நாட்டில் “மிக நெருக்கமான தொடர்பு என்னும் வழியைப் பின்பற்ற முடிவு செய்யப்பட்டது. இக்கொள்கையின் வழி குடியாதிக்க நாடுகளைக் கூடுமானவரை மைய அரசின் பிடிப்பில் வைத்திருக்க முடியும். மிக அண்மைக் காலம் வரை பிரெஞ்சு அரசு குடியேற்ற மக்கட்குத் தன்னாட்சி வழங்கும் கருத்தினை ஏற்றுக் கொள்ளவில்லை. மாறாக சில நாட்டவர்கட்கு அவர்கள்

கண்ணோட்டத்தில் மிக அதிகச் சலுகையாகக் கருதப்பட்ட-பிரெஞ்சுக் குடியுரிமை வழங்கப்பட்டது.

**(c)பெல்ஜிய ஆப்பிரிக்கா :**

தனது குடியாதிக்க நாடுகளில் ஒளிவிழுமிய மற்றும் திறமையான பேணுதற் கொள்கையைப் பின்பற்றி வந்த பெல்ஜியம் , அந்நாடுகளுக்கு அரசியல் மற்றும் சமுதாய உரிமைகளை வழங்க முற்றிலும் மறுத்தது. மக்கட்குச் சேவை செய்தற் பொருட்டு அவர்களை ஆளுதல்" என்னும் அவர் தம் கொள்கை காங்கோவைப் பொறுத்த அளவில் கடுந்துன்பமாகவே முடிந்தது.

**(d)போர்த்துக்கீசிய ஆப்பிரிக்கா :**

போர்த்துக்கீசியரின் உடைமையாக இருந்த அங்கோலா, மொஸாம் பிக் போன்ற பெரிய நாடுகளிலும், போர்த்துக்கீசிய கயானா போன்ற சிறிய நாடுகளிலும், பின்பற்றப்பட்ட குடியாதிக்கக் கொள்கை மிக மிகப் பிற்போக்கானது. கட்டாய் வேலைமுறை மிகப் பரந்த அளவில் நீடித்திருந்தது. மையப்படுத்தப்பட்ட நடுவண் அரசால் குடியேற்ற நாடுகளின் நிர்வாகம் நடத்தப்பட்டு வந்தது. இவ்வமைப்பில் மிகமுக்கிய முடிவுகள் எல்லாம் லிஸ் பனிலேயே எடுக்கப்பட்டன. ஆனால் இந்நாடுகளில் இனவெறி இல்லா திருந்தது.

**(e)ஸ்பானிய ஆப்பிரிக்கா:**

1956 வரை ஸ்பெயினுக்குச் சொந்தமான ஆப்பிரிக்கக் குடியேற்ற நாடு ஸ்பானிய மொராக்கோ, இந்நாடு இராணுவத் தளபதிகளால் ஆளப்பட்டு வந்தது. இப்போது வடக்கில் மிகக் குறுகிய பகுதிகளை ஸ்பெயின் வைத்துக் கொண்டுள்ளது. மிகக் குறுகிய பகுதிகளை ஸ்பெயின் வைத்துக் கொண்டுள்ளது.

**உங்கள் முன்னேற்றத்தைச் சரிபார்க்கவும்**

1. ஆப்பிரிக்க நாடுகளின் மேற்கத்திய தொடர்புகளைப் பற்றியக் கருத்துகளை குறிப்பிடுக?
2. அடிமை வாணிகத்தைப் பற்றி விவரிக்கவும்?

## 5.5 காலனித்துவம்

**காலனி ஆதிக்க முறையும் குடியேற்றக் கோட்பாடு**

வெள்ளையரின் கட்டுப்பாடு (White Man's Burden) என்ற கருத்தை எடுத்தியம்பி தற்கால ஆதிக்க ஆட்சி முறையையும் குடியேற்றக் கோட்பாட்டையும் சிலர் ஆதரிக்கின்றனர். பின்தங்கிய நாடுகளை முன் னேற்றுவது வளம் பெற்ற நாடுகளின் கடமை என்று இவர்கள் கூறுகின்றனர். இவ்வாறு மேற்கத்திய நாடுகள் பின்தங்கிய நாடுகளைப் பண்பாடுடையதாய் மாற்றவும், அந்நாட்டு மக்களைக் கிறிஸ்தவர்களாக மதமாற்றம் செய்யவும், அவர்களுக்கு தொழிலின் மதிப்பைக் கற்றுக் கொடுக்கவும், சட்டம், ஒழுங்கு ஆகிய கோட்பாட்டின் சிறப்பினை அம்மக்களுக்கு உணர்த்தவும், ஆதிக்க ஆட்சிமுறை மற்றும் குடியேற்றக் கோட்பாடுகளைக் கடைப்பிடித்தனர். இக்கோட்பாட்டினை ஆதரிப்பவர்கள் சுதந்திர அரசுகள் தோன்றியமைக்கும், 20ம் நூற்றாண்டின் ஆசிய மற்றும் ஆப்பிரிக்க நாடுகளின் எழுச்சிக்கும் முன்விளைவாக இக்கோட்பாட்டினை எடுத்தியம்பு கின்றனர். பேரரசு நிறுவும் போராட்டத்தில் ஈடுபட்டோர் மேலும் மேலும் பெரிய பேரரசுகளை உருவாக்க வேண்டும் என்ற ஆர்வத்தினால் இக்கோட் பாட்டினைப் பின்பற்றினர் என்று

குறிப்பு

இக்கோட்பாட்டை எதிர்த்த விமரிசகர்கள் பறைசாற்றினர் எவ்வாறெனினும் ஆதிக்க ஆட்சிமுறையும், குடியேற்றக் கோட்பாடும் தேசீயக் கொள்கையை நிறைவேற்றும் வழிமுறையாக பல்லாண்டு காலம் உலகில் ஆப்பிரிக்க நாடுகளின் மீது மேற்கத்திய பண்பாட்டின் தாக்குதல், கிறிஸ்தவ சமய பரப்பாளர்களின் பணி ஆகியவைகளே தேசிய உணர்வின் தூண்டுகோலாக அமைந்தன. மற்றும் ஏகாதிபத்திய நாடுகளின் சுரண்டல் கொள்கை, வெள்ளையர்களின் இனவெறி, இன ஒதுக்கல் கொள்கை போன்றவைகளின் விளைவாக ஆப்பிரிக்க நாடுகளிடையே தேசிய உணர்வு தளைத்தோங்கியது.

- ஐரோப்பியர்களுடைய வருகையால், கல்வியறிவையும், அறிவு ஒளியையும் பெற்ற ஆப்பிரிக்கர்களிடையே ஐரோப்பியர்களின் விடுதலை உணர்வு தோன்றி வளர்ந்ததில் ஆச்சரியத்திற்கு இடமில்லை.
- தமது தாயகத்தில் குடியேறியதோடு மட்டுமல்லாமல், தமது நாட்டைச் சுரண்டி, ஐரோப்பிய நாடுகள் பெற்றுள்ள மேம்பாடு,ஆப்பிரிக்கர்களை ஆத்திரமடையச் செய்தது.
- 1945-க்கு முன்னர் துபாய்ஸ் என்ற அமெரிக்க நீக்ரோ எழுத்தாளரும், மார்க்ஸ் கார்வே என்ற அமெரிக்க அரசியலறிஞரும் மக்களிடையே உரிமை உணர்வினை தட்டியெழுப்பினர்.
- அந்த உணர்வினால் ஏற்பட்ட விழிப்புணர்ச்சி அந்நியர்கள் தங்கள் நாட்டில் நடத்தும் பெரும் சுரண்டல் மீதும். தாங்கள் அந்நியர்களால் நடத்தப்படும் முறையின் மீதும். இனத் தாழ்ச்சி மற்றும் பாகுபாடு மீதும் அவற்றால் ஏற்பட்ட எடுத்துரைக்க இயலா இன்னல் மீதும் பெரு வெறுப்புக் கொள்ளச் செய்தது. அதுவே ஆப்பிரிக்கர்களை நெருக்கமாக இணையச் செய்தது.
- இரண்டாம் உலகப்போருக்குப் பின்னர் உலக அமைதியைக் காத்திட அமைக்கப்பட ஐ.நா. சாசனத்தில் மனித உரிமைகள் ஆப்பிரிக்கர்களிடையே விடுதலை உரிமை உணர்வினைத் தூண்டியது.
- மேலும் ஆசியக் கண்டத்தில் ஒன்றின் பின் ஒன்றாக ஏகாதிபத்தியங்கள் வீழ்ச்சியடைந்து நாடுகள் விடுதலை பெறுவதைக் கண்ணுற்ற ஆப்பிரிக்கர்களிடையே விடுதலை தாகம் அதிகரித்தது.

**காலனி ஆதிக்க முறையின் வீழ்ச்சி-1**
**ஆசியாவின் உதயம்**

இரண்டாம் உலகப்போருக்குப்பின் ஆசியா கண்டம் பல மாறுதல்களைக் கொண்டுள்ளது. அப்போரின் பயனாக அதன் பல பகுதிகளில், அதிகார முறைகளில் பல மாற்றங்கள் தோன்றின. இது தவிர போரின் விளைவாக ஆசியா வேறு பல மாறுதல்களையும் கண்டது. இம்மாற்றங்களின் காரணமாக இக்கண்டம் உலக அரசியலில் ஒரு முக்கிய இடத்தைப் பெற்றுள்ளது. ஆசியாக் கண்டத்தின் பல பகுதிகளிலும் சமுதாய மற்றும் அரசியல் புரட்சிகள் தோன்றின. அந்நாடுகளின் முன்னேற்றத்திற்குத் தடையாய் இருந்த விலங்குகள் உடைத்தெறியப்பட்டன. ஏகாதிபத்திய அரசாங்கங்கள் விரட்டியடிக்கப்பட்டன. ஆசியாவின் தலைவிதியை நிர்ணயிக்கும் வகையில் ஏராளமான புதிய நாடுகளும் புதிய தலைமைகளும் தோன்றின தேசிய உணர்வு ஓர் புறம் வளர்ந்து கொண்டிருந்த அதே தருணத்தில் பொது உடைமைத் தத்துவமும், முதலாளித்துவமும் ஆசியாவில் புக முயன்ற பொழுது, அந்நாடுகள் பல புதிய அனுபவங்களைப் பெற்றன.

குறிப்பு

பொதுவாக ஆசியாவின் தலைவர்களுள் பலர் மேலை நாடுகளில் பயின்றிருந்தமையால் அவர்களிடையே முற்போக்குக் கருத்துக்கள் ஆழமாக வேரூன்றியிருந்தன. எனவே அவர்கள் தங்கள் சமுதாயம் மற்றும் அரசியலில் புதிய மாற்றங்களைக் கொண்டு வருவதில் தீவிரமாய் இருந்தனர். அவர்களிடையே தீவிரமான நாட்டுப்பற்று காணப்பட்டது. நாட்டின் நலனைப் பேணிப் பாதுகாப்பதில் அவர்கள் மிகுந்த அக்கறை கொண்டிருந்தனர். நாட்டிற்கு புத்துயிர் அளிக்க முயன்ற பொழுது, அவர்கள் பல தடைகளைச் சந்திக்க வேண்டியிருந்தது. அதே தருணத்தில் தங்களுடைய குறிக்கோள்களுக்கும், அவற்றைச் செயல்படுத்தும் பொழுது அவர்கள் கண்ட வெற்றிக்குமிடையே ஏராளமான இடைவெளி யிருப்பதையும் அவர்கள் உணர்ந்திருந்தனர். இந்த இடைவெளி பெரும் பாலான காரியங்களில் மனக்கசப்பையும், கவலையையும், ஓர் நிலையற்ற தன்மையினையும், பல முரண்பாடுகளையும் அவர்களிடத்தே தோற்றுவித்தது. இருப்பினும், தாங்கள் எண்ணிய குறிக்கோள்களை அடைவதற்கு அவர்கள் மேற்கொண்ட தீவிர முயற்சிகளும், அவர்களிடையே காணப் பட்ட தளராத மன உறுதியும் பாராட்டப்பட வேண்டிய ஒன்றாகும். ஆசியாவின் சில பகுதிகளைப் பற்றி நாம் இங்கு ஆராய்வோம்.

**காலனி ஆதிக்க முறையின் வீழ்ச்சி -11**
**ஆப்பிரிக்காவின் எழுச்சி**

ஆப்பிரிக்கா ஒரு இருண்ட கண்டம் என்ற கூற்று தற்காலத்தில் மிகவும் மாறிவிட்டது. பெரும்பாலான ஆப்பிரிக்க நாடுகளில் விழிப் புணர்ச்சி ஏற்பட்டு வருவதைத் தொடர்ந்து உலக அரசியலில் அவைகளது தாக்கம் மிகவும் அதிகரித்து வருகிறது. அந்நாடுகளிடையே பல பிரச்சனைகள், பல வேறுபாடுகள் காணப்படினும், அவைகளிடையே ஒரு விதமான ஒற்றுமையும் காணப்படுகிறது. இந்நாடுகள் அனைத்தும் இரண்டாம் உலகப்போருக்குப் பிற்பட்ட காலத்தில் விடுதலை அடைந்தன. அதுவரை ஏகாதிபத்திய ஆட்சிகளினால் சுரண்டப்பட்டு வந்த இந்நாடுகள் குறுகிய காலத்திற்குள் புத்துயிர் பெற்றன. அங்கு எழுந்த கூக்குரல்கள் ஏகாதிபத்திய ஆட்சி மற்றும் காலனி ஆதிக்கத்திற்குச் சவால் விடுத்தன. அவைகளின் சவால்களை ஆதிக்க நாடுகள் சந்திக்க முடியாமல் போகவே, இந்நாடுகள் தன்னாட்சி பெற்றன.

**ஆப்பிரிக்காவில் தேசீயம்:**

இக்காலக்கட்டத்தில் ஆசியாவில் எழுந்த தேசிய உணர்வு, ஆப்பிரிக்காவிலும் தன் தாக்கத்தை ஏற்படுத்தியது. இந்த ஆசிய நாடுகளும் ஆப்பிரிக்க நாடுகளும் பொதுவான ஒரு வரலாற்றை கொண்டிருக்கின்றன. மேலும் இவ்விரு கண்டங்களிலுள்ள மக்கள் தொகை, உலக மக்கள் தொகையில் ஒரு கணிசமான அளவுள்ளதாக இருக்கிறது. இதுகாறும் பன்னாட்டு அரசியலில் எத்தகைய ஒரு குறிப்பிடத் தகுந்த பங்கையும் ஏற்றிராத இந்நாடுகள், திடீரென்று உலக அரசியலில் நுழையவே, அங்கு பல மாற்றங்கள் ஏற்படலாயின. எனினும் 1945 -ஆம் ஆண்டு வாக்கிலும்கூட, அங்கு குறிப்பிடத்தக்க வகையில் தேசிய உணர்வு காணப் பட்டதாகக் கூறமுடியாது. ஆயினும் பெரும்பாலான் ஆசிய நாடுகள், புத்துணர்வு பெற்றபோது, ஆப்பிரிக்காவிலும் ஒரு சில மாற்றங்கள் ஏற்படலாயின. 1945 ஆம் ஆண்டு மான்செஸ்டரில் கூட்டப்பட்ட ஐந்தாவது ஆப்பிரிக்க நாடுகளின் மகாநாட்டில் விடுதலை வேட்கையின் குரல் முதன்முதலாக எழத்தொடங்கியது. டியுபய்ஸ், பட்மேர், என்க்ருமா, கென்யாட்டா, அவோலோவோ போன்ற தலைவர்கள் சுதந்திரத்திற்காகக் குரல் கொடுத்தனர். இத்தகைய கூக்குரல்களை ஆதிக்க அரசாங்கங்கள் பெரிதும் மதிக்காவிடினும் சிறிது காலம் கழித்து அதுகுறித்து பெரிதும் கவலை

*Self-Instructional Material*

குறிப்பு

கொள்ளலாயின. 1945 ஆம் ஆண்டு தொட்டு அங்கு வளரத் தலைப்பட்ட தேசிய உணர்வு விசுவரூபம் எடுத்தது. அதன் விளைவாக அடுத்த 25 ஆண்டு காலத்திற்குள் பெரும்பாலான ஆப்பிரிக்க நாடுகள் விடுதலை பெற்றன. இவ்வாறு இந்நாடுகள் விடுதலை பெற்றதற்கு நான்கு முக்கிய காரணங்கள், காணப்படுகின்றன.

முதலாவதாக, இந்தியாவும் பாகிஸ்தானும் 1947-ஆம் ஆண்டு விடுதலை பெற்றதை அடுத்து. பல இனத்தினரைத் தன்னகத்தே கொண்ட காமன்வெல்த் அமைப்பு (Multiracial Commonwealth) ஒன்று உருவாகின. இந்திய விடுதலைப் போராட்டமும் பிரெஞ்சுக் காலனியாக விளங்கிய இந்தோ-சீனப்பகுதிகளில் இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு ஏற்பட்ட மாற்றங்களும், 1949-ஆம் ஆண்டு சீனாவின் மக்கள் குடியரசு நிறுவப் பட்டதும், அதனை அடுத்த 1955-ஆம் ஆண்டு கூட்டப்பட்ட பாண்டுங் மகா நாடும் ஆப்பிரிக்க ஆசிய நாடுகளிடையே ஒரு உறவுப்பாலத்தை ஏற்படுத்தியது. .

இரண்டாவதாக இக்காலக்கட்டத்தில் தோன்றிய கெடுபிடிப்போரும் இந்நாடுகளின் விடுதலையைத் தீவிரப்படுத்தின. ஆப்பிரிக்காவில் ஆதிக்கம் செலுத்திய நாடுகளில் பெரும்பாலானவை மேலை நாடுகளின் அணியில் காணப்பட்டன. இம் மேலை நாடுகளின் தலைவராக அமெரிக்கா காணப் பட்டதால், சோவியத் யூனியன், அந்நாடுகள் ஆப்பிரிக்க நாடுகளின் மீது கொண்டிருந்த ஆதிக்கத்தை தொடர்ந்து கண்டனம் செய்துவந்தது. அத்துடன் ஆப்பிரிக்க நாடுகளின் விடுதலைக்கு சோவியத் யூனியன் மிகுந்த ஊக்கம் அளித்து வந்தது. இத்தகைய சோவியத் சவால்களைச் சமாளிக்கும் வண்ணம் அமெரிக்காவும் ஆப்பிரிக்க நாடுகளுக்கு விடுதலை அளிக்குமாறு தன்னுடைய நண்பர்களைத் தூண்டியது.

மூன்றாவதாக, ஒரு சில ஆப்பிரிக்க நாடுகளின் மனப்பாங்கு இக் காலக்கட்டத்தில் வளர்ச்சி அடைந்ததும் இதற்கு ஒரு காரணமாகும். அங்கு 1945-ஆம் ஆண்டு வாக்கில் காலனி ஆதிக்கமும் ஒரு மந்த நிலையை அடைந்தது. நகரங்களில் வாழ்ந்து வந்த கல்வியறிவு பெற்ற மக்களிடையே விடுதலை வேட்கை வளரத் தொடங்கிறது. அதுவரை பெற்று வந்த அவமானங்களுக்கு ஒரு முடிவு காண அவர்கள் விரும்பினார்கள். அத்தகைய முயற்சிகளில் ஈடுபட முயன்றபொழுது, அவர்கள் பல தடை களைச் சந்திக்க நேரிட்டது. எனவே அவர்கள் தேசியத் தலைவர்களின் அறைகூவல்களுக்குச் செவிசாய்த்தனர். அந்நாட்டில் வாழ்ந்து வந்த குடியானவர்களும் அக்காலக்கட்டத்தில் பெரும் துன்பங்களை ஏற்றிருந்ததால் அவர்களுடைய நிலங்களை நிலச் சுவான்தார்கள் அபகரித்துக் கொண்டதும், இரண்டாம் உலகப் போருக்குப் பின் ஏற்பட்ட பண வீக்க மும், அதனை தொடர்ந்து அவர்கள் அதுகாறும் பெற்றுவந்த கூலி (wages) குறைய நேரிட்டதும் தங்களைத் தேசிய இயக்கத்தில் இணைத்துக்கொள்ள அவர்களைத் தூண்டியது.

நான்காவதாக, ஆதிக்க ஆட்சியாளர்கள் எழுந்து வந்த தேசிய உணர்வை அடக்குமுறை கொண்டு ஒழிக்கத்தலைப்பட்டதும் தேசிய உணர்வு அதிகரித்ததற்குக் காரணமாகும். விழிப்புணர்வு வளர வளர, அடக்கு முறையைக் கண்டு அஞ்சுவது நீங்கியது. இதன் காரணமாக, பெரும்பாலான ஆப்பிரிக்க நாடுகள் விடுதலைப் பாதையை நோக்கி, நடைபோட்டன.

*Self-Instructional Material*

**(a)போர்ச்சுக்கல் குடியேற்றங்கள் :**

குடியேற்ற ஆதிக்க நாடுகளான பிரிட்டன், பிரான்சு, பெல்ஜியம், ஸ்பெயின், போன்றவை தமது ஆப்பிரிக்க குடியேற்றங்களுக்கு விடுதலை வழங்கிய போதும் போர்ச்சுக்கல், தனது குடியேற்ற நாடுகளான அங்கோலா, மொசாம்பிக் , கினியா ஆகியவற்றிற்கு விடுதலை அளிக்க மறுத்தது. ஆப்பிரிக்க தேசிய வாதிகள் கொரில்லாப் போர் முறை மூலம் தாக்குதல்களைத் தொடுத்தனர். இந்த தேசியவாதிகளுக்கு ஆப்பிரிக்க ஒற்றுமைக்கழகம், ஐ.நா. சபை, கியூபா அரசு ஆகியவற்றின் உதவிகள் கிடைத்தன. ஐ.நா. சபை அந்நாடுகளுக்கு விடுதலை அளிக்குமாறு வேண்டுகோள் விடுத்தும், அதனை ஏற்காது எதிர்ப்போரில் இறங்கிய போர்ச்சுக்கல் இறுதியில் கினியாவுக்கு 1974-லிலும், அங்கோலா மொசாம்பிக் நாடுகளுக்கு 1975-ம் ஆண்டிலும் விடுதலையை அளித்தது.

**(b)ஆப்பிரிக்க ஒருமைப்பாட்டிற்கான முயற்சிகள் :**

இரண்டாம் உலகப்போருக்கு பிறகு ஆப்பிரிக்காவின் ஒருமைப் பாட்டிற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. விடுதலைப் பெற்ற நாடுகள் குறுகிய கண்ணோட்டத்தை விட்டு அனைத்து ஆப்பிரிக்க ஒருமைப்பாட்டு கோட்பாட்டின் படி நடக்க முடிவு செய்தன. ஏற்கனவே ஆப்பிரிக்காவை கண்ட அடிப்படையில் ஒற்றுமையை ஏற்படுத்துவதற்கு பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. ஆரம்பகால முயற்சிகள் அமெரிக்காவைச் சார்ந்த நீக்ரோ தலைவர்களாலும், மேற்கிந்திய தலைவர்களாலும் செயல்படுத்தப்பட்டன. இந்த தலைவர்கள் யூத இனமக்களுக்கான சியோனிஸ்ட் தாயகம் ஒன்றினை உருவாக்கும் முயற்சியைப் போல, நீகிரோவர்க்கான தாயகம் ஒன்றை உருவாக்குவதிலேயே அதிக ஆர்வம் செலுத்தினர். இந்த இலக்கை நோக்கிய ஆப்பிரிக்க ஐக்கிய நாடுகளுக்கான கோட்பாடு உருப் பெற்றது. 1919-ல் தொடங்கி, நாற்பது ஆண்டுகளுக்கும் மேலாக சிற்சில இடைவெளிகளுக்கிடையே ஆப்பிரிக்க நாட்டுப்பற்று மாநாடுகள் அவ்வப்போது கூட்டப்பட்டன. 1945-ல் பிரிட்டனிலுள்ள மான்செஸ்டரில் கூட்டப்பட்ட மாநாட்டில் தான் ஆப்பிரிக்காவின் புகழ்பெற்ற நீக்ரோத் தலைவர்கள் தாமாகவே முன்வந்து பங்கேற்றனர்.

**(c)அக்ராமாநாடு 1958: .**

1957-ல் விடுதலை பெற்ற கானா நாட்டின் அதிபரான என் குருமா அனைத்து ஆப்பிரிக்க நாடுகளின் மாநாடு ஒன்றை தமது தலைநகரான அக்ரா நகரில் 1958-ல் கூட்டினார். இதில் விடுதலை பெற்ற எட்டு நாடுகள் கலந்து கொண்டன. ஆப்பிரிக்காவில் குடியேற்ற ஆதிக்கத்தை ஒழிப்பதை முதன்மை நோக்கமாக இம்மாநாடு தீர்மானித்தது. நியூயார்க் நகரில் விடுதலை பெற்ற ஆப்பிரிக்க நாடுகளின் ஒற்றுமையை நிலைநாட்டிடும் பொருட்டு ஒரு நிரந்தர அமைப்பை உருவாக்க முடிவு செய்தது. அனைத்து ஆப்பிரிக்க நாடுகளும் தமது ஆப்பிரிக்க நாட்டுப் பற்றையே ஒரு அரசியல் இலக்காகக் கொள்ளுமாறு திட்டமிட்டது. உலகில் உள்ள பிற நாடுகளுடன் கொள்ளும் உறவில் அனைத்து ஆப்பிரிக்க நாடுகளுக்கும், பொதுவான அரசியல், சமுதாய, பண்பாட்டு, பொருளியல் விஷயங்களில் ஒருமை உணர்வு இருக்க வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது. இம் மாநாடு ஒரு புது எழுச்சியையே உருவாக்கியது.

ஒருமைப்பாடு காண வேண்டும் என்பதில் ஒருமித்த கருத்து இருந்த போதும் அதனை அடையும் வழிமுறையில் கருத்து வேறுபாடுகள் காணப்பட்டன.

- 1961-ல் லைபீரியாவின் தலைநகரான மன்ரோலியாவில் எத்தியோப்பியா, நைஜீரியா டோகோலாந்து. டுனிசியா போன்ற நாடு களும் பிறநாடுகளும் கூடி, தமக்குள் பொருளியல் ஒத்துழைப்பு ஏற்படுத்திக் கொள்ளவும் கூட்டாக பன்னாட்டுறவு நடவடிக்கைகளை மேற் கொள்ளவும் முடிவு செய்தன. இந்நாடுகள் மன்ரோலியா அணியினர்" என அழைக்கப்பட்டன.
- 1962-ல் காசாபிளாங்கா என்ற நகரில் கூடிய கானா, கினி, எகிப்து. மெராக்கோ, போன்ற நாடுகள், தமக்குள் பொதுச் சந்தை ஒன்றை நிறுவி. பொதுவான அயல்நாட்டுக் கொள்கைகளைப் பின்பற்ற முடிவு செய்தன. இந்நாடுகள் காசாபிளாங்கா அணியினர்" என அழைக்கப்பட்டன.

**(d)அடிஸ் அபாபா மாநாடு, 1963:**

அடிஸ் அபாபாவில் 1963-ல் கூடிய மாநாட்டில் மன்ரோலியா, காசாபிளாங்கா அணியைச் சார்ந்த நாடுகள் கலந்து கொண்டன. இந்த அணிகளின் மோதல்களை தவிர்த்து உடன்பாட்டை உருவாக்க நிலையான ஒரு கருத்தை எத்யோப்பிய மன்னர் வழங்கினார். இந்த மாநாட்டில் 31 ஆப்பிரிக்க நாடுகள் கலந்து கொண்டன. மேலும் இந்த மாநாட்டில் ஆப்பிரிக்க ஒற்றுமைக் கழகம்" ஒன்று நிறுவ முடிவு செய்யப்பட்டது. இந்த அமைப்பு கீழ்க்கண்ட நான்கு உறுப்புக்களை கொண்டுள்ளது.

- **நாடுகளின் தலைவர்கள் அடங்கிய மாநாடு :** இது ஆண்டிற்கொரு முறை கூடும்.
- அனைத்து நாடுகளின் வெளிநாட்டு அமைச்சர்கள் அடங்கிய குழு : இது அவ்வப்போது ஏற்படும் பிரச்சனைகளை ஆராய அடிக்கடிக் கூடும்.
- **நடுவர் குழு :** இது ஆப்பிரிக்க நாடுகளிடையே ஏற்படும் சிக்கல் களை தீர்த்து வைக்க உதவும்.
- **பொது செயலாளரின் தலைமையில் செயல்படும் செயலகம்.**
- இந்த அமைப்பிற்கு ஆப்பிரிக்க ஒற்றுமைக் கழகம் என்று பெயர். இதன் முக்கிய நோக்கங்கள் ஆப்பிரிக்க மக்களிடையே ஒற்றுமையை ஏற்படுத்துதல், ஆப்பிரிக்க நாடுகள் அனைத்திற்கும் பொதுவான அரசியல், பொருளாதார பாதுகாப்புக் கொள்கையை உருவாக்குதல், ஆப்பிரிக்காவில் குடியேற்ற ஆட்சிமுறையை நீக்குதல் ஆகியவை ஆகும். இந்த நோக்கங்களை நிறைவேற்ற தேசிய விடுதலைக் குழு ஒன்று அமைக்கப்பட்டது. இது ஆப்பிரிக்க விடுதலை இயக்கங்களுக்கு ராணுவ உதவியும், பொருளாதார உதவியும் அளிப்பதற்காக அமைக்கப்பட்டது. இந்த ஆப்பிரிக்க ஒற்றுமைக் கழகம் ஐ.நா. பாதுகாப்புச் சபை மற்றும் சமூக பொருளாதார சபை ஆகியவற்றில் ஆப்பிரிக்காவிற்கு போதிய பிரதிநிதிதுவம் அளிக்கக் கேட்டுக்கொண்டது.

**உங்கள் முன்னேற்றத்தைச் சரிபார்க்கவும்**

3. காலனித்துவத்தைப் பற்றிக் குறிப்பிடுக?

## 5.5 நவகாலனித்துவம்

முதன் முதலில் விடுதலை பெற்ற ஆப்பிரிக்க நாடு எகிப்து ஆகும். 1922- ல் பிரிட்டன் அதனை சுதந்திரநாடு என அறிவித்தது. கானா (கோல்டு கோஸ்ட்) என்ற நாடு 1957-ல் பிரிட்டன் குடியேற்ற ஆதிக்கத்திலிருந்து விடுதலை அடைந்தது. குவாமே என்குருமா என்பாரின் தலைமையில் அங்கு அமைச்சரவை அமைக்கப்பட்டது. 1960-ல் கூடிய ஐக்கிய நாடுகள் பொதுச்சபையில் ஆப்பிரிக் காவில் குடியேற்ற ஆதிக்க நீக்கத்திற்கான தீர்மானம் ஒன்று நிறைவேற்றப் பட்டது. அதற்காக 1961-ல் ஒரு சிறப்புக்குழுவும் அமைக்கப்பட்டது. அக்குழு, குடியேற்ற ஆட்சிமுறை ஒழிப்பு சிறப்புக்குழு எனப்பட்டது. இச்சூழ்நிலையில் 1960-ல் சுமார் 7 நாடுகள் விடுதலை பெற்றான். 1962-ல் பிரான்சின் குடியேற்ற நாடான அல்ஜீரியா விடுதலை பெற்றது. பிரான்சின் அதிபர் டிகால் விடுதலைப் பிரகடனத்தை அறிவித்தார். 1963-ல் கென்யா பிரிட்டனிடமிருந்து விடுதலைப் பெற்றது. ஜோமோ கென்யாட்டா என்பவர் அதன் பிரதமராக பதவியேற்றார். 1960-ஆம் ஆண்டிலேயே காங்கோ பெல்ஜியத்திடமிருந்து விடுதலை பெற்றும் உள் நாட்டுப் போரின் காரணமாக 1963-ல் தான் அங்கு அமைதி உருவாகியது.

**(a)ரொடீசியா :**

பிரிட்டன் குடியேற்ற நாடான ரொடீசியாவில் 1966-ல் இயான் ஸ்மித் என்பார் வெள்ளையரின் சிறுபான்மை ஆட்சியை பிரிட்டனின் அனுமதி இல்லாமலேயே அமைத்தார். உலகநாடுகள் இதனை அங்கீகரிக்கவில்லை. ஆப்பிரிக்கர்களே இவ்வரசை கடுமையாக எதிர்த் தனர். உள்நாட்டுப் போர் மூண்டது. இறுதியில் பிரிட்டிஷ் தலையீட்டின் பேரில் 1980-ல் சிறுபான்மை அரசு முடிவடைந்தது. ராபர்ட் முகாம்பே என்பார் தலைமையில் சுதந்திர அரசு அமைந்தது. ரொடீஷியா இப்பொழுது ஸிம்பாப்வே என அழைக்கப்படுகின்றது.

**(b)நைஜீரியா :**

அதேபோல் 1960-ஆம் ஆண்டில் பிரிட்டனிடமிருந்து விடுதலை அடைந்த நைஜீரியாவிலும் உள்நாட்டுப் போர் ஏற்பட்டு அமைதியின்மை தோன்றியது. அங்கு இபோஸ் என்ற இனமக்கள் பையாப்ரா என்ற தனி சுதந்திர அரசை நிறுவினர். இதனால் உருவான உள்நாட்டுப் போர் 1970-ல் ஒடுக்கப்பட்டு அமைதியைப்பெற்றது நைஜீரியா. 1950 முதல் 1968 வரையிலான காலக்கட்டத்தில் சுமார் 38 ஆப்பிரிக்க நாடுகள் ஐரோப்பியரின் அடிமைத் தனத்திலிருந்து விடுதலை பெற்றன. இது ஆப்பிரிக்காவின் குடியேற்ற ஆட்சி முறையின் வீழ்ச்சியை காட்டு வதாக அமைந்தது.

தற்போது ஐ.நா சபையில் 40க்கும் மேற்பட்ட ஆப்பிரிக்க நாடுகள் உறுப்பினராக உள்ளன. இதனால் ஐ.நா. சபையின் பண்புகூறுகளே மாறி விட்டன. இந்த நாடுகளின் சம்மதம் இல்லாமல் எந்தவொரு தீர்மானத் தையும் ஐ.நா. சபை நிறைவேற்ற முடியாது. இதனால் தான் ஆப்பிரிக்க நாடுகளின் விடுதலைக்கு ஆதரவான பலதீர்மானங்கள் எழுதில் நிறை வேற்றப்பட்டன. அங்கோலாவில் போர்த்துக்கீசிய அடக்கு முறை கண்டிக்கப்பட்டது. நமீபியா சிக்கலை தீர்க்க தீவிரமான முயற்சிகள் மேற் கொள்ளப்பட்டன. இன, நிற வேற்றுமைக் கொள்கைகள் கண்டிக்கப்பட்டன.

**ஆப்பிரிக்காவின் எதிர் காலம் :**

ஆப்பிரிக்கா உண்மையில் இருண்ட கண்டமன்று அக்கண்டம் பற்றிய தமது அறியாமையே அதனை இருண்ட கண்டம் என்று அழைக்க

காரணமாயிருந்தது. இன்று இருண்ட கண்டம் எதிர்காலக் கண்டம்" என அழைக்கப்படுகிறது. அதாவது உலகின் எதிர்காலமே ஆப்பிரிக்கக் கண்டத்திடம் தான் இருக்கிறது என்று கூறப்படுகிறது. உலக வரலாற்றில் எல்லாப் பழம் பெருங்கண்டங்களும் ஏதாவது ஒரு சகாப்தத்தில் தலையாய பங்கினைப் பெற்றிருப்பது போல் ஆப்பிரிக்காவும் எதிர்காலத்தில் அத்தகைய பங்கினைப் பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது. எனினும் அந்நிலையைப் பெற அது இன்னமும் பல இடையூறுகளைக் கடக்க வேண்டியுள்ளது.

ஆப்பிரிக்க நாடுகளிடையே ஏற்பட்டுள்ள பிளவு மனப்பான்மை களும் பரஸ்பர பகைமை உணர்வுகளும், குழப்பங்களுக்கும் மோதல்களும் வழி வகுக்கிறது. இன்னமும் பழங்குடி இனவழி அரசியல் முறைகளை அடியோடு கைவிட்டதாகத் தெரியவில்லை. நைஜீரியாவிலும், காங்கோவிலும் தோன்றிய பிரிவினை இயக்கங்களும் உள்நாட்டுப் போர்களும் இதனை வலியுறுத்துகின்றன. நாடுகளுக் கிடையில் நிலவும் எல்லைத் தகராறுகள் ஒருமைப்பாட்டு உணர்விற்கு எதிரிடையாக உள்ளன. அல்ஜீரியாவிற்கும், எத்தியோப்பியாவிற்கும், சோமாலிலாந் திற்கும் இடையில் எல்லைத் தகராறு காரணமாக மோதல்கள் நிகழ்ந்துள்ளன.

ஆப்பிரிக்காவின் ஆட்சிமுறைகள் அவை ஜனநாயக முறைமை களுக்குத் தகுதியற்றவை என்பதையே எடுத்துக் காட்டுகின்றன. பெரும் பாலான நாடுகளில் ஒரு தலைவனின் கீழ் ஒரு கட்சி சர்வாதிகாரமே ஏற்பட்டுள்ளது. இது ஆரோக்கியமான அரசியல் வளர்ச்சியைக் காட்டு வதாக இல்லை எனக்கருதப்படுகிறது.

**ஆப்பிரிக்காவில் பொதுவுடமை :**

இரண்டாம் உலகப் போரின் பின் ஆப்பிரிக்காவில் பொதுவுடமை சிறந்த வளர்ச்சி பெற்றுள்ளது. இதனால் ஆப்பிரிக்காவில் மேற்கத்திய ஏகாதிபத்தியமோ அன்றி குடியாதிக்கமோ அழிந்துவிட்டது என்று கருதி விடக்கூடாது. மாறாக மேற்கத்திய ஆதிக்கம் தனது வண்ணத்தைச் சற்று மாற்றிக் கொண்டு, தனது மையத்தையும் மாற்றி அமைத்துக் கொண்டுள்ளது என்றே கூறலாம். அதாவது இப்போது இது அனைத்துலகப் பொதுவுடமை என்ற உருவில், பீகிங்கைத் தனது தலைமையகமாகக் கொண்டு செயல்பட்டு வருகிறது. ஆசியாவிலும், ஐரோப்பாவின் சில பகுதிகளிலும் ஆழமாகக் காலூன்றியுள்ள பொதுவுடமை, இப்போது ஆப்பிரிக்காவிலும் தன்னைப் பரப்பிக் கொள்ள முயன்று வருகிறது. இந்த நூற்றாண்டின் துவக்கத்திலிருந்தே, வழக்கமான பொதுவுடமைப் பரப்புரைகளைப் பரப்பும் வேலை ஆரப்பாகிவிட்டது.

எகிப்திலும் (1919), தென் ஆப்பிரிக்காவிலும் (1921). மொராக்கோ மற்றும் அல்ஜீரியாவிலும் (1956). மடகாஸ்கரிலும் (1958) ஏற்கனவே பொதுவுடமைக் கட்சி ஏற்படுத்தப்பட்டுள்ளது. மெய்யாகவே பொதுவுடமை ஆப்பிரிக்காவில் நல்ல வளர்ச்சி பெற்றுள்ளது. ஆப்பிரிக்காவிற்குள் நுழைவதற்கு இக்கட்சி பின்பற்றி வரும் வழிகள், கடந்த 19-ஆம் நூற்றாண்டில் மேற்கத்திய ஆதிக்க நாடுகள் தமது ஆதிக்கத்தை ஆப்பிரிக்காவில் பரப்பப் பின் பற்றிய வழிகளையே ஏறத்தாழ ஒத்துள்ளன.

- ஆப்பிரிக்க மக்களுக்கு பொதுவுடமைக்கோட்பாடுகளைத் திணிப் சக்கான முயற்சிகள் மிக வெளிப்படையாகவே செய்யப்படுகின்றன. கடான், பொராக்கோ மர்றும் அல்ஜீரியா நாடுகளின் மாணவர் கூட்டத்திடையே

- ஸஇபொதுவுடமை நல்ல செல்வாக்கினைப் பெற்றுள்ளது. நைஜீரியா, மொராக்கோ ஆகிய நாடுகளில் பொதுவுடமை தொழிற்சங்கங்கள் தோன்றியுள்ளன. ஆட் பிரிச்சாவின் சில நாடுகளில் அந்தந்த நாடுகளில் வலுப்பெற்றுள்ள தீவிரமான அரசியல் கட்சிகளுடன் சார்ந்து, தமது அணிசளைத் தோற்றுவித்துள்ளது.
- இரண்டாவதாக, பொதுவுடமை அல்லாத நாடுகளின் உட்புகுந்துள்ள பொதுவுடமை வாதிகள், முன்னவரை பொதுவுடமை வழியில் தமது பொருளியலைச் சீர்திருத்துமாறு தூண்டுவதுடன், அவ்வித ஏற்பாடுகளுக்குப் பொதுவுடமை நாடுகளிலிருந்து ஒத்துழைப்பும், உதவியும், பெறலாம் என்றும் ஆசை காட்டுகின்றனர். இந்த நிரலில் ஆப்பிரிக்க நாடுசளுக்கு தொழில்நுட்ப மற்றும் நிதி உதவி அளிப்பதில் சீனா முன்னிற்கிறது.
- மூன்றாவதாக, பிற பொதுவுடமை நாடுகளில் கற்றுவரும் ஆப்பிரிக்க மாணவர்களை பொதுவுடமைக் கோட்பாடுகளிற் பயிற்சி அளித்து அனுப்புதல் என்பது. பொதுவுடமை நாடுகள் பின்பற்றிவரும் மற்றுமொரு உத்தியாகும். சான்றாக மாஸ் கோவில் உள்ள மக்கள் நட்புணர்வு பல்கலைக் கழகம் 1960-61ல் ஏறத்தாழ 7,000 ஆப்பிரிக்க மாணவர்களுக்குக் கல்வியளித்துள்ளது. மாஸ்கோ , கீவ், லெனின்கிராடு, வார்சா, புடா பெஸ்ட் மற்றும் கிழக்குப் பெர்லின் ஆகிய மையங்களில் ஆப்பிரிக்க மாணர்களுக்கு பொதுவுடமைக் கருத்துக்கள் திணிக்கப்படுகின்றன.
- நான்காவதாக, அரசியல் ரீதியாக ஆப்பிரிக்க நாடுகளுடன் கொள்ளும் தூதுவர் ஏற்பாடு என்பது, பொதுவுடமை வாதிகள் பின்பற்றி வரும் பிறிதொரு முறையாகும். சோவியத் ஒன்றியமும், சீனாவும் இத்தகைய அரசியல் ரீதியான தூதுவர் தொடர்பினை கானா, மாலி மொராக்கோ, அல்ஜீரியா, கினி, எகிப்து ஆகிய நாடுகளுடன் கொண்டுள்ளன.

**ஆப்பிரிக்காவில் சீனாவின் பணிகள்**

அண்மைக் காலத்தில் ஆப்பிரிக்க நாடுகளில் சீனாவின் தலையீடும் ஈடுபாடும் அதிகமாகியுள்ளமை தெளிவு. சீனாவாதிகள் ஆப்பிரிக்காவின் குழப் பம் நிறைந்த பகுதிகளில் எல்லாம் தலையிட்டு அங்கு தமது செல்வாக்கினைப் பரப்ப முயற்சிக்கின்றனர். புத்துணர்வு பெற்றுவரும் ஆப்பிரிக்காவில் குழப்பமான மையங்களுக்கு குறையும் இல்லை. காங்கோ நாம் ஒரு சான்றாக்கலாம். மெய்யாகவே , ஆப்பிரிக்காவின் இதர பகுதிகளில் தனது செல்வாக்கினை வளர்த்துக் கொள்ள பீகிங்கிற்குக் காங்கோ ஒரு உந்துமையமாகச் செயல்பட்டது. இந்தக் கண்னோட்டத்திற்றான் “நாம் காங்கோவைக் கைப்பற்றினால், அனைத்து ஆப்பிரிக்காவையும் கைப்பற்ற நாம் முனையலாம் என்பதாக மா-சே-துங் கூறினார். காங்கோ விஷயத்தில் சீனாவின் தலையீடு, பொதுவுடமை ருஷ்யா தன்னை பின் தங்கிய நாடுகளின் ஏழைப் பங்காளன் என்று காட்டிக்கொண்டு, ஆப்பிரிக்காவில் தனது செல்வாக்கினைப் பாப்பச் செய்யும் முயற்சிகளுக்கு, ஒரு பதிலடியாகவே அமைந்தது. பொதுவுடமைக் கருத்துக்களைப் பரப்புவதற்கு ஆப்பிரிக்காவே மிகவும் பொருத்தமான இடம் என்ற கணக்கீட்டில் ருஷ்யாவும், சீனாவும் ஒருமித்த கருத்தினைக் கொண்டிருந்தன. அங்கோலா மற்றும் மொசாம்பிக் விவகாரங்களில் ருஷ்யாவின் தலையீடு, ஆப்பிக்காவில் ஆதிக்கம் பரப்புதற்கான அதன் உள்நோக்கத்தைத் தெற்றெனக் காட்டியது.

**உங்கள் முன்னேற்றத்தைச் சரிபார்க்கவும்**

4. நவகாலனித்துவத்தைப் பற்றிக் குறிப்பிடுக?

## 5.6 உங்கள் முன்னேற்றத்தை சோதிக்கும் வினாக்களுக்கான விடைகள்

இம்மாற்றங்களின் காரணமாக இக்கண்டம் உலக அரசியலில் ஒரு முக்கிய இடத்தைப் பெற்றுள்ளது. ஆசியாக் கண்டத்தின் பல பகுதிகளிலும் சமுதாய மற்றும் அரசியல் புரட்சிகள் தோன்றின. அந்நாடுகளின் முன்னேற்றத்திற்குத் தடையாய் இருந்த விலங்குகள் உடைத்தெறியப்பட்டன. ஏகாதிபத்திய அரசாங்கங்கள் விரட்டியடிக்கப்பட்டன. ஆசியாவின் தலைவிதியை நிர்ணயிக்கும் வகையில் ஏராளமான புதிய நாடுகளும் புதிய தலைமைகளும் தோன்றின தேசிய உணர்வு ஓர் புறம் வளர்ந்து கொண்டிருந்த அதே தருணத்தில் பொது உடைமைத் தத்துவமும், முதலாளித்துவமும் ஆசியாவில் புக முயன்ற பொழுது, அந்நாடுகள் பல புதிய அனுபவங்களைப் பெற்றன. பொதுவாக ஆசியாவின் தலைவர்களுள் பலர் மேலை நாடுகளில் பயின்றிருந்தமையால் அவர்களிடையே முற்போக்குக் கருத்துக்கள் ஆழமாக வேரூன்றியிருந்தன. எனவே அவர்கள் தங்கள் சமுதாயம் மற்றும் அரசியலில் புதிய மாற்றங்களைக் கொண்டு வருவதில் தீவிரமாய் இருந்தனர். அவர்களிடையே தீவிரமான நாட்டுப்பற்று காணப்பட்டது.

ஆப்பிரிக்கர்களின் எதிர்ப்பினை சமாளிக்கும் வகையில் குடியாதிக்க நாடுகள் மூன்று வழிகளைப் பின்பற்றின. குடியேற்ற நாடுகளுக்குப் படிப்படியாக விடுதலை அளித்தல் முதல்வழி, கோல்டுகோஸ்ட் (இக்கால கானா) சூடான் மற்றும் நைஜீயா ஆகிய நாடுகளைப் பொறுத்த அளவில் பிரிட்டன் இவ்வழியையே பின்பற்றியது ஆப்பிரிக்கரின் விடுதலை வேட்கையை நசுக்கி நொறுக்குதல் என்பது இரண்டாவது வழி. வெள்ளையருக்கும், அவர்களல்லாத இதரர்க்கும் இடையே ஏற்படும் மோதுதல்கள் இந்த அடிப்படையிலானவையே. இந்த இனவெறிக் கொள்கை தென் ஆப்னிக்காவின் ரொடீஷிய அரசால் உருவாக்கப்பட்டு மிகக்சமீப காலம் வரை செயலாக்கப்பட்டது. ஆப்பிரிக்க மக்களையும், ஆளும் ஆதிக்க வர்க்கத்தினருக்கு ஒப்ப வாழ்க்கை நிலையை, சமுதாய சமத்துவத்தை எய்த உதவுதல். இவ்வழியை பிரான்சு நாடு பின்பற்றி வருகிறது.

## 5.7 சுருக்கவுரை

ஆசியாவில் எழுந்த தேசிய உணர்வு, ஆப்பிரிக்காவிலும் தன் தாக்கத்தை ஏற்படுத்தியது. இந்த ஆசிய நாடுகளும் ஆப்பிரிக்க நாடுகளும் பொதுவான ஒரு வரலற்றை கொண்டிருக்கின்றன. மேலும் இவ்விரு கண்டங்களிலுள்ள மக்கள் தொகை, உலக மக்கள் தொகையில் ஒரு கணிசமான அளவுள்ளதாக இருக்கிறது. இதுகாறும் பன்னாட்டு அரசியலில் எத்தகைய ஒரு குறிப்பிடத் தகுந்த பங்கையும் ஏற்றிராத இந்நாடுகள், திடீரென்று உலக அரசியலில் நுழையவே, அங்கு பல மாற்றங்கள் ஏற்படலாயின. எனினும் 1945 -ஆம் ஆண்டு வாக்கிலும்கூட, அங்கு குறிப்பிடத்தக்க வகையில் தேசிய உணர்வு காணப் பட்டதாகக் கூறமுடியாது. ஆயினும் பெரும்பாலான் ஆசிய நாடுகள், புத்துணர்வு பெற்றபோது, ஆப்பிரிக்காவிலும் ஒரு சில மாற்றங்கள் ஏற்படலாயின. 1945 ஆம் ஆண்டு மான்செஸ்டரில் கூட்டப்பட்ட ஐந்தாவது ஆப்பிரிக்க நாடுகளின் மகாநாட்டில் விடுதலை வேட்கையின் குரல் முதன்முதலாக எழத்தொடங்கியது. டியுபய்ஸ், பட்மேர், என்க்ருமா, கென்யாட்டா, அவோலோவோ போன்ற தலைவர்கள் சுதந்திரத்திற்காகக் குரல் கொடுத்தனர். இத்தகைய கூக்குரல்களை ஆதிக்க அரசாங்கங்கள் பெரிதும் மதிக்காவிடினும் சிறிது காலம் கழித்து அதுகுறித்து பெரிதும் கவலை

கொள்ளலாயின. 1945 ஆம் ஆண்டு தொட்டு அங்கு வளரத் தலைப்பட்ட தேசிய உணர்வு விசுவரூபம் எடுத்தது. அதன் விளைவாக அடுத்த 25 ஆண்டு காலத்திற்குள் பெரும்பாலான ஆப்பிரிக்க நாடுகள் விடுதலை பெற்றன. இவ்வாறு இந்நாடுகள் விடுதலை பெற்றதற்கு நான்கு முக்கிய காரணங்கள், காணப்படுகின்றன.

## 5.8 முக்கிய வார்த்தைகள்

ஆப்பிரிக்கா மாநிலங்களின் எழுச்சி, காலனித்துவ அமைப்பின் சிதைவு, நவகாலனித்துவ முறை

## 5.9 சுய மதிப்பீடு வினாக்கள் மற்றும் பயிற்சிகள்

**சுருக்கமான கேள்விப் பதில்கள்**

3. காலனித்துவம் என்றால் என்ன?
4. இந்திய தேசியத்தின் எழுச்சயைப் பற்றி சிறு குறிப்பு வரைக?

**விரிவான கேள்விப் பதில்கள்**

1. ஆப்பிரிக்கா மாநிலங்களின் எழுச்சி பற்றி குறிப்பிடுக?
2. நவகாலனித்துவம் கட்டுரை வரைக?

## 5.10 மேலும் படிக்க


- Evans, Malcolm, and Rachel Murray, eds. (2002). ***The African Charter on Human and Peoples' Rights: The System in Practice, 1986–2000.*** Cambridge, U.K.: Cambridge University Press.
- Kufuor, Kofi Oteng. (2005). ***The Collapse of the Organization of African Unity: Lessons from Economics and History.*** Journal of African Law .
- Magliveras, Konstantin, and Gino Naldi. (2004). ***The African Union and the Predecessor Organization of African Unity.*** The Hague, Netherlands.
- Naldi, Gino, ed. (1992). ***Documents of the Organization of African Unity.*** London and New York: Mansell.
- Naldi, Gino. (1999). ***The Organization of African Unity: An Analysis of its Role***. 2nd ed. London and New York: Mansell.

# தொகுதி II பிராந்தியவாதம்

# அலகு 6 பிராந்தியவாதத்தின் கருத்துகள்

6.0 அறிமுகம்
6.1 நோக்கங்கள்
6.2 பிராந்தியவாதத்தின் கருத்துகள்
6.2.1 ஐக்கிய நாட்டுச் சபையும் பிராந்திய ஏற்பாடுகளும்
6.3 ஐரோப்பிய பொருளாதாரச் சமூகம்
6.4 ஐரோப்பிய ஒன்றியம்
6.4.1 ஐரோப்பிய ஒன்றியத்தின் நோக்கம்
6.4.2 உறுப்பு நாடுகள்
6.4.3 ஐரோப்பிய யூனியனின் அமைப்பு
6.4.4 ஐரோப்பிய யூனியனின் நடவடிக்கைகள்
6.5 அராப் லீக்
6.6 ஆப்பிரிக்க சங்கத்தின் அமைப்பு
6.7 உங்கள் முன்னேற்றத்தைச் சோதிக்கும் வினாக்களுக்கான விடைகள்
6.8 சுருக்கவுரை
6.9 முக்கிய வார்த்தைகள்
6.10 சுயமதிப்பீடு வினாக்கள் மற்றும் பயிற்சிகள்
6.11 மேலும் படிக்க

## 6.0 அறிமுகம்

அரசுகளையும், சார்ந்து வாழும் நிலப்பகுதிகளையும் பிராந்திய அடிப்படையில் ஒருங்கிணைத்து அமைத்தல் பிராந்தியப்பற்றைக் குறிக்கின்றது பொதுவாக பிராந்தியம் என்ற பதம் அரசை விட சிறிய நிலப்பகுதியைக் குறிக்கும். ஆனால், பிராந்தியம் என்ற பதம் பன்னாட்டு அரசியலில் மூன்று அல்லது அதற்கு மேற்பட்ட அரசுகளின் நிலப்பகுதிகளின் இணைவைக் குறிக்கின்றது. இவ்விணைவில் பங்கேற்கும் அரசு களின் நிலப்பரப்பு தொடர்ச்சியாக அமைந்திருக்க வேண்டும் என்ற நியதி கிடையாது. அவ்வரசுகளின் நிலப்பரப்பு உலகெங்கும் பரவலாக காணப்படலாம். “கூட்டு சுய பாதுகாப்பு மற்றும் பிரச்னைகள் தீர்விற்கான பிராந்திய நடவடிக்கைகள் இடைக்கால நடவடிக்கைகளாகவே கருதப்படுகிறது. தொழில் வளர்ச்சியடைந்த நாடுகளின் பொருட்கள் உறுப்பு நாடுகளின் வாணிபத்தைப் பாதிக்காத வகையில் அந்த நாடுகளுடன் இறக்குமதிக்குச் சமமான ஏற்றுமதிக்கான ஒப்பந்தங்கள் ஏற்படத் தேவையான எச்சரிக்கை நடவடிக்கைகளை இது எடுக்கிறது.

## 6.1 நோக்கங்கள்

- பிராந்திய அமைப்புகள் அல்லது எற்பாடுகள் சில முக்கியப் பிரச்னைகளைக் கலந்தாலோசித்து தீர்வு செய்யும் நோக்கத்தோடு ஏற்படுத்தப்பட்டுள்ளது.
- ஒரு உலக சமுதாயம் ஏற்படுவதற்கு முன்னோடியாகவும், ஓர் எடுத்துக்காட்டாகவும் ஐரோப்பிய பொருளாதார சமுதாயம் இருக்கிறது.
- ஐரோப்பியப் பொருளாதார மற்றும் அரசியல் துறைகளில் ஒற்றுமையை உருவாக்கி, ஐக்கிய ஐரோப்பாவைத் தோற்றுவிக்க வேண்டுமென்ற, குறிக்கோளுடன் இந்த ஐரோப்பியப் யூனியன் என்ற அமைப்பு நிறுவப்பட்டது.

- அராப் லீக் எகிப்து, சிரியா, லெபனோன் ஜோர் தான். ஈராக், சவுதி அரேபியா, சூடான் ஓமன், ஆகிய அரேபிய நாடுகள் அடங்கிய அரேபிய சங்கம் மத்திய கிழக்குப் பகுதியில் காணப் படும் மிக முக்கிய பிராந்திய ஏற்பாடாக கருதப்படுகிறது.
- அதிகமான அங்கத்தினர்களைக் கொண்டு பல நோக்கோடு புதிதாக உருவாக்கப்பட்ட ஒரு பிராந்திய அமைப்பாக ஆப்பிரிக்க நாடுகளின் இணையம் காணப்படுகிறது

## 6.2 பிராந்தியவாதத்தின் கருத்துகள் (The Idea of Regionalism)

பிராந்திய அமைப்புகள் அல்லது ஏற்பாடுகள் சில முக்கியப் பிரச்னைகளைக் கலந்தாலோசித்து தீர்வு செய்யும் நோக்கத்தோடு ஏற்படுத்தப்பட்டுள்ளது. பின் கூறப்பட்டுள்ள பிரச்சனைகளைத் தீர்வு செய்ய அவை முனைகின்றன. அவை : பொருளாதார, அரசியல், சமூக, கலாச்சார மற்றும் பரஸ்பர பாதுகாப்பு பிரச்னைகளாகும். பிராந்திய ஏற்பாடுகள் அரசியல் முறையமைவைத் தோற்றுவிப்பதைத் தனது குறிக்கோளாகக் கொண்டிருப்பதால் மும்முனை ஒப்பந்தம் போன்ற இராணுவ ஒப்பந்தங்களில் இருந்து அது வேறுபடுகிறது.

- பிராந்திய அமைப்புகள் மூன்று முக்கிய குணநலன்களைக் கொண்டு திகழ்கின்றது. அவை:
- பிராந்திய அமைப்புகளின் அங்கத்துவம் வரையறை செய்யப்பட்டுள்ளது
- பிராந்திய ஏற்பாடுகள் விசேட குறிக்கோள்களைக் கொண்டுள்ளது
- பிராந்திய ஏற்பாடு ஒரு குழுவின் நலன்பேண ஏற்பட்டிருக்கிறது என்பவையாகும். அக்குழு எப்பொழுதும் பன்னாட்டு சமுதாயத்தை விட சிறியது.

தேசீய அரசுகள் தங்கள் வளத்தை ஒருங்கிணைத்து, ஒன்று திரட்டி அணு ஆயுதப்போர் உருவாக்கிய அச்சத்தால் பாதிக்கப்பட்டிருக்கும் உலகில் தங்களுக்குத் தேவையான பாதுகாப்பை உருவாக்கி கொள்ளுகிறது. உலக அளவிலான முழுமையான அமைப்பை நிறுவுதல் என்பது முடியாத காரியம். எனவே, அதற்கு மாறாகப் பிராந்திய ஏற்பாடுகளைச் செய்து கொள்ளல் நல்லது உலக அளவிலான அமைப்புக்களை விரும்புவோர் எவ்வாறெனினும், பிராந்திய ஏற்பாட்டை, உலக ஏற்பாட்டிற்கான படிக்கல் என்று எண்ணுகின்றனர். ஒரு உலக அரசாங்கம் உருவாக்கும் சாத்தியக் கூறுகள் சமீபகாலத்தில் இல்லாத நிலையில், பிராந்திய ஏற்பாடு பன்னாட்டு உறவுகளில் முக்கியபங்கு வகித்து, இன்றைய தேசிய அரசு முறையை மாற்றியமைத்து வருகிறது.

ஒன்று சேர்ந்து வருகின்ற நாடுகளுக்கிடையே தாங்கள் ஒரே பொது விருப்பங்கள் கொண்டிருப்பதான ஒரு உணர்வு தோன்றி அப்போது விருப்பங்களை அடைய கூட்டு முயற்சி தேவை என்ற எண்ணமாக உருவாக வேண்டும். அவ்வெண்ணத்தின் அடிப்படையில் பொது விருப்பத்தைக் கொண்டுள்ள நாடுகள் தமக்கிடையே பொது ஏற்பாடுகளைச் செய்து கொள்ளுகின்றன இதுவே பிராந்திய ஏற்பாடு உருவாக உகந்த அடிபபடைக் காரணியாகக் காணப்படுகிறது நாடுகளின் நிலப்பரப்பு அடுத் தடுத்து அமைந்திருந்தால், அந்நாடுகள் சில பொது விருப்பங்களை கொண்டிருக்கும். அப்பொது விருப்பங்களை நிறைவேற்ற அந்நாடுகள் தமக்குள் பன்னாட்டு அமைப்புக்களை பிராந்திய அடிப்படையில் செய்து கொள்ளலாம். சில நேரங்களில் பொதுவான வெளிநாட்டு அபாயத்தை எதிர்நோக்குகின்ற நாடுகள் தமக்குள் அவ்வபாயத்தை எதிர் நோக்கி

**குறிப்பு**

பிராந்திய அமைப்புக்களை ஏற்படுத்திக்கொள்ளும். சில வேலைகளில் பொது விருப்பங்கள் ஏற்படுத்தும் தூண்டுதல் அல்லது பொது துன்பங்களைப் பகிர்ந்து கொள்ளும் மனப்பக்குவம் நாடுகளிடையே பிராந்திய ஏற்பாடுகளை உருவாக்குகிறது..
பொதுவாக பிராந்திய ஏற்பாடுகள் பின்வருகின்ற குறிக்கோளை அடையப்பயன்படுகிறது

- அரசாங்கங்களுக்கிடையே அரசியல் மற்றும்பிற ஆலோசனைகளை நடத்த உகந்த வழிமுறையை பிராந்திய ஏற்பாடுகள் வழங்குகிறது.
- குறிப்பிட்ட இடைவெளிகளில் நடத்தப்படும் கூட்டங்களின்மூலம் பலமுனைப் பேச்சு வார்த்தைகள் நடந்தேற வாய்ப்பு உருவாகிறது.
- அங்கத்தினர்களிடையே சுமூகமான முறையில் பிரச்சனைகளைத் தீர்க்க வழி வகுக்கிறது.
- அங்கத்தினர்களிடையே கலாச்சார மற்றும் அரசியல் சம்பந்தமான உறவுகளை நிலை நிறுத்துகிறது.
- அங்கத்னர்களிடையே சீரிய முறையிலான பொருளாதார ஒத்துழைப்பை ஏற்படுத்துகிறது.
- அங்கத்தினர்கள் பிராந்திய ஏற்பாட்டின் மூலம் ஒருவரையொருவர் பாதுகாக்கும் ஏற்பாட்டினை அமைத்துக்கொள்ள முடிகிறது

பொது குறிக்கோளைப் பகிர்ந்து கொள்ளுதல் மற்றும் பொது விருப்பங்களைப் பகிர்ந்து கொள்ளுதல் ஆகியவற்றைச் சார்ந்தே பிராந்திய வாக்கு பாடுகளின் வலிமை காணப்படுகிறது. ஒருவரோடொருவர் சீரிய அள ஒத்துழைத்து, பொதுவிருப்பங்களையும், குறிக்கோளையும், நிறை. நரம் காலம் வரை பிராந்திய ஏற்பாடுகள் வெற்றிகரமாக செயல்பட்டு அங்கத்தினர்களிடையே அதிக அளவிலான சமுதாய உணர்வும் ரே பொது ககோளுக்கான பொது இசைவும் தோற்றுவிக்கப்பட்டால் பல நாடுகள் அப்போது இணைந்து உருவாக்கிய அந்த பன்னாட்டு அமைப்பு நன்முறையில் பின்னிப் பிணையப்பட்டு செயல்படும். கோட்பாடுகளில் முரண்பாடு இல்லையென்றால் ஒரு நாடு ஒன்றிற்கு மேலாக பிராந்திய அமைப்புக்களில் அங்கத்தினராக இருக்கலாம். இவ்வாறு அமெரிக்க ஐக்கிய நாடுகள் ஒன்றிற்கு மேற்பட்ட அமைப்புக்களில் அங்கம் வகித்து வருகின்றது.

பிராந்திய அமைப்புக்களை ஆதரிப்போர் தம்மை நடைமுறைவாதிகள் என்று பறைசாற்றுகின்றனர். குறிப்பிட்ட வரையறை செய்யப்பட்ட சில குழுக்களுடைய பிரச்னைகளைத் தீர்வுச் செய்ய பன்னாட்டு அமைப்புக்களைக்காட்டிலும் பிராந்திய அமைப்புக்கள் தான் சாலச் சிறந்தது ஏனென்றால், இவ்வமைப்புக்கள் சமுதாய உணர்வை அங்கத்தினர்களிடம் தோற்றுவித்து ஒருங்கிணைந்து பணியாற்ற அவர்களைத் தூண்டுகிறது. ஆனால், அங்கத்துவத்தை உலகெங்கும் பரப்பினால் வெகுதொலைவில் எழும் பிரச்னைகளைப் பற்றி நாடுகள் பற்றில்லாமல் செயல்படும். தொலைவில் அமைந்திருக்கும் நாடுகள் பிற பிரச்சனைகளில் கவனம் செலுத்தும் இந்நிலையில் பன்னாட்டு ஏற்பாடு தோல்வியுறும்.எவ்வாறு பிராந்திய அமைப்புக்கள் தங்கள் பணிகளை ஆற்றவேண்டும் என்பதில் பிராந்திய சிந்தனையாளர்களிடையே கருத்து வேறுபாடுகள் - நிலவுகிறது. கூட்டமைப்பு சிந்தனையாளர்கள் கூட்டமைப்பு அணுகுமுறையை எடுத்தியம்புகின்றனர். மேம்பட்ட ஒரு தேசீய அவைக்கு அங்கத்தினர்கள் தங்கள் இறைமையில் ஒரு பகுதியை அர்ப்பணிக்க வேண்டும் என்று இவர்கள் கூறுகின்றனர். இவ்வாறு உருவாக்கப்பட்ட அமைப்பு, அதிக அரசியல் அதிகாரத்தைப் பெற்றுத் திறம்பட செயல்படும்

என்று நம்புகின்றனர். இரண்டாவது சாரார் செயற்பாட்டு அணுகு தலை எடுத்தியம்புகின்றனர். அரசியல் ஒருமைப்பாட்டிற்கு, பொருளாதார, சமூக மற்றும் கலாச்சார ஒத்துழைப்பு முதலில் தேவை என இவர்கள் கூறும்கின்றனர். இவ்வாறு உருவாக்கப்பட்ட விசேட குறிக்கோளை அடையும், அமைப்புகளில் இறைமை பழைய அரசு அமைப்புக்களிடமிருந்து புதிய பன்னாட்டு அமைப்பிடம் மாறுகிறது. இம்மாற்றம் வருங்காலத்தில் நிலையான ஒரு உலக முறையமைவிற்கு வழிவகுக்கும்.

செயற்பாட்டு முறையில் சில நன்மைகள் காணப்படுகின்றன. இம் முறையில் நெகிழும் தன்மை காணப்படுகிறது. இத்தன்மை பல அமைப்பு முறைகளையும், வழிமுறைகளையும் முயற்சிக்க வழிவகுக்கிறது. இன்று பிராந்தியப் பற்று மற்றும் பிராந்திய ஏற்பாட்டை விரும்பி ஏற்றுக்கொள்ளும் தன்மை உலகில் போதுமான அளவு உருவாகியுள்ளது. கடந்த நான்கு நூற்றாண்டுகளாக பன்னாட்டு அரங்கில் செல்வாக்குடன் திகழ்ந்துவந்த தேசீய அரசு முறை தனது செல்வாக்கை இன்று இழந்து விட்டது. இன்றைய உலகில் சுதந்திரம் பெற்ற இறைமை வாய்ந்த அமைப்புக்களைக் காட்டிலும், அரசுகளின் பிராந்திய அமைப்புக்கள் முத கியத்துவம் வாய்ந்தவையாகக் கருதப்படுகிறது. பிராந்திய அமைப்புகளைத் தோற்றுவிக்க இன்றைய உலகில் எண்ணற்ற ஒப்பந்தங்களு உடன்படிக்கைகளும் நடந்தேறியுள்ளன. ஐக்கிய நாட்டுச் சபையிர் சாசனமும் பிராந்திய ஏற்பாட்டிற்கு அங்கீகாரம் அளித்துள்ளது.

### 6.2.1 ஐக்கிய நாட்டுச் சபையும் பிராந்திய ஏற்பாடுகளும்

பிராந்திய ஏற்பாடுகளுக்கு ஐக்கிய நாட்டுச் சபையின் சாசன அங்கீகாரம் அளித்துள்ளது. சான் பிரான்ஸின்கோ மாநாட்டில் பிராந்திய மற்றும் பன்னாட்டு அமைப்புக்களைப் பற்றி விரிவான விவாதம் நடத்தப்பட்டது. சான்பிரான். ஸிஸ்கோ மாநாட்டில் பிராந்திய ஏற்பாட்டிற்காக அமைக்கப்பட்ட மூன்றாவது குழுவில் அங்கம் வகித்த ஒரு அமெரிக்க நிபுணர் பின்வரும் கருத்தை வெளியிட்டுள்ளார். பல்வேறு நாடுகளும் பிராந்திய ஏற்பாட்டுப் பிரச்சனைகளை அணுகிய விதத்தை ஐந்து கருத்துக்கள் ஒருவகையில் அல்லது இன்னொரு வகையில் ஒழுங்குப்படுத்தியது. பிராந்திய அல்லது வரையறை செய்யப்பட்ட ஏற்பாடுகள் ஐக்கிய நாட்டுச் சபையின் பொது அமைப்பின் உள் சுயமாக இயங்க வேண்டும் என்ற எண்ணத்தை எல்லாக் கருத்துக்களும் எடுத்தியம்பின.

- அமெரிக்க குடியரசின் விருப்பம் அமெரிக்க மாநிலங்களுக்கிடை யேயான முறையமைப்பைப் பாதுகாத்தல்.
- இதைப்போன்ற உணர்வை அரேபிய அரசுகளின் சங்க அமைப்பும் தங்கள் அரசுகளைப் பொறுத்தமட்டில் கொண்டுள்ளது. சங்கத்தின் நிலை பாதுகாக்கப்படல் வேண்டும்.
- பரஸ்பர இருமுனை உதவிபுரியும் ஒப்பந்தங்கள் ஏற்படுவதை தடை செய்யும் சாசனத்திலிருந்து நாடுகளுக்கு விதிவிலக்கு வழங்குவதை சோவியத் ரஷ்யா விரும்பியது.
- ஜெர்மனி திரும்பவும் ஆக்கிரமிப்பு நடத்தும் என்ற அச்சத்தை பரான்சு கொண்டிருந்தது. எனவே, பழைய விரோதிக்கு எதிராக, பாதுகாப்புச் சபையின் அனுமதிக்குக் காத்திராமல் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் உரிமையை பிரான்சு கோரியது.

குறிப்பு

- யால்டா வாக்களிக்கும் விதிமுறை பாதுகாப்பு சபைக்கு அதிக அதிகாரத்தை அளித்தது. சிறிய அரசுகளிடையே முணுமுணுப்பை ஏற்படுத்தியது.

ஐக்கிய நாட்டுச் சபை சாசனத்தின் எட்டாவது அத்தியாயம் 52,53 154-ஆகிய விதிகளில் பிராந்திய ஏற்பாடுகளை விரிவாக எடுத்துக் கூறியுள்ளது. இதைத் தவிர்த்து 33-ஆம் விதியும் சமாதான ரீதியில் பிரச்சனைகளை பிராந்திய அமைப்பு மற்றும் பிராந்திய ஏற்பாடுகளினால் தீர்த்து வைப்பதைத் தெளிவாக வெளியிட்டுள்ளது. இரண்டாம் உலகப் போரில் ஆக்கிரமிப்பு நடத்திய விரோதி அரசுகளின் மேல் நடவடிக்கைகளை மேற்கொள்ளப் பாதுகாப்புச் சபையின் அனுமதி தேவையில்லை என்று 53-வது விதி கூறுகிறது. இதைக் காட்டிலும் முக்கியமான ஒரு விதி விலக்கை, 57-வது விதி கூறுகிறது. இவ்விதிவிலக்கின் மூலம் ஐக்கிய நாட்டுச் சபை, அமைப்பின் கட்டுப்பாட்டிற்கு அப்பால் பிராந்திய பாதுகாப்பு ஏற்பாடுகளை நாடுகள் செய்து கொள்ளலாம்.

1948-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 11-ஆம் நாள் செயலர் (Trygues Lie) என்பவர் ஐக்கிய நாட்டு அமைப்பில் கூட்டுப் பாதுகாப்பை உருவாக்க பிராந்திய ஏற்பாடு பயன்படுகிறது. ஆனால், பிராந்திய ஏற்பாடு சாசனத்தின் மேம்பாட்டை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்ற கருத்திளை வெளியிட்டார். இக்கருத்தை சாசனத்தின் 103-ஆம் விதியும் தெளிவாகக் கூறியுள்ளது. ஐக்கிய நாட்டுச் சபையின் அங்கத்தினர்கள் சாசனத்தின் அடிப்படையில் கொண்ட கடப்பாட்டிற்கும் நாடுகள் பன்னாட்டு ஏற்பாட்டினால் கொண்ட கடப்பாட்டிற்கும் இடையே முரண்பாடுகள் எழுந்தால், நாடுகள் சாசனத்தின் அடிப்படையில் கொண்ட கடப்பாடு மேம்பாடு படைத்ததாய்க் காணப்படும்''. மேலும் Lie என்பார் 1950-ஆம் ஆண்டு ஜுன் மாதம் 6-ஆம் நாள் இன்னொரு கருத்தை வெளியிட்டார். . ''கூட்டு சுய பாதுகாப்பு மற்றும் பிரச்னைகள் தீர்விற்கான பிராந்திய நடவடிக்கைகள் இடைக்கால நடவடிக்கைகளாகவே கருதப்படுகிறது அவர்களுக்கு வருங்காலப்போரில் இருந்து பாதுகாப்பு அளிக்கும் ஆற்றல் கிடையாது''. இன்னொரு விதத்தில் பின்கூறப்பட்டுள்ள அளவில் இக்கருத்தைக் கூறலாம். பிராந்திய ஏற்பாடுகள் பெருமளவில் ஐக்கிய நாட்டுச் சபையைச் சார்ந்து செயல்பட்டால், அவைகளால் ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகளை நிரந்தரமாக ஆற்றமுடியும்.

பிராந்தியப் பற்று பன்னாட்டு உறவில் யாவரும் ஏற்றுக்கொண்ட ஒரு உண்மை, இன்று பிராந்தியப் பற்று புதுபொருள் விளக்கத்தைப் பெற்று, முக்கியத்துவம் வாய்ந்து நிகழ்கிறது. இப்பற்று இன்று நாடுகளிடையே ஒத்துழைப்பை ஏற்படுத்தியுள்ளது. எவ்வாறெனினும், பிராந்திய ஏற்பாடுகளுக்கு சில இடர்பாடுகள் உண்டு. ஒருங்கிணைப்புப் பிரச்சனை அதன் ஒரு இடர்பாடாகக் கருதப்படுகிறது ''ஒருங்கிணைப்புப் பிரச்சனைகள் அதிக அளவில் காணப்பட்டாலும் அக்கடப்பாடுகள் முரண்பாடுகளைத் தோற்றுவிக்காமல், சார்பு நிலையில் அமைந்துள்ளது என்று பால்மரும் பெரிகின்சும் கூறியுள்ளனர். ஜாாஜ் சீயல் (George Scelle) என்பார். ''இந்த ஒருங்கிணைப்பில் அல்லது குழுஅமைப்புக்களில் சமாதானத்திற்கான உத்தரவாதத்தைக் காண முடிகிறது என்ற நம்பிக்கையைக் கொண்டுள்ளார். அரசு ஒன்றிற்கு மேற்பட்ட முறையமைவுகளில் அங்கத்தினராக இருந்தால், அவ்வரசு தனது போர் விருப்பத்தைக் கட்டுப்படுத்துவதோடு, தான் பல முறையமை பெற்றிருக்கின்ற அங்கத்துவத்தின் உதவியோடு அம் முறையமைவுகளில் அங்கத்தினராய் இருக்கும் பிற நாடுகளின் போர் விருப்பையும் மிதப்படுத்தி, தான் சார்ந்திருக்கும் அமைப்புக்களைப்

பாதுகாக்கும். மேலும், பிராந்திய அளவில் நாடுகள் பெறும் அனுபவமும் கூட்டு முயற்சியும், பிராந்திய ஏற்பாட்டை வெற்றிகரமாக செயல்படுத்துவதோடு நின்றுவிடுவதில்லை. ஆனால் மேம்பட்ட தேசீய ஒருங்கிணைப்பிற்கு உகந்த பன்னாட்டுக் கருத்தை உருவாக்கும் சூழ்நிலையைத் தோற்றுவிக்கும். அச்சூழ்நிலை உருவாகாவிடில் மேம்பட்ட தேசீய ஒத்துழைப்பு முயற்சிகள் நிச்சயமாக தோல்வியுறும்.

**உங்கள் முன்னேற்றத்தைச் சரிபார்க்கவும்**
1. பிராந்தியவாதத்தைப் பற்றியக் கருத்துகளை குறிப்பிடுக?

## 6.3 ஐரோப்பிய பொருளாதாரச் சமூகம் (The Europen Economic Community-EEC):

ஐரோப்பியப் பொருளாதார சமுதாயம் அமெரிக்கா, சோவியத் யூனியன் ஆகிய நாடுகளின் பொருளாதார ஆதிக்கப் போட்டியிலிருந்து ஐரோப்பிய நாடுகளைக் காப்பதற்காகவே அமைக்கப்பட்டது. இது உறுப்பு நாடுகளுடனான உறவை மட்டும் வலுப்படுத்தாமல் பிற உலக நாடு களுடனும் நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளது. உறுப்பு நாடுகளின் குடியேற்ற ஆதிக்கத்திலிருந்து விடுதலை பெற்ற ஆப்பிரிக்க நாடுகளுடன் வணிக ஒப்பந்தங்கள், சலுகைகள் வழங்குதல் ஆகியவற்றில் முன்னுரிமை அளிக்கிறது. அந்த நாடுகளுக்கும், மற்றும் வளரும் நாடுகளுக்கும் பொருளாதார உதவியளிக்கிறது: தொழில் வளர்ச்சியடைந்த நாடுகளின் பொருட்கள் உறுப்பு நாடுகளின் வாணிபத்தைப் பாதிக்காத வகையில் அந்த நாடுகளுடன் இறக்குமதிக்குச் சமமான ஏற்றுமதிக்கான ஒப்பந்தங்கள் ஏற்படத் தேவையான எச்சரிக்கை நடவடிக்கைகளை இது எடுக்கிறது.

ஒரு உலக சமுதாயம் ஏற்படுவதற்கு முன்னோடியாகவும், ஓர் எடுத்துக்காட்டாகவும் ஐரோப்பிய பொருளாதார சமுதாயம் இருக்கிறது என்று அறிஞர்கள் கருதுகிறார்கள். ஐரோப்பியப் பொருளாதாரக் கூட்டமைப் பின் அமைப்புகளான பாராளுமன்றம், ஐரோப்பிய நீதி மன்றம், பணவியல் அமைப்புகள் ஆகியவை பிற கூட்டமைப்புகளுக்கு வழிகாட்டியாக உள்ளன. அண்மையில் செய்யப்பட்ட மாஸ்ட்ரீச் உடன்படிக்கையின்படி யூரோ (Euro) என்ற பொதுவான நாணயம் புழக்கத்திற்கு வழிவகை செய்யப்பட்டது. அதன் பின் 1999-ஜனவரி-1-ல் யூரோ நாணயம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. எனவே இந்த அமைப்பு ‘ஐரோப்பிய நாடுகளின் கூட்டாட்சி’ என்ற லட்சியத்தை நோக்கி முன்னேறிக் கொண்டிருப்பது போல் தோன்றுகிறது.

ரோம் ஒப்பந்தத்தின் மூலம் ஐரோப்பிய பொருளாதார சமுதாயம் தோற்றுவிக்கப்பட்டது. இது 1958- ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் தேதி முதல் செயல்பட ஆரம்பித்தது. ஒரு பொதுச் சந்தை உருவாக்குவதை ஐரோப்பிய பொருளாதார சமுதாயம் தனது நோக்கமாக கொண்டிருந்தது. “சிறிய ஐரோப்பா“ (Little Europe) என்றழைக்கப்படும். பிரான்சு, மேற்கு ஜெர்மனி, இத்தாலி, பெல்ஜியம், நெதர்லாந்து, லக்ஸம்பர்க் ஆகிய ஆறு நாடுகள் அடங்கிய பகுதியில் வாழும் ஏறக்குறைய 170 மில்லியன் மக்களுக்காக இது கட்டுப்பாடற்ற சந்தையை உருவாக்கியது, இவ்வமைப்பு பதினேழு ஆண்டுகளுக்கு அங்கத்தினர்களிடையே எந்தவித வரி தடைகளும் விதிவரையறைகளும் இல்லாமல் செய்தது. இந்த நடவடிக்கை இறக்குமதியில் ஒரு சீரான வரிவிதிப்பைக் கடைபிடிக்க வழி வகுத்தது. சிறிய ஐரோப்பிய பகுதியில் எந்த இடர்பாடும் தடையும் இன்றி தொழில், முதலீடு, பொருட்கள் போன்றவை இயங்க இவ்வமைப்பு உதவி புரிந்தது. சமுதாய கொள்கைகளை சீரமைக்கவும், சமூகப் பாதுகாப்பு

குறிக்கோள்களை அடையவும் ஐரோப்பிய சமூக நிதி உருவாக்கப்பட வேண்டிய தேவை உணரப்பட்டது. ஐரோப்பிய முதலீட்டு வங்கி உருவாக்க தேவையான ஆயத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன. இச்சமுதாய அமைப்பிற்குட்பட்ட பொருளாதாரத்தில் பின் தங்கிய பகுதிகளை முன்னேற்ற ஒரு வளர்ச்சிக்கான நிதி அமைக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. பொறுப்பாட்சி நிறுவனங்கள் ஒழிக்கப்பட்டன.

ஐரோப்பிய பொருளாதார சமுதாயம் அமைச்சரவை மூலமும், பாராளுமன்ற அசெம்பளி மூலமும் இயக்கப்பட்டது. இந்த இரு அமைப்புக்களும் ஐரோப்பிய நிலக்கரி மற்றும் உருக்கு சமுதாயம், ஹரோப்பிய பொருளாதார சமுதாயம், யூரோட்டம் ஆகிய மூன்றையும் இயக்குகின்றன. ஐரோப்பிய பாராளுமன்ற அசெம்பிளி இந்த மூன்று அமைப்புகளையும் மேற்பார்வை செய்து கட்டுப்படுத்துகிறது. அங்க நாடுகளின் அரசாங்களுக்கிடையேயான தொடர்புகளை அமைச்சரவை பரிபாலிக்கிறது. ஐரோப்பிய நிலக்கரி மற்றும் உருக்கு சமுதாய அமைப்பில் நிர்வாக உயர் அதிகாரம் புரிந்த பணிகளை ஐரோப்பிய பொருளாதார சமுதாயத்தில் பிரஸ்ஸெல்ஸ் என்ற இடத்தில் அமைந்திருக்கும் இணையம் ஆற்றுகின்றது,

## 6.4 ஐரோப்பிய ஒன்றியம˙ (European Union)

இரண்டாம் உலகப்போருக்குப் பின்னர் ஐரோப்பிய நாடுகளின் அரசியல், பொருளாதார நடவடிக்கைகளில் ஒற்றுமையும், கூட்டுறவும் நிலவவேண்டுமென்ற நோக்கத்துடன் பல அமைப்புகள் உருவாயின. முதலாவதாக 1950-ல் பிரான்ஸ் நாட்டின் வெளியுறவு அமைச்சர் ராபர்ட் ஸ்கூமன் (Robert Schuman) என்பவர், “பிரான்ஸ், மேற்கு ஜெர்மனி, பெல்ஜியம், நெதர்லாந்து, லக்சம்பர்க் ஆகிய நாடுகளின் நிலக்கரி, இரும்பு தொழில் நிறுவனங்கள் ஒரு மேலதிகாரித்தின் கீழ் வைக்கப்படும்’’ என்று அறிவித்தார். அதன்படி 1951-ல் இந்த நாடுகள் ஒன்றுகூடி “ஐரோப்பிய நிலக்கரி, எ⁚கு கூட்டமைப்பு’’ (European Coal and steel Community-ECSC) என்ற அமைப்பை நிறுவின. 1958-ல் “ஐரோப்பிய அணு ஆற்றல் கூட்ட மைப்பு (Europeanatomicenergy community) ஒன்றும் அமைக்கப்பட்டது. மேற்கண்ட இந்த அமைப்புகளையெல்லாம் ஒருங்கிணைத்து பொதுச்சந்தை, ஆலோசனை மன்றம், நீதிமன்றம், ஆணையம் (Commission) பாராளுமன்றம் ஆகியவற்றுடன் செயல்படும் அமைப்பிற்கான ஒப்பந்தம் 1965-ல் பெல்ஜியம் நாட்டின் தலைநகரான புருசல்ஸில் (Brussels) உருவானது. இதனைத் தான் ஐரோப்பியப் பொதுச்சந்தை யென்றும் ஐரோப்பிய பொருளாதார சமுதாயம் என்றும் தற்போது ஐரோப்பிய யூனியன் என்றும் கூறுகிறோம்.

### 6.4.1 ஐரோப்பிய ஒன்றியத்தின் நோக்கம்

ஐரோப்பாவில் பல நூற்றாண்டுகளாக போர் இடைவிடாது. நடை பெற்று வந்தன. இதனால் எல்லா ஐரோப்பிய நாடுகளிலும் பொருளாதார வளர்ச்சி தடைபட்டுப் போய்விட்டது. இரண்டாம் உலகப்போருக்குப் பின்னர் அமெரிக்காவும், ரஷ்யாவும் உலக வல்லரசுகளாகிவிட்டன. எனவே ஐரோப்பியப் பொருளாதார மற்றும் அரசியல் துறைகளில் ஒற்றுமையை உருவாக்கி, ஐக்கிய ஐரோப்பாவைத் தோற்றுவிக்க வேண்டுமென்ற, குறிக்கோளுடன் இந்த ஐரோப்பியப் யூனியன் என்ற அமைப்பு நிறுவப்பட்டது.

குறிப்பு

### 6.4.2 உறுப்பு நாடுகள்

ஐரோப்பிய பொருளாதார சமுதாயம் அமைக்கப்படுவதற்கு முக்கியக் காரணமாக இருந்த ஆறு நாடுகள் வருமாறு : பிரான்ஸ், மேற்கு ஜெர்மனி, இத்தாலி, பெல்ஜியம், நெதர்லாந்து, லக்சம்பர்க் ஆகியவை யாகும். 1971-ல் இந்த அமைப்பில் இங்கிலாந்து சேருவதற்கு, அந்த நாட்டு பாராளுமன்றம் அனுமதியளித்தது. 1972 ஜனவரியில் இங்கிலாந்தும், மற்றும் அயர்லாந்து, டென்மார்க், நார்வே ஆகிய நாடுகள் "ஐரோப்பிய பொதுச் சந்தையில" உறுப்பினராயின. எண்ணிக்கை 6-லிருந்து 10ஆனது. 1981-ல் கிரீஸ், போர்ச்சுக்கல் ஆகியவையும் சேர்ந்ததுடன் 12ஆக உயர்ந்தது. இந்த உறுப்பு நாடுகள் தங்கள் நாட்டின் அரசியல் விடுதலை யையும், அமைப்பையும் சமூகப் பண்பாட்டுத் தனித்தன்மைகளையும், தொடர்ந்து பாதுகாப்புடன் மண்டலப் பொது நலனைக் கருத்தில் கொண்டு ஒரே பொருளாதார அமைப்பை உருவாக்க முனைகின்றன. இதன் தலை மையகம் பெல்ஜியம் நாட்டிலுள்ள பிரஸ்ஸல்ஸ் ஆகும். அதன் பிறகு ஆஸ்திரியா, ஸ்பெயின், பின்லாந்து ஆகிய நாடுகள் சேர்ந்து தற்சமயம் மொத்தம் 15 நாடுகள் உறுப்பினர்களாக உள்ளன. இந்த நாடுகளின் மொத்த மக்கள் தொகை 370 மில்லியன் ஆகும். இந்த ஐரோப்பிய ஒன்றிய நாடுகளின் தலைமைப்பதவி ஆறு மாதங்களுக்கு ஒரு முறை மாற்றப்படும்.

### 6.4.3 ஐரோப்பிய யூனியனின் அமைப்பு

ஐரோப்பிய பொருளாதார சமுதாயம் கீழ்க்கண்ட நான்கு அமைப்புகளைக் கொண்டது.

**(a)அமைச்சகம் (Ministry)**

ஐரோப்பிய யூனியனின் உறுப்பு நாடுகள் ஒவ்வொன்றும் ஒரு உறுப்பினரைத் தேர்ந்தெடுத்து அமைச்சகத்திற்கு அனுப்புகிறது. நிலக்கரி, எ∴குத் தொழில் தொடர்பான உற்பத்திக் கட்டுப்பாடு, வாணிபம் போன்ற நடவடிக்கைகள் குறித்த ஆலோசனை களை உறுப்பு நாடுகளுக்கு அமைச்சகம் வழங்குகிறது. இந்த அமைச்சகத்தில் எடுக்கப்படும் முடிவுகள் எல்லாம் ஏகமனதாக எடுக்கப்பட வேண்டும். அமைச்சகத்தின் தலைமைப் பொறுப்பு ஆறு மாதங்கட்கு ஒரு முறை உறுப்பு நாடுகளிடையே மாற்றப்படுகிறது.

**(b) ஆணையம் (Commission)**

உறுப்பு நாடுகள் ஒவ்வொன்றிலிருந்தும் இருவர் ஆணையத்தின் உறுப்பினராக அனுப்பப்படுகின்றனர். ஆணையத்தின் தலைவர் ஒருவர் தேர்ந்தெடுக்கப்படுவார். இந்த ஆணையம் உறுப்பு நாடுகளுக் கிடையே ஏற்படும் சிக்கல்களை பேச்சு வார்த்தை, கலந்துரையாடல் அறிவுரைகள் ஆகியவற்றின் மூலம் தீர்த்து வைக்கத் தேவையான நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

**(c) பாராளுமன்றம் (European Parliament)**

ஐரோப்பியப் பாராளுமன்றத்தின் மொத்த உறுப்பினர் 626 ஆகும். (ஜெர்மனி, 99, பிரான்ஸ், இங்கிலாந்து, இத்தாலி ஆகிய நாடுகள் தலா 87, ஸ்பெயின் 64, நெதர்லாந்து 31, பெல்ஜியம், கிரீஸ், போர்ச்சுக்கல் ஆகியவை தலா 25, ஸ்வீடன் 22, ஆஸ்திரியா 21, டென்மார்க் பின்லாந்து 16, அயர்லாந்து 15, லக்சம்பர்க் 6) அந்தந்த நாடுகளின் தகுதிகளின் அடிப்படையில் உறுப்பினர்களின் எண்ணிக்கை ஒதுக்கப்பட்டுள்ளது. நாடுகள் தங்கள் விருப்பப்படி வாக்காளர் தொகுதிகளை வரையறை செய்து தேர்தல்

குறிப்பு

மூலம் உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்து அனுப்புகின்றன. ஸ்டார்ஸ்பர்க் (ளுவசயளடிரசப) கில் ஒவ்வொரு மாதமும் ஒரு வாரகாலம் கூடுகிறது. இந்தப் பாராளுமன்றத்தில் ''ஐரோப்பியப் பொதுச் சந்தை ஐரோப்பியப் பொருளா தாரக் கூட்டமைப்பு, நிலக்கரி எ.ஃ.கு ஆற்றல் கூட்டமைப்பு, ஐரோப்பிய அணு ஆற்றல் கூட்டமைப்பு ஆகியவற்றை ஒருங்கிணைத்துச் செயல்பட வைப்பதற்கான முறைகள், வகைகள், கோட்பாடுகள்'' ஆகியவை உருவாக்கப்படுகின்றன. இதன் தலைமைச் செயலகம் லக்சம்பர்க்கில் உள்ளது.

### (d) நீதிமன்றம் (European Court)

ஐரோப்பிய நீதிமன்றத்தில் பத்து நீதிபதிகள் பணியாற்று கின்றனர். இந்த நீதிமன்றம் பத்து ஆண்டுகால வரையறைக்குட்பட்டுச் செயல்படு கிறது. ''ஐரோப்பியப் பொதுச் சந்தை நிறுவனங்கள், உறுப்பு நாடுகள், ஆணையம் ஆகியவை செய்து கொள்ளும் ஒப்பந்தங்கள், ஐரோப்பியப் பொதுச் சந்தையின் அரசியலமைப்பு மற்றும் அதன் சட்ட ஒழுங்கு முறைகளுக்கு உட்பட்டவையா என்பதனைக் கவனித்து விசாரித்து நடவடிக்கை எடுக்கிறது. உறுப்பு நாடுகளுக்கு இது பற்றி ஏற்படும் சந்தேகங்கட்கு விளக்கமும் அளிக்கிறது.

## 6.4.4 ஐரோப்பிய யூனியனின் நடவடிக்கைகள்

### (a) தொழிலும், வாணிபமும்

ஐரோப்பியப் பொதுச்சந்தை தனது உறுப்பு நாடுகளுக்கெனத் தனி வாணிபச் சட்டத்தை இயற்றியுள்ளது. இச்சட்டம் அந்த நாடுகளுக் கிடையே சுங்கவரித் தடைகளை நீக்கித் தடையற்ற வாணிபம் நடைபெற உதவுகிறது. இந்த அமைப்பில் சேராத நாடுகளுடன் ஒரே வகையான வாணிப ஒப்பந்தங்களையும், சுங்கவரி முறைகளையும், கொள்கை களையும், பின்பற்ற அமைப்பு நாடுகள் வலியுறுத்தப்படுகின்றன. இவற்றை மீறினால் எழும் சிக்கல்களைத் தீர்க்கவும் மேலாண்மைக் கண்காணிப்புப் பொறுப்பு ஆகியவற்றை நிறைவேற்றவும் சிக்கல் மேலாண்மைத்துறையை'' (Crisis Management) 1980-ல் ஆணையம் நிறுவியது.

1980-81-ம் ஆண்டுகளில் எ.ஃ.கு வாணிபத்தில் பொருளாதாரச் சிக்கல் ஏற்பட்டபோது, உற்பத்திக் குறைப்பு ஒதுக்கீடு முறையையும் (Production Cutbacks Quota) வாணிப ஒழுங்கு நடவடிக்கைகளையும் செயல்படுத்தி நிலைமையைச் சமாளித்தது. சிக்கல் மேலாண்மைத்துறை ''எண்ணை நெருக்கடி (oil crisis), பணவீக்கம், பொருளாதாரப் பின்னிறக்க நிலை (Recession) வேலையின்மை ஆகிய சிக்கல்களைத் தீர்ப்பதற்குப் பல முயற்சிகளை மேற்கொண்டது.

### (b) பணவியல் நிதிக்கொள்கை

செலாவணி, நிதி, வங்கி முறை நடவடிக்கைகளில் பல திட்டங்கள் செயல்படுத்தப்பட முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன. இவற்றின் முக்கிய மான நோக்கம் உறுப்பு நாடுகளின் செலாவணி மதிப்பில் ஏற்படும் ஏற்றத் தாழ்வுகளைத் தவிர்ப்பதும், அன்னியச் செலாவணி மாற்றுவீதத்தை நிலைப் படுத்துவதும் ஆகும். இதற்காக, ''ஐரோப்பியப் பணவியல் முறை'' (European monetary system) 1979 மார்ச் 13-ல் செயல்படுத்தப்பட்டது.

குறிப்பு

ஐரோப்பியப் பணவியல் கொள்கையினாலும், உயர்ந்த வட்டி வீதத் தினாலும் ஐரோப்பிய நாடுகளின் செலாவணி மதிப்பு குறைவதைத் தடுக்க இந்த அமைப்பின் ஆணையம், தனி ஆய்வுக்குழு மூலம் 1981-ல் நிதி நடவடிக்கைகளில் தலையிட்டு நிலைமையைச் சீர்படுத்தியது. தொழில் முனைவோரும் தொழிலாளர்களும் ஐரோப்பியப் பொதுச்சந்தை. உறுப்பு நாடுகளுக்குள் தடையின்றி முதலீடு செய்யவும், வேலை வாய்ப்புகளைப் பயன்படுத்திக் கொள்ளவும் தேவையான சில உரிமைகள் வகுக்கப் பட்டுள்ளன.

ஐரோப்பியப் பணவியல் முறைத் திட்டத்தின் கீழ் ‘ஐரோப்பியப் பணவாக்கக் கூட்டுறவு நிதி’ (European monetary corporation Fund) ஏற்படுத்தப்பட்டது. இதில் உறுப்பு நாடுகளின் மைய வங்கிகள் தங்கள் இருப்புகளில் இருபது. சதவீதம் தங்கம், அமெரிக்க டாலர் ஆகியவற்றைக் ‘‘காப்பாக’’ (reserve) வைக்கும்படி கேட்டுக் கொள்ளப்பட்டன. அதன் மூலம் ஒரு தனிப்பட்ட “ஐரோப்பிய செலாவணி முறையை“ (European currency unity) உருவாக்க முயற்சி செய்யப்பட்டது.

### (e) யூரோ கரன்சி அறிமுகம்:1999

ஐரோப்பிய பொருளாதார சமுதாயத்தின் வரலாற்றுச் சிறப்பு மிக்க நடவடிக்கை என்னவென்றால் அது 1999 ஜனவரி 1-ம் தேதி முதல் அறிமுகம் செய்த ‘யூரோ’ (EURO) கரன்சி ஆகும். ஐரோப்பியக் கண்டத்தில் உள்ள பிரான்ஸ், ஜெர்மனி, இத்தாலி, ஸ்பெயின், ஆஸ்திரியா, நெதர்லாந்து, பெல்ஜியம், லக்சம்பர்க், போர்ச்சுக் கல், பின்லாந்து, அயர்லாந்து ஆகிய 11 நாடுகளுக்கும் பொதுவான யூரோ நாணயம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இதன் மூலம் ஐரோப்பிய பொருளா தார சமுதாயத்தின் நாற்பது ஆண்டு காலக் கனவு நிறைவேறியது. ஐரோப்பிய பொருளாதார சமுதாய நாடுகளுக்குப் பொதுவான ஒரு கரன்சியை உருவாக்க வேண்டுமென்ற விருப்பத்தை முதன்முதலாக வெளியிட்டவர் லக்சம்பர்க் என்பவர் ஆவார். இவர் 1960-ல் தனது விருப்பத்தை வெளியிட்டார். அதன்பின் ஐரோப்பிய பொருளாதார சமுதாய நாடுகளின் தலைவர்களும் அரசு அதிகாரிகளும் மேற்கொண்ட தீவிர முயற்சிகளுக்குப் பிறகு யூரோ கரன்சி அறிமுகப் படுத்தப்பட்டுள்ளது. இந்த ஐரோப்பிய நாணய ஒற்றுமையில் இங்கிலாந்து, டென்மார்க், ஸ்வீடன் ஆகிய மூன்று நாடுகளும் சேரவில்லை .

ஆரம்பத்தில் யூரோ கரன்சி நோட்டுகள் புழக்கத்திற்கு வரவில்லை கி.பி.2002-ஜனவரியில் தான் புழக்கத்திற்கு வந்தது. அதுவரை அந்தந்த நாடுகளின் கரன்சிகளே புழக்கத்தில் இருந்தது. முதல் மூன்று ஆண்டு களுக்கு பங்குகள், கடன்பத்திரங்கள், மின்னணு பரிமாற்றங்கள் கிரெடிட் கார்டுகள் அனைத்தும் யூரோ கணக்கில் வைக்கப்பட்டது. 2002-ஜனவரியில் யூரோ கரன்சிகளும் நாணயங்களும் புழக்கத்திற்கு வந்தபின் தற்போது அந்தந்த நாடுகளில் புழக்கத்தில் உள்ள கரன்சிகள் விலக்கிக் கொள்ளப் பட்டது. ஆனால் இங்கிலாந்து உட்பட மூன்று நாடுகள் இந்த யூரோ கரன்சியை ஏற்றுக் கொள்ளவில்லை. பன்னிரெண்டு நாடுகள் மட்டுமே யூரோ கரன்சியை ஏற்றுக் கொண்டன. இந்த யூரோ கரன்சியின் மூலம் ஐரோப்பிய நாடுகள் வரலாற்றுச் சிறப்புமிக்க பொருளாதார ஒற்றுமையை அடைந்துள்ளன என்பதில் சந்தேகமில்லை.

குறிப்பு

## 6.5 அராப் லீக் (The Arab League) :-

எகிப்து, சிரியா, லெபனோன் ஜோர் தான். ஈராக், சவுதி அரேபியா, சூடான் ஓமன், ஆகிய அரேபிய நாடுகள் அடங்கிய அரேபிய சங்கம் மத்திய கிழக்குப் பகுதியில் காணப் படும் மிக முக்கிய பிராந்திய ஏற்பாடாக கருதப்படுகிறது. 1945-ஆம் ஆண்டு பிரிட்டனின் ஆசியோடும் ஆதரவோடும் இது உருவாக்கப்பட்டது, இவ்வுடன்படிக்கையில் இருபது விதிகள் உண்டு. ஈடுபட்டுள்ள நாடுகளிடையே உறவை வலுப்படுத்தல், அவைகளுக்கிடையே உண்மையான ஒத்துழைப்பை ஏற்படுத்தும் வண்ணம் அரசியல் திட்டங்களை ஒருங்கிணைத்தல், சுதந்திரத்தையும், இறைமையையும் பாதுகாத்தல் மற்றும் பொதுவாக அரேபிய நாடுகளின் பொதுக் காரியங்களைக் கவனித்தல், ஆகியவை இவ்வுடன்பாட்டின் அடிப்படை நோக்கங்கள் என்று இவ்வுடன்பாட்டுச் சட்ட வரைவு ஏற்படுத்தியம்புகிறது.

உறவுகளை ஏற்படுத்த இச்சங்கம் ஏற்பட்டதாக கருதப்பட்டாலும் முக்கியமாக இரு காரியங்களின் அடிப்படையில் இச்சங்கம் எழுந்தது எனலாம், அவை:

- ஆங்கிலோ-பிரெஞ்சு காலனி ஆதிக்கம் மீண்டும் இப்பகுதியும் வராமல் தடுக்க ஒரு ஒருங்கிணைந்த கூட்டு முன்னணியை படைத்தல்
- பாலஸ்தீனத்தில் ஒரு யூத நாடு உருவாவதைத் தடுத்தல் என்பவையாகும். இச்சங்க அமைப்பு அங்கத்தினர்களின் பிரதிநிதிகளைக் கொண்ட ஒரு குழுவைக் கொண்டுள்ளது என்று மூன்றாவது விதி கூறுகிறது.

இக்குழுவில் ஒரு நாட்டிற்கு ஒரு வாக்கு உண்டு. சங்கத்தின் குறிக்கோளை அடைவது, சங்க அங்கத்தினர்கள் தங்களிடையே செய்து கொண்ட உடன் பாடுகளைச் செயல்படுத்துவது பாதுகாப்பை உருவாக்கபன்னாட்டு அமைப்புக்களோடு எவ்வாறு இணைந்து செயல்படுவது என்பதனைத் தீர்மானிப்பது பொருளாதார மற்றும் சமூக உறவுகளை ஒழுங்குபடுத்துவது ஆகியவை இச்சங்கத்தின் முக்கியப் பணிகள். விசேட குழுக்கள் உருவாக்குவதைப் பற்றி நான்காவது விதி கூறுகிறது. கூட்டுறவு நடவடிக்கைகளைக் குறித்த உடன்பாடுகளை விசேட குழுக்கள் உருவாக்கும். இவ்வாறு உருவாக்கப்பட்ட உடன்பாடுகள் குழுவின் முன்னிலையில் வைக்கப்படுகிறது. சமரசம் பேச்சு வார்த்தை ஆகியவைகளின் மூலம் பிரச்சனைகளைத் தீர்ப்பதைப்பற்றி ஐந்தாவது விதி கூறுகிறது.

கெய்ரோ, அரேபிய சங்கத்தின் நிரந்தர தலைமைப் பீடமாக இருக்க வேண்டும் என்று பத்தாவது விதி கூறுகின்றது. அரேபிய சங்க குழு வருடத்திற்கு இருமுறை தனது சாதாரண கூட்டத் தொடரை நடத்தும் விசேட கூட்டத் தொடர்கள் தேவை எழுந்தால் நடத்தப்படும். சங்கம் ஒரு தலைமைச்செயலர், துணைச்செயலர்கள், பணியாளர்கள் போன்றோரைக் கொண்ட ஒரு நிரந்தர செயலகத்தின் துணையோடு பணிபுரியலாம் என்று பன்னிரெண்டாவது விதி கூறுகின்றது. தலைமைச் செயலர் 3ல் 2 பாகம் பெருவாரியோடு நியமனம் செய்யப்படுகின்றார். தலைமைச் செயலர் துணைச் செயலரையும் பிற அலுவர்களையும் சங்க குழுவின் ஆலோசனையைப் பெற்று நியமனம் செய்கின்றார்.

தலைமைச் செயலர் வரவு செலவுக் கணக்குகளைத் தயாரிக்கிறார். மேலும் ஒவ்வொரு அங்கத்தினரின் பங்கையும் கணக்கிடுகிறார். இக்கணக்குகளை குழுவிடம் தலைமைச் செயலர் சமர்ப்பிக்கின்றார். ஒரு நாடு உடன்படிக்கையில் இருந்து தன்னை விடுவித்துக் கொள்ள வேண்டுமென்றால் ஓராண்டுக்கு முன் தகவல் அளித்தல் வேண்டும். உடன்படிக்கையின் விதிகளை மீறிய அங்கத்தினர்களை எந்நேரமும் சங்க அமைப்பிலிருந்து வெளியேற்ற சங்கத்தின் குழு உரிமைப் பெற்றுள்ளது. பொதுவான ஏற்றுமதி மற்றும் இறக்குமதி ஒழுங்கு முறைகளை வளர்க்கவும் பொதுவான தொழில் மற்றும் விவசாய கொள்கைகளை உருவாக்கவும் 1964 ஆம் ஆண்டு ஒரு அரேபிய பொதுச்சந்தை உருவாக்கப்பட்டது. ஆனால் அது 1965-ஆம் ஆண்டு ஜனவரி 1ம் தேதி நடை.முறைக்கு வந்தது. எவ்வாறெனினும் இவ்வமைப்பில் இருந்து 1965 ஆம் ஆண்டு குவைத் தன்னை விடுவித்துக் கொண்டது.

இச்சங்க அமைப்பு போதுமான அளவு ஒற்றுமையோடு திகழ்ந்தது. இதனுடைய அங்கத்தினர்கள் எகிப்திலிருந்து பிரிட்டிஸ் வீரர்கள் திரும்ப அழைக்கப்பட்டதை கூட்டாக ஆதரித்தனர். இதன் அங்கத்தினர்கள் ஓர் முகமாக ஐக்கிய நாட்டுச் சபையில் வாக்களித்தனர். 1945 ஆம் ஆண்டு பிரான்சு, லெபேனான், சிரியா ஆகியப் பகுதிகளை ஆக்கிரமிக்க முயற்சித்த போது இச்சங்கம் இப்பிரச்சனையை ஐக்கிய நாட்டுச் சபையில் சமர்ப்பிக்க வற்புறுத்தியது. ஆனால், அரசியல், இராணுவ மற்றும் பொருளாதாரம் அடிப்படையில் நோக்குங்கால், அரேபிய சங்கம் பலகீனமான ஒன்றாக காணப்பட்டது. அரேபிய சங்கத்தால் இஸ்ரேலின் தோற்றத்தை தடுத்து நிறுத்த முடியவில்லை. சங்க அங்கத்தினர்களின் மத்தியில் பரம்பரை விரோதங்கள் நிலவின. மேற்கு ஆசியாவில் நிலையான ஒருதன்மையையும், சமாதானத்தையும் தோற்றுவிக்கும் ஒரு சக்தியாக செயல்பட இச்சங்கம் தவறிவிட்டது.

## 6.6 ஆப்பிரிக்க சங்கத்தின் அமைப்பு (The Organisation of African Union)

அதிகமான அங்கத்தினர்களைக் கொண்டு பல நோக்கோடு புதிதாக உருவாக்கப்பட்ட ஒரு பிராந்திய அமைப்பாக ஆப்பிரிக்க நாடுகளின் இணையம் காணப்படுகிறது. ஆப்பிரிக்க நாடுகளில் செயல்பட்டு வந்த பல சிறிய பிராந்திய குழுக்கள் ஒருங்கிணைந்து 1963-ஆம் ஆண்டு ஆப்பிரிக்க நாடுகளின் இணையத்தை (OAU) தோற்றுவித்தது. முதலாவது 30 நாடுகள் ஒருங்கிணைந்து தோற்றுவித்த இவ்வமைப்பு, நாளளவில் 10 நாடுகளுக்கு மேற்பட்ட அங்கத்தினரைக் கொண்ட அமைப்பாக வளர்ந்தது. இவ்வமைப்பின் சாஸனம் ஆப்பிரிக்க பகுதியைச் சாராத நாடுகளை இவ்வமைப்பில் சேர்ப்பதைத் தடைச் செய்தது. இன்று எல்லா அங்கத்துவ நாடுகளும் ஆப்பிரிக்க நாடுகளாய் காணப்பட்டது: சுதந்திரமும் இறைமையும் கொண்ட நாடுகள் மட்டும் அங்கத்துவம் பெறும் தகுதி பெற்றன. இவ்வமைப்பின் சாஸனத்தை ஏற்க விருப்பம் தெரிவித்து விண்ணப்பிக்கும் நாடுகளை அங்கத்துவ நாடுகளின் ஒப்புதலை சாதாரண பெரும்பான்மை ஆதரவுடன் பெற்று அங்கத்துவ நாடுகளாய் மாற்றுகின்றனர்.

பின் கூறப்பட்டுள்ள குறிக்கோள்களை ஆப்பிரிக்க நாடுகளின் இணையம் கொண்டு செயல்படுகின்றது. அவை:

- ஆப்பிரிக்க நாடுகளிடையே ஒற்றுமையையும் ஒருங்கிணைவையும் வளர்ப்பது

- முயற்சிகளை ஒருங்கிணைத்து ஆப்பிரிக்க மக்களின் நல்வாழ்வை எய்துவது
- ஆப்பிரிக்க நாடுகளின் சுதந்திரம், இறைமை மற்றும் நில ஒருமைப்பாட்டை பாதுகாப்பது
- ஆசிய பகுதியில் காலனி ஆதிக்கத்தை, ஒழிப்பது
- மனித உரிமை பிரகடனம் மற்றும் ஐக்கிய நாட்டுசபை சாஸனம் போன்றவற்றால் பன்னாட்டு ஒத்துழைப்பை வளர்ப்பது போன்றவையாகும். இவை தவிர்த்து பின் கூறப்பட்டுள்ள அடிப்படைத் தத்துவங்களை தன்னகத்தே கொண்டு இவ்வமைப்பு செயல்படுகிறது. அவை :
- பேச்சு வார்த்தை , மத்தியஸ்தம், நடுவர் தீர்ப்பு போன்ற வழிமுறைகளின் வாயிலாக பிரச்சனைகளுக்கு சுமூகமாக தீர்வு காணுதல்
- அரசியல் கொலை மற்றும் அடக்கு முறை நடவடிக்கைகள் போன்ற வற்றை எல்லா நிலைகளிலும் கண்டித்தல்
- கூட்டுச்சேரா கொள்கையை உறுதிப்படுத்துதல் என்பவையாகும்.

ஆப்பிரிக்க நாடுகளின் இணையம் ஆரம்பிக்கப்பட்டவுடன், பொதுவான வெளி நாட்டுக் கொள்கையை உருவாக்கவும் பொருளாதார வளர்ச்சிக்குகந்த பொதுவான திட்டம் வகுக்கவும், பொது நாணயம் மற்றும் பொது பாதுகாப்பு முறைகளை தோற்றுவிக்கவும் அதிகாரத்துடன் செயல் படக்கூடிய ஒரு மைய அரசியல் அமைப்பினைத் தோற்றுவிக்க கானா ஒரு முயற்சியை மேற்கொண்டது. அதிகாரத்துடன் செயல்படக்கூடியமைய அரசியல் அமைப்பிற்கு தம் இறைமையை சமர்ப்பிக்க ஆப்பிரிக்க நாடுகளின் இணைய சாஸனத்தை ஏற்றுக்கொண்ட நாடுகளின் தலைவர்களுக்கு விருப்பமில்லை. எனவே கானாவின் கட்டு கோப்பான முழு அளவிலான அரசியல் அமைப்பினை நாடுகள் நிராகரித்தது. அதே நேரத்தில் குறிப்பிட்ட பல பணிகளுக்காக மேலோட்டமாக ஒருங்கிணைவதை நாடுகள் வரவேற்றது.

ஆப்பிரிக்க நாடுகளின் இணையத்தின் மேம்பட்ட செயற்பாட்டு அமைப்பாக நாடுகளின் தலைவர்கள் அடங்கிய வருடாந்திர கூட்டம் கருதப்பட்டது. சாதாரண நேரங்களில் வருடத்திற்கு இருமுறை கூடி இவ்வமைப்பின் பொது பணிகளை மேற்பார்வை செய்யும் அமைச்சர் குழு வருடாந்திர கூட்டத்திற்கான நிகழ்ச்சி நிரலை தயாரிக்கின்றது. நெருக்கடி நேரங்களில் அமைச்சர் குழுவின் அவசரக் கூட்டம் கூட்டப் படுகிறது. வருடாந்திர கூட்டத்தில் நாடுகளின் தலைவர்கள் மேற் கொள்ளும் முடிவுகளை அமைச்சர் குழு செயல்படுத்துகின்றது. இவ்வமைப்பின் தொடர்ச்சியான பணிகளை நிரந்தரமர்ன பொது செயலகம் ஒன்று நடத்தி வருகின்றது. இச் செயலகம் கொள்கை உருவாக்கும் அமைப்புகளுக்கு உறுதுணையாய் திகழ்கின்றது. பொது செயலகம் ஒரு நிர்வாக பொதுசெயலரின் தலைமையின் கீழ் இயங்கிவருகின்றது. ஆப்பிரிக்க நாடுகளின் இணைய அமைப்போடு ஐந்து விசேட செயற்பாட்டு ஆணையங்களும் ஒரு மத்தியஸ்த ஆணையமும் இணைக்கப்பட்டுள்ளது.

பல நேரங்களில் ஆப்பிரிக்க நாடுகளின் இணையம் ஐக்கிய நாட்டு சபையுடன் இணைந்து செயல்பட்டு வருகின்றது. வெள்ளையரின் ஆதிக்க மிக்க ரொடீஷியாவின் மீது தடைகள் விதிக்க ஐக்கிய நாட்டு சபையை ஆப்பிரிக்க நாடுகளின் இணையம் கட்டாயப்படுத்தியது. தன்னுடைய இராணுவ மற்றும் பொருளாதார பலகீனத்தை உணர்ந்து, ஆப்பிரிக்க

நாடுகள் OUA-யின் வாயிலாக பொது அசெம்பளி மற்றும் பாதுகாப்பு சபையில் வாதாடி இயான் ஸ்மித்தின் அரசாங்கத்தை கவிழ்க்க ஐக்கிய நாட்டு சபையின் தடைகளை கொண்டுவர நடவடிக்கைகள் மேற்கொண்டன 1965-ஆம் ஆண்டு ரொடீஷியாவில் தன்னுடைய முடிவுகளைச் செயல்படுத்த பாதுகாப்பு சபை ஆப்பிரிக்க நாடுகளின் இணையத்தை நாடியது. மேலும் 1965-ஆம் ஆண்டு பொருளாதார மற்றும் சமூக ஒத்துழைப்பை ஏற்படுத்த ஆப்பிரிக்க நாடுகளின் இணையமும் ஆப்பிரிக்காவின் ஐக்கிய நாட்டு பொருளாதார ஆணையமும் ஒரு ஒப்பந்தத்தில் கையொப்ப மிட்டன. அது ஆப்பிரிக்காவின் பொருளாதார மற்றும் சமூக வளர்ச்சிக்கு தொடர்ந்து அடிகோலியது.

ஆப்பிரிக்க நாடுகளின் இணையம் பல நெருக்கடிகளை எதிர் நோக்கியது. அது கலைக்கப்பட்டு விடும் என்ற அச்சம் ஆரம்பத்தில் நிலவியது. அதனுடைய நிரந்தர நலனை நிலையாக இப்பொழுது மதிப்பிட முடியாவிட்டாலும் அரசியல், பொருளாதார, சமூக நலன் பேண அது பல காரியங்களை ஆற்றியுள்ளது என்பது மறுக்கமுடியாத உண்மை. அது ஆற்றிய பணிகளை ஆராயுமிடத்து, தொடர்ந்து பயனுடையதாகவும் திகழும் என்பது மறுக்க முடியாத உண்மை.

**உங்கள் முன்னேற்றத்தைச் சரிபார்க்கவும்**

2. ஐரோப்பிய யூனியனின் அமைப்புகளை குறிப்பிடுக?
3. அராப் லீக் பற்றி குறிப்பிடுக?

## 6.7 உங்கள் முன்னேற்றத்தைச் சோதிக்கும் வினாக்களுக்கான விடைகள்

- பிராந்திய அமைப்புக்களை ஆதரிப்போர் தம்மை நடைமுறைவாதிகள் என்று பறைசாற்றுகின்றனர். குறிப்பிட்ட வரையறை செய்யப்பட்ட சில குழுக்களுடைய பிரச்னைகளைத் தீர்வுச் செய்ய பன்னாட்டு அமைப்புக்களைக்காட்டிலும் பிராந்திய அமைப்புக்கள் தான் சாலச் சிறந்தது ஏனென்றால், இவ்வமைப்புக்கள் சமுதாய உணர்வை அங்கத்தினர்களிடம் தோற்றுவித்து ஒருங்கிணைந்து பணியாற்ற அவர்களைத் தூண்டுகிறது. ஆனால், அங்கத்துவத்தை உலகெங்கும் பரப்பினால் வெகுதொலைவில் எழும் பிரச்னைகளைப் பற்றி நாடுகள் பற்றில்லாமல் செயல்படும். தொலைவில் அமைந்திருக்கும் நாடுகள் பிற பிரச்சனைகளில் கவனம் செலுத்தும் இந்நிலையில் பன்னாட்டு ஏற்பாடு தோல்வியுறும்.எவ்வாறு பிராந்திய அமைப்புக்கள் தங்கள் பணிகளை ஆற்றவேண்டும் என்பதில் பிராந்திய சிந்தனையாளர்களிடையே கருத்து வேறுபாடுகள் - நிலவுகிறது. கூட்டமைப்பு சிந்தனையாளர்கள் கூட்டமைப்பு அணுகுமுறையை எடுத்தியம்புகின்றனர். மேம்பட்ட ஒரு தேசீய அவைக்கு அங்கத்தினர்கள் தங்கள் இறைமையில் ஒரு பகுதியை அர்ப்பணிக்க வேண்டும் என்று இவர்கள் கூறுகின்றனர்.
- ஐரோப்பிய யூனியனின் அமைப்புகளாவன அமைச்சகம், ஆணையம் பாராளுமன்றம் (European Parliament), நீதிமன்றம் (European Court).
- எகிப்து, சிரியா, லெபனோன் ஜோர் தான். ஈராக், சவுதி அரேபியா, சூடான் ஓமன், ஆகிய அரேபிய நாடுகள் அடங்கிய அரேபிய சங்கம் மத்திய கிழக்குப் பகுதியில் காணப் படும் மிக முக்கிய பிராந்திய

குறிப்பு

ஏற்பாடாக கருதப்படுகிறது. 1945-ஆம் ஆண்டு பிரிட்டனின் ஆசியோடும் ஆதரவோடும் இது உருவாக்கப்பட்டது,

## 6.8 சுருக்கவுரை

ஐரோப்பாவில் பல நூற்றாண்டுகளாக போர் இடைவிடாது. நடை பெற்று வந்தன. இதனால் எல்லா ஐரோப்பிய நாடுகளிலும் பொருளாதார வளர்ச்சி தடைபட்டுப் போய்விட்டது. இரண்டாம் உலகப்போருக்குப் பின்னர் அமெரிக்காவும், ரஷ்யாவும் உலக வல்லரசுகளாகிவிட்டன. எனவே ஐரோப்பியப் பொருளாதார மற்றும் அரசியல் துறைகளில் ஒற்றுமையை உருவாக்கி, ஐக்கிய ஐரோப்பாவைத் தோற்றுவிக்க வேண்டுமென்ற, குறிக்கோளுடன் இந்த ஐரோப்பியப் யூனியன் என்ற அமைப்பு நிறுவப்பட்டது.

ஒரு உலக சமுதாயம் ஏற்படுவதற்கு முன்னோடியாகவும், ஓர் எடுத்துக்காட்டாகவும் ஐரோப்பிய பொருளாதார சமுதாயம் இருக்கிறது என்று அறிஞர்கள் கருதுகிறார்கள். ஐரோப்பியப் பொருளாதாரக் கூட்டமைப் பின் அமைப்புகளான பாராளுமன்றம், ஐரோப்பிய நீதி மன்றம், பணவியல் அமைப்புகள் ஆகியவை பிற கூட்டமைப்புகளுக்கு வழிகாட்டியாக உள்ளன. அண்மையில் செய்யப்பட்ட மாஸ்ட்ரீச் உடன்படிக்கையின்படி யூரோ (Euro) என்ற பொதுவான நாணயம் புழக்கத்திற்கு வழிவகை செய்யப்பட்டது. அதன் பின் 1999-ஜனவரி-1-ல் யூரோ நாணயம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. எனவே இந்த அமைப்பு 'ஐரோப்பிய நாடுகளின் கூட்டாட்சி' என்ற லட்சியத்தை நோக்கி முன்னேறிக் கொண்டிருப்பது போல் தோன்றுகிறது.

அராப் லீக் ˙சங்க அமைப்பு போதுமான அளவு ஒற்றுமையோடு திகழ்ந்தது. இதனுடைய அங்கத்தினர்கள் எகிப்திலிருந்து பிரிட்டிஸ் வீரர்கள் திரும்ப அழைக்கப்பட்டதை கூட்டாக ஆதரித்தனர். இதன் அங்கத்தினர்கள் ஓர் முகமாக ஐக்கிய நாட்டுச் சபையில் வாக்களித்தனர். 1945 ஆம் ஆண்டு பிரான்சு, லெபேனான், சிரியா ஆகியப் பகுதிகளை ஆக்கிரமிக்க முயற்சித்த போது இச்சங்கம் இப்பிரச்சனையை ஐக்கிய நாட்டுச் சபையில் சமர்ப்பிக்க வற்புறுத்தியது. ஆனால், அரசியல், இராணுவ மற்றும் பொருளாதாரம் அடிப்படையில் நோக்குங்கால், அரேபிய சங்கம் பலகீனமான ஒன்றாக காணப்பட்டது. அரேபிய சங்கத்தால் இஸ்ரேலின் தோற்றத்தை தடுத்து நிறுத்த முடியவில்லை. சங்க அங்கத்தினர்களின் மத்தியில் பரம்பரை விரோதங்கள் நிலவின. மேற்கு ஆசியாவில் நிலையான ஒருதன்மையையும், சமாதானத்தையும் தோற்றுவிக்கும் ஒரு சக்தியாக செயல்பட இச்சங்கம் தவறிவிட்டது.

ஆப்பிரிக்க நாடுகளின் இணையம் பல நெருக்கடிகளை எதிர் நோக்கியது. அது கலைக்கப்பட்டு விடும் என்ற அச்சம் ஆரம்பத்தில் நிலவியது. அதனுடைய நிரந்தர நலனை நிலையாக இப்பொழுது மதிப்பிட முடியாவிட்டாலும் அரசியல், பொருளாதார, சமூக நலன் பேண அது பல காரியங்களை ஆற்றியுள்ளது என்பது மறுக்கமுடியாத உண்மை. அது ஆற்றிய பணிகளை ஆராயுமிடத்து, தொடர்ந்து பயனுடையதாகவும் திகழும் என்பது மறுக்க முடியாத உண்மை.

## 6.9 முக்கிய வார்த்தைகள்



பிராந்தியவாதத்தின் கருத்து(The Idea of Regionalism) – ஐரோப்பிய பொருளாதாரச் சமூகம்( European Economic Community) (EEC)

குறிப்பு

ஐரோப்பிய ஒன்றியம்(European Union) - அராப் லீக் (The Arap League) - ஆப்பிரிக்க சங்கத்தின் அமைப்பு(The Organisation of African Union) (OAU)

## 6.10 சுயமதிப்பீடு வினாக்கள் மற்றும் பயிற்சிகள்

**சுருக்கமான கேள்விப் பதில்கள்**

1. ஆப்பிரிக்க நாடுகளின் இணையம் (OAU) குறிப்பிடுக?
2. யூரோ கரன்சி பற்றி குறிப்பு வரைக?

**விரிவான கேள்விப் பதில்கள்**

1. பிராந்தியப் பற்றின் பொருள் விளக்கத்தையும் முக்கியத்துவத்தையும் விளக்குக?
2. ஐரோப்பிய யூனியனின் சாதனைகளைப் பற்றி கட்டுரை வரைக?

## 6.11 மேலும் படிக்க


- Amate, C. O. C. (1986). ***Inside the OAU: Pan-Africanism in Practice***. London: Macmillan.
- El-Ayouty, Yassin, ed. (1994). ***The Organization of African Unity after Thirty Years***. Westport. CT: Praeger.
- Elias, Taslim Olawale. (1964). ***The Commission of Mediation, Conciliation, and Arbitration of the Organisation of African Unity.*** British Yearbook of International Law 40: 336–54.
- Elias, Taslim Olawale. (1965). ***The Charter of the Organization of African Unity.*** American Journal of International Law.

குறிப்பு

# அலகு 7 கூட்டுச் சேராக் கொள்கை

7.0 அறிமுகம்
7.1 நோக்கங்கள்
7.2 கூட்டுச் சேராக் கொள்கை
7.2.1 கூட்டுச் சேராக் சொள்கையின் தோற்றம்
7.2.2 கூட்டுச் சேராக் கொள்கையின் நோக்கமும், அதன் தன்மையும்
7.3 பொதுநல அரசுகள்
7.3.1 பொது நல அரசுகள் அமைப்பின் வளர்ச்சி
7.3.2 பொது நல அரசுகள் அமைப்பில் புதிய நாடுகள் சேருதல்
7.3.3 காமன்வெல்த் அமைப்பின் நோக்கம்
7.3.4 காமன்வெல்த்தின் தன்மை
7.3.5 காமன்வெல்த் அமைப்பின் செயல்பாடுகள்
7.3.6 காமன்வெல்த் நாடுகளின் தலைவர்கள் கூட்டம்
7.3.7 பொது நல அரசின் துறைகள்
7.4 அமெரிக்க மாநிலங்களின் அமைப்பு (OAS)
7.5 பெட்ரோலிய ஏற்றுமதி நாடுகளின் அமைப்பு(OPES)
7.6 தென்கிழக்கு ஆசிய நாடுகளின் சங்கம் (ASEAN)
7.7 பிராந்திய ஒத்துழைப்புக்கான தெற்காசிய சங்கம்(SAARC)
7.8 இந்தியா பிரேசில் தென் ஆப்பிரிக்கா(IPSA)
7.9 பிரேசில், ரஷ்யா, இந்தியா, சீனா, தென் ஆப்ரிக்கா(BRICS)
7.10 உங்கள் முன்னேற்றத்தை சோதிக்கும் வினாகக்ள்
7.11 சுருக்கவுரை
7.12 முக்கிய வார்த்தைகள்
7.13 சுய மதிப்பீடு வினாக்கள் மற்றும் பயிற்சிகள்
7.14 மேலும் படிக்க

## 7.0 அறிமுகம்

சுதந்திர இந்தியாவின் வெளிநாட்டுக் கொள்கையான ‘‘கூட்டுச் சேராக் கொள்கை’’ திடீரென உருவாக்கப்பட்டது அல்ல. இந்தியாவின் நீண்ட காலப்பண்பாட்டிலிருந்தும், சமீப கால வரலாற்று நிகழ்ச்சிகளிலிருந்தும், சுதந்திரப் போராட்ட காலங்களிலும் மற்றும் வெவ்வேறு காலகட்டங்களில் தோற்றுவிக்கப்பட்ட கொள்கைகளின் மூலம் உருவாக்கப்பட்டது. காலனி ஆதிக்க எதிப்பும், ஏகாதிபத்தியக் கொள்கைக்கு எதிர்ப்பும், இனவெறிக் கொள்கைக்கு எதிர்ப்பும் இந்திய சுதந்திரப் போராட்டத்தின் ஒரு அங்கமாகவே இருந்து வந்தன. 1946 செம்டம்பர் 7ம் தேதி நேரு இந்தியாவின் வெளிநாட்டுக் கொள்கை பற்றி அரச பிரதிநிதியின் நிர்வாகக் குழுவின் துணைத் தலைவர் என்ற முறையில் பேசும்போது பிற நாடுகளுடன் ஒத்துழைத்து உலக அமைதிக்கும் விடுதலைக்கும் பாடுபடுவதே எங்கள் லட்சியமாகும். முடிந்த வரையில் உலக அரசியலாதிக் கூட்டுகளே கடந்த உலகப் போருக்குக் காரணமாயின. அது மேலும் பல மோசமான விளைவுகளை ஏற்படுத்தலாம். நாங்கள் குடியேற்ற ஆதிக்கத்தையும் நிற வெறியையும் எதிர்க்கிறோம். பிறர் மீது ஆதிக்கம் செலுத்த விரும்பவில்லை .உலகில் பல போட்டிகளும் வெறுப்புணச்சிகளும் இருந்தாலும் உலகப் பொது நல அரசை உருவாக்குவதே எங்கள் குறிக்கோள், என்று தனது கருத்துக்களை வெளியிட்டார். இதுவே சுதந்திரமடைந்த பின்பு இந்தியாவின் வெளிநாட்டுக்

கொள்கையாக அமைந்துவிட்டது. 1948- மார்ச் 8-ம் தேதி இந்தியப்பாராளுமன்றத்தில் பேசும்போது ''நாங்கள் உலக நாடுகளுடன் சமாதானமாக வாழ விரும்புகிறோம்''. அகில உலக மக்களிடம் அமைதியுடனும், நட்பு மனப்பான்மையுடனும் அணுகு கிறோம். எனவே ஒரு சாராருடன் சேர்ந்து மற்றொரு சாராரை ஏன் பகைகக் வேண்டும். அதனால் எங்களுக்கு ஏன் பாதகம் வர வேண்டும் என்று குறிப்பிட்டார் நேரு.

## 7.1 நோக்கங்கள

உலகில் பதட்ட நிலையைத் தணிப்பது, பன்னாட்டுத் தொடர்பு களில் முனைப்புடன் பங்கேற்பது, பன்னாட்டுப் பிரச்சனைகளை அதன் தகுதி அடிப்படையில் மதிப்பீடு செய்வது, பொருளாதார சமூக வளர்ச்சிக்கு தங்கள் சக்தியை செலவு செய்வது, சுதந்திரத்தையும் தேசியத் தன்மை யையும் பாதுகாப்பது, படைப் பெருக்கத்தில் ஈடுபடாமலிருப்பது, வெளி நாட்டுப் போர்களில் தலையிடாமலிருத்தல் ஆகியவையே கூட்டுச் சேராக் கொள்கையின் முக்கிய நோக்கங்கள் ஆகும். எனவே தான் இக்கொள்கையை இந்தியா ஏற்றுக் கொண்டது. பன்னாட்டு அரசியலில் காமன்வெல்த் அமைப்பின் முக்கியத்துவத்தைக் குறைத்து மதிப்பிட்டு விடக்கூடாது. இந்த அமைப்பின் மூலம், நாடுகள் ஒன்றுக்கொன்று உதவி செய்யும் மனப்பான்மை ஏற்படு கிறது. இந்த அமைப்பிலுள்ள முன்னேறிய நாடுகள் வளர்ந்து வரும் நாடு களுக்கு உதவி செய்கின்றன. இந்த அமைப்பின் பலம், அதன் உறுப்பு நாடுகள் சுதந்திரம், ஜனநாயகம், தேச ஒற்றுமை ஆகியவற்றில் கொண்டுள்ள நம்பிக்கையின் அடிப்படை யிலேயே அமைந்துள்ளது. கூட்டு முயற்சிக்கு இந்த அமைப்பு ஓர் எடுத்துக்காட்டாக அமைந்துள்ளது. பிராந்திய அமைப்புகள் அல்லது எற்பாடுகள் சில முக்கியப் பிரச்னைகளைக் கலந்தாலோசித்து தீர்வு செய்யும் நோக்கத்தோடு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

## 7.2 கூட்டுச் சேராக் கொள்கை

இரண்டாம் உலகப் போர் முடிந்தவுடன் அமெரிக்கா, ரஷியா ஆகிய இரு வல்லரசுகளின் கடுமையான கருத்து வேறுபாடு எழுந்தது. இது கொள்கை மாறுபாடு காரணமாக மேலும் வலுப்பட்டது இறுதியில் அது ஆதிககப் போராட்டமாக உருவெடுத்தது. இதனையே "கெடுபிடிங் போர்" என்று கூறுகிறோம். இப்போரில் பிரிட்டன், பிரான்ஸ், பெல்ஜியம், பாக்கிஸ்தான், லத்தீன் அமெரிக்க நாடுகள் ஆகியவை அமெரிக்காவை ஆதரித்த போது, போலந்து, பல்கேரியா, ருமேனியா போன்ற கிழக்கு ஐரோப்பிய நாடுகளும் சீனாவும் ரஷியாவை ஆதரித்து நின்றன. இவ்வாறு உலகில் இருபெரும் வல்லரசுகள் தலைமையில் இரு கூட்டுக்கள் உருவாயின. இக்கூட்டுக்கள் ராணுவக கூட்டுக்களாக மாறின. அமெரிக்கா, நேட்டோ, சீட்டோ போன்ற ராணுவக் கூட்டுக்களை உருவாக்கிய போது ரஷியா வார்சா கூட்டை உரு வாக்கியது. இது உலகில் தட்ட நிலையை உண்டு பண்ணியது. இன்னொரு உலகப் போர் மூண்டு விடுமோ என்ற அச்சத்தை ஏற்படுத்தியது. முதல் இரு உலகப்போர்களுக்கு முன்பும் இத்தகைய கூட்டுக்கள் உருவாகியிருந்தது குறிப்பிடத்தக்கது. எனவே, உலகில் அமைதியை நிலைநாட்ட வேண்டுமென்றால் இத்தகைய கூட்டுக்களில் சேராமல் நடுநிலையுடன் செயல்பட வேண்டும் என்ற எண்ணம் ஏற்பட்டது. அதன் விளைவாகத் தோற்றுவிக்கப்பட்டதே கூட்டுக் சேராக் கொள்கையாகும்.

குறிப்பு

### 7.2.1 கூட்டுச் சேராக் சொள்கையின் தோற்றம்

புகழ் மிக்க கூட்டுச் சேரா இயக்கம், ஜவகர்லால் நேரு அவர்கள் சீரிய முயற்சியாலும், எகிப்திய நாட்டு நாசர், யுகோஸ்லாவியாவின் டிட்டோ ஆகியோரின் ஒத்துழைப்பினாலும் 1950 ஆம் ஆண்டுக்குப் பின் துவக்கப்பட்டது. கூட்டுச்சேரா இயக்க நாயகர்களின் முக்கிய நோக்கம், வல்லரசுகளின் பிடியில் சிக்காது, அவர்களது இராணுவ ஒப்பந்தங்களில் இடம் பெறாது இயங்கு. தலேயாகும். இக்கொள்கையின் உறுப்பினர் நாடுகள், சுதந்திரமான, தன்னிச்சையான, வெளி உறவுக் கொள்கையைப் பின்பற்ற விரும்பினர். அணி சேரா நாடுகளின் முன்னேற்றத்திற்கும், ஆர்வத்திற்கும் இவ்வியக்கத்தில் அடுத்த முக்கிய நோக்கம், சில நாடுகளின் குடியேற்ற ஆதிக்கக் கொள்கை யினை ஒழித்து அதன் மூலம் பல சுதந்திர நாடுகளை உருவாக்குதல் ஆகும். வெறும சண்துடைப்புக்காகவும், பொருளாதார நன்மைக்காகவும், புதிய குடியேற்றக கொள்கையையும், கூட்டுத் தலைமை கொள்கையையும் நடைமுறைப்படுத்தப்படாது என உறுதி செய்யப்படவும் அணிசேராக் கொள்கையினர் எண்ணினர். தன்னையே நம்பிச் செயல்படுவதினாலும், தங்களுக்குள்ளான ஒற்றுமைப்பாங்கினாலும், ஒருவருகொருவர் செய்து கொள்ளும் உதவியினாலும், கூட்டுச்சேரா நாடுகள், அதிகார வர்க்க நாடுகளின் ஆதிக்க வெறிக்கு அறைகூவல் விட்டன. இவ்வியக்கம், ஆசியா ஆப்பிரிக்கா, பசிபிக் பகுதிகளில் ஏராளமான திறமை வாய்ந்த சுதந்திர அரசுகளை உருவாக்க முடிந்தது. குடியேற்ற ஆதிக்கக கொள்கையால் சிறைப்பட்டிருந்த நாடுகள் சுதந்திரபூமிகளாய் மாறின. தொழில் துறையில் முன்னேறிய நாடுகளுக்கு எதிராகவும் அணிசேரா நாடுகள் தீரமுடன் செயல்பட்டு வருகின்றன. பொருளாதாரக் காரணத்திற்காகப் பயன்படுத்தப்படும் புதிய குடியேற்றக் கொள்கை, புதிய சுதந்திரமான நாடுகளின் உள்நாட்டு விவகாரங்களில் தலையிடுதல் போன்றவற்றையும் அணிசேரா நாடுகள் எதிர்த்தன.

பெல்கிரேடில் துவக்க மாநாடு நடத்த பதினெட்டு ஆண்டுகளில் ஏராளமான நாடுகள் கூட்டுச்சேராக் கொள்கையால் ஈர்க்கப்பட்டன, உறுப்பினர்களின் எண்ணிக்கையும் 25 லிருந்து 96 ஆக நான்கு மடங்கு பெருகியது உண்மையில், உலக நாடுகளில் பெரும்பான்மையானவற்றின் விருப்பத்திற்குரி 'அரசியல் கருத்தாகவும் இக்கொள்கை அமைந்திருந்தது ஈரான், பாகிஸ்தான் போன்ற நாடுகள் கூட பன்னாடுகளின் இராணுவ உடன்பாடுகளிலிருந்து தங்களை விடுவித்துக் கொண்டு அணிசேராக் கொள்கையின் உறுப்பினர் நாடுகளாயின. இதன் உறுப்பினர் நாடுகளாக அண்மையில் சேர்ந்தவை பொலிவியா, கிரேனடா, சுரிநாம், நிகாராகுவர் ஆகிய நாடுகளாகும். ஸிமபாப்வே, நாட்டு பிஷப் முசோரெவாவின் அரசாங்கத்தை எதிர்த்து செயல்பட்ட இயக்க அணியும் இதில் உறுப்பினர் ஆவதற்கு அனுமதிக்கப்.பட்டது. ஒருமித்தமனமுடைய நாடுகளுக்குள்ளான கூட்டமைப்பு, எதிர் குடி.யேற்றக் கொள்கை, எதிர் பகுத்தறிவுவாத இயக்கம் அமைதியான வாழ்க்கைநிலை ஆகியவைபற்றிய கருத்துப்பரிமாற்றம், படைக்குறைப்பு, மூன்றாவது உலக third world) நாடுகளின் பொருளாதார நிதிக கொள்கை இவையே அணிசேரா இயக்கத்தின் அடிப்படை நோக்கங்களாயிருந்தன. உண்மையில் அணிசேராக கொள்கை மூன்றாவது உலக (Third would) நாடுகளின் கொள்கையை ஒத்திருக்கின்றது. இதனது இன்றைய முக்கிய குறிக்கோள் பொருளாதாரப் பிரச்சனையே.

கூட்டுச் சேராாடுகள் தங்களுக்குள் கூட்டமைப்பை ஏற்படுத்தியுள்ளன, எனினும், அவ்வமைப்பு, மேற்கத்திய இராணுவ அமைப்புகளில் ஒன்றான வட அட்லாண்டிக் உடன்பாட்டு அமைப்பு (NATO)

**குறிப்பு**

போன்ற வார்சா அமைப்பு போன்ற சோவியத இராணுவக் கூட்டமைப்போ அல்ல. எனவே, அணிசேரா நாடுகள் எந்த ஒரு பொது உடன்பாட்டுக்கோ அல்ல ஒரு பொதுப் பாதுகாப்புக்கோ கட்டுப்பட்டவைகள் அல்ல. அவைகள், சில பொது உணர்வுகளுக்கும், அரசியல் தத்துவத்திற்கு மட்டுமே கட்டுப்பட்டவர்களாவர். எனவே அணிசேர் நாடுகளின் கூட்டமைப்பு அணிசேரா சங்கம் என்று அழைக்கப்படலாமேயன்றி கூட்டுச்சேரா இராணுவ அமைப்பு என அழைக்கப்படலாகாது. எல்லா விவகாரங்களிலும் அவர்கள் பொதுவான கொள்கையை அல்லது நிலையைக் சடைப்பிடிக்க வேண்டுமென்பதில்லை. இருப்பினும் இந்த கூட்டுச் சேரா நாடுகளுக்கிடையிலேயே நேரிடையான தகராறுகள் பிரதேசப் போட்டிகள் பொருளாதாரப் பிரச்சனை சாரணமான சிக்கல்கள ஆகியவையும் மலிந்திருந்தன, எகிப்து, அராபிய நாடுகளுக்கிடையிலான (சூடான், ஓமன் நீங்களான) போட்டிகள், கம்போடியா - வியட்நாம் சிக்கல், இந்தோ சீனா பற்றிய அணிசேரா நாடுகளின் கருத்து வேற்றுமைகள், இந்தியா பாகிஸ்தான் போர் போன்றவை மேற்கூறிய கருத்துக்கு எடுத்துக் காட்டுகளாகும். ஆப்பிரிக்காவில் கியூபாவின் இராணுவ நடவடிக்கைகளை யூகோஸ்லாவியா கடுமையாக விமரிசித்தது.

உண்மையில், இன்றைய கூட்டுச்சேரா நாடுகளின் அமைப்பானது ஜவகர்லால் நேரு, நாசர், டிட்டோ ஆகியோரின் கோட்பாடுகளை விட்டு வெகு தூரத்திற்கு விலகிச் சென்று விட்டது. இன்று விரைவு நடவடிக்கைகளும் சொந்த விருப்பு வெருப்புக்களும் இக்கொளகையின் குறிக்கோள்களாக மாறிவிட்டன. அணிசேரா நாடுகளின் பொது நோக்குகள் காலத்தால் அழிந்து வருகின்றன. பெரும் செல்வமிக்க நாடுகள் தங்களை அண்டியுள்ள ஏழை நாடுகளுக்கு உதவி செய்து வருகின்றன. பொதுவான முன்னேற்றத்திற்காக அல்ல. அணிசேரா நாடுகள் பொதுவான பிரச்சனைகள் பற்றித்தான் விவாதிக்க வேண்டியுள்ளது. கருத்து வேற்றுமை இல்லாத பிரச்சனைகளில் மட்டுமே செயல்பட வேண்டியுள்ளது. எந்த ஒரு அணிசேரா உறுப்பு நாட்டின் விவசாரங்களில் தலையிடக்கூடிய பிரச்சனையையும் விவாதிப்பது இயலாததாகியுள்ளது. மேற்கத்திய குடியேற்றக் கொாகை, பேரரசுத்தன்மை இன ஒதுக்கல் கொள்கை போன்றவையும் புதிய பன்னாட்டுப் பொருளாதார அமைப்பு ஏற்படுத். துவதும், சமுதாய, பொறுளாதார நீதித்துவமும் போன்றவைகள் மட்டுமே அணி சேரா நாடுகளின் மாநாடுகளில் விவாதிக்கக் கூடியவைகளாக அமைந்துள்ளன.

1954, ஏப்ரல் 25 ஆம் நாள் ஆசிய தலைமை அமைச்சர்களின் கூட்டம் ஒன்று கொழும்பில் நடை பெற்றது. அக்கூட்டத்தில் உரையாற்றிய நேரு அவர்கள் இன்றைய உலகில் மிக முக்கிய பிரச்சனையாக இருப்பது. பொதுஉடைமைக்கருத்துடைய இரஷ்யாவுக்கும், ஏகாதிபத்திய நாடான அமெரிக்காவுக்கும் இடையேயான கெடுபிடிப்போரே ((oldwar) யாகும் என்றார். இந்த மாநாட்டில் கலந்து கொண்ட பெரும்பான்மையான நாடுகள், இந்த இரு பெரும் அதிகாரவர்க்க நாடுகளுடன் அணிசேராக் கொள்கையைப் பின்பற்ற வேண்டும் என்று முயற்சி எடுத்துக் கொண்டன. அவை ஆணைகள் மூலமும் கட்டாயத்தின் மூலமும் கூட்டுசேரா நாடுகளை அடிபடுத்தாத அளவு, அணி சேரா நாடுகள் சுயமாக இயங்கவேண்டும், என்று கூறினார். இங்கு தான் முதன் முதலாக “கூட்டுச்சேரா“ (Non-Alisned) என்ற சொல் உபயோகப் படுத்தப்பட்டது. இது அணி சேரா இயக்கம் எனவும் அழைக்கப்படுகிறது.

நேருவின் கூட்டுச் சேராக் கொள்கையான இருதுருவ போராட்டங்களை, இரண்டுக்கும் மத்தியிலான ஒரு அமைதிமண்டலத்தை ஏற்படுத்துவதன் மூலம் குறைக்கவேண்டும் என்பதும், பாதுகாப்பு என்பதும் ஒரு பழமையான கனவாக மாறிவிட்டது. நேரு, நாசர், டிட்டோ ஆகியோரின்

*Self-Instructional Material*

துவக்ககாலக் செயல்களும், 25 சுதந்திரநாடுகளின் கூட்டமைப்பும், பல பிரச்சனைக்குரிய விஷயங்களையும் பன்னாட்டுக் குழப்பமான விவகாரங்களையும் சந்திக்க வேண்டியிருந்தது. பெல்கிரேடு (செப்டம்பர் 1961) கெய்ரோ (அக்டோபர் 1969), லூசாகா (செப்டம்பர் 1970), அல்ஜியர்ஸ், (செப்டம்பர் 1973), கொழும்பு (ஆகஸ்டு 1976), ஹவானா (செப்டம்பர் 1979), டில்லி (1983 மார்ச்) ஆகிய இடங்களில் அணிசேரா நாடுகளின் கூட்டு மாநாடுகள் நடத்தப்பட்டு உலகப் பிரச்சனைகள் பற்றி விவாதிக்கப்பட்டன. அதிகாரவர்க்கத்தினருக்கு இடையிலான சமமான இடைவெளி என்ற கோட்பாட்டை யூகோஸ்லோவிய நாடு வலியுறுத்தியது. ஆனால் இக்கோட்.பாட்டை நேருவும், நாசரும் ஏற்றுக்கொள்ள மறுத்தனர். உதாரணமாக, 1960 இல், நியூயார்க்கில் நேரு அவர்கள் பேசும்போது, இரு பெரும் அணிகளுக்கிடையிலான நடுநிலைமை என்ற கேள்விக்கே இடமில்லை. அப்படிப்பட்ட நடுநிலைமை என்பது அணிசேரா நாடுகளின் நோக்கமும் அல்ல என்று எடுத்துரைத்தார். இக்கருத்து டிட்டோவாலும் ஏற்றுக் கொள்ளப்பட்டிருந்தது.

கூட்டுச் சேரா நாடுகளின் ஆறாவது மாநாடு, 979- ஆம் ஆண்டு செப்டம்பர் 9இல், ஹவானா (கியூபா) வில் நடந்து முடிந்தது இறுதி நிமிட ஒப்பந்தங்கள் மூலமாக, மாநாடு, தோல்வியுடன் முடியக்கூடிய நிலைமாறியது. எகிப்து நாடு இஸ்ரேலுடனும், அமெரிக்காவுடனும் உடன்பாடு கொண்டு விட்டது என்பதால் அந்நாடு அணிசோா நாடுகளின் கூட்டமைப்பில் உறுப்பினராக இருக்கத் தகுதியற்றது என கியூபா கூறியது. கம்போடியா பிரச்சனையில் சீனா, வியட் நாம் நாடுகளின் நிலையினால் கம்போடியாவும் உறுப்பினராக இருக்கத் தகுதியற்றது எனவும் கூறப்பட்டது. துவக்கத்தில், மாநாட்டில் ஏற்பட்ட கூச்சல் குழப்பங்களிலிருந்து, கியூபா நாடு, அணி சேரா இயக்கத்திற்கு பொது வுடைமைச் சார்புடைய கருத்து வடிவம் கொடுக்கின்றது என்று யூகித்துக். கொண்ட அணிசேரா நாடுகள், எங்கே ஹவானா மாநாடு அணிசேராக் கொள்கையின் அடிப்படை நோக்கத்தையே அழித்து அவ்வியசக்கததிற்கு சாவுமணி அடித்து விடுமோ என்று அஞ்சின. ஆனால், அந்நாடுகள் அஞ்சியது போன்று எந்தவித செயலும் நடந்து விடவில்லை. மொத்தத்தில், ஹவானா மாநாட்டுக்குப்பின்பு கூட்டுச் சேர இயக்கம் தீங்கின்றி வளரத்துவங்கியது. பெருங்கேடு விளைவிக்கும் பிளவோ அணிசேராக் கொள்கையிலிருந்து விலகவோ, பொதுவாகப் புரிந்துகொள்ளும் மனப்டான்மைக் குறைவோ, இயக்கத்தைத் துவக்கியவர்களின் கருத்துக்கு மாறுபட்ட நிலையோ எதுவும் ஏற்பட்டுவிடவில்லை.

கூட்டுச்சேராக் கொள்கையின் நன்மைகளும் எடுத்துக் காட்டப்பட்டன. அதன் எதிரிகளும் வரிசைப்படுத்தப்பட்டன. 1969 ஆம் ஆண்டு கெய்ரோவில் நடந்த மாநாட்டுக்குப்பின் கொடுக்கப்பட்ட செய்தியைப் போன்று ஹவானா அறிவிப்பு பேரரசுக் கொள்கை, குடியேற்றக் கொள்கை, புதிய குடியேற்றக் கொள்கை போன்றவையே பன்னாட்டுச் சிக்கல்களாக இருந்து, அமைதிக்கும், பாதுகாப்புக்கும் அச்சமூட்டுவதாக அமைந்துள்ளன. இப்படிப்பட்ட கொள்கைகளை எதிர்த்துப்போராடுவதே அணிசேரா நாடுகளின் முக்கிய நோக்கமாகும் இக்கொள்கை மீண்டும் ஹவானாவில் தீவிரப்படுத்தப்பட்டது.

முந்திய சந்தர்ப்பங்கள் போன்றே, கூட்டுச் சேரா நாடுகள், உடனடியாக பேரரசு இராணுவ தளம் அமைத்தலைத்தடுக்கவும், இராணுவ உடன்பாடுகளுக்கு முடிவுகட்டவும் வேண்டிய செயல்களில் உதவுமாறு மற்ற நாடுகளுக்கு அழைப்பு விடுத்தன. பேரரசுத் தன்மை, குடியேற்றக்கொள்கை, இன ஒதுக்கல் கொள்கை, பாலஸ்தீனக் குடியேற்றக் கோட்பாடு (Z1 msm);

இனவெறி போன்றவை அணிசேரா இயக்கத்தின் முக்கிய எதிரிகள் என அல்ஜியர்ஸ் என்ற இடத்தில் நடத்தப்பட்ட மாநாட்டில் முடிவெடுக்கப்பட்டது. அணிசேராக் கொள்கையின் உறுப்பினர் நாடுகளில் பெரும்பான்மையானவை 1979. இல் கொழும்பில் நடத்திய மாநாட்டிலும், ஹவானாவில் நடந்த மாநாட்டிலும் அதே கொள்கையை வலியுறுத்தி ஆதிக்க நாடுகளின் கட்டாயப் படுத்தும் எண்ணத்தையும் எதிர்த்தனர். எல்லாவிதமான குடியேற்ற ஆதிக் கத்திற்கும், மற்றவிதமாக ஆதிக்கத்திற்கும், மற்றவிதமாக ஆதிக்க அடிமைப் படுத்தலுக்கும், பொருளாதார விரயத்திற்கும் எதிராக இறுதிவரை போராடுவது என உறுதி எடுத்துக் கொண்டன. எதேச்சதிகாரத்திற்கும், குடியேற்றக் கொள்கைக்கு மட்டும் எதிராக அவர்கள் போராட விரும்பவில்லை நாடுகளிடையே சமமற்ற உறவுகளை உண்டாக்கி அதன் மூலம் கட்டுப்பாட்டை ஏற்படுத்த விரும்பிய நாடுகளை எதிர்க்கத் தலைப்பட்டன.

இவ்வாறு தொடர்ந்த ஆண்டுகளில் கூட்டுச் சேரா நாடுகள் உறுதியான செல்வாக்கான கொள்கையுடன் செயல்படத் தொடங்கின. கியூபா நாடு, ஹவானா மாநாட்டின் மூலமாக அணிசேரா நாடுகளின் இயக்கத்தை பொதுவுடமைத் தத்துவக் கருத்தின் சார்புடையதாக ஆக்க முயன்றபோதும்கூட இவ்வியக்கம் பொதுவுடமைக்கு ஏதுவாகச் செயல்படவில்லை. ஹவானா மாநாட்டின், பொருளாதார வகையிலான பிரகடனம் சிறப்பு அம்சம் பொருந்தியதாக அமைந்திருந்தது. மூன்றாவது உலக நாடுகள் தங்களுக்கு பொருளாதார அநீதி அளிக்கப்படுவதாக எண்ணுகின்றன. தொழில் வளமான செல்வச் செருக்குடைய நாடுகள் தங்களது செல்வவளத்தை மனித இனத்தின் பெரும்பான்மையுடன் பகிர்ந்து கொள்ள முன்வரவில்லை என மூன்றாவது உலக நாடுகள் வருத்தப்படுவதாக உள்ளது. ஒவ்வொரு பன்னாட்டு மாநாட்டுக் கூட்டத்திலும் பன்னாட்டு பொருளாதார அமைப்பினை உருவாக்க வேண்டும் எனமூன்றாவது உலக நாடுகள் வற்புறுத்தி வருகின்றன. ஆனால் செல்வமிக்க நாடுகளோ செவிடர் போன்று இருந்துவிடுகின்றனர். அல்லது அந்நோக்கத்தையே தம் வன்மையால் புறக்கணித்து விடுகின்றனர்.

வடக்கு - தெற்கு உரையாடல் (North - South disalogue) மூலமாக புதிதாக தெற்கு - தெற்கு உரையாடல் என்பது தோன்றியது. இது எரிபொருள் இறக்குமதி செய்யும் மூன்றாவது உலக நாடுகளுக்கும் எரிபொருள் உற்பத்தி செய்யும் நாடுகளுக்கும் இடையேயுள்ள உரையாடல் ஆகும். எரிபொருள் விலை உயர்வின் காரணமாக பொருளாதாரத்தால் பாதிக்கப்பட்ட ஆசியா-ஆப்பிரிக்க நாடுகளின் கீழ் புதிய தலைமை ஒன்று உருவாகியது. இவ்வெரிபொருள் பிரச்சனை இன்று உலகை ஆட்டிப்படைக்கின்றது. மூன்றாவது உலக நாடுகள் இதில் பெரும்பான்மையாகப் பாதிக் கப்பட்டவையாகும்.

இந்த எரிபொருள் பிரச்சனை குறித்து ஹவானாவில் இந்தியாவின் தலைமையில் கலந்து ஆலோசனை செய்யப்பட்டது. இக்கூட்டத்தில் பல பரிந்துரைகள் மேற்கொள்ளப்பட்டன. ஹவானா அறிக்கைப்படி வளர்ந்து வரும் அணிசேரா நாடுகளிடையே ஒற்றுமையை வளர்த்து, கூட்டு மூயற்சியின் மூலம் தன்னிறைவு பெறுவது என்று முடிவு செய்யப்பட்டது. இதன் படி, தேவைக்கு அதிகமான உற்பத்தியுடைய கூட்டுச்சேரா நாடுகள், அப்பொருட்களை ஏற்றுமதி செய்யும்போது கூட்டுச்சேரா நாடுகளுக்குள முதல் முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். இந்த நாடுகளுக்கு அனுப்பியது போக மீதியிருந்தால் வேற்று நாடுகளுக்கு அனுப்பலாம் என தீர்மானிக்கப்பட்டது. மூன்றாவது உலக நாடுகளுக்குள் எரிபொருள் உற்பத்தி செய்கின்ற நாடுகள், எரிபொருள் உற்பத்தி செய்யாத ஆனால்

**குறிப்பு**

அப்பொருள தேவைப்படுகின்ற நாடுகளுக்கு எரிபொருளை ஏற்றுமதி செய்தல் வேண்டும் எனதீர்மானம் நிறைவேற்றப்பட்டது. ஆனால் இதனை எவ்வாறு செயல் முறைப்படுத்துவது என்பது பற்றி அம்மாநாட்டில் முடிவு செய்யப்படவில்லை. தவிர, இந்த எரிபொருள ஏற்றுமதி நாடுகள் ஏழை நாடுகளுக்கு எரிபொருள் உயர்விலைக்கு ஏற்ப ஈட்டுத்தொகை கொடுக்கவேண்டும் எனவும் தீர்மானிக்கப்பட்டது. மூன்றாவது உலக நாடுகளின் வளர்ச்சிக்கு கூட்டுமுயற் சியில் ஆராய்ச்சி செய்வது எனவும் முடிவெடுக்கப்பட்டது.

இந்த ஹவானா மாநாட்டில் இரண்டு முக்கியமான முடிவுகள் எடுக்கப்பட்டன. அவை கூட்டுச்சேரா நாடுகளின் பெருமையை உயர்த்தின. அணி சேராக் கொள்கையினை அழிவிலிருந்தும் காப்பாற்றின. கம்போடியாவை அணிசேரா இயக்கத்தில் உறுப்பினராக சேர்த்துக் கொள்வதைத் தடுக்க ரஷ்யாவும், கியூபாவும் எடுத்துக் கொண்ட முயற்சிகள் பலனளிக்கவில்லை இது குறித்த எடுத்த முடிவு ரஷ்யாவுக்குப் பேரிடியாக அமைந்தது. இப் பிரச்சனைக்கு முடிவு எடுக்கப்படாமலேயே கைவிடப்பட்டது. கம்போடியா குறித்து மறுமுடிவு எடுக்கும் வரை அணிசேரா அமைப்பில் கம்போடியாவுக்கு உரிய அனைத்து நிலைகளும் பூர்த்தி செய்யப்படாமலே இருக்கும்.

ஹவானா மாநாட்டின் பிரகடனத்தின் மீதுசீன நாடு ஒரு அறிக்கை வெளியிட்டது. அவ்வறிக்கையில் "கூட்டுச்சேரா நாடுகளின் எதிர்ப்பின் காரணமாக நாம்பினில் இயங்கிவரும் பொம்மை அரசின் பிரதிநிதி மாநாட்டில் கலந்து கொள்ள முடியவில்லை. ஆனால் ஜனநாயக கம்போடியா அரசின் பிரதிநிதியிம், கியூபா ரஷ்யா நாடுகளின் சூழ்ச்சியால் அங்கு கலந்து கொள்ள முடியவில்லை. இப்பிரச்சனைக்கு முடிவுகாணாமல் ஒத்தி வைத்த காரணத்.தால் அணி சேரா நாடுகளுக்குள் பிரிவு ஏற்படாமல் தற்காலிகமாகத் தடுக்கப்பட்டது.

மற்றொரு முக்கியமான முடிவு எகிப்து பற்றியதாகும். எகிப்து அதிபரான அன்வர்சாதத் இஸ்ரேல் நாட்டுடன் செய்து கொண்ட ஒப்பந்தத்திற்கு பின்னால். அரபு நாடுகள், எகிப்தினை ஒதுக்குவதற்கு முடிவு செய்தனர். கொழும்பில் நடை பெற்ற அணிசேரா நாடுகளின் வெளிநாட்டு அமைச்சர்கள் மாநாட்டில் அரபு நாடுகள் எகிப்தினை இவ்வியக்கத்திலிருந்து வெளியேற்ற முயற்சித்தனர். ஆனால், இதனை இந்தியா வன்மையாக எதிர்த்தது. அன்றைய பிரதம அமைச்சர் மொராஜி தேசாய், எகிப்தினை வெளியேற்றினால் ஹவானா மாநாட்டில் தான் கலந்து கொள்ள மாட்டேன் என அறிவித்தார். கொழும்பு மாநாடு இதுபற்றி சரியான முடிவெடுக்க மறுத்து விட்டது இது பற்றி ஹவானாவில் விவாதிக்கலாம் என விட்டு விட்டாது. ஹவானாவில் விளக்கமாக விவாதித்தது. அரபு நாடுகளும் அதன் ஆதரவு நாடுகளும் எகிப்து இஸ்ரேல் உடன்படிக்கையை வன்மையாக கண்டித்தன. இறுதியாக, இந்த உடன்பாட்டிற்குத் துணையாக இருந்த அமெரிக்காவின் தலையீட்டை வன்மையாகக் கண்டித்தன.

பெரும்பாலான அரபுநாடுகள் அதிபர் சாதத் மீதும், அமெரிக்க ஐக்கிய நாடுசள் மீதும் தங்களது வருத்தத்தைத் தெரிவித்துக் கொண்டன. எகிப்தினை அணிசேரா இயக்கத்திலிருந்து வெளியேற்றுவது என்பது வெற்றி பெறவில்லை. அவ்வாறு செய்தால் குழப்பம் ஏற்படும். இது தேவையற்ற ஒன்று. எனவே இது பற்றி முடிவு செய்ய 1981. இல் இடைக்காலக் குழு ஒன்று, நியமிக்கப்பட்டது. எனினும், கம்போடியா, எகிப்து குறித்த பிரச்சனைகள் தீர்க்கப்பட. வில்லை. இப்பிரச்சனைகள் மட்டும் திசை திருப்பப்பட்டன.

*Self-Instructional Material*

ஜெருசலமை இஸ்ரேலின் தலைநகர் என்று ஏற்றுக் கொண்ட நாடுகளுடன் உறவு கொள்வதில்லை என அணிசேரா நாடுகள் முடிவெடுத்தன. ஹவானா உறுதிமொழியின் படி, ஜெருசலம் அரபு நாடுகளுக்கே கொடுக்கப்பட வேண்டும். அப்போதுதான் அமைதி ஏற்படும் எனக்கூறப்பட்டது. இந்த தீர்மானத்தை பாகிஸ்தான் கொண்டுவந்தது. இது 35000 வார்த்தைகளைக் கொண்ட ஒரு அறிக்கையாகும். ஏறத்தாழ 95 நாடுகளிலிருந்து 51 தலைவர் களும், 45 வெளிநாட்டு அமைச்சர்களும் கலந்து கொண்ட இம்மாநாட்டில் கியூபாவின் தலைவரான பிடல்காள் ட்ரோ என்பவர் அடுத்த மூன்று ஆண்டு களுக்கு அணிசேரா நாடுகளின் தலைவராகத் தேர்ந்தேடுக்கப்பட்டார். அவரது தலைமை அவரது நாட்டிற்கு அடுத்த, மூன்று ஆண்டுகளுக்குப்பயனில்லை. ஆனால் இந்த இயக்கம் வரவேற்கத்தக்கது என பிடல்காஸ்டிரோ, உறுதியளித்தார். இவவியக்கத்தை உருவாக்கிய தலைவர்களில் மார்ஷல் டிட்டோவும், எகிப்தின் அதிபர் அன்வர் சதாத்தும் அன்மையில் இயற்கை எய்தினர்.

1983-ல் டில்லியில் இந்தியப் பிரதமர் இந்திராகாந்தி தலைமையில் கூடிய ஏழாவது மாநாட்டில் 101 நாடுகள் பங்கு பெற்றது குறிப்பிடத்தக்கது. இது கூட்டுச் சேராக் கொள்கையின் வளர்ச்சியைக் காட்டுகிறது. ஹவானா மாநாட்டைப் போல் இது ரஷிய சார்பு மாநாடாகக் காட்சியளிக்கவில்லை எனினும் கம்பூச்சியாச் சிக்கலுக்குத் தீர்வு காண இயலவில்லை அந்நாட்டிற்கு ஒதுக்கப்பட்ட இடம் காலியாகவிடப்பட்டது. கூட்டுச் சேரா நாடுகளான ஈரான், ஈராக் நாடுகளிடை மூண்ட போரையும் தீர்த்து வைக்க இயலவில்லை. அரசியல் ரீதியில் சிறப்பான முடிவுகள் எதுவும் எடுக்கப்படவில்லை. ஆனால் பொருளாதார ஒத்துழைப்புப் பற்றி சில உருப்படியான கருத்துக்கள் கூறப்பட்டன,

**கூட்டுச் சேராக் கொள்கையின் நோக்கமும், அதன் தன்மையும்**

இந்தியா சுதந்திரமடைந்த போது ஏராளமான பிரச்சனைகளை எதிர் நோக்கியது. பிரிவினையின் விளைவால் ஏற்பட்ட அகதிகள் பிரச்சனை, பொருளாதாரப் பிரச்சனைகளை எதிர்நோக்கியது. இந்திய சமஸ்தானங் களை இணைத்தல், அரசியலமைப்பை உருவாக்குதல். தேர்தல் நடத்துதல் போன்ற பல பிரச்சனைகளைச் சமாளிக்க வேண்டியதிருந்தது எனவேதான் எந்த நாட்டுடனும் கூட்டுச் சேராமல் “கூட்டுச் சேராக்'' கொள்கையைப் பின்பற்றியது இந்தியா. உலகில் பதட்ட நிலையைத் தணிப்பது, பன்னாட்டுத் தொடர்பு களில் முனைப்புடன் பங்கேற்பது, பன்னாட்டுப் பிரச்சனைகளை அதன் தகுதி அடிப்படையில் மதிப்பீடு செய்வது, பொருளாதார சமூக வளர்ச்சிக்கு தங்கள் சக்தியை செலவு செய்வது, சுதந்திரத்தையும் தேசியத் தன்மை யையும் பாதுகாப்பது, படைப் பெருக்கத்தில் ஈடுபடாமலிருப்பது, வெளி நாட்டுப் போர்களில் தலையிடாமலிருத்தல் ஆகியவையே கூட்டுச் சேராக் கொள்கையின் முக்கிய நோக்கங்கள் ஆகும். எனவே தான் இக்கொள்கையை இந்தியா ஏற்றுக் கொண்டது.

கூட்டுச்சேராக் கொள்கை இந்திய சுயமரியாதையையும், சுயசார்பையும், தன்னம்பிக்கையையும் மையமாகக் கொண்டது ஆகும். ஆனால் உலக சூழ்நிலையில் எந்த நாடும் தனித்து இயங்க முடியாது. கூட்டுச்சேராக் கொள்கை என்பது அகில உலக உறவு நிலையில் தனித்து நின்று கொள்வ தில்லை. மதில் மேல் ஏறிக் கொள்வதோ, தனித்து ஒதுங்கிக் கொள்வதோ ஆகாது. மாறாக கூட்டுறவுக் கொள்கையின் அடிப்படையில் ஆக்கரீதியாகச் சுறுசுறுப்புடன் செயல் பட்டு அமைதியையும், பாதுகாப்பையும் உருவாக்க முயல்வதே ஆகும். ஏதாவது ஒரு முகாம்

குறிப்பு

ஏற்கனவே தீர்மானித்துவிட்ட கொள்கையைக் கண்மூடித்தனமாகப் பின்பற்றாமல் ஒவ்வொரு பிரச்சனை யையும், அதன் தன்மையையும் ஆராய்ந்து நமது கருத்துப்படி செயல்படுவதாகும். “சுதந்திரம்,சட்டம்,அமைதி ஆகியவற்றுக்கு ஊறு ஏற்பட்டு ஆக்கிரமிப்பு நேரும் போது நடுநிலைக் கொள்கையை இந்தியா பின்பற்றிக் கொண்டு இருக்காது” என்று நேரு கூறினார். (Where Fredom is Manaced, Justice threatened, or when aggenssion takes lace Inida shall not and cannot be neutral)

1970 ஆம் ஆண்டில் கொடுமையான ஆயுதக் கட்டுப்பாடு குறித்த பேச்சுவார்த்தைகள் (Strategic Arms Limitation Talks) யுகம் தோன்றிய காரணத்தால், பொதுவுடமை நாட்டுக்கும் ஏகாதிபத்திய நாட்டுக்குமிடையிலிருந்த கெடுபிடிப்போர் முடிந்து விட்டது எனப் பலர் கருதுகின்றனர். அமைதியுகம் தோன்றிவிட்டதாகவும் நம்புகின்றனர். உண்மையில் இந்தக் கெடுபிடிப்போர் ஓய்ந்து விடவில்லை. ஏனெனில் இந்த இரு நாடுகளுமே ஒன்றை ஒன்று போட்டி போட்டுக் சொண்டு அச்சுறுத்தல் மூலமும், நேரிடையாகவும், ஆதிக்க விரிவாக்கக் கொள்கை மூலமும் பகைத்துக் கொண்டே. வருகின்றன. உதாரணமாக 1980 இல் ஆப்கானிஸ்தானத்தில் ஆதிக்க செல்வாக்கு பெறுவதற்காகப் பாடுபட்டனர். பழைய குடியேற்றப் பேரரசுயுகம், புதிய குடியேற்றக் கொள்கையான பொருளாதார செல்வாக்கினாலும், கட்டுப்படுத்துதல் சொள்கையாலும் வெளியேற்றப்பட்டுவிட்டது. பழைய யுகத்தை விரட்டிய இக்கொள்கைகளே இன்றைக்கு பெரும் நாடுகளின் முக்கிய அரசியல் கொள்கைகளாகும். இன்றைய பன்னாட்டு அமைப்பும் இவ்வாறே “அமைந்துள்ளது. அணி சேரா இயக்கம், அமைதிப்படுத்தும் கொள்கையின் நல்லமைப் பிற்காகப் பெரும் பங்கெடுத்துக் கொண்டுள்ளது. இவ்வியக்கம் தொடர்ந்து செயல்பட்டாலதான் அமைதிக் கொள்கை வெற்றியடைய முடியும் பெரும் நாடுகளின் புதிய குடியேற்றக் கொள்கையான பொருளாதாரச் செல்வாக்கினையும் கட்டுப்படுத்த முடியும், நாடுகளின் இறைமையையும் அரசியல் சுதந்திரத்தையும் காப்பதற்கும், பொருளாதார சுதந்திரத்தைக் காக்கவும், முன்னேற்றவும், மூன்றாவது உலக நாடுகளின் நன்மைக்கும், அணிசேரா இயக்கத் தத்துவம் தவிர்க்க முடியாத பயனாக அமைகின்றது. இவ்வியக்கத்தை உருவாக்கப் பெரும்பாடுபட்ட நாடுகளில் முதன்மையாயிருந்த பாரதநாடு, இவ்வியக்கத்தை அழிவிலிருந்து காக்கின்ற பெரும் பொறுப்பினைப் பெற்றுள்ளது.

## 7.3. பொதுநல அரசுகள் (COMMONWEALTH)

உலக வரலாற்றில் தோன்றி மலர்ந்து, மறைந்த எத்தனையோ பேரரசுகளின் வரலாறுகளை நாம் சந்திக்கிறோம். எதிரிகளின் படையெடுப்பால் அழிந்தவை சில பேரரசுகள் மிலேச்சர்களின் (Barbarians) தாக்குதல்களால் வீழ்ந்தவை சில தம்மிடையே உள்ள உட்பூசல்களால் அழிந்தவை சில தமது வலுவின்மையால் மடிந்தவை சில: தனித்தனியே பிரிந்து தம்முள் சிறுசிறு நாடுகளாகப் பிளவுபட்டவை சில உலக வரலாற்றிலேயே ஆங்கிலப் பேரரசு ஒன்றில் தான் வெளியார் தூண்டுதலோ, அன்றி நீண்ட காலஆட்சிக் கலைப்போ இன்றி, ஆண்ட மக்கள் தாமாகவே முன் வந்து, ஆளப்பட்ட மக்கள் மீது தமக்குள்ள ஆளுமையை விட்டுக்கொடுத்து, அவர்களை உரிமை பெற்ற நாட்டினராய் ஆக்கினர். பேரரசிலிருந்து விடுதலை பெற்ற அந்நாடுகளில் பல, விடுதலையின் பின்னரும் தொடர்ந்து, தாமே முன்வந்து, தமது முன்னாள் பேரரசுடன் அரசியல் நெருக்கம் கொண்டிலங்கக் காண்கிறோம். ஒப்பதும் மிக்கதும்

*Self-Instructional Material*

**குறிப்பு**

இல்லாததான இவ்வேற்பாட்டிற்குச் சான்றாக இலங்குவதே பொது நல அரசுகள் (Commonwealth of Nations) அமைப்பாகும்.

கலைந்துப் போன ஆங்கிலப்பேரரசிலிருந்து அமைதிவழியில் தோன்றிய ஒரு பன்னாட்டு அமைப்பே காமன்வெல்த் என அழைக்கப்படும் பொது நல அரசுகள் அமைப்பாகும். தொடர்ச்சியையும், மாறுதல்களை யும் ஒருங்கிணைத்துப் பரிணாம நியதிகளுக்கிடையே அமைத்துக்கொள்ளும் மனிதகுல அறிவு நுட்பத்திற்கான நிலைத்த சான்றாக இவ்வமைப்பு விளங்குகிறது. நிலத்தாலும் கலாச்சாரத்தாலும் மாறுபட்ட 48 சுதந்திர நாடுகள் தமது பொது அனுபவம், வரலாறு, எதிர்பார்ப்புக்கள் ஆகியவற்றின் அடிப்படையில் தாமாகவே ஒருங்கிணைந்து, இத்தகைய ஒரு பன்னாட்டு ஒத்துழைப்பு, நல்லெண்ணச் சோதனைக்குக் காமன்வெல்த் என்ற உருவில் தம்மை ஆட்படுத்திக் கொண்டுள்ளனர். இந்தப் பொது நல அரசு ஏறத்தாழ உலகின் அனைத்துப் பகுதிகளிலும் பரவிக் கிடக்கிறது. ஜமாய்க்காவிலிருந்து டிரினிடாட் வரையிலும், கரிபியன் கடலிலுள்ள டொபாகோவிலிருந்து ஆஸ்திரேலியா, நியூசிலாந்து மற்றும் தென் பசிபிக் பெருங்கடலிலுள்ள மேற்கு சமோவா வரையும் பரவியுள்ளது.

முதலாவதாக இவ்வமைப்பினையொட்டியவையும், வேறுபட்ட விதங்களில் பொருள் கொள்ளப்படுபவையுமான சில சொற்கள், தொடர்கள் குறித்த விளக்கம் பெறுதல் நலம் பயக்கும். சில பகுதிகளில் காமன்வெல்த் என்னும் சொல்லுக்கு இன்னும் ஆங்கிலப் பேரரசு என்றே பொருள் கொள்ளும் வழக்கம் நீடிக்கிறது. ஆங்கிலப் பேரரசில் இன்னும் நீடித்து, இன்னும் தன்னாட்சி பெறாத நாடுகளைக் குறிக்க ஆங்கிலப் பேரரசு என்ற தொடரையும், அப்பேரரசிலிருந்து விடுதலை பெற்று சமஉரிமையற்ற நாடுகள் தாமாகவே மனமுவந்து ஆங்கில அரசுடன் அரசியல் தொடர்பு கொள்ள ஏற்படுத்திக் கொண்ட அமைப்பான பொது நல அரசுகள் (காமன்வெல்த்) என்ற தொடரையும் நாம் குழப்பிக் கொள்ள கூடாது. ஆங்கில அரசின் ஆதிக்கத்திலிருந்து இன்னும் விடுதலை பெறாத அத்தகைய நாடுகளின் தொகுப்பைக் குறிக்கச் சில வேளைகளில் நாம் ஆங்கிலக் குடியாதிக்கப் பேரரசு (British Colonial Empire) என்னும் தொடரை ஆளுகிறோம். கூறுமிடத்து பொதுநல அரசுகள், மற்றும் பேரரக என்னும் சொற்கள் அவசியமற்றவை என்றே தோன்றுகின்றது. காரணம் உறுப்பு நாடுகளிற் சிலவற்றின் முற்றும் விடுதலை பெறாத நிலையும் சேர்ந்தே பொதுநல அரசில் இடம் பெறுகிறது. “டொமினியன்“ என்பதும் இப்போது வழக்கில்லாத ஒரு சொல்லாகும். காரணம் உறுப்பு நாடுகள் அவற்றின் பெயராலோ அன்றி உறுப்பினர் என்ற அளவிலோ தான் சுட்டப்படுகின்றன. எவ்வாறிருப்பினும், பிற உறுப்பு நாடுகளுடன் ஒப்பிடும் போது ஆங்கில அரசு, சரிநிகரான உறுப்பு நாடுகளுள் முதல் உறுப்பினராக உள்ளது என்றே கொள்ளலாம். இந்த முதற்சிறப்பும் கூட ஆங்கில அரசு இவ்வமைப்பினைத் தோற்றுவித்தது என்ற அடிப்படை யிலேயே அளிக்கப்படுகிறது. குடியேற்றம் மற்றும் “சார்புநாடு” என்ற சொற்களும் கூட ஒரு நாடு அடிமைப்பட்டுக் கிடக்கும் நிலையைக் குறிப்பதாகத் தோன்றினாலும், காலப்போக்கில் விடுதலை பெறும் போது, இத்தொடர்களும் பொருளற்றவையாகிவிடும். இந்நாளில் பொதுநல அரசுகள் அமைப்பில் முற்றும் தன்னாட்சி பெற்றுத் தாமே முன்வந்து உறுப்பினர்களாகியுள்ள முதிர்ந்த உறுப்பினர்கள் மட்டுமல்லாது, குடியேற்றங்கள் சார்பு நாடுகள் என்று கருதப்படும் இளம் உறுப்பினர் களும் சேர்ந்தே உள்ளனர்.

*Self-Instructional Material*

காமன்வெல்த் என்ற வார்த்தை முதலில் இங்கிலாந்திற்கும் அதன் குடியேற்ற நாடுகளான கனடா, ஆஸ்திரேலியா, நியுசிலாந்து, தென் ஆப்பிரிக்கா ஆகியவற்றிற்குமிடையிலான தொடர்பைக் குறிப்பதாகவே

அமைந்திருந்தது. 19-ம் நூற்றாண்டின் பிற்பகுதியிலிருந்து இங்கிலாந்தின் குடியேற்ற நாடுகள் ஒன்றன்பின் ஒன்றாக சுயாட்சியும், சுதந்திரமும் பெற ஆரம்பித்தன. ஆனால் இங்கிலாந்து அப்படி சுதந்திரம் பெற்ற நாடுகளுடன் இணைந்து ஐக்கியமாகவும், நல்லுறவுடனும் தொடர்ந்து இருப்பதற்காக அமைக்கப்பட்ட அமைப்பின் பெயரே 'பிரிட்டிஷ் காமன்வெல்த' அல்லது 'பிரிட்டிஷ் பொது நல அரசுகள்' என்பதாகும். 1947-க்கு பிறகு இந்தியா போன்ற நாடுகள் இந்த அமைப்பில் சேர்ந்தபின் பிரிட்டிஷ் என்ற பெயர் எடுக்கப்பட்டு 'காமன்வெல்த' என்று அழைக்கப்பட்டு வருகிறது.

'பொதுநல அரசுகள்' 53 சுதந்திர நாடுகளைக் கொண்ட ஒரு அமைப்பாகும். கனடா, ஆஸ்திரேலியா, நியுசிலாந்து ஆகிய நாடுகள் இங்கிலாந்து ராணியைத் தங்கள் நாட்டின் 'கௌரவத் தலைவியாக ஏற்றுக் கொண்டுள்ளன. ஆனால் இந்தியா, இலங்கை, பாகிஸ்தான் போன்ற நாடுகள் ராணியை 'காமன்வெல்த்தலைவ'யாக மட்டுமே ஏற்றுக் கொண்டுள்ளன. காமன்வெல்த் அமைப்பின் தலைமையகம் லண்டனில் பால்மால் என்ற இடத்திலுள்ள "மால்பரோ ஹவுஸில்" உள்ளது. (Malborough House, Pallmall, London)

### தோற்றம் : (Origin)

பொதுவாகவே இங்கிலாந்து எப்போதுமே சுயபலத்தில் வாழ்ந்து வராத - ஒரு நாடாகும். குடியேற்ற நாடுகளின் மூலமாகவே தனது வளத்தையும் வலிமையையும் பெற்று வந்தது. 19-ம் நூற்றாண்டு வரை அது உலகத்தின் முதல் தர நாடாக இருந்து வந்ததற்குக் காரணமே அதன் கடற்படை வலிமையும், அதன் உதவியுடன் குடியேற்ற நாடுகளுடன் செய்து வந்த வியாபாரமுமேயாகும். முதல் உலகப் போருக்குப் பின்னர் இங்கிலாந்தின் வியாபாரம் வீழ்ச்சியடைய ஆரம்பித்தது. அமெரிக்கா, ரஷ்யா, - ஜெர்மனி, இத்தாலி, ஜப்பான் போன்ற நாடுகள் விவசாயத்திலும், தொழில் உற்பத்தியிலும் முன்னேறி வந்தன. எனவே 20-ம் நூற்றாண்டில் உலக அரங்கில், அரசியலிலும் "பொருளாதாரத்திலும் தனக்கு ஏற்பட்ட வீழ்ச்சி யைத் தடுத்து நிறுத்துவது இங்கிலாந்திற்கு ஏற்பட்ட மிகப்பெரிய பிரச்சனை ஆகிவிட்டது. அப்பிரச்சனையைச் சமாளிக்கவே 'காமன்வெல்த்' அமைப்பிற்கு அதிக முக்கியத்துவம் கொடுக்க ஆரம்பித்தது இங்கிலாந்து.

### 7.3.1 பொது நல அரசுகள் அமைப்பின் வளர்ச்சி

#### (a) டர்ஹாம் பிரபுவின் அறிக்கை (Lord Durham Report):

ஏழாண்டுப் போருக்குப் பின்னர் கனடா இங்கிலாந்தின் வசமானது. கனடாவில் பிரெஞ்சு மக்கள் தொகையே அதிகமாக இருந்தது. 1837-ல் கனடாவில் மேக்கின்சி, பாப்பினி ஆகிய தலைவர்களின் கீழ் புரட்சி ஆரம்பித்தது. அப்போது இங்கிலாந்தின் பிரதமராக இருந்தவர் மெல்போர்ன் பிரபு ஆவார். அமெரிக்காவை இழந்ததைப் போல எங்கே கனடாவையும் இழந்து விடுவோமோ என்று அச்சமடைந்தது ஆங்கில அரசு. எனவே கனடா மக்களின் குறைகளைக் கண்டுபிடித்து அவற்றை நிவர்த்தி செய்ய பரிந்துரைகள் செய்யுமாறு டர்காம்பிரபு என்பவர் தலைமையில் கமிஷன் ஒன்று அமைக்கப்பட்டது. 1838-ல் சமர்ப்பிக்கப்பட்ட 'டர்ஹாம் அறிக்கையின' சாராம்சம் வருமாறு.

•

- கனடா மக்களுக்கு ஆட்சிப் பொறுப்பு அளிக்கப்பட வேண்டும் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகட்கு முழு உரிமை கொடுக் கப்பட வேண்டும்.
- அரசியல் நிர்வாகத் தலைவரான கவர்னர் இங்கிலாந்திலிருந்து நியமிக்கப்பட வேண்டும்.
- அரசாங்க அலுவல்களில் கனடா மக்கள் இடம் பெறவேண்டும்.
- இங்கிலாந்து அரசு, கனடா உள்நாட்டு விவகாரங்களில் தலையிடக் கூடாது.

குடியேற்ற நாடுகளுக்கு சுயாட்சி கொடுக்க வேண்டும் என்று கூறியதால் இந்த

டர்ஹாம் அறிக்கை "ஆங்கிலக் குடியேற்ற மக்களின் மாக்ன கார்ட்டா" என்று கருதப்படுகிறது. ஆங்கிலக் குடியேற்றக் கொள்கையை டர்ஹாம் அறிக்கை மாற்றியமைத்து விட்டது என்றே கூறலாம். இந்த அறிக்கையின்படி கனடாவும் பின்னர் நியுசிலாந்து ஆஸ்திரேலியா, தென்ஆப்பிரிக்கா ஆகியவை சுயாட்சி பெற்று 'பிரிட்டிஷ் காமன்வெல்த்' நாடுகளானது, 1877-ல் விக்டோரியா மகாராணியின் பொன்விழாவிற்கும், மூ 1897-ல் வைரவிழாவிற்கும் 1902 - ல் ஏழாம் எட்வர்ட் மன்னரின் முடிசூட்டு விழாவிற்கும், இந்த காமன்வெல்த் தலைவர்கள் ஒன்று கூடினர். அப்போது அந்த நாடுகளின் பிரதம மந்திரிகளுடன் இங்கிலாந்து பிரதமர் பொதுப் பிரச்சகைளைப் பற்றி விவாதிக்க வாய்ப்புக் கிடைத்தது.

### (b) இம்பீ ரியல் மாநாடுகள் (Imperial conferences)

1907-ம் ஆண்டு குடியேற்ற நாடுகளின் பிரதமர்கள் லண்டனில் இங்கிலாந்தின் விசேஷ அழைப்பின் பேரில் கூடினார்கள். அதற்கு இங்கிலாந்து பிரதமர் தலைமை வகித்தார். அப்போதுதான் அந்த மாநாடு "இம்பீரியல் மாநாடு" என்றழைக்கப்பட்டது. இந்த மாநாட்டில் "பாதுகாப் பிற்காக ஐஅிநசயைட பநநெசயட ளவயகக ஒன்று அமைக்கப்படவும், காமன்வெல்த் பிரதமர்கள் நான்கு ஆண்டுகட்கு ஒரு முறை இங்கிலாந்தில் கூட வேண்டுமென்றும் முடிவு எடுக்கப் பட்டது. இவ்வாறு காமன்வெல்த் மாநாடுகள்ஒழுங்குபடுத்தப்பட்டது.

### (c) காமன்வெல்த் நாடுகளும் முதல் உலகப்போரும்

1914-ம் ஆண்டு ஆரம்பித்த முதல் உலகப்போரில் இங்கிலாந்து முக்கியப் பங்கு வகித்தது. இங்கிலாந்துக்கு உதவுவதற் காக கனடா, ஆஸ்திரேலியா, தென் ஆப்பிரிக்கா, நியூசிலாந்து ஆகிய காமன்வெல்த் நாடுகள் முன்வந்தன. ஜெனரல்- ஸ்முட்ஸ் (General Smuts) என்பவரின் தலைமையில் அனுப்பப்பட்ட தென்ஆப்பிரிக்கப் படை ஜெர்மானிய மேற்கு கயானாவைப்பிடித்தது. 1916-ல் போர் நடந்து கொண்டிருந்தபோது 'Imperial War Cabinet' ஒன்று அமைக்கப்பட்டது. காமன்வெல்த் பிரதமர்களும், இந்தியா உட்பட மற்ற குடியேற்ற நாடுகளின் செயலாளர்களும் ஒன்று சேர்ந்து ஜெர்மனியிட மிருந்து ஐரோப்பாவைப் பாதுகாக்க வேண்டுமென" முடிவெடுத்தனர். முதல் உலகப்போர் முடிவடைந்த பின்னர் இந்த குடியேற்றநாடுகள் 'டொமினியன்கள்' (Domnions) என்றழைக்கப்பட்டன. 1919-ல் பாரிசில் கூட்டப்பட்ட அமைதி மாநாட்டில் டொமினியன்களின் பிரதமர்கள் கலந்து கொண்டனர். 1920-ல் ஏற்படுத்தப்பட்ட சர்வதேச சங்கத்திற்கு இந்தியாவும் மற்ற டொமினியன்களும் தங்கள் பிரதிநிதிகளை அனுப்பின.

குறிப்பு

**(d) பால்போர் அறிக்கை (Balfournote)**

1926-ம் ஆண்டில் இங்கிலாந்து பிரதமர் பால்போர் தலைமையில் கூடிய இம்பீரியல் மா.நாடு மிகவும் சிறப்பு வாய்ந்தது. இந்த மாநாட்டில் "பால் போர் அறிக்கை" ஒன்று வெளியிடப்பட்டது. அந்த அறிக்கையின்படி,

- எல்லா டொமினியன்களும் பூரண சுதந்திரமுடையன.
- எல்லா டொமினியன்களையும் ஒன்று சேர்ந்து இணைப்பது இங்கிலாந்து அரசு.
- டொமினியனில் நியமிக்கப்பட்டுள்ள நிர்வாகத்தலைவரான கவர்னர் டொமினியன் மந்திரி சபைக்கே கட்டுப்பட்டு நடக்க வேண்டும்.
- டொமினியன்களுக்காக கவர்னர்கள் நியமனம் கூட இனி டொமினியன் மந்திரி சபையின் ஆலோசனையின் பேரிலேயே நியமிக்கப்படவேண்டும்.

இந்த 'பால்போர் அறிக்கை' காமன்வெல்த் நாடுகளின் வளர்ச்சியில் ஓர் முக்கிய மைல்கல்லாகும்.

**(e) வெஸ்ட் மினிஸ்டர் சட்டம்; (Westminster Act) : 1931**

1931-ல் இங்கிலாந்துப் பாராளுமன்றம் 'வெஸ்ட்மினிஸ்டர் சட்டம்' ஒன்றை நிறைவேற்றி வெளியிட்டது. இது பால்போர் அறிக்கைக்கும் மேலானதாகக் கருதப்படுகிறது. இந்த வெஸ்ட்மினிஸ்டர் சட்டத்தின்படி,

- இங்கிலாந்து பாராளுமன்றத்தால் இயற்றப்பட்ட சட்டங்கள் டொமினியன்களின் அங்கீகாரம் பெற்றிருந்தால் மட்டுமே அங்கு செல்லு படியாகும்..
- டொமினியன்களின் பாராளுமன்றத்தில் இயற்றப்பட்ட சட்டங் கள் இங்கிலாந்து பாராளுமன்றத்துக்கோ அல்லது அரசருக்கோ அனுப்ப வேண்டியதில்லை.
- இங்கிலாந்தின் வாரிசுரிமை பற்றியும் புதிய அரசர் நியமனம் பற்றியும் டொமினியர்கள் தங்கள் அங்கீகாரத்தைக் கொடுத்தாக வேண்டும்.
- பிரிவுகவுன்சிலுக்கு டொமினியன் உயர்நீதிமன்ற அனுமதி யின்றி எவ்வித வழக்கும் அனுப்பப்படக்கூடாது.

இவ்வாறு வெஸ்ட் மினிஸ்டர் சட்டம் டொமினியன்களின் அந்தஸ்தை உயர்த்தியது. 1936-ல் எட்டாவது எட்வர்ட் அரசர் முடிதுறந்த போதும், ஆறாம் ஜார்ஜ் அரசரான போதும் டொமினியன்கட்கு அறிவிக்கப் பட்டு அவைகளின் சம்மதம் பெறப்பட்டது.

**7.3.2 காமன்வெல்த் அமைப்பில் புதிய நாடுகள் சேருதல்**

இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர் பிரிட்டிஷ் ஏகாதி பத்தியத் தின் கீழ் இருந்த பல நாடுகள் சுதந்திரமடைந்தன. அவைகள் பிரிட்டிஷ் காமன்வெல்த்தில் சேர விருப்பம் தெரிவித்தன. இந்தியா, பாகிஸ்தான், இலங்கை, மலேசியா போன்ற புதிதாக சுதந்திரமடைந்த நாடுகள் உறுப்பினர்களாகச் சேர்ந்தன. இந்தியா கேட்டுக் கொண்டதற் கிணங்க "பிரிட்டிஷ் காமன்வெல்த்" என்ற பெயர் "காமன்வெல்த்" என்று மாற்றப் பட்டது. தற்போது 53 நாடுகள் காமன்வெல்த்தில் உறுப்பினராக உள்ளன. "இங்கிலாந்துடன் அதிககாலம் நெருங்கிய உறவுடன் (அடிமையாக!) இருந்து வந்த பாரம்பரியமே. இந்த நாடுகளையெல்லாம் ஒன்றுபடுத்தியுள்ளது. இவ்வாறு பிரிட்டிஷ் பேரரசு என்று ஒரு காலத்தில்

குறிப்பு

இருந்து வந்தது புதிய பரிணாமத்தில், புதிய வடிவில் ‘பொதுநல அரசுகள்’ என்ற அமைப்பாக உருமாறியுள்ளுத.

### 7.3.3 காமன்வெல்த் அமைப்பின் நோக்கம்

இங்கிலாந்தின் தலைமையில் எவ்விதமான கூட்டணி அமைப்பதோ அல்லது வட்டார உடன்படிக்கைகள் செய்து கொள்வதோ இந்த அமைப்பின் நோக்கமல்ல. உறுப்பினர் நாடுகளின் பொருளாதார, சமுதாய கலாச்சார ஒற்றுமையை வளர்ப்பதே இந்த அமைப்பின் முக்கிய நோக்கமாகும். பாராளு மன்ற முறையிலான அரசு, நல்ல நிர்வாகம், பேச்சுரிமை, சட்டத்தின் ஆட்சி ஆகிய ‘ஜனநாயக மரபு’களை உறுப்பினர் நாடுகள் பேணிப்பாதுகாக்க வேண்டுமென்பதும் இந்த அமைப்பின் முக்கிய நோக்கமாகும்.

### 7.3.4 காமன்வெல்த்தின் தன்மை (Nature of Commonwealth)

- தற்கால உலகில் காமன்வெல்த் அமைப்பு ஒரு சிறப்புமிக்க இடத்தைப் பெற்றுள்ளது. இது ஒரு மைய அதிகாரத்தைக் கொண்ட கூட்ட மைப்போ அல்லது ஒரு பொதுவான நோக்கத்தைக் கொண்ட நெகிழ் கூட்டமைப்போ கிடையாது. இதற்கென்று தனிபட்டயமோ (Chater) எழுதப்பட்ட அரசியலமைப்போ, பாராளுமன்றமோ, தனி ராணுவமோ கிடையாது. உறுப்பினர் நாடுகளுக்கென்று பிரத்யேகமான உரிமைகளோ, கடமைகளோ எதுவும் இல்லை .
- முன்பு இங்கிலாந்தின் அரசன் அல்லது அரசி காமன்வெல்த் நாடுகளின் ஒற்றுமைக்கு முக்கியப்பங்கு எடுத்தார். காமன்வெல்த்தின் நாடுகள் தனித்தனியே தங்கள் நாடுகளின் கௌரவதத்லைவராக அரசரை ஏற்றுக்கொண்டன. ஆனால் தற்போது காமன்வெல்த்தின் தலைவராக மட்டுமே செயல்படுகிறார் இங்கிலாந்து அரசி இரண்டாம் எலிசபெத்.
- இங்கிலாந்திடமிருந்து சுதந்திரம் பெற்ற நாடுகள் எல்லாம் காமன்வெல்த் அமைப்பில் உறுப்பினராவது கட்டாயமில்லை. எந்த உறுப்பினர் நாடும் எப்போது வேண்டுமானாலும் விலகிக்கொள்ளலாம். மீண்டும் சேர்ந்து கொள்ளலாம். இப்படி உறுப்பினர் நாடு விலகினால் இந்த அமைப்பிற்கு எவ்விதப் பிரச்சனையும் இல்லை. ஆனால் இங்கிலாந்து விலகினால் மட்டும் பிரச்சனை ஏற்பட வாய்ப்பு உள்ளது.
- காமன்வெல்த்தில் சேரும் நாடுகளின் சுதந்திரத்திற்கும் ஆளுமைக்கும் எவ்வித பாதிப்பும் இல்லை.

### 7.3.5 காமன்வெல்த் அமைப்பின் செயல்பாடுகள்

**கொழும்புத் திட்டம்**

காமன்வெல்த் நாடுகளின் வெளியுறவு அமைச்சர்களின் முயற்சி யால் இத்திட்டம் வரையறுக்கப்பட்டது. இத்திட்டம் 1951 ஜுலை 1-ல் நடை முறைக்கு வந்தது. தெற்கு மற்றும், தெற்காசிய நாடுகளின் பொருளாதார வளர்ச்சிக்கு இத்திட்டத்தின் மூலம் நீதிவழங்க ஏற்பாடு செய்யப்பட்டது. அப் பகுதியில் உள்ள காமன்வெல்த் மற்றும் காமன்வெல்த் அல்லாத நாடு களுக்கு உதவுவதை நோக்கமாகக் கொண்டது. இதன் அடிப்படையில் ஆப்கானிஸ்தானம், வங்கதேசம், பூடான், பர்மா, பிஜி, இந்தியா, இந்தோனேஷியா, ஈரான், கம்போடியா, கொரியா, லாவோஸ், மலேஷியா,

மாலத் தீவுகள், நேபாளம், பாகிஸ்தான், நியுகினி, பிலிப்பைன்ஸ், சிங்கப்பூர், தாய்லாந்து, இலங்கை ஆகிய இருபது நாடுகள் பயனடைந்தன.

இத்திட்டம்ஆரம்பத்தில் சில ஆண்டுகளுக்கு மட்டுமே செயல்பட இருந்தது. ஆனால் பின்னர் 1981-ம் ஆண்டு வரை ஐக்கிய நாடுகள், ஜப்பான் ஆகிய நாடுகளும் கொழும்புத் திட்டத்திற்கு அதிக அளவில் நிதி உதவி அளித்தன.

**காமன்வெல்த் நாடுகளின் காரியாலயம்**

1965-ல் லண்டனில் ஏற்படுத்தப்பட்ட பொது நல நாடுகளின் காரியாலயம் பொது நல நாடுகளிடையே கூட்டுறவை வளர்த்தல், வாணிப, சுற்றுலா அபிவிருத்தி, நிதி வளர்ச்சி ஆகியவற்றுக்கான மாநாடுகளைக் கூட்டுதல் ஆகிய பணிகளை மேற்கொள்ளுகிறது.

**சிங்கப்பூர் அறிக்கை :1971**

1971-ம் ஆண்டு ஜனவரி மாதம் சிங்கப்பூரில் நடைபெற்ற காமன். வெல்த் நாடுகளின் தலைவர்கள் கூட்டத்தின் இறுதியில் பொது நல நாடு களின் கொள்கைகள் அறிவிக்கப்பட்டன. அதற்கு சிங்கப்பூர் அறிக்கை என்று பெயர். சிங்கப்பூர் அறிக்கையின் சாராம்சம் பின்வருமாறு : காமன்வெல்த் நாடுகளின் அமைப்பில் உறுப்பினராக உள்ள ஒவ்வொரு நாடும் தனது ஆட்சிமுறைக் கொள்கைகளுக்குப் பொறுப்பு வாய்ந்ததாகும். தங்களது மக்களின் பொது நலனுக்கான ஆலோசனை, கூட்டுறவு ஆகியவற்றை மேற்கொள்ள வேண்டும். நாடுகளின் செழிப்புக்கும் பாதுகாப்புக்கும் பன்னாட்டு அமைதி அவசியம். போருக்கான காரணங்களை உலகிலிருந்து நீக்க வேண்டும்.-

பன்னாட்டுக் கூட்டுறவு மிகவும் அவசியம். ஐ.நா.வின் நடவடிக் கைகள் அனைத்திற்கும் ஆதரவு தெரிவிக்க வேண்டும். குடியேற்ற ஆதிக்கத் தை எதிர்க்க வேண்டும். இனப்பாகுபாட்டுக் கொள்கை மனித சமுகத்திற்கு ஆபத்தானது. மக்களிடையே செல்வத்தில் ஏற்பட்டுள்ள ஏற்றத்தாழ்வு களை அகற்ற வேண்டும். ஏழ்மையையும் அறியாமையையும் நீக்கி மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த வேண்டும். இவ்வாறு சிங்கப்பூர் அறிக்கை காமன்வெல்த் அமைப்பானது மனித சமூகத்தின் பொது நலனில் கொண்டுள்ள அக்கரையை வெளிப்படுத்து கிறது என்று கூறலாம்.

### 7.3.6 காமன்வெல்த் நாடுகளின் தலைவர்கள் கூட்டம் : (CHOGM) .

காமன்வெல்த் நாடுகளின் தலைவர்கள் கூட்டம் இரண்டு ஆண்டு களுக்கு ஒரு முறை நடைபெற்று வருகிறது. 1991-ல் 28-வது உச்சி மாநாடு ஜிம்பாப்வே தலைநகராகிய ஹராரேயில் நடைபெற்றது. அப்போது தென் ஆப்பிரிக்காவிற்கு எதிரான பொருளாதாரத் தடைகளைப் படிப்படியாக தளர்த்த முடிவு செய்யப்பட்டது. வளரும் மூன்றாவது உலக நாடுகளுக்கு உதவவும், மனித உரிமையைப் பாதுகாக்கவும் தீர்மானிக்கப்பட்டது.

காமன்வெல்த் நாடுகளின் தலைவர்களின் 30-வது உச்சி மாநாடு 1995, நவம்பர் 10-ம் தேதியிலிருந்து முதல் நியுசிலாந்தின் தலைநகரான ஆக்லாந்தில் நான்கு நாட்கள் நடைபெற்றது. இம்மாநாடு மக்களாட்சி மற்றும் நல்லாட்சி முறைமைகளை வலியுறுத்தியது குறிப்பிடத்தக்கது. வல்லாட்சியும், கொடுங்கோலாட்சியும் நிலவிய நைஜீரியாவை காமன்வெல்த்

அமைப்பிலிருந்து சஸ்பெண்ட் செய்தது. காமன்வெல்த்தின் 65 ஆண்டுகால வரலாற்றில் ஒரு உறுப்பினர் நாடு சஸ்பெண்ட் செய்யப் படுவது இதுவே முதல் முறை ஆகும். மற்றும் வல்லாட்சி நடைபெறும் காம்பியா, சியாரா பியோஸ் நாடுகள் அடுத்த ஆண்டில் மக்களாட்சி முறை களுக்குத் திரும்புவதாக வாக்குறுதி அளித்தன. புதிதாக காமரூன், மொசாம்பிக் ஆசிய நாடுகள் காமன் வெல்த்தில் புதிதாகச் சேர்க்கப்பட்டன. இவற்றையும் சேர்த்து உறுப்பினர் எண்ணிக்கை 53-ஆக உயர்ந்தது. பொது வாக காமன்வெல்த்தில் இங்கிலாந்தின் காலனியாக இருந்த நாடுகளே உறுப்பினராக சேருவது வழக்கம். இப்போது போர்ச்சுக்கல் நாட்டின் காலனியாக இருந்த மொசாம்பிக் காமன்வெல்த் அமைப்பில் உறுப்பினராகி இருப்பது குறிப்பிடத்தக்கது.

**(a)காமன்வெல்த் நாடுகளின் தலைவர்களின் 31-வது உச்சி மாநாடு (1997 அக் 24-27)**

காமன்வெல்த் நாடுகளின் தலைவர்களின் 31-வது உச்சி மாநாடு ஸ்காட்லாந்திலுள்ள எடின்பர்க் நகரில் நடைபெற்றது. நான்கு நாட்கள் நடை பெற்ற இந்த மாநாட்டில் பல முக்கிய முடிவுகள் எடுக்கப்பட்டன. பயங்கரவாதத்தை ஒழிக்க சர்வதேச அளவில் ஏற்பட் வரும் ஒருமித்த கருத்தை ஆக்கபூர்வமாக்க சட்டபூர்வ நடவடிக்கை மேற் கொள்ளப்பட வேண்டும் என்று இந்தியா கூறிய யோசனையை இந்த மாநாடு ஏற்றுக் கொண்டது. நாடுகளுக்கிடையே செயல்படும் பயங்கரவாதிகளைப் பிடிக்க சர்வதேச அளவில் ஒப்பந்தம் செய்யப்பட வேண்டும். பயங்கரவாதத் தை ஒழிக்க தகுந்த திட்டத்தை சர்வதேச சமுதாயம் தீட்ட வேண்டும். 1988 அக்டோபர் மாதத்திற்குள் நைஜீரியா ஜனநாயக அரசாக மாறாவிட்டால் நைஜீரியாவைக் காமன்வெல்த் அமைப்பிலிருந்து நீக்க வேண்டும். அதன்மீது எண்ணெய் தடை, வான் வழித்தடை உட்பட பல்வேறு தடைகள் விதிக்கப்பட வேண்டும்" போன்ற தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

**(b)காமன்வெல்த் நாடுகளின் தலைவர்களின் 32-வது உச்சி மாநாடு :1999, நவம்பர் 12-15**

காமன்வெல்த் நாடுகளின் தலைவர்களின் 32-வது உச்சி மாநாடு ஆப்பிரிக்காவிலுள்ள டர்பன் நகரில் 1999, நவம்பர் 12ம் தேதி முதல் 15-ம் தேதி வரை நான்கு நாட்கள் நடைபெற்றது. இங்கிலாந்து ராணி எலிசபெத் மாநாட்டை தொடங்கி வைத்து உரையாற்றினார். இந்த மாநாட்டில் இந்தியப் பிரதமர் வாஜ்பாயி உட்பட 47 நாடுகளைச் சேர்ந்த பிரதமர்கள், அதிபர்கள் மற்றும் உயர் மட்டத்தலைவர்கள் கலந்து கொண்டனர். இந்த மாநாட்டில் பல முக்கிய முடிவுகள் மேற்கொள்ளப்பட்டன. 1999, அக்டோபர் 12-ம் தேதி பாகிஸ்தானில் ஜனநாயக அரசை தூக்கி எறிந்து விட்டு ராணுவ ஆட்சியைப் பிரகடனப்படுத்தினார் தளபதி பர்வீஸ் முஷாரப். எனவே பாகிஸ்தான் காமன்வெல்த் அமைப்பிலிருந்து இடைநீக்கம் செய்யப்பட்டது. காமன்வெல்த் அமைப்பு நாடுகளில் ஊழலை ஒழிக்கவும், ஒளிவு மறைவற்ற வெளிப்படையான வர்த்தக செயல்பாட்டை ஏற்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று வர்த்தகக் குழு வலியுறுத்தியது.

**மாநாட்டின் நிறைவாக வெளியிடப்பட்ட பிரகடனத்தில் கூறப் பட்ட கருத்துக்கள் பின்வருமாறு**

மோதல்கள் பெரிதாகாமல் பிரச்சனைகளைச் சுமுகமாக தீர்க்க காமன்வெல்த் உதவும். மோதல் ஏற்பட்ட இடங்களில் சுமுகநிலை ஏற்படவும் நிலைமை சீர்படவும் உதவிகளைச் செய்யும். ஒவ்வொரு நாட்டிலும் சமூக பொருளாதார முன்னேற்றங்கள் ஏற்பட வேண்டும் என்றால்

அரசியல் ஸ்திரத்தன்மையும், சமாதானமும் நிலவுவது அவசியம். எல்லா நாடுகளிலும் நிர்வாகம் சீராக இருக்க வேண்டும். அதற்கு தேசிய அளவிலும் சர்வதேச அளவிலும் மக்கள் பங்கேற்பு அதிகரிக்க வேண்டும். சர்வதேச அமைப்புகளை நிர்வகிப்பதில் வளரும் நாடுகளுக்கு கூடுதல் பங்கு அளிக்கப்பட வேண்டும். சிறிய நாடுகளின் பிரச்சினைகளுக்கு உரிய கவனம் செலுத்தப்பட வேண்டும்.

மேலும் இந்த மாநாடு அரசியல், பொருளாதாரம் மற்றும் சமூக ஒழுங்கைக் கெடுக்கும் பயங்கரவாதச் செயல்களைக் கடுமையாகக் கண்டித்தது. சர்வதேசப் பயங்கரவாதச் செயல்களைக் கடுமையாகக் கண்டித்தது. சர்வதேச பயங்கரவாதிகளுக்கு எதிராக கடும் நடவடிக்கை களை மேற்கொள்ளுமாறு ஐக்கிய நாடுகள் சபையை மாநாடு கேட்டுக் கொண்டது. மேலும் இந்த மாநாடு சமூக அந்தஸ்துக்கு வழி செய்யும் கருத்துக் கள், தகவல்கள் ஆகியவை பரவுவதை வரவேற்றது. மதம், மொழி, இனம், ஆண்-பெண் பாலினம் ஆகியவற்றின் அடிப்படையிலான வேறுபாடுகளை மாநாடு கண்டித்தது. இறுதியாக உலகின் எப்பகுதி யிலும் வறுமை நிலவாமல் அதை உடைத்தெறிய வேண்டிய கடமை உறுப்பினர் நாடு களுக்கு உள்ளது என்று இந்த மாநாடு வலியுறுத்தியது. மாநாட்டின் இறுதியில் காமன்வெல்த் அமைப்பின் செயல்பாடு களை ஆய்வுசெய்து அறிக்கை அளிப்பதற்காக 11 தலைவர்களைக் கொண்ட, உயர்நிலைக்குழு ஒன்று அமைக்கப்பட்டது. இந்த குழு தனது அறிக்கையை 2001-ல் ஆஸ்திரேலியாவில் நடைபெறும் காமன்வெல்த் உச்சி மாநாட்டில் சமர்ப்பிக்க வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டது.

### 7.3.7 பொது நல அரசின் துறைகள்

பொதுநல அரசு தனக்கென எழுதப்பட்ட அமைப்பு விதிமுறை களைக் கொண்டிருக்கவில்லை என்றாலும், தன்னில் பல துறைகளைக் கொண்டதாக தனது இயக்கத்தை மெய்ப்பித்து வருகிறது. தனது உறுப்பினர்கள் விரும்புகிறார்களே என்பதற்காக வல்லாது, தனது உறுப் பினர்களின் விருப்பங்களை நிறைவேற்றும் கீழாட்களாகவே இத்துறைகள் இயங்கி வருகின்றன. இப்போது இங்கு நான்கு துறைகள் உள்ளன. அவை: 1. அரசர் 2. பொது நல அரசில் சேரவோ அன்றி விலகவோ உறுப்பினர்களுக்குள்ள உரிமை. 3. உறுப்பினர்கள் ஒருவருக்கொருவர் கருத்துப் பரிமாற்றம் செய்து கொள்ளும் ஏது. 4. பொது நல அரசை வலுப்படுத்த, அன்றி தமது கூட்டு அல்லது தனித்த ஈடுபாடுகளை விருத்தி செய்து கொள்ள உறுப்பினர்கள் தாமாகவே பங்கேற்கும் துறை கள் ஆகியவை, “நீதி மேல் முறையீட்டு ஏற்பாடு சில உறுப்பினர் களைப் பொறுத்த அளவில் ஒரு பொதுத் துறையாக உள்ளது. போக்குவரத்து, செய்தித் தொடர்புத் துறைகளிலும் பொது முயற்சிகள் வெகுவாக வளர்ந்துள்ளன. அறிவியல் ஆய்வுகளிலும் இத்தகைய நிலையே வளர்ந்துள்ளது. உறுப்பு நாடுகள் பிரிட்டிஷ் வாணிபத்தில் அதிக ஆர்வம் காட்டக்கூடியது பொருளியல் துறையே என்றாலும், இதன் நடைமுறைகளைப் பொறுத்தமட்டில் நிலை சற்றுக் கடினமாகவே உள்ளது. சர்வதேசப் போர்க் கூட்டணிகளும், நவீன போர்க் கருவிகளின் குவிப்பும் பெருகியுள்ள நடப்புச் சூழ்நிலையில் பொது நல அரசுக்கு மட்டுமேயான தனித்த தற்காப்பு ஏற்பாடு என்பது சிந்தித்துப் பார்க்கவே முடியாது.

**உறுப்பினர்களின் உரிமை :**

ஒரு நாடு பொது நல அரசில் எவ்வாறு உறுப்பினராகிறது என்பதை விட, ஒரு நாடு எவ்வாறு அவ்வமைப்பிலிருந்து விலகிச் செல்கிறது என்று கூறுவதே எளிதாக உள்ளது. 1949-இல் அயர்லாந்து குடியரசு

இவ்வமைப்பிலிருந்து விலகிச் சென்றதிலிருந்தே பிரிந்து செல்ல விரும்பும் நாடு தன் விருப்பப்படி எளிதில் பிரிந்து செல்ல முடியும் என்பதற்கான முன்னுதாரணங்கள் பல காட்டப்பட்டுள்ளன. ஆங்கில ஆட்சிக்கு அடிமைப்பட்டுக் கிடந்த ஒரு நாடு தன்னரசு பெற்ற பின்னரே பொது நல அரசின் உறுப்பினராகலாம் என்ற நடைமுறை பின்பற்றப்பட்டு வருகிறது. இந்த அடிப்படையிலேயே தன்னரசு பெற்ற முன்னால் ஆங்கில ஆதிக்க நாடுகள், பொது நழு அரசின் உறுப்பினர்களாகச் சேர்க்கப்பட்டு வந்தன. தென் ஆப்பிரிக்க நாடு பின்பற்றி வந்த நிறவெறிக் கொள்கையைப் பொதுநல அரசு கண்டித்ததால், இவ்வமைப்பிலிருந்து அந்நாடு விலகிக் கொண்டது.

**செயற்பாட்டில் பொதுநல அரசு:**

அனைத்து உறுப்பு நாடுகளும் பொதுவில், ஆங்கில நாட்டு அடிப்படையில், நாடாளுமன்ற ஆட்சி முறையைப் பின்பற்றுகின்றன என்ற கூறே, அந்நாடுகளை ஒருங்கிணைக்கும் பல்வேறு கூறுகளில், மிக முக்கியமானதாக உள்ளது. இது முற்றிலும் உண்மையே. உறுப்பு நாடுகள் அனைத்தும் நாடாளுமன்ற ஆட்சி முறையைப் பெற்றுள்ளன. அன்றியும் அந்நாடாளுமன்றங்கள் ஆங்கில நாட்டடிப்படையில் இயங்குகின்றன. பொது நல அரசினை நடத்திச் செல்லும் புகழ்மிக்க நாடுகள் தமக் கென ஒரு பொதுக் கலாச்சாரத்தைப் பெற்றுள்ளன. இந்தக் கூறே பிரதமர்களையும், அரசியல் வாதிகளையும், இராச தந்திரிகளையும், ஒரு வருக்கொருவர் ஒத்துணர்வுடன் உரையாடத் தூண்டுகிறது. இந்தியா, பாகிஸ்தான் போன்ற நாடுகளில் அவ்வந்நாடுகளுக்கேற்ற தனித்த கூறுகள் சில இருப்பினும், ஆங்கிலேயர்களின் நன்னடத்தைக் கோட்பாட்டினையும் சமுதாய மதிப்பீட்டையும் ஏற்கனவே அந்நாட்டவர் ஏற்றுக்கொண்டுள்ளனர் என்பதைப் புலப்படுத்துவதாக இது உள்ளது.

பொருளியல் தொடர்புகளைக் கவனிக்கும் போது மூன்று முக்கிய விஷயங்கள் கருதத்தக்கவை. ஏகாதிபத்திய முன்னுரிமை கடல் கடந்த நாடுகளில் ஆங்கிலேயர்கள் செய்துள்ள முதலீடுகள் ஆங்கில நாட்டு நாணய முறையைப் பின்பற்றும் இதர நாடுகள் (Sterling Areas). ஏகாதிபத்திய முன்னுரிமையில் பொது நல அரசு நாடுகள் தமக்குள் செய்து கொண்ட பல்வேறு இருதரப்பு வாணிக ஒப்பந்தங்கள் அடங்கும். பொருளியலடிப்படையிலான தொடர்புகளைப் பற்றிச் சிந்திக்கும் போது பொது நல அரசில் பிரிட்டன் செய்துள்ள முதலீடுகள் பெருமளவு முக்கியத்துவம் வாய்ந்தவை. உறுப்பு நாடுகளில் பல தமது வளர்ச்சிப் பணிகளுக்கான நிதிக்கு ஆங்கில நாட்டின் முதலீடுகளைப் பெருமளவு எதிர்நோக்கி நின்றன. பொது நல அரசுகளில் பிரிட்டன் மட்டுமே பிறநாடுகளில் நீண்ட காலமாக நிதி முதலீடு செய்து வந்துள்ளது. ஆங்கில நாணய முறையைப் பின்பற்றும் நாடுகளில் உறுப்பினராதல் என்பது சார்புடைய அனைவருக்கும் பெருமளவில் நலம் பயக்கத்தக்கதே. ஆங்கில நாணய முறை செலாவணியிலுள்ள அனைத்து நாடுகளிலும், உறுப்பு நாடுகள் தம் வாணிகத்தைப் பரவலாக்கிப் பெருக்கவியலும். உறுப்பு நாடு தான் ஒரு குறிப்பிட்ட நாட்டிலிருந்து செய்து கொள்ளும் இறக்குமதிக்குச் சமமான மதிப்பிற்கு அந்த நாட்டுடன் ஏற்றுமதியும் செய்ய வேண்டிய கட்டாயம் ஏற்படாது ஒரு நாட்டுடன் செய்த வாணிகத்தால் கிடைக்கும் உபரி நிதியை, மற்றொரு நாட்டுடன் நடத்திய வாணிகத்தால் ஏற்பட்ட பற்றாக் குறையை ஈடுகட்டப் பயன்படுத்திக் கொள்ளலாம்,

இன்னோரன்ன பயன் களை நன்கு நுணுகி ஆய்ந்த பின்னரே, தான் தனித்திருப்பதை விடப் பொது நல அரசில் தொடர்த்து நீடிப்பதே

குறிப்பு

சிறப்பானது என்ற முடிவிற்கு உறுப்பு நாடுகள் வந்துள்ளன. பொது நல அரசில் உறுப்பினராக இருப்பதால் அவர்கள் மிகுந்த பயன் பெறுவதாலும், தமக்கு அதனால் எவ்விதத் தீங்கும் விளையாததாலும் பொருளியல் அளவில் பொதுநல அரசில் உறுப்பினராக நீடிப்பதை வலுப்படுத்தும் மனப்போக்கு அவர்களிடையே பெருகுகிறது. இதுதன்னாட்சிச் சிக்கல்களுக்குத் தீர்வு காண உதவாதெனினும், வாணிப ஆதாயத்தை மிகுவிக்கும் தொடர்பாக இருக்கும் என்று இவர்கள் கருதுகின்றனர். சர்வதேசஇது ஐக்கிய நாட்டுச் சபையினைப் போலத் தனக்கென எழுதப்பட்ட ஓர் அரசியலமைப்பினையோ, தனித்தனி துறைகளையோ கொண்டிருக்கவில்லை. இதனை நேட்டோ (NATO). அல்லது சென்ட்டோ (CENTO) போன்ற கூட்டமைப்புக்களாகக் கருதவும் முடியவில்லை. இதனை நாம் ஓர் சர்வதேச அமைப்பு என்று அழைத்தாலும், அவ்வளவாகப் பொருந்தாது. காரணம் இவ்வமைப்பு தனக்கென வரையறுத்த விதிமுறைகளையோ அன்றி ஆட்சிக்குழுவினரையோ கொண்டிருக்கவில்லை . ஆங்கில அரசியாரின் தலைமை என்பது இதனைத் தனிநபர்கள் ஒன்று சேர்ந்த ஓர் அமைப்பாகவும் (Personal Union) ஆக்கவில்லை இதற்கு நாமாகவே கற்றவர்களால் வெறுக்கத்தக்க ஒரு பட்டத்தைச் சூட்டுவதும் கூடாது. எவ்வளவிலானாலும் இதன் உறுப்பு அரசுகள் இவ்வமைப்பின் குறிக்கோளை அடையும் பொதுவான முறைகள் பற்றிய விசாரணைகளில் ஈடுபடுவதில்லை. இது வெளிப்படையில் ஒரு கூட்டமைப்பு (Federation) அல்ல் பிரெஞ்சு ஒன்றியம் போன்றதொரு ஒன்றியமும் (Union) அல்ல் இதன் உறுப்பு நாட்டினர் ஒரு பொதுக் கருத்து அடிப்படையில் ஒன்றுபட்டவர்களும் அல்லர் இது பிரஷ்ய நாட்டு ஜால்வரின் (Zollverein) போன்ற அமைப்புமல்ல் இது ஒரு சமுதாய விருப்பும் அல்ல மெய்யாகவே சர்வதேச அமைப்புக்கள் அளவில் எந்த அடிப்படைக்கும் இது பொருந்துவதாக இல்லை. இருப்பினும் இது இயங்கிவரும் ஓர் அமைப்பாகச் செயல்பட்டு வருகிறது. எனவே இதனை வசதி நோக்கில் ஏற்பட்ட வாய்ப்பான ஒரு குழு என்று அழைப்பது சாலப் பொருந்தும்.

**இந்தியாவும் பொது நல அரசும்:**

1949 மே மாதத்தில் பொது நல அரசு பிரதமர்கள் மாநாட்டில் பண்டித ஜவகர்லால் நேரு அவர்கள் விடுதலையின் பின்பும் இந்தியா பொது நல அரசின் உறுப்பினராக இடம் பெற்றதையொட்டி வரலாற்றுப் புகழ்மிக்க ஓர் உரையாற்றினார். இதனை “மாபெரும் தவறு“ என்பது போன்ற பரவலான பல்வேறு குறைகள் கூறப்பட்டன. ”இந்திய மக் களின் தேசீய உணர்விற்கேற்பட்ட மாபெரும் இழுக்கு“ என்றும் விமர்சிக்கப்பட்டது. குறை கூறியவர்கள் அனைவர்க்கும் நாடாளுமன்ற மக்கட்சபையில் நேரு பொருத்தமான விடையிறுத்துப் பேசினார்.

பொது நல அரசென்பது எவ்வாற்றானும் மேலாதிக்கம் பெற்ற ஒரு நாடு அல்ல என்பதை ஒவ்வொருவரும் நினைவிற்கொள்ள வேண்டும் உரிமை பெற்ற உறுப்பு நாட்டினர் தம்முள் கொண்டுள்ள உரிமை மிக்க உறவுகளின் அடையாளத் தலைமையாகவே நாம் அரசரை அல்லது அரசியை ஏற்றுக் கொண்டுள்ளோம். ஆனால் பொது நல அரசில் அரசி தனது தகுதியை மற்றும் அதிகாரத்தையொட்டிய எந்தச் செயல் முறைகளும் செய்வதில்லை. இந்திய அரசியலமைப்புச் சட்டத் தைப் பொறுத்த அளவில் அரசிக்கு எந்த இடமும் இல்லை நாம் எவ் வகையிலும் அவருக்குக் கட்டுப்பட்டவர்களல்லர்““ என்று அவர் கூறினார்.

*Self-Instructional Material*

**குறிப்பு**

1957 இல் புதுடில்லியில் நடைபெற்ற பொது நல அரசுகளின் நாடாளுமன்ற மாநாட்டில், பொது நல அரசின் நோக்கங்களைப் பற்றிக் குறிப்பிடும் போது "கண்டங்களாலும், சமயத்தாலும், வாழ்க்கை முறையாலும், நிறத்தாலும், உணர்வாலும், இன்னும் பல்லாற்றானும் வேறுபட்ட பல மக்கள் தம்முள் ஏதோ ஒரு வகை இணைப்பால் ஒன்று சேர்ந்துள்ளனர்: அதுவே பொது நல அரசு இணைப்பு ஆகும். உறுப்பு நாடுகளிடையே காணப்படும் ஒரு பொதுத் தன்மை, அவை அனைத்தும் குடியரசு அடிப்படையில் இயங்கும் நாடாளுமன்ற அமைப்பைக் கொண்டுள்ளன என்பதே. வேறு வகையில் கூறப் போனால் மக்களாட்சி என்பது ஒத்த உள்ளம் கொண்ட மக்களோடு மட்டுமல்லாது, மாறுபட்ட உள்ளங்கொண்ட மக்களோடும் சகிப்புத் தன்மையுடன் அனுசரித்து வாழும் சமாதான சகவாழ்வே ஆகும். ஒருவரையொருவர் விரும்பும் போது சகவாழ்வு என்பது மிக எளிதாகிறது. இது எந்த முயற்சியோ, எவ்விதச் சிக்கலோ இல்லாது அமைவது. ஆனால் நாம் கருத்தாலும், வாழ்க்கை முறைகளாலும் கோட்பாடுகளாலும், முரண்பட்ட போதும், அவற்றைச் சகித்துக்கொண்டு, ஒருவரையொருவர் புரிந்து கொள்ள முயற்சிப்பதே சமாதான சகவாழ்வு ஆகும்,

பல்வேறு கலாச்சாரங்களின் சந்திப்பு மையமாகச் செயல்பட்ட பெருமை கடந்த காலத்தில் இந்தியாவிற்கு உண்டு. போரிடும் எதிர்ப்பாளர்களின் கருத்து வேற்றுமையை நீக்கி ஒன்று சேர்ப்பதிலும், இன்றைக்கும், என்றைக்கும் உலகின் மிக அவசர அவசியத் தேவையான சமாதானத்தை நிலைநாட்டுவதிலும், ஏன், எதிர்காலத்திலும் கூட நிலைநாட்டும் வாய்ப்பு இந்தியாவிற்கு உண்டு. இந்தியா உலகில் சமாதானத்தையும், விடுதலையையும் வளர்க்கவும், போட்டி நாடுகளிடையேயான கசப்பான விரோதத்தையும், உலகின் பதட்ட நிலையைத் தணிக்கவும் முடியும் என்ற உயர்ந்த நம்பிக்கையின் அடிப்படையில் தான் இந்தப் பொது நல அரசில் தொடர்ந்து ஒரு உறுப்பினராக அங்கம் வகிக்கிறது என்று கூறினார்.

இலாப நோக்கில் கணக்கிட்டால், இதனால் விளையும் பயன் குறைவே. ஆரம்ப காலத்தில் ஆங்கிலேயர் பொது நல கிளப் (Common Wealth Club) என்ற பெயரால் ஒரு பன்னாட்டு அமைப்பினை நிறுவி, அதன் வழி தமது பன்னாட்டுத் தொழில் மற்றும் வணிக நிறுவனங்களின் உற்பத்திப் பொருட்களுக்குச் சிறந்த விற்பனைச் சந்தைகளை உருவாக்கவும், கச்சாப் பொருட்களை எளிதில் பெறவும் வாய்ப்பினை ஏற்படுத்திக் கொண்டனர். பொது நல அரசு நாடுகள் ஆங்கிலப் பொருட்களின் விற்பனைச் சந்தைகளாகச் செயல்பட்டன. ஆனால் இக்காலத்தில் பொது நல அரசு நாடுகளில் ஆங்கிலப் பொருட்கள் வாணிபத்தில் முன்னுரிமை பெறுவதில்லை. பல்வேறு நாடுகள் குறிப்பாக நைஜீரியா ஆகஸ்ட், 1979 இல் - தத்தம் நாடுகளி.லுள்ள ஆங்கிலத் தொழில் நிறுவனங்களைத் தேசீய உடைமையாக்கிக் கொண்டுள்ளன. அன்றியும் ஐரோப்பிய பொருளியல் குழுவில் (European Economic Community) ஆங்கில நாடு அங்கம் வகிக்கத் துவங்கியபின் அந்நாட்டிற்குப் புதிய வணிகப் பொறுப்புக்கள், ஏற்பட்டுள்ளன, வணிகத் தடைகள் பலவும் செயல்பாட்டிற்கு வந்துள்ளன. எனவே அதற்கு முன்னர் பிரிட்டன் பிற நாடுகளுடன் செய்து கொண்டிருந்த ஏற்பாடுகளையும், வணிக ஒப்பந்தங்களையும் ஒன்றில் நிறுத்தி வைக்கவோ, அன்றி முறித்துக் கொள்ளவோ நேரிட்டது. இந்நாளில் பிரிட்டிஷ் வணிகத்தின் மிகுதியான பங்கினை ஐரோப்பியப் பொருளியல் குழுவும் ஐரோப்பியப் பொதுச்சந்தையும் (European Common Market) நிறைவேற்றி வைக்கின்றன.

**குறிப்பு**

பிரிட்டனைப் போலவே, ஆரம்பத்தில் இந்தியாவும் கூட, பிரிட்டனுடனான தனது வணிக உறவின் மூலம் மிகுதியான இலாபம் பெறலாம் என எதிர்பார்த்தது. ஆனால் இது தவறு என்பது மெய்ப்பிக்கப்பட்டது. கூறப்போனால் இலாபம் மிகக் குறைந்த அளவாகவும், சில துறைகளில் இந்தியாவின் இழப்பு மிகுதியாகவும் உள்ளது. இந்த ஏற்பாட்டால் இந்தியத் தொழில் வளர்ச்சிக்கும் பெரும் இழப்பு ஏற்படுமோ என்ற அச்சமும் எழாமலில்லை. இங்கிலாந்து ஐரோப்பியப் பொதுக் குழுவில் பங்கேற்றபோது பேரரசு முன்னுரிமைகள் முழுவதுமாக ஒழிக்கப்பட்டன என்றே கூறலாம். நிலைமை இப்படியிருந்த போதும், பொது நல அரசின் மூலம் நற்பயன்கள் பெற வழிவகை செய்ய வேண்டியது இந்தியாவின் கையிலேயே உள்ளது. இந்தியாவில் அதிக அளவிலான தொழில் நுட்பம் நிறைந்த மனித சக்தி உள்ளது. இந்த ஆற்றலைக்கொண்டு, பொது நல அரசின் உறுப்பு நாடுகளுடன் உறவு கொண்டு சிறந்த பயன்களைப் பெறமுடியும், லூசாகா மாநாட்டில் இந்தியா முன்வைத்த, பொதுநல அரசுகளுக்கான தொழில்துறைப் பிரிவு ஒன்றைத் துவக்க வேண்டும் என்ற கருத்து ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

வளர்ச்சி பெற்ற உறுப்பு நாடுகளான பிரிட்டன், ஆஸ்திரேலியா, மற்றும் கனடா போன்ற நாடுகளின் உதவியைக் கொண்டு, வளர்ந்து வரும் நாடுகளின் சில குறிப்பிட்ட திட்டங்களை நிறைவேற்றுவதற்கான முயற்சிகளைப் பொது நல அரசுக் கூட்டங்களில் செயற்படுத்தலாம். இதன் மூலம் வசதி பெற்ற மேற்கு நாடுகளுடன் சர்வதேச அரங்கில் அடிக்கடி ஏற்படும் மோதுதல்களைத் தவிர்க்கவும், புதிய ஒரு சர்வதேசப் பொருளியல் கோட்பாட்டினை உருவாக்கவும் முடியும். உறுப்பு நாடுகளின் உள் நாட்டு, அல்லது அயல் நாட்டுப் பிரச்சனை களைத் தீர்த்து வைப்பதில் பொது நல அரசு அத்தனை அளவிற்குச் செயல்படுவதாக இல்லை. அனைத்துப் பிரச்சனைகளும் உடனுக்குடன் ஐ நா சபையின் பாதுகாப்புக் கவுன்சிலுக்கு அனுப்பி வைக்கப்படுகின்றன. பிரிட்டன் இப்போது உலகப் பிரச்சனைகளில் அதிக அக்கறை காட்டுவதில்லை. காரணம் இன்று உலக அரங்கில் அது ஒரு வல்லரசாக மதிக்கப்படுவதில்லை . இருப்பினும் ஐ.நா.சபையுடன் ஒத்தியங்கும் ஓர் அமைப்பாகப் பொது நல அரசு இருந்து, உறுப்பு நாடுகளின் சிக்கல் களைத் தீர்த்து வைக்கலாம். இந்த உண்மை 1979 இல் ஜிம்பாப்வே ரொடீஷியா இவற்றினிடையே இருந்த பூசல் லுசாகாவில் நடைபெற்ற பொது நல அரசு மாநாட்டின் வழிதீர்க்கப் பட்டதன் மூலம் மெய்பிக்கப்பட்டுள்ளது. அன்றியும் பொது நல அரசின 48 உறுப்பினர்களுள் பெரும் பாலானவை வளர்ந்து வரும் நாடுகளாக இருப்பதாலும், பிரிட்டன் இந்நாடுகள் மீது மேலாதிக்கம் செலுத்தும் நிலையிலோ, அன்றி தனது விருப்பு வெறுப்புக்களை உறுப்பு நாடுகளின் மீது திணிக்கும் நிலையிலோ இல்லாததாலும், கறுப்பர் நாடுகள் இந்த அமைப்பில் ஒன்று சேர்ந்து, தக்கபயனுள்ள தீர்மானங்களை நிறைவேற்றிச் செயல்படுத்துவதன் மூலம் தம்மை வளப்படுத்திக் கொள்ள முடியும். ஆரம்பத்தில் பொதுநல அரசின் தீர்மானங்களை நிறைவேற்றும் போக்கில் வெள்ளையர்களே உண்மையான ஆதிக்கம் செலுத்திவந்தனர். ஆனால் இன்றோ நிலைமை மாறி, தீர்மானங்களை உருவாக்குவதிலும், நிறைவேற்றுவதிலும் கறுப்பர் . நாட்டினரே மேலாதிக்கம் செலுத்துகின்றனர். காரணம் இப்போது அவர்களே பொதுநல அரசில் பெரும்பான்மையோராக உள்ளனர்.

**உங்கள் முன்னேற்றத்தைச் சரிபார்க்கவும்**

1கூட்டுச்சேரா இயக்கம் எப்போதுக் கூட்டப்பட்டது குறிப்பிடுக?

2. காமன்வெல்த் நாடுகளைப் பற்றி விவரிக்கவும்?

*Self-Instructional Material*

## 7.4 அமெரிக்க மாநிலங்களின் அமைப்பு (OAS)

1826-ஆம் ஆண்டிலிருந்து அமெரிக்க நாடுகளுக்கிடைய ஒரு முறையமைவை ஏற்படுத்தும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. 1826 ஆம் ஆண்டு சைமன் பொலிவர் என்பார் அமெரிக்க நாடுகளின் மாநாட்டை பனாமா என்ற இடத்தில் கூட்டினார். 1889-90-ஆம் ஆண்டில் அமெரிக்க நாடுகளுக்கிடையேயான மாநாடு வாஷிங்டனில் நடந்தேறியது. அதிலிருந்து மேற்கத்திய நாடுகளின் சமுதாய அமைப்பை ய கருத்துக்களை அமெரிக்க ஐக்கிய நாடுகள் தீவிரமாக எடுத்துரைத்து வந்தது. முதலாவது அரசியல் சாராத காரியங்களில் அமெரிக்க நாடுகளிடையே ஒத்துழைப்பு ஏற்பட்டது. ஆனால், நாளடைவில் மெதுவாக சமூக உணர்வு உருவெடுத்தது. அதனடிப்படையில் ஒரு நிரந்தர செயலகம் உருவாக்கப்பட்டது (The Pan American Union) அமெரிக்க நாடுகளின் ஒருமைப்பாட்டை இரண்டாம் உலகப்போர் துரிதப்படுத்தியது. நாளடைவில் அரசியல் காரியங்களில் ஓரளவு ஒத்துழைப்பு உருவாகியது.

1945-ஆம் ஆண்டு போர் சம்பந்தப்பட்ட பிரச்சனைகளையும், சமாதான காரியங்களையும் விவாதிக்க மெக்சிகோவில் அமெரிக்க நாடுகளின் மாநாடு நடத்தப்பட்டது. அம்மா நாட்டில் பிராந்திய ஏற்பாடுகளைத் திடமாகவும் விரிவாகவும் நிறுவ தேவையான திட்டங்கள் தீட்டப்பட்டன. இதைத் தொடர்ந்து இரண்டாவது மாநாடு பகோட்டாவில் 1948-ஆம் ஆண்டு நடந்தது. 1947-ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்ட ரியோ உடன் படிக்கையின் செயற்பாட்டிற்கான வழிவகையை இம்மாநாடு வகுத்ததோடு அமெரிக்க நாடுகளின் ஸ்தாபனத்திற்கான சாசனத்தையும் அளித்தது. மேலும் பல உடன்பாடுகளை 21 நாடுகள் ஒன்று சேர்ந்து செய்து கொண்டன.

## 7.5 பெட்ரோலிய ஏற்றுமதி நாடுகளின் அமைப்பு(OPES)

1960-ஆம் ஆண்டு ஈராக்கில் இவ்வமைப்பு நிறுவப்பட்டது. ஈரான், ஈராக், குவெயிட், சவுதி அரேபியா, வெனிசுயலா போன்ற நாடுகள் இதன் ஆரம்ப உறுப்பினர்கள். அங்கத்துவ நாடுகளின் பெட்ரோலிய கொள்கைகளை ஒருங்கிணைத்தல் பெட்ரோலிய நாடுகளின் நலனை தனிப்பட்ட முறையிலும் கூட்டாகவும் பாதுகாத்தல் சர்வதேச எண்ணெய் சந்தையில் எண்ணெய் விலையை அங்கத்துவ நாடுகளின் நலன் கருதி நிலையாக வைக்கும் வழிமுறைகளை வகுத்தல் எண்ணெய் உற்பத்தி செய்யும் நாடுகளுக்கு நிலையான வருமானத்திற்கான திட்டமிடல் திறமையாகவும் சிக்கனமாகவும் ஒழுங்காகவும் நுகரும் நாடுகளுக்கு எண்ணெய் வழங்கல் போன்றவை இல்வமைப்பின் முக்கிய குறிக்கோள்களாகும்.

அல்ஜீரியா, இக்கு வேடர், கேபன், இந்தோனேசியா, ஈரான், ஈராக், குவெயிட், லிபியா, நைஜீரியா, காட்டர், சவுதி அரேபியா, ஐக்கிய அரேபிய நாடுகள், வெனிசுலா ஆகியவை இதன் அங்கத்தினர்கள். பெட்ரோலிய எண்ணெய் ஏற்றுமதி செய்யும் நாடுகள் இதன் அங்கத்தினர் ஆகலாம். இவ்வமைப்பின் மேம்பட்ட அதிகாரம் கொண்ட நிறுவனம் “மாநாடு“ என்றழைக்கப்படுகிறது. இந்நிறுவனம் இவ்வமைப்பின் பொது கொள்கையை வடிக்கின்றது. இதில் அங்கத்துவ நாடுகளின் பிரதிநிதிகள் அங்கத்துவம் வகிக்கின்றனர். “மாநாடு“ ஆண்டிற்கு இருமுறை கூடுகிறது. ஒவ்வொரு நாட்டிலும் இருந்து நியமனம் செய்யப்படும் ஆளுநர்களுக்கு இது அங்கீகாரம் வழங்குகிறது. ஆளுநர் குழுவின் தலைவரை இம்மா நாடு

குறிப்பு

தேர்ந்தெடுக்கிறது. "அனைவரின் ஒப்புதல்" என்ற தத்துவத்தை அடிப்படையாகக்கொண்டு இது செயல்படுகிறது. இவ்வமைப்பை ஆளுநர் குழு மேலாண்மைச் செய்கிறது. இக்குழு மாநாட்டின் முடிவுகளைச் செயல்படுத்துகிறது. வருடாந்திர வரவு செலவு கணக்கினை இது தயார் செய்கிறது ஒவ்வொரு அங்கத்துவ நாட்டிலும் இருந்து ஒரு ஆளுநர் இக்குழுவில் இடம் பெறுகின்றார். ஒவ்வொரு ஆண்டும் இரு முறை இக்குழு கூடுகின்றது.

பொருளாதார ஆணையம் எண்ணெய் ஏற்றுமதி நாடுகளின் அமைப்பின் விசேட நிறுவனமாக செயலக அமைப்பிற்குட்பட்டு செயல்படுகிறது. சர்வதேச எண்ணெய் விலையை சம நிலையில் நிலையாக பராமரிக்க எண்ணெய் ஏற்றுமதி நாடுகளின் அமைப்பிற்கு இவ்வாணையம் உதவி செய்கின்றது. ஒரு மன்ற குழு, தேசீய பிரதி நிதிகள் மற்றும் ஆணைய ஊழியர்கள் அடங்கிய ஒன்றாக இவ்வாணையம் காணப்படுகிறது. ஆண் டொன்றிற்கு இருமுறை மன்றக்குழு கூடுகிறது.

1976-ஆம் ஆண்டு எண்ணெய் ஏற்றுமதி நாடுகளின் அமைப்பிற்கு ஒரு விசேட நிதி ஒரு விசேட கூட்டத் தொடரில் உருவாக்கப்பட்டது. ஆரம்பத்தில் இந்நிதி 800 மில்லியன் அமெரிக்க டாலர்களைக் கொண்டிருந்தது. வளர்ந்து வரும் நாடுகளுக்கு கடனுதவி மற்றும் பல உதவிகள் வழங்கும் பல நோக்குடைய தாய் இந்நிதி அமைந்தது. இவ்வமைப்பின் தொடர்ச்சியான நடவடிக்கைகளை மேற்கொள்ள பொது செயலரின் தலைமையின் கீழ் ஒரு செயலகம் செயல்பட்டு வருகிறது. ஒப்பந்தங்களை செயல்படுத்தும் பணி மற்றும் மாநாட்டு முடிவுகளை செயல்படுத்தும் பணி ஆகியவற்றை பொது செயலர் செயலக ஊழியர்களின் துணையோடு ஆற்றுகின்றார்.

## 7.6 தென்கிழக்கு ஆசிய நாடுகளின் சங்கம் (ASEAN)

தென் கிழக்கு ஆசிய நாடுகளின் கூட்டமைப்பு இந்தோனேசியா, மலேசியா, பிலிப்பைன்ஸ், சிங்கப்பூர், தாய்லாந்து ஆகிய நாடுகளின் வெளியுறவு அமைச்சர்கள் 1967-ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 8-ஆம் நாள், பேங்காக் பிரகடனத்தில் கையொப்பமிட்டு உருவாக்கிய ஒரு பிராந்திய அமைப்பாகும். 1984-ஆம் ஆண்டு புருனெய் இவ்வமைப்பில் சேர்ந்தது. பின்வரும் சில முக்கிய குறிக்கோட்களுக்காக இவ்வமைப்பு செயல்படுகிறது அவை: பொருளாதார வளர்ச்சியை துரிதப்படுத்துவது, சமூக மற்றும் கலாச்சார வளர்ச்சி, பொது நலனுக்காக பரஸ்பர ஒத்துழைப்பை உருவாக்குதல், தென் கிழக்கு ஆசியப் பகுதியில் நிலையான தன்மையை உறுதிப்படுத்துதல் ஒத்த நோக்கம் கொண்ட பன்னாட்டு மற்றும் பிராந்திய அமைப்புக்களோடு ஒத்துழைப்பை ஏற்படுத்தல் என்பவையாகும். பின் கூறப்பட்டுள்ள சில முக்கிய செயல் திட்டங்களை இவ்வமைப்பு கொண்டுள்ளது. அவை : பொருளாதார ஒத்துழைப்பை மற்றும் மேம்பாடு ஏற்படுத்தல், தென் கிழக்கு ஆசிய நாடுகள் மற்றும் உலக நாடுகளுக்கிடையே வாணிபத்தை வளர்த்தல், பொது ஆய்வு மற்றும் தொழில் நுட்ப நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல், போக்குவரத்து மற்றும் செய்தித் தொடர்பு ஒத்துழைப்பு ஏற்படுத்தல், சுற்றுலா மற்றும் தென் கிழக்கு ஆசிய கல்வியை வளர்த்தல், கலாச்சார, விஞ்ஞான, கல்வி மற்றும் நிர்வாக பரிமாறலை உருவாக்குதல் போன்றவையாகும்.



தென் கிழக்கு ஆசிய நாடுகளின் அரசாங்க தலைவர்கள் தேவைப்படும் போது கூடி தென்கிழக்கு ஆசிய நாடுகளின் சங்க அமைப்பிற்கு தேவையான வழிக்காட்டலை வழங்குவதோடு, இவ்வமைப்பின்

உயர் அதிகாரம் படைத்த பிரிவாக செயல்படுகிறது. அங்கத்துவ நாடுகளின் வெளியுறவு அமைச்சர்கள் அடங்கிய வருடாந்திர அமைச்சர்களின் கூட்டம் இவ்வமைப்பின் கொள்கைகளை உருவாக்கம் உயர் மட்ட அமைப்பாக கருதப்படுகிறது. வருடாந்திர அமைச்சர்களின் கூட்டம் ஒவ்வொரு ஆண்டும் வரிசை கிரமமாக ஒவ்வொரு அங்கத்துவ நாடுகளில் நடைபெறுகிறது. அமைச்சர்களின் கூட்டத்தை நடத்தும் நாட்டின் வெளியுறவு அமைச்சரும், அங்கத்துவ நாடுகளின் தூதுவர்களும் அடங்கிய ஒரு நிலைக் குழுஅமைச்சர்களின் கூட்டத்திற்கு இடைப்பட்ட காலகட்டத்தில் இச் சங்க அமைப்பின் பணியினை மேற்கொள்ளுகிறது. மேலும் இந்நிலைக் குழு ஒழுங்கான பணிகளை தொடர்ச்சியாக புரிவதோடு, அமைச்சர் கூட்டம் கூடுவதற்கு முன் சில முக்கிய முடிவுகளை மேற்கொள்ளுகிறது. தென்கிழக்கு ஆசிய நாடுகளின் சங்கத்தின் பல குழுக்களின் பரிந்துரைகளையும் அறிக்கையையும் வெளியுறவு அமைச்சர்களின் கவனத்திற்கு இக்குழு சமர்பிக்கின்றது. நிலைக்குழுவின் கீழ் நான்கு விசேட குழுக்களும், தென்கிழக்கு ஆசிய நாடுகளின் கூட்டமைவின் ஒத்துழைப் பிற்கு தேவையான பொருளாதார நடவடிக்கைகளை பரிந்துரைச் செய்ய ஐந்து தென் கிழக்கு ஆசிய நாடுகளின் பொருளாதார அமைச்சர்கள் அடங்கிய ஐந்து குழுக்களும் இயங்குகிறது. தென் கிழக்கு ஆசிய நாடுகளின் கூட்டமைப்பு வகுக்கும் திட்டங்களை பணி தளங்களில் செயல்படுத்தும் பொறுப்பு இக்குழுக்களையே சாரும். ஒவ்வொரு தென்கிழக்கு ஆசிய கூட்டமைப்பு நாடுகளின் தலை நகரிலும் ஒவ்வொரு தென் கிழக்கு ஆசிய கூட்டமைப்பின் தேசீய செயலகம் நிறுவப்பட்டுள்ளது. தென்கிழக்கு ஆசிய கூட்டமைப்பின் மையசெயலகம் இந்தோனேசியாவிலுள்ள ஜாகர்தாவில் இயங்கி வருகின்றது. இச்செயலகத்தை தென் கிழக்கு ஆசிய நாடுகளின் கூட்டமைப்பின் பொது செயலர் ஒருவர் தலைமையேற்று நடத்தி வருகின்றார். இப்பொது செயலர் பதவி அங்கத்துவ நாடுகளுக்கு இரண்டாண்டுக்கு ஒரு முறை அகரவரிசை கிரமமாக வழங்கப்படுகிறது. இச் செயலகத்தின் இதர பெரிய அதிகாரிகளும் இயக்குனர்களும் மூன்று ஆண்டிற்கு பதவி வகிப்பார்கள்.

## 7.7 பிராந்திய ஒத்துழைப்புக்கான தெற்காசிய சங்கம்(SAARC)

1985-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம், 7-ம் 8-ம் தியதி தெற்கு ஆசியாவைச் சார்ந்த பங்களாதேஷ், பூட்டான், இந்தியா, மாலத்தீவு நேபாளம், பாகிஸ்தான், ஸ்ரீலங்கா ஆகிய ஏழு நாடுகளும் டாக்காவில் ஒன்று கூடி வரலாற்று சிறப்புமிக்க சாசனத்தில் கையொப்பமிட்டு ‘‘தெற்காசிய நாடுகளின் இணையம்’’ என்ற அமைப்பினை ஏற்படுத்தி தெற்காசிய பிராந்திய ஒத்துழைப்பை நடை முறைக்கு கொண்டுவந்தனர். பன்னாட்டு அரசியல் முறையமைவில் உலக மக்கட்தொகையில் ஐந்தில் ஒரு பங்கை தன்னகத்தே கொண்டிருக்கும் தெற்காசிய பிராந்தியத்தை சக்தி மிக்க ஒரு அமைப்பாக தெற்காசிய நாடுகளின் இணையம் உருவாக்கியது. டாக்காவில் கையொப்பம் இடைப்பட்ட பிரகடனம் தெற்காசிய நாடுகளின் இணையத்தின் முக்கிய குறிக்கோள்களை தெளிவாகவும் திட்டமாகவும் விளக்கி கூறியது. அவ்விளக்கம் பின்வருமாறு :

‘‘அரசுகளின் தலைவர்கள் தங்கள் நாடுகளில் பொருளாதார மற்றும் சமூக வளர்ச்சிக்கு உகந்த வண்ணம் மனித மற்றும் பொருளாதார வளங்களை பெருக்கி நாட்டு மக்களின் நலனையும் வாழ்க்கை தரத்தையும் மேம்படுத்துதல் தங்கள் அடிப்படை நோக்கம் என உறுதி பூண்டனர், இக்குறிக்கோளை அடைய சமாதானமும் பாதுகாப்பும் அடிப்படை தேவை என்று இத்தலைவர்கள் உணர்ந்தனர். உலக மக்கட் தொகையில் ஐந்தில் ஒரு பகுதியை தன்னகத்தே கொண்டுள்ள தெற்கு ஆசியா, வறுமை,

குறிப்பு

பின்தங்கிய நிலை, உற்பத்தி முடக்கம், வேலையில்லா திண்டாட்டம், மக்கட் தொகை பெருக்கத்தின் பாதிப்பு போன்ற பிரச்சனைகளை எதிர் நோக்கியுள்ளது. என்னும் ஒத்த கருத்தை இந்நாட்டு தலைவர்கள் கொண்டுள்ளனர். இவர்கள் தங்கள் தனிப்பட்ட மற்றும் பிராந்திய வலிமை, தங்கள் ஆற்றல்மிக்க வியாபார சந்தைகள், போதுமான அளவிலான தங்கள் மனித மற்றும் இயற்கை வளங்கள், பாராட்டும் முகத்தான தங்கள் பொருளதாரம் ஆகியவற்றைப்பற்றிய உணர்வுடையவர்களாக காணப்படுகின்றனர். திறமையான பிராந்திய ஒத்துழைப்பின் மூலம், தங்கள் ஆற்றல்களை விரும்பத்தக்க முறையில் பயன்படுத்தி, மக்கள் நலனைப் பெருக்கி, பொருளாதார வளர்ச்சியை துரிதப்படுத்தி, தங்கள் தேசிய மற்றும் கூட்டு தற்சார்புடைமையை இந்நாடுகள் பெருக்கும் என்ற நம்பிக்கை கொண்டுள்ளன. மனித பண்பாட்டு வளர்ச்சிக்கு முக்கிய பங்காற்றிய இந் நாடுகள், பன்னாட்டு உறவு மற்றும், தங்கள் நலன் சம்பந்தப்பட்ட பன்னாட்டு முடிவுகளை கட்டுப்படுத்தும் ஆற்றல் ஆகியவற்றை போது மான அளவு கொண்டிருந்தன".

அடிப்படை அளவில் பின் கூறப்பட்டுள்ளவை பிராந்திய குறிக்கோட்களாக கருதப்படுகிறது. அவை (1) தெற்காசிய நாடுகளின் இணையத்தைச் சார்ந்த அங்கத்துவ நாடுகள் வறுமை, பட்டினி, வேலையில்லா திண்டாட்டம், பிணி, அறியாமை போன்ற பிரச்சனைகளை தமக்குள் பகிர்ந்து கொள்ளுதல் (ii) பிராந்தியத்தைச் சார்ந்த மக்களின் வாழ்க்கை தரத்தை மேம்படுத்துதல் என்ற நோக்கோடு சமூக மற்றும் பொருளாதார வளர்ச்சியை துரிதப்படுத்துதல் (iii) அங்கத்துவ நாடுகளின் தேசிய விருப்பங்களை கருத்தில் கொண்டு கூட்டு தற்சார்புடைமையை எய்துதல் (iv) உலக அளவில் பிராந்தியத்தின் பங்கைமேம்படுத்துதல் (v) குழப்பங்கள் உருவாக்கும் பதட்ட நிலையை குறைத்து, சுமூகமான பரஸ்பர போக்கை வளர்க்க முயற்சிக்கும் பிராந்திய அமைப்புக்களை உருவாக்குதல் போன்றவையாகும். இவ்வாறு தெற்காசிய நாடுகளின் இணையம் பொதுவாக பொருளாதாரம் மற்றும் கலாச்சாரம் சம்பந்தப்பட்ட நடவடிக்கைகள் சார்ந்த சில குறிப்பிட்ட பகுதிகளில் தன் கவனத்தை அதிக அளவில் செலுத்திய போதிலும் இவ்விணையத்தின் பிராந்திய ஒத்துழைப்பு சில பரஸ்பர உதவி புரியும் அரசியல் சம்பந்தப்பட்ட நடவடிக்கைகளிலும் காணப்படுகிறது.

தெற்காசிய பிராந்தியத்தின் சமூக, அரசியல் செயற்பாட்டினை தெற்காசிய நாடுகளின் இணையம் பிரதிபலிப்பதோடு, இவ்விணையம் வேற்றுமையில் ஒற்றுமை காண விழைகிறது. பிராந்திய பாதுகாப்பு சம்பந்தப்பட்ட காரியங்களில் தெற்காசிய நாடுகளின் இணையம் கவனம் செலுத்தவில்லை. அங்கத்துவ நாடுகளிடம் ஏற்கெனவே நிலவி வரும் இருக்கூட்டு மற்றும் பல கூட்டு உறவுகளில் தலையிடா வண்ணம் தெற்காசிய நாடுகளின் இணையம் அங்கத்துவ நாடுகளிடையே விரும்பத்தக்சு முறையில் ஒரு நல் உறவை உருவாக்கி வருகிறது. மேம்பாடு படைத்த ஒரு தேசீய அமைப்பாக கருதப்படாமை இவ்விணையத்தின் ஒரு சிறப்பு அம்சமாக காணப்படுகிறது. எந்த ஒரு நாடோ அல்லது நாடுகளின் கூட்டமைவோ எந்த முடிவையும் அங்கத்துவ நாடுகளின் மீது திணிக்க இயலாது. கருத்திசைவை உருவாக்குதலின் அடிப்படையில் இல்லாமல் எல்லா முடிவுகளும் அங்கத்துவ நாடுகளின் ஏகோபித்த முடிவாக மேற் கொள்ளப்படுகிறது. இதன் மூலம் முடிவுகள் மேற்கொள்ளுவதில் அங்கத்துவ நாடுகளின் இறைமையும் சம நிலையும் பாதுகாக்கப்படுகிறது.



1986 - ஆம் ஆண்டு நவம்பர் மாதம் தெற்காசிய நாடுகளின் இணையத்தின் இரண்டாம் மாநாடு இந்தியாவில் பெங்களூரில் வைத்து

நடத்தப்பட்டது. அதைத் தொடர்ந்து தெற்காசிய நாடுகளின் இணையத்தின் பொது செயலகம் 1987-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 16-ம் நாள் நேபாளத்தில் உள்ள காத்மண்டு என்ற இடத்தில் அமைக்கப்பட்டது. இச் செயலக அமைப்பு தெற்கு ஆசிய நாடுகளின் இணையத்திற்கு மிகவும் தேவையான ஒரு நிர்வாக அமைப்பிற்கான அடிப்படையை தோற்றுவித்தது. தெற்கு ஆசிய நாடுகளின் இணையத்திற்கு ஒரு ஒளி மயமான எதிர் காலம் இருக்கிறது என்ற நம்பிக்கை இன்று உருவாகியுள்ளது. எவ்வாவெனினும் தெற்கு ஆசிய பிராந்தியத்தில் அர்த்தமுள்ள பிராந்திய ஒத்துழைப்பை உருவாக்கி, சமாதானத்தை ஏற்படுத்தி, நிலைத் தன்மையை உறுதிப்படுத்த, தெற்கு ஆசிய நாடுகளின் இணையம் தீவிரமாய் செயல்பட வேண்டும். அதற்கு அங்கத்துவ நாடுகளுக்கு போதுமான விவேகமும் தூர நோக்கும் தேவை.

## 7.8 இந்தியா பிரேசில் தென் ஆப்பிரிக்கா(IPSA)

இந்தியா-பிரேசில்-தென்னாப்பிரிக்கா உரையாடல் மன்றம் (ஐ.பி.எஸ்.ஏ) ஜூன் 2003 இல் நிறுவப்பட்டது, மூன்று வளர்ந்து வரும் நாடுகளில் (இந்தியா, பிரேசில், தென்னாப்பிரிக்கா) ஒரு ஒருங்கிணைப்பு பொறிமுறையாக, மூன்று பல இன மற்றும் பன்முக கலாச்சார ஜனநாயக நாடுகள், அவை தீர்மானிக்கப்படுகின்றன: கட்டுமானத்திற்கு பங்களிப்பு ஒரு புதிய சர்வதேச கட்டிடக்கலை, உலகளாவிய பிரச்சினைகளில் அவர்களின் குரலை ஒன்றிணைத்தல், பல்வேறு பகுதிகளில் அவர்களின் உறவுகளை ஆழப்படுத்துதல். மன்றத்தின் தொடக்கத்திலிருந்தும், 2015 ஆம் ஆண்டளவில் 25 பில்லியன் அமெரிக்க டாலர் இலக்கு உடனடியாக அடையப்படும் என்பதற்கான அறிகுறிகளிலிருந்தும் ஐபிஎஸ்ஏ கூட்டாளர்களிடையே வர்த்தகம் கணிசமாக அதிகரித்துள்ளது.

## 7.9 பிரேசில், ரஷ்யா, இந்தியா, சீனா, தென் ஆப்ரிக்கா(BRICS)

பிரிக் நாடுகளின் லேபிள் நான்கு பெரிய, வளரும் நாடுகளின் (பிரேசில், ரஷ்யா, இந்தியா மற்றும் சீனா) தேர்ந்தெடுக்கப்பட்ட குழுவைக் குறிக்கிறது. "பிரிக்" என்ற சொல் 2001 ஆம் ஆண்டில் கோல்ட்மேன் சாச்ஸ் சொத்து மேலாண்மை நிறுவனத்தின் தலைவரான ஜிம் ஓ நீல் என்பவரால் உருவாக்கப்பட்டது. அவரது வெளியீடு பில்டிங் பெட்டர் குளோபல் எகனாமிக் பிரிக்ஸ். ஆரம்ப நான்கு பி.ஆர்.ஐ.சி மாநிலங்களின் (பிரேசில், ரஷ்யா, இந்தியா மற்றும் சீனா) வெளியுறவு அமைச்சர்கள் செப்டம்பர் 2006 இல் நியூயார்க் நகரில் ஐ.நா பொதுச் சபையின் பொது விவாதத்தின் ஓரங்களில் சந்தித்து, தொடர்ச்சியான உயர்மட்டக் கூட்டங்களைத் தொடங்கினர். 16 ஜூன் 2009 அன்று ரஷ்யாவின் யெகாடெரின்பர்க்கில் ஒரு முழு அளவிலான இராஜதந்திர கூட்டம் நடைபெற்றது. பிரிக்ஸ் தலைவர்களின் உச்சி மாநாடு ஆண்டுதோறும் கூட்டப்படுகிறது.

நான்கு BRIC நாடுகளும் 21 ஆம் நூற்றாண்டில் உலகின் மிகப்பெரிய மற்றும் மிகவும் செல்வாக்குமிக்க பொருளாதாரங்களுக்கிடையில் தரவரிசைப்படுத்துவதற்கான அவர்களின் மக்கள்தொகை மற்றும் பொருளாதார ஆற்றலால் பல நம்பிக்கைக்குரிய

குறிப்பு

வளர்ந்து வரும் சந்தைகளில் இருந்து வேறுபடுகின்றன (மேலும் அந்த திறனை உணர்ந்து கொள்வதற்கான நியாயமான வாய்ப்பைப் பெறுவதன் மூலம்). மொத்தத்தில், நான்கு அசல் பி.ஆர்.ஐ.சி நாடுகள் 2.8 பில்லியனுக்கும் அதிகமான மக்கள் அல்லது உலக மக்கள்தொகையில் 40 சதவிகிதம், மூன்று கண்டங்களுக்கு மேலாக உலகின் நிலப்பரப்பில் கால் பகுதியையும் உள்ளடக்கியது, மேலும் உலக மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 25 சதவீதத்திற்கும் அதிகமானவை.

இரண்டாம் உலக யுத்தத்தின் பிறகு, பல புதிய நாடுகள் உதயமாகின. அவ்வாறு உருவான ஒரு நாடே இசுரேல் ஆகும். இது பிரித்தானியப் பேரரசின் ஒரு பகுதியான பாலஸ்தீனத்தில் அமைக்கப்பட்டது. யூதர்களுக்காக அமைக்கப்பட்ட இந்த நாட்டினால், பூர்வீக பாலஸ்தீனியர்களின் நாடாளும் உரிமை பறிபோனது. இதன் காரணமாக பாலசுத்தீனீய விடுதலை இயக்கங்கள் தோன்றின. யாசர் அராபத் போன்றவர்கள் தலைமையில் தோன்றிய இந்த இயக்கங்கள் பின்னாளில் நடைபெற்ற இஸ்ரேலிய ராணுவ தாக்குதல், மற்றும் அல்-அக்சா மசூதி நெருப்பிடப்பட்டது காரணமாக தீவிரவாத இயக்கங்களாக மாறின. மேலும் ஈராக் - குவைத் போரின் காரணமாக சவூதி அரேபியா நாட்டில் முகாமிட்ட அமெரிக்க ராணுவ படைகள், அங்கேயே நிரந்தரமாக தங்கியதன் காரணமாகவும், இசுரேல் நாட்டை அமெரிக்கா ஆதரித்து வருவதன் காரணமாகவும் இசுலாமியர்களில் பெரும்பாலோர் அமெரிக்கா மற்றும் மேலை நாடுகளை வெறுக்கத் தொடங்கினர். இதன் காரணமாகவும் அல்-கொய்தா போன்ற தீவிரவாத இயக்கங்கள் தோன்றின. இந்த இயக்கங்களின் காரணமாக இசுலாம் ஒரு தீவிரவாத மதம் போன்ற தோற்றம் பெற்றது. இருப்பினும் ஆசிய-ஆப்பிரிக்க நாட்டு இசுலாமியர்களின் வியாபார பெயர்வு காரணமாக, புதிய பகுதிகளிலும் இசுலாம் பரவுகின்றது. இதைத் தவிர பொருளாதார மற்றும் கல்வியின் பொருட்டு புலம்பெயரும் இசுலாமியர்களின் காரணமாக மற்ற மேற்கத்திய நாடுகளிலும் இசுலாம் மதம் பரவுகின்றது.

**உங்கள் முன்னேற்றத்தைச் சரிபார்க்கவும்**

1. ASEAN என்றால் என்ன?
2. BRICS பற்றி விவரிக்கவும்?

## 7.10 உங்கள் முன்னேற்றத்தை சோதிக்கும் வினாகளுக்கான விடைகள்

உறுப்பு நாடுகளின் விருப்பங்களை நிறைவேற்றி வைக்க வேண்டும் என்ற முறையில், இப்போது, பொது நல அரசு அமைப்பு மிகவும் தளர்ந்த பிடிப்பைக் கொண்டதாகவே உள்ளது. “பேரரசு மாநாடுகள்“ கூட்டப்படுவதற்கு மாறாக, இப்போது “பொது நல அரசுகளின் பிரதமர்கள் மாநாடுகளும்“ பொதுநல அரசுகளின் நிதியமைச்சர் மாநாடுகளுமே“

கூட்டப்படுகின்றன. விடுதலை பெற்ற நாடுகள் பொதுநல அரசில் உறுப்பினராக இருப்பதன் அவசியத்தை நன்கு உணர்ந்தேயுள்ளன.

இரண்டாம் உலகப் போர் முடிந்தவுடன் அமெரிக்கா, ரஷியா ஆகிய இரு வல்லரசுகளின் கடுமையான கருத்து வேறுபாடு எழுந்தது. இது கொள்கை மாறுபாடு காரணமாக மேலும் வலுப்பட்டது் இறுதியில் அது ஆதிககப் போராட்டமாக உருவெடுத்தது. இதனையே “கெடுபிடிங் போர்” என்று கூறுகிறோம். இப்போரில் பிரிட்டன், பிரான்ஸ், பெல்ஜியம், பாக்கிஸ்தான், லத்தீன் அமெரிக்க நாடுகள் ஆகியவை அமெரிக்காவை ஆதரித்த போது, போலந்து, பல்கேரியா, ருமேனியா போன்ற கிழக்கு ஐரோப்பிய நாடுகளும் சீனாவும் ரஷியாவை ஆதரித்து நின்றன. இவ்வாறு உலகில் இருபெரும் வல்லரசுகள் தலைமையில் இரு கூட்டுக்கள் உருவாயின. இக்கூட்டுக்கள் ராணுவக கூட்டுக்களாக மாறின. அமெரிக்கா, நேட்டோ, சீட்டோ போன்ற ராணுவக் கூட்டுக்களை உருவாக்கிய போது ரஷியா வார்சா கூட்டை உரு வாக்கியது. இது உலகில் தட்ட நிலையை உண்டு பண்ணியது. இன்னொரு உலகப் போர் மூண்டு விடுமோ என்ற அச்சத்தை ஏற்படுத்தியது. முதல் இரு உலகப்போர்களுக்கு முன்பும் இத்தகைய கூட்டுக்கள் உருவாகியிருந்தது குறிப்பிடத்தக்கது. எனவே, உலகில் அமைதியை நிலைநாட்ட வேண்டுமென்றால் இத்தகைய கூட்டுக்களில் சேராமல் நடுநிலையுடன் செயல்பட வேண்டும் என்ற எண்ணம் ஏற்பட்டது. அதன் விளைவாகத் தோற்றுவிக்கப்பட்டதே கூட்டுக் சேராக் கொள்கையாகும்.

இது தென் கிழக்கு ஆசிய பகுதியில் உள்ள நாடுகளுக்கு இடை யிலான ஒரு பிராந்திய அமைப்பு ஆகும். இந்த தென்கிழக்கு ஆசிய நாடு களின் கழகம் ( ஏசியான் ) 1967-ஆகஸ்ட்,8-ந் தேதி பேங்காக் பிரகடனத் தின்படி அமைக்கப்பட்டது. இந்த அமைப்பில் தற்போது புருனே, கம்போடியா, இந்தோனேசியா, லாவோஸ், மலேசியா, மியான்மார், பிலிப்பைன்ஸ், சிங்கப்பூர், தாய்லாந்து, வியட்நாம் என்ற பத்து நாடுகள் உறுப்பினர்களாக உள்ளன. இதன் தலைமைச் செயலகம் இந்தோனேஷி யாவின் தலைநகர் ஜகார்த்தாவில் உள்ளது. பிரேசில், ரஷ்யா, இந்தியா, சீனா, தென் ஆப்ரிக்கா, ஒன்றாக இணைந்து உலக அமைதிக்காக ஏற்படுத்தப்பட்ட ஒப்பந்தமாகும்

## 7.11 சுருக்கவுரை

ஐ.நா. சபையின் இன்றியமையாமையை உலக நாடுகள் உணரத் தொடங்கியுள்ளன. போரற்ற 48 ஆண்டுகளை உலகிற்குத் தந்த ஒப்பற்ற நிறுவனம் எனப் போற்றுகின்றனர். எட்டு ஆண்டுகள் ஈரான், ஈராக் போரை நிறுத்தியது. பன்னிரண்டாண்டு ஆப்கானிஸ்தான் குழப்பத்திற்கு அமைதி வழிகண்டது. நமீபியா சுதந்திரத்திற்குப் பாடுபட்டது. குவைத்தை ஈராக் ஆக்கிரமித்தபோது வெறும் தீர்மானம் மட்டும் இயற்றிக்

குறிப்பு

கொண்டிருக்கவில்லை. ஆக்கிரமிப்பை அகற்ற படை திரட்டி போர்புரிய அனுமதி வழங்கியது. அதனால் ஆக்கிரமிப்பு அகற்றப்பட்டது. அதன் கிளை நிறுவனங்கள் உலகளாவிய சமுதாயத்தை நிர்மாணிக்கும் பணியைப் புரிந்து வருகின்றன. இவ்வாறு மாறிவரும் உலகச் சூழ்நிலை பன்னாட்டு உறவிலும் மாறுதல்களை ஏற்படுத்தியுள்ளது.

## 7.12 முக்கிய வார்த்தைகள்

கூட்டுச்சேரா இயக்கம் (NAM) காமன்வெல்த் நாடுகள் அமெரிக்க மாநிலங்களின் அமைப்பு (OAS) பெட்ரோலிய ஏற்றுமதி நாடுகளின் அமைப்பு (OPEC) தென்கிழக்கு ஆசிய நாடுகளின் சங்கம் (ASEAN) பிராந்திய ஒத்துழைப்புக்கான தெற்காசிய சங்கம் (SAARC) இந்தியா பிரேசில் தென் ஆப்பிரிக்கா (IBSA) பிரேசில் ரஷ்யா இந்தியா சீனா, தென் ஆப்ரிக்கா (BRICS)

## 7.13 சுய மதிப்பீடு வினாக்கள் மற்றும் பயிற்சிகள்

**சுருக்கமான கேள்விப் பதில்கள்**

1. காமன்வெல்த் நாடுகள் அமெரிக்க மாநிலங்களின் அமைப்பு பற்றி மதிப்படுக?
2. பெட்ரோலிய ஏற்றுமதி நாடுகளின் அமைப்பு பற்றி குறிப்பு வரைக?

**விரிவான கேள்விப் பதில்கள்**

1. கூட்டுச்சேரா இயக்கத்தின் சாதனைகளைப் பற்றி கட்டுரை வரைக?
2. பிராந்திய ஒத்துழைப்புக்கான தெற்காசிய சங்கம் ஏற்பட்டுத்திய உலக மாற்றங்களைப் பற்றி குறிப்பிடுக?

## 7.14 மேலும் படிக்க


- Ian Hurd. (2017). ***International Organizations: Politics, Law, Practice.*** Cambridge University Press.
- Margaret P. Karns. (2015). ***International Organizations: The Politics and Processes of Global Governance.*** Lynne Rienner Publishers.
- Stoetzer, O. Carlos. (1993). ***The Organization of American States. 2d ed***. New York: Praeger.
- Washington Times. (2006). ***Iran and Oil Prices.*** January 17.

# அலகு 8 ஆயுதக்குறைப்பு

8.0 அறிமுகம்
8.1 நோக்கங்கள்
8.2 ஆயுத இனம்
8.3 ஆயுதக்குறைப்பு ஒப்பந்தங்கள்
8.4 அணுசக்தி கட்டுப்பாடற்ற ஒப்பந்தம்
8.5 அணு ஆயுதப் பரவல் தடை ஒப்பந்தம்
8.6 மூலோபய ஆயுத வரம்பு பேச்சு
8.7 மூலோபய ஆயுதக் குறைப்பு ஒப்பந்தம்
8.8 அணு ஆயுதங்களின் குறைப்பு ஒப்பந்தம்
8.9 விரிவான அணுசக்தி சோதனை தடை ஒப்ப்நதம்
8.10 சர்வதேச அரசியலில் அணு ஆயுதங்களின் தாக்கம்
8.11 உங்கள் முன்னேற்றத்தைச் சோதிக்கும் வினாக்களுக்கான விடைகள்
8.12 சுருக்கவுரை
8.13 முக்கிய வார்த்தைகள்
8.14 சுயமதிப்பீடு வினாக்கள் மற்றும் பயிற்சிகள்
8.15 மேலும் படிக்க

## 8.0 அறிமுகம்

போர்களை குறைத்து அமைதியை நிலை நாட்ட 19ஆம் நூற்றாண்டி.லிருந்து ஐரோப்பிய நாடுகள் பாடுபடுகின்றன. இரண்டாம் உலகப்போருக்கு பின் ஆசிய, ஆப்பிரிக்க, லத்தீன் அமெரிக்க, மற்ற மேலைநாடுகளும் இக்குறிக்கோளை நிறைவேற்றுவதற்காகப் பாடுபடுகின்றன. இத்தகைய முயற்சிகளுள் திஹேக் அமைதி மகாநாடுகள் (1899, 1907), சர்வ தேசசங்கம் (1919) மற்றும் ஐக்கிய நாடுகள் சபை (1945) ஆகியவற்றைக் குறிப்பாகக் கூறலாம். இருஉலகப்போரில் ஏற்பட்ட சேதங்களும், நாகசகி, ஹிரோசிமா அணுகுண்டு பாதிப்பு வரலாறும், அணு ஆயுதப்போரின் மூலம் பெருகிவரும் இக்காலக்கட்ட அபாயங்களும் படைக்குறைப்பின் அவசியத்தை வலியுறுத்துகின்றன. இத்திசையில் நாடுகள் தொடர்ந்து பல முயற்சிகள் மேற்கொண்டு வந்த பொழுதிலும் அதில் முழுவதும் வெற்றி அடைந்து விட்டதாகக் கருதமுடியாது. இப்பிரச்சனையை சமாளிக்கத் தலைப்படுகையில் அவைகள் பல பிரச்சனை களைச் சந்திக்க நேரிடுகின்றது. இருப்பினும் படைக்குறைப்பு முயற்சிகளைக் கைவிடுவதற்கும் அவைகள் தயாராகவில்லை.

## 8.1 நோக்கங்கள்

ஆயுதக் கட்டுப்பாடு என்பது நாடுகள் தங்கள் படைபலத்தை பெருக்கிக் கொள்வதில் ஒரு வரையறையை தங்களிடையே ஏற்படுத்திக் கொள்வதாகும். படைக்குறைப்பு என்பது நாடுகள் தங்களிடையே ஒரு சில ஆயுதங்களைக் குறைத்துக் கொள்வதை அல்லது அவைகளை அழித்து விடுவதைக் குறிக்கும். வருமுன் காப்பதாக ஆயுதக்கட்டுப்பாடு விளங்கும் வேளையில் படைக்குறைப்பு வந்தபின் காப்பதைக் குறிப்பதாக இருக்கிறது.

## 8.2 ஆயுத இனம்

படைக்குறைப்பு என்றால் ஒரு சில அல்லது எல்லாவிதமான ஆயுதங்களைக் குறைப்பது அல்லது முற்றிலும் அழித்துவிடுவது எனப் பொருள் கொள்ளலாம். குறிப்பாக வல்லரசுகள் தங்களின் படை பலத்தை ஒரு குறிப்பிட்ட வரம்பிற்கு மேல் பெருக்கிக் கொள்வதில்லை என்று தங்களிடையே ஏற்படுத்திக்கொள்ளும் ஒப்பந்தங்களைக் குறிப்பதாகவும் இச்சொல் விளங்குகிறது. இத்தகைய ஒப்பந்தங்களில் எத்தகைய , யுதங்களை எந்த அளவிற்குக் குறைப்பது என்பது பற்றியும் எத்தகைய ஆயுதங்களை நாடுகள் அழிப்பது என்பது பற்றியும் குறிப்பாகச் சொல்லப்பட்டிருக்கும். மேலும் சிலவகையான ஆயுங்களை ஒரு பன்னாட்டு நிறுவனத்தின் கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருக்கச் சம்மதிப்பையும் இது குறிக்கும். சார்லஸ் ஸ்லீசர் என்பவர் இதுபற்றிக் கூறுகையில் ‘‘படைக் குறைப்பின் உடனடி இலக்கு என்னவென்றால் வல்லரசுகளிடையேயாவது படை பலத்தை ஒரு குறிப்பிட்ட அளவிற்குமேல் அவைகள் வைத்துக்கொள், வதில்லை என்பதில் உடன்பாடு காண்பதே ஆகும்’’ என்று குறிப்பிட்டுள்ளார் வல்லரசுகளிடையே இத்தகைய உடன் பாடுகள் ஏற்படுமேயானால் மற்றுமொரு உலகப்போர் ஏற்படுவது தவிர்க்கப்படும் என்பது பலரின் கருத்தாகும்,

படைக்குறைப்பு என்பதும், ஆயுதக் கட்டுப்பாடு (Arms-control) என்பதும் வேறுபட்ட பொருளுடையவையாகும். ஆயுதக் கட்டுப்பாடு என்பது நாடுகள் தங்கள் படைபலத்தை பெருக்கிக் கொள்வதில் ஒரு வரையறையை தங்களிடையே ஏற்படுத்திக் கொள்வதாகும். படைக்குறைப்பு என்பது நாடுகள் தங்களிடையே ஒரு சில ஆயுதங்களைக் குறைத்துக் கொள்வதை அல்லது அவைகளை அழித்து விடுவதைக் குறிக்கும். வருமுன் காப்பதாக ஆயுதக்கட்டுப்பாடு விளங்கும் வேளையில் படைக்குறைப்பு வந்தபின் காப்பதைக் குறிப்பதாக இருக்கிறது. படைக்குறைப்பு முயற்சிகளில் அதிகம் வெற்றி அடைய இயலாமல் போவதால், நாடுகள் ஆயு தக்கட்டுப்பாட்டை கொணரவிழைகின்றன. இதற்கு நாம் பல காரணங்களைக் கூற முடியும். முதலாவதாக, தங்களுடைய படைபலத்தைப் பெருக்கும் போட்டியில் ஈடுபடும் பொழுது, அதற்கென ஏராளமான தொகை செலவிட வேண்டியதுள்ளது. படைபலப் போட்டிக்கு (ie. Arms race) முடிவென்பது இருக்காது.

ஒரு நாடு மற்றொரு நாட்டைவிட தன்னிடம் அதிக ஆயுதங்கள் இருக்க வேண்டும் என்று எண்ணும் பொழுது படைக்குவிப்பில் ஈடுபடுகிறது. ஆனால் துரதிர்ஷ்டவசமாக, அந்த மற்றொரு நாடும் தன்னுடைய படைபலம் அதிகமாக இருக்க வேண்டும் என்று எண்ணுவதால், அதுவும் படைக்குவிப்பு முயற்சிகளில் ஈடுபடுகிறது. இப்போட்டிக்கு எல்லை என்பது கிடையாததால்

இதற்கென நாடுகள் தொடர்ந்து ஏராளமாகச் செலவிட நேரிடுகிறது தற்கால அணு ஆயுத உலகில் நாடுகள் ஒரு குறிப்பிட்ட அளவுக்கு மேல் எவ்வளவு அணு ஆயுதங்களைக் கொண்டிருந்தாலும் அதனால் மிகையான பயன் ஏதும் கிட்டி விடாது. உதாரணமாக அமெரிக்கா, சோவியத் யூனியன் போன்ற நாடுகள் ஒவ்வொன்றும் ஐந்நூறுக்கும் மேற்பட்ட ஏவுகணைகளை வைத்திருக்கின்றன. இவற்றில் சுமார் 20 ஏவுகணைகளைக் கொண்டு இவ்வுலகத்தையே அழித்து விடமுடியும். எனவே, மீதமுள்ள ஆயுதங்கள் அனைத்தும் இருந்தும் பயனற்ற தாகவே உள்ளது. எனினும் ஒவ்வொரு ஏவுகணையைத் தயாரிப்பதற்கும் இவைகள் பல கோடி ரூபாய்களை செலவிட வேண்டியுள்ளது.இதனால் நாட்டின் வருமானத்தில் ஒரு கணிசமான தொகையை இராணுவச் செலவுகளுக்கென மேற்கொள்ள வேண்டியுள்ளது. இதனால் வளர்ச்சிப்பணிகளுக்கென அதிகமான நிதி ஒதுக்க முடியாமல் போய்விடுகிறது.

இத்தகைய ஆயுதங்களுக்காகச் செலவிடப்படும் தொகையினால் யாதொரு பயனும் கிட்டாமல் போகினறது. இதனை நாடுகள் உணரத்தலைப்படவே, ஆயுதக்குறைப்பு முயற்சிகளில் ஈடுபடலாயின. மேலும், நவீன ஆயுதங்களான அணு ஆயுதங்களை போர்களில் உபயோகப்படுத்தினால் மனித குலம் முழுமையும் அழிந்துவிடும் என்பதும் கண்கூடான உண்மையாகும். இத்தகைய ஆயுதங்களைக் கொண்டிருக்கும் நாடுகள் அவைகளை போரில் பயன்படுத்துவது என்பதும் மிகவும் அரிதான ஒன்றே. எனவே, இந்த அணு ஆயுதங்களைக் கொண்டு பிறநாடுகளை அதிகபட்சம் அச்சுறுத்த முடியுமேயொழிய, அவற்றிற்கெதிராகப் பயன் படுத்துவது மிகவும் கடினமே. இவ்வாறிருக்கும் பட்சத்தில் இத்தகைய ஆயுதங்களை ஒரு குறிப்பிட்ட அளவிற்கு மேல் எவ்வளவு வைத்திருந்தாலும் அதனால் பயன் ஏதும் கிட்டாது. மேலும், இத்தகைய ஆயுதங்கள் அளவுக் கதிகமாகப் பெருக்கிக் கொண்டே போகுமானால் அதன் காரணமாக ஒரு போர் தோன்றக்கூடும் எனப் பலரும் கருதிவருகிறார்கள். அத்துடன் 1960-70 ற்கும் இடைப்பட்ட காலத்தில், இந்த அணு ஆயுதத் தொழில் நுட்பம் வேறுசில நாடுகளிடையேயும் பரவத்தொடங்கியது. இதுமென. மேலும் பல நாடுகளிடையே பரவுமேயானால் போருக்கான வாய்ப்புகளும் அதிகரிக்கும் என வல்லரசுகள் எண்ணின. இத்தகைய காரணங்களினால் படைக்குறைப்பின் அவசியத்தை அவைகள் உணரத் தலைப்பட்டன. துரதிர்ஷ்டவசமாக, இரண்டாம் உலகப் போருக்குப் பிற்பட்ட காலத்தில் வல்லரசுகளிடையே கெடுபிடிப்போர் தீவிரமடைந்ததால் படைக் குறைப்பு முயற்சிகள் அனைத்தும் தோல்வியடைந்தன. எனினும் 1962-ஆம் ஆண்டைய கியூபாப் பிரச்சனைக்குப் பிறகு, படைக்குறைப்பின் அவசியத்தை, அதிலும் அணு ஆயுதக் குறைப்பின் அவசியத்தை வல்லரசுகள் உணரத்தலைப்பட்டன. 1962-ற்குப் பிறகு கெடுபிடிப் போர் சிறிது சிறிதாகக் குறையத் தலைப்பட்ட தன் காரணமாகச் சில

முக்கியமான படைக் குறைப்பு சம்பந்தப்பட்ட ஒப்பந்தங்களும் மேற்கொள்ளப்பட்டன.

## 8.3 ஆயுதக்குறைப்பு ஒப்பந்தங்கள்

19-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் தான் குறிப்பிடத்தக்க வகையில் படைடக் குறைப்பு முயற்சிகள் முதன் முதலாக மேற்கொள்ளப்பட்டன. இவற்றுள் முக்கியமானது அமெரிக்காவிற்கும் கனடாவிற்குமிடையே 1817 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட ரஷ்-பேக்ட்(Rush-Bagot Agreement) ஒப்பந்தமாகும். இந்த ஒப்பந்தம் இவ்விரு நாடுகளிடையேயான கப்பற் படையின் ஒப்பு வலிமையை (Relative Strength) நிர்ணயித்தது. அதனை அடுத்து 1831-ஆம் ஆண்டு பிரெஞ்ஸ்ரீ அரசாங்கம் படைக் குறைப்பு பற்றி விவாதிக்க ஒரு பன்னாட்டு மகாநாட்டைக் கூட்ட முயற்சிகள் மேற்கொண்டது. எனினும். அதனால் பயன் ஏதும் கிட்டாமல் போயிற்று. இதனைத் தொடர்ந்து, 1870-ஆம் ஆண்டு பிராங்கோ-பிரஷ்யன் (Franco Prussian) யுத்தத்திற்குச் சிறிது காலம் முன்பு பிரான்சின் தூண்டுதலால் உந்தப்பட்டு படைக்குறைப்புச் சம்பந்தமாகப் பிரஷ்யாவுடன் பிரிட்டன் பேச்சு வார்த்தைகள் மேற்கொண்டது. அதிலும் எத்தகைய வெற்றியும் காணப்படவில்லை. பின்னர் 1899லும், 1907லும் உலக நாடுகள் திஹேக் மகா நாட்டில் கூடி படைக்குறைப்பு சம்பந்தமாக விவாதித்தன. இராணுவச் செலவுகளைக் குறைக்க வேண்டுமென்பதில் நாடுகள் கருத்தொருமைப்பாடு கொண்டிருந்த பொழுதிலும், அது குறித்து தீர்மானம் மேற்கொண்டதைத் தவிர வேறொன்றும் அவைகளால் செய்ய இயலவில்லை.

முதல் உலகப் போருக்குப் பின்பு 1919-ஆம் ஆண்டு சர்வதேச சங்கம் நிர்மாணிக்கப்பட்டதை அடுத்து படைக்குறைப்புச் சம்பந்தப்பட்ட பிரச்சனைகள் அதிக முக்கியத்துவம் பெற்றன. சர்வதேச சங்கச் சாசனத்தின் விதி 8 ‘‘உலகில் அமைதி காப்பதற்கு நாடுகள் தங்கள் படையை ஓரளவிற்குக் குறைத்துக் கொள்ள வேண்டும்’’என வலியுறுத்தியது. மேலும் படைக்குறைப்பு பற்றி ஆராய 1925-ஆம் ஆண்டு ஒரு குழுவையும் நிர்ணயித்தது. அதனைத் தொடர்ந்து ஜெனிவாவில் படைக் குறைப்பு மகாநாடு ஒன்று கூட்டப்பட்டது (1932). இக்கூட்டத்தில் விஷவாயு மற்றும் இரசாயன வாயு ஆகியவற்றைப் போர்களில் பயன்படுத்துவதைத் தடை செய்வதற்கென ஒரு தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது. நாடுகள் இவ்விஷயத்தில் கருத்தொரு மைப்பாடு கொண்டிருந்ததால், அதில் உடன்பாடு கண்டறியப்பட்டது. ஆனால், பிறவிஷயங்களில் எத்தகைய முடிவும் கண்டறியப்படவில்லை 60 நாடுகள் பங்கேற்றிருந்த இம்மகாநாட்டில் 337 பரிந்துரைகள் வழங்கப்பட்டி ருந்தன. ஒவ்வொரு நாடும் இப்படைக்குறைப்பு பிரச்சனையைத் தன் நாட்டின் பாதுகாப்போடு இணைத்துப் பார்த்ததன் பயனாக, ஒவ்வொன்றும் தனக்குச் சாதகமான ஆலோசனைகளை வழங்கின. எனவே, இம் மகாநாடு தோல்வியடைந்தது.

எனினும், விஷவாயுக்கள் போர்களில் பயன்படுத்தப்படுவதை தடை செய்யவும், சர்வதேசச் சங்கத்தின் கீழ் ஒரு நிலையான ‘‘படைக்குறைப்புக்குழு’’ நிறுவுவதற்கு நாடுகள் ஒத்துக் கொண்டன.

இதில் குறிப்பிடத்தக்க விஷயம் என்னவென்றால் அமெரிக்க ஐக்கிய நாடுகள் இம்மகாநாட்டில் பங்கேற்றிருந்த போதிலும், உடன்படிக்கைகள் எதிலும் கையொப்பமிடாமல் போனதே ஆகும். அமெரிக்காவின் ‘‘செனட்’’ அமெரிக்கா சர்வதேச சங்கத்தில் அங்கத்தினராவதைத் தடுத்துவிட்டால் அச்சங்கத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்ட முடிவுகள் எதிலும் அமெரிக்கா பங்கேற்பதற்கு வாய்ப்பின்றிப் போயிற்று. எனினும், அமெரிக்க ஐக்கிய நாடு களும், சர்வதேச சங்கத்திற்கு வெளியே, படைக்குறைப்பு பற்றி விவாதிக்க 1922-ஆம் ஆண்டு வாஷிங்டனில் ஒரு மகாநாட்டைக் கூட்டியது. இம்மகா நாட்டில் அமெரிக்கா, பிரிட்டன், பிரான்சு, ஜப்பான் மற்றும் இத்தாலி நாடுகள் பங்கேற்றிருந்தன.

தங்களுடைய கப்பற்படையின் வலுவைக் குறிப்பிட்ட அளவு குறைத்துக் கொள்வதற்கும் அந்நாடுகள் ஒத்துக்கொண்டன. அத்துடன் அமெரிக்காவும் பிரிட்டனும் சம அளவில் கப்பற்படைகளை வைத்துக் கொள்வது எனவும், ஜப்பான், அமெரிக்கா அல்லது பிரிட்டனின் கப்பற்படையில் 16 சதவிகிதத். திற்கும் மிகைப்படாத அளவிற்குப் படைகளை வைத்துக் கொள்ளலாம் என்றும், அதேபோல் பிரான்சும், இத்தாலியும் 35 சதவிகிதம் வைத்துக் கொள்ளலாம் என்றும் தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டன. எனினும் இந்த ஒப்பந்தம் கப்பற்படையில் காணப்பட்ட முக்கியக் கப்பல்களின் எண்ணிக்கையைக் குறைத்ததேயன்றி நீர்மூழ்கிக் கப்பல்கள் போன்ற பிறவகையான கப்பல்களின் குறைப்பு பற்றி எதுவும் கூறவில்லை.

இதனை அடுத்து 1930-ஆம் ஆண்டு லண்டனில் ஒரு படைக்குறைப்பு மகாநாடு கூட்டப்பட்டது. இதில் பங்கேற்றிருந்த அமெரிக்கா, பிரிட்டன், பிரான்சு, மற்றும் ஜப்பான் போன்ற நாடுகள் தங்களின் கப்பல் படையை மேலும் குறைக்க ஒத்துக்கொண்டன. எனினும், உலகில், காணப்படும் அமைதிச் சூழ்நிலைக்குப் பங்கமேற்படும் பொழுதோ அல்லது அதற்கான சூழ் நிலைகள் உருவானாலோ, அந்நாடுகள் தங்கள் பலத்தை எவ்விதக் கட்டுப்பாடுமின்றிப் பெருக்கிக் கொள்வதற்கும் அதில் வகை செய்யப்பட்டிருந்தது. இதன் காரணமாக, இவ்வொப்பந்தம் சில ஆண்டுகளுக்குப் பிறகு தூர எறியப்பட்டது. 1930-40 ற்கும் இடைப்பட்ட காலத்தில் நாடுகள் தங்கள் ஆயுதங்களைப் பெருக்கிக் கொண்டேயிருந்தது. எனவே, இக்காலக்கட்டத்தில் படைக்குறைப்பு முயற்சிகள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை.

குறிப்பு

**இரண்டாம் உலகப் போருக்குப் பின் மேற்கொள்ளப்பட்ட படைக்குறைப்பு முயற்சிகள் :**

இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர் நாடுகளிடையே படைக் குறைப்பு பற்றி நம்பிக்கை ஏற்படும் என்று பொதுவாக எதிர்பார்க்கப்பட்டது. எனவே, போர் முடிந்தவுடன் ஐ.நா.வின் பாதுகாப்புச் சபை அதற்கான முயற்சிகளை மேற்கொண்டது. 1946-ஆம் ஆண்டு ஜூன் மாதம் 14-ஆம் நாள் பன்னாட்டு "அணு சக்திக் கட்டுப்பாட்டுக் குழு" (Atomic Energy Control Commission) ஒன்று ஏற்படுத்தத் தீர்மானம் ஒன்று மேற்கொள்ளப்பட்டது. அத்தருணத்தில் அமெரிக்கா, பிரிட்டன் மற்றும் கனடா போன்ற நாடுகளே அணுஆயுத நுட்பங்களை அறிந்திருந்தன. இதனைத் தொடர்ந்து பன்னாட்டு அணுசக்தி வளர்ச்சிக் கழகம் (International Atomic Energy Development Authority) ஒன்று ஏற்படுத்தி, ஒவ்வொரு நாட்டிலும் செயல்படுகின்ற அணுசக்தி ஆராய்ச்சி நிலையங்களைப் பார்வையிட்டு, அவற்றை அதன் கட்டுக்குள் வைத்திருக்குமாறு செய்வதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இந்த அமைப்பு மேற்கொள்ளும் முடிவுகளுக்கெதிராக எந்த ஒரு வல்லரசும் தன் மறுப்பாணையை உபயோகிக்கக் கூடாது என்றும் முன்மொழியப்பட்டது. இதுவே பாரூச் திட்டம் (Baruch Plan) எனப்படுகிறது.

இதை அமெரிக்கா முன் மொழிந்தது. இத்தருணத்தில் தான் (அதாவது 1916-47க்கும் இடைப் பட்டக் காலத்தில்) கெடுபிடிப்போர் ஆரம்பமாயிற்று. எனவே, மேலை நாடுகளின் இத்தகைய ஆலோசனைகளைச் சோவியத் யூனியன் ஐயத்துடன் நோக்கலாயிற்று. ஆங்கிலோ-சாக்ஸன் அரசாங்கங்கள் தன்னுடைய அணு ஆராய்ச்சியைக் கட்டுபடுத்தித் தன் வளர்ச்சியைத் தடை செய்யவிழைவதாக சோவியத் யூனியன் எண்ணலாயிற்று. அதுகாறும் சோவியத் யூனியன் அணு ஆயுதங்களைக் கொண்டிருக்கவில்லை என்பதும், அவ்வேளையில் அத்தகைய ஆயுதங்களைக் கண்டறியும் முயற்சியில் அது ஈடுபட்டிருந்தது என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. ஆகையினால் IAEDA தன்னுடைய அணு ஆராய்ச்சிகளை ஒரு குறிப்பிட்ட (Limited Inspection) கட்டம் வரையில் தான் பார்வையிடலாம் என சோவியத்யூனியன் கூறியது. இதனை அமெரிக்கா ஏற்கவில்லை.எனினும் AECC (Atomic Energy Control Commission) தன் முயற்சிகளைத் தளர்த்தவில்லை. சாதாரண ஆயுதங்களைக் குறைப்பது பற்றி ஆராய அது மற்றுமொரு குழுவை ஏற்படுத்தியது. இதிலும் வல்லரசு களிடையே கருத்தொருமைப்பாடு காணப்படாததால் எத்தகை உடன்பாடும் கண்டறியப்படவில்லை. அத்தருணத்தில் சோவியத் யூனியனும் தன்னுடைய முதல் அணுகுண்டை வெற்றிகரமாகப் பரிசோதித்தது. (23, செப்டம்பர்.1949). 1952-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் மனித குலத்திற்கு அழிவைத் தரக் கூடிய ஆயுதங்களின் உற்பத்தியைத் தடுப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென

சோவியத் யூனியன் அறிவித்தது. இத்தகைய அறிவிப்புக்கள் அனைத்தும் கெடுபிடிப் போரின் காரணமாக அறிவிப்புகளாக நின்றன. படைக்குறைப்பு முயற்சிகளும் கெடுபிடிப் போருக்கு இரையாயின. இரு வல்லரசுகளும் மற்றொன்றிற்கெதிரான பிரச்சாரத்தை முடுக்கிவிட்டன. இவ்வேளையில் அமெரிக்கக் குடியரசுத் தலைவர் ஐசன் ஹோவா. ‘‘அமெரிக்கா மனிதகுல அழிவை ஏற்படுத்தும் எத்தகைய ஆயுதங்களையும் பயன்படுத்தாது“ என அறிவித்தார். எனினும், சோவியத்யூனியன் அத்தகைய அறிக்கைகள் எதையும் மேற்கொள்ளவில்லை.

பின்னர், ‘‘இனிமேல் வரவிருக்கும் எல்லா படைக்குறைப்பு மாநாடுகளிலும் சீனா, இந்தியா மற்றும் செக்கோஸ்லாவாக்கியா போன்ற நாடுகளைப் பங்கேற்க அழைக்க வேண்டும்’’ என சோவியத் யூனியன் கூறியது. (ஏப்ரல் 1954) இதனை அமெரிக்கா ஏற்கவில்லை . பின்பு, “நாடுகள் மேற்கொள்ளும் அணு ஆராய்ச்சி முழுவதும் பார்வையிடப்பட வேண்டும்““ என்ற தீர்மானத்தை INADA விடம் அமெரிக்கா சமர்ப்பித்தது. இதனை சோவியத் யூனியன் மறுத்துவிட்டது. இவ்வாறு வல்லரசுகளிடையே உடன்பாடு ஏற்படுவதற்கு வாய்ப்பில்லாமல் போகவே பிற நாடுகள் அதற்கான முயற்சிகளை மேற்கொண்டன.

பிரிட்டனும், பிரான்சும் இணைந்து 1954, ஜூன் 11-ஆம் நாள் ஒரு திட்டத்தை அறிவித்தன. அதுவே பிராங்கோ -பிரிட்டிஷ் திட்டம் (Franco British Plan) எனப்படுகிறது. அணு ஆயுதங்களை ஆக்கிரமிப்பு முயற்சிகளில் நாடுகள் ஈடுபடுத்துவதைத் தவிர்க்க இத்திட்டம் முயன்றது. ஆயினும், “ஆக்கிரப்பு“(aggression) என்றால் என்ன என்று தெளிவாக இத்திட்டம் கூறவில்லை எனக்கூறி, இதை ஏற்க சோவியத் யூனியன் மறுத்து விட்டது. மீண்டும் 1955-ஆம் ஆண்டு ஜூலை மாதம் சோவியத் அணுசக்தி நிலையங்களை அமெரிக்காகவும், அமெரிக்காவின் அணுசக்தி நிலையங்களைச் சோவியத் யூனியனும் விமானம் மூலம் பார்வையிட ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும் என அமெரிக்கா அறிவித்தது. இதனைச் சோவியத் யூனியன் ஏற்கவில்லை .

பின்னர் 1956- ஆம் ஆண்டு ஜூலை மாதம் சாதாரணப் படைகளின் அளவைக் குறைத்துக் கொள்ளலாம் எனச் சோவியத் யூனியன் அறிவித்தது.இதை அமெரிக்கா ஏற்க மறுத்து விட்டது. அதே ஆண்டு, ‘‘அணு ஆயுதச் சோதனைகளை ஓராண்டிற்கு நிறுத்திவைக்க வேண்டுமென’’ அமெரிக்கா வலியுறுத்தியது. அமெரிக்கர்கள் அப்பொழுதுதான் பல அணு ஆயுதச்சோதனைகளை முடித்திருக்கிறார்கள். அடுத்த கட்டச் சோதனைகளை அவர்கள் துவங்குவதற்கு இன்னும் ஒரிரு வருடங்கள் ஆகலாம். அத்துடன், நாங்கள் அப்பொழுது தான் சில சோதனைகளை மேற்கொள்ள முனைந்துள்ளோம். இச்சோதனைகளை நிறைவேற்ற விடாமல்

**குறிப்பு**

தடுக்கும் நோக்கத்துடனேயே அமெரிக்கா இத்தகைய அறிவிப்புகளை மேற்கொள்ளுகிறது, எனக் கூறி சோவியத் யூனியன் அத்திட்டத்தை ஏற்க மறுத்தது.

இவ்வாறு வல்லரசுகள் ஒன்றையொன்று சந்தேகித்து வந்ததாலும், கெடுபிடிப் போர் உச்சக்கட்டத்திலிருந்தாலும் படைக்குறைப்பு பற்றி எந்த விதமான தீர்மானங்களும் இக்காலக்கட்டத்தில் (1948-62) மேற்கொள்ளப்படவில்லை. இதனால் அடுத்து கியூபா பிரச்சனையின்போது (1963) வல்லரசுகள் ஒன்றுடன் ஒன்று மோதிக்கொள்ள வேண்டிய சூழ்நிலை எழுந்தது. அத்தருணத்தில் உலகில் ஒரு பதட்ட நிலை காணப்பட்டது. எப்படியும் ஒரு மூன்றாவது உலகப்போர் தோன்றிவிடும் என்ற அச்சம் இவ்வுலகில் காணப்பட்டது. அவ்வாறு ஒரு போர் தோன்றினால், அதில் அணு ஆயுதங்கள் கண்டிப்பாகப் பயன்படுத்தப்படும் என்பதையும், அதனால் மனித குலமே அழிந்து படும் என்பதையும் எல்லோரும் நன்குணர்ந்திருந்தனர். எனினும், பல தலைவர்களின் நன்முயற்சியாம் வல்லரசுகளிடையே ஒரு போர் தோன்றுவது தவிர்க்கப்பட்டது. அதுகாறும் வல்லரசுகளை திணறடிததுக் கொண்டிருந்த பிரச்சனை ஒருவழியாகச் சமாளிக்கப்பட்டது. இப்பிரச்சனையின்போது, இரு வல்லரசுகளுமே அணு ஆயுதங்களின் தீமைகளை உணரத்தலைப்பட்டன. சுருங்கக் கூறின், இப்பிரச்சனை அவர்களுக்கு ஒரு பாடமாக அமைந்தது. அதன் பின்னர் இவ்விரு நாடுகளுமே படைக்குறைப்பு முயற்சிகளைத் தீவிரப்படுத்தின. அதன் விளைவாக அதே ஆண்டே (1963) ஒரு சில படைக்குறைப்புப் பிரச்னைகளில் உடன்பாடு கண்டனர். அதன் பின்னர் அது குறித்து ஒரு ஒப்பந்தமும் செய்துகொண்டனர். அதுவே 1963 ஆம் ஆண்டைய ‘‘அணுஆயுதச்சோதனைத்தடை’’ ஒப்பந்தமாகும். இதுவே இரண்டாம் உலகப்போருக்குப் பிற்பட்ட காலத்தில் இவ்வல்லரசுகளிடையே முதன் முதலாக மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தமாகும்.

## 8.4 அணுசக்தி கட்டுப்பாடற்ற ஒப்பந்தம்

ஒரு சிறந்த பன்னாட்டுச் சூழ் நிலை, உள் நாட்டு ஆதரவு மற்றும் யாவரும் ஒப்புக்கொள்ளக்கூடிய வகையில் அமையும் பேச்சு வார்த்தைகள் மற்றும் அதற்கான ஆதாரங்கள் ஆகியன படைக்குறைப்பு முயற்சிகளை வெற்றி பெறச் செய்யும் சிலகாரணிகளாகும். வல்லரசுகள் ஒன்றையொன்று மீண்டும் சந்தேகிக்கத் தொடங்கியிருப்பதால், தற்காலத்தில் ஒரு சிறந்த பன்னாட்டுச் சூழ் நிலைக் காணப்படவில்லை. அதேபோல் ‘சால்டI’ ஒப்பந்தம் அமெரிக்கா, சோவியத் மக்களிடம் பெற்ற வரவேற்பை சால்ட் ஐஐ“ பெற்றிருக்கவில்லை அத்துடன் ‘சால்ட்II’-ன் போது மேற்கொள்ளப்பட்ட பேச்சுவார்த்தைகள் குழப்பம் விளைவிப்பதாகும் மிகவும் அதிகமான நுனுக்கங்களை உடையதாகவும் விளங்கியதும் அது இது வரை ஏற்றெடுக்கப்படாததற்கு ஒரு காரணமாகும். அத்துடன் படைக் குறைப்பு மூலம் அனைவரும் அதிகம் எதிர்பார்க்கும் வேளையில் நாடுகள் ஒரு குறிப்பிட்ட எல்லைக்கு அப்பால் வரமறுப்பதும் அதன் தற்காலத் தோல்விக்கு ஒரு காரணமாகும். எனவே அதிக எதிர்பார்ப்புகள் ஏதுமின்றி பேச்சுவார்த்தைகள் மேற்கொள்ளப்படுவது அவசியமான ஒன்றாகும். அத்துடன் படைக்குறைப்புப் பற்றி பிரச்சனைகளை வேறு சில பிரச்சனைகளுடன் இணைத்துப் பேசுவதும் தவிர்க்கப்பட வேண்டும். (ie absence of Linkages).

இக்காலச் கட்டத்தில் படைக்குறைப்பு முயற்சிகளில் காணப்படும் மந்த நிலை அதற்கு ஏற்பட்டிற்கும் ஒரு இடைக்காலத் தடையாகும். இத்தருணத்தில்


நாடுகள், அதிலும் குறிப்பாக வல்லரசுகள் படிப்படியாக உலகில் நம்பிக்கை வளர்க்கும் விதத்தில் செயல்படவேண்டியது மிகவும் அவசியமாகும். குறிப்பிடத் தகுந்தவகையில் எத்தகைய ஒப்பந்தங்களும் சமீபகாலத்தில் மேற்கொள்ளப்படவில்லையாதலால், படைக்குறைப்பு என்ற கொள்கையே மறைந்துவிட்டது எனக் கருதாமல், நாடுகள் மிகவும் நிதானமாகச் செயல்பட வேண்டியது விரும்பதக்கதாகும். அப்படிச் செயல் பட உலக நாடுகள் முயலுமேயானால், வருங்காலங்களில் படைக்குறிப்பு முயற்சிகள் ஓரளவு சிறந்த வெற்றிகளை அடையக் கூடும் என்பதில் ஐயமில்லை சோவியத்யூனியன் உடைந்து சிதறியதால் இன்று அணு ஆயுதங்கள் ரஷியா, உக்ரேன் போன்ற குடியரசுகளிடம் உள்ளன இக்குடியரசுகள் தம் எதிர்காலத்திற்காக மேலை நாட்டு பொருளாதார உதவியை எதிர்பார்ப்பதால் மேலை நாடுகள் கூறும் ஆயுதக்கட்டுப் பாட்டினை ஏற்பது சாத்தியமே.

## 8.5 அணு ஆயுதப் பரவல் தடை ஒப்பந்தம் : 1968 (Nuclear Non Proliferation Treaty) .

படைக்கல உற்பத்திப் போட்டியைக் கட்டுப்படுத்துவதிலும், படைக் கலக் குறைப்பின் வெற்றிக்கான சாதகமான சூழ்நிலையை உருவாக்குவதிலும் "அணு ஆயுதப்பரவல் தடை ஒப்பந்தம்"ஒரு மைல்கல்லாகவிளங்குகிறது. 124 நாடுகளைக் கொண்ட ஐ.நா. சபையின் அரசியல் குழு இவ்வொப்பந்தத்தை 1968 ஜுனில் நிறைவேற்றியது. 119 நாடுகள் இதில் கையெழுத்திட்டன. இதன்படி "அணு ஆயுதங்கள்" பற்றிய நுணுக்கங்களை அறிந்த நாடுகள், அவற்றைப் பெற்றிராத நாடுகளுக்கு அந்த நுட்பங்களை வழங்குவது தடை செய்யப்பட்டது. இதில் இந்தியா, சீனா, ஜப்பான், எகிப்து போன்ற நாடுகள் கையெழுத்திட மறுத்து விட்டன. இது ஒரு தலைப்பட்மாகக் காணப்படுகிறது என்று குற்றம் சாட்டப்பட்டது. ஏனெனில் இந்த ஒப்பந்தம் அணு நுட்பத்தை அறிந்திராத நாடுகள் அணு நுட்பத்தை அறிவதைத் தடை செய்ய முடிந்ததே யன்றி ஏற்கனவே அந்த நுணுக்கங்களைப் பெற்ற நாடுகளை எந்த கட்டுப் பாட்டிற்கும் உள்ளாக்கவில்லை

## 8.6 மூலோபய ஆயுத வரம்பு பேச்சு சால்ட் I & II (SALT I & II)

மேற்கண்ட ஒப்பந்தத்தை தொடர்ந்து, வல்லரசுகள் மேலும் ஒரு சில படைக் குறைப்பு முயற்சிகளை மேற்கொண்டு'சால்ட்' (Strategic Arms Limitation Treaty) ஒப்பந்தங்களை மேற்கொண்டன, சால்ட் 1973-ஆம் ஆண்டு அமெரிக்காவிற்கும் ரஷ்யாவிற்கு மிடையே ஹெல்சிங்கியில் மேற்கொள்ளப்பட்ட ஒரு ஒப்பந்தமாகும். இந்த ஒப்பந்தம் இவ்விரு நாடுகளிடையே காணப்பட்ட ஏவுகணைகள் மற்றும் ஏவுகணை எதிர் தாக்கிகள் ஆகியவற்றின் எண்ணிக்கையைக் கட்டுப்படுத்துவதற்காக மேற்கொள்ளப்பட்ட ஒன்றாகும்.



**Jimmy Carter and Leonid Brezhnev signing the SALT II treaty,**

**June 18, 1979, at the Hofburg Palace in Vienna.**

சால்ட் 1ஐத் தொடர்ந்து பற்கான பேச்சுவார்த்தைகள் மேற் கொள்ளப்பட்டன. 1978-ஆம் ஆண்டு இது குறித்து வல்லரசுகள் ஓர்“ உடன்பாட்டிற்கு வந்தன. இதற்கிடையில் உலக அரசியலில் ஏற்பட்ட பல மாற்றங்களின் விளைவாக இவ்வொப்பந்தம் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டது. ஆப்கானிஸ்தானத்தில் ரஷ்யர்களின் தலையீட்டைக் கண்டனம் செய்யும் வகையில் அமெரிக்க செனட் இவ்வொப்பந்தத்தை இதுகாறும் அங்கீகரிக்கவில்லை. இதன் பிறகு 1977-ம் ஆண்டு கார்ட்டர் அமெரிக்காவின் தலைவரானவுடன் NALT (Naval Armaments Limitation Treaty) சம்பந்தப்பட்ட பேச்சு வார்த்தைகளை துவக்கினார். குறிப்பாக, இந்தியப் பெருங்கடலை அமைதிப் பிரதேசமாக அறிவிப்பது குறித்து பேச்சு வார்த்தைகள், மேற்கொள்ளப்பட்டன. இதிலும் எந்தவிதமான வெற்றியும் காணப்படவில்லை .

1977-1985ற்கு இடைப்பட்ட காலத்தில் வல்லரசுகளிடையே மீண்டும் சிறிது மனத்தாங்கல் ஏற்பட்டிருந்தால், அவைகளால் எந்தவிதப் படைக்குறைப்பு ஒப்பந்தங்களையும் மேற்கொள்ள இயலவில்லை ஆப்கானிஸ்தான், கம்போடியா மற்றும் போலந்துப் பிரச்சனைகள் இவற்றின் குறுக்கே நிற்கின்றன. இதற்கிடையில் அமெரிக்கா நியூட்ரான் குண்டுகளை தயாரித்து வெற்றிகரமாகப் பரிசோதித்துள்ளது. இதன் விளைவாக சோவியத் யூனியனும் புதிய அணு ஆயுதங்களைக் கண்டறியத் தலைப்படக் கூடும். இதனால் இவ்வல்லரசுகள் மீண்டும் படைக்குவிப்பு முயற்சிகளில் பாடுபடுவதற்கான வாய்ப்புகளும் தோன்றக்கூடும் இருப்பினும் 1987 ஆம் ஆண்டு இறுதியில் இவ்விரு நாடுகளும் INF ஒப்பந்தம் மேற்கொண்டதும், சோவியத் யூனியனின் உள் நாட்டு விவகாரங்களில் ஏற்பட்டுவரும் மாற்றங்களும் நம்பிக்கை அளிப்பதாக உள்ளது.

## 8.7 அணு ஆயுதங்களின் குறைப்பு ஒப்பந்தம் (Strategic Arms Reduction Treaty (START I &II)

கெடுபிடிப்போர் மறைந்த காலத்தில் வல்லரசுகளின் உச்சி மாநாடு 1991 ஜுலை 30-ல் மாஸ்கோவில் நடைபெற்றது. ஜார்ஜ்புஷ், கோர்பசேவ் ஆகியோர் வரலாற்றுச் சிறப்பு மிக்க அணு ஆயுத குறைப்பு ஒப்பந்தம் ஒன்றில் கையெழுத்திட்டனர். 1982-ம் வருடம் பேச்சுவார்த்தை ஆரம்பிக்கப்பட்டு ஒன்பது ஆண்டுகள் கழித்து இந்த ஒப்பந்தம் கையெழுத்தானது. இது 700 பக்கங்களைக் கொண்ட ஒரு பெரிய ஒப்பந்தமாகும். அதன்படி தன்னிடமுள்ள அணு ஆயுதங்களில் 35 சதவீதத்தை குறைத்துக் கொள்வதாக சோவியத் யூனியனும் (11,000-

த்திலிருந்து 7000) 25 சதவீதத்தை குறைத்துக் கொள்வதாக (12,000 த்திலிருந்து 9,000) அமெரிக்காவும் அறிவித்தன. இந்த ஒப்பந்தம் 15 ஆண்டு காலத்திற்கு செல்லத்தக்கது என்றும் அதன்பின் இரண்டு நாடுகளும் ஒப்புக்கொண்டால் ஒவ்வொரு ஐந்து ஆண்டு காலத் திற்கும் நீடித்துக் கொள்ளலாம் என்றும் கூறப்பட்டது.

இவ்வாறு அமெரிக்காவும் சோவியத் யூனியனும் பரஸ்பர நம்பிக்கையின் அடிப்படையில் எடுத்த படைக்கலக் குறைப்பு முயற்சிகள் எதிர் பார்த்த வெற்றி அளித்தது. 1991-ல் சோவியத் யூனியன் சிதரலுக்கு பிறகு உலகில் படைக்கல உற்பத்தி போட்டி வெகுவாகக் குறைந்து விட்டது. மூன்றாவது உலகப்போர் பற்றிய பீதி முற்றிலும் மறைந்துவிட்டது. உலக நாடுகளிடையே பொதுவாக காணப்பட்ட பதட்டநிலை மறைந்து விட்டது.

## 8.8 விரிவான சோதனைத்தடை ஒப்பந்தம; Comprehensive Test Ban Treaty-CTBT

உலகத்தில் இனி எந்த நாடும் அணு ஆயுத சோதனை நடத்தக்கூடாது என்பதற்காக அமெரிக்கா ஒரு ஒப்பந்தம் கொண்டு வந்தது. இதற்கு “விரிவான சோதனைத்தடை ஒப்பந்தம்“ என்று பெயர். இதன்படி,

- எல்லா வகையான அணு ஆயுத சோதனை நடத்துவது தடை செய்யப்பட்டது.
- இந்த ஒப்பந்தத்தை மீறும் நாடுகளை கண்காணிக்க ஒரு பன்னாட்டு கண்காணிப்பு அமைப்பு நிறுவப்படும்.
- உலகம் முழுவதும் இருபது நிலையங்கள் அமைக்கப்பட்டது 1000 டன் வெடிபொருள்களுக்கு மேல் உபயோகித்து நிலத்தடியிலோ, வான்வெளியிலோ அல்லது நீருக்கடியிலோ செய்யப்படும் சோதனைகள் கண்டு பிடிக்கப்படும்.
- பன்னாட்டு கண்காணிப்பு முறை மூலம் கிடைக்கும் தகவல்களின் அடிப்படையில் எந்த நாடாவது அணு ஆயுத சோதனை நடத்தியுள்ளதா என்று சோதிக்கப்பட கேட்டுக்கொள்ளலாம்.
- இதற்கு 51 உறுப்புகள் கொண்ட நிர்வாகக் குழுவில் 35 உறுப்பினர்களின் ஆதரவுடன் இவ்வித சோதனை நடத்துமாறு கேட்டுக்கொள்ளலாம்.
- இந்த ஊகூக்ஷகூ-யின் தலைமையிடம் ஆஸ்திரிய நாட்டின் தலை நகர் வீயன்னா ஆகும். .
- பிராந்திய வாரியாக தேர்ந்தெடுக்கப்பட்ட 51 உறுப்பினர்கள் கொண்ட நிர்வாகக் குழுவினால் முக்கிய முடிவுகள் எடுக்கப்படும். இந்த முழுமையான அணு ஆயுத சோதனைத்தடை ஒப்பந்தம் ஐ.நா.சபையில் 1996 செப்டம்பர் 24-ம் தேதி நிறைவேற்றப்பட்டது. 1999, செப்டம்பர் 24 வரை 154 நாடுகள் இந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளன. அணு ஆயுதம் தயாரிக்கும் வல்லமை

பெற்றவை என்று கண்டறியப்பட்டுள்ள 44 நாடுகளில் இதுவரை இந்தியா, பாகிஸ்தான், வடகொரியா ஆகிய நாடுகள் இந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட மறுத்துவருகின்றன.

இந்த விரிவான அணு ஆயுத சோதனை தடை ஒப்பந்தம் பாரபட்சமானது என்று ஆரம்பம் முதலே இந்தியா ஆட்சேபம் தெரிவித்து வருகிறது. இந்தியா கையெழுத்திடாதற்கான காரணங்கள் வருமாறு

- அமெரிக்கா, ரஷ்யா, பிரான்சு, இங்கிலாந்து, சீனா ஆகிய வல்லரசு நாடுகள் தங்களிடம் ஏராளமான அணு ஆயுதங்களை இருப்பு வைத்துக் கொண்டு மற்ற நாடுகள் அணு ஆயுதங்கள் தயாரிக்கக்கூடாது என்று தடை செய்வது நியாயமல்ல.
- எனவே முதலில் எல்லா நாடுகளிடமும் உள்ள அணு ஆயுதங்கள் ஒழிக்கப்பட வேண்டும். அணு ஆயுத சோதனை முழுமையாக தடை செய்யப் பட வேண்டும். இதில் ஏதாவது தொழில்நுட்ப காரணம் கூறி பாரபட்சம் காட்டக்கூடாது.
- ஒட்டு மொத்த அணு ஆயுத ஒழிப்புக்கு குறிப்பிட்ட (10 ஆண்டு) காலக்கெடு விதிக்க வேண்டும். அப்படி அணு ஆயுத ஒழிப்பு செய்த பின் அணு ஆயுத சோதனைக்கு தடைவிதிக்கலாம்.
- இந்த ஒப்பந்தம் முழுமையானதல்ல. காரணம் அணு ஆயுத சோதனைகளை இந்த அணு ஆயுத நாடுகள் தங்களிடமுள்ள தொழில் நுட்பத்தின் மூலம் கம்ப்யூட்டர் மூலமே சோதனை செய்து பார்த்துக் கொள்ள முடியும். இதனால் அப்பாவி நாடுகள் தான் தண்டிக்கப்படுகின்றன.

## 8.9 சர்வதேச அரசியலில் அணு ஆயுதங்களின் தாக்கம்

படைக்குறைப்பானது நாடுகளிடையே தன்னம் பிக்கையைப் பெற்றிருக்கும் வரையிலும் அது உலக அமைதி காக்கஉதவும் ஒருமுக்கியமான கருவி என்பதை யாரும் மறுக்க முடியாது. ஆயுதங்கள் பெருகப் பெருக சண்டையிடுவதற்கென ஆயுதங்கள் தயாரிப்பது போல் ஆயுதங்கள் இருப்பதனாலேயே சண்டைகள் மூளுவதற்கான வாய்ப்புகள் அதிகரிக்கக் கூடும். இத்தகைய வரையறையற்ற ஆயுதக் குவிப்பு சில சூழ் நிலைகளில் பல நாடுகளைச் சங்கடத்திற்குள்ளாகக்கூடும். படைக்குறைப்பு ஒன்று தான் உலக அமைதிக்கு ஒரே வழி என்று கூறமுடியாவிடினும், அதற்கு இதுவும் ஒரு முக்கியமான அம்சம் என்பதை யாரும் மறுக்க முடியாது.

**(a)அணு ஆயுதச் சோதனைத் தடை ஒப்பந்தம் (The Nuclear Test Ban Treaty, 1963) :**

1963-ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் ஐந்தாம் தேதி, அமெரிக்கா, பிரிட்டன் மற்றும் சோவியத் யூனியன் ஆகிய நாடுகள் இவ்வொப்பந்தத்தில்

கையொப்பமிட்டன. இவ்வொப்பந்தம் நாடுகள் விண்வெளியிலும் நீருக்கடி யிலும் அணு ஆயுதச் சோதனைகள் மேற்கொள்வதை தடை செய்தது. திறந்த வெளியிலும் நீருக்கடியிலும் இத்தகைய சோதனைகளை நாடுகள் மேற்கொண்டதால், சுற்றுப்புற சூழ்நிலைகளில் வாழ்ந்துவரும் உயிரினங் களுக்கு ஏராளமாக தீங்குகள் நேரிட்டன. இதனைத் தடுக்குமுகமாகவே இவ்வொப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. எனினும், நிலத்திற்கடியில் சோதனைகள் மேற்கொள்ளப்படுவதை இது தடை செய்யவில்லை. இவ். வொப்பந்தத்தில் பங்கேற்குமாறு பிற நாடுகளும் அழைக்கப்பட்டன. அதற்கேற்ப பிரான்சு, ஜெர்மனி மற்றும் இந்தியா போன்ற நாடுகள் இதில் கையொப்பமிட்டன. எனினும் சீனா இதில் சேர மறுத்துவிட்டது. இவ்வொப்பந்தம் பெரிய அளவில் எதையும் சாதித்திடாத போதிலும் வல்லரசுகளைச் சரியான திசையில் திருப்பிய வகையில் அதிக முக்கியத் துவம் பெற்றது.

**(b)அணு ஆயுதப் பரவல் தடை ஒப்பந்தம் (Nuclear Non-Proliferation Treaty, 1968).**

1963 ஆம் ஆண்டைய ஒப்பந்தத்தில் வல்லரசுகள் கையொப்பமிட்ட வுடன் மேலும் சில பிரச்சனைகளுக்கு முடிவுகாணத் தீவிரமாக முனைந்தன. 1950-ல் ஓரிரு நாடுகளிடம் மட்டும் காணப்பட்ட அணு ஆயுதத் தொழில் நுட்பம் வேறு சில நாடுகளுக்கும் பரவத் தொடங்கியது. அணு ஆயுதங்கள் உலகில் மேலும் பரவுமானால் அதனால் அபாயம் தோன்றுவதற்கான வாய்ப்புகளும் அதிகமாகும், என்பதில் இவ்விரு வல்லரசுகளும் கருத்தொருமைப்பாடு கொண்டிருந்தன. எனவே, இதனைத் தடுக்குமுகமாக 1968-ஆம் ஆண்டு ஆயுதப் பரவல் தடை ஓப்பந்தத்தை மேற்கொண்டனர். இதன்மூலம் அணு ஆயுதங்கள் பற்றிய நுட்பங்களை அறிந்த நாடுகள் அவற்றைப் பெற்றிராத நாடு - களுக்கு நுட்பங்களை வழங்குவது தடை செய்யப்பட்டது. இவ்வொப் பந்தத்தில் அமெரிக்கா, ரஷ்யா, பிரிட்டன் மற்றும் பல பசிபிக் நாடுகளும் வேறு சில சிறிய நாடுகளும் கையொப்பமிட்டன. இந்தியா, சீனா, இஸ்ரேல், ஜப்பான், எகிப்து மற்றும் பிரேசில் போன்ற நாடுகள் இதில் கையொப்பமிட மறுத்து விட்டன. குறிப்பாக இந்நாடுகள் அணு ஆயுத நுட்பத்தைப் பெற்றுவிடக் கூடாது என வல்லரசுகள் கருதியதால் இந் நாடுகள் இவ்வொப்பந்தத்தில் கையொப்பமிடாமல் போனதில் வியப் பொன்றுமில்லை. இந்தியா போன்ற நாடுகள் இந்த ஒப்பந்தம் ஒரு தலைப்பட்சமாகக் காணப்படுகிறது என்று குற்றம் சாட்டினர். ஏனெனில் இவ்வொப்பந்தம் பிற நாடுகள் அணு நுட்பத்தை அறிவதைத் தடை செய்ய முயன்றனவேயன்றி, ஏற்கெனவே அந்நுணுக்கங்களைப் பெற்றி ருக்கும் நாடுகளை எவ்விதக் கட்டுப்பாட்டிற்கு உள்ளாக்கவில்லை. அணு ஆயுதங்களைக் கொண்டிருக்கும் நாடுகள் அனைத்தும் அதனைக் கட்டுப் படுத்தவும், குறைக்கவும் முன்வந்தால் தாங்களும் இவ்வொப்பந்தத்தில் கையொப்பமிடத் தயாராக உள்ளோம் என இந்நாடுகள் சுட்டிக்காட்டி வருகின்றன. இவ்வொப்பந்தத்தில் பிரான்சும் சேரவில்லை என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. எது எப்படியாயினும், இவ்வொப்பந்தம், இதுகாறும் சண்டையிட்டுக் கொண்டிருந்த வல்லரசுகளை ஓரளவு நெருங்கி வர வழி. வகை செய்தது என்றால் அது மிகையகாது.

**(c)படைக்குறைப்பு முயற்சிகளில் நாடுகள் எதிர்நோக்கி வரும் பிரச்சனைகள் :**

1. எல்லாப் படைக் குறைப்பு மாநாடுகளிலும் ஒவ்வொரு நாடும் எந்த விகிதத்தில் தங்களது படைகளைக் குறைத்துக் கொள்வது என்பது பற்றிய பிரச்சனை காணப்படுகிறது. இது குறித்து விவாதங்களில், நாடுகள் தங்களுடைய பாதுகாப்புக் கருதி ஒரு குறிப்பிட்ட அளவிற்கு மேல் படைக்குறைப்பிற்கு ஒப்புக்கொள்வதில்லை. இந்தக் குறிப்பிட்ட அளவு“ பிற நாடுகளுக்கு ஏற்புடையதாக இல்லை,
2. இதில் கருத்தொருமைப்பாடு அடையும் பட்சத்தில் எந்தெந்த ஆயுதங்களை எந்தெந்த அளவிற்குக் குறைத்துக் கொள்வது என்பது அடுத்த பிரச்சனையாக விளங்குகிறது.
3. மூன்றாவதாக நாடுகளிடையே படைக் குறைப்பு என்றால் என்ன என்பது குறித்து உடன்பாடு காணப்படவில்லை. படைக்குறைப்பு என்றால் ஆயுதங்களைக் குறைத்து உற்பத்திசெய்வதாக அல்லது சில வகையான ஆயுதங்களை உற்பத்திசெய்யாமல் தடுப்பதா அல்லது ஏற்கெனவே இருக்கும் சில வகையான ஆயுதங்களை அழித்து விடுவதா என்பது பற்றி சரியான விளக்கம் தரப்படவில்லை.
4. நான்காவதாக, படைக்குறைப்பு செய்வதால் உண்மையாகவே உலகில் அமைதி நிலவுகிறதா என்பது பற்றி நாடுகள் ஐயப்படுகின்றன. ஒரு சில ஆயுதங்களை நாடுகள் குறைத்துக் கொள்ள ஒத்துக்கொண்டாலும், அதனால் ஏற்படும் இழப்பை வேறுசில நவீன ஆயுதங்களைத் தயாரிப்பதன் மூலம் ஈடுசெய்ய முனைகின்றன. இவ்வாறிருக்கும் பட்சத்தில் நாடுகள் படைக்குறைப்பு பற்றி அதிக நாட்டம் செலுத்தாமலிருப்பதில் வியப்பொன்றுமில்லை,

**(d)படைக்குறைப்பினால் விளையும் பயன்கள்**

படைகுறைப்பு மேற்கொள்வதால் மூன்று நேரடிப் பயன்கள் ஏற்பட கூடும். அவைகள் பின்வருமாறு :

- ஆயுதங்களுக்காகச் செலவிடப்படும் தொகையைக் கட்டுப்படுத்த முடியு மாதலால். அதனை நாடுகள் தங்களது வளர்ச்சி பணிக்குச் செலவிட முடியும்.
- ஆயுதங்கள் குறைவதனால் போருக்கான வாய்ப்புகளும் குறையக்கூடும்.
- அப்படியே ஒரு போர்தோன் றினாலும் அதனால் விளையக்கூடிய சேதங்கள் குறைந்து காணப்படும். அத்துடன் இதன் விளைவாகச் சுற்றுபுறச் சூழ் நிலை சமநிலை (Ecological Balance) பாதுகாக்கப்படுதல், இது குறித்த உயர்மட்ட ஆராய்ச்சிக்கான வாய்ப்புக்கள் அதிகரித்தல் போன்ற பல மறைமுகமான பயன்களும் ஏற்படக்கூடும்.

**உங்கள் முன்னேற்றத்தைச் சரிபார்க்கவும்**

1. START நோக்கம் என்ன?
2. NPT பற்றி குறிப்பிடுக?
3. SALT குறிப்பு எழுதுக?

## 8.10 உங்கள் முன்னேற்றத்தைச் சோதிக்கும் வினாக்களுக்கான விடைகள்

கெடுபிடிப்போர் மறைந்த காலத்தில் வல்லரசுகளின் உச்சி மாநாடு 1991 ஜுலை 30-ல் மாஸ்கோவில் நடைபெற்றது. ஜார்ஜ்புஷ், கோர்பசேவ் ஆகியோர் வரலாற்றுச் சிறப்பு மிக்க அணு ஆயுத குறைப்பு ஒப்பந்தம் ஒன்றில் கையெழுத்திட்டனர். 1982-ம் வருடம் பேச்சுவார்த்தை ஆரம்பிக்கப்பட்டு ஒன்பது ஆண்டுகள் கழித்து இந்த ஒப்பந்தம் கையெழுத்தானது.

படைக்கல உற்பத்திப் போட்டியைக் கட்டுப்படுத்துவதிலும், படைக் கலக் குறைப்பின் வெற்றிக்கான சாதகமான சூழ்நிலையை உருவாக்குவதிலும் "அணு ஆயுதப்பரவல் தடை ஒப்பந்தம்"ஒரு மைல்கல்லாகவிளங்குகிறது. 124 நாடுகளைக் கொண்ட ஐ.நா. சபையின் அரசியல் குழு இவ்வொப்பந்தத்தை 1968 ஜுனில் நிறைவேற்றியது. 119 நாடுகள் இதில் கையெழுத்திட்டன.

சால்ட் 1-1973-ஆம் ஆண்டு அமெரிக்காவிற்கும் ரஷ்யாவிற்கு மிடையே ஹெல்சிங்கியில் மேற்கொள்ளப்பட்ட ஒரு ஒப்பந்தமாகும். இந்த ஒப்பந்தம் இவ்விரு நாடுகளிடையே காணப்பட்ட ஏவுகணைகள் மற்றும் ஏவுகணை எதிர் தாக்கிகள் ஆகியவற்றின் எண்ணிக்கையைக் கட்டுப்படுத்துவதற்காக மேற்கொள்ளப்பட்ட ஒன்றாகும்.

## 8.11 சுருக்கவுரை

அணு ஆயுதங்களை முழுமையாக ஒழிக்க வேண்டும் என்பதில் இந்தியாவுக்கு மாற்றுக் கருத்து இல்லை. எனவே எல்லா நாடுகளும் குறிப்பிட்ட கால அவகாசத்திற்குள் அணு ஆயுதங்களை அழிக்க வகை செய்யும் படியான ஒப்பந்தம் கொண்டுவந்தால் கையெழுத்திடத் தயார் என்று இந்தியா கூறியுள்ளது.

உலக நாடுகள் தங்களிடையே ஏற்படும் சிக்கல்களை போரில்லாமல் அமைதியானவழியில் தான் தீர்த்துக்கொள்ள வேண்டும் என்ற மனப்பக்குவம் ஏற்பட வேண்டும். அப்போதுதான் "படைக்கலக் குறைப்பு" என்பதை முழுமை யாக அடைய முடியும். மேலும் தற்போது "உலக அமைதி" ஏற்பட வேண்டும் என்பது எல்லோருடைய மனப்பான்மையாக உள்ளது. இந்த மனப்பான்மை மேலும் வலிமை யடைய வேண்டும். இதற்கு மனித குலத்தையும், பிற உயிரினங்களையும் சிறிது நேரத்தில் அழித்துவிடக் கூடிய அணு ஆயுதங் களையும் ரசாயன ஆயுதங்களையும் உடனடியாக அகற்றிவிட முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.

ஒரு நாட்டின் பாதுகாப்பிற்கு உறுதியளித்தல், படைக் குறைப்பைக் கண்காணிக்க பன்னாட்டு நிறுவனம் ஒன்றை ஏற்படுத்துதல், ஏற்கனவே அதிகமாக உற்பத்தி செய்து வைக்கப்பட்ட சாதாரண ஆயுதங்களையும், அணு ஆயுதங்களையும் அழித்தல், படிப்படியான படைக்குறைப்பிற்குத் தகுந்த திட்டங்களை உருவாக்குதல், ஆயுத உற்பத்தியை தடை செய்தல்,

ரசாயன பாக்டீரியப் போர்களை தடை செய்தல் போன்ற பல பிரச்சனைகளைத் தீர்க்க உலகத் தலைவர்கள் திறந்த மனதுடனும், முழு மனதுடனும் முன் வரவேண்டும்.

## 8.12 முக்கிய வார்த்தைகள்

ஆயுத இனம் ஆயுதக்குறைப்பு ஒப்பந்தங்கள் அணுசக்தி கட்டுப்பாடற்ற ஒப்பந்தம் அணு ஆயுதப் பரவல் ஒப்பந்தம் மூலோபய ஆயுத வரம்பு பேச்சு, மூலோபய ஆயுதக் குறைப்பு ஒப்பந்தம் விரிவான அணுசக்தி சோதனை தடை ஒப்ப்நதம் சர்வதேச அரசியலில் அணு ஆயுதங்களின் தாக்கம்

## 8.13 சுயமதிப்பீடு வினாக்கள் மற்றும் பயிற்சிகள்

**சுருக்கமான கேள்விப் பதில்கள்**

5. START பற்றி மதிப்படுக?
6. ஆயுதக்குறைப்பு ஒப்பந்தங்கள் பற்றி குறிப்பு வரைக?

**விரிவான கேள்விப் பதில்கள்**

5. அணுசக்தி சோதனை தடை ஒப்பந்தத்தின் சாதனைகளைப் பற்றி கட்டுரை வரைக?
6. சர்வதேச அரசியலில் அணு ஆயுதங்களின் தாக்கம் பற்றி குறிப்பிடுக?

## 8.14 மேலும் படிக்க


- Burns, R. D. (ed.) (1993). ***Encyclopedia of Arms Control and Disarmament***, New York.
- Josip Broz Tito. (1970). ***International Relations And Disarmament,*** Yugoslavia Bulletin of Peace Proposals, Volume: 1 issue: 4.
- Joyner, D.H. (2011). ***Interpreting the Nuclear Non-Proliferation Treaty***. Oxford. Oxford University Press.
- Joyner, D.H. (2011). ***"Recent Developments in International Law Regarding Nuclear***
- ***Weapons"***. International and Comparative Law Quarterly.

# தொகுதி III கெடுபிடிப்போர

## அலகு 9 கெடுபிடிப்போர்

9.0 அறிமுகம்
9.1 நோக்கங்கள்
9.2 இருமுனை அரசியல்
9.3 கெடுபிடிப்போர்
9.3.1 கெடுபிடிப்போரின் காரணங்கள்
9.3.2 கெடுபிடிப்போரின் நிலைகள்
9.3.3 கெடுபிடிப் போர்க்கால நிகழ்ச்சிகள்
9.4 சர்வதேச உறவுகளில் அதன் தாக்கம்
9.4.1 தூரக்கிழக்கில் கெடிபிடிப்போர்
9.4.2 தென் கிழக்காசியாவில் கெடுபிடிப்போர்
9.4.3 தென் கிழக்கு ஆசியப்பாதுகாப்பு ஒப்பந்தம்
9.4.4 இந்திய உபகண்டத்தில் கெடுபிடிப்போர்
9.4.5 மத்தியகிழக்கில் கெடுபிடிப் போர்
9.4.6 ஐரோப்பாவில் கெடுபிடிப்போர்
9.4.7 ஆப்பிரிக்காவில் கெடுபிடிப்போர்
9.4.8 லத்தீன் அமெரிக்காவில் கெடுபிடிப்போர்
9.4.9 கியூபா நெருக்கடி
9.5உங்கள் முன்னேற்றத்தைச் சோதிக்கும் வினாக்களுக்கான விடைகள்
9.6 சுருக்கவுரை
9.7 முக்கிய வார்த்தைகள்
9.8 சுயமதிப்பீடு வினாக்கள் மற்றும் பயிற்சிகள்
9.9 மேலும் படிக்க

### 9.0 அறிமுகம்

கெடுபிடிப்போர் நின்று விட்டதா என்பதில் கருத்து வேறுபாடுகள் இருக்கின்றன. ஆனால் கெடுபிடிப்போரின் கடுமையும், அதனால் உண்டான பதட்டநிலையும் வெகுவாகத் தணிந்து உள்ளன என்பதில் இருவிதக் கருத்துக்களுக்கு இடமிருக்க முடியாது. இரும்புத்திரை, மூங்கில் திரைகளெல்லாம் விலகி விட்டன. சமாதான சுகவாழ்வுக் கோட்பாடு வலுபெற்று வருகிறது. எனினும் உண்மையில் நடைபெற்ற ஒன்றிரண்டு நிகழ்ச்சிகள் கெடுபிடிபோர்க் கால உணர்வுகளை நினைவிற்குக் கொண்டு வருகின்றன. ஆப்கானிஸ்தானத்தில் ஓர் பொம்மை அரசை உருவாக்கி அங்கு 80000 ரஷியப் படைகளை நிறுத்தி வைத்திருப்பது ரஷியாவின் ஆதிக்க மனப்பான்மை இன்னமும் அழிந்துவிட வில்லை என்பதையே சுட்டிக்காட்டுகிறது. அதுபோல் கிரனடா அரசை வன்முறையில் அமெரிக்கா அகற்றியது. அதன் ஆதிக்க மனப்பான்மை இன்னும் மறையவில்லை என்பதை எடுத்துக்காட்டுகிறது.

### 9.1 நோக்கங்கள்

கெடுபிடிப் போர்க் காலம் முழுவதும் மூன்றாம் உலகப் போர் என்ற பேராபத்து உலகை அஞ்சி நடுங்கச் செய்தது. இதுவே கெடுபிடிப்போரின் உண்மைத் தன்மையாகும். படைக்குறைப் பிற்கான பேச்சு வர்த்தைகள் நடைபெற்றுக்கொண்டுதான் வருகின்றன. நல்லுணர்வுகளும் மனிதாபிமான உணவுகளும் வல்லரசுத் தலைவர்களிடம் இருக்கும்வரை இன்னொரு உலகப் போர் மீளாது என்று திடமாக நம்பலாம் என்பதற்கான நோக்கத்தை எடுத்துரைப்பதாக இவ்வியல் அமைகின்றது

குறிப்பு

## 9.2 இருமுனை அரசியல்

இரண்டாம் உலகப் போரின்போது பிரிட்டன் அமெரிக்கா ஆகிய மேற்கு நாடுகளும் கம்யூனிச நாடான ரஷியாவும் ''நேச நாடுகளாக'' ஒன்று பட்டு ஒரே அணியில் நின்று போராடின. ஆனால் அப்போருக்கு முன்பு அந்நாடுகளிடையே நல்லுறவு நிலவியதில்லை. ஹிட்லரின், நாஸி, ஜெர்மனி இருதரப்பினருக்கும் பொது எதிரியாக எழுச்சியுற்றதால் அந்நாடுகள் தற்காலிகமாக தங்கள் கருத்துவேறுபாடுகளை மறந்து ஒருங்கிணைந்து போரிட்டன போர் முடிந்ததும், அதாவது பொது எதிரி மறைந்ததும், ''போர்க்காலத் தேனிலவும் முடிந்துவிட்டது. அந்நாடுகளிடையே குறிப்பாக, ரஷியா, அமெரிக்க நாடுகளிடையே பழையகருத்து வேறுபாடுகளும் ஐயப்பாடுகளும் தலைதூக்கின. போருக்குப் பின் அவ்விரு நாடுகள் மட்டும் தான் வலிமை மிகுந்து விளங்கின. எனவே அந்நாடுகள் உலகளாவிய ஆதிக்கப்போட்டியில் இறங்கின. இருவரும் தங்களின் அரசியல் கோட்பாடுகளே சிறந்தது, அவற்றையே உலக நாடுகள் அனைத்தும் ஏற்றுக் கொள்ளவேண்டும் எனப் பேராசைப்பட்டன. ரஷியா பொது உடமைக்கோட்பாட்டை உலகெங்கும் பரப்ப முயன்றபோது அமெரிக்கா அதனைத்தடுத்து நிறுத்தி, தனிமனித உரிமைப்பாதுகாப்புள்ள சுதந்திரக் கோட் பாட்டை நிலை நாட்ட முயன்றது. இந்த கோட்பாட்டுப் போட்டி ஆதிக்கப் போட்டியாக உருமாறியது. அப்போட்டி பொறாமை பகைமை உணர்வுகளைக்கிளறியது. அதன் காரணமாக ஒன்றையொன்று அழித்திட முயன்றன. அதற்கு நேரடிப்போர் தவிர பிற வழிவகைகள் அனைத்தையும் பயன்படுத்தின. இதனால் உலகில் பதட்ட நிலை உருவாகியது. இரு வல்லரசுகளிடை எந்த நிமிடமும் போர் மூண்டுவிடலாம் என்ற அச்சம் ஏற்பட்டது. இதுவே ''கெடு பிடிப்போர்'''' எனப்படுகிறது.

1945-ல் தொடங்கிய இக்கெடுபிடிப்போர் கால்நூற்றாண்டு காலம் நீடித்தது. அதன்பின் அதன் கடுமை தணிந்தது. இக்கெடுபிடிப்போர்க் காலத்தில் உலக நாடுகளில் பல இருமுகாம்களாகப் பிளவுபட்டு நின்றன. ஒரு முகாமிற்கு அமெரிக்க ஐக்கிய நாடு தலைமை தாங்கிய போது மற்றொரு முகாமிற்கு ரஷியா தலைமை தாங்கியது. அமெரிக்க முகாமில் பிரிட்டன், பிரான்ஸ், பெல் யம், நெதர்லாந்து, இத்தாலி போன்ற மேற்கு ஐரோப்பிய நாடுகளும் பல லத்தீன், அமெரிக்க நாடுகளும் பிலிப்பைன், தேசிய சீனா, பாகிஸ்தான் போன்ற ஆசிய நாடுகளும் அணி திரண்டு நின்ற போது ரஷிய முகாமில் போலந்து, ஹங்கேரி, செக்கோஸ் லோவாகியா, யூகோஸ்லோவாகியா, அல்பேனியா, ருமேனியா, பல்கேரியா போன்ற கிழக்கு ஐரோப்பிய நாடுகள் ஒன்றுபட்டு நின்றன.

## 9.3 கெடுபிடிப்போர்

கெடுபிடிப்போர் நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது யால்டாவில் கூடிய (1945 பெப்ரவரி) வல்லரசுகளிடை பல்வேறு பிரச்சினைகளில் கருத்து வேறுபாடு ஏற்பட்டது. இதுபற்றி முந்திய பாடத்தில் கூறப்பட்டுள்ளது. குறிப்பாக போலந்தின் எதிர்காலம், ஜெர்மனியின் எதிர்காலம் ஆகியவற்றில் அவைகளிடையே ஒருமித்த கருத்து ஏற்படவில்லை. எனவே யால்டாவிலே கெடுபிடிப் போருக்கான விதை ஊன்றப்பட்டுவிட்டது எனக் கூறப்படுகிறது, அதன்பின் ரஷியா தன்னிச்சையாகப் பல காரியங்களைச் செய்தது. தன்னால் நாஸி ஆக்கிரமிப்பிலிருந்து விடுவிக் கப்பட்ட கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் கம்யூனிஸ்ட் அரசைத் திணிக்கத் தொடங்கியது. அதன் விளைவாக கிரீஸ் நீங்கலாக பிற கிழக்கு ஐரோப்பிய நாடுகளனைத்தும்

*Self-Instructional Material*

கம்யூனிட்ஸ்மயமாயின. இந்நாடுகள் அரசியல், பொருளியல் பண்பாட்டுத் துறைகளில் முற்றிலும் ரஷியாவையே பின்பற்றின. மேற்கு நாடுகளுடன். அனைத்து அரசியல், பொருளியல் தொடர்புகளும் துண்டிக்கப் பட்டுவிட்டன. ஐரோப்பா இரு முகாம்களாகப் பிளவுபட்டது அவற்றிற்கிடையில் “இரும்புத்திரை“ போடப்பட்டது. சர்ச்சில் கூறியது போல் பால்டிக்கில் உள்ள ஸ்டெட்டின் துறைமுகத்திலிருந்து ஏட்ரியாட்க்கில் உள்ள ரிடிஸ்டி வரை அந்த இரும்புதிரை ஐரோப்பாவில் தென்வடலாகப் போடப்பட்டது.

### 9.3.1 கெடுபிடிப்போரின் காரணங்கள்

முதலில் குறிப்பிட்டபடி பொது எதிரி மறைவுதான் அதற்கு முதல் காரணமாக இருந்தது. இரண்டாவதாக, ஐரோப்பாவில் முதுபெரும் வல்லரசு களாக இருந்த பிரிட்டனும் பிரான்சும், போருக்குப்பின் இரண்டாந்தர அரசுகளாகிவிட்டன் ஜெர்மனி, இத்தாலி ஆகிய அரசுகளும் அடியோடு அழிந்துபோயின. ரஷியா மட்டும் தான் ஐரோப்பாக் கண்டத்தில் வல்லரசாக எஞ்சி நின்றது. பிற நாடுகள் அனைத்தையும்விட வலிமை பெற்று விளங்கியதால் ஐரோப்பிய வல்லமைச் சமநிலை கெட்டுவிட்டது. இதனைச் சமன் செய்ய அமெரிக்கா ஐரோப்பிய அரசியல் அரங்கில் இறங்கியது. இது ரஷிய, அமெரிக்கா மோதலுக்கு வழிவகுத்தது. மூன்றாவதாக, ஏற்கனவே கூறியபடி கோட்பாட்டுவேறுபாடுகள் அவைகளிடையே போட்டி மனப்பான்மையை உண்டு பண்ணின, நான்காவதாக, பொருளாதார ஆதிக்கத் திட்டங்கள் பகைமையை அதிகரித்தன, முதலாளித்துவ நாடான அமெரிக்காதான் தன் உற்பத்திப் பொருட்களுக்கு உலகளாவிய சந்தை இருக்க வேண்டும் என்று விரும்பியது. இறுதியாக யார் பெரியவன், யார் உலகளாவிய ஆதிக்கம் பெறுவது, என்ற ஆதிக்க வெறி ஒன்றையொன்றை அழித்திடத்தூண்டியது. அதன் காரணமாகக் கெடுபிடிப்போர் தோன்றியது.

### 9.3.2 கெடுபிடிப்போரின் நிலைகள்

இக்கெடுபிடிப்போர் போர்க்களத்தில் நடைபெறவில்லை . ஆனால் பிற ‘களங்கள்““ அனைத்திலும் அது நடைபெற்றது, பிரச்சாரம், பொருளாதாரம், அறிவியல், படைப்பெருக்கம், ராணுவக்கூட்டு ஆகிய அனைத்திலும் போட்டி ஏற்பட்டு போர் ஊக்கத்துடன் காரியங்கள் நடைபெற்றன. தங்கள் கூட்டில் புதிய நாடுகளை வளைத்துப் போடுவதில் அதிக ஆர்வம் காட்டப்பட்டது. அந்நாடுகளுக்குப் படைஉதவி அளிப்பதில் தீவிரம் காட்டப்பட்டது உலகின் எங்கோ ஒரு மூலையில் ஏதாவது இரு நாடுகளிடையே மோதல் ஏற்பட்டால் இரு வல்லரசுகளும் அங்கு விரைந்து அந்நாடுகளில் ஒன்றை ஆதரித்து அச்சிக்கலைப் பெரிய தாக்கிவிடுவர். அதனால் எந்த ஒரு சிறு சிக்கலும் பெரும் போராக மாறிவிடுமோ என்ற அச்சம் ஏற்பட்டது பயங்கர அழிவைத் தரக்கூடிய அணு ஆயுதங்கள் தயாரித்துக் குவிக்கப்பட்டன. போருக்கான முன்னேற்பாடுகள் அனைத்தும் முழுமூச்சுடன் செய்து முடிக்கப்பட்டு இருபத்தி நான்கு மணிநேரமும் இருவல்லரசுகளும் தயார் நிலையில் இருந்தன. கெடுபிடிப் போர்க் காலம் முழுவதும் மூன்றாம் உலகப் போர் என்ற பேராபத்து உலகை அஞ்சி நடுங்கச் செய்தது. இதுவே கெடுபிடிப்போரின் உண்மைத் தன்மையாகும்.

### 9.3.3 கெடுபிடிப் போர்க்கால நிகழ்ச்சிகள்

கெடுபிடிப் போர்க்காலத்தில் இருமுகாம்களிடையே பகையையும் போட்டி யையும் அதிகரித்து பதட்ட நிலையை உண்டு பண்ணும் நிகழ்ச்சிகள் பல நடைபெற்றன.

**(a)ட்ருமன் கொள்கை:-**

கிழக்கு ஐரோப்பாவில் எஞ்சி நின்ற கிரீஸ் நாட்டிலும் கம்யூனிஸ்டுகள் ஊடுருவி அரசைக் கவிழ்க்க குழப்பம் விளைவித்தனர். அதுபோல் ரஷியாவின் தெற்கில் உள்ள துருக்கியிலும் ரஷிய ஊடுருவல் ஏற்பட்டது. இந்த இரு நாடுகளிலும் உள்ள அரசுகளால் கம்யூனிஸ்டுகளின் குழப்பங்களை அடக்க இயலவில்லை. அங்கும் கம்யூனிஸ்ட் ஆட்சி ஏற்படு சூழ்நிலை தோன்றியது. இவ்வாறு அக்கோட்பாடு விரைவாகப் பரவி, பல்வேறு நாடுகளும் சிவப்பு மயமாகி இரும்புத் திரைக்குள் இழுக்கப்படுவது கண்டு அமெரிக்கா அதிர்ச்சியுற்றது. கம்யூனிசம் பரவாது தடுப்பது சுதந்திர நாடுகளின் தலைவன் என்ற முறையில், தனது தார்மீகக் கடமை என்றும் கருதியது. எனவே “கம்யூனிசம் பரவாமல் தடுப்பதை““ (to Contain Communism) தன் புனிதப் பொறுப்பாகக் கொண்டது உலகில் கம்யூனிசத்திற்கு எதிராக போலிஸ் பணி புரியவும் உறுதிபூண்டது இதுவே கெடுபிடிப் போர்காலத்தில் அமெரிக்க அயல் நாட்டுக் கொள்கையின் அடிப் படையானது.) அப்போது அமெரிக்கக் குடியரசுத் தலைவராக இருந்த ட்ருமன் அதற்கு ஒரு கொள்கை வடிவம் கொடுத்தார். அதுவே அவர் பெயரால் ‘ட்ருமன் கொள்கை“ எனப்பட்டது. அதன்படி உள் நாட்டுக் குழப்பங்களா லோ, வெளி நாட்டுத் தலையீடுகளாலோ தவிக்கும் ஒரு அரசுக்கு அமெரிக்கா உதவி அளிக்கத் தயார் எனக் கூறப்பட்டது. இப்புதிய கொள்கையின்படி கிரீசிற்கும் துருக்கிக்கும் அமெரிக்காவுக்கும் பொருளியல் படை உதவிகள் அளிக்கப்பட்டன. அதன் காரணமாக அந்நாடுகளின் உள்நாட்டுக் குழப்பங்களும் அயல் நாட்டு ஊடுருவல்களும் ஒடுக்கப்பட்டன. அவை அந்த இரு நாடுகளையும் கம்யூனிசத்திற்கு இரையாகாதவாறு தடுத்து நிறுத்தின.

**(b)மார்ஷல் திட்டம் :-** போருக்குப்பின் மேற்கு ஐரோப்பிய நாடுகளில் குறிப்பாக பிரான்ஸ், இத்தாலி நாடுகளில் கம்யூனிஸ்ட் கட்சி செல்வாக்குப் பெறத் தொடங்கியது, 1947-ல் நடைபெற்ற தேர்தலில் அக்கட்சி பிரான்சில் தனிப் பெருங் கட்சியாக வெற்றிபெற்றது. இதற்குக் காரணம் பொருளாதாரம் சீர்கெட்டிருந்ததுதான். போர்ச் சீரமைப்புப் பணிகளுக்குப் போதிய நிதி ஆதாரங்கள் இல்லாததால் அந்நாடுகளில் பொருளாதாரம் சீர்கெட்டிருந்தது. தொழில் துறையில் அமைதி நிலவவில்லை. தொழிலாளர்கள் தொல்லைகள் காரணமாக கம்யூனிசக் கோட்பாடுகளால் கவரப்பட்டிருந்தனர். இந்நாடு களில் கம்யூனிசம் பரவாமல் தடுப்பதற்கு பொருளாதாரத்தைச் சீரமைப்பதே சீரிய வழி என அமெரிக்கா உணர்ந்தது. உடனே அந்நாடுகளுக்குப் பொருளாதார உதவி அளிக்க ஒரு திட்டத்தை வகுத்தது. இத்திட்டம் அமெரிக்க வெளிநாட்டமைச்சர் ஜார்ஜ் மார்ஷல் என்பவரால் வகுக்கப்பட்டதால் அவர் பெயராலே அத்திட்டம் வழங்கப்பட்டது.

அதன்படி கோடிக்கணக்கான அமெரிக்கா டாலர்கள் போர்ச் சீரமைப்புப் பணிகளுக்கென ஐரோப்பாவில் கொட்டப்பட்டன. ரஷியா மார்ஷல் திட்டத்தை எதிர்த்தது. இது டாலர் ஏகாதிபத்தியத்தை மறைமுகமாக ஐரோப்பாவில் திணித்துவிடும் என்று கூறியது. அதன் காரணமாக கிழக்கு ஐரோப்பிய நாடுகள் இத்திட்டத்தைப் புறக்கணித்தன. அந்நாடுகளுக்கு ரஷியா நிதி உதவி வழங்கியது. மேற்கு ஐரோப்பிய நாடுகள் மட்டுமே மார்ஷல் திட்டத்தை ஏற்றுக்கொண்டன. அங்கு நிதி நிலை சீரடைந்து வாழ்க்கைத் தரம் உயர்ந்தது. அதனால் கம்யூனிசம் செல்வாக்கிழந்தது. இவ்வாறு கெடுபிடிப். போரில் பொருளாதாரமும் ஒரு ஆயுதமாகப் பயன்பட்டது.

**(c)ஜெர்மன் பிரச்சினை :-**

பாட்ஸ்டாம் மாநாட்டு முடிவின்படி ஜெர்மனி நான்கு மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொன்றும் ஒரு வல்லரசின் படைக்கட்டுப்பாட்டின் கீழ்வைக்கப்பட்டது. ஜெர்மனியில் நாஸிக் கருத்துக்களையும் நிறுவனங்களையும் ஒழித்து மக்களாட்சிக் கருத்துக்களையும் நிறுவனங்களையும் ஏற்படுத்தி, சுதந்தரமான தேர்தல்கள் நடத்தி அதில் வெற்றி பெறுபவர்களிடம் ஆட்சிப்பொறுப்பை ஒப்படைத்து விட்டு வல்லரசுகள் வெளியேறிவிட வேண்டும் என்று பாட்ஸ்டாம் மாநாட்டில் முடிவு செய்யப்பட்டிருந்தது. கிழக்கு-மேற்கு நாடுகளிடையே மையத்தில் அமைந்திருந்த ஜெர்மனி வல்லரசுகளின் வெளியேற்றத்திற்குப்பின் தங்கள் முகாமில் சேரவேண்டுமென்று இருவல்லரசுகளும் விரும்பியதால் ஜெர்மன் பிரச்சினைக்குத் தீர்வு காண்பது இயலாத காரியமாயிற்று. குறிப்பாக ரஷியா, சுதந்திரத் தேர்தல்கள் நடத்துவதற்குப் பலமுட்டுக்கட்டைகள் போட்டது.

இந்நிலையில் பிரிட்டன், பிரான்ஸ், அமெரிக்கா ஆகிய மேற்கு வல்லரசுகள் தங்கள் கட்டுப்பாட்டில் உள்ள மூன்று மண்டலங்களையும் ஒருங்கினைத்து ஜெர்மனி கூட்டாட்சிக் குடியரசு (German Federal Republic) என்ற பெயரில் சுதந்திர நாடாக்கி விட்டு வெளியேறின. இதுவே மேற்கு ஜெர்மனி எனப்பட்டது. பான் அதன் தலை நகரானது. இங்கு ஒருசில படைத்தளங்களில் மட்டும் மேற்கு நாடுகளின் படைகள் நிறுத்தப்பட்டிருந்தன. மற்றப்படி அது சுயஆட்சி பெற்ற நாடாக இயங்கத் தொடங்கியது. அங்கு உருவான அரசு மேற்கு நாடுகளுக்கு ஆதரவாக இயங்கியது.

உடனே இதற்குப் பதிலடியாக ரஷியா தன் கட்டுப்பாட்டில் உள்ள கிழக்கு ஜெர்மனியை ஜெர்மன் ஜன நாயகக் குடியரசு (German Democratic Republic) என்ற சுதந்திர நாடாக்கியது. பெர்லின் அதன் தலை நகரானது. நாளடைவில் மேற்கு ஜெர்மனி மேற்கு ஐரோப்பிய நாடுகளின் பொருளியல் பாதுகாப்பு நிறுவனங்களோடு இணைந்து செயல்பட்டது. நேட்டோவிலும் உறுப்பினரானது. அதுபோல் கிழக்கு ஜெர்மனி வார்சா ஒப்பந்தத்தில் இணைந்துபிற கம்யூனிஸ்ட் நாடுகளோடு பொருளியல் தொடர்களை ஏற்படுத்தி ரஷியத் தலைமையின் கீழ் இயங்கியது. இவ்வாறு கெடுபிடிப் போர்ச் சூழ்நிலை காரணமாக ஜெர்மனி நிரந்தரமாக இரு நாடுகளாகப் பிரிக்கப்பட்டது.

**(d)பெர்லின் சிக்கல் :-**

பெர்லின் நகர் ரஷிய மண்டலயான கிழக்குச் ஜெர்மனியுள் அமைந்திருந்த போதிலும் அந்நகரின் மேற்குப்பகுதி மேற்கு வல்லரசுகளுக்கு அளிக்கப்பட்டிருந்தது. ஜெர்மனி இரண்டாகப் பிளவுபட்ட பின்பும் மேற்குப் பெர்லின் மேற்கு ஜெர்மனிக்குச் சொந்தமான பகுதியாகவே கருதப்பட்டது. அந்நகர் மேற்கு ஜெர்மனியை விட்டு தனித்து கிழக்கு ஜெர்மனிக்குள் அமைந்திருந்ததால் மேற்கு ஜெர்மனிக்கும், மேற்கு பெர்லினுக்கும் இடையிலான போக்குவரவுத் தொடர்புகள் எல்லாம் கிழக்கு ஜெர்மனி வழியாகவே அமைந்திருந்தன.

தன் ஆதிக்க மண்டலத்தினுள் மேற்கு நாடுகளின் ஆதிக்க மையம் மேற்குபெர்லின் அமைந்திருப்பதை ரஷியா விரும்பவில்லை. பல நிர்ப்பந்தங்களை உண்டுபண்ணி அங்கிருந்து வல்லரசுகளை வெளியேற்ற ரஷியா திட்டமிட்டது. 1948-ல் மேற்கு நாடுகள் தங்கள் புதிய நாணயச் சீர்த்திருத்தத்தை மேற்குப் பெர்லினிலும் அமுல் செய்ததை ரஷியா

**குறிப்பு**

எதிர்த்தது. மேற்கு பெர்லினுக்கும் மேற்கு ஜெர்மனிக்கும் இடையிலான நீர், நில மார்க்கங்களை அடைத்துவிட்டது. இதனால் அங்கு வாழ்ந்த மக்களுக்கு உணவுப்பொருள் கிடைக்க வழியில்லாது போயிற்று. சகல தொடர்புகளிலிருந்தும் துண்டிக்கப்பட்ட மேற்கு பெர்லினுக்கு ஆகாயவழியாக மட்டும் தொடர்பு கொள்ள முடிந்தது. அமெரிக்கா தனது விமான பலத்தைப் பயன்படுத்தி மேற்கு பெர்லினில் வாழும் மக்களுக்கு அனைத்துப் பொருட்களையும் அனுப்பியது. 1948 - மேயில் தொடங்கிய பெர்லின் முற்றுகை 1949 மே வரை நீடித்து. மேற்கு நாடுகள் அதனை உறுதியுடன் சமாளித்ததால் ரஷியா விட்டுக் கொடுத்தது. முற்றுகை தளர்த்தப்பட்டது. இந்த ஓராண்டு காலமும் பெர்லின் நகரில் அருகருகே இரு வல்லவரசுகளும் பல தற்காப்பு படை நடவடிக்கைகளை எடுத்ததால் பதட்ட நிலை நீடித்தது. அதன் பின் மேலும் இரண்டு தடவை பெர்லின் நகரிலிருந்து மேற்கு வல்லரசுகளை வெளியேற்ற நிர்ப்பந்தங்களை மேற்கொண்டது. 1957-லிலும் 1961 லிலும் பெர்லின் நெருக்கடி ஏற்பட்டது. அப்போதும் மேற்கு வல்லரசுகள் உறுதியுடன் நின்றதால் ரஷியா விட்டுக் கொடுக்க நேர்ந்தது.




**கிழக்கு மற்றும் மேற்கு பேர்லினிலிருந்து மக்கள் நவம்பர் 10 1989 அன்று பெர்லின் சுவரில் கூடி சுவர் திறந்து ஒரு நாள் கழிந்து**

### (e)நேட்டோ பாதுகாப்பு ஒப்பந்தம்

பெர்லின் நெருக்கடி கண்ட மேற்கு ஐரோப்பிய நாடுகள் ரஷியாவிற்கு எதிராகத் தங்கள் பாதுகாப்பு. நடவடிக்கைகளை வலுப்படுத்த முயன்றனர். அனைத்து நாடுகளும் ஒன்று சேர்ந்து ரஷியப் படைகளுக்கு ஈடுகொடுக்கும் வகையில் கூட்டுப்பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்ய திட்டமிட்டன. அதன் விளைவே வட அட்லாண்டிக் ஒப்பந்த நிறுவனமாகும். (North Atlantic Treaty) Organisation. (NATO) இதில் அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ், பெல்ஜியம், நெதர்லாந்து, லக்சம்பர்க், நார்வே, டென்மார்க், இத்தாலி, ஐஸ்லாந்து, கனடா, போர்த்துக்கல் ஆகிய 12 நாடுகள் சேர்ந்திருந்தன . இதன் தலைமையகம் பாரிசில் நிறுவப்பட்டது. உறுப்பு நாடுகளின் கூட்டுப் படைகள் உருவாக்கப்பட்டன. இந்நாடுகளுள் ஏதாவது ஒரு நாட்டின் மீதான தாக்குதல் அனைத்து நாடுகளின் மீதான தாக்குதலாகக் கருதப் படவேண்டும் என்பது அவ்வொப்பந்தத்தின் முக்கியமான அம்சமாகும். 1952-ல் இதில் கிரீசும் துருக்கியும் சேர்ந்தன. 1955-ல் மேற்கு ஜெர்மனி சேர்த்துக் கொள்ளப்பட்டது.

*Self-Instructional Material*



நேட்டோ பாதுகாப்பு ஒப்பந்தம்

**(f)வார்சா ஒப்பந்தம்:-**

நேட்டோவிற்குப் பதிலடியாக ரஷியா வார்சா ஒப்பந்தத்தை உருவாக்கியது. இதில் ரஷியாவும் பிற கிழக்கு ஐரோப்பிய கம்யூனிஸ்ட் நாடுகளும் (யூகோஸ்லாவியா நீங்கலாக) இணைந்திருந்தன. இவ்வாறு ஐரோப்பா மீண்டும் இரு ராணுவ முகாம்களாகப் பிளவு பட்டது. அதனால் பதட்ட நிலை மேலும் அதிகரித்தது.

**(g) படைப் பெருக்கம்:-**

கெடுபிடிப் போர்க்காலத்தில் பதட்ட நிலை அதிகரித்ததற்குப் படைப்பெருக்கம் முக்கிய காரணமாகும். பயங்கர அழிவைத்தரும் கொடிய ஆயுதங்களை இரு வல்லரசுகளும் செய்து குவிக்கத் தொடங்கின . அணுகுண்டை முதலில் தயாரித்த நாடு அமெரிக்காவாகும். 1949 வரை அந்நாடு அதில் முற்றுரிமை பெற்றிந்தது. அவ்வாண்டில் ரஷியா அணு குண்டு ரகசியத்தைக் கண்டறிந்தது அதனைத் தயாரிக்கத் தொடங்கியது. நாளடைவில் அணிகுண்டை விடக் கொடிய அழிவை உண்டாக்க வல்ல நீர்வாயுக் குண்டுகள் கண்டுபிடிக்கப்பட்டன. கண்டம் விட்டு கண்டம் தாக்கும் (ICBM) ஏவுகணைகளும், அணுகுண்டு ஏவுகணைகளைக் கொண்ட நீர் மூழ்கிக் கப்பல்களும் (Polaris submarines) கண்டுபிடிக்கப்பட்டன. பின் இரு வல்லரசுகளும் உலகில் பல்வேறுபகுதிகளில் படைத்தளங்களை அமைத்தன. நட்பு நாடுகளுக்கு படை உதவி அளித்தன. இந்தப்படைப் பெருக்கமும் படை நடமாட்டமும் பதட்ட நிலையை அதிகரித்தன.

| |
|---|
| **உங்கள் முன்னேற்றத்தைச் சரிபார்க்கவும்** |
| 1.இருமுனை அரசியலை மையமிட்ட நாடுகள் யாவை? |
| 2.வார்சா ஒப்பந்தம் குறிப்பு வரைக? |

**9.4 சர்வதேச உறவுகளில் அதன் தாக்கம்**

கெடுபிடிப்போர் ஒரு குறிப்பிட்ட நிலப்பகுதியிலோ கண்டத்திலோ நடை பெறவில்லை. அது உலகளாவிய போராக இருந்தது. ஏனென்றால் உலகின் எந்த மூலையில் ஒரு சிக்கல் தோன்றினாலும் வல்லரசுகள் அதில் தலையிட்டு தங்களுக்கு ஆதரவான கட்சி வெற்றிபெற உதவின.

### 9.4.1 தூரக்கிழக்கில் கெடிபிடிப்போர்

#### (a) சீன உள் நாட்டுப் போர் (1947-4)):

சீனாவில் சியாங்கே ஷேக் தலைமையிலான கோமிண்டாங் கட்சியனருக்கம் தேசிய சீனா மாசேதுங் தலைமையிலான கம்யூனிஸ்ட் கட்சிக்குமிடையே பல உள் நாட்டுப்போர் ஏற்பட்டது. அமெரிக்கா சியாங்கிற்கு உகவிய போகடாஷியா மாசேதுங்கிற்கு உதவியது. இறுதியில் கம்யூனிஸ்ட் கட்சி வெற்றிபெற்று 1949 அக்டோபர் முதல் தேதியில் சீன மக்கள் குடியரசை நிறுவியது. சீனப் பிரச்சினை இத்துடன் தீர்ந்த பாடில்லை, கெடுபிடிப்போர்ச் ஆம் நிலை காரணமாக அது தொடர்ந்து நீடித்தது. தோல்வியுற்ற சியாங்கே ஷேக் பர்மோசாத் தீவிற்குப் பின்வாங்கி அங்கு தமது தேசீய சீன அரசை கவினர். நமது அரசுதான் சீனா முழுமைக்குமான உண்மையான அதிகார பூர்வமான அரசு என்று கூறினார். அமெரிக்காவும், அதன் சார்பு நாடுகளும் சியாங்கின் அரசைதான் தொடர்ந்து சீன அரசாக அங்கீகரித்தன. ஐ. நா சபையிலும் சீனாவிற்கு உரிய இடத்தில் தேசிய சீனாவே தொடர்ந்து இருக்குமாறு பார்த்துக் கொண்டது. சீனாமுழுவதையும் உண்மையில் ஆட்சி பரிந்து கொண்டிருத்த கம்யூனிஸ்ட் அரசிற்கு அங்கீகாரம் அளிக்க மறுத்தது. இவ்வாறு இரு சீனாக்கள் தோன்றின. சுமார் இருபதாண்டு காலத்திற்கு கம்யூனிஸ்ட் சீனாவிற்கு உலக அரசியலில் உரிய இடம் கிடைக்காதவாறு பார்த்துக் கொண்டிருப்பது அமெரிக்காவின் அதிக முக்கிய கொள்கையாயிற்று. இதனை ரஷியா கடுமையாக எதிர்த்தது. தேசிய சீனப் பிரதி நிதி ஐ. நா. பாதுகாப்புச் சபையில் அமர்ந்திருக்கும் வரை கூட்டத்தில் கலந்து கொள்ள மாட்டேன் எனப் புறக்கணித்தது.

கொரியாச்சிக்கல் இரண்டாம் உலகப்போருக்குப்பின் கொரியா ஜப்பானிய மேலாதிக்கத்திலிருந்து விடுவிக்கப்பட்டு வல்லரசுகளின் படைக்கட்டுப்பாட்டின் கீழ் தற்காலிகமாக வைக்கப்பட்டது. 38வது அட்சரேகைக்கு வடக்கில் உள்ள பகுதியில் ரஷிய ஆதிக்கமும், தெற்கில் உள்ள பகுதியில் அமெரிக்க ஆதிக்கமும் ஏற்பட்டது. கெடிபிடிப்போர்ச் சூழ்நிலை காரணமாக அங்கு தேர்தல்கள் நடத்தப்பட்டு கொரியா முழுமைக்குமான சுதந்திர அரசை நிறுவ இயலாது போயிற்று. விரைவில் அமெரிக்கா தென்கொரியாவில் ஒரு சுதந்திர அரசை நிறுவியது் உடனே ரஷியாவும் வடகொரியாவில் ஒரு கம்யூனிஸ்ட் அரசை நிறுவியது. இவ்வாறு கொரியா இரண்டாகப் பிளவுபட்டது.

இந்நிலையில் 1950- ஜுனில் வடகொரியா, தென்கொரியா மீது படையெடுத்தது. இப்பிரச்சினை ஐ.நா. சபைக்கு எடுத்துச்செல்லப்பட்டது. அப்போது ரஷியா ஐ.நா. பாதுகாப்பு குழுக்கூட்டத்தைப் புறக்கணித்திருந்தபடியால், வட கொரியா ஆக்கிரமிப்பை அகற்ற ஐ. நா. படையனுப்ப ஏகமனதாக முடிவு செய்யப்பட்டது. முதன்முறையாக ஐ. நா. கூட்டுப்பாது காப்புக் கொள்கைமுறைப்படி படையனுப்பி ஆக்கிரமிப்பை அகற்ற முற்பட்டது. ஐ. நா. படையமைப்பிற்கு மேற்கித்திய நாடுகள் பலப்படை அனுப்பியது. அமெரிக்கத் தளபதி மக்கார்தரை ஐ. நா. படைத்தளபதியாக நியமிக்கப்பட்டார். ஐ. நா. படைகள் பெரும் சிரமத்துடன் வடகொரியாவைத் தோற்கடித்து 38-வது அட்சரேகைக்கு வடக்கில் பின்வாங்குமாறு செய்தன. தொடர்ந்து வடகொரியாவினுள்ளும் நுழைந்து போர் புரிந்தன. உடனே சீனா வடகொரியாவிற்குப் படைக் கலன்களையும் படை வீரர்களையும் கொடுத்துதவியது் அதனால் ஐ.நா. படை முன்னேற்றம் தடுத்து நிறுத்தப்பட்டது. தளபதி மக்கார்தர் போரை விரைவில் வெற்றிகரமாக முடிக்க வேண்டுமென்றால் சீனாவினுள் புகுந்து தாக்குதல்

தொடுக்க வேண்டும் என்று கருதினார். அவ்விதம் செய்தால் அது உலகப் போராக மாறிவிடும் என அஞ்சப்பட்டது. உடனே அமெரிக்க அதிபர் ட்ருமன், தளபதி மக்கார்தரை பதவி நீக்கம் செய்தார்.

இதற்கிடையில் ஐ.நா. பொதுச்சபையில் கொரியப் போர் நிறுத்தத்திற்கான இந்தியா கொண்டுவந்த தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. போர் நிறுத்தக் கோட்பாட்டைக் கண்காணிக்க இந்தியப் படைகள் அனுப்பப்பட்டன. கொரியாப்போர் நின்றது. ஆனால் கொரியப் பிரச்சினை தீரவில்லை. இன்னமும் இரு கொரியாக்கள் நீடிக்கின்றன.

### 9.4.2 தென் கிழக்காசியாவில் கெடுபிடிப்போர்

#### (a) வியட்நாம் போர்

தென்கிழக்காசியாவில் உள்ள இந்தோ சீனா கெடுபிடிப் போர்க்களமாக மாறியது. உலகப்போருக்குப்பின் மீண்டும் பிரஞ்சுக்காரர்கள் தங்கள் மேலாதிக்கத்தை நிலை நாட்ட முயன்றபோது தேசிய வாதிகள் கடுமையாக எதிர்த்தனர். அந்த தேசிய விடுதலை வீரர்களுக்கு ஹோசி-மின் என்ற கம்யூனிஸ்ட் தலைவர் தலைமை வகித்தார். பிரஞ்சுக்காரர்களால் தேசிவாதிகளை முறியடிக்க இயலவில்லை. அதன் காரணமாக இந்தோ - சீனப் பிரச்சினைகளுக்குத் தீர்வுகான 1954-ல் ஜெனிவாவில் ஒரு மாநாடு கூட்டப்பட்டது. இதில் ரஷியா, சீனா, அமெரிக்கா, பிரான்ஸ், பிரிட்டன் ஆகிய வல்லரசுகளும் பிற நாடுகளும் கலந்து கொண்டன. அம்மாநாட்டில் கீழ்க்கண்ட முடிவுகள் எடுக்கப்பட்டன.

- இந்தோசீனாவிலிருந்து பிரான்ஸ் வெளியேறி அப்பகுதிக்கு சுதந்திரம் அளிக்கவேண்டும்,
- அங்கு லவோஸ், வியட்நாம், கம்போடியா என்ற மூன்று சுதந்திர நாடுகள் உருவாக்கப்படவேண்டும்.
- இதில் லவோஸ். கம்போடியா ஆகிய இரு நாடுகளும் ஒரு நிலை நாடுகளாகக் கருதப்பட வேண்டும்.
- வியட்நாம் 17வது அட்சரேகையை எல்லையாகக் கொண்டு இரு பகுதிகளாகப் தற்காலிகமாகப் பிரிக்கப்படவேண்டும். வடவியட்நாமில் ஹோசிமின் தலைமையிலான கம்யூனிஸ்ட் அரசும், தென் வியட்நாமில் பவோடாய் என் பார் தலைமையில் ஒரு சுதந்திர அரசும் நிறுவப்பட வேண்டும் இருவருடங்களுக்குப்பின் அங்கு சுதந்திரமான தேர்தல்கள் நடத்தப்பட்டு வியட்நாம் முழுமைக்குமான அரசு உருவாக்கப்படவேண்டும்.

இதில் கடைசியில் குறிப்பிடப்பட்ட நிபந்தனை நிறைவேற்றப்பட முடியாமல் போய்விட்டது. வியட் நாம் இரு நாடுகளாகப் பிளவுபட்டிருந்தது. இந்நிலையில் கம்யூனிஸ்டுகள் வியட்நாமை வன்முறைமூலம் ஒன்றுபடுத்த விரும்பி, தென் வியட்நாமில் “வியட்காங்“ என்ற இயக்கத்தை உருவாக்கினர். அவ்வியக்கத்தினர் தென் வியட்நாம் அரசிற்கெதிராக உள் நாட்டுப்போரில் ஈடுபட்டனர். இதற்கு வடவியட்நாம் கம்யூனிஸ்டுகள் பேருதவி அளித்தனர். இப்போரில் தென் வியட்நாம் பல தோல்விகளைத் தழுவியது. இந்நிலையில் உலகில் கம்யூனிசம் பரவுவதை தடுப்பதற்காக அவதாரம் எடுத்திருப்பதாக கருதிய அமெரிக்கா தென்வியட்நாம் அரசிற்கு (தீன்-தியம்) உதவிபுரிய விரைந்தது. தொடக்கத்தில் வெறும் ஆலோசகர்களையும் படைக் கருவிகளையும் கொடுத்து தவிய அமெரிக்கா நாளடைவில் தனது படை வீரர்களையே அனுப்பத் தொடங்கியது. 1969-ல் ஐந்து லட்சத்திற்கு மேற்பட்ட அமெரிக்க வீரர்கள் அங்கு அனுப்பப்பட்டனர். அப்படியும் வியட்காங்குகளின் முன்னேற்றத்தைத் தடுக்க இயலாத அமெரிக்கா வட வியட்நாம் மீது விமானங்கள் மூலம் குண்டுகளை வீசியது. உண்மையில்

வியட்நாம் போர், கம்யூனிஸ்ட்-அமெரிக்க மோதலாகவே இருந்தது, தேசிய உணர்வால் உந்தப்பட்ட விடுதலை வீரர்களை ஏகாதிபத்திய கடலிப் படைகள் வென்றதாகச் சரித்திரமில்லை.

வியட்நாமில் சர்வசக்தி வாய்ந்த வல்லரசான அமெரிக்கா இரண்டு மில்லியின் மக்களைக் கொண்டிருந்த வியட்காங்குகளிடம் தோல்வியுற நேர்ந்தது. அந்த தோல்வியை ஒப்புக்கொண்டு கௌரவமாக அப்போர்த் தொல்லையிலிருந்து தன்னை விடுவித்துக்கொள்ள விரும்பியது. 1969-ல் பாரிசில் அமைதிக்கான பேச்சுவார்த்தை தொடங்கியது. 1973-ல் போர் நிறுத்த ஒப்பந்தம் கையெழுத்தானது. அமெரிக்கா பெரும் இழுக்குடன் தன்படைகளைத் திரும்ப வரவழைத்துக் கொண்டது. 1975-ல் கம்யூனிஸ்டுகள் வியட்நாம் முழுவதிலும் தங்கள் ஆதிக்கத்தை நிலை நாட்டுவதில் வெற்றி பெற்றனர் .

### 9.4.3 தென் கிழக்கு ஆசியப் பாதுகாப்பு ஒப்பந்தம் (South East Asian Treaty organization> SEATO)

தென்கிழக்கு ஆசியாவில் கம்யூனிசம் வேகமாகப் பரவி வருவதைக் கண்டஞ்சிய அமெரிக்கா அதனைத் தடுத்து நிறுத்த சுதந்திர நாடுகளுக்குப் படை உதவி அளிக்கும், நோக்குடன் தென் கிழக்கு ஆசியப்பாதுகாப்பு ஒப்பந்தத்தை ஏற்படுத்தியது. இதில் பிலிப்பைன்ஸ், தாய்லாந்து, பாகிஸ்தான் ஆகிய மூன்று தென்கிழக்கு ஆசிய நாடுகளே சேர்ந்தன. இந்தியா, பர்மா இந்தோனேஷியா போன்ற பிற தென்கிழக்கு ஆசிய நாடுகள் இதில் சேரவில்லை . பிரிட்டன், பிரான்ஸ், அமெரிக்கா, ஆஸ்திரேலியா, நியூசிலாந்து ஆகிய நாடுகள் சேர்ந்தன. நேட்டோ பாணியில் அமைந்த இந்தப்பாதுகாப்பு ஒப்பந்தம் அதனைப் போல் வலுவாகவும் உறுதியாகவும் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

### 9.4.4 இந்திய உபகண்டத்தில் கெடுபிடிப்போர்

இந்த ஒப்பந்த மூலம் எந்த அளவிற்கு கம்யூனிசம் பரவுவது தடுக்கப் பட்டது என்பது சர்ச்சைக் குறியது. ஆனால் இவ்வொப்பந்தத்தில் பாகிஸ்தான் சேர்ந்ததன் மூலம் கெடுபிடிப்போர் இந்திய உபகண்டத்தினுள் கொண்டு வரப்பட்டது. பாகிஸ்தான் அவ்வொப்பந்தப்படி பெற்ற படை உதவிகளைக் கொண்டு கம்யூனிசத்தை எதிர்க்கவில்லை மாறாக இந்தியாவிற் கெதிராகப் 1965-ல் போர்தொடுத்தது. முடிந்துபோன காஷ்மீர் பிரச்சினைக்கு உயிரூட்டி அதனை ஐ.நா. சபையில் கிளப்பியது. தங்கள் ஒப்பந்தக் கூட்டாளியான பாகிஸ்தானை அமெரிக்கா அங்கு ஆதரித்தது. இதனால் இந்தியப் பாகிஸ்தான் உறவு சீர்கெட்டது. 1971-ல் பங்களாதேஷ் பிரச்சினை காரணமாக மூண்ட இந்திய பாகிஸ் தான் போரின்போது அமெரிக்கா தனது ராணுவ ஒப்பந்த நாட்டிற்கு உதவிபுரிய விரைந்தது. இச்சமயத்தில் ரஷியா இந்தியாவிற்கு ஆதரவளித்தது.

### 9.4.5 மத்தியகிழக்கில் கெடுபிடிப் போர்

#### (a)மத்தியகிழக்குப் பாதுகாப்பு ஒப்பந்தம்:-

எண்ணை வளமிக்க மத்திய கிழக்கிலிருந்து இரண்டாம் உலகப் போருக்குப்பின் பிரஞ்சு, பிரிட்டிஷ் ஏகாதிபத்தியங்கள் வெளியேறியபின் அங்கு ஏற்பட்ட ஆதிக்க வெற்றிடத்தை நிரப்ப அமெரிக்கா அங்கு நுழைந்தது. 1955-ல் மத்திய கிழக்குப் பாதுகாப்பு ஒப்பந்தம் ஒன்று நிறைவேற்றப்பட்டது. அதில் ஈரான், ஈராக், பாக்கிஸ்தான், பிரிட்டன் ஆகிய நாடுகள் சேர்ந்திருந்தன. இது பாக்தாத் ஒப்பந்தம் என்றும்

அழைக்கப்பட்டது. 1959ல் ஈராக் அதிலிருந்து விலகி விட்டது. இந்த ஒப்பந்தத்தில் அரபு நாடுகள் குறிப்பாக எகிப்து சேர மறுத்து விட்டது. எனவே இது தொடக்க முதலே வலுவற்றிருந்தது. அமெரிக்கக் குடியரசுத் தலைவர் ஐசன் ஹாவர் 1957ல் மத்திய கிழக்கிற்கென ஒரு கொள்கையை வெளியிட்டார். மத்திய கிழக்கு நாடுகளுக்கு கம்யூனிஸ்ட் ஆக்கிரமிப்பினால் ஆபத்து ஏற்படும் போது அமெரிக்கா படை, பொருளியல் உதவி அளிக்கத் தயார் என்று அறிவித்தார்.

**(b) சூயஸ்கால்வாய் தகராறு :-**

1956-ல் அமெரிக்காவும் பிரிட்டனும் எகிப்தில் அஸ்வாள் அணை கட்டுவதற்கு நிதி உதவி அளிக்க மறுத்தபோது நாஸர் சூயஸ் கால்வாயை தேசிய மயமாக்கினார். அதனால் பிரிட்டன், பிரான்ஸ் ஆகிய நாடுகள் இஸ்ரேல் உதவியுடன் எகிப்து மீது படையெடுத்த போது ரஷியா அந்நாட்டின் உதவிக்கு விரைந்தது. அதனால் வல்லசுரகள் அங்கு பின்வாங்க நேர்ந்தது.

**(c) அரபு - இஸ்ரேல் போர்கள்:**

மத்திய கிழக்கில் அமைதிக்கு இடையூறு விளைவிக்கும் சிக்கல் அரபு இஸ்ரேல் தகராறுகளாகும். கெடுபிடிப்போர் அங்கும் சிக்கலை அதிகரித்தது இஸ்ரேல் நாட்டிற்கு அமெரிக்கா உதவியளிக்கும்போது அரபுகளுக்கு ரஷியா ஆயுத உதவி அளிக்கிறது. அதனால் அங்கு அத்தகராறுக்கு நிரந்தரத் தீர்வு காண இயலாமல் இருக்கிறது.

**9.4.6 ஐரோப்பாவில் கெடுபிடிப்போர்**

**(a) ஹங்கேரிச் சிக்கல்**

வார்சா ஒப்பந்தத்தில் இணைந்திருந்த கிழக்கு ஐரோப்பிய கம்யூனிஸ்ட் நாடான ஹங்கேரியில் 1956-ல் ஒருசிக்கல் ஏற்பட்டது. அந்நாட்டுப் பிரதமரான இம்ரே நாகி கம்யூனிஸ்ட் கொள்கைகள் தன் நாட்டு நலன்களுக்கு உகந்ததாக இல்லை என்று எண்ணினார். அதனால் அக் கொள்கைகளை, அரசியல், பொருளியல் துறைகளில் சற்றுத் தளர்த்தி, ரஷியப் பிடியிலிருந்து விடுபட்டு மேற்கு நாடுகளுடன் தொடர்பு கொள்ள முயன்றார். ஹங்கேரியின் இச்செய்கை இரும்புத்திரையைக் கிழித்து விடும் என்றஞ்சிய ரஷியா அம்முயற்சியை முளையிலே கிள்ளி எறிய முனைந்தது. வார்சா ஒப் பந்தப்படி அங்கு நிறுத்தப்பட்டிருந்த ரஷியப் படைகள் இப்ரேநாகி அரசிற்கு எதிராகக் கிளம்பியது. அதன்விளைவாக இம்ரேநாகி பதவி விலக்கப்பட்டு காடர் என்பார் பிரதமராக்கப்பட்டார். நாகி தேசத்துரோகி எனச் சுட்டுக் கொல்லப்பட்டரர். அதனை எதிர்த்த ஹங்கேரி மக்கள் படுகொலை செய்யப்பட்டனர். ரஷிய டாங்குகள் எதிர்ப்பு அனைத்தையும் நசுக்கிவிட்டன. ஆயிரக் கணக்கான ஹங்கேரி தேசிய வாதிகள் மேற்கு நாடுகளுக்கு அகதிகளாக ஓடி வந்தனர். அமெரிக்காவும், மேற்கு நாடுகளும் ஹங்கேரியில் ரஷியப் படைத் தலையீட்டை எதிர்த்து ஐ. நா. சபையில் தீர்மானம் கொண்டு வந்தன. ரஷிய ரத்து அதிகாரம் அத்தீர்மானத்தை முறியடித்தது. அதுபோல் 1969-ல் செக்கோஸ்லோவாகியாவில் பிரதமர் அலெக்சாண்டர் டுப்செக் இதுபோல் கம்யூனிசக் கொள்கைகளைத் தளர்த்த முயன்ற போதும் ரஷியப் படைகள் தலையிட்டு தோற்கடித்தது குறிப்பிடத்தக்கது.

குறிப்பு

**(b)யு - 2 நிகழ்ச்சி :**

1958ல் ரஷியப் பிரதமரான குருஷேவ் சமதான சகவாழ்வுக் கொள்கையைக் கடைப்பிடிக்கப் போவதாக அறிவித்தார். 1959-ல் அவர் அமெரிக்காவிற்கு வருகைபுரிந்து ஐசன்ஹோவரைச் சந்தித்துப் பேசினார். அதன் பயனாக சர்வதேச சிக்கல்களுக்குத் தீர்வு காணும் பொருட்டு 1960-ல் பாரிசில் உச்சக்கட்ட மாநாடு ஒன்றை கூட்டவேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது. இதற்கிடையில் ஒரு விரும்பத்தகாத நிகழ்ச்சி ஒன்று நடைபெற்று விட்டது. 1960- மேயில் அமெரிக்க வேவு வியானம் யு-2 ரஷியா மீது பறந்த போது சுட்டு வீழ்த்தப்பட்டது. அதன் விமானி பிரான்சிஸ் பவர்ஸ் என்பவர் உயிருடன் பிடிக்கப்பட்டார். அவரிடமிருந்து பெறப்பட்ட வாக்குமூலத்திலிருந்து அமெரிக்கா ரஷியாவின் படை நிலைகளை எவ்வாறு ஒற்றறிந்து வருகிறது என்பது பற்றிய விரிவான தகவல் பெறப்பட்டது. ஒருவாரத்திற்குப் பின் பாரிசில் உச்சக்கட்ட மாநாடு தொடங்கியபோது குருஷேவ் யு-2 நிகழ்ச்சி பற்றிக்குறிப்பிட்டு அதற்கு அமெரிக்கக் குடியரசுத்தலைவர் ஐசன் ஹோவர் மன்னிப்புக் கேட்க வேண்டும் எனக்கோரினார். அதற்கு அவர் இணங் காததால் மாநாடு பன்னாட்டுச் சிக்கல்கள் எதனையும் பரிசீலின் பயனின்றிக் கலைந்தது.

### 9.4.7 ஆப்பிரிக்காவில் கெடுபிடிப்போர்

வல்லரசுகளின் ஆதிக்கப்போட்டிக்கு இருண்ட கண்டமும் தப்பவில்லை. 1960-ல் பெல்ஜிய ஆதிக்கத்திலிருந்து விடுதலை பெற்ற காங்கோவில் வல்லரசுகள் தலையிட்டனர். அந்நாட்டில் உள் நாட்டுக் குழப்பம் ஏற்பட்டது. உடனே தனது நலன்களைப் பாது காப்பதற்கென்று பெல்ஜியம் தன் படைகளை அனுப்பியது. அதன் ஆதரவால் கடாங்கா மாநிலம் தனியாகப் பிரிந்தது. காங்கோ பிரதமரான லுமும்பா தம் நாட்டிலுள்ள அந்நியப் படைகளை வெளியேற்றக்கோரி ஐ. நா. சபையில் புகார் செய்தார். அக்கோரிக்கையை ரஷியா தீவிரமாக ஆதரித்தது. இதற் கிடையில் காங்கோ அரசியிலில் குழப்பம் அதிகரித்தது. அதிபர் கசவபு லுமும்பாவை பதவியிலிருந்து நீக்கியிருப்பதாக அறிவித்தார். அது செல்லாது என்று கோரி லுமும்பா தொடர்ந்து தான் பிரதமராயிருப்பதாகக் கூறினர். அவருக்கு உதவி செய்ய ரஷியா விரைந்தது. இந்நிலையில் தளபதி மொபடு என்பார் ஆட்சியைக் கைப்பற்றினார். அவருக்கு மேற்கு வல்லரசுகள் ஆதரவு இருப்பதாகக் கருதப்பட்டது. இவ்வாறு காங்கோ உள்நாட்டுப் போரில் ஆளுக்கொரு கட்சியை ஆதரித்து வல்லரசுகள் தலையிடத் தொடங்கின. அது காங்கோ குழப்பத்தை அதிகரித்தது. அக் குழப்பத்தில் லுமும்பா கொல்லப்பட்டார். இறுதியில் அங்கு அமைதியை நிலை நாட்ட ஐ. நா. படை அனுப்பப்பட்டது.

### 9.4.8 லத்தீன் அமெரிக்காவில் கெடுபிடிப்போர்

நீண்ட காலமாகவே லத்தீன் அமெரிக்கா, அமெரிக்கச் செல்வாக்கு மண்டலத்தினுள் இருந்தது. 1947-ல் 17 அமெரிக்க நாடுகள் ரியோடிஜெனிரோ என்ற பாதுகாப்பு ஒப்பந்தத்தைச் செய்து கொண்டன. இது. ‘‘ரியோ ஒப்பந்தம்‘‘ எனப்படும். நேட்டோவைப் போல் இதுவும் ஒரு ராணுவ ஒப்பந்தமாகும். 1948- ல் பொகாடோ நகரில் நடைபெற்ற 9-வது அமெரிக்க நாடுகளின் மாநாடு அமெரிக்க நாடுகளின் கழகத்தை (Organization of American States) ஏற்படுத்தியது. அக்கண்டத்தில் கம்யூனிசம் பரவாது தடுப்பதில் அமெரிக்கா கண்ணும் கருத்துமாக இருந்தது. 1954-ல் காரகாஸ் நகரில் கூடிய அமெரிக்க நாடுகளில் கழகம் தங்கள் பகுதியில் கம்யூனிசம் ஏற்படாது தடுக்க வேண்டும் எனத் தீர்மானித்தது. எனவே கெடுபிடிப் போர்

*Self-Instructional Material*

காலத்தில் அமெரிக்காவின் கம்யூனிச எதிர்ப்புக் போராட்டத்திற்கு லத்தீன் அமெரிக்க நாடுகள் முழு ஒத்துழைப்பு அளித்தன.

அவ்வப்போது கம்யூனிசக் கருத்துக்கள் அரசியலில் தலை தூக்கிய போது அமெரிக்கா முன்னெச்சரிக்கையுடன் அதனை முளையிலே கிள்ளியெறிய முற்பட்டது. 1954ல் கவாடமலாவில் கம்யூனசித்தறி:கு ஆதரவான அரசு நிறுவப்பட்ட போது அதனைக் கவிழ்க்க அமெரிக்கா திரைமறைவு சதி வேலைகளைச் செய்தது. இறுதியில் அவ்வரசு கவிழ்க்கப்பட்டது. 1959-ல் கியூபாவில் ஏற்பட்ட புரட்சியில் பதவியைப் பிடித்த பிடல் காஸ்ட்ரோ கம்யூனிஸ்ட் கொள்கைகளை கடைப்பிடிக்கத் தொடங்கியபோது அவரது அரசைக் கவிழ்க்க அமெரிக்கா முயன்றது. (இது பற்றிய விபரம் பின்னால் தரப். படுகிறது) 1965-ல் டொமினிகன் குடியரசில் நிகழ்ந்த உள் நாட்டுப் போரில் கம்யூனிஸ்டுகளுக்கு எதிராக அமெரிக்கா படையனுப்பியது. 1970-ல் சிலி நாட்டின் அதிபரான சால்வடார் அல்லாண்டே கம்யூனிஸ்ட் கோட்பாடுகளைக் கடைப்பிடித்தார். அவருக்கு விரோதமாக அமெரிக்க ஒற்றர்படைப் பிரிவு சதிவேலைகளை நடத்தியது. அதன் விளைவாக 1974-ல் அவர் கொல்லப்பட்டார். கியூபா தவிர பிற லத்தீன் அமெரிக்க நாடுகளில் கம்யூனிஸ்ட் ஆதரவு அரசுகள் நிறுவப்படுவதை அமெரிக்கா வெற்றிகரமாகத் தடுத்து வருகிறது. அண்மையில் (1983) சின்னஞ்சிறு கரிபியன் தீவு நாடான கிரானடாவில் கம்யூனிச ஆதரவு அரசு நிறுவப்பட்டபோது அமெரிக்கா பிற லத்தீன் அமெரிக்கா நாடுகளின் உ.தவியுடன் வன்முறையில் அவ்வரசை அகற்றியது குறிப்பிடத்தக்கது.

### 9.4.9 கியூபா நெருக்கடி

1959-ல் கியூபா அதிபரான பிடல் காஸ்ட்ரா தம் நாட்டு பொருளாதார நிலையைச் சீரமைக்க கம்யூனிஸ்ட் கொள்கைகளைக் கடைப்பிடித்தார். 1960-ல் முற்றிய முதலீடு நிறுவனங்களைத் தேசிய மயமாக்கினார். இதில் அமெரிக்க முதலாளிகள் பலர் பாதிக்கப்பட்டனர். அதனால் அமெரிக்க கியூபா உறவு சீர்கேடடைந்தது. காஸ்ட்ரோவின் ஆட்சியை வன்முறையில் கவிழ்க்க அமெரிக்க திரை மறைவு சதிவேலைகளைத் தொடங்கியது. அமெரிக்காவிற்கு தப்பியோடி வந்த கியூபானிய அகதிகளுக்குப் படையுதவி அளித்து அமெரிக்க உதவியுடன் கியூபாவில் இறங்கச் செய்து உள் நாட்டுப் போரை தொடங்கச் செய்த முயற்சி (பிக் வளைகுடா நிகழ்ச்சி 1961) தோல்வியில் முடிந்தது.

இந்நிகழ்ச்சி கியூபாவை ரஷியாப் பாதுகாப்பில் புகலிடம் தேடுமாறு செய்தது. லத்தீன் அமெரிக்காவில் காலூன்ற பல காலமாக முயன்ற ரஷியா விற்கு இது ஒரு நல்ல வாய்ப்பானது அந்நாட்டிற்கு ஏராளமான படைக்கலன்களை அனுப்பியது. மேலும் அங்கு ஏவுகணைத் தளங்களை ரஷியா ரகசியமாக நிறுவி வந்தது. அமெரிக்கா இதனை அறிந்ததும் அதிர்ச்சியுற்றது. தன் நாட்டிற்கு வெகு அருகில் ரஷியாப் படைதளங்கள் நிறுவப்பட அனுமதிப்பது தனது பாதுகாப்பிற்கு ஆபத்து எனக் கருதியது. அப்போது அதிபராக இருந்த ஜான்கென்னடி எவ்வகையிலும் இத்தளங்களை நிறுவ முடியாதபடிச் செய்ய உறுதி பூண்டார். எனவே ஏவுகணைக் கருவிகளை கொண்டு வரும் ரஷியக் கப்பல்களைத் தடுப்பதற்கு கியூபா மீது கடல் முற்றுகை விதித்து ஆணை பிறப்பித்தார். இதன்படி கியூபாவிற்கு வரும் அனைத்துக் கப்பல்களும் சோதிக்கப்படும். அதில் அணு ஏவுகணைக் கருவிகள் இருந்தால் திருப்பியனுப் பப்படும் இல்லையேல் மூழ்கடிக்கப்படும் என அறிவிக்கப்பட்டது. ‘‘கடல் வெளிகளில் சுதந்திரம் வேண்டும்““ என்று கூறிய உட்ரோ வில்சனின் அமெரிக்கா இப்போது அதனை மீறியது. தனது பாதுகாப்பிற்கு ஆபத்து என்ற நிலை வந்ததும் சர்வதேச நியதிகளை

வல்லரசுகள் எவ்வாறு மீறுகின்றன என்பதற்கு இது தகுந்ததோர் எடுத்துக்காட்டு. அமெரிக்காவின் கடல் முற்றுகை ஆணை ரஷியாவிற்கு நேரடி அறைகூவலாக இருந்தது. எளிதில் அந்த சமயத்தில் ஒன்பது ரஷியக் கப்பல்கள் ஏவுகணைக் கருவிகளைச் கியூபாவிற்கு சுமந்து வந்து கொண்டிருந்தன. கெடுபிடிப்போரில் இப்போது இரு வல்லரசுகளும் நேரடியாக மோதிக் கொள்ளும் சூழ்நிலை தோன்றியது. இது அப்போரின் உச்சகட்டமாகக் கருதப்படுகிறது. எந்த நிமிடத்திலும் வல்லரசுகளிடம் மோதல் ஏற்பட்டு அணு ஆயுதப் போர் மூண்டுவிடும் அபாயம் தோன்றியது.

ஆனால் நல்ல வேளையாக அமெரிக்கா உறுதியினைக் கண்ட ரஷ்யா பிரதமர் குருஷேவ் சற்றுப் பின் வாங்கினார். அந்த ஒன்பது ரஷ்யக் கப்பல்களும் வேறிடங்களுக்குத் தானாகத் திரும்பிச் சென்றன. உலகம் நிம்மதிப் பெருமூச்சு விட்டது. அதனைத் தொடர்ந்து கியூபாவை தாக்க மாட்டோம் என அமெரிக்கா உறுதியளித்தால் அங்குள்ள ஏவுகணைகளை அகற்றி விடுவதாக குருஷேவ் அறிவித்தார். அத்தகைய உறுதி மொழியை அமெரிக்கா அளித்ததும் ஏவுகணைத்தளங்களும் அகற்றப்பட்டன. கியூபா நெருக்கடி தீர்ந்தது. ஆனால் கியூபா ரஷ்யா ஆதரவாளராகப் பன்னாட்டரசியலில் தீவிரப் பங்கு பெறத் தொடங்கியது.

| **உங்கள் முன்னேற்றத்தைச் சரிபார்க்கவும்** |
|---|
| 3. யு - 2 நிகழ்ச்சி என்றால் என்ன? |
| 2. மத்தியகிழக்குப் பாதுகாப்பு ஒப்பந்தம் குறிப்பு வரைக? |
| 4. தென் கிழக்கு ஆசியப் பாதுகாப்பு ஒப்பந்தம் என்றால் என்ன? |

## 9.6 உங்கள் முன்னேற்றத்தைச் சோதிக்கும் வினாக்களுக்கான விடைகள்

- ரஷியா, அமெரிக்க நாடுகளிடையே பழையகருத்து வேறுபாடுகளும் ஐயப்பாடுகளும் தலைதூக்கின. போருக்குப் பின் அவ்விரு நாடுகள் மட்டும் தான் வலிமை மிகுந்து விளங்கின. எனவே அந்நாடுகள் உலகளாவிய ஆதிக்கப்போட்டியில் இறங்கின. இருவரும் தங்களின் அரசியல் கோட்பாடுகளே சிறந்தது, அவற்றையே உலக நாடுகள் அனைத்தும் ஏற்றுக் கொள்ளவேண்டும் எனப் பேராசைப்பட்டன.

- நேட்டோவிற்குப் பதிலடியாக ரஷியா வார்சா ஒப்பந்தத்தை உருவாக்கியது. இதில் ரஷியாவும் பிற கிழக்கு ஐரோப்பிய கம்யூனிஸ்ட் நாடுகளும் (யூகோஸ்லாவியா நீங்கலாக) இணைந்திருந்தன. இவ்வாறு ஐரோப்பா மீண்டும் இரு ராணுவ முகாம்களாகப் பிளவு பட்டது. அதனால் பதட்ட நிலை மேலும் அதிகரித்தது.
- 1960- மேயில் அமெரிக்க வேவு வியானம் யு-2 ரஷியா மீது பறந்த போது சுட்டு வீழ்த்தப்பட்டது. அதன் விமானி பிரான்சிஸ் பவர்ஸ் என்பவர் உயிருடன் பிடிக்கப்பட்டார். அவரிடமிருந்து பெறப்பட்ட வாக்குமூலத்திலிருந்து அமெரிக்கா ரஷியாவின் படை நிலைகளை எவ்வாறு ஒற்றறிந்து வருகிறது என்பது பற்றிய விரிவான தகவல் பெறப்பட்டது. ஒருவாரத்திற்குப் பின் பாரிசில் உச்சக்கட்ட மாநாடு தொடங்கியபோது குருஷேவ் யு-2 நிகழ்ச்சி பற்றிக்குறிப்பிட்டு அதற்கு அமெரிக்கக் குடியரசுத்தலைவர் ஐசன் ஹோவர் மன்னிப்புக் கேட்க வேண்டும் எனக்கோரினார்.
- எண்ணை வளமிக்க மத்திய கிழக்கிலிருந்து இரண்டாம் உலகப் போருக்குப்பின் பிரஞ்சு, பிரிட்டிஷ் ஏகாதிபத்தியங்கள் வெளியேறியபின் அங்கு ஏற்பட்ட ஆதிக்க வெற்றிடத்தை நிரப்ப

அமெரிக்கா அங்கு நுழைந்தது. 1955-ல் மத்திய கிழக்குப் பாதுகாப்பு ஒப்பந்தம் ஒன்று நிறைவேற்றப்பட்டது.

- தென்கிழக்கு ஆசியாவில் கம்யூனிசம் வேகமாகப் பரவி வருவதைக் கண்டஞ்சிய அமெரிக்கா அதனைத் தடுத்து நிறுத்த சுதந்திர நாடுகளுக்குப் படை உதவி அளிக்கும், நோக்குடன் தென் கிழக்கு ஆசியப்பாதுகாப்பு ஒப்பந்தத்தை ஏற்படுத்தியது.

## 9.7 சுருக்கவுரை

கெடுபிடிப்போர் நின்று விட்டதா என்பதில் கருத்து வேறுபாடுகள் இருக்கின்றன. ஆனால் கெடுபிடிப்போரின் கடுமையும், அதனால் உண்டான பதட்டநிலையும் வெகுவாகத் தணிந்து உள்ளன என்பதில் இருவிதக் கருத்துக்களுக்கு இடமிருக்க முடியாது. இரும்புத்திரை, மூங்கில் திரைகளெல்லாம் விலகி விட்டன. சமாதான சுகவாழ்வுக் கோட்பாடு வலுபெற்று வருகிறது. எனினும் உண்மையில் நடைபெற்ற ஒன்றிரண்டு நிகழ்ச்சிகள் கெடுபிடிபோர்க் கால உணர்வுகளை நினைவிற்குக் கொண்டு வருகின்றன. ஆப்கானிஸ்தானத்தில் ஓர் பொம்மை அரசை உருவாக்கி அங்கு 80000 ரஷியப் படைகளை நிறுத்தி வைத்திருப்பது ரஷியாவின் ஆதிக்க மனப்பான்மை இன்னமும் அழிந்துவிட வில்லை என்பதையே சுட்டிக்காட்டுகிறது. அதுபோல் கிரனடா அரசை வன்முறையில் அமெரிக்கா அகற்றியது. அதன் ஆதிக்க மனப்பான்மை இன்னும் மறையவில்லை என்பதை எடுத்துக்காட்டுகிறது. இன்னமும் மேற்கு ஐரோப் டாவில் புதிய ஏவுகணைத் தளங்களை அமெரிக்கா நிறுவிக் கொண்டிருக்கிறது. இரு வல்லரசுகளும் பெர்ஷிங்-1, எஸ்.எஸ், 20- என்ற பயங்கர ஏவுகணைகளைத் தயாரித்து உள்ளன. எனினும் இன்னமும் படைக்குறைப் பிற்கான பேச்சு வர்த்தைகள் நடைபெற்றுக்கொண்டுதான் வருகின்றன. நல்லுணர்வுகளும் மனிதாபிமான உணவுகளும் வல்லரசுத் தலைவர்களிடம் இருக்கும்வரை இன்னொரு உலகப் போர் மீளாது என்று திடமாக நம்பலாம் என்பது இவ்வியலின் சுருக்கவுரையாக அமைகின்றது

## 9.8 முக்கிய வார்த்தைகள்

ட்ருமன் கொள்கை மார்ஷல் திட்டம நேட்டோ பாதுகாப்பு ஒப்பந்தம் வார்சா ஒப்பந்தம்:- ஆசியப்பாதுகாப்பு ஒப்பந்தம் மத்தியகிழக்குப் பாதுகாப்பு ஒப்பந்தம் யு - 2 நிகழ்ச்சி வார்சா ஒப்பந்தம வார்சா ஒப்பந்தம்

## 9.9 சுயமதிப்பீடு வினாக்கள் மற்றும் பயிற்சிகள்

**சுருக்கமான கேள்விப் பதில்கள்**

1. மார்சல் திட்டத்தைப் பற்றி ஒரு சிறு குறிப்பு வரைக?
2. சூயஸ்கால்வாய் பிரச்சினையை மதிப்பிடுக?
3. தூரக்கிழக்கு நாடுகளின் கெடுபிடிப் போரைப் பற்றி சுருக்கமாக விளக்குக?

**விரிவான கேள்விப் பதில்கள்**

1. கெடுபிடிப்போர் உருவாவதற்கான காரணங்களைக் கட்டுரை வரைக?
2. சர்வதேச நாடுகளில் கெடுபிடிப்போரின் பங்கினை திறனாய்வு செய்க?

## 9.10 மேலும் படிக்க


- Hill, N.L.( 1963). ***International Politics.*** New York. Harper and Row publishers.

- *Baylis, J., Smith, S. & Owens, P. (2008). International History 1900-90. The*
- *Globalzation of World Politics, An Introduction to International Relations. Oxford and Newyork: Oxford University Press.*
- *Bell, P.M.H., (2001). The world since 1945, and International History. New York. Oxford University Press Inc.*
- *Mcmahon, R.J. (2003). The Cold War, a Very Short Introduction. Oxford: Oxford University Press.*

# தொகுதி III கெடுபிடி போர்
# அலகு 10 நாடுகளுக்குகிடையிலான போட்டிகள்

10.0 அறிமுகம்
10.1 நோக்கங்கள்
10.2 நாடுகளுக்குகிடையிலான போட்டிகள்
10.3 கெடுபிடி போரின் முடிவு
10.4 சோவியத் ஒன்றியத்தின் சரிவு
10.5 உங்கள் முன்னேற்றத்தை சோதிக்கும் வினாகக்ள்
10.6 சுருக்கவுரை
10.7 முக்கிய வார்த்தைகள்
10.8 சுய மதிப்பீடு வினாக்கள் மற்றும் பயிற்சிகள்
10.9 மேலும் படிக்க

## 10.0 அறிமுகம்

ஐரோப்பாவில் முதுபெரும் வல்லரசு களாக இருந்த பிரிட்டனும் பிரான்சும், போருக்குப்பின் இரண்டாந்தர அரசுகளாகிவிட்டன் ஜெர்மனி, இத்தாலி ஆகிய அரசுகளும் அடியோடு அழிந்துபோயின. ரஷியா மட்டும் தான் ஐரோப்பாக் கண்டத்தில் வல்லரசாக எஞ்சி நின்றது. பிற நாடுகள் அனைத்தையும்விட வலிமை பெற்று விளங்கியதால் ஐரோப்பிய வல்லமைச் சமநிலை கெட்டுவிட்டது. இதனைச் சமன் செய்ய அமெரிக்கா ஐரோப்பிய அரசியல் அரங்கில் இறங்கியது. இது ரஷிய, அமெரிக்கா மோதலுக்கு வழிவகுத்தது. மூன்றாவதாக, ஏற்கனவே கூறியபடி கோட்பாட்டுவேறுபாடுகள் அவைகளிடையே போட்டி மனப்பான்மையை உண்டு பண்ணின, நான்காவதாக, பொருளாதார ஆதிக்கத் திட்டங்கள் பகைமையை அதிகரித்தன, முதலாளித்துவ நாடான அமெரிக்காதான் தன் உற்பத்திப் பொருட்களுக்கு உலகளாவிய சந்தை இருக்க வேண்டும் என்று விரும்பியது. இறுதியாக யார் பெரியவன், யார் உலகளாவிய ஆதிக்கம் பெறுவது, என்ற ஆதிக்க வெறி ஒன்றையொன்றை அழித்திடத்தூண்டியது. அதன் காரணமாகக் கெடுபிடிப்போர் தோன்றியது. இதற்குப் பின்பு நாடுகளுக்கிடையே போட்டிகள் ஏற்பட்டன.

## 10.1 நோக்கங்கள்

கெடுபிடிப் போருக்குப் பின்பு உலக நாடுகளில் ஏற்பட்ட பிரச்சினைகளைப் பற்றியும் போட்டிகளைப் பற்றியும் விளக்குவதாக அமையப்பெறுகின்றது

## 10.2 நாடுகளுக்குகிடையிலான போட்டிகள்

சோவியத் யூனியனுக்கு தெற்கேயும், பாகிஸ்தானுக்கு மேற்கேயும் உள்ள பகுதிகளை மேற்காசிய நாடுகள் என அழைக்கின்றோம். துருக்கியர் - கள் வாழும் துருக்கி, பாரசீகர்கள் வாழும் ஈரான், அரேபியர்கள் வாழும் ஈராக், எகிப்து, சவுதி அரேபியா, சிரியா, ஜார்டன் மற்ற அரேபிய நாடுகள் முகலிய நாடுகளைத்தான் மேற்காசிய நாடுகள் என அழைக்கின்றோம்.

குறிப்பு

**பிரிட்டிஷ் காப்பாட்சி : எகிப்து**

1914 டிசம்பர் 18ம் நாள் எகிப்தில் பிரிட்டிஷ் காப்பாட்சி அமைக்கப். பட்டது. பிரிட்டனை எதிர்த்த, துருக்கியை ஆதரித்த எகிப்து சுல்தான் இரண்டாம் அப்பாஸ் ஹில்மி பதவியிலிருந்து நீக்கப்பட்டான். பதிலாக அவனுடைய மாமன் இளவரசன் காருவல் ஜமுயசரயடஸ எகிப்து நாட்டுச் சுல்தானாக பதவியில் அமர்த்தப்பட்டான். எகிப்து நாட்டு அயல் நாட்டு அலுவலகம் மூடப்பட்டது. பதிலாக இது சம்பந்தமாக ஓர் பிரிட்டிஷ் ஹை கமிஷனர் பதவியில் அமர்த்தப்பட்டார். 1922 ஆம் ஆண்டு பிரிட்டிஷ் காப்பாட்சி எகிப்தில் முடிந்தது. எகிப்து சுதந்திர நாடாக மாறியது. பாராளு மன்ற அமைப்புள்ள, பொம்பை அரசுடன் இணைந்த நிர்வாக அமைப்பு அமைக்கப்படவேண்டும் என தீர்மானிக்கப்பட்டது. பிரிட்டிஷ் ஹை கமிஷனர் அலுவலகம் தொடர்ந்து செயல்பட்டது. சுல்தான் பாவுத் (Faud) எகிப்து நாட்டு அரசராக பணியேற்றான். இப்புதிய அரசு அமைப்பை தேசிய வாதிகளும், அரசரும் முழு மனதுடன் ஏற்றுக்கொள்ளவில்லை . மக்கள் உரிமைகளை பலவிதத்தில் இப்புதிய அரசியலமைப்பு பறித்தது. ஆகையால் அடிக்கடி கலகங்கள் தோன்றின. னாட்சியை (AUTONOMY] விரும்பினார். ஆகையால் 1953 இல் இவர் கைது செய்யப்பட்டார் பக்ஸிகுலாம் மொகமது ஜம்மு-காஷ்மீர் அரசுத் தலைவராக நியமிக்கப்பட்டார்.

இம்மாற்றங்களை விரும்பாத பாகிஸ்தான் ஐ.நா.சபையிடம் முறை யிட்டது. இருபடைகளும் ஜம்மு-காஷ்மீரிலிருந்து வெளியேற வேண்டும், ஐ.நா.படை இப்பகுதியில் நிறுத்தப்படவேண்டும், பிறகு காஷ்மீர் மக்கள் வாக்கெடுப்பு எடுக்கவேண்டும் என பாகிஸ்தான் கூறியது. ஐ.நா.சபையும் இக்கருத்துகளை கொண்ட தீர்மானத்தை விவாதித்தன. சோவியத் யூனியன் இதை எதிர்த்து, இந்தியாவை ஆதரித்து தன் மறுப்புவாக்கை பயன்படுத்தி ஐ.நா. தீர்மானத்தை தோற்கடித்தது.

இனி வாக்கெடுப்பு (Plebiscite) புதிய சூழ்நிலையில் செல்லுபடி யாகாது, 1957 இல் காஷ்மீர் மக்கள் பொதுத்தேர்தலில் பக்ஸிகுலாம் முகமதை தேர்ந்தெடுத்து காஷ்மீர் இந்தியாவுடன் இணைக்கப்பட வேண்டும் என தீர்ப்பு கூறிவிட்டார்கள் என நேரு கூறினார். இவ்விரு நாடுகளிடையே இச்சிக்கல் இருந்த போதிலும் 1960 செப்டம்பர் 19ம் நாள் சிந்து தண்ணீர் உடன்படிக்கை (Indus Water Treaty) செய்துகொண்டனர். பேச்சுவார்த்தை தொடர்ந்து நடந்தது. இனி வாக்கெடுப்பு செல்லுபடியாகாது என இந்தியா முடிவாக கூறிவிட்டது. காஷ்மீரை பிரிப்பதைப் பற்றியும் பேச்சு நடந்தது. சீனாப் பள்ளத்தாக்கை (Chenab Valley) பாக்கிஸ்தான் கேட்டது. ஆனால் தற்போது செயல்பட்டு வரும் எல்லைக் கோட்டை சிறிதளவு மட்டும் மாற்றம் தான் இந்தியா விரும்பியது.

1964 டிசம்பரில் காஷ்மீர் சம்பந்தமான தேர்தல் சட்டத்தை மாற்றி, மற்ற எல்லா மாநிலங்களைப்போல் செயல்பட செய்யவேண்டும் என இந்தியா அறிவித்தது. வங்காள எல்லையில் 1965 மார்ச் மாதம் எல்லைத் தகராறு ஏற்பட்டது. மேற்கு பாகிஸ்தானுக்கும் இந்தியாவுக்கும் சரியாக வரையறுக்கப்படாத எல்லையாக இருந்த ராண் ஆப்கட்சி (Rann of kutch) பகுதியில் ஏப்ரல் மாதம் இரு நாடுகளும் மோதின. காஷ்மீரை விடுதலை செய் என ஆஸாத் காஷ்மீர் போர் வீரர்கள் முழக்கமிட்டனர். ஆகையால் ஆகஸ்டில் மீண்டும் எல்லைத் தகராறு, இறுதியில் 1965 செப்டம்பர் போர் ஏற்பட்டது. பாகிஸ்தான் எல்லையை தாண்டி உள்ளே இந்திய படை வீரர்கள் சென்றார்கள்.

இந்தியா பாகிஸ்தானை போரை நிறுத்தும்படி ஐ. நா. பாதுகாப்பு சபை கேட்டுக் கொண்டது. இரு நாடுகளுக்கும் கொடுக்கும் படை உதவியை பிரிட்டன், அமெரிக்கா தற்காலிகமாக நிறுத்தியது. சீனா இந்தியாவை அச்சுறுத்தியது. சிக்கிம்மில் உள்ள சில பகுதிகளைவிட்டு இந்தியா வெளியேறாவிட்டால் ஆபத்து வரும் என சீனா அச்சுறுத்தியது. இறுதியில் ஐ.நா. பாதுகாப்பு சபை, சோவியத் யூனியன் உதவியுடன் செப்டம்பர் 22ம் நாள் சட்டப்படி போர் நிறுத்தப்பட்டது. இறுதியில் சோவியத்யூனியன் தலைவர் கோசிஜின் உதவியுடன் தாஸ்காண்டில் மாநாடு நடந்தது. இதன் பயனாக ஏற்பட்டது தான் தாஸ் காண்ட் உடன்படிக்கை 1949 இல் போர் நிறுத்திய எல்லைக்கோட்டிற்கு இருதரப்பினரும் பின்வாங்க வேண்டும் போர் பிரசாரம் நிறுத்தப்பட வேண்டும் பின்னால் காஷ்மீர் சம்பந்தமாக பேச்சு நடத்தப்படும் என இவ் வுடன்படிக்கையில் கூறப்பட்டது. பிறகு ஐ. நா. பார்வையாளர் குழவும் இப்பகுதியிலிருந்து வெளியேறியது. காஷ்மீரில் வாக்கெடுப்பு நடக்கவேண்டும் என மீண்டும் மீண்டும் பாகிஸ்தான் வலியுறுத்துகின்றது. இந்தியா இதை ஏற்றுக்கொள்ள மறுக்கின்றது.

## 10.3 கெடுபிடி போரின் முடிவு


கியூபா நெருக்கடி தீர்ந்தபின் கெடுபிடிப்போரின் கடுமை தணியத் தொடங்கியது. அதற்கு முதற் காரணம் ரஷ்யப் பிரதமர் குரு ஷேவின் ‘‘சமாதான சகவாழ்வுக் கொள்கை“ என்றால் அது மிகையன்று. அவரது நல்லெண்ண பயணங்கள் இரும்புத்திரையை அகற்றிவிட்டது என்றே கூறலாம். இரண்டாவதாக, வல்லரசுகளின் படைக்கலன் பெருக்கமும், தயார் நிலையும் போரின் விளைவுகள் எவ்வாறு இருக்கும் என்பதைத் தெளிவாக உணர்த்தின.

கொடிய அணு ஆயுதங்கள் மக்கள் இனத்தையும் பண்பாட்டையும், நாகரீகத்தையும் அடியோடு அழித்துவிடும் என்ற அச்சம் வல்லரசுகளில் சிந்தையில் ஒரு மூலையில் இன்னமும் உயிருடனிந்த மனிதாபிமான உணர்வுகளைத் தட்டியெழுப்பியது. இருதரப்பாருக்கும் முழுமையான அழிவினைத் தரவல்ல கொடிய போரினை தொடங்க இருவல்லரசுகளுமே தயங்கின. மூன்றாவதாக, பதட்ட நிலையைத் தணிக்க வேண்டும் என்ற உள்நோக்கத்து டன் 1963-ல் மாஸ்கோவிற்கும் வாஷிங்டனுக்கும் நேரடித் தொலைபேசித் தொடர்பு (Fict line) நிறுவப்பட்டது. 1966-ல் இரு நகரங்களுக்கிடையில் நேரடி விமானத் தொடர்பும் ஏற்படுத்தப்பட்டது. நான்காவதாக, படைக்குறைப்பில் முதன் - முறையாக ஒரு முன்னேற்றமான முடிவை ஒருமானதாக எடுத்தனர். 1963ல் அணு ஆயுதச் சோதனைத்தடை ஒப்பந்தம் (Test-ban: Treaty) கையெழுத்தானது. நான்காவதாக, வல்லரசுகளின் முகாம்களுக்குள் பூசல்கள் ஏற்பட்டன பிரான்சின் அதிபரான டிகால் பன்னாட்டுறவுகளில் கண்முடித்தனமாக அமெரிக்காவைப் பின்பற்றுவதை வெறுத்தார். அத்துடன் அது ஐரோப்பிய விவகாரங்களில் அளவிற்கு மீறித் தலையிடுவதாக எண்ணினர்.

நேட்டோ இனித் தேவையில்லை என்றும் நம்பினார். அதன் காரணமாக 1966-ல் அவர் நேட்டோ படைப்பிரிவிலிருந்து பிரஞ்சுப்படைகளை விலக்கிக் கொண்டார். மறு ஆண்டில் நோட்டோவின் தலைமையகம் பாரிசிலிருந்து பிரஸ்ஸல்சுக்கு மாற்றப்பட்டது: அதுபோல் ரஷ்ய கம்யூனிச முகாமிலும் பிளவுகள் ஏற்பட்டன. மாசேதுங்கின் சீனா மாஸ்கோவின் தலைமையைப் புறக்கணித்தது. போல்ஷ்விக் கொள்கைகளுக்குப் புது விளக்கம் கொடுத்தது ரஷ்யாவின் போக்கைக் கண்டித்தது. எல்லாவற்றிலும் மேலாக இரு நாடுகளுக்குமிடையில் எல்லைத் தகராறு ஏற்பட்டு மோதல்

**குறிப்பு**

ஏற்படும் நிலை தோன்றியது. இந்த ரஷ்ய சீனப் பிளவு உலகக் கம்யூனிச இயக்கத்தையே இரண்டாகப் பிளந்துவிட்டது கிழக்கு ஐரோப்பிய நாடான அல்பேனியா கூட ரஷ்ய தலைமையைப் புறக்கணிக்கத் துணிந்தது. ஐந்தாவதாக, குருஷேவ் தொடங்கி வைத்த நல்லெண்ணப் பயணங்கள் தொடர்ந்து நடைபெற்றன. 1967-ல் ரஷ்யப் பிரதமர் கோசிஜின் அமெரிக்காவிற்கு வருகைபுரிந்தார். 1972-ல் அமெரிக்க அதிபர் நிக்சன் மாஸ்கோவிற்கு வருகை புரிந்தார். மறு ஆண்டில் ரஷ்யத்தலைவர் பிரஷ்னவ் அமெரிக்கா வந்தார். இந்த நல்லெண்ணப் பயணங்கள் பகைமையைக் குறைத்துப் பரஸ்பரப் பேச்சு வார்த்தைகள் மூலம் பிரச்சினைகளைத் தீர்க்க வகை செய்தது. ஆறாவதாக, படைக்குறைப்பு பற்றி வல்லரசுகளிடை கருத்தொற்றுமை ஏற்பட்டது. அதன் விளைவாக 1966-ல் அணு ஆயுதப் பரவல் தடை ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டது. 1972-ல் பயங்கர அணு ஆயுதங்களின் உற்பத்தியைத் தடைசெய்யும் ஒப்பந்தம் (Strategic Arms Limitation Treaty (SALT) கையெழுத்தானது. 1979-ல் இது மீண்டும் புதுப் பிக்கப்பட்டது. (SALT II).ஏழுவதாக, ஐ.நா சபை கெடுபிடிப்போரின் கடுமையைத் தணிப்பதில் பெரும்பங்கு பெற்றுள்ளன. ஐ நா சபையில் நடைபெற்ற விவாதங்கள் ஒருவர் கருத்தையும் நிலையையும் மற்றவர் புரிந்துகொள்ள வகை செய்தது. போர் நிறுத்த தீர்மானங்களை நிறைவேற்றி பிராந்தியப் பேர்கள் பெரும் போராக மாறாதபடி பார்த்துக்கொண்டது.




வல்லரசுகளின் அத்துமீறிய செயல்களை துணிந்து கண்டித்தது. இந்த கண்டனம் தார்மீக விளைவுகளை உண்டு பண்ணியது என்பதை மறுக்கமுடியாது. 1956-ல் ரஷியா ஹங்கேரியில் தலையிட்டதையும், அதே ஆண்டில் பிரிட்டனும் பிரான்சும் எகிப்தின்மீது தாக்குதல் கொடுத்ததையும் ஐ. நா. சபை கண்டித்தது குறிப்பிடத் தக்கது. இறுதியாக, கூட்டுச்சேரா நாடுகளின் இயக்கத்தினர் வளர்ச்சி வல்லரசுகளின் இரு துருவ அரசியல் வேறுபாடுகளுக்கு எதிராக அமைந்தது. 1961-ல் 25 நாடுகளைக் கொண்ட அவ்வியக்கம் தற்போது 101 நாடுகளைக் கொண்ட வலியதொரு அணியாக வளர்ச்சி பெற்றுள்ளது. இது வல்லரசுகளின் ராணுவக் கட்டுக்களுக்கு எதிரானது என்பது குறிப்பிடத்தக்கது. ராணுவக் கூட்டுகளில் சேர்ந்த நாடுகள் கூட அதிலிருந்து விலகி கூட்டுசேரா அணியில் சேர்ந்து வருகின்றன. இவை ராணுவக் கூட்டுகளின் முக்கியத்து வத்தை வசவாகக் குறைத்துவிட்டது.

## 10.4 .சோவியத் யூனியன் சிதைவு

சோவியத் யூனியன் பதினைந்து குடியரசுகளைக் கொண்ட மிகப்பெரிய நாடாக விளங்கியது. 1917-ம் ஆண்டுக்குப்பிறகு அங்கு கம்யூனிச அரசாங்கம் செயல்பட்டு வந்தது. 1989,1990-ம் வருடங்களில் கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் பரவிய சுதந்திர, ஜனநாயக இயக்கங்கள் சோவியத் யூனியனிலிருந்து குடியரசுகள் ஒன்றன்பின் ஒன்றாக சுதந்திரம் அடைந்தன. சோவியத்யூனியன் உடையாமலிருக்க அதன் அதிபராக இருந்த மைக்கேல் கோர்பசேவ் எடுத்த முயற்சிகள் அனைத்தும் வீணாகி விட்டன. சோவியத்யூனியன் உடைந்து சிதறியது. இந்த நிதழ்ச்சி ஐரோப்பிய வரலாற்றில் மட்டுமல்லாது உலக வரலாற்றிலும் மிக முக்கியமான நிகழ்ச்சி

*Self-Instructional Material*

யாகக் கருதப்படுகிறது. உலக அரசியலில் பெரும் மாற்றங்களை ஏற்படுத்தியது.

**(a)சோவியத் யூனியன் உருவான வரலாறு**

1917-ம் வருட அக்டோபர் புரட்சிக்குப்பிறகு ரஷ்யாவில் லெனின் தலைமையிலான கம்யூனிச அரசு அமைக்கப்பட்டது. 1924 ஜனவரி 21-ல் . லெனின் இறந்த பிறகு ஜோசப் ஸ்டாலின் பதவிக்கு வந்தார். இவர் தனது - எதிரிகளையெல்லாம் அரசியலிலிருந்து வெளியேற்றினார். கம்யூனிசக் கட்சியிலும், ராணுவத்திலும், சமுதாயத் திலும் தனது எதிரிகளை களை யெடுத்தார். தனிமனத. துதிக்கு வழிவகுத்தார;. K.G.B என்ற உளவு படை உதவியுடன் பல பயங்கர நடவடிக்கைகளை மேற்கொண்டார். இவரது காலத்தில் தான். சோவியத் யூனியனுடன் பதினைந்து குடியரசுகளும் . கட்டாயமாக இணைக்கப் பட்டது. வலிமை மிகுந்த செஞ்சேனையின் உதவியுடன் சோவியத் யூனியனை உருவாக்கினார் ஸ்டாலின். இவ்வாறு உருவாக்கப்பட்ட சோவியத் யூனியனில் 16 குடியரசுகள் இருந்தன. அவை வருமாறு : ரஷ்யா, உக்ரைன், பைலோ. ரஷ்யா, மோல் டேவியா, கசக்கஸ்தான், உஸ்பெக்கிஸ்தான், கிர்ஜியா, டர்க்மேனிஸ்தான், ஆர்மீனியா, ஜார்ஜியா, அஜர்பைஜான் ஆகியவை ஆகும்.

**(b)ஸ்டாலின் காலத்திற்குப் பிறகு சோவியத்யூனியனின் வரலாறு**

வலிமை மிகுந்த சோவியத் யூனியனை உருவாக்கி உலக அரங்கில் அதற்கு நிலையான இடத்தைப் பெற்றுக் கொடுத்தவர் ஸ்டாலின் . 1953 மார்ச் 5-ல் இறந்தார் ஸ்டாலின். அவருக்குப்பிறகு முறையே ஜார்ஜ்மெலங்கோவ் (1953-1955), நிக்கோலாய் பல்கானின் (1955-58), குருசேவ் (1958-64) ஆகியோர் ஆட்சி புரிந்தனர். குருசேவ் ஆட்சிக் காலத்தில் தான் சோவியத் யூனியனின் வரலாற்றில் மாற்றம் ஏற்பட்டது. இதுவரை சோவியத் யூனியனுக்கும் பிற வெளிநாடுகளுக்குமிடையே எவ்விதத் தொடர்பும் இல்லாமல் இருந்தது. எனவே “இரும்புத்திரை“ நாடு என்று அழைக்கப்பட்டது. ஆனால் குருசேவ்தான் முதன் முதலாக வெளி உலகத் தலைவர்களுடன் தொடர்பு கொண்ட சோவியத் அதிபர் ஆவார்.

குருசேவுக்குப் பிறகு பிரஷ்னேவ் (1964-1982) சோவியத் யூனியனின் அதிபரானார். இவரது காலத்தில் தான் அமெரிக்காவுக்கும் சோவியத் யூனியனுக்குமிடையே கெடுபிடிப்போர் அதிகமானது. கம்யூனிசக் கொள்கைகள் வெளிநாடுகளில் பரப்பப்பட்டது. சோவியத் ஆதரவுடன் ஆப்பிரிக்கா, ஆப்கானிஸ்தானம், லத்தீன், அமெரிக்கா ஆகிய நாடுகளில் விடுதலைப் போர்களுக்கு ஊக்கம் அளிக்கப்பட்டது. சீனாவுடன் கொள்கை ரீதியான மோதல் ஏற்பட்டது. கம்யூனிசக் கொள்கைகள் வெளிநாடுகளில் அதிக அளவில் பரப்பப்பட்டாலும் உள்நாட்டில் விவசாயம் மற்றும் தொழிற் துறையில் மந்தநிலை ஏற்பட்டது. இவர் காலத்தில் தான் சோவியத் யூனியன் ஆப்கானிஸ்தான் விவகாரத்தில் தலையிட்டு சர்வதேச சிக்கலில் மாட்டிக் கொண்டது.

**(c)கோர்பசேவின் கொள்கைகள்**

கோர்ப்பசேவ் பதவி ஏற்றதும் சோவியத் சமுதாயத்திலும் பொருளாதாரத்திலும் வெளி உறவிலும் தீவிரமான மாறுதல்களைக் கொண்டு வந்தார். உள்நாட்டில் சீர்திருத்தங்களையும், வெளிநாட்டில் வெளிப்படையான கொள்கைகளையும் நடைமுறைப்படுத்தினர். சோவியத் யூனியனில் இதுவரை காணப்பட்ட தேக்க நிலைக்கு 18 ஆண்டு கால பிரஷ்னேவின் ஆட்சியே காரணம் என்று சாடினார். கம்யூனிசக் கட்சியில்

**குறிப்பு**

பழைமைவாதக் கொள்கைகளைப் பின்பற்றுபவர் களைக் களையெடுத்தார். கட்சி நிர்வாகக் குழுவில் போரிஸ் எல்ட்சின் போன்ற புதியவர்களை நியமித்தார். அரசியல் கைதிகளை விடுதலை செய்தார். மத சுதந்திரம் பற்றிய பொது வாக்குவாதம் செய்ய அனுமதித்தார். எழுபது ஆண்டுகளுக்குப் பிறகு சோவியத் மக்கள் வெளிநாடு சென்றுவர அனுமதித்தார். கம்யூனிசக் கட்சியின் ஆதிக்கத்தை ஒழிக்க பல வேட்பாளர் களைக் கொண்ட கட்சி தேர்தலை அறிமுகப்படுத்தினார். இதனால் பல மூத்த கம்யூனிசத் தலைவர்கள் தோல்வியடைந்தனர். இவ்வாறு பல சீர்த்திருத் தங்களைப்புகுத்தினார்.

வெளிநாட்டுக் கொள்கையிலும் வெளிப்படையான கொள்கை களைப் பின்பற்றினார். 1985-ல் கோர்பசேவ் அதிபரான போது எட்வர்ட் ஷெவர்நாட்சே (நுனறயசன ளூநளநசனயெனணந) என்பவர் வெளிஉறவு அமைச்சராக நியமிக்கப்பட்டார், இவர் பதவி வகித்த 4.5 ஆண்டு காலங்களில் கெடுபிடிப்போரிலிருந்து ரஷ்யாவை முழுவதுமாக விலக்கி மேற்கத்திய நாடுகளுடன் ஒரு நட்புறவை ஏற்படுத்தினார். மோதல் போக்கை சோவியத்யூனியன் கைவிடும் நிலையை உறுதிபட தெளிவுபடுத்தினார். கியுபாவுக்கு உதவியளிப்பது நிறுத்தப்பட்டது. எத்தியோப்பியா, அங்கோலா ஆகிய நாடுகளில் நடந்து வந்த விடுதலை இயக்கப் போர்களுக்கு ஆதரவளிப்பது நிறுத்தப்பட்டது. ஆப்கானிஸ்தானத்திலிருந்து ரஷ்யப் படைகள் விலக்கப்பட்டன.

1989-ல் கிழக்கு ஐரோப்பாவில் கம்யூனிச எதிர்ப்பு அலை ஏற்பட்டது. 1989-அக்டோபரில் பெர்லின் சுவர் திறக்கப்பட்டது. அதன் விளைவாக 1990 அக்டோபரில் வெளிஉறவு அமைச்சர் ஷெவர்நாட்சே ராஜினாமா செய்தார். அது கோர்பசேவுக்கு அதிர்ச்சியளித்தது. போகும் போது அவர் எச்சரிக்கை செய்தார். 'சோவியத்யூனியனின் எதிர்காலம் கேள்விக்குறியாக உள்ளது. எப்படிப்பட்டவர் பதவிக்கு வருவார் எப்படிப் பட்ட புதிய அரசியல் நிலைமை ஏற்படும் என்பதை யாரும் அறியார' என்று எச்சரிக்கை செய்துவிட்டு சென்றார். சோவியத் யூனியனின் சிதறல் சீக்கிரமாகவே ஆரம்பித்து விட்டது.

### (d)மூன்று குடியரசுகள் சுதந்திரமடைதல்

கோர்பசேவ் பின்பற்றிய சீர்திருத்தக் கொள்கைகளின் விளைவாக சோவியத் யூனியனே பலியாக ஆரம்பித்தது. 1991 மார்ச் 11ம் தேதி பால்டிக் குடியரசுகளில் ஒன்றான லிதுவேனியா முதன் முதலாக சுதந்திரப் பிரகடனம் செய்து சோவியத் யூனியனிலிருந்து பிரிந்தது. அதைத் தொடர்ந்து லாட்வியா எஸ்தோனியா ஆகிய நாடுகளும் சுதந்திரப் பிரகடனம் செய்தன. பிரிந்து சென்ற இந்த குடியரசுகள் மீது சோவியத் யூனியன் என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறது என்று உலகமே உன்னிப்பாக கவனித்து வந்தது. ஆனால் எந்த அசம்பாவிதமும் நடக்கவில்லை .

கம்யூனிசப் படைகள் இந்தக் குடியரசுகள் மீது எவ்வித நடவடிக்கை களையும் மேற்கொள்ளவில்லை, மாறாக கோர்பசேவ் சுதந்திரமடைந்த பால்டிக் குடியரசுகளுடன் ஒரு ஒற்றுமை உடன்படிக்கை (Union Treaty) செய்து கொண்டு இந்த நாடுகளுக்கும் கிரம்ளினுக்குமிடையே புதிய உறவு முறைகளை வரையரை செய்தார். இந்த உடன்படிக்கை தேசிய வாக்கெடுப்பு மூலம் அங்கீகரிக்கப்பட்டது. இவ்வாறு சோவியத் யூனியனிலிருந்து மூன்று குடியரசுகள் பிரிந்து சுதந்திர நாடுகளாயின.

*Self-Instructional Material*

### (e)கோர்பசேவ் ஆட்சி கவிழ்க்கப்படுதல்

சோவியத் யூனியனின் சிதறல் ஆரம்பமாகிவிட்டது. நிலமை மேலும் மோசமடைய விடக்கூடாது என்று கோர்பசேவின் அரசியல் எதிரிகள் நினைத் தார்கள். இதற்கு ஒரே முடிவு கோர்பசேவைக் கவிழ்த்துவிட்டு சோவியத் யூனியன் உடையாமல் பாதுகாப்பது ஆகும் என்று முடிவு செய்தார்கள். எனவே 1991 ஆகஸ்ட் 18-ல் கோர்பசேவ் தனது குடும்பத்தினருடன் மாஸ்கோவிலிருந்து 900 கி.மீ தூரம் உள்ள கருங்கடல் பகுதியில் ஓய்வு எடுத்துக் கொண்டிருந்த போது ஜென்னடி யானயேவ் என்பவர் தலைமையில் அதிர்ப்தியாளர்கள் ஆட்சியைப் பிடித்தார்கள். கோர்பசேவ் கைது செய்யப்பட்டார்.

சோவியத்யூனியனில் அவசர நிலை பிரகடனம் செய்யப்பட்டது. ஆனால் 1991 ஜுன் மாதம் ரஷ்ய குடியரசின் அதிபராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட போரிஸ் எல்ட்சின். கோர்பசேவ் ஆரம்பித்து வைத்த சீர்திருத்தங்கள் வேகமாகவும், தடங்கல் இல்லாமலும் தொடர வேண்டு மானால் கோர்பசேவ் கவிழ்ப்பு முயற்சியை முறியடிக்க முடிவு செய்தார் எல்ட்சினுக்கு ஆதரவாக மாஸ்கோ மக்கள் திரண்டனர். பாராளுமன்ற கட்டிடத்தைச் சுற்றி ராணுவ டாங்குகள் அணி வகுத்து நின்றன. புதிய ஆட்சியாளர்கள் எடுக்கப் போகும் நடவடிக்கைகளை உலகமே பார்த்துக் கொண்டிருந்தது. உள்நாட்டுப்போர் மூளும் அபாயம் அதிகரித்தது. ஆனால் எதிர்பார்த்தபடி எதுவும் நடக்கவில்லை, ராணுவ விமான தளபதிகள் மக்கள் மீது ராணுவ நடவடிக்கை எடுக்க மறுத்து விட்டனர். கோர்பசேவின் சீர்திருத்தம் அவர்களிடமும் நல்லவேலை செய்தது. ஆட்சிக் கவிழ்ப்பாளர்கள் நிலமையைப் புரிந்து கொண்டு பின் வாங்கினார்கள். 1991 ஆகஸ்ட் 22-ல் கோர்பசேவ் மீண்டும் ஆட்சிக்குத் திரும்பினார்.

### (f)கம்யூனிசக் கட்சி கலைக்கப்படுதல்

கவிழ்ப்பு முயற்சியிலிருந்து மீண்டு வந்த கோர்பசேவ் கம்யூனிசக் கட்சியின் மீது கடும் அதிர்ப்தி கொண்டார். எதிர்ப்பாளர்கள் தன்னைக் கவிழ்த்த போது கட்சி தனக்கு ஆதரவளிக்கும் என்று கோர்பசேவ் எதிர் பார்த்தார். ஆனால் எந்த உதவியும் செய்யவில்லை. கோபமடைந்த கோர்பசேவ் ஆகஸ்ட் 24-ல் கட்சியின் பொதுச் செயலாளர் பதவியிலிருந்து விலகினார். கட்சியையே கலைத்துவிட விரும்பினார். தொழிற்சாலைகள், அலுவலகங்கள், ராணுவம், உளவுப் படை ஆகியவைகளிலிருந்த கம்யூனிசக் கட்சிக் கிளைகள் கலைக்கப் பட்டன. இதனால் கம்யூனிசக் கட்சி பலவீனமடைந்தது ரஷ்யர் களுக்கு விடிவு காலம் ஏற்பட வேண்டுமானால் கட்சி கலைக்கப்பட வேண்டும் என்பதில் உறுதியாக இருந்தார் கோர்பசேவ் கட்சியை ஒழித்துக்கட்டும் வேலையை தொடர்ந்து செய்து வந்தார்.

### (g)பொதுநல சுதந்திர நாடுகளின் அமைப்பு உருவாதல் : (CIS) (Commonwealth of Independent States)

இதற்கிடையில் சோவியத் யூனியனிலிருந்து பிரிந்து சென்ற பால்டிக் நாடுகளின் சுதந்திரத்தை 1991, செப். 2-ல் அமெரிக்கா அங்கீ கரித்தது. நான்கு நாட்களுக்குப் பிறகு சோவியத் யூனியனும் அங்கீகரித்தது. மீதி உள்ள 12 சோவியத் குடியரசுகளும் தங்களுக்குள் ஒரு பொருளாதார இணைவை (Economic Union) ஏற்படுத்திக் கொள்ள முடிவு செய்தன. ஆனால் இந்த இணைவில் எட்டு குடியரசுகள் மட்டுமே சேருவதற்கு சம்மதம் தெரிவித்து ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டன. மேலும் இந்தக் குடியரசுகள்

குறிப்பு

கொள்கை அளவில் அரசியல் ஒற்றுமையும் ஏற்படுத்திக் கொள்ள முடிவு செய்தன.

இதற்கிடையில் உக்ரைன் குடியரசு மக்கள் வாக்கெடுப்பு மூலம் (Referendum) சுதந்திரமடைய முடிவு செய்தது. ஆனால் கோர்பசேவ் இந்தக் குடியரசுகள் மீது எச்சரிக்கை விடுத்தார். மீதி உள்ள நான்கு குடியரசுகளும் அரசியல் ஒற்றுமையை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும் அல்லது அவை ஏழ்மையாலும் பாதுகாப்பு இன்மையாலும் ஒழிந்து போகும்" என்று எச்சரிக்கை செய்தார். ஆனால் 1991, டிசம்பர் 8-ம் தேதி ஸ்லாவிக் குடியரசுகளான ரஷ்யா , பைலோரஷ்யா, உக்ரைன் ஆகியவை ஒன்று சேர்ந்து சோவியத் யூனியன் செத்துவிட்டதாகவும், பொதுநல சுதந்திர நாடுகளின் அமைப்பு ஒன்றை அமைக்கப் போவதாகவும் அறிவித்தன. உண்மையில் இந்த மூன்று குடியரசு களும் தான் 1922-ல் சோவியத்யூனியன் அமைக்கப்பட்ட போது இருந்த ஆரம்பகால குடியரசுகளாகும். ரஷ்யக் குடியரசின் தலைவர் போரிஸ் எல்ட்சின் தனது முடிவை அமெரிக்க அதிபர் ஜார்ஜ்புஷ்ஷிடம் தெரிவித்தார். சோவியத் யூனியனின் எழுபது ஆண்டுகால வரலாறு முடியும் நேரம் நெருங்கிவிட்டது.

1991, டிசம்பர் 17-ம் தேதி போரிஸ் எல்ட்சினும், கோர்பசேவும் சேர்ந்து அந்த வருடக் கடைசியில் சோவியத் யூனியனைக் கலைத்து விடலாம் என்று முடிவு செய்தனர். டிசம்பர் 21-ம் தேதி மீதி இருந்த 12 குடியரசுகளில் ஜார்ஜியா தவிர மீதி 11 குடியரசுகள் கசகிஸ்கான் தலைநகர் அல்மாஅடா (Alma-Ata) வில் கூடின. இக்கூட்டத்தில்தான் பொதுநல சுதந்திர நாடுகளின் அமைப்பு உருவாக்கப்பட்டு கையெழுத்திடப்பட்டது. இதன் விளைவாக சோவியத் யூனியன் மறைந்தது, இல்லாத சோவியத் யூனியனுக்கு அதிபராக இருந்த கோர்பசேவ் டிசம்பர் 25-ம் தேதி ராஜினாமா செய்தார். தற்போது சோவியத்யூனியன் இல்லை சிதறிய குடியரசுகள் தனித்தனி நாடுகளாயின.

**உங்கள் முன்னேற்றத்தைச் சரிபார்க்கவும்**
10. சோவியத் யூனியனில் பதினாறு குடியரசுகள் யாவை?

## 10.6 உங்கள் முன்னேற்றத்தை சோதிக்கும் வினாகளுக்கான விடைகள்

சோவியத் யூனியனில் பதினாறு குடியரசுகள் இருந்தன. அவை வருமாறு : ரஷ்யா, உக்ரைன், பைலோ. ரஷ்யா, மோல் டேவியா, கசக்கஸ்தான், உஸ்பெக்கிஸ்தான், கிர்ஜியா, டர்க்மேனிஸ்தான், ஆர்மீனியா, ஜார்ஜியா, அஜர்பைஜான் ஆகியவை ஆகும்.

## 10.7 சுருக்கவுரை

கெடுபிடிப்போர் நின்று விட்டதா என்பதில் கருத்து வேறுபாடுகள் இருக்கின்றன. ஆனால் கெடுபிடிப்போரின் கடுமையும், அதனால் உண்டான பதட்டநிலையும் வெகுவாகத் தணிந்து உள்ளன என்பதில் இருவிதக் கருத்துக்களுக்கு இடமிருக்க முடியாது. இரும்புத்திரை, மூங்கில் திரைகளெல்லாம் விலகி விட்டன. சமாதான சுகவாழ்வுக் கோட்பாடு வலுபெற்று வருகிறது. எனினும் உண்மையில் நடைபெற்ற ஒன்றிரண்டு நிகழ்ச்சிகள் கெடுபிடிபோர்க் கால உணர்வுகளை நினைவிற்குக் கொண்டு வருகின்றன. ஆப்கானிஸ்தானத்தில் ஓர் பொம்மை அரசை உருவாக்கி அங்கு 80000 ரஷியப் படைகளை நிறுத்தி வைத்திருப்பது ரஷியாவின்

*Self-Instructional Material*

ஆதிக்க மனப்பான்மை இன்னமும் அழிந்துவிட வில்லை என்பதையே சுட்டிக்காட்டுகிறது. அதுபோல் கிரனடா அரசை வன்முறையில் அமெரிக்கா அகற்றியது. அதன் ஆதிக்க மனப்பான்மை இன்னும் மறையவில்லை என்பதை எடுத்துக்காட்டுகிறது. இன்னமும் மேற்கு ஐரோப் டாவில் புதிய ஏவுகணைத் தளங்களை அமெரிக்கா நிறுவிக் கொண்டிருக்கிறது. இரு வல்லரசுகளும் பெர்ஷிங்-1, எஸ்.எஸ், 20- என்ற பயங்கர ஏவுகணைகளைத் தயாரித்து உள்ளன. எனினும் இன்னமும் படைக்குறைப் பிற்கான பேச்சு வர்த்தைகள் நடைபெற்றுக்கொண்டுதான் வருகின்றன. நல்லுணர்வுகளும் மனிதாபிமான உணவுகளும் வல்லரசுத் தலைவர்களிடம் இருக்கும்வரை இன்னொரு உலகப் போர் மீளாது என்று திடமாக நம்பலாம்.

சோவியத் யூனியன் பதினைந்து குடியரசுகளைக் கொண்ட மிகப்பெரிய நாடாக விளங்கியது. 1917-ம் ஆண்டுக்குப்பிறகு அங்கு கம்யூனிச அரசாங்கம் செயல்பட்டு வந்தது. 1989,1990-ம் வருடங்களில் கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் பரவிய சுதந்திர, ஜனநாயக இயக்கங்கள் சோவியத் யூனியனிலிருந்து குடியரசுகள் ஒன்றன்பின் ஒன்றாக சுதந்திரம் அடைந்தன. சோவியத்யூனியன் உடையாமலிருக்க அதன் அதிபராக இருந்த மைக்கேல் கோர்பசேவ் எடுத்த முயற்சிகள் அனைத்தும் வீணாகி விட்டன. சோவியத்யூனியன் உடைந்து சிதறியது. இந்த நிதழ்ச்சி ஐரோப்பிய வரலாற்றில் மட்டுமல்லாது உலக வரலாற்றிலும் மிக முக்கியமான நிகழ்ச்சி யாகக் கருதப்படுகிறது. உலக அரசியலில் பெரும் மாற்றங்களை ஏற்படுத்தியது.

## 10.8 முக்கிய வார்த்தைகள்

நாடுகளுக்குகிடையிலான போட்டிகள் கெடுபிடி போரின் முடிவு சோவியத் ஒன்றியத்தின் சரிவு

## 10.9 சுய மதிப்பீடு வினாக்கள் மற்றும் பயிற்சிகள்

**சுருக்கமான கேள்விப் பதில்கள்**

1. உலக நாடுகளுக்குகிடையிலான போட்டிகள் பற்றி மதிப்படுக?
2. கெடுபிடி போரின் முடிவு பற்றி குறிப்பு வரைக?

**விரிவான கேள்விப் பதில்கள்**

1. சோவியத் ஒன்றியத்தின் சரிவு பற்றிக் கட்டுரை வரைக?

## 10.10 மேலும் படிக்க


- Fox, W. and Buzan, B. (1985). ***People, States, and Fear: The National Security Problem in International Relations.*** *International Journal.*
- King, L. (2017). ***The Origins Of The Cold War***. 1st ed. Los Angeles. University of California.
- Leeson, P. and Dean, A. (2009). ***The Democratic Domino Theory: An Empirical Investigation.*** *American Journal of Political Science.*

குறிப்பு


- Leffler, M. and Painter, D. (1994). ***Origins of the Cold war- a International history***. Park Square. Routledge.

# தொகுதி IV உலகமயமாதல்

# அலகு 11 ஜெர்மனியின் மறு இணைவு

11.0 அறிமுகம்
11.1 நோக்கங்கள்
11.2 ஜெர்மனியின் மறு இணைவு
11.2.1 இரண்டாம் உலகப்போருக்குப்பின் ஜெர்மனி
11.2.3 ஜெர்மானிய மறு இணைவின் பல்வேறு நிலைகள்
11.2.4 அரசியல் இணைவு
11.3 உலக வர்த்தக அமைப்பு
11.4 உலகமயமாதல்
11.5 யுனிபோலார் உலகின் கருத்து
11.4 உங்கள் முன்னேற்றத்தை சோதிக்கும் வினாக்
11.5 சுருக்கவுரை
11.6 முக்கிய வார்த்தைகள்
11.7 சுய மதிப்பீடு வினாக்கள் மற்றும் பயிற்சிகள்
11.8 மேலும் படிக்க

## 11.0 அறிமுகம்

பத்தொன்பதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் ஜெர்மனி சுமார் 360 சிறுசிறு நாடுகளைக் கொண்டிருந்தது. பிஸ்மார்க் தனது திறமையால் அந்த நாடுகளையெல்லாம் ஒன்றாக இணைத்து 1871-ல் ஐக்கிய ஜெர்மனியை உருவாக்கினார். ஐக்கியமடைந்த ஜெர்மனி 1871-ம் ஆண்டிலிருந்து 1914 வரை பின்பற்றிய கொள்கைகளால் முதல் உலகப்போர் ஏற்பட்டது. முதல் உலகப்போரில் ஜெர்மனி தோற்கடிக்கப்பட்டது. வெர்செயல்ஸ் உடன் படிக்கையின் மூலம் அது அரசியல், பொருளாதார, ராணுவ ரீதியாக முடமாக் கப்பட்டது. ஆனால் ஹிட்லரின் தலைமையில் மீண்டும் ஜெர்மனி எழுச்சி யடைந்தது. ஹிட்லர் தனது ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளால் இரண்டாம் உலகப் போருக்குக் காரணமானார். இரண்டாம் உலகப்போரிலும் ஜெர்மனி தோற்கடிக்கப்பட்டது. தோற்கடிக்கப்பட்ட ஜெர்மனி நான்கு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு இங்கிலாந்து, பிரான்ஸ், அமெரிக்கா, ரஷ்யா ஆகிய நாடுகளின் கட்டுப்பாட்டில் வைக்கப்பட்டது. ஆனால் அதன் பிறகு நடைபெற்ற பல நிகழ்ச்சியின் விளைவாக பிரிக்கப்பட்ட ஜெர்மனி 1991-ல் மீண்டும் ஒன்றாக இணைந்தது. இதுவே ஜெர்மானிய மறு இணைவாகும்.

## 11.1 நோக்கங்கள்

ஜெர்மனியின் மறு இணைவைப் பற்றியும் உலக வர்த்தக அமைப்பைப் பற்றியும் மற்றும் உலகமயமாதல் பற்றியும் யுனிபோலார் உலகின் கருத்துக்களையும் பின்வருமாறு விளக்கப்படுகின்றன

## 11.2 ஜெர்மானிய மறு இணைவு (Reunification of Germany)

ஐக்கியமடைந்த ஜெர்மனி 1871-ம் ஆண்டிலிருந்து 1914 வரை பின்பற்றிய கொள்கைகளால் முதல் உலகப்போர் ஏற்பட்டது. முதல் உலகப்போரில் ஜெர்மனி தோற்கடிக்கப்பட்டது. வெர்செயல்ஸ் உடன் படிக்கையின் மூலம் அது அரசியல், பொருளாதார, ராணுவ ரீதியாக முடமாக்கப்பட்டது. இதனை பின்வருமாறு விளக்கப்படுகின்றன.

குறிப்பு

### 11.2.1 இரண்டாம் உலகப்போருக்குப்பின் ஜெர்மனி

இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர் ஜெர்மனி நான்கு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டாலும், மேற்கத்திய நாடுகளின் கட்டுப்பாட்டில் உள்ள மூன்று பகுதிகள் ஒன்றாக இணைக்கப்பட்டு "ஜெர்மானியக் கூட்டாட்சிக் குடியரசு" என்றும், ரஷ்யாவின் கட்டுப்பாட்டிலுள்ள பகுதி "ஜெர்மன் ஜனநாயகக் குடியரசு" என்றும் தனித்தனி நாடுகளாயின. பெர்லினும், மேற்கு பெர்லின், கிழக்கு பெர்லின் என்று இரண்டாகப் பிரிக்கப் பட்டது. பெர்லின் நகரை நிரந்தரமாகப் பிரிக்கும் சுவர் 1961 ஆகஸ்ட் 13-ல் கட்ட ஆரம்பிக்கப்பட்டது. சுமார் 62 கி.மீ. நீளமுள்ள 210 கண்காணிப்புக் கோபுரங்களைக் கொண்ட உறுதியான சுவர்கட்டி முடிக்கப்பட்டது. கிழக்கு ஜெர்மனியிலும், கிழக்கு பெர்லினிலும் கம்யூனிச ஆட்சி அமைக்கப்பட்டு மக்களின் ஜனநாயக உரிமைகள் நசுக்கப்பட்டன. ஆனால் ஜெர்மனி தான் பிரிக்கப்பட்டதேயொழிய ஜெர்மானிய மக்களின் உணர்வுகளை நிரந்தர மாகப் பிரிக்க முடியவில்லை .

### 11.2.2 ஜெர்மானிய மறு இணைவிற்கான காரணங்கள்

#### (a) ரஷ்ய அதிபர் கோர்பசேவ் (Michiali Corbochev)

1985-ல் ரஷ்ய அதிபராகப் பதவி ஏற்ற கோர்பசேவ் பின்பற்றிய பெரஸ்த்ரோய்க்கா, கிளாஸ்நாஸ்ட் ஆகிய கொள்கைகளே ஜெர்மானிய மறு இணைவிற்கு அடிப்படைக் காரணம் என்பதை யாரும் மறுக்க முடியாது. 1985-லிருந்து கிழக்கு ஐரோப்பாவில் பரவிய ஜனநாயக இயக்கங்களை அவர் தடுக்க முயற்சி செய்யவில்லை . கிழக்கு ஜெர்மனியில் ஜனநாயகத் திற்கான போராட்டம் ஏற்பட்டபோது, அங்கு நிறுத்தி வைக்கப்பட்டிருந்த ஐந்து லட்சம் ரஷ்ய வீரர்களுக்கு, மக்களை நோக்கி ஒரு துப்பாக்கி குண்டு கூட சுடப்படக் கூடாது என்று உத்தர விட்டார். இவரது தாராளக் கொள்கைகளே ஜெர்மானிய மறு இணைவிற்கு ஒரு அடிப்படையைக் கொடுத்தது.

#### (b) பெர்லின் சுவரின் வீழ்ச்சி (Fall of Berlin wall)

கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் ஏற்பட்ட ஜனநாயக இயக்கம் கிழக்கு ஜெர்மனியிலும் பரவியது. கிழக்கு ஜெர்மானிய மக்களிடம் ஏற்பட்ட ஒற்றுமை உணர்ச்சியின் விளைவாக, எல்லாக் கட்டுப்பாடு களையும் மீறி மேற்கு ஜெர்மனிக்கு தரைமார்க்கமாக செல்ல ஆரம்பித்தனர். இதற்கு ஆதரவாக 1989 செப்டம்பர் 10-ம் தேதி ஹங்கேரி அரசு தனது எல்லைகளை திறந்து வைத்தது. கிழக்கு ஜெர்மானிய, கம்யூனிச ஆட்சியாளர் எரிக் ஹோனேகர; (Eric Honecker) என்பவரால் மக்களை தடுத்து நிறுத்த முடிய வில்லை .1989 நவம்பர் 9-ம் தேதி பெர்லின் சுவர் கட்டப்பட்ட 28 வருடத் தில் நொறுக்கப் பட்டது. பெர்லின் சுவரின் வீழ்ச்சியே "ஜெர்மானிய மறு இணைவின் ஆரம்பம்" என்று கருதலாம்.

### (c) கிழக்கு ஜெர்மனியில் நடைபெற்ற தேர்தல் :1990 மே

பெர்லின் சுவர் வீழ்ச்சிக்குப் பின்னர் கிழக்கு ஜெர்மனியில் கம்யூனிச அரசு ஆட்டம் கண்டது. எரிக்ஹோனேகர் டிஸ்மிஸ் செய்யப் பட்டார். லோதர் டெமாசிவ் (Lother Demazieve) என்பவர் தலைமையில் தாராள கருத்துக் களையுடைய கம்யூனிச அரசு அமைக்க பட்டது. 1990 மே மாதம் புதிய தேர்தல்கள் நடைபெறுவதற்கான அறிவிப்பு வெளியானது. சோஷியல் ஜனநாயகக் கட்சி உட்பட பல புதிய கட்சிகள் தோன்றி ஜெர்மானிய இணை விற்கு ஆதரவாக மக்களிடம் பிரச்சாரம் செய்து ஆதரவைப் பெற்றன. இந்தக் கட்சிகளுக்கு மக்கள் அளித்த ஆதரவு ஜெர்மானிய மறு இணைவிற்கு அளித்த ஒப்புதலாகவே கருதப்பட்டது.

### (d) ஹெல்முட் ஹோல் (Helmut Kohl)

மேற்கு ஜெர்மனியில் சான்சலராக இருந்த ஹெல்முட் ஹோல் "ஜெர்மானிய மறு இணைவின் சிற்பி" என்றே அழைக்கப்படலாம். இவர் கிழக்கு ஜெர்மனியில் ஏற்பட்ட மாற்றங்களை உன்னிப்பாக கவனித்து வந்தார். தங்களது அரசியல் சமுதாய நிறுவனங்களை ஜனநாயகப் படுத்தும் பணியில் ஈடுபட்டிருந்த கிழக்கு ஜெர்மனி மக்களுக்கு உறுதியான, தெளி வான வழிமுறைகளைக் காண்பித்தார். ஜெர்மானிய மறு இணைவிற்கான செயல் திட்டங்களை வகுத்துக் கொடுத்தார். 1989 நவம்பரில் ஜெர்மானிய மறு இணைவிற்கான பத்து அம்ச திட்டத்தை வெளியிட்டார். ஜெர்மானிய மறு இணைவு இவர் தலைமையில் தான் நடைபெற்றது. மறு இணைவிற்குப் பின் இவரே இணைக்கப்பட்ட ஜெர்மனியின் சான்சலராகப் பதவி ஏற்றார்.

## 11.2.3 .ஜெர்மானிய மறு இணைவின் பல்வேறு நிலைகள்

### (a)ஒட்டாவா மாநாடு :(Ottawa Conference), 1990, பிப்ரவரி

நாற்பத்தைந்து ஆண்டுகளாகப் பிரிந்து கிடந்த ஜெர்மனியை மீண்டும் இணைப்பதின் ஆரம்பமாக 1990 பிப்ரவரி மாதம் ஒட்டாவாவில் மாநாடு ஒன்று கூட்டப்பட்டது. இதில் அமெரிக்கா, சோவியத்யூனியன் மற்றும் நான்கு நாடுகள் கலந்து கொண்டன. பேச்சுவார்த்தைகளின் முடிவாக ஜெர்மானிய மறுஇணைவிற்கு 'இரு நிலைத்திட்டம்' ஒன்று உருவாக்கப்பட்டது. முதல் நிலையில், அரசியல், பொருளாதார, சட்ட சம்பந்தப்பட்ட இணைப்பிற்கு கிழக்கு, மேற்கு ஜெர்மனி நாடுகள் நேரடியாகச் சந்தித்துப் பேசிக்கொள்ள வேண்டும். இரண்டாவது நிலையில், கிழக்கு மேற்கு ஜெர்மனியின் வெளிஉறவு அமைச்சர்கள் 'ஜெர்மனியின் வெளி உறவு பற்றியும் பக்கத்து நாடுகளின் பாதுகாப்பு பற்றியும்' அமெரிக்கா, இங்கிலாந்து, பிரான்ஸ் சோவியத் யூனியன் ஆகிய நாடுகளின் வெளி உறவு அமைச்சர்களிடன் விவாதிக்க வேண்டும்.

குறிப்பு

### (b)பொருளாதார இணைவு (Economic Union)

1990, மே மாதம் மேற்கு, கிழக்கு ஜெர்மனியின் வெளி உறவு அமைச்சர்கள் ஹெல்முட் ஹோால் முன்னிலையில் நாணய மற்றும் பொருளாதார ஒற்றுமையை ஏற்படுத்தும் உடன்படிக்கையில் கையெழுத் திட்டனர். இதற்கிடையே கிழக்கு ஜெர்மனியில் நடைபெற்ற தேர்தலில் ஹெல்முட் ஹோலின் கட்சியான “சோஷியல் ஜனநாயகக் கட்சி“ வெற்றி பெறவே, 1990 ஜுலை 1-ம் தேதி, இரண்டு ஜெர்மனிகளின் நாணயமும் பொருளாதாரமும் இணைந்து விட்டதாக அறிவித்தார் ஹெல்முட் ஹோால். இதுவே ஜெர்மானிய மறு இணைவின் முதற்கட்டமாகும்.

### (c)பாரிசு மாநாடு:1990 ஜுலை

1871-ல் பிஸ்மார்க்கின் தலைமையில் ஜெர்மனி இணைந்த பின்னர்தான் உலக அமைதி அழிந்தது. விரும்பத்தகாத பல நிகழ்ச்சிகள் உலகத்தில் ஏற்பட்டன. ஜெர்மனி அரசியல் ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும் வலிமை பெற்ற போதெல்லாம் போர்கள் ஏற்பட்டுள்ளன. எனவே தான் மேற்கத்திய நாடுகள் இந்த ஜெர்மானிய மறு இணைவையும் சந்தேகத்துடனே பார்த்தன. எல்லா நாடுகளும் சேர்ந்து இணைக்கப்பட்ட ஜெர்மனியின் எதிர்காலத்தை நிர்ணயிக்க, பாரிசில் கூடி விவாதித்தன. அதன்படி முக்கியமான கீழ்க்கண்ட முடிவுகள் எடுக்கப்பட்டன.

- இணைக்கப்பட்ட ஜெர்மனி நேட்டோ உடன்படிக்கை நாடு களுடன் உறுப்பினராகச் சேர்ந்து கொள்ளவேண்டும்.
- மூன்று அல்லது நான்கு ஆண்டுகளுக்குள் கிழக்கு ஜெர்மனியில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள 3,80,000 சோவியத் வீரர்கள் - விலக்கிக் கொள்ளப்படுவார்கள்.
- நேட்டோ நாடுகளின் சார்பில் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கும் போர் வீரர்களின் எண்ணிக்கை 5,90,000 லிருந்து 3,70,000 ஆகக் குறைக்கப்படும்.
- ஜெர்மனி “ஓடர்-நெய்சி கோட்டை “ (ழுனநச-நேளைளந டஜைெ) போலந்துடன் கிழக்கு எல்லையாக அறிவிக்க வேண்டும்.
- இணைக்கப்பட்ட ஜெர்மனி அணு ஆயுதங்கள் மற்றும் ரசாயன ஆயுதங்களை உற்பத்தி செய்வதோ உபயோகிக்கவோ கூடாது.

### (d)அரசியல் இணைவு

இந்த முடிவுகளை இரண்டு ஜெர்மனிகளும் ஏற்றுக் கொண்டன. 1990, ஜுலை இறுதியில் ‘போலந்துடனான கிழக்கு எல்லைக் கோடாக ஓடர்-நெய்சி கோட்டை’ ஏற்றுக் கொள்வதாக அறிவித்தன. 1990, ஆகஸ்ட் 31-ல் மேற்கு ஜெர்மனியும் கிழக்கு ஜெர்மனியும் வரலாற்று சிறப்புமிக்க “அரசியல் இணைவு“ ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டன. இதன்படி

ஜெர்மானிய மறு இணைவு நிறை வடைந்தது. புதிய நாட்டிற்கு 'ஜெர்மன் கூட்டாட்சிக் குடியரசு' என்று பெயரிடப்பட்டது. 1990, அக்டோபர் 3-ம் தேதி மீண்டும் இணைக்கப் பட்ட ஜெர்மனியில் புதிய அமைச்சரவை ஹெல்முட் ஹோல் தலைமையில் பதவி ஏற்றுக் கொண்டது. உலகத் தலைவர் களின் வாழ்த்துக்களுடன் இணைப்பு விழா நாடெங்கிலும் கோலாகலமாகக் கொண்டாடப்பட்டது. 'ஜெர்மானிய மறு இணைவு' என்பது இருபதாம் நூற்றாண்டில் நடைபெற்ற வரலாற்றுச் சிறப்பு மிக்க ஒரு நிகழ்ச்சியாகும்.

## 11.3.உலக வர்த்தக அமைப்பு (World Trade Organisation - WTO)

உலகின் பன்முக வர்த்தக முறைக்கான ஒரு சட்டபூர்வ அமைப்பு "உலக வர்த்தக அமைப்பு ஆகும். இது1995 ஜனவரி,1 ல் மராக்கேஷ் ஒப்பந் தத்தின் படி (Marrakeshagreement)அமைக்கப்பட்டது. இந்த அமைப்பு 1948 ஜனவரி-1 ல் அமைக்கப்பட்டிருந்த 'காப்பு வரி' மற்றும் வர்த்தகத் திற்கான பொது ஒப்பந்தம் (General agreement of Tariff and Trade - GATT) என்ற அமைப்பின் வழித்தோன்றலாக அமைக்கப்பட்டது. இந்த 'காட்' அமைப்பு வர்த்தகத்திற்கான விதிகளையும் ஒழுங்கு முறைகளையும் உருவாக்கி கொடுத்த ஒரே உலக அமைப்பாக விளங்கியது. உலக வர்த்தகத்தை தாராள மயமாக்கவும், உலக வர்த்தகத்திற்கான பொதுவான நடத்தை விதிகளை உருவாக்கவும் 'காட்' அமைப்பு மொத்தம் எட்டு சுற்று பேச்சு வார்த்தைகளை நடத்தியது.

எட்டாவதும் இறுதியானதுமான பேச்சுவார்த்தை 1993 டிசம்பர் மாதம் உருகுவே நாட்டில் நடைபெற்றது. இதில் 117 நாடுகள் கலந்து கொண்டன. இதன் தொடர்ச்சியாகத் தான் வரலாற்றில் மிகப்பெரிய ஒப்பந்தம் செய்யப்பட்டது. 1994-ஏப்ரல் 15 ல் செய்து கொள்ளப்பட்ட மராக்கேஷ் ஒப்பந்தத்தின்படிதான் "உலக வர்த்தக அமைப்பு" உருவாக்க முடிவு செய்யப்பட்டது. இதில் 123 நாடுகள் கையெழுத்- திட்டன. அதன் பிறகு 1995-ஜனவரி 1-ல் இதை உலக வர்த்தக அமைப்பு செயல்பட ஆரம்பித்தது. 2004 - ம் வருட இறுதியில் உலக வர்த்தக அமைப்பில் 145 நாடுகள் இடம் பெற்றிருந்தன.



**குறிப்பு**

**(a)நோக்கம்**

பழைய ‘காட்’ (புயுவுவு) அமைப்பின் படி நடத்தப்பட்ட உருகுவே சுற்று பேச்சுவார்த்தையின் இறுதியில் செய்து கொள்ளப் பட்ட சுமார் முப்பது ஒப்பந்தங்களை செயல்முறைப்படுத்துவதே உலக வர்த்தக அமைப்பின் . முக்கிய நோக்கமாக உள்ளது. உறுப்பு நாடுகளுக்கிடையே வர்த்தகம் தொடர்பாக ஏற்படும் சச்சரவுகளைத் தீர்த்து வைத்தல், காப்பு வரி மற்றும் நாடுகளுக்கிடையே இருக்கும் வர்த்தகத் தடைகளை நீக்குவதற்கான பேச்சு வார்த்தைகளை நடத்துவதையும் முக்கிய நோக்கமாகக் கொண்டுள்ளது. உலக வர்த்தக அமைப்பின் தலைமையிடம் சுவிட்சர்லாந்திலுள்ள ஜெனிவாவில் உள்ளது.

காட் அமைப்புக்கு பின் வந்த உலக வர்த்தக அமைப்பு வலிமை மிக்க அதிகாரங்களையும் நடைமுறைகளையும் பெற்று செயல்பட்டு வருகிறது. காட் அமைப்பு ஒரு உடன்படிக்கை போலவே செயல்பட்டு வந்தது. ஆனால் ‘உலக வர்த்தக அமைப்பு’ ஒரு உலக நிறுவனமாகவே உள்ளது. உருகுவே மூ சுற்று பேச்சுவார்த்தையின் இறுதியில் செய்யப்பட்ட ஒப்பந்தம் ஒரு உலகச்சட்டமாகவே செயல்பட்டு வருகிறது.

உலக வர்த்தக அமைப்பின் முக்கிய நோக்கம் உலக வர்த்தக நடவடிக்கைகளை தாராளமயமாக்குவதேயாகும். வளர்ச்சியடைந்து வரும் நாடுகளில் பொருளாதார சீர்திருத்தங்களை ஊக்குவித்தல், பயிற்சி மற்றும் தகவல் தொழில்நுட்பம் தொடர்பான துறைகளில் உதவி செய்தல், உலக சுற்றுச் சுழல் பாதுகாக்கப்பட வேண்டியதின் அவசியத்தை அங்கீகரித்தல், நிலைத்த வளர்ச்சியை மேம்படுத்துதல் போன்ற நோக்கங்களையும் கொண்டுள்ளது.

**(b)அமைப்பும் செயல்பாடுகளும்**

உலக வர்த்தக அமைப்பின் முக்கியமான உறுப்பின் அமைச்சகக் கவுன்சில், பொதுக்குழு, வர்த்தகக் கொள்கை மதிப்பீட்டு அமைப்பு, தகராறுகள் தீர்க்கும் குழு, பொருள் வர்த்தகக் குழு, வர்த்தக சேவை கவுன்சில் மற்றும் ஒரு தலைமைச் செயலகம் ஆகியவையாகும்.

அமைச்சகக் குழு (Ministerial Council) தான் உலக வர்த்த க அமைப்பின் பிரதான உறுப்பு ஆகும். இதில் எல்லா உறுப்பு நாடுகளின் உறுப்பினர்களும் இடம் பெற்றுள்ளனர். இதுவே முக்கிய முடிவுகள் எடுக்கும் உயர்நிலைக்குழு ஆகும். பல்முனை வர்த்தக ஒப்பந்தங்கள் தொடர்பான எல்லா பிரச்சனைகள் பற்றி முடிவு எடுக்க இக்குழு இரண்டு ஆண்டுகளுக் கொருமுறை கூடுகிறது. பொதுக்குழு (general council) என்பது தான் உலக வர்த்தக நிறுவனத்தின் அன்றாட வேலைகளைக் கவனித்து வருகிறது. எல்லா வர்த்தக ஒப்பந்தங்களையும் மேற்பார்வையிடுகிறது. இதுவே தகராறு களைத் தீர்க்கும் குழுவையும், பொருள் வர்த்தகக்

குழுவையும் கூட்டுகிறது. பொதுக்குழுவில் எல்லா உறுப்பு நாடுகளின் பிரதிநிதிகளும் உறுப்பினர் களாக உள்ளனர்.

பொதுச் செயலாளர் நான்கு ஆண்டு காலத்திற்குப் பதவி வகிக் கிறார். உலக வர்த்தக அமைப்பு உலக வங்கி, சர்வதேச பொருளாதார நிதியம் போன்ற பன்முக உலக அமைப்புகளுடன் தொடர்பு கொண்டு செயல்பட்டு வருகிறது. அமைச்சகக் குழுவின் முதல் மாநாடு 1996-டிசம்பர் மாதம், சிங்கப்பூரில் நடைபெற்றது. அந்த மாநாட்டின் உருகுவே சுற்றுப் பேச்சு வார்த்தையின் இறுதியில் எடுக்கப்பட்ட முடிவுகள் மதிப்பீடு செய்யப் பட்டன. மேலும் வர்த்தகம் தொடர்பாக நடைபெற்றுவரும் பேச்சு வார்த்தைகள், வேலைத்திட்டங்கள், உலக வர்த்தகத்தில் வளர்ச்சி, உலகப் பொருளாதாரத்தில் காணப்படும் சவால்கள் போன்றவை குறித்தும் இந்த மாநாட்டில் ஆய்வு செய்யப்பட்டது. இரண்டாவது மாநாடு 1998-மே மாதம் ஜெனிவாவில் நடத்தப்பட்டது. இந்த மாநாட்டில் விவசாயம் தொடர்பான உலக வர்த்தகம் பற்றிய பேச்சு வார்த்தைக்கான கருத்துக்கள் பற்றிய முடிவு எடுக்கப்பட்டது. அத்துடன் உருகுவே வட்டச் சுற்றின் முடிவில் செய்யப் பட்ட மராக்கேஷ் ஒப்பந்தத்தை செயல்படுத்தும் போது வளர்ந்து வரும் நாடுகள் எதிர்கொள்ளும் பிரச்சனைகள் பற்றியும் விவாதம் நடத்த ஒப்புக் கொள்ளப்பட்டது.

உலக வர்த்தக அமைப்பின் அமைச்சகக் குழுவின் மூன்றாவது மாநாடு 1999 நவம்பரில் அமெரிக்காவில் உள்ள “சியாட்டில்“ (ளுநயவவடந) நகரில் நடைபெற்றது. இந்த மாநாடு மிகவும் முக்கியத்துவமான தாகவும், அதிக விளம்பரப்படுத்தப்பட்டதாகவும் நடைபெற்றது. ஏனென்றால் உறுப்பு நாடுகள் முதலீடு மற்றும் வாணிபப் போட்டிக் கொள்கை அரசுக் கொள்முதலில் வெளிப்படையான தன்மை, வர்த்தக வாய்ப்புகள், வர்த்த - . கமும் சுற்றுச்சுழலும் போன்றவை பற்றிய பிரச்சனைகளை விவாதித்து முடிவு எடுக்குமாறு கேட்டுக் கொண்டன. மேலும் இந்த மாநாட்டில் உலக வர்த்தக அமைப்பின் செயல்படு வதற்கும் பிற பன்னாட்டு நிறுவனங்களின் செயல் பாடுகளுக்குமிடையே உள்ள இசைவு இணைத் தன்மையை பலப்படுத்த முடிவு எடுக்கப்பட்டது.

உலக வர்த்தக அமைப்பின் நான்காவது மாநாடு 2001, நவம்பரில் கத்தார் நாட்டில் உள்ள தோகா நகரில் நடைபெற்றது. இந்த மாநாட்டில் உலக வர்த்தகம் தொடர்பாக புதிய கருத்துக்கள் பற்றிய பேச்சுவார்த்தை , பொது சுகாதாரம், வளர்ந்து வரும் நாடுகளின் வர்த்தகப் பிரச்சனைகள் தொடர்பாக பல முடிவுகள் எடுக்கப்பட்டன. மேலும் விவசாய வர்த்தகம் ஆரம்பித்தல் முதல் வர்த்தக சுற்றுச் சுழல் வரை மொத்தம் 19 பொருள்கள் தொடர்பான நிகழ்ச்சி நிரல் தயாரிக்கப்பட்டு விவாதிக்கப்பட்டது. இதற் காகவே இந்த மாநாட்டில் வர்த்தக பேச்சுவார்த்தை கமிட்டி ஒன்று அமைக்கப்பட்டது. முக்கியமாக விவசாய வர்த்தகத்தில் எல்லா வகையான ஏற்றுமதி உதவித் தொகையை (Subsidy) நிறுத்துதல், சந்தைப் படுத்து

தலை மேம்படுத்துதல் போன்றவற்றை அடைய இலக்கு நிர்ணயம் செய்யப் பட்டது. தோகா மாநாட்டு முடிவுகளை நடைமுறைப்படுத்தும் மற்றுமொரு கூட்டம் 2002, நவம்பரில் சிட்னியில் நடைபெற்றது.

மெக்சிகோவில் உள்ள கேன்கூனில் (Cancun) 2003-ல் நடைபெற்ற ஐந்தாவது மாநாடு பன்னாட்டு வர்த்தகத்தை தாராளமயமாக்கல் தொடர் பான ஒருமித்த கருத்தை எட்ட முடியாமல் தோல்வியில் முடிவடைந்தது. ஐரோப்பிய யூனியன் வெளிநாட்டு முதலீடு, வர்த்தகப் போட்டிக் கொள்கை ஆகிய புதிய இரண்டு பொருள்கள் பற்றி விவாதம் ஆரம்பிக்க வேண்டும் எனக் கேட்டுக் கொண்டதாலும் இந்த கேன்கூன் அமைச்சக கவுன்சிலின் ஐந்தாவது மாநாடு தோல்வி அடைந்தது. கேன்கூன் மாநாட்டில் தோல்வி உலக வர்த்தக அமைப்பின் எதிர்காலத்தையே கேள்விக் ணகுறியாக்கி உள்ளது. நாடுகளில் உள்நாட்டுக் கொள்கையில் தலையிடாமல் வெற்றிகரமான வர்த்தக கொள்கையை செயல்படுத்த முடியாது. அதிகாரம் குறைவான உலக வர்த்தக அமைப்பு அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய யூனியன் ஆகியவற்றின் நலன்களுக்கு எதிராகவே அமையும். எனவே உலக வர்த்தக அமைப்பு செல்லும் திசையை மாற்றியமைக்க வேண்டிய நிலையில் உள்ளன.

2004, ஜுலை-30 ல் ஜெனிவாவில் நடைபெற்ற உலக வர்த்தக அமைப்பின் பொதுச்சபையின் கூட்டத்தில் பொது நிர்வாகி சமர்ப்பித்த புதிய வரைவுத் திட்டத்தை இந்தியா தலைமையிலான வளரும் நாடுகள் ஏற்றுக் கொள்ள மறுத்து விட்டன. ஆனாலும் இக் கூட்டத்தில் விவசாயம் மற்றும் அது தொடர்பான பிரச்சனைகள் பற்றி பேச்சு வார்த்தையைத் தொடர முடிவு செய்யப்பட்டது. இவ்வாறு உலக வர்த்தகக் கழகமும் பன்னாட்டு உறவில் முக்கியமான பங்கெடுத்து செயலாற்றி வருகிறது.



**The World Trade Organization Ministerial Conference of 1998, in the Palace of Nations (Geneva, Switzerland).**

## 11.4 உலகமயமாக்கல் (Globalisation)

தாராளமயமாக்கல், தனியார்மயமாக்கல் ஆகியவற்றின் தவிர்க்க முடியாத விரிவாக்கமே உலகமயமாக்கலாகும். இது பரிமாற்றப் பொருளாதாரம் (Transactional Economy) என்றும் அழைக்கப்படுகிறது. உலகமயமாக்கல் என்ற சொல் உலகளாவிய வர்த்தகத்தைக் குறிக்கிறது. வெளிநாட்டு வர்த்தகம் இந்தியாவுக்குப் புதிதல்ல. ஆனால் உலகமயமாக்கல் பொருளாதாரம் நாட்டுக்குப் புதிது. வெளிநாட்டு வர்த்தகம் அந்தந்த நாடுகளின் சட்டதிட்டங்களுக்குட்பட்டு நடத்தப்படும் ஏற்றுமதி இறக்குமதியாகும். உலகமயமாக்கல் என்பது ஏற்றுக்கொள்ளப்பட்ட உலக வர்த்தக விதிகளுக்குட்பட்டு மேற்கொள்ளப்படும் வர்த்தகமாகும்.

அறிவியல், தொழில்நுட்ப, தகவல் தொடர்பு விரிவாக்கத்தின் விளைவாக உலகமே ஒரு பொருளாதாரப் பொதுச் சந்தை (Global Market) ஆகிவிட்டது. இச்சந்தைக்கு எல்லைகள் இல்லை தடைகள் குறைவு போட்டிப் பொருளாதாரத்துக்கான சுதந்திரம் அதிகம். உலகமயமாக்கலால் மூலதனம், தொழில்நுட்பம், பண்டப் பரிவர்த்தனை, உழைப்பு ஆகியவை தங்குதடையின்றி பரிமாறிக் கொள்வதற்கான வாய்ப்பு ஏற்படுகிறது. யாதும் ஊரே யாவரும் கேளிர் என்ற கனவு நனவாகிறது.

21-ம் நூற்றாண்டின் நுழைவாயிலில் உள்ள இந்தியா உலகப் பொருளாதாரச்சூழ்நிலை மாற்றத்துக்கேற்ப தன்னை மாற்றிக் கொள்ள வேண்டிய கட்டாயத்தில் உள்ளது. ஏர்ந்த நாடுகளின் பொருளாதாரத்தோடு இந்தியப் பொருளாதாரத்தை மறுபுத்தமைத்து (Reinvent) மறு அறிமுகம் (reorient) செய்து, மறு சீரமைத்து (Restructure), மறுஒத்துப் போதலுக்கான (Readjust) உருமாற்றம் செய்து கொள்ள வேண்டியது இன்றியமை யாததாகும். உலகமயமாக்கல் என்பது பாதுகாக்கப்பட்ட நீச்சல் குளத்திலிருந்து போட்டிப் பேரலைகளைக் கொண்ட கடலுக்குச் சென்று நீச்சலடிப்பதைப் போன்றது

**மதிப்பீடு**

1991லிருந்து பின்பற்றப்பட்டு வரும் தனியார் மயமாக்கல் கொள்கையின் விளைவாக இந்தியத் தொழில்கள் பொதுத்துறை, தனியார்துறை உலகப் பொருளாகதாரப் போட்டியைத் துணிவுடன் எதிர்கொள்கின்றன. இந்தியா தன் பலத்தை உணரத்தொடங்கியுள்ளது. எடுத்துக்காட்டாக இந்திய மென்பொருள் தொழில்நுட்பம் (Software Technology) உலக அங்கீகாரம் பெற்றுள்ளது. வெளிநாட்டுக் கம்பெனிகள் தாங்களது மென்பொருள் தேவைகளுக்கு இந்தியாவை நாடிவரத் துவங்கியுள்ளன பொருள் சார்ந்த பொருளாதாரம் அறிவு சார்ந்த பொருளாதாரமாக மாறிவருகிறது. இதன் இந்தியாவில் புதிய போட்டி மனப்பான்மை (Competitive mind-set)யும் தொழில் உற்பத்தித்திறன் கலாச்சார (Productivity couture)மும் உருவாகி வருகிறது.

குறிப்பு

தனியார்மயமாதல் கலப்படமற்ற நன்கொடையல்ல என்று கூறப்படுகிறது. தேவையான துறைகளைத் தவிர்த்து நுகர்வோர் பொருள்களில் அந்நிய முதலீடு செய்யப்படுகிறது் உயர்தர தொழில் நுட்பத்தைப் பகிர்ந்து கொள்ளாமையால் தொழில்நுட்ப இடைவெளி அதிகரிக்கிறது் அந்நியச் செலாவணி விதிகள் மீறப்படுகின்றன் நியாயமற்ற போட்டியால் உள்நாட்டு நிறுவனங்கள் பாதிக்கப்படுகின்றன் வேலையில்லாத் திண்டாட்டம் அதிகரிக்கிறது் அடித்தட்டு மக்களின் பிரச்னைகளைத் தீர்க்கப் பயன்படவில்லை... போன்ற குறைபாடுகள் உள்ளன. அரசாங்கம் தக்க தடுப்பு நடவடிக்கைகள் மூலம் இக்குறைபாடுகளைத் தீர்க்க முடியும். தனியார்மயமாக்கல் காலக் குரல் காலத்தின் கட்டாயம். ”உலகமயமாக்கல் மூலம் அரசியல் சுதந்திரமும் பொருளாதாரச் சார்புடைமையும் முரண்பட்டவையல்ல என்பதை இந்தியத் தலைமை ஏற்றுக் கொண்டுள்ளது முதிர்ந்த அனுபவத்துக்கான முக்கிய அடையாளமாகும் என்று கூறுகிறார் சசி தரூர் (Shashi Tharoor)

## 11.5 யுனிபோலார் உலகின் கருத்து

1989 முதல் பனிப்போருக்குப் பிந்தைய உலக ஒழுங்கை எவ்வாறு எதிர்கொள்வது என்பது குறித்த கல்வி விவாதம் செழித்தோங்கியது. தற்போதைய உலக ஒழுங்கை மல்டிபோலார், இன்னும் இருமுனை, பகுப்பாய்வு செய்ய வேண்டுமா, இது ஒரு கணம், துண்டு துண்டாக, நாகரிகங்களின் கைகளில், அல்லது ஜனநாயக மற்றும் அமைதியானதா என்பதை மையமாகக் கொண்டுள்ளது. ஒழுங்கு ஒரு துருவமாக இருந்தால், நான் கருதுவது போல, பொதுவாக ஒரு துருவ ஒழுங்கின் தன்மை என்ன, குறிப்பாக ஒரு அமெரிக்க ஒற்றை துருவ வரிசையில் இருந்து என்ன எதிர்பார்க்கலாம் என்ற கேள்விகள் எழுகின்றன

ஒற்றுமையின்மை என்ற கருத்து வெறும் விடயத்தை விட அதிகமாக உள்ளது எந்தவொரு பெரிய சக்தியும் மற்றதை விட வலிமையானது என்பது உண்மை. இது ஒரு சர்வதேச இயக்கவியல் தொடர் குறிப்பாக ஒரு துருவத்துடன் இணைக்கப்பட்டுள்ளது மோதலின் வடிவங்களில் குறிப்பிட்ட விளைவுகள் உட்பட அதிகாரத்தின் ஏற்பாடு மற்றும் ஒத்துழைப்பு. இங்கே வாதம் என்னவென்றால்: ஒற்றுமை என்பது ‘மந்தை’ மற்றும் கடின உழைப்பைத் தூண்டுகிறது, இது ஒப்பீட்டளவில் வலுவானது ஆனால் அவசியமில்லை நீடித்த உலக ஒழுங்கு, மற்றும் யூனிபோல் பரவ ஒரு தனித்துவமான நிலையில் உள்ளதுஅதன் சொந்த அரசியல் மாதிரி மற்றும் சர்வதேச நிகழ்ச்சி நிரலை அமைத்தல். கீழ் தற்போதைய சூழ்நிலைகள் இதுவரை அமெரிக்க சர்வதேச கொள்கை பொதிந்துள்ளது தடையற்ற சந்தை முதலாளித்துவம் மற்றும் தாராளமய ஜனநாயகம் ஆகியவற்றின் பரவல். போது மற்ற மாநிலங்கள் 2 உலகத்தின் யூனிபோலின் நிர்வாகத்திலிருந்து பயனடையக்கூடும் விவகாரங்கள், அவர்கள் அதை இலவச சவாரி செய்வதன் மூலமோ அல்லது புண்படுத்துவதன் மூலமோ சிக்க வைக்கலாம் யூனிபோல் தனது சொந்த அரசியல் நிலைப்பாட்டிற்கான

களைப்பு. இந்த பார்வை என்றால் கணக்கில் எடுத்துக்கொள்ளப்பட்டால், எதிர்கால சர்வதேச முன்னேற்றங்களை நாங்கள் எதிர்கொள்கிறோம் அங்கு அமெரிக்கா ஒரு முக்கிய சர்வதேச பாத்திரத்தை வகிக்கும், அதில் அதிகாரத்தின் ஒற்றை துருவ விநியோகம் சர்வதேச போக்குகளை பாதிக்கும்

**வெளிப்பாடுகள்.**

முதலாவதாக, நியோரலிசம் விளக்கும் விஷயத்தில் குறிப்பிடத்தக்க குணங்களைக் கொண்டுள்ளது சாத்தியமான விளைவுகளை முன்னறிவித்தல், சோதனைக்குரிய கருதுகோள்களை ஊகித்தல் மற்றும் உலகத்தைப் பற்றிய பொதுவான போக்குகள் மற்றும் நிலைமைகளை அடையாளம் காணுதல் ஆர்டர். அனுபவச் சான்றுகள் கருதுகோள்களை ஆதரிக்கும் வரையில், நியோரலிசம் விளக்கமளிக்கும் சக்தியைப் பெறுகிறது. பாத்திரம். கூடுதலாக, கோட்பாடு மற்ற விஷயங்களில் வரவு வைக்கப்படலாம் நிலைத்தன்மை மற்றும் பொருத்தமாக. இரண்டாவதாக, சோதனைகள் மற்றும் பயன்பாடுகள் நியோரலிசம் இருப்பதை நிரூபித்துள்ளன இருமுனைத்தன்மை மற்றும் மல்டிபோலரிட்டி விஷயத்தில் நன்றாக வேலை செய்தது (எடுத்துக்காட்டாக பார்க்கவும் வால்ட், 1987 மற்றும் 1988 கிறிஸ்டென்சன் மற்றும் ஸ்னைடர், 1990). நியோரலிசம் கூட இருமுனைத்தன்மைக்கு வந்த 1989 ஆம் ஆண்டின் பெரிய சோதனையில் தேர்ச்சி பெற்றதாகத் தெரிகிறது முடிவுக்கு. 1989 வாக்கில், மூன்று நியோரலிச எதிர்பார்ப்புகள் நிரூபிக்கப்பட்டதாகத் தோன்றியது.

திறன்களின் உலகளாவிய விநியோகத்தில் அமெரிக்க முதன்மையானது சமகால சர்வதேசத்தின் மிக முக்கியமான அம்சங்களில் ஒன்று அமைப்பு. பனிப்போரின் முடிவு உலகத்தை பன்முகத்தன்மைக்கு திருப்பி விடவில்லை. அதற்கு பதிலாக அமெரிக்கா - ஏற்கனவே பொருள் ரீதியாக முக்கியமானது - ஆனது மேலும் அதனால். நாங்கள் தற்போது ஒரு வல்லரசு உலகில் வாழ்கிறோம், ஒரு சூழ்நிலை நவீன சகாப்தத்தில் முன்னோடியில்லாதது. வேறு எந்த பெரிய சக்தியும் அனுபவிக்கவில்லை பொருள் திறன்களில் இத்தகைய நன்மைகள்-இராணுவ, பொருளாதார, தொழில்நுட்ப மற்றும் புவியியல். மற்ற மாநிலங்கள் ஒன்றில் அமெரிக்காவை எதிர்த்து நிற்கின்றன பகுதி அல்லது மற்றொரு, ஆனால் அமெரிக்க சக்தியின் பன்முக தன்மை அதை அதன் சொந்த பிரிவில் வைக்கிறது. சோவியத்தின் திடீர் சரிவு யூனியன் மற்றும் அதன் பேரரசு, ஜப்பான் மற்றும் மேற்கத்திய நாடுகளில் மெதுவான பொருளாதார வளர்ச்சி 1990 களில் ஐரோப்பா, மற்றும் அமெரிக்காவின் வெளிநாட்டு இராணுவ செலவுகள் இவை அனைத்தும் இந்த ஏற்றத்தாழ்வுகளை மேம்படுத்தியுள்ளன. பெரும்பாலான வரலாற்று காலங்களில் முக்கிய மாநிலங்களிடையே திறன்களின் விநியோகம் மல்டிபோலார் அல்லது இருமுனை என முனைகிறது - தோராயமாக சம அளவுள்ள பல முக்கிய மாநிலங்கள் மற்றும் திறன் 1990 அமெரிக்கா 1990 களில் இருந்து

நிகரற்றதாக வெளிப்பட்டது உலக சக்தி. இது ஒரு "ஒற்றை துருவ" மாநிலமாக மாறியது.

இந்த அசாதாரண ஏற்றத்தாழ்வு உலகத்தைத் தூண்டியது ஆச்சரியமல்லவிவாதம். இந்த விசித்திரமான சர்வதேச சூழலுக்கு பதிலளிக்க அமெரிக்கா உட்பட அரசாங்கங்கள் போராடி வருகின்றன. என்ன ஒரு துருவ விநியோகத்தில் ஆதிக்கத்தின் தன்மை? உலக அரசியல் என்றால் எப்போதும் சக்தி மற்றும் சம்மதத்தின் கலவையாகும், ஒரு ஒற்றை துருவ உலகம் விதிகள் மற்றும் நிறுவனங்களைச் சுற்றி கட்டப்பட வேண்டும் ஒரு யூனிபோலார் அரசு எந்த அளவிற்கு, எந்த வழிகளில் அதன் வலிமையா இந்த கேள்விகள் உலகளாவிய சூழலில் கேட்கப்பட்டுள்ளன புஷ் நிர்வாகத்தால் அதிகாரத்தை முன்வைப்பது பற்றிய விவாதம். சர்வதேச உறவுகள் கோட்பாட்டின் கிளாசிக் கேள்விகள் ஆபத்தில் உள்ளன ஒற்றுமை குறித்த விவாதம். மிகவும் வெளிப்படையான கேள்வி சமநிலையைப் பற்றியது சக்தி கோட்பாடு, இது மாநிலங்கள் செறிவூட்டலுக்கு பதிலளிக்கும் என்று கணித்துள்ளது எதிர் சமநிலையின் மூலம் சக்தி .1 சிலர் அவர்கள் பார்க்கும் விஷயங்களால் குழப்பமடைகிறார்கள் அமெரிக்க ஒற்றை துருவ சக்திக்கு சமநிலைப்படுத்தும் பதில் இல்லாதது, அதேசமயம் மற்றவர்கள் மாறாக, தொடக்க அல்லது குறிப்பிட்ட வகையான சமநிலை நடத்தை உண்மையில் நிகழ்கிறது என்று வாதிடுகின்றனர் .2 தொடர்புடைய விவாதம் சக்தியைப் பற்றியது மாற்றம் கோட்பாடு, இது மோதலின் குறிப்பிட்ட வடிவங்களில் கவனம் செலுத்துகிறது உயரும் மற்றும் குறைந்து வரும் மேலாதிக்க நிலைகளுக்கு இடையில் உருவாக்கப்படுகிறது. 3திடீர் குளிரின் முடிவைத் தொடர்ந்து வந்த திறன்களின் விநியோகத்தில் மாற்றம் யுத்தமும் பனிப்போருக்குப் பின்னர் சீனாவின் எழுச்சியும் பற்றிய கேள்விகளை எழுப்புகின்றன ஆதிக்கம் செலுத்தும் மற்றும் சவாலான மாநிலங்களுக்கு இடையிலான மோதலின் தன்மை உயர்வு மற்றும் வீழ்ச்சியின் பாதைகளில் செல்லுங்கள். ஒரு ஒற்றை துருவ விநியோகமும் பனிப்போரின் போது அறிஞர்கள் புரிந்துகொண்ட சிக்கல்களை எழுப்புகிறது, அதாவது பல்வேறு வகையான துருவ அமைப்புகளின் கட்டமைப்பு மற்றும் இயக்கவியல் பற்றி. இங்கே கேள்விகள் துருவமுனைப்பின் அம்சங்களைப் பற்றி கவலை கொள்கின்றன அரசு அமைப்பின் ஆயுள் மற்றும் யுத்த வெளிப்பாட்டை பாதிக்கும் .4 அதேபோல், அச்சுறுத்தல் கருத்து, வெளியுறவுக் கொள்கையில் ஆட்சி பண்புகளின் தாக்கம், ஆதிக்க நாடுகளின் வழங்கல் பற்றிய அறிவார்ந்த விவாதங்கள் கூட்டுப் பொருட்கள், மற்றும் முன்நிபந்தனை மொழிபெயர்க்க ஒரு மாநிலத்தின் திறன் பயனுள்ள செல்வாக்கிற்கான திறன்களும் விவாதத்தில் ஆபத்தில் உள்ளன.

**உங்கள் முன்னேற்றத்தைச் சரிபார்க்கவும்**
11. WTO குறிப்பிடுக?
2. உலக மயமாதல் பற்றி விவரிக்கவும்?

## 11.6 உங்கள் முன்னேற்றத்தை சோதிக்கும் வினாக்களுக்கான விடைகள்

உலகின் பன்முக வர்த்தக முறைக்கான ஒரு சட்டபூர்வ அமைப்பு "உலக வர்த்தக அமைப்பு ஆகும். இது1995 ஜனவரி,1 ல் மராக்கேஷ் ஒப்பந் தத்தின் படி (Marrakeshagreement)அமைக்கப்பட்டது. இந்த அமைப்பு 1948 ஜனவரி-1 ல் அமைக்கப்பட்டிருந்த 'காப்பு வரி' மற்றும் வர்த்தகத் திற்கான பொது ஒப்பந்தம் (General agreement of Tariff and Trade - GATT) என்ற அமைப்பின் வழித்தோன்றலாக அமைக்கப்பட்டது.

தாராளமயமாக்கல், தனியார்மயமாக்கல் ஆகியவற்றின் தவிர்க்க முடியாத விரிவாக்கமே உலகமயமாக்கலாகும். இது பரிமாற்றப் பொருளாதாரம் (Transactional Economy) என்றும் அழைக்கப்படுகிறது. உலகமயமாக்கல் என்ற சொல் உலகளாவிய வர்த்தகத்தைக் குறிக்கிறது. வெளிநாட்டு வர்த்தகம் இந்தியாவுக்குப் புதிதல்ல. ஆனால் உலகமயமாக்கல் பொருளாதாரம் நாட்டுக்குப் புதிது. வெளிநாட்டு வர்த்தகம் அந்தந்த நாடுகளின் சட்டதிட்டங்களுக்குட்பட்டு நடத்தப்படும் ஏற்றுமதி இறக்குமதியாகும். உலகமயமாக்கல் என்பது ஏற்றுக்கொள்ளப்பட்ட உலக வர்த்தக விதிகளுக்குட்பட்டு மேற்கொள்ளப்படும் வர்த்தகமாகும்.

## 11.7 சுருக்கவுரை

புதிய நாட்டிற்கு 'ஜெர்மன் கூட்டாட்சிக் குடியரசு' என்று பெயரிடப்பட்டது. 1990, அக்டோபர் 3-ம் தேதி மீண்டும் இணைக்கப் பட்ட ஜெர்மனியில் புதிய அமைச்சரவை ஹெல்முட் ஹோல் தலைமையில் பதவி ஏற்றுக் கொண்டது. உலகத் தலைவர் களின் வாழ்த்துக்களுடன் இணைப்பு விழா நாடெங்கிலும் கோலாகலமாகக் கொண்டாடப்பட்டது. 'ஜெர்மானிய மறு இணைவு' என்பது இருபதாம் நூற்றாண்டில் நடைபெற்ற வரலாற்றுச் சிறப்பு மிக்க ஒரு நிகழ்ச்சியாகும்.

2004, ஜூலை-30 ல் ஜெனிவாவில் நடைபெற்ற உலக வர்த்தக அமைப்பின் பொதுச்சபையின் கூட்டத்தில் பொது நிர்வாகி சமர்ப்பித்த புதிய வரைவுத் திட்டத்தை இந்தியா தலைமையிலான வளரும் நாடுகள் ஏற்றுக் கொள்ள மறுத்து விட்டன. ஆனாலும் இக் கூட்டத்தில் விவசாயம் மற்றும் அது தொடர்பான பிரச்சனைகள் பற்றி பேச்சு வார்த்தையைத் தொடர முடிவு செய்யப்பட்டது. இவ்வாறு உலக வர்த்தகக் கழகமும் பன்னாட்டு உறவில் முக்கியமான பங்கெடுத்து செயலாற்றி வருகிறது.

தனியார்மயமாதல் கலப்படமற்ற நன்கொடையல்ல என்று கூறப்படுகிறது. தேவையான துறைகளைத் தவிர்த்து நுகர்வோர் பொருள்களில் அந்நிய முதலீடு செய்யப்படுகிறது் உயர்தர தொழில் நுட்பத்தைப் பகிர்ந்து கொள்ளாமையால் தொழில்நுட்ப இடைவெளி அதிகரிக்கிறது் அந்நியச் செலாவணி விதிகள் மீறப்படுகின்றன் நியாயமற்ற போட்டியால் உள்நாட்டு நிறுவனங்கள் பாதிக்கப்படுகின்றன் வேலையில்லாத் திண்டாட்டம் அதிகரிக்கிறது் அடித்தட்டு மக்களின் பிரச்னைகளைத் தீர்க்கப்

பயன்படவில்லை... போன்ற குறைபாடுகள் உள்ளன. அரசாங்கம் தக்க தடுப்பு நடவடிக்கைகள் மூலம் இக்குறைபாடுகளைத் தீர்க்க முடியும்.

## 11.8 முக்கிய வார்த்தைகள்

ஜெர்மனியின் மறு இணைவு உலக வர்த்தக அமைப்பு
உலகமயமாதல் யுனிபோலார் உலகின் கருத்து

## 11.9 சுய மதிப்பீடு வினாக்கள் மற்றும் பயிற்சிகள்

**சுருக்கமான கேள்விப் பதில்கள்**

1. உலக வர்த்தக அமைப்பு பற்றி மதிப்படுக?
2. உலகமயமாதல் பற்றி குறிப்பு வரைக?

**விரிவான கேள்விப் பதில்கள்**

1. ஜெர்மனியின் மறு இணைவு பற்றிக் கட்டுரை வரைக?
2. யுனிபோலார் உலகின் கருத்து மதிப்பிடுக?

## 11.10 மேலும் படிக்க


- Brockmann, Stephen. (1999.) ***Literature and German Reunification***. Cambridge. UK: Cambridge University Press
- Bhagwati, Jagdish S. (2007). ***In Defense of Globalization***. Oxford. Oxford University Press.
- Marsh, David. (1990). ***The Germans A People at the Crossroads***. New York. St. Martin's Press.
- Rodrik, Dani (1997). ***Has Globalization Gone Too Far?.*** Washington. Institute for International Economics.

# தொகுதி IV உலகமயமாதல்
# அலகு 12 சமகால அரசியல் பிரச்சனைகள்

12.0 அறிமுகம்
12.1 நோக்கங்கள்
12.2 சமகால அரசியல் பிரச்சனைகள்
12.3 உலக விவகாரங்களில் அமெரிக்காவின் பங்கு
12.4 கொரியா போர்
12.5 வியட்நாம் போர்
12.6 உங்கள் முன்னேற்றத்தை சோதிக்கும் வினாக்
12.7 சுருக்கவுரை
12.8 சுய மதிப்பீடு வினாக்கள் மற்றும் பயிற்சிகள்
12.9 மேலும் படிக்க

## 12.0 அறிமுகம்

பன்னாட்டுறவு எக்காலத்திலும் ஒரே மாதிரியாக இருப்பதில்லை அது காலகாலத்திற்கு மாறிக் கொண்டேயிருக்கிறது. அறிவியல் தொழில் நுட்ப வளர்ச்சி, உலக நாடுகள் எதிர்நோக்கும் பிரச்சனைகள் ஆகியவற்றைப் பொறுத்து மாறுதலடைகிறது. நேற்றைய நண்பன் இன்று பகைவனாவதும், இன்றைய நண்பன் நாளைய பகைவனாவதும் மனித சமூகத்தில் நடைபெறுவதுபோல் உலக நாடுகள் சமூகத்திலும் நடைபெறுகிறது. வல்லரசுகள் ஆக்கிரமிப்புச் செயல்களில் துணிந்து ஈடுபடும் போது உலகம் ஒரு பார்வையாளராகவோ அல்லது கண்டனம் செய்பவ ராகவோ இருக்கிறதேயன்றி ஆக்கிரமிப்பை அகற்ற நடவடிக்கையில் ஈடுபடுவதில்லை என்பதுக் குறிப்பிடத்தக்கது

## 12.1 நோக்கங்கள்

சமகால அரசியல் பிரச்சனைகளைப் பற்றியும் உலக விவகாரங்களில் அமெரிக்காவின் பங்கினையும் இதன் வெளிநாட்டுக் கொள்கையினைப் பற்றியும் பின்வருமாறுவிளக்கப்படுகின்றன

## 12.2 சமகால அரசியல் பிரச்சனைகள்

பல நூற்றாண்டுகள் சீனா கொரியாவின் சார்பாளராக இருந்தது. கொரியா முழு உரிமைபெற்ற நாடாக செயல்படவில்லை. பிறகு உருசியா, ஜப்பான் நாடுகளின் பேராசு போட்டிக்குள் மாட்டிக்கொண்டு தவித்தது. இறுதியில் 1910-இல் ஜப்பான் கொரியாவை கைப்பற்றியது. இரண்டாம் உலகப் போரின் போது 1943 டிசம்பர் 1-ம் நாள் பிரிட்டன், அமெரிக்க குடியரசு, சீனா முதலிய நாடுகள் கெய்ரோ அறிக்கையை வெளியிட்டன. காலப்போக்கில் கொரியாவிற்கு சுதந்திரம் அளிக்கப்படும் என இவ்வறிக்கை தெரிவித்தது. இரண்டாம் உலகப் போரின் இறுதியில் 1945 பிப்ரவரியில் ரூஸ்வெல்ட்டும். ஸ்டாலினும் ஓர் ஒப்பந்தம் செய்துகொண்டார்கள். இவ்வொப்பந்தத்தின்படி வடக்கில் ஜப்பான் சரணடைவதை உருசியா ஏற்றுக்கொள்ள வேண்டும் தெற்கில் அமெரிக்கா ஏற்றுக்கொள்ள வேண்டும். 38-வது இணைகோடு எல்லை (38 th Parallel) வரையறுக்கப்பட்ட எல்லையாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. பிப்ரவரியிலே உருசியாவும், அமெரிக்காவும் இதை செயல்படுத்தின. பிறகு டிசம்பர் 1945-ல் மாஸ்கோ மாநாடு நடைபெற்றது. இதில் பிரிட்டன், அமெரிக்க குடியரசு, சோவியத் யூனியன் முதலிய நாடுகளின் அயல் நாட்டு அமைச்சர்கள் கலந்துகொண்டனர்.

குறிப்பு

**(a)மேற்காசிய சிக்கல்கள்**

சோவியத் யூனியனுக்கு தெற்கேயும், பாகிஸ்தானுக்கு மேற்கேயும் உள்ள பகுதிகளை மேற்காசிய நாடுகள் என அழைக்கின்றோம். துருக்கியர் - கள் வாழும் துருக்கி, பாரசீகர்கள் வாழும் ஈரான், அரேபியர்கள் வாழும் ஈராக், எகிப்து, சவுதி அரேபியா, சிரியா, ஜார்டன் மற்ற அரேபிய நாடுகள் முகலிய நாடுகளைத்தான் மேற்காசிய நாடுகள் என அழைக்கின்றோம்.

**(b)பிரிட்டிஷ் காப்பாட்சி : எகிப்து**

1914 டிசம்பர் 18ம் நாள் எகிப்தில் பிரிட்டிஷ் காப்பாட்சி அமைக்கப். பட்டது. பிரிட்டனை எதிர்த்த, துருக்கியை ஆதரித்த எகிப்து சுல்தான் இரண்டாம் அப்பாஸ் ஹில்மி பதவியிலிருந்து நீக்கப்பட்டான். பதிலாக அவனுடைய மாமன் இளவரசன் காருவல் ஐமுயசரயடஸ எகிப்து நாட்டுச் சுல்தானாக பதவியில் அமர்த்தப்பட்டான். எகிப்து நாட்டு அயல் நாட்டு அலுவலகம் மூடப்பட்டது. பதிலாக இது சம்பந்தமாக ஓர் பிரிட்டிஷ் ஹை கமிஷனர் பதவியில் அமர்த்தப்பட்டார். 1922 ஆம் ஆண்டு பிரிட்டிஷ் காப்பாட்சி எகிப்தில் முடிந்தது. எகிப்து சுதந்திர நாடாக மாறியது. பாராளு மன்ற அமைப்புள்ள, பொம்பை அரசுடன் இணைந்த நிர்வாக அமைப்பு அமைக்கப்படவேண்டும் என தீர்மானிக்கப்பட்டது. பிரிட்டிஷ் ஹை கமிஷனர் அலுவலகம் தொடர்ந்து செயல்பட்டது. சுல்தான் பாவுத் (Faud) எகிப்து நாட்டு அரசராக பணியேற்றான். இப்புதிய அரசு அமைப்பை தேசிய வாதிகளும், அரசரும் முழு மனதுடன் ஏற்றுக்கொள்ளவில்லை.

மக்கள் உரிமைகளை பலவிதத்தில் இப்புதிய அரசியலமைப்பு பறித்தது. ஆகையால் அடிக்கடி கலகங்கள் தோன்றின. னாட்சியை (AUTONOMY] விரும்பினார். ஆகையால் 1953 இல் இவர் கைது செய்யப்பட்டார் பக்ஸிகுலாம் மொகமது ஜம்மு-காஷ்மீர் அரசுத் தலைவராக நியமிக்கப்பட்டார். இம்மாற்றங்களை விரும்பாத பாகிஸ்தான் ஐ.நா.சபையிடம் முறை யிட்டது. இருபடைகளும் ஜம்மு-காஷ்மீரிலிருந்து வெளியேற வேண்டும், ஐ.நா.படை இப்பகுதியில் நிறுத்தப்படவேண்டும், பிறகு காஷ்மீர் மக்கள் வாக்கெடுப்பு எடுக்கவேண்டும் என பாகிஸ்தான் கூறியது. ஐ.நா.சபையும் இக்கருத்துகளை கொண்ட தீர்மானத்தை விவாதித்தன. சோவியத் யூனியன் இதை எதிர்த்து, இந்தியாவை ஆதரித்து தன் மறுப்புவாக்கை பயன்படுத்தி ஐ.நா. தீர்மானத்தை தோற்கடித்தது.

கம்யூனிஸ்டுகளுக்கு எதிராக போர் புரிந்து வந்த பிரான்சு நாடு 1954 ஜூலை 20-ம் நாள் ஜெனிவாவில் ஓர் உடன்படிக்கை செய்து கொண்டது. இவ்வுடன்படிக்கையின்படி 1954 டிசம்பர் 29ம் தேதியிலிருந்து வியட்நாம் இறைமையையுடன் சுதந்திரத்துடன் இயங்கும் அச்சமயத்தில் 1945 செப்டம்பரில் ஏற்படுத்தப்பட்ட கம்யூனிஸ்டு குடியரசு வட வியட்நாமும், பிரான்சு, மேல் நாடுகள் ஆதரித்த தென் வியட்நாமும் இரு பகுதிகளாக பிரிக்கப்பட்டு செயல்பட்டு வந்தன. ஆகையால் இவ்விரண்டு பகுதிகளுக்கும் சுதந்திரம் கிடைத்தது. இருவியட்நாமையும் இணைக்க வேண்டும் என இவ்விரண்டு பகுதிகளும் விரும்பின.

தெற்கு வியட்நாமின் பேரரசர் பாவோதியிக்கும் (Baodei) அதன் முதல் அமைச்சர் என்கோ தின்தியம் (Ngodinh Diem) அவர்களுக்கும் பதவிபோட்டி ஏற்பட்டது. என்கோதின் தியம் வீரர் விடுதலை போர் வீரர் ஆவார். கத்தோலிக்க சமய பிரிவினைச் சேர்ந்தவர். பண்டைய அரசு குடும்பத்தை சேர்ந்தவர் 1955-இல் தென் வியட்நாமின் குழப்ப சூழ்நிலையை

*Self-Instructional Material*

குறைத்தார். பின் எக்ஸ்யூயென் ((Binxuyen) எனும் கொள்ளை கூட்டத் தினரை அடக்கினார். ராவோ டய் (Caodai) ஹோவா ஹவோ (Hoahao) எனும் செல்வாக்குள்ள கலக மனபான்மையுள்ள சமய பிரிவினர்களின் சக்தியை அடக்கி ஆண்டார். 1955, அக்டோபர் 23ம் நாள் இவரும், பேரரசரும் பதவிக்காக தேர்தலில் நின்றார்கள். என்கோதின் தியம் 98 விழுக்காடு வாக்குப் பெற்று வெற்றியடைந்தார்.

**தென்னாப்பிரிக்கப் பிரச்சனை- இன வொதுக்கல் கொள்கை 1973 வரை : அபார் தீட் :**

இடைக்காலத்தில் தென்னாப்பிரிக்காவுக்குச் சென்று குடியேறிய ஐரோப்பியர்கள் வெள்ளையர்கள் அல்லாத இனத்தினருக்கு எதிராக இன வொதுக்கல் கொள்கையை செயல்படுத்துகின்றார்கள். முதன்முதலாக 1948ஆம் ஆண்டுதான் அபார் தீட் (Aparatheid) எனும் சொல் வெள்ளையர்களால் பயன்படுத்தப்பட்டது.

## 12.3 உலக விவகாரங்களில் அமெரிக்காவின் பங்கு

ஒரு நாடு பிற நாடுகளுடன் வைத்துக் கொள்ளுகின்ற உறவு முறை தொடர்பான கொள்கையை வெளிஉறவுக் கொள்கை முக்கிய எனலாம். பன்னாட்டு அரசியலிலும், உறவுகளிலும் வெளி உறவுக் கொள்கை முக்கிய அம்சமாகத் திகழ்கிறது. பன்னாட்டு அரங்கத்தின் ஒரு நாட்டின் நிலை வெளி உறவுக் கொள்கையின் அடிப்படையில்தான் அமைகிறது. அமெரிக்காவில் வெளிநாட்டுக்கொள்கை உலக அளவில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த தாக உள்ளது. இரண்டாம் உலகப் போருக்குப்பிறகு அமெரிக்கா வலிமை பெருகி ஒரு வல்லரசாக மாற்றியது. அமெரிக்கா பின்பற்றும் வெளிஉறவுக் கொள்கை பன்னாட்டுறவில் மிகப்பெரிய தாக்கத்தை ஏற்படுத்துகிறது.

### (a) பொது உடைமைக் கொள்கையைப் பரவவிடாமல் தடுத்தல்

இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு அமெரிக்கா வல்லரசு அரசியல் மேற்கொண்டது. பொது உடைமைக் கொள்கையை கட்டு படுத்துதல் அல்லது அதனைப் பரவவிடாமல் தடுத்தல் என்பதே அமெரிக் காவின் வெளி உறவுக் கொள்கையாக அமைந்தது. இதன் காரணமாகவே உலகில் அமெரிக்காவுக்கும் சோவியத் யூனியனுக்கும் இடையே கெடுப்பிடிப்போர் ஏற்பட்டு உலகில் பதட்ட நிலை காணப்பட்டது.

அமெரிக்க குடியரசுத்தலைவர் ஹாரிட்ருமன் காலத்தில் பல முக்கிய முடிவுகள் எடுக்கப்பட்டன. உலகில் பரவி வரும் கம்யூனிசத்தை தடுக்க பல முயற்சிகள் எடுக்கப்பட்டன. கிரிசிலும் துருக்கியிலும் கம்யூனிசம் பரவு வதைத் தடுக்கவும், அந்த நாடுகளின் சுகந்திரத்தைப் பாதுக்காவும் ட்ருமன் 1947 மார்ச் 12 ல் தனது திட்டத்தை அமெரிக்க காங்கிரசில் சமர்ப்பித்தார். அதுவே ட்ருமன் கொள்கை எனப்படுகிறது. உலகம் முழுவதும் கம்யூனிசம் பரவ விடாமல் தடுக்கும் அமெரிக்காவின் வெளி உறவுக் கொள்கைக்கு ட்ருமன் கொள்கை செயல் விபரம் கொடுத்தது. மேலும் கம்யூனிசம் பரவவிடாமல் தடுப்பதற்காக மார்ஷல் திட்டம் 1947 ஜீன் 5ல் வெளியிடப்பட்டது. இது கம்யூனித்திற்க்கு எதிராக அமெரிக் காவின் முக்கியமான திட்டமாகும். இது தவிர ட்ருமன் காலத்தில்தான் ஜெர்மானியப் பிரச்சனையின் முக்கிய அம்சமான பெர்லின் சிக்கல் ஏற்பட்டது. பெர்லின் சிக்கலின் விளைவாகவே கெடுப்பிடிப்போர் மேலும் தீவிரமடைந்தது.

குறிப்பு

**(b) பிராந்திய கூட்டுப் பாதுகாப்பு ஒப்பந்தங்கள்**

கம்யூனிசத்தை ஒழித்துக் கட்டுவதற்காக அமெரிக்கா இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு பல பிராந்திய கூட்டுப் பாதுகாப்பு ஒப்பந்தங் களைச் செய்து கொண்டது. 1947-ஆகஸ்ட் 15ல் அமெரிக்க நாடுகள் அனைத்தும் பங்கு கொண்ட மாநாடு ஒன்று கூட்டப்பட்டது. அதன் இறுதியில் லியோ உடன்படிக்கை ஆக்கிரமிப்பு போர்களைத் தடுப்பதற்கும், ஆக்கிரமிப்பு செய்யும் நாடுகள் மீது நடவடிக்கை எடுக்கவும் வழி செய்தது. இது அமெரிக்காவின் புதிய வெளிநாட்டுக் கொள்கையை வெளிப் படுத்தியது.

மேற்கு ஐரோப்பாவில் கம்யூனிசம் பரவவிடாமல் தடுப்பதற்காக அட்லாண்டிக் கடல் பகுதியில் உள்ள நாடுகளுடன் அமெரிக்கா 1949 - ஏப்ரல் 4ம் தேதி வடஅட்லாண்டிக் ஒப்பந்தம் ஒன்றை ஏற்படுத்திக் கொண்டது. இந்த நேட்டோ நாடுகளின் கூட்டுப்படை ஒன்றும் உருவாக்கப் பட்டது. இது தவிர ஆன்சுங் ஒப்பந்தம் சீட்டோ, பாக்தாத் உடன்படிக்கை என்று பல உடன்படிக்கைகளை கம்யூனிசம் பரவவிடமால் தடுத்து நிறுத்துவதற்காக அமெரிக்கா செய்து கொண்டது.

**(c)கம்யூனிசத்தை தடுப்பதற்க்காக செய்த போர்கள்**

கெடுப்பிடிப்போர் காலத்தில் அமெரிக்கா கொரியாவில் நேரடி யாகவே தலையிட்டது. 1950ல் ஏற்பட்ட கொரியப் போரில் அமெரிக்கா தன் கொரியாவை ஆதரித்தது. அமெரிக்காவின் முயற்சியால் கொரியாவுக்கு ஐ.நா. படைகள் அனுப்பப்பட்டன. வட கொரியப் படைகள் தோற்கடிக்கப் பட்டு விரட்டப்பட்டன. கொரியப்போர் நின்றாலும் கொரியா இரண்டாகப் பிரிந்தே உள்ளது. ரஷ்யாவின் ஆதரவுடன் வடவியட்நாமிய அரசு, தெற்கு வியட் நாமில் கம்யூனிசத்தைப் பரப்ப முயற்சி எடுத்தது. இதனைத் தடுப்பதற்காக அமெரிக்கா வடவியட்நாம் மீது படையெடுத்தது. 1964-65 ல் வியட்நாம் போர் நடைபெற்றது. இப்போரில் 1 லட்சம் அமெரிக்க வீரர்கள் கொல்லப் பட்டனர். வட வியட்நாம் அமெரிக்காவைத் தோற்கடிக்க முடியவில்லை. 1968-ல் போர் முடிவடைந்தது.

**(d) 1960 முதல் 1980 வரை அமெரிக்காவின் வெளி உறவுக் கொள்கை**

1960-ல் பதவிக்கு வந்த ஜான் கென்னடி வெளிஉறவுக் கொள் கையில் ஒரு முன்னோக்கு கொள்கையைப் பின்பற்றினார். பிரச்சினைகளைச் சமாதானமாகவே தீர்த்துக் கொள்ள வேண்டும் என்று அவர் கூறிய போதிலும் கம்யூனிச ஆதிக்கங்களுக்கெதிராக கடினமான போக்கையே பின்பற்றினார். இவரது ஆட்சிக் காலத்தில் கியூபாவில் இருந்த பிடல் கேஸ்ட்ரோவின் அரசாங்கத்தைக் கவிழ்ப்பதற்க்கான திட்டங்களை மேற்கொண்டார். ஆனால் அதில் வெற்றி பெறவில்லை . இதன் தொடர்ச்சியாக 1962-ல் ரஷ்யா உதவி யுடன் கியூபா ஏவுகணைத் தளங்களை அமைக்க முயற்சித்தது. இதனை அமெரிக்கா எதிர்க்கவே நெருக்கடி ஏற்ப்பட்டது. ஒரு அணு ஆயுதப்போர் ஏற்படும் சூழல் உருவானது. ஆனால் கென்னடி அப்பிரச்சினையைத் திறமை யாகக் கையாண்டு சோவியத் யூனியனுடன் ஏற்படவிருந்த நேரடி மோதலைத் தவிர்த்தார்.

*Self-Instructional Material*

கென்னடி ஆட்சிக் காலத்தில் லத்தீன் அமெரிக்கா நாடுகள் உடன் "முன்னேற்றத்திற்கான உடன்பாடு'' திட்டம் ஒன்று ஏற்படுத்தப்பட்டது. இதன்படி லத்தீன் அமெரிக்க நாடுகளுக்கு பொருளாதார உதவி செய்ய

முடிவு செய்யப்பட்டது. 1962-ஜீலை மாதம் கூடிய இரண்டாவது ஜெனிவா மாநாட்டில் அமெரிக்காவும் 13 நாடுகளும் சேர்ந்து லாவோசின் சுதந்திரத் தையும் நடுநிலையையும் அங்கீகரித்தன. 1963-ஜீலை மாதம் அமெரிக் காவும் சோவியத் யூனியனும் சேர்ந்து அணு ஆயுத சோதனைத்தடை ஒப்பந்தம் ஒன்றை ஏற்படுத்திக் கொண்டன. கென்னடி மக்களாட்சி நாடு களுடன் நல்லுறவை வளர்க்க முற்பட்டார். இவர் காலத்தில் இந்தியாவுடன் நல்லுறவு ஏற்படுத்தப் பட்டது. இந்தியா போன்ற வளர்ச்சியடையாத நாடுகளுக்கு ீ.டு.480 என்ற திட்டத்தின்கீழ் ஏராளமான பொருளாதார உதவி கொடுக்கப்பட்டது.

1963 ல் பதவிக்கு வந்த லிண்டன் ஜான்சன் காலத்தில் பிற நாடு களின் விவகாரங்களில் தலையிடுவதன் மூலம் அமெரிக்கா தனது செல்வாக்கை தொடர்ந்து பாதுகாக்க வேண்டும் என்ற கொள்கையை அமெரிக்கா பின்பற்றியது. லத்தீன் அமெரிக்காவில் உள்ள லடாமிலிக்கன் குடியரசு நாட்டில் நேரடியாக அமெரிக்கா தலையிட்டு தனது ஆதிக்கத்தை நிலைநாட்டியது. மத்திய அமெரிக்க குடியரசான குவாட்டி மாலாவில் 1964 ல் அமெரிக்க உணவு நிறுவனம் அமெரிக்காவுக்கு ஆதரவான ஒரு பிற்போக்கு ராணுவ ஆட்சியை நிறுவியது. இவர் காலத்தில்தான் அமெரிக்கா வியட்நாம் போரில் 1965-ல் ஈடுபட்டது. பின்னர் பதவிக்கு வந்த ரிச்சர்ட் நிக்சன் 'நிக்சன் கோட்பாடு" என்ற தனது வெளிஉறவுக் கொள்கையை 1969 ஜீலை மாதம் வெளியிட்டார். அதன்படி தனது நட்பு நாடுகளின் பாதுக்காப்பிற்காக அமெரிக்கா உதவும் என்றும், அதே சமயம் உலகின் சுகந்திர நாடுகளின் பாதுகாப்புக்காக அனைத்து நடவடிக்கைகளையும், திட்டங்களையும் அமெரிக்கா மட்டுமே மேற்கொள்ள முடியாது என்று நிக்சன் கோட்பாடு குறிப்பிட்டது. இவரது காலத்தில் தான் வியட்நாம் போரை முடித்து அமைதியை நிலைநாட்டும் ஒப்பந்தம் 1973-ஜனவரி 27-ல் கையெழுத்தாகியது.

நிக்சன் காலத்தில் அமெரிக்காவுக்கும் சீனாவுக்கு மிடையே நெடுங்காலமாக இருந்து வந்த பகைமை உணர்வு மறைந்து நட்பு உணர்வு மலர்ந்தது. 1971-ஏப்ரல் மாதம் அமெரிக்க மேஜை பந்தாட்டக் குழு ஒன்று சீனா வந்தது. அதனை வரவேற்ற சீனா தலைவர் ஒ.என்லாய் அமெரிக்க சீன நட்புறவு ஏற்படும் என்று நம்பிக்கை தெரிவித்தார். அப்போது அமெரிக்க வெளிஉறவுச் செயலராக இருந்த ஹென்றி கிஸ்ஸிங்கன் அமெரிக்க சீன நட்புறவு ஏற்பட காரணமானார். 1971-ல் சீனாவை ஐ.நா சபையில் சேர்த்துக் கொண்டு தைவான் வெளியேற்றும் தீர்மானத்தை அமெரிக்கா ஆதரித்தது 1972 பிப்ரவரியில் "அமைதிக்கான சீனப் பயணத்தை" மேற்கொண்டார் நிக்சன். இந்த புதிய சீனக்கொள்கையின் விளைவாக அமெரிக்காவும் சீனாவும் பன்னாட்டுப் பிரச்சினைகளை போர் வலிமை முலம் தீர்ப்பதில்லை என்று ஒப்புக் கொண்டன.

1972-மே மாதம் நிக்சன் சோவியத் யூனியனுக்கு விஜயம் செய்தார். அப்போது சால்ட் - 1 ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டது. இந்த உடன்படிக் கையின்படி கண்டம் விட்டு கண்டம் தாண்டும் ஏவுகணை கட்டுபடுத்தப் பட்டது. ஜெரால்ட் போர்ட் ஆட்சிக் காலத்தில் 1975 - ல் அமெரிக்கா சோவியத் யூனியன் உட்பட 35 நாடுகள் ஹெல்சிங்கியில் நடைபெற்ற பாது காப்பு மற்றும் ஒத்துழைப்பு மாநாட்டில் கலந்து கொண்டன. இதில் மேற் கத்திய நாடுகளுக்குமிடையிலான பதட்ட நிலையைக் குறைக்க முடிவு செய்யப்பட்டது.



அமெரிக்க வெளி உறவுக் கொள்கையின் மிகப்பெரிய சாதனையாக கருதப்படுவது 1978-ல் இஸ்ரேலுக்கும் எகிப்துக்கும் இடையே செய்து

**குறிப்பு**

கொள்ளப்பட்ட கேம்ப் டேவிட் ஒப்பந்தமாகும். 1977-ல் பதவிக்கு வந்த ஜிம்மிகார்ட்டர் மத்தியக் கிழக்கில் சமாதானத்தை ஏற்படுத்த முயற்சிகளை மேற்கொண்டார். அமெரிக்காவில் உள்ள கேம்ப் டேவிட் என்ற இடத்தில் நடைபெற்ற 13-நாள் பேச்சு வார்த்தைக்குப் பிறகு எகிப்துக்கும் இஸ்ரேலுக்கும் இடையே ஒப்பந்தம் கையெழுத்தானது. 31 வருடங்களாக எகிப்துக்கும் இஸ்ரேலுக்கும் இருந்து வந்த போர் நிலை இதன் மூலம் முடிவுக்கு வந்தது.

1979-ல் அமெரிக்கா சீனாவுடன் ராஜதந்திர உறவை ஏற்படுத்தியது. அத்துடன் தைவானிலிருந்த தனது படையை அமெரிக்கா விலக்கிக் கொண்டது. இவ்வாறு சீனாவை முறைப்படி அங்கீகரித்தது. அமெரிக்கா 1979-ல் ஆப்கானிஸ்தானில் ரஷ்யா படையெடுப்பு செய்த போது அதனை கார்ட்டர் கடுமையாகக் கண்டித்தார். அத்துடன் ரஷ்யாமீது பல பொருளாதாரத் தடை நடவடிக்கைகளை மேற்கொண்டார்.

1979-நவம்பர் 4 ல் ஈரான் புரட்சியாளர்கள் டெஹ்ரானில் இருந்த அமெரிக்க தூதரகத்தைக் கைப்பற்றி 60 அமெரிக்க அதிகாரிகளை பிணையக் கைதிகளாக பிடித்துக் கொண்டனர். இவர்களை விடுவிப்பதற்காக கார்ட்டர் எல்லா முயற்சிகளையும் மேற்கொண்டார். ஈரான் மீது பொருளாதாரத் தடை விதிக்கப்பட்டது. 1980-ஏப்ரல் மாதம் பிணையக் கைதிகளை விடுவிக்க ஒரு மீட்பு படை அனுப்பப்பட்டது. ஆனால் அது தோல்வியில் முடிவடைந்தது.பின்னர் ஏற்பட்ட சமாதான முயற்சிகளின் விளைவாக 444 நாட்களுக்குப் பிறகு அமெரிக்கபிணைக்கைதிகள் விடுவிக்கப்பட்டனர்.

### (f) 1980 முதல் இன்றுவரை வெளிஉறவுக் கொள்கை

1981 ல் பதவிக்கு வந்த ரொனால்ட் ரீகளின் வெளிஉறவுக் கொள்கை பழமை வாதம் சார்ந்ததாகக் கருதப்படுகிறது. ரிகன் ஆட்சிக் காலத்தில் பன்னாட்டு பயங்கரவாதம் உச்ச கட்டத்தை அடைந்தது. 1983 ஏப்ரலில் பெய்ரூட்டிலிருந்த அமெரிக்க தூதரகம் குண்டு வைத்து தகர்க்க பட்டது. அக்டோபர் மாதம் பெய்ரூட்டிலிருந்த அமெரிக்க கப்பற்படை தலை மையகம் தகர்க்கப்பட்டது. 1988-ல் அமெரிக்க விமானம் தகர்க்கப்பட்டு 259 பேர் கொல்லப்பட்டனர். இந்த பயங்கரவாத நடவடிக்கைகளுக்கெல்லாம் மூல காரணம் லிபியாதான் என்று ரீகன் குற்றம் காட்டி லிபியா தலைநகர் திரிபோலியில் தாக்குதல் நடத்தப்பட்டது. அதன் பிறகே லிபியா தனது பயங்கரவாத நடவடிக்கைகளை நிறுத்தி கொண்டது.

விண்வெளியில் செயற்கைக் கோள்களின் முலம் அணு ஆயுத சாலைகள் அமைக்கின்ற விரிவான திட்டமே நட்சத்திர போர்கள் திட்ட மாகும். எதிர் காலத்தில் சோவியத் யூனியன் தனது ஏவுகணைக் கொண்டு அமெரிக்காவையோ அதன் நேசநாடுகளையோ தாக்க முற்பட்டால் அந்த தாக்குதல் முயற்சியைக் கண்டறிந்து ஏவுகணைகளைச் செயலிழக்கச் செய்ய விண்வெளியில் ஆயுதக் கோள்களை அமைக்கும் திட்டமே நட்சத்திர போர் திட்டமாகும். இந்த திட்டத்தை சோவியத் யூனியன் கடுமையாக கண்டித்தது. 1985-ல் சோவியத் யூனியன் அதிபர் கோர்பசேவ் மேற்கொண்ட படைக்கு மறுப்பு நடவடிக்கைகளின் விளைவாக அமெரிக்காவுக்கும், சோவியத் யூனியனுக்குமிடையே பல படைக்குறைப்பு ஒப்பந்தங்கள் செய்து கொள்ளப்பட்டன.

*Self-Instructional Material*

அமெரிக்க வெளி உறவில் 1989-ல் பதவியேற்ற ஜார்ஜ்புஷ் சிறப்பு மிக்க பல சாதனைகளைப் படைத்தார். இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு அமெரிக்காவின் வெளி உறவுக் கொள்கையின் முக்கிய அம்சமாக

விளங்கியது. “கம்யூனிசம் உலக நாடுகளில் பரவ விடாமல் தடுப்பதேயாகும்“.ட்ருமன் முதல் ரீகன் வரையிலான குடியரசுத் தலைவர்கள் சோவியத் யூனியனின் இந்த பேராபத்தைத் தடுப்பதிலேயே தங்கள் முழு நேரத்தையும் செலவிட்டனர். அதனுடைய பலன் புஷ் காலத்தில் தான் கிடைத்தது.

சோவியத் அதிபர் கோர்பசேவ் பின்பற்றிய தாராளக் கொள்கை கையின் விளைவாக சோவியத் யூனியன், போலந்து, செக்கோஸ்லோ வேகியா, வரங்கேரி, யூகேஸ்லேவியா, ருமேனியா, பல்கேரியா, அல்பேனியா போன்ற நாடுகளில் கம்யூனிசம் விழ்ச்சி அடைந்தது.. இதனால் கெடுபிடிப் போர் முடிவடைந்தது. 1990-மார்ச்சில், பாரிசில் நடைபெற்ற வரலாற்று சிறப்புமிக்க மாநாட்டில் புஷ், கோர்பசேவ் மற்றும் நேட்டோ வார்சா ஒப்பந்தம் நாடுகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டு ஒருவருக்கொருவர் ஆக்கிரமிப்புச் செயல்களில் ஈடுபடுவதில்லை என்ற வரலாற்றுச் சிறப்புமிக்க ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டது.

1990-ஆகஸ்ட் 2ம் தேதி ஈராக்கியப் படைகள் குவைத்தை ஆக்கிர மித்த போது புஷ் கடுமையாக எதிர்த்தார். குவைத்தை மீட்பதற்கான சமா தான முயற்சிகள் தோல்வியடைந்ததால் அமெரிக்காவின் தலைமையிலான பன்னாட்டுப் படைகள் ஈராக் மீது போர் தொடுத்தன. இப்போரின் இறுதியில் குவைத் விடுவிக்கப்பட்டது. இதனால் அமெரிக்காவின் வலிமையும் உறுதித் தன்மையும் பன்னாட்டரங்களில் உயர்ந்தது. 1993 ல் பதவியேற்ற பிப்கிளிண்டன் காலத்தில் இந்தியாவுக்கும் அமெரிக்காவுக்குமிடையே நட்புறவு மலர்ந்தது. 1999-ல் இந்தியாவில் உள்ள கார்கில் பகுதியை பாகிஸ்தான் ஆக்கிரமித்த போது அதனை கடுமையாக கண்டித்தார் கிளிண்டன். கார்கில் போருக்கு பிறகு அமெரிக்காவுக்கும் இந்தியாவுக்கும் இடையே நெருக்கமான உறவு ஏற்பட்டது. 2000-ல் கிளிண்டன் இந்தியாவுக்கு நட்பு முறையிலான பயணத்தை மேற்கொண்டு வந்தார். இந்த பயணம் இந்திய அமெரிக்க நட்புறவை மேலும் வலுப்படுத்தியதும், கிளிண்டன் காலத்தில் நடைபெற்ற முக்கியமான நிகழ்ச்சி 1993-செம்டம்பரில் இஸ்ரேலுக்கும் பாலஸ்தீனியர் களுக்கும் இடையே செய்து கொள்ளப்பட்ட சமாதான ஒப்பந்தம் ஆகும். இந்த ஒப்பந்தம் செய்துகொள்ளப்பட முக்கிய காரணமாக விளங்கியவர் கிளிண்டன் ஆவார்.

போஸ்னியாவிலுள்ள செர்பிய இனத்தவரிடையே பல ஆண்டு களாக மோதல் நடைபெற்றது. இப்பிரச்சினையில் அமெரிக்கா தலையிட்டது. அமெரிக்க வெளிஉறவு அமைச்சர் வாரன் கிறிஸ்டோபர் முயற்சியினால் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு 1955-நவம்பரில் அமைதி ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டது. இதே போல யூகோஸ்லேவியாவிலுள்ள கொசோவா மாகாணத்தில் ஏற்பட்ட பிரச்சினையை தீர்ப்பதற்க்கும் அமெரிக்கா தலையிட்டது. 2001-ல் பதவியேற்ற ஜார்ஜ்வில்லியம் புஷ் காலத்தில் அமெரிக்க வெளிஉறவுக்கொள்கை கடுமையான சோதனைகளை எதிர்நோக்கி இவர் பதவி ஏற்ற வருடத்திலேயே உலகத்தையே உலுக்கிய பயங்கரமான நிகழ்ச்சி நடைபெற்றது. 2001-செப்.11-ம் தேதி இஸ்லாமிய பயங்கரவாதி களால் நியுயார்க் நகரில் இருந்த 110 மாடிகளைக் கொண்ட உலக வர்த்தக மையக் கட்டிடம் தரை மட்டம் ஆக்கப்பட்டது. ஆறாயிரம் பேர் இறந்தனர். இதற்குக் காரணமான அல்கைதா பயங்கரவாதிகளின் புகலிடமாக விளங்கிய ஆப்கானிஸ்தான் மீது அமெரிக்கா தாக்குதல் நடத்தியது. பயங்கரவாதத்திற் கெதிரான அமெரிக்காவின் உலகளாவிய போர் ஆரம்பமானது.

2003-மார்ச் 20ம் தேதி அமெரிக்காவையும் அதன் நட்பு நாடு களையும் அச்சுறுத்துவதாகவும், மனிதகுலத்தை அழிக்கக்கூடிய ரசாயன

குறிப்பு

ஆயுதங்களை உற்பத்தி செய்து வைத்திருப்பதாகவும் கூறி ஈராக் மீது அமெரிக்கா படையெடுத்தது. ஈராக் அதிபர் சதாம் உசேன் ஆட்சியிலிருந்து விரட்டப்பட்டார். தலைமறைவான சதாம் பின்னர் கண்டுபிடிக்கப்பட்டு தூக்கிலிடப்பட்டார். ஜார்ஜ்புஷ் ஆட்சிக் காலத்தில் நடைபெற்ற முக்கியமான நிகழ்ச்சி 2008-அக் 11-ல் இந்தியாவும் அமெரிக்காவும் செய்து கொண்ட "இந்திய அமெரிக்க சிபிலியன் அணு ஒப்பந்தம்" ஆகும். இந்த ஒப்பந்தத்தின் படி இரு நாடுகளும் அமைதி முயற்சிகளுக்காக சர்வேதச சட்டங்களுக்கு உட்பட்டு அணு சக்தியைப் பயன்படுத்தும்.

தற்போது அமெரிக்க குடியரசுத் தலைவராக உள்ள பராக் ஒபாமா உலக நாடுகளுக்கிடையே தூதரக ரீதியான உறவு, அரசு முறையிலான உறவு ஆகியவற்றை வளர்க்கவும், உலக மக்களிடையே நல்லுறவை பேணிப் பாதுகாக்கவும் முயற்சிகள் எடுத்து வருகிறார். இஸ்லாமிய நாடுகளுடன் உள்ள இடைவெளியைக் குறைத்து நல்லுறவுக்கான முயற்சிகளை எடுத்து வருகிறார். அணு ஆயுதம் இல்லாத உலகத்தை உருவாக்க வேண்டும் என்ற இவரது தொலை நோக்கு கண்ணோட்டம் அணு ஆயுதப் பரவல் தடை மற்றும் ஆயுதக் கட்டுப்பாட்டு பேச்சுவார்த்தைகளுக்கு உத்வேதம் அளித்துள்ளது.

## 12.4 கொரியா போர் (Korean Crisis)

ஐ.நா. சபை வரலாற்றிலே முதன்முறையாக ஒரு நாடு ஆக்கிரமிப்பாளர் என்று அறிவிக்கப்பட்டு அதற்கு எதிராக உறுப்புநாடு - நாடுகளின் படை திரட்டப்பட்டு ஆக்கிரமிப்பு அகற்றப்பட்டது கொரியாவில் தான் ஆகும். கூட்டுப் பாதுகாப்பு முறை முதன் முதலில் சோதித்துப்பார்க்கப் பட்டதும் கொரியாவில் தான். அந்நாடு (1950 - 53) வரை மூன்றாண்டு காலம் வல்லரசுகளின் கெடுபிடிப் போரின் போர்க்களமாக ஆக்கப்பட்டது. அதன் காரணமாக பன்னாட்டு அரசியலில் கொரியாச்சிக்கல் மிக முக்கிய நிகழ்ச்சியாகக் கருதப்படுகிறது.

**(a) இரண்டாம் உலகப் போரின் முடிவில் கொரியா :**

கொரியா தூரக்கிழக்கு எனப்படும் கிழக்கு ஆசியாவில் அமைந்துள்ள ஒரு தீபகற்பமாகும். சீனா, ஜப்பான் ஆகிய வல்லரசுகளுக்கு இடையில் அமைந்திருந்த இந்த சிறிய நாட்டின் மீது வல்லரசுகளின் ஆதிக்கப் பார்வை விழுந்தது. 19-ம் நூற்றாண்டில் அது சீனாவின் மேலதிகாரத்திற்கு உட்பட்டு திறை செலுத்தும் நாடாக இருந்தது. 1985ல் நடைபெற்ற சீன ஜப்பானிய போரின் இறுதியில் செய்துகொள்ளப்பட்ட ஷிமனோ சேக்கி உடன்படிக்கைப்படி அந்த நாடு சுதந்திர நாடானது. அதன் பின் ஜப்பானின் அரசியல் பொருளாதார செல்வாக்கு தடையில்லாமல் அங்கு படரத்தொடங்கியது. 1905-ல் நடைபெற்ற ரஷ்ய ஜப்பானிய போரில் ரஷ்யா தோற்கடிக்கப்பட்டபின் ஜப்பானின் ஆதிக்கம் அங்கு பெருகியது. அதன்பின் 1911-ல் கொரியா ஜப்பானிய பேரரசுடன் இணைக்கப்பட்டது. 1945 ஆகஸ்ட் 12ல் ஜப்பான் சரணடையும் வரை கொரியா ஜப்பானிய பேரரசுக்கு உட்பட்ட நாடாகவே இருந்தது.

**(b)இரண்டாம் உலகப்போருக்கு பிறகு கொரியா :**

போர் நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது 1943-ல் கெய்ரோவில் சியாங்கேஷேக், சர்ச்சில், ரூஸ்வெல்ட் ஆகியோர் சந்தித்துப் பேசிய பின்னர் ஒரு அறிக்கையை வெளியிட்டார்கள். அந்த அறிக்கையில் ஜப்பான் ஆதிக்கத்தில் இருந்து கொரியா விடுவிக்கப்பட்டு விரைவில் சுகந்திர நாடாக்கப்படவேண்டும் என்று அறிவித்தனர். 1945-ல் நடைபெற்ற பாஸ்ட்டாம் மாநாடு கொரியா தற்காலிகமாக ரஷ்யா, அமெரிக்கா ஆகிய நாடுகளின்

கட்டுப்பாட்டின் கீழ் வைக்கப்பட வேண்டும் என்று தீர்மானித்தது. ஆனால் இரண்டாம் உலகப்போரில் ஜப்பான் சரணடைந்ததும் தென் கொரியா அமெரிக்காவின் கட்டுப் பாட்டின் கீழ் வந்தது. தென் கொரியாவிற்கும் வடகொரியாவிற்கும் இடையே எல்லையாக - 38-வது அட்ரேகை அமைந்தது. இதற்கிடையே வல்லரசுகளிடையே கெடுபிடிபோர் ஏற்பட்டு விட்டதால் கொரியாவின் எதிர்காலம் பற்றி ஒருமித்த கருத்து ஏற்படாமல் போய்விட்டது. கொரியா சுதந்திர நாடாக்கப்பட வேண்டும் என்ற உறுதி மொழி காற்றில் பறக்க விடப்பட்டது.

**(c)ஐ.ந. சபையில் கொரியா பிரச்சனை:**

1947-ல் கொரியா பிரச்சனை ஐ.நா சபைக்கு எடுத்துச் செல்லப் பட்டது. இந்த சிக்கலைத் தீர்க்க ஐ.நா.சபை கொரியாவிற்கான தற்காலிக குழு ஒன்றை 1947இல் ஏற்படுத்தியது. கொரியா முழுவதிற்குமான முறை யான தேர்தலை நடத்தி தேசிய அரசு ஒன்றை உருவாக்குவதே இந்த குழுவின் நோக்கமாகும். இந்த தீர்மானத்தை ரஷ்யா எதிர்த்தது. இதனால் வடகொரியா பகுதிக்குச் செல்ல ரஷ்யாவிற்கு அனுமதி மறுக்கப்பட்டது. ஆனால் 1948 மே மாதம் தற்காலிக குழுவின் மேற்பார்வையில் அமெரிக்காவின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள தென் கொரியாவில் தேர்தல் நடைபெற்றது. அதன் விளைவாக டாக்டர். சிங்கமன்ரீ என்பவர் தலைமையில் ஒரு தேசிய அரசு அமைக்கப்பட்டது. ஆனால் அந்த அரசு ஐ.நா. சபையின் உறுப்பினர் ஆவதை ரஷ்யா தனது தடுப்பாணையின் மூலம் தடுத்தது. இதன்பின் ரஷ்யாவின் ஆதிக்கத்தின் கீழ் உள்ள வட கொரியாவிலும் 1948 செப்டம்பர் 9ஆம் தேதி சிம் இச்சும் என்பவர் தலைமையில் பியான்யாங் என்ற நகரில் ஜனநாயக மக்கள் குடியரசு ஒன்றை ரஷ்யா அமைத்தது.

இவ்வாறு வல்லரசுகளின் கெடுப்பிடி போரின் காரணமாக இரண்டு கொரியாக்கள் தோன்றின. இரண்டு கொரியாவுமே தாங்கள் தான் முழுமை யான அதிகாரப்பூர்வமான அரசு என்று உரிமை கொண்டாடி வன்முறை மூலம் கொரியாவை ஐக்கியப்படுத்தப் போவதாக பயமுறுத்தி வந்தன. ஆனால் கெடுபிடிப்போரின் காரணமாக அது சாத்தியப்படவில்லை. தென் கொரியாவை தங்கள் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவர வட கொரியா 1950 ஜூன் 25ம் தேதி தென் கொரியா மீது படையெடுத்தது.

**(d)வட கொரிய படையெடுப்பும் ஐ.நா. சபையும்:**

படையெடுப்பு ஆரம்பித்த உடனேயே அமெரிக்கா வட கொரியாவின் ஆக்கிரமிப்பை ஐ.நா. சபையிடம் முறையிட்டது. ஐ.நா. பாதுகாப்பு சபையில் இப்பிரச்சனை விவாதிக்கப்பட்டது. அந்த சபை வட கொரிய ஆக்கிரமிப்பை கண்டித்ததுடன் அமைதியை ஏற்படுத்துவதற்காக 38வது அட்சரேகைக்கு வடக்கே பின்வாங்குமாறு வட கொரியாவை கேட்டுக் கொண்டது. ஆனால் வட கொரியப் படைகள் தொடர்ந்து முன்னேரிக் கொண்டிருந்ததால் பாதுகாப்பு சபை உறுப்பினர் நாடுகளின் ராணுவ உதவியை நாடியது.

முதன் முறையாக ஐ.நா. கொடியின் கீழ் கூட்டுப்பாதுகாப்பு முறைப்படி ஆக்கிரமிப்பை அகற்றுவதற்காக சுமார் 16 நாடுகள் தங்கள் படைகளை அனுப்பின. இந்த பன்னாட்டுப் படைகள் அமெரிக்க தளபதி மேக் ஆர்தர் தலைமையில் அணிவகுத்து நின்றன. இதற்கிடையில் வட கொரியப் படைகள் தென் கொரிய தலைநகரான சியோலைக் கைப் பற்றின. எனவே ஐ.நா. படைகள் வட கொரியப் படைகளை 1950 செப்டம்பர் 15-ல் சியோலுக்கு அருகில் உள்ள இஞ்சான் என்ற இடத்தில்

குறிப்பு

தோற்கடித்தன. சியோல் மீட்கப்பட்டது. 38வது அட்சரேகையைக் கடந்து வட கொரியாவின் தலைநகரான பியான்யாங் நகரும் கைப்பற்றப்பட்டது.

**(e) கொரியப் போரில் சீனாவின் தலையீடு:**

கொரியப் போர் நடைபெற்று கொண்டிருந்த போது கம்யூனிஸ்ட் சீனா வட கொரியாவிற்கு தன்னுடைய ஆதரவை வெளிப்படையாக தெரிவித்தது. போர் நடைபெற்றுக் கொண்டிருந்த போது அமெரிக்க போர் விமானங்கள் தங்கள் நாட்டின் பகுதிக்குள் எல்லை மீறி நுழைவதாக சீனா குற்றம் சாட்டியது. இதனால் சீனா ''தொண்டர் படை'' என்ற பெயரில் இரண்டு லட்சத்திற்கும் அதிகமான படைவீரர்களை கொரியாவிற்குள் அனுப்பியது. சீன தலையீடு காரணமாக ஐ.நா. சபையின் படையின் முன்னேற்றம் தடுத்து நிறுத்தப்பட்டது. அத்துடன் இந்த சீனப் படை 38வது அட்சரேகையையும் தாண்டி சியோல் நகரை கைப்பற்றியது. உடனே ஐ.நா.சபை சீனாவை ஆக்கிரமிப்பாளர் என கண்டித்தது. இந்த ஆக்கிரமிப்பை அகற்ற தொடர்ந்து உறுதியுடன் போராட தீர்மானித்தது. அமெரிக்காவின் தீவிர விமான தாக்குதல் காரணமாக போரின் போக்கு மீண்டும் மாறத்தொடங்கியது. 1951 மார்ச் 15-ம் தேதி சியோல் நகர் மீட்கப்பட்டது. யாலு நதியையும் கடந்து சீனாவை தாக்கவும் தேவையானால் அணுகுண்டையும் பயன்படுத்தவும் தளபதி மேக் ஆர்தர் திட்டமிட்டார். சீனாவுடனான இந்த போர் உலகப் போராக மாறிவிடும் என அஞ்சிய அமெரிக்க அதிபர் ட்ரூமன் மேக் ஆர்தரை நீக்கிவிட்டு ரிட்ஜ்வே என்பவரை தளபதியாக நியமித்தார். ஐ.நா. படை 38வது அட்சரேகையை நெருங்கிய போது வட கொரியாவின் எதிர் தாக்குதல் மிக கடுமையாக இருந்தது. உடனே ஐ.நா. சபை சீனாவிற்கு ஆயுத தளவாடங்களை ஏற்றுமதி செய்வதை தடைசெய்தது.

**(f)போர் நிறுத்ததிற்கான நடவடிக்கைகள் :**

1950 டிசம்பர் 12-ம் தேதி ஆசிய, ஆப்பிரிக்க நாடுகள் இந்தியாவின் முயற்சி காரணமாக போர் நிறுத்தத்திற்கான தீர்மானம் ஒன்றை கொண்டு வந்தன. ஆனால் சீனாவின் முரண்பாட்டால் இந்த தீர்மானத்தை நிறைவேற்ற முடியவில்லை. என்றாலும் இந்தியாவின் தொடர்ச்சியான முயற்சி களால் 1951 ஆகஸ்ட் மாதம் முதலில் கீசாங் நகரிலும் பின்னர் பான்முன்லாமிலும் பேச்சு வார்த்தைகள் நடைபெற்றன. பேச்சு வார்த்தைகளின் போது போர்க் கைதிகளை பரிமாறிக்கொள்ளும் பிரச்சனை பெரும் சிக்கலாக மாறியது. இறுதியில் 1956 ஜுலை மாதம் போர் நிறுத்த ஒப்பந்தம் கையெழுத்தானது. அதன்படி 38-வது அட்சரேகை இரண்டு கொரியாகளின் எல்லையாக தீர்மானிக்கப்பட்டது. போர் நிறுத்தத்தைக் கண்காணிப் பதற்காக இந்தியா, போலந்து, செக்கோஸ்லோவாக்கியா, சுவீடன், சுவிட்சர்லாந்து போன்ற ஐந்து நாடுகளின் குழு ஒன்று இந்திய தளபதி திம்மையாவின் தலைமையில் அமைக்கப்பட்டது. போர்கைதிகளின் பரிமாற்றம் 1954 ஜனவரில் முடிவடைந்தது. கொரிய பிரச்சனைக்கு இறுதி தீர்வு காண்பதற்காக ஒரு அரசியல் மாநாடு கூட்டப்படவேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது. ஆனால் கொரிய பிரச்சனை தீர்க்கப்படாமல் கொரியா இன்றுவரை பிளவுபட்டுதான் இருக்கின்றது.

**(g) மதிப்பீடு:**

கொரியச் சிக்கல் பன்னாட்டு உறவில் முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சியாக கருதப்பட்டது. இது கெடுபிடிப் போரின் முக்கிய கட்டமாக சுட்டிக்காட்டப்படுகிறது. "பொதுவுடமையை பரவவிடாமல் தடுத்தல்" என்ற அமெரிக்காவின் கொள்கை ஐ.நா.சபையின் மூலமாக நிறைவேற்றப் பட்டு விட்டது. சீன கம்யூனிஸ்ட் அரசு தூரக்கிழக்குப் பகுதியில் தனது

ஆதிக்கத்தை நன்றாக நிலைநாட்டிவிட்டது. முக்கியமாக இந்த போர் அமெரிக்க, கம்யூனிஸ்ட் மோதலாகவே கருதப்பட்டது. சர்வதேசப் பிரச்சனைகளில் எந்தப்பக்கமும் சாராமல் நடுநிலையாக நின்று போரை நிறுத்துவதற்காக இந்தியா எடுத்த முயற்சிகள் போற்றுதலுக்குரியது.

ஐ.நா. சபை நடவடிக்கைகளில் பெரும் மாறுதல்கள் ஏற்பட்டது. “அமைதிக்கு ஒன்றுபடுதல்” என்ற தீர்மானத்தின்படி பொதுச்சபையின் முக்கியத்துவம் அதிகரிக்கப்பட்டது. எல்லாவற்றிற்கும் மேலாக கூட்டுப் பாதுகாப்புக் கொள்கை முதன் முதலாக செயல்படுத்தி பார்க்கப்பட்டது. மேலும் படை வலிமை மூலம் ஆக்கிரமிப்பை தடுப்பது என்ற ஐ.நா. சபையின் முயற்சி முக்கியத்துவம் பெற்றது. இந்த கொரியப் போர் ஏறக்குறைய 37 மாதங்கள் நடைபெற்றது. சுமார் 5 லட்சம் பேர் உயிர் இழந்தனர். அமெரிக்கா 22 மில்லியன் டாலர் செலவு செய்தது. ஆனாலும் இந்த போரின் விளைவாக இரண்டு கொரியாக்களும் இணையமுடியவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. 1954-ல் ஜெனிவாவில் நடைபெற்ற மாநாட்டின் படியும் கொரிய இணைப்பு ஏற்படவில்லை . 1971-ல் இந்த இருநாடுகளிலும் உள்ள செஞ்சிலுவை சங்கங்கள் இரண்டு கொரியாகளுக்கு இடையே நல் உறவை வளர்க்க பேச்சுவார்த்தை நடத்தினாலும் எந்த ஒப்பந்தமும் ஏற்படவில்லை. இன்றுவரை இரண்டு கொரியாக்களும் தனித் தனி நாடுகளாகவே இருந்துவருகின்றன.

## 12.5 வியட்நாம் போர்

கம்யூனிஸ்டுகளுக்கு எதிராக போர் புரிந்து வந்த பிரான்சு நாடு 1954 ஜூலை 20-ம் நாள் ஜெனிவாவில் ஓர் உடன்படிக்கை செய்து கொண்டது. இவ்வுடன்படிக்கையின்படி 1954 டிசம்பர் 29ம் தேதியிலிருந்து வியட்நாம் இறைமையையுடன் சுதந்திரத்துடன் இயங்கும் அச்சமயத்தில் 1945 செப்டம்பரில் ஏற்படுத்தப்பட்ட கம்யூனிஸ்டு குடியரசு வட வியட்நாமும், பிரான்சு, மேல் நாடுகள் ஆதரித்த தென் வியட்நாமும் இரு பகுதிகளாக பிரிக்கப்பட்டு செயல்பட்டு வந்தன. ஆகையால் இவ்விரண்டு பகுதிகளுக்கும் சுதந்திரம் கிடைத்தது. இருவியட்நாமையும் இணைக்க வேண்டும் என இவ்விரண்டு பகுதிகளும் விரும்பின. தெற்கு வியட்நாமின் பேரரசர் பாவோதியிக்கும் (Baodei) அதன் முதல் அமைச்சர் என்கோ தின்தியம் (Ngodinh Diem) அவர்களுக்கும் பதவிபோட்டி ஏற்பட்டது. என்கோதின் தியம் வீரர் விடுதலை போர் வீரர் ஆவார். கத்தோலிக்க சமய பிரிவினைச் சேர்ந்தவர். பண்டைய அரசு குடும்பத்தை சேர்ந்தவர் 1955-இல் தென் வியட்நாமின் குழப்ப சூழ்நிலையை குறைத்தார். பின் எக்ஸ்யூயென் ((Binxuyen) எனும் கொள்ளை கூட்டத் தினரை அடக்கினார். ராவோடய் (Caodai) ஹோவா ஹவோ (Hoahao) எனும் செல்வாக்குள்ள கலக மனபான்மையுள்ள சமய பிரிவினர்களின் சக்தியை அடக்கி ஆண்டார். 1955, அக்டோபர் 23ம் நாள் இவரும், பேரரசரும் பதவிக்காக தேர்தலில் நின்றார்கள். என்கோதின் தியம் 98 விழுக்காடு வாக்குப் பெற்று வெற்றியடைந்தார்.

அக்டோபர் 26, 1955ல் வியட்நாம் குடியரசின் ஜனாதிபதியாக மாறினார். ஜனாதிபதி டியமிற்கு அமெரிக்க உதவி மிகுதியாக கிடைத்தது. 1954 ஜெனிவா உடன்படிக்கையை அமெரிக்க முழுமனதோடு வரவேற்க வில்லை. வடவியட்நாமில் கம்யூனிஸ்டு அரசு தோன்றுவதை அமெரிக்கா ஆதரிக்கவில்லை. கம்யூனிஸ்டு வியட்நாம், ருசியா, சீனா முதலிய நாடு களின் ஆதரவுடன் தென்கிழக்காசியா முழுவதும் பரவி விடுவார்களோ என அமெரிக்கா அஞ்சியது. ஆகையால் கம்யூனிஸ்டுகள் பரவுவதை தடுக்கவும், குறிப்பாக தென்வியட்நாம், கம்போடியா, லாவோஸ் முதலிய பகுதிகளை

**குறிப்பு**

பாதுகாக்கவும் 1954இல் ஆஸ்திரேலியா, பிரிட்டன், பிரான்சி, நியூஜிலாந்து, பாகிஸ்தான், பிலிப்பைன்ஸ், தாய்லாந்து முதலிய நாடுகளுடன் இணைந்து சியோடோ (SEATO) இராணுவ ஒப்பந்தம் அமெரிக்கா செய்துகொண்டது.

1956 ஜூலை மாதம் வியட்நாம் முழுவதும் தேர்தல் நடத்தி ஐக்கிய வியட்நாமை அமைக்கவேண்டும் என ஜெனிவா மாநாட்டு அறிக்கையில் பறப்பட்டிருந்தது. ஆனால் தற்சமயம் தென்வியட்நாம் இதை எதிர்த்தது. தேர்தல் நடத்த முன்வரவில்லை. ஏனென்றால் அவ்வாறு தேர்தல் நடத்தினால் கம்யூனிஸ்டு வடவியட்நாமில் சுதந்திரத்துடன் நேர்மையான தேர்தல் நடத்தமுடியாது எனக் கூறியது. வடவியட்நாம் தேர்தல் நடத்த வேண்டும் என பிரசாரம் செய்தது. வடவியட்நாம் பொது உடைமை கொள்கையை செயல்படுத்துவதில் மும்முரமாக இறங்கியது. சுரங்கங்கள், தொழிற்சாலைகள், தேசஉடைமை யாக்கப்பட்டன. நிலங்களும், வேளாண்மையும் தேசஉடைமையாக்கப் பாட்டன. பொருளாதார வளர்ச்சிக்கு பாடுபட தொடங்கியது.

சோவியத் யூனியனும் கம்யூனிஸ்டு சீனாவும் வடவியட்நாமிற்கு உதவி பசய்தன. ஆனால் சோவியத் யூனியன் சீனா இடையே மனக்கசப்பு எற்பட்டபோது வட வியட்நாம் இருகட்சியினரையும் ஆதரிக்கவில்லை. மேலும் கம்யூனிஸ்டு நாடுகளிலிருந்து கிடைக்கும் உதவியை குறைத்துக் கொண்டது. 1955இல் 65.3 விழுக்காடு அயல்நாட்டு உதவி கிடைத்தது. இதுவே 19.19 விழுக்காடாக“ 1962இல் குறைந்தது.

வடவியட்நாம் தென்வியட்நாமை பிடிப்பதில் அக்கறைகாட்டியது. வடவியட்நாமின் ஆதரவாளர் தென் வியட்நாமின் தான்லாவோகாங்கட்சியினர். [Danlao Cong) களுக்கு வடவியட்நாம் உதவி அளித்தது. இவர்கள் வல்லந்த முறைகளை பயன்படுத்தி அச்சுறுத்தினார்கள். கிராமத்தலைவர்கள், அலுவலர்கள், ஆசிரியர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுக் கொலை செய்யப். பட்டார்கள். 1959 இல் இவர்கள் செய்த கலகம் மிகுதியானது. 1960இல் மேகாஸ்டெல்டாவின் சிலபகுதிகள், சைகானின் தென்கிழக்கில் உள்ள கடற்கரை பகுதிகள், மத்தியவியட்நாமில் உள்ள மேட்டு நிலங்கள் இவர்கள்வசம் இருந்தன . இவர்களுடைய வெற்றிக்குடியமும் ஓர் காரணமும் ஆகும். அவருடைய சர்வாதிகார ஆட்சியை, குறிப்பாக நாட்டுப்புற மக்கள் வெறுத்தனர்.

தென் வியட்நாமில் கம்யூனிஸ்டுகள் வெற்றியடைந்து வந்ததால் அமெரிக்கா தென் வியட்நாமிற்கு அளிக்கும் உதவியை அதிகரித்தது. 1963 அக்டோபரில் 16,000 அமெரிக்க படைவீரர்கள் தென்வியட்நாமில் இருந்தார்கள். ஆனாலும் நாட்டுப்புறங்களில் தென்வியட்நாம் அரசுக்கு ஆதரவு கிடையாது. கம்யூனிஸ்டுகளுக்குத்தான் ஆதரவு கிடைத்தது. ஆகையால் டியம் ஆட்சிக்கு எதிராக 1960 நவம்பரிலும், 1962 பிப்ரவரியிலும் சிறுகலகங்கள் தோன்றின. 1963ல் புத்த சமய பிரிவினர் ஹீயூ, சைகான் முதலிய பகுதிகளில் கிளர்ச்சி செய்தனர். இறுதியில் படைத்தலைவர் துவாங் வான்மின் டியமை கொலை செய்துவிட்டு 1963 நவம்பர் 1-ம் நாள் பதவிக்கு வந்தார். இவருக்கு அமெரிக்காவின் ஆதரவும் இருந்தது.

1964இல் அமெரிக்கா ஜனாதிபதி ஜான்சன் வடவியட்நாமை தாக்குவதில் தென்வியட்நாம் அக்கரையில்லாமல் இருக்ககூடாது வட வியட்நாமை அமெரிக்கா தாக்கும் எனவும் எச்சரிக்கைச் செய்தார். 1964 ஆகஸ்டுமாதம் வடவியட்நாம் டொங்கின் வளைகுடாவில் குண்டு வீசியது இரண்டு அமெரிக்க போர் கப்பல்கள் நாசமாக்கப்பட்டன. உடனடியாக

அமெரிக்க விமானங்கள் வடவியட்நாமை தாக்கின. 1965 மார்ச்சு மாதம் ஜனாதிபதியாக ஜான்சன் தேர்ந்தெடுக்கப் பட்டவுடன் வடவியட்நாம் குண்டு வீசு அதிகரிக்க தொடங்கியது. அமெரிக்க படைவீரர்களை வியட்நாமிற்கு அனுப்புவது என ஏப்ரல் 1965இல் அமெரிக்கா தீர்மானம் எடுத்தது. 1965-இல் 1,50,000 அமெரிக்க படைவீரர்களும், 1968-இல் 5,50,000 அமெரிக்க படைவீரர்களும் வியட்நாமில் இருந்தார்கள், தென்வியட்நாம் கம்யூனிஸ்டு வியட்காங்கிற்கு ஆதரவு அளிப்பதற்காக வடவியட்நாம் படை தென் வியட்நாமில் நுழைந்தது.

நிபந்தனையல்லாமல் பேச்சு வார்த்தை நடத்துவதற்கு அமெரிக்கா தயாராக இருக்கின்றது என ஜனாதிபதி ஜான்சன் 1965 ஏப்ரலிலிருந்து கூறத்தொடங்கினர். வடவியட்நாமும், தென் வியட்நாம் கம்யூனிஸ்டுகளும் (NLF) பின்வரும் நான்கு நிபந்தனைகளை போட்டார்கள் :

- குண்டு வீசுவதை அமெரிக்க நிறுத்தவேண்டும்: அமெரிக்க படைவீரர்கள் வியட்நாமை விட்டு வெளியேறவேண்டும்
- ஜெனிவா ஒப்பந்தத்தில் கூறியபடி போரில்லா அமைதிப் பகுதியாக வியட்நாம் மாற்றப்படவேண்டும்
- தென்வியட்நாம் கம்யூனிஸ்டுகளின் திட்டத்தை ஏற்றுக்கொள்ளவேண்டும்
- அமைதி முறையில் இருவியட்நாமும் ஒன்று சேர்க்கப்பட வேண்டும்.

அமெரிக்கா குண்டு வீசுவதை ஓரளவு நிறுத்திய காலங்கள் : 1965 மே 12லிருந்து 18 1965 டிசம்பர் 24லிருந்து 1968 ஜனவரி 31வரை, 1967 பிப்ரவரி 8லிருந்து 12வரை கனடா, வாடிகன் (Vatican), ஐ. நா. சபைத்தலைவர், யூதான்ட். பிரிட்டன், சோவியத் யூனியன் முதலியவர்கள் செய்த அமைதி காணும் முயற்சிகள் தோல்வியடைந்தன. அமெரிக்க படை வெளியேறவேண்டும், தென்வியட்நாம் கம்யூனிஸ்டுகளும் ஓர் கூட்டரசு அமைப்பில் சேர்த்துக் கொள்ளப்படவேண்டும், என 1967ல் கம்யூனிஸ்டுகள் நிபந்தனை போட்டார்கள். அமெரிக்க குண்டு வீசுவதை நிறுத்தினால் பேச்சுவார்த்தை நடத்த முன் வருவோம் என 1969 ஜனவரியில் கூறினார்கள். 1968 ஜனவரியிலிருந்து கம்யூனிஸ்டுகள் நகரப்புறங்களையும் தாக்கத் தொடங்கினார்கள். உலக நாடுகள் எல்லாம் அமெரிக்காவை கண்டித்தன. ஆஸ்திரேலியா, மலேசியா, நியுசிலாந்து, பிலிப்பைன்ஸ், தென்கொரியா, தாய்லாந்து முதலிய நாடுகள் மட்டும் தான் அமெரிக்காவை ஆதரித்தன. அமெரிக்க பொதுமக்களும் அமெரிக்காவை கண்டனம் செய்யத் தொடங்கினார்கள்.

இக்காரணங்களால் கம்யூனிஸ்டு போட்ட நிபந்தனையை ஏற்றுக் கொண்டு பேச்சுவார்த்தை நடத்த அமெரிக்கா தயாராக இருக்கின்றது என ஏப்ரல் 3, 1969 இல் ஜான்ஸன் அறிவித்தார். எந்த இடத்தில் பேச்சுவார்த்தை நடத்துவது என்பதைப் பற்றி ஒரு மாதம் சச்சரவு நடத்தது. இறுதியில் பாரிஸில் மே 10ம் தேதி உரையாடல் தொடங்கியது. குண்டு வீசுவதை முழுவதிலும் அமெரிக்கா நிறுத்தி விடவேண்டும் என வடவியட்நாம் கூறியது. தென்வியட்நாம் கம்யூனிஸ்டுகள் (Vietong வியட்காங்) படை நடவடிக்கை கொஞ்சம் குறைய வேண்டும் என அமெரிக்கா கூறியது. இறுதியில் இரு வரும் விட்டுப்பிடித்தால் வியட்காங்கும் பேச்சு நடத்த கலந்துக் கொள்ளலாம் என அக்டோபர் 31ம் தேதி அமெரிக்கா அறிவித்தது.

குறிப்பு

உடனடியாக மாநாடு நடக்கவில்லை. வியட்காங்கை பேச்சு வார்த்தையில் கலந்து கொள்ள அமெரிக்க அனுமதித்ததை தென்வியட்நாம் அரசு வரவேற்கவில்லை. அமெரிக்காவின் புது ஜனாதிபதி நிக்ஸன் பின்வரும் நிபந்தனைகளை வெளியிட்டார்: பன்னிரெண்டு மாதத்திற்குள் தாய்நாட்டை சேராத படைவீரர்கள் தென்வியட்நாமை விட்டு வெளிறேயவேண்டும் ஓர் பன்னாட்டு கமிஷன் உதவியுடன் வியட்காங், தென்வியட்நாமியர்களிடையே உள்ள போர் நிறுத்திவைக்கப்படும் போர்கைதிகள் பரிமாற்றம் ஏற்படும் ஜெனிவா ஒப்பந்தம் மீண்டும் செயல்படும் தேர்தல் நாடுமுழுவதும் நடக்கும். ஆனால் இதுசம்பந்தமாக பேச்சுவார்த்தை ஓர் முடிவும் இல்லாமல் இருந்தது.

1969 ஜுன் 8ம் நாள் 25,000 அமெரிக்க படைவீரர்கள் தென்வியட் நாமை விட்டு வெளியேறுவார்கள் என ஜனாதிபதி நிக்ஸ்ன் அறிவித்தார். அதற்குமேலும் அமெரிக்க படைவீரர்கள் வெளியேறுவது பின்வரும் மூன்று சூழ்நிலையை பொறுத்திருக்கின்றது: (1) போர் நடத்துவதற்கு தென்வியட் நாமிய படை எவ்வாறு முன்னேற்றம் அடைகின்றது (2) வியட்காங்-வட வியட்நாமியர் போர்செயல்கள் (3) பாரிஸ்பேச்சின் முன்னேற்றம். இறுதியில் 1969 இறுதிக்குள் மேலும் பல அமெரிக்க படைவீரர்கள் வெளியேறுவார்கள் என நிக்ஸன் அறிவித்தார். 1970 ஆம் ஆண்டு ஏப்ரலுக்குள் 1,20,000 அமெரிக்க படைவீரர்கள் வியட்நாமை விட்டு வெளியேறினர்.

**உங்கள் முன்னேற்றத்தைச் சரிபார்க்கவும்**

1. கொரியப் போரின் தோற்றத்தைக் குறிப்பிடுக?
2. வியட்னாம் சிக்கல் பற்றி விவரிக்கவும்?

## 12.6 உங்கள் முன்னேற்றத்தை சோதிக்கும் வினாக்களுக்கான விடைகள்?

வியட்காங்கை பேச்சு வார்த்தையில் கலந்து கொள்ள அமெரிக்க அனுமதித்ததை தென்வியட்நாம் அரசு வரவேற்கவில்லை. அமெரிக்காவின் புது ஜனாதிபதி நிக்ஸன் பின்வரும் நிபந்தனைகளை வெளியிட்டார்: பன்னிரெண்டு மாதத்திற்குள் தாய்நாட்டை சேராத படைவீரர்கள் தென்வியட்நாமை விட்டு வெளிறேயவேண்டும் ஓர் பன்னாட்டு கமிஷன் உதவியுடன் வியட்காங், தென்வியட்நாமியர்களிடையே உள்ள போர் நிறுத்திவைக்கப்படும் போர்கைதிகள் பரிமாற்றம் ஏற்படும் ஜெனிவா ஒப்பந்தம் மீண்டும் செயல்படும் தேர்தல் நாடுமுழுவதும் நடக்கும். ஆனால் இதுசம்பந்தமாக பேச்சுவார்த்தை ஓர் முடிவும் இல்லாமல் இருந்தது.

ஐ.நா. சபை வரலாற்றிலே முதன்முறையாக ஒரு நாடு ஆக்கிரமிப்பாளர் என்று அறிவிக்கப்பட்டு அதற்கு எதிராக உறுப்புநாடு - நாடுகளின் படை திரட்டப்பட்டு ஆக்கிரமிப்பு அகற்றப்பட்டது கொரியாவில் தான் ஆகும். கூட்டுப் பாதுகாப்பு முறை முதன் முதலில் சோதித்துப்பார்க்கப் பட்டதும் கொரியாவில் தான். அந்நாடு (1950 - 53) வரை மூன்றாண்டு காலம் வல்லரசுகளின் கெடுபிடிப் போரின் போர்க்களமாக ஆக்கப்பட்டது. அதன் காரணமாக பன்னாட்டு அரசியலில் கொரியாச்சிக்கல் மிக முக்கிய நிகழ்ச்சியாகக் கருதப்படுகிறது.

## 12.7 சுருக்கவுரை

*Self-Instructional Material*

ஐ.நா. சபை நடவடிக்கைகளில் பெரும் மாறுதல்கள் ஏற்பட்டது. “அமைதிக்கு ஒன்றுபடுதல்” என்ற தீர்மானத்தின்படி பொதுச்சபையின் முக்கியத்துவம் அதிகரிக்கப்பட்டது. எல்லாவற்றிற்கும் மேலாக கூட்டுப்

பாதுகாப்புக் கொள்கை முதன் முதலாக செயல்படுத்தி பார்க்கப்பட்டது. மேலும் படை வலிமை மூலம் ஆக்கிரமிப்பை தடுப்பது என்ற ஐ.நா. சபையின் முயற்சி முக்கியத்துவம் பெற்றது.

கொரியப் போர் ஏறக்குறைய 37 மாதங்கள் நடைபெற்றது. சுமார் 5 லட்சம் பேர் உயிர் இழந்தனர். அமெரிக்கா 22 மில்லியன் டாலர் செலவு செய்தது. ஆனாலும் இந்த போரின் விளைவாக இரண்டு கொரியாக்களும் இணையமுடியவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. 1954-ல் ஜெனிவாவில் நடைபெற்ற மாநாட்டின் படியும் கொரிய இணைப்பு ஏற்படவில்லை . 1971-ல் இந்த இருநாடுகளிலும் உள்ள செஞ்சிலுவை சங்கங்கள் இரண்டு கொரியாகளுக்கு இடையே நல் உறவை வளர்க்க பேச்சுவார்த்தை நடத்தினாலும் எந்த ஒப்பந்தமும் ஏற்படவில்லை. இன்றுவரை இரண்டு கொரியாக்களும் தனித் தனி நாடுகளாகவே இருந்துவருகின்றன

பன்னிரெண்டு மாதத்திற்குள் தாய்நாட்டை சேராத படைவீரர்கள் தென்வியட்நாமை விட்டு வெளிரேயவேண்டும் ஓர் பன்னாட்டு கமிஷன் உதவியுடன் வியட்காங், தென்வியட்நாமியர்களிடையே உள்ள போர் நிறுத்திவைக்கப்படும் போர்கைதிகள் பரிமாற்றம் ஏற்படும் ஜெனிவா ஒப்பந்தம் மீண்டும் செயல்படும் தேர்தல் நாடுமுழுவதும் நடக்கும். ஆனால் இதுசம்பந்தமாக பேச்சுவார்த்தை ஓர் முடிவும் இல்லாமல் இருந்தது.

1969 ஜுன் 8ம் நாள் 25,000 அமெரிக்க படைவீரர்கள் தென்வியட் நாமை விட்டு வெளியேறுவார்கள் என ஜனாதிபதி நிக்ஸ்ன் அறிவித்தார். அதற்குமேலும் அமெரிக்க படைவீரர்கள் வெளியேறுவது பின்வரும் மூன்று சூழ்நிலையை பொறுத்திருக்கின்றது: (1) போர் நடத்துவதற்கு தென்வியட் நாமிய படை எவ்வாறு முன்னேற்றம் அடைகின்றது (2) வியட்காங்-வட வியட்நாமியர் போர்செயல்கள் (3) பாரிஸ்பேச்சின் முன்னேற்றம். இறுதியில் 1969 இறுதிக்குள் மேலும் பல அமெரிக்க படைவீரர்கள் வெளியேறுவார்கள் என நிக்ஸன் அறிவித்தார். 1970 ஆம் ஆண்டு ஏப்ரலுக்குள் 1,20,000 அமெரிக்க படைவீரர்கள் வியட்நாமை விட்டு வெளியேறினர்.

2003-மார்ச் 20ம் தேதி அமெரிக்காவையும் அதன் நட்பு நாடு களையும் அச்சுறுத்துவதாகவும், மனிதகுலத்தை அழிக்கக்கூடிய ரசாயன ஆயுதங்களை உற்பத்தி செய்து வைத்திருப்பதாகவும் கூறி ஈராக் மீது அமெரிக்கா படையெடுத்தது. ஈராக் அதிபர் சதாம் உசேன் ஆட்சியிலிருந்து விரட்டப்பட்டார். தலைமறைவான சதாம் பின்னர் கண்டுபிடிக்கப்பட்டு தூக்கிலிடப்பட்டார். ஜார்ஜ்புஷ் ஆட்சிக் காலத்தில் நடைபெற்ற முக்கியமான நிகழ்ச்சி 2008-அக் 11-ல் இந்தியாவும் அமெரிக்காவும் செய்து கொண்ட “இந்திய அமெரிக்க சிபிலியன் அணு ஒப்பந்தம்“ ஆகும். இந்த ஒப்பந்தத்தின் படி இரு நாடுகளும் அமைதி முயற்சிகளுக்காக சர்வேதச சட்டங்களுக்கு உட்பட்டு அணு சக்தியைப் பயன்படுத்தும்.

தற்போது அமெரிக்க குடியரசுத் தலைவராக உள்ள பராக் ஒபாமா உலக நாடுகளுக்கிடையே தூதரக ரீதியான உறவு, அரசு முறையிலான உறவு ஆகியவற்றை வளர்க்கவும், உலக மக்களிடையே நல்லுறவை பேணிப் பாதுகாக்கவும் முயற்சிகள் எடுத்து வருகிறார். இஸ்லாமிய நாடுகளுடன் உள்ள இடைவெளியைக் குறைத்து நல்லுறவுக்கான முயற்சிகளை எடுத்து வருகிறார். அணு ஆயுதம் இல்லாத உலகத்தை உருவாக்க வேண்டும் என்ற இவரது தொலை நோக்கு கண்ணோட்டம் அணு ஆயுதப் பரவல் தடை மற்றும் ஆயுதக் கட்டுப்பாட்டு பேச்சுவார்த்தைகளுக்கு உத்வேதம் அளித்துள்ளது.

குறிப்பு

## 12.8 சுய மதிப்பீடு வினாக்கள் மற்றும் பயிற்சிகள்

**சுருக்கமான கேள்விப் பதில்கள்**

1. கொரியச் சிக்களை பற்றி மதிப்படுக?
2. சமகால அரசியல் பிரச்சனைகள் பற்றி குறிப்பு வரைக?

**விரிவான கேள்விப் பதில்கள்**

1. ஐ.நா சபையின் சாதனைகளைப் பற்றி கட்டுரை வரைக?
2. இரண்டாம் உலகப் போருக்குப் பின் அமெரிக்காவில் ஏற்பட்ட உலக மாற்றங்களைப் பற்றி குறிப்பிடுக?

## 12.9 மேலும் படிக்க


- Bruce Cumings. (2010). ***The Korean War: A History.*** Random House Publishing Group. Ian Bremmer. (2015). ***Superpower: Three Choices for America's Role in the World Portfolio.*** Joseph S. Nye Jr. (2015). ***Is the American Century Over?*** . Polity. Phillip Jennings.(2010). ***The Politically Incorrect Guide to the Vietnam War.*** Simon and Schuster.

குறிப்பு

# தொகுதி IV உலகமயமாதல்
# அலகு 13 நாடுகளுக்குகிடையிலான போட்டிகள்


13.0 அறிமுகம்
13.1 நோக்கங்கள்
13.2 காங்கோ விவகாரம்
13.3 கியூபான் நெருக்கடி
13.4 இந்தோ - சீனா மோதல்
13.5 அராப் - இஸ்ரேல் மோதல்
13.6 உங்கள் முன்னேற்றத்தை சோதிக்கும் வினாகக்ள்
13.7 சுருக்கவுரை
13.8 முக்கிய வார்த்தைகள்
13.9 சுய மதிப்பீடு வினாக்கள் மற்றும் பயிற்சிகள்
13.10 மேலும் படிக்க


## 13.0 அறிமுகம்

பிரச்சனைகளையெல்லாம் பின் தள்ளிவிட்டு இந்தியாவுடன் சீனா நல்லுறவை ஏற்படுத்த விரும்புகிறது. காரணம் சோவியத் ரஷ்யாவின் வீழ்ச்சிக்குப்பிறகு சீனா மிகப்பெரிய ராணுவ மற்றும் பொருளாதார வல்லரசாக மாறி வருகிறது. எனவே அமெரிக்கா இந்தியாவை தன் பக்கம் இழுத்துவிடுமோ என்ற பயம் சீனாவிடம் உள்ளது. எனவேதான் இந்தியாவிடம் தனது அணுகுமுறையை மாற்றி உள்ளது. மேலும் சீனாவிலும் இஸ்லாமிய அடிப்படைவாதம் வளர்த்து வருகிறது. அதற்காக இந்தியாவிடமிருந்து தகவல்களையும், பயங்கரவாதத்தை அணுகும் முறைகளையும் கேட்டறிய நினைக்கிறது. தற்போது இந்தியாவும் சீனாவும் மிகப்பெரிய சந்தைகளாக உருவெடுத்துள்ளன. எனவே பொருளா தார ரீதியாகவும் இந்தியாவுடன் தொடர்புகளை வைத்தக்கொள்ள சீனா விரும்புகிறது.

ஐ.நா.வின் பாதுகாப்புச் சபைக்கு சென்ற பொழுது ஐ. நா. வின் படை ஒன்றை காங்கோவிற்கு அனுப்பத் தீர் மானிக்கப்பட்டது. அத்தருணத்தில் காங்கோக் குடியரசின் தலைவர் ஜோசப்கஸாவுபு, தலைமை அமைச்சர் லுமும்பாவைப் பதவியை விட்டு நீக்கியதுடன் எல்லியோ (ELieo) என்பவரைத் தலைமை அமைச்சராக நிய. மித்தார். லுமும்பா தன் பதவியைத் திரும்பவும் கைப்பற்றுவதற்கான முயற்சிகளில் ஈடுபட்ட பொழுது அவர் ட்ஸாம்பேயின் ஆட்களால் கொலை செய்யப்பட்டார்.

## 13.1 நோக்கங்கள்

சர்வதேச அளவில் ஏறபட்ட காங்கோ பிரச்சினை கியூபா பிரச்சினை மற்றும் அரபு இஸ்ரேல் பிரச்சினைகளைப் பற்றி விளக்குவுதுர்கு இவ்வியல் அமையப்பெற்றுள்ளது

## 13.2 காங்கோ விவகாரம்

பெல்ஜியத்தின் ஆதிக்கத்தின் கீழிருந்த காங்கோ 1960 ஆம் ஆண்டு விடுதலைப் பெற்றது. அது ஆறு மாகாணங்களைக் கொண்டிருக்கிறது. அங்கு 1960 ஆம் ஆண்டு மே மாதம் 31 ஆம் நாள் நடத்தப்பட்ட தேர்தல் களில் வெற்றி அடைந்த பேட்ரிஸ்லுமும்பா அந்நாட்டில் முதல் தலைமை அமைச்சரானார். சிறிது காலத்தில் அங்கு அவருக்கு எதிர்ப்புகள் தோன் றின. கடாங்கா மாகாணத்தின் தலைவரான மாய்ஸ்ட்ஸாம்பே பிரிவினைக் கொடியை உயர்த்தினார். அதன் விளைவாக அங்கு உள் நாட்டுக் குழப்பம்

*Self-Instructional Material*

**குறிப்பு**

தோன்றியது. இப்பிரச்சனை ஐ.நா.வின் பாதுகாப்புச் சபைக்கு சென்ற பொழுது ஐ. நா. வின் படை ஒன்றை காங்கோவிற்கு அனுப்பத் தீர் மானிக்கப்பட்டது. அத்தருணத்தில் காங்கோக் குடியரசின் தலைவர் ஜோசப்கஸாவுபு, தலைமை அமைச்சர் லுமும்பாவைப் பதவியை விட்டு நீக்கியதுடன் எல்லியோ (ELieo) என்பவரைத் தலைமை அமைச்சராக நிய. மித்தார். லுமும்பா தன் பதவியைத் திரும்பவும் கைப்பற்றுவதற்கான முயற்சிகளில் ஈடுபட்ட பொழுது அவர் ட்ஸாம்பேயின் ஆட்களால் கொலை செய்யப்பட்டார்.

இத்தருணத்தில் லுமும்பாவின் சாவிற்கு ஐ.நா.வின் காரியதரிசியான டாக்- ஹாம்மர் ஜோல்டே காரணம் என்று சோவியத் யூனியன் குற்றம் சாட்டியது. எனவே அவர் தன் பதவியைத் துறக்க வேண்டுமென வற்புறுத் தியது. எனினும் டாக் ஹாம்மர் ஜோல்டு தன்பணியைச் செய்யும் வண்ணம் காங்கோவிற்குச் சென்றார். அவ்வேளையில், தெற்குரொடீஷியாவிலிருந்த பிரிட்டிஷ் தலைமை அமைச்சரை சந்திக்கச் சென்றார். ஆனால் செல்லும் வழியில் அவர் சென்ற விமானம் விபத்திற்குள்ளாகவே அவர் இறக்க நேரிட்டது. இதன் விளைவாக காங்கோவில் பல பிரச்சனைகள் தோன் றின. பிரச்சனைகள் மிகுந்து காணப்பட்ட காங்கோவில் அமைதி திரும்பு வதற்குப் பல ஆண்டுகள் ஆயிற்று. பிரிவினை வாதத்தைத் தூண்டிய ட்ஸாம்பே நாட்டின் தலைமை அமைச்சரானார். (1964). அதற்கடுத்த ஆண்டு தளபதி மொபுட்டு ஒரு புரட்சியின் மூலம் ஆட்சியைக் கைப்பற்றிய வுடன் ஜனாதிபதி கஸாவுபு தன் பதவியை இழந்தார்.

## 13.3 கியூபான் நெருக்கடி

லத்தீன் அமெரிக்க நாடுகளில் ஒன்றான கியூபாவில் 1652-ஆம் பாடிஸ்டா (Batista) என்பவர் தன்னுடைய சர்வாதிகார ஆட்சியை நிறுவினார். இவருடைய ஆட்சி ஒரு கொடுங்கோலாட்சியாக விளங்கியது. இதனால் மக்களுக்குப் பெருத்த தொல்லைகள் ஏற்பட்டது. அத்தருணத் தில் ∴பிடல் காஸ்ட்ரோ (Fidel Castro) என்ற வழக்கறிஞர் தன்னுடன் இரு நூறு நபர்களைச் சேர்த்துக் கொண்டு மான்கடா கோட்டையைத் தாக்கினார். (26 ஜூலை 1503) இம்முயற்சியில் தோல்வியுறவே, அவர்கள் அனைவரும் கைது செய்யப்பட்டு சிறையிலடைக்கப்பட்டனர். ஒரு சிறிது காலம் கழித்து காஸ்ட்ரோ விடுதலை பெற்றார். பின்னர், அவர் மெக்ஸிகோ நாட்டிற்குச் சென்று, 82 பேர் அடங்கிய ‘ஊடுருவல் படையை’ உருவாக்கினார். அப்படையின் துணையுடன் பாடிஸ்டா அரசாங்கத்திற் கெதிராக மீண்டுமொரு முறை தாக்குதல் புரிந்தார். இம்முறையும் தோல்வியுறவே அவர் தலைமறைவானார். எனினும் அவரது விடா முயற்சியால் பாடிஸ்டா அரசாங்கம் 1959-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 6ஆம் தேதி கவிழ்க்கப்பட்டது. ∴பிடல் காஸ்ட்ரோ கியூபாவின் புதிய தலைமை அமைச்சரானார். பாஸ்டிடாவின் கொடுங்கோலாட்சி நீக்கப் பட்டால் போதும் என்று மக்கள் விரும்பியதால், காஸ்ட்ரோவின் அரசாங்கத்தை அவர்கள் ஏற்றனர். அமெரிக்கர்களும் இதுகுறித்து அதிகம் கவலை கொள்ளவில்லை. எனவே காஸ்ட்ரோ தன் ஆட்சிக்கு இன்னும் சிறிது காலத்திற்கு அபாயம் ஏதும் நேரிடாது என்பதனை உணர்ந்தார். இங்கிலாந்திற்குள் நாட்டில் காணப்பட்ட சீர்கேடான நிலையை ஏரளவு செப்பனிட எத்தனித்தார்.

அதன் முதல் முயற்சியாக 1960-ஆம் ஆண்டு கியூபாவில் இருந்த வெளி நாட்டவரின் சொத்துக்களை தேச உடைமை ஆக்கினார். காஸ்ட் ரோவின் இத்தகைய செயல்களுக்கு அமெரிக்கா பலத்த கண்டனம் தெரிவித்தது. அவர் இக் கூக்குரல்களைச் சிறிதும் சட்டை செய்யாமல், அங்கு மேலும் சில சமதர்மக்கொள்கைகளைச் செயலாக்க முனைந்தார்.

குறிப்பு

இவ்வாறு அமெரிக்காவை உதாசீனம் செய்துவிட்டு அவர் தன்னிச்சையாகச் செயல் படத் தலைப்பட்டது அமெரிக்கர்களுக்கு ஆத்திரத்தை உண்டுபண்ணியது. எனவே, காஸ்ட்ரோவின் ஆட்சியைச் கவிழ்க்கும் வகையில் உள் நாட்டுக் குழப்பக்காரர்களுக்கு அமெரிக்கா ஆதரவளித்தது. காஸ்ட்ரோ அப்பிரச சனைகளைத் தன்னுடைய இராணுவத்தின் துணைகொண்டு திறமையாகச் சமாளித்தார். இத்தருணத்தில் அமெரிக்கா, பிற லத்தீன் அமெரிக்க நாடு களைக் கியூபாவுடனான தொடர்புகளை தீக்கிவிட வற்புறுத்தவே, கியூபா தனித்து விடப்பட்டது பின்னர், பிற லத்தீன் அமெரிக்க நாடுகளைக் ஆதர வுடன் அமெரிக்கா, கிருபாவை அமெரிக்கா நாடுகளின் அமைப்பிலிருந்து புறம் தள்ளியது.

அத்துடன், அதுகாறும் தான் கியூபாவுடன் மேற்கொண்டிருந்த சீனிவர்த்தகத்தை நிறுத்திவிடுவதெனவும் அமெரிக்கா முடிவெடுத்தது. உலகிலேயே அதிகமான சீனி உற்பத்தி செய்யும் கியூபாவின் பொருளாதாரம் அதன் சீனி ஏற்றுமதியை நம்பியே இருந்தது. அங்கு உற்பத்தி செய்யப்பட்ட சீனி முழுவதையும் அதுவரை அமெரிக்கர்களேவாங்கி வந்தமையால் கியூபாவிற்கு யாதொரு பிரச்சனையும் ஏற்படவில்லை. ஆனால், திடீரென்று 1962 ஆம் ஆண்டு கியூபாவுடனான சீனி வர்த்தகத்தை முழுமையாக நிறுத்திவிட அமெரிக்கா முடிவெடுக்கவே, கியூபாவில் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டது. அக்கட்டத்தில் காஸ்ட்ரோவின் ஆட்சி ஒருசிறிது ஆட்டம்கண்டது என்று கூடச்சொல்லலாம். அத்தருணத் தில் கியூபாவில் உற்பத்தி செய்யப்படும் சீனி முழுவதையும் தான் வாங்கிக் கொள்வதாகச் சோவியத்யூனியன் அறிவித்தது. அவ்வேளையில் கெடுபிடிப் போர் மிகவும் உச்ச நிலையில் இருந்ததை நாம் இங்கு மனதில் கொள்ள வேண்டும், சோவியத் யூனியனின் நட்புக்கரத்தை காஸ்ட்ரோ சிறிதளவும் தாமதிக்காமல் பற்றிக் கொண்டார். அத்துடன் ரஷ்யர்களின் உதவியுடன் தன் நாட்டை நவீனப்படுத்தவும் நாட்டின் பாதுகாப்டை வலுப்படுத்தவும் முனைந்தார். ரஷ்யர்களும் தங்களுக்கு அமெரிக்கக் கண்டத்தில் ஒரு சிறந்த ஊன்றுகோல் கிடைத்ததை எண்ணி மிகவும் மகிழ்ந்தனர். இவ்வாய்ப்பை நழுவ விட அவர்கள் விரும்பவில்லை எனவே கியூபாவில் உற்பத்தி செய்யப்பட்ட சீனி முழுவதையும் சோவியத் யூனியன் இறக்குமதி செய்தது. அத்துடன் கியூபாவின் பாதுகாப்பிற்குத் தேவை யான அனைத்து இராணுவ உதவிகளையும் செய்தது.

சோவியத் யூனியனின் இத்தகைய செயல்களுக்கு அமெரிக்கா பலத்த கண்டனம் தெரிவித்தது. ரஷ்யர்கள் அதனை ஒரு பொருட்டாகக் கருதாமல், கியூபாவின் நிலையுடன் தங்களது நிலைமையும் அமெரிக்கக் கண்டத்தில் வலுப்படுத்தத் தலைப்பட்டனர். அதன் விளைவாகக் கியூபாவில் தங்களு டைய ஏவுகணை தளங்களை (Missile Base) நிறுவ முனைந்து ஏவுகணை களைக் கப்பலில் ஏற்றிச் சென்றனர். தங்களுக்கு ஏற்பட்டுக் கொண்டி ருக்கும் ஆபத்தினை நன்குணர்ந்த அமெரிக்கர்கள் சோவியத் யூனியனின் இம்முயற்சியை எவ்வாறேனும் தடுக்க உறுதிபூண்டனர். அதன் தொடர்பாகத் தங்களது போர்க்கப்பல்களைப் பசிபிக் கடலுக்கு அனுப்பி ஏவுகணைகளைத் தாங்கி வந்த சோவியத் யூனியனின் கப்பல்களை வழிமறித்தனர். இவ்வாறு இப்பிரச்சனையில் வல்லரசுகள் இரண்டும் முதன்முறையாக நேருக்குநேர் மோதிக்கொண்டன. சோவியத் யூனியன் கப்பல்கள் ஏவுகணைகளைக் கியூபாவிற்கு கொண்டு செல்ல முயன்றால் நிச்சயமாக அது போரில் முடியும் என்றும் அமெரிக்கா அறிவித்தது.

இவ்விரு வல்லரசுகளும் சிறிது காலம் இடையறாத சொற்போர் நிகழ்த்தி வந்தன. எந்த நிமிடத்திலும் மற்றுமொறு உலகப்போர் தோன்றக்கூடும் என்ற அச்சம் இவ்வுலகை ஆட்கொண்டிருந்தது.

குறிப்பு

வல்லரசுகளிடையே ஒரு போர் ஏற்படுமேயானால் இவ்வுலகம் அழிந்துவிடும் என்பதை யாவரும் நன்குணர்ந்திருந்தனர். ஆனால் அதிருஷ்ட வசமாக, சோவியத் யூனியன் சிலமாதம் கழித்து பின்வாங்கி விடவே, இப்பிரச்சனை ஒரு முடிவுக்கு வந்தது. எனினும் தங்களுடைய இப்பிரச்சனையில் ஏற்பட்ட நெருக்கடியின் தீவிரத்தை இரு வல்லரசுகளும் நன்குணர்ந்தன. அத்துடன் ஒரு அணு ஆயுதப் போரினால் ஏற்படக் கூடிய சேதங்களைக் குறித்தும் இவ்வல்லரசுகள் உணரத் தலைப்பட்டனர் இக்கியூபாப் பிரச்சனைக்குப் பின்னர் தான் வல்லரசுகளிடையேயான கெடிபிடிப்போர் ஓரளவு குறையத் தலைப்பட்டது எனலாம். இதன் பின்வர், கியூபாவில் காஸ்ட்ரோ தன்னுடைய ஆட்சியை நன்கு நிலை நிறுத்தினார். இன்றும் அவரே தொடர்ந்து ஆட்சியில் நீடித்து வருகிறார். கியூபா-ரஷ்யா நட்புமிகவும் அதிகரித்துள்ள அதே வேளையில் கியூப-அமெரிக்கா உறவுகளைச் சாப்படுத்தவும் காஸ்ட்ரோ முனைந்து வருகிறார்.

## 13.4 இந்தோ - சீனா மோதல்

இக்காலக்கட்டத்தில் இந்தியா சந்திக்க நேரிட்ட மற்றுமொரு பிரச்சனை சீனாவுடனான எல்லை சம்பந்தப்பட்டதாகும். 1950-ஆம் ஆண்டு சீனா இரண்டாவது முறையாகத் திபெத்தில் ஊடுருவல்கள் மேற்கொண்டதை அடுத்து இந்தியா சீன உறவுகள் மோசமடைந்தன. இதற்கிடையில் திபெத்தின் தலாய்லாமா ஐ.நா. சபையில் சீனா பற்றி முறையிட்டனர். பின்னர் 1951ம் ஆண்டு சீனாவும் திபெத்தும் ஒரு ஒப்பந்தம் மேற்கொண்டன. அதன்படி திபெத்தில் எந்தவிதமான அரசியல், பொருளாதார, சமூக மற்றும் சமய மாற்றங்களையும் கொண்டு வருவதில்லை. எனச் சீனா உறுதி அளித்தது. இதனால் இந்தி யாவும். திபெத்தில் சீனாவின் மேலாதிக்கத்தை அங்கீகரித்தது. சீனாவும் இந்தியாவும் 1952-58ற்கு இடைப்பட்ட காலத்தில் நெருங்கி வரலாயின. இவ்விரு நாடுகளும் பஞ்சசீலக் கொள்கைகளை ஏற்றன.

பின்னர் 1959-ஆம் ஆண்டு திபெத் மக்கள் சீனாவின் மோலதிக்கத் திற்கெதிராக ஆர்ப்பாட்டங்கள் நடத்தினர். இத்தகைய கிளர்ச்சிகளைச் சீன அரசாங்கம் அடக்குமுறை கொண்டு ஒடுக்கியது. பின்னர் 1959 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 21 ஆம் தேதி தலாய்லாமா திபெத்தை விட்டுத் தப்பி இந்தியாவிற்குள் நுழைந்து அடைக்கலம் கோரினார். இந்தியா தலாய் லாமாவிற்கு அடைக்கலம் கொடுக்க முடிவெடுத்தது சீனர்களது வெறுப் பைச் சம்பாதித்துத தந்தது. அதனை அடுத்து, அதே ஆண்டு சீனாவில் வெளியிடப்பட்ட சீன வரைபடத்தில் இந்தியாவின் சில பகுதிகளும் உள்ளடக்கப்பட்டிருந்தன. இவ்வரைபடத்தில் குறிப்பிட்டிருந்த இந்தியப் பகுதிகளைப் பிடிப்பதற்கு வேண்டிய முயற்சிகளைச் சீனா மேற்கொள்ளலாயிற்று. 1959 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் வாக்கில் அவர்கள் இந்திய எல்லைப் பகுதிகளில் சுடத்தொடங்கினர். அத்துடன் சிங்கியாங் திபெத் பெருவழித் தடத்தையும் நிறைவு செய்தனர்.

இத்தகைய பிரச்சனைகள் நீடித்து வந்த போதிலும், சீனத்தலைவர் சூ-என்-லாய் 1960-ஆம் ஆண்டு இந்தியப் பயணம் மேற்கொண்டிருந்த பொழுது அவருக்குச் சிறப்பான வரவேற்பளிக்கப்பட்டது. எனினும் அவர் வரவினால் சீன-இந்திய உறவில் எத்தகைய வியத்தகு மாற்றங் களும் ஏற்படவில்லை. பின்னர், சிறிது காலம்கழித்து, சீனர்கள் லடாக் பகுதியில் ஊடுருவல்கள் மேற்கொண்டனர். பஞ்சசீலக் கொள்கைகளை காற்றில் பறக்க விட்ட சீனர்கள் 1962-ஆம் ஆண்டு இந்தியாவை நேரடியாகத் தாக்கினர். இப்போரில் இந்தியா பெருத்த நஷ்டங்களை அடைய நேரிட்டது. உலக அமைதிக்காகப் பாடுபட்டு வந்த நேரு அவர்கள் இந்தியாவின்

எல்லையிலேயே ஒரு போரைச் சந்திக்க நேரிட்டது அவருடைய துரதிஷ்டம் என்றுதான் சொல்லவேண்டும். இப்போரில் அமெ ரிக்கர் இந்தியாவிற்கு ஆயுத உதவி செய்தனர். ரஷயர்கள் நடு நிலைமை வகித்தனர். இருப்பினும் பிற ஆசிய ஆப்பிரிக்க நாடுகள் இதுபற்றி கருத்துத் தெரிவிக்கவோ, சீனாவைக் கண்டிக்கவோ முன் வரவில்லை என்பது இந்தியாவைப் பொறுத்தவரை வருந்தத்தக்க விஷயமே அப் போரில் இந்தியப் பகுதிகள் சிலவற்றை ஆக்கிரமித்துக் கொண்ட சீனா, அதை விட்டு வெளியேற மறுத்து வருகிறது. இப்பிரச்சனை இவ்விரு நாடுகளிடையேயான உறவை தொடர்ந்து பாதித்து வருகிறது

**திபெத்தின் மீது சீனாவின் ஆக்கிரமிப்பு**

திபெத் நாட்டுடன் இந்தியா பரம்பரை பரம்பரையாக நல்லுறவு களைக் கொண்டிருந்தது. திபெத்திலுள்ள லாசா (டூயளய) ஒரு பிரதிநிதியை வைத்துக் கொள்வது, கியான்ட்சே, யாதுங் போன்ற நகரங்களில் வணிகத் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்வது, அங்கு ஒரு சிறு இராணுவத்தை வைத்துக் கொள்வது போன்ற உரிமை களைப் பெற்றிருந்தது. ஆனால் 1950-ல் திபெத்தின் மீது சீனா திடீரெனப் படையெடுத்து அந்த நாட்டின் ஆட்சியாளரான தலாய்லாமாவை (Dalai Lama) வற்புறுத்தி ஒரு ஒப்பந்தத் தில் கையெழுத்திடச் சொல்லி, அங்கு சீனாவின் மேலாண்மையை ஏற்படுத்தியது. திபெத்தின் சுயாட்சி பறிக்கப்பபட்டது. இந்தியாவுக்கும் சீனாவிக்குமிடையே 3000 திலோ மீட்டருக்கும் அதிகமான பொது எல்லைப் பகுதியிருந்ததால் சீனாவின் இந்த திபெத் ஆக்கிரமிப்பு இந்தியாவை அதிர்ச்சி அடையச் செய்தது. சீனாவின் ஆக்கிரமிப்பு சிந்தையைப் இந்தியா புரிந்து கொண்டது.

**இந்திய-சீன உடன்படிக்கை :1954 (பஞ்சசீலம்)**

1954, ஏப்ரல் 20-ல் இந்தியாவுக்கும் சீனாவுக்குமிடையே ஒரு சமா தான உடன்படிக்கை செய்து கொள்ளப்பட்டது. இந்த உடன்படிக்கையின் முகவுரையில்தான் நேருவின் பஞ்சசீலக் கொள்கை சேர்க்கப்பட்டது. பஞ்சசீலக் கொள்கைகள் பின்வருமாறு:

1. எல்லா நாடுகளின் இறையாண்மைக்கும் நாட்டு ஒற்றுமைக்கும் மதிப்பளித்தல்
2. ஆக்கிரமிப்பு செய்யாதிருத்தல்
3. மற்ற நாடுகளின் உள்நாட்டு விவகாரங்களில் தலையிடாது இருத்தல்.
4. நாடுகளுக்கிடையே சமத்துவ, பரஸ்பர உதவி செய்து கொள்ளுதல்
5. எல்லா நாடுகளுடனும் சமாதான சகவாழ்வு வாழ்தல் - ஆகியவையாகும்

மேலும் இந்த 1954-ம் வருட உடன்படிக்கையின்படி திபெத்தில் சீனாவின்

மேலாண்மையை இந்தியா ஒப்புக்கொண்டு விட்டது. திபெத்தில் இது நாள் வரை அனுபவித்து வந்த விசேஷ உரிமைகள் அனைத்தையும் இந்தியா கைவிட்டது. ஆனால் திபெத்துடனான வியாபார உரிமையை மட்டும் சீனா ஏற்றுக் கொண்டது. இவ்வாறு இந்த உடன்படிக்கை திபெத்துக்கு ஓரளவு சுயாட்சி கொடுத்து பெயரளவுக்கு தனது மேலாண் மையை வைத்துக் கொள்ளலாம் என்று கூறப்பட்டது. ஆனால் சீனா 1959 வரைதான் இந்த உடன்படிக்கைக்கு மதிப்பு கொடுத்தது.

இந்த உடன்படிக்கைக்குப்பிறகு 1954 ஜுன் மாதம் சீனப் பிரதமர் சூயென்லாய் (Chou-En-Lai) இந்தியாவிற்கு விஜயம் செய்தார். அதன்

விளை வாக இந்தயாவில் 'இந்தி-சீனா பாய்பாய' என்ற உற்சாக ஒலி ஏற்பட்டது. 1954 அக்டோபரில் இந்திய பிரதமர் நேரு சீனாவுக்கு விஜயம் செய்தார். உறுதியான அடிப்படையில் இந்திய சீனா நட்புறவு ஏற்பட்டது என்ற உணர்வே எல்லோரிடமும் ஏற்பட்டது. (ஆனால் எல்லாம் சீனாவின் ஏமாற்று வேலை என்று பின்னர்தான் எப்போதும் போல் இந்தியா புரிந்து கொண்டது)

**இந்தியாவுக்கு எதிரான சீனாவின் நடவடிக்கைகள்**

சீனாவின் மீது 'அன்பும் பாசமும்' இந்தியா கொண்டிருந்த போது சீனா இந்தியாவுக்கெதிரான செயல்களில் ஈடுபட்டு வந்தது. இந்தியப் பகுதிகள் சீனப் பகுதிக்குள் இருப்பதாகத் தெரிவிக்கும் வரைபடம் ஒன்றை சீனா வெளியிட்டது. அதில் 1,32,090 சதுர மீட்டர் இந்தியப் பகுதிகள் சீனாவினுள் இடம் பெற்றிருந்தன. இதற்கு இந்தியா கண்டனம் தெரிவித்தது.

1957-ல் லடாக் பகுதியில் அக்சாய்-சின் (யுமளயை ஊாலை) வழியாக ஒரு பெரிய சாலை அமைக்கும் பணியில் சீனா ஈடுபட்டிருந்தது கண்டுபிடிக்கப் பட்டது. இது பற்றி அறிந்து வர 1958-ல் இரண்டு குழுக்களை இந்தியா அனுப்பியது. அதில் ஒரு குழுவை சீனா பிடித்துக் கொண்டது. இந்தியாவின் எதிர்ப்புக் குரலுக்கு எந்த பயனும் இல்லாமல் போய்விட்டது.

திபெத் சம்பந்தமாக ஏற்பட்ட 1954ம் 'வருட உடன்படிக்கையை தூக்கி எறிந்தது சீனா. 1959-ல் திபெத்தின் சுயாட்சியை ஒழித்துவிட்டு திபெத்தைக் கைப்பற்றி அங்கு ஒரு பயங்கர ஆட்சியை ஏற்படுத்தினார்கள். திபெத்தின் ஆட்சியாளரும் மதத்தலைவருமான தலாய்லாமாவும், எண்ணற்ற மக்களும் இந்தியாவில் தஞ்சம் புகுந்தனர். திபெத்தில் சீனா தனது பூரண ஆட்சியை ஏற்படுத்திக் கொண்டது. இந்தியாவின் அரசியல் தந்திரம் படுதோல்வியடைந்தது. நேருவின் சமாதானச் சகவாழ்வு கொள்கைக்கு பெரும் சரிவு ஏற்பட்டது. 1959ம் வருட முடிவுக்குள் சீனா இந்தியாவின் பகுதிகளில் 6000 சதுர மைல்களைக் கைப்பற்றிக் கொண்டது. லடாக்கில் மேலும் 15,000 சதுர மைல்களுக்கு உரிமை கொண்டாடியது. இது சம்பந்தமாக 1960 ல் டில்லியில் நடைபெற்ற பேச்சுவார்த்தையில் சீனப்பிரதமர் கலந்து கொண்டார். எவ்வித முடிவும் ஏற்படவில்லை . இப்போதுதான் நேருவுக்கு சீனாவின் எண்ணம் பற்றிய உண்மை நிலை தெரிந்தது. ஆனால் காலம் கடந்துவிட்டது. 2600 மைல் நீளமுள்ள வடக்கு எல்லைப் பகுதியை இந்தியா பாதுகாத்துக் கொள்ளும் அளவுக்கு வலிமை பெற்றிருக்கவில்லை . 1962, அக்டோபர் 20 ம் தேதி முறைப்படி 30,000 சீனத்துருப்புகள் இந்தியாவின்மீது படையெடுத்தன.போர் ஆரம்பமானது.

**போரின் போக்கு**

லடாக் மற்றும் வடகிழக்கு எல்லைப் பகுதியில் சீனத்துருப்புகள் நுழைந்தன. சீனா பல நாட்களாக செய்திருந்த ஏற்பாடுகளும் திட்டங்களும் இப்படையெடுப்பின் போது தெரிய வந்தது. இந்திய வீரர்கள் தீரத்துடன் போராடிக்க முடியவில்லை . ஏனெனில் ஆயுத பலத்தலும், மலைகளில் போர் புரிவதிலும் சீனர்கள் கையில் விழுந்துவிடும் அபாயம் ஏற்பட்டது. உடனே நேரு 1962, அக்டோபர் 29-ல் அமெரிக்காவிடமும், இங்கிலாந்திடமும் படை உதவி கேட்டார். அந்த நாடுகள் சம்மதம் தெரிவித்தன. ஆப்பிரிக்க ஆசிய நாடுகள் கூட்டுசேராக் கொள்கையைப் பின்பற்றி நடுநிலை வகித்தன. ரஷ்யாவிடமிருந்து தேவைப்பட்ட நேரத்தில் உதவி கிடைக்கவில்லை . இதற்கிடையில் 36,260 சதுர கிலோமீட்டர் பகுதியை லடாக்கிலும், வடகிழக்கு எல்லைப் பகுதியில் 5,180 சதுர கிலோ

மீட்டர் பரப்பளவையும் சீனா ஆக்கிரமித்துக் கொண்டது. 1962, நவம்பர் 21 ல் எந்த உறுதிமொழியும் கொடாமல் போரை ஒரு தலைப்பட்சமாக நிறுத்திக் கொண்டது சீனா.

இப்படி தானாகவே போரை சீனா நிறுத்திக் கொண்டதற்கு பல காரணங்களைக் கூறலாம்.

1. பனிக்காலம் நெருங்கிக் கொண்டிருந்ததால் போர் வீரர்களுக் கான பொருட்களை அனுப்ப இயலாது.
2. ரஷ்யா, சீனா இந்தியாவின் மீது படை எடுப்பதை விரும்ப வில்லை .
3. அமெரிக்காவும், இங்கிலாந்தும் இந்தியாவுக்கு உதவி செய்யத் தயாராக இருந்தன.
4. அப்போது சீனாவில் நிலவி வந்த உணவுப் பற்றாக்குறை ஆகியவை காரணமாகும். .

**போரில் இந்தியா தோல்வியடையக் காரணங்கள்**

1. சீனாவின் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகள் தெரிந்த பின்பும் போர் அபாயத்தை உணர்ந்த பின்பும் இந்தியா தனது ராணுவத்தை வலிமைப் படுத்திக் கொள்ள முன்வரவில்லை.
2. ரஷ்யாவிடமிருந்து நேரு எதிர்பார்த்த இராணுவ உதவி தேவை யான நேரத்தில் கிடைக்கவில்லை.
3. ஆப்பிரிக்க ஆசிய நாடுகள் பல நடுநிலை வகித்து விட்டதோடு மட்டுமல்லாமல் இந்தியாவைப் போர் நிறுத்தம் செய்யுமாறு அறிவுரை செய்தன.
4. இந்தியா சீனாவுடன் வைத்திருந்த சமாதான “சகவாழ்வுக் கொள்கையே“ இந்தியாவின் தோல்விக்கான முக்கிய காரணமாகும்.
5. இந்திய எவ்வித முன்னேற்பாடுகளும் இல்லாமல் போரில் இறங்கியது.

**போருக்குப்பிறகு மேற்கொள்ளப்பட்ட சமாதான முயற்சிகள்**

1962, டிசம்பர் முதல் தேதி நேரு சூயென்லாயிக்கு ஒரு கடிதம் எழுதினார். அதில் குறைந்தபட்சம் 1962-ம் ஆண்டு செப்டம்பர் 8ம் தேதிக்கு முன் இருந்த நிலைமையை மறுபடி ஏற்படுத்துவதன் மூலம் சமாதான முறையில் தீர்வு காண்பதற்கு வேண்டிய சூழ்நிலை ஏற்படும் என்று தெரிவிக்கார் மேலம் அனேக உலக நாடுகளுக்கு சீனா ஆக்கிரமிப்பு பற்றி விளக்கி கடிதம் எழுதினார். எல்லா நாடுகளும் அனுதாபம் தெரிவித்து உடனே பதில் எழுத 1962, டிசம்பர் 10-ந் தேதி கொழும்பில் இலங்கை , பர்மா , கம்போடியா, இந்தோனேஷியா, கானா, ஐக்கிய அரேபியக் குடியரசு ஆகிய நாடுகள் கூடி சமாதானத்திற்கான சில திட்டங்களை சிபாரிசு செய்தன. இந்திய அரசு சில விளக்கங்களைப் பெற்றபின் ஏற்றுக் கொண்டது. சீனா ஏற்றுக் கொள்ளவில்லை. சமாதானத்திற்காக இந்தியா செய்த எல்லா முயற்சிகளும் வீணாயின. சீனர்கள் தாங்கள் கைப்பற்றிய இந்தியப் பகுதி களை விட்டுக் கொடுக்க மறுத்துவிட்டனர்.

சீனா இந்த ஆக்கிரமிப்பிற்குப் பிறகும் இந்திய விரோதப் போக்கையே பின்பற்றி வருகிறது. பாகிஸ்தானுக்கு மறைமுக ஆதரவும், உதவியும் அளித்து இந்தியாவை மிரட்டிப் பார்க்கிறது. இதற்குக் காரணமே இந்தியா மீது ஏற்பட்ட பொறாமைதான், இந்தியா கிழக்கு ஆசிய நாடு களுக்கும் பிடிக்கவில்லை. இந்தியாவில் ஏற்பட்ட பொருளாதார முன்னேற்றத்தைக் கண்டு சீனாவால் தாங்க முடிய வில்லை. எனவே தான் இந்தியா மீது போர் தொடுத்து வயிற்றெரிச்சலைத் தீர்த்துக் கொண்டது. ஆனால் இந்தியாவிடமிருந்து ஆக்கிரமிப்பு செய்யப்பட்ட பகுதிகளை

குறிப்பு

இந்தியாவிடம் திருப்பிக் கொடுக்கும்வரை இந்திய-சீன நட்புறவு ஏற்பட சாத்தியமில்லை .

**இந்திரா காந்தி காலத்தில் இந்திய சீன உறவு**

1962 ம் வருட இந்திய சீனப்போருக்குப் பிறகு சீனத் தலைவர் களிடம் இந்தியா பற்றிய நிலையில் மாற்றம் காணப்பட்டது. 1970 ல் சீனா வில் இருந்த இந்திய பொறுப்பு அதிகாரி பிரஜேஸ் மிஸ்ரா என்பவரிடம் சீன அதிபர் மாசேதுங் கைகுலுக்கி பேசினார். 1971 ல் சீனாஐநா சபையில் சேர்க்கப்பட்டபோது சூயென்லாயிக்கு. பாராட்டி இந்திசாகாந்தி கடிதம் எழுதினார். 1974 ம் வருடம் பொக்ரான் அணுகுண்டு சோதனையை சீனா கண்டிக்கவில்லை. இதன் தொடர்ச்சியாக 1976 ம் ஆண்டு இருநாடுகளுக்கு மிடையே 1962 ல் முறிக்கப்பட்ட ராஜதந்திர உறவு மீண்டும் ஏற்படுத்தப் பட்டது. 1977ல் திபெத் பற்றிய பிரச்சனையில் கருத்து வேறுபாடுகள் மீண்டும் என்று முடிவு செய்யப்பட்டது.

ஆனால் இந்தியாவுக்கும் சீனாவுக்கு மிடையே 4200 கி.மீ நீளமுடைய எல்லை பிரச்சனை தீராத பிரச்சனையாக இருந்து வருகிறது. 1981, 1982, 1983ம் ஆண்டுகளில் இரு நாடுகளின் உயர்மட்ட அதிகாரிகள் கூடிப் பேசினார். பாகிஸ்தான் வசமுள்ள காஷ்மீர் வழியாகச் செல்லும் கரக்கோரம் பாதையை சீனாவுக்கு திறந்து விடப்பட்டது. இந்திய விரோத செயலாகக் கருதப்பட்டது. அதேபோல சீனா பாகிஸ்தானின் அணு ஆயுதத் திட்டத்திற்கு உதவியதும் இந்தியாவால் கண்டிக்கப்பட்டது.

**ராஜீவ்காந்தி காலத்தில் இந்திய-சீன உறவு**

ராஜீவ் காந்தி தனது ஆட்சிக் காலத்தில் தேக்க நிலையில் இருந்த இந்திய-சீன உறவை புதுப்பிக்க விரும்பினார். சீனாவுடன் நட்புறவையும் கூட்டுறவையும் பலப்படுத்தும் முயற்சிகளை மேற்கொண்டார்.1985, அக்டோபர் மாதம் சீனப் பிரதமர் ஷோன்சியாங் (Zhon Ziang) கைக் சந்தித்துப் பேசினார். ஆனால் எல்லைத் தகராறு தீர்க்க முடியாத பிரச்சனையாக இருந்து வந்தது. இருநாட்டு உயர்மட்ட அதிகாரிகள் 1985-ல் சந்தித்துப் பேசிய போது வடக்கு அஸ்ஸாம் பகுதியிலுள்ள 90,000 கிலோ மீட்டர் பரப்பளவு உள்ள பகுதி முன்பு மஞ்சு பேரரசுடன் சேர்ந்திருந்தது என்று கூறி அப்பகுதிக்கு உரிமை கோரினர் சீனப் பிரதிநிதிகள். இந்தியா சீனா வசம் உள்ள அக்சே சின் (யுமளயை ஊாைெ) என்ற பகுதிக்கு உரிமை கோரியது. எனவே பேச்சு வார்த்தைகளில் தொடர்ந்து தேக்க நிலையே நீடித்தது.

1988, டிசம்பர் மாதம் ராஜிவ் காந்தி சீனாவுக்கு விஜயம் செய்தார். 1954 க்குப் பிறகு 34 ஆண்டுகள் கழித்து ஒரு இந்தியப் பிரதமர் சீனாவுக்கு சென்றது குறிப்பிடத்தக்கது ஆகும். சீன உயர் மட்ட தலைவர்களைச் சந்தித்துப் பேசினார். இதன் மூலம் இரு நாட்டு நல்லுறவில் ஒரு புதிய துவக்கம் ஏற்படுத்தப்பட்டது. இந்தப் பயணத்தின் முக்கியத்தவம் என்ன வென்றால் எல்லைப் பிரச்சனையை இருதரப்பு பேச்சுவார்த்தைகள் மூலம் தீர்த்துக் கொள்ளப்பட முடிவு செய்யப்பட்டது ஆகும். இதனால் இருநாடுகளின் எல்லைப் பகுதியில் அமைதி நிலவியது.

**நரசிம்மராவ் காலத்தில் இந்திய-சீன உறவு**

ராஜீவ் காந்தியின் சீன விஜயம் இரு நாடுகளின் உறவு மேம்பட வழி செய்து கொடுத்து. அவருக்குப் பிறகு பதவியேற்ற நரசிம்மராவ் காலத்தில் உறவு மேலும் வளர்ச்சியடைந்தது. 1991, மே மாதம் இரு நாடுகளும் மும்பை, ஷாங்கை ஆகிய இடங்களில் கான்சுலேட்

அலுவலகங்கனைத் திறக்க முடிவு செய்தன. 1991, அக்டோபர் 21-ல் இந்திய துணைக்குடியரசுத் தலைவர் கே.ஆர்.நாராயணன் பெய்ஜிங் சென்ற போது 38 ஆண்டுகளுக்குப் பிறகு இந்திய சீன வங்கித் தொடர்பு புதுப்பிக்கப்பட்டது. 1991, டிசம்பரில் சீனப்பிரதமர் லீபெங் இந்தியா வந்த போது வர்த்தகம், விண்வெளி, அறிவியல், தொழில் நுட்பம் ஆகியவற்றில் இரு நாடு களும் உடன்பாடுகள் செய்து கொண்டன. 1992-ல் இருநாடுகளுக்கு இடையே நேரடி போன் தொடர்பு (Hotline) ஏற்படுத்தப்பட்டது.

பிரத்மர் நரசிம்மராவ் 1993, செப்டம்பரில் சீனப்பயணம் மேற்கொண்டார். இதன் தொடர்ச்சியாக 1994, ஜூலை 18-ல் சீனத் துணைப் பிரதமர் குயன்குய்சென் இந்தியா வந்தார். 1996 ல் சீன அதிபர் ஜியாங் மூன்று நாள் பயணமாக இந்தியா வந்தது குறிப்பிடத்தக்க நிதழ்ச்சி யாகும். இவ்வாறு இரு நாடுகளின் உயர்மட்ட தலைவர்களின் பயணங்கள் இருநாடுகளுக்கிடையே இருந்த தேக்க நிலையைப் போக்கியது. ஆனால் இவ்வாறு இந்திய சீன நல்லுறவு புதுப்பிக்கப்பட்டாலும், எல்லைப் பிரச்சனை, பஞ்சாப், காஷ்மீர் தீவிரவாதிகளுக்கு சீன உதவி, பாகிஸ்தானுக்கு ராணுவ உதவி போன்றவை இந்திய சீன உறவில் உறுத்தல் களாகவே உள்ளன.

**ஐக்கிய முன்னணி ஆட்சிக் காலத்தில் இந்திய-சீன உறவு**

ஐக்கிய முன்னணி ஆட்சிக் காலத்திலும் தொடர்ந்து இந்தியாவுக்கும் சீனாவுக்குமிடையே இருந்த பல பிரச்சனைகள் தீர்க்கப்படாமல் இருந்தன. எல்லைப் பிரச்சனை, பாகிஸ்தானுக்கு அணு ஆயுத ஏவுகணைகளை சீனா வழங்கியது. பாகிஸ்தானுக்கு வளமூட்டப்பட்ட யுரேனியம் வழங்கியது. ஆயுத உற்பத்திக்கு சீனாவின் உதவி, சீனா சிக்கிமை இந்தியப் பகுதியாக ஏற்றுக்கொள்ள மறுத்தல், இந்தியக் கடற்பகுதியில் சீனக்கப்பல்கள் தென்படுதல் போன்ற பிரச்சனை களால் இந்திய-சீன நட்புறவு என்பது எட்டாத தொலைவிலேயிருந்தது. ஆனாலும் இப்பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கான 'நம்பிக்கை வளர்க்கும் நடவடிக்கைகள்' மேற்கொள்ளப்பட்டன. 1997, ஆகஸ்ட் 4-ல் சீன துணை வெளிஉறவு அமைச்சர் டாங்ஜியா யுவான் இந்தியா வந்த போது 21-ம் நூற்றாண்டில் இரு நாடுகளுக்குமிடையே எல்லாத் துறைகளிலும் நல்லுறவை ஏற்படுத்த வேண்டியதின் அவசியம் எடுத்துக் காட்டப்பட்டது.

**இந்திய சீன சமீபத்திய உறவு நிலை**

சீனாவுக்கும், இந்தியாவுக்குமிடையே ஓரளவு சகஜ நிலை ஏற்பட்டு வந்த சமயத்தில் வாஜ்பாய் அரசின் பாதுகாப்பு அமைச்சராக இருந்த ஜார்ஜ்பெர்னாண்டஸ் 1998,ல் "இந்தியாவுக்கு முதல் மிகப்பெரிய அச்சுருத்தல் சீனாதான்" என்று கூறியது பெரிய சர்ச்சையை கிளப்பிவிட்டது. பெர்னாண்டசின் இந்தக் கருத்துக்கு சீனா தனது கடுமையான எதிர்ப்பைத் தெரிவித்தது. இந்தியத் தலைவர் களின் சாந்தப்படுத்தும் சில பேச்சுக்களால் சீனா ஓரளவு சாந்தமானது ஆனாலும் இந்தியாவை ஒரு அணு ஆயுத வல்லரசாக அறிவிக்கக் கூடாது என்பதை சீனா தொடர்ந்து வற்புறுத்தி வருகிறது.

ஆனாலும் இப்படி ஏற்படும் சில பிரச்சனைகளையெல்லாம் பின் தள்ளிவிட்டு இந்தியாவுடன் சீனா நல்லுறவை ஏற்படுத்த விரும்புகிறது. காரணம் சோவியத் ரஷ்யாவின் வீழ்ச்சிக்குப்பிறகு சீனா மிகப்பெரிய ராணுவ மற்றும் பொருளாதார வல்லரசாக மாறி வருகிறது. எனவே அமெரிக்கா

குறிப்பு

இந்தியாவை தன் பக்கம் இழுத்துவிடுமோ என்ற பயம் சீனாவிடம் உள்ளது. எனவேதான் இந்தியாவிடம் தனது அணுகுமுறையை மாற்றி உள்ளது. மேலும் சீனாவிலும் இஸ்லாமிய அடிப்படைவாதம் வளர்த்து வருகிறது. அதற்காக இந்தியாவிடமிருந்து தகவல்களையும், பயங்கரவாதத்தை அணுகும் முறைகளையும் கேட்டறிய நினைக்கிறது. தற்போது இந்தியாவும் சீனாவும் மிகப்பெரிய சந்தைகளாக உருவெடுத்துள்ளன. எனவே பொருளா தார ரீதியாகவும் இந்தியாவுடன் தொடர்புகளை வைத்தக்கொள்ள சீனா விரும்புகிறது.

மேற்கண்ட காரணங்களால் இந்தியாவுக்கும், சீனாவுக்கும் இருந்து வந்த ஒரு விதமான அழுத்தமான உறவுநிலை மாறி சகஜ நிலை ஏற்பட்டு வருகிறது. 1999-ல் இந்திய வெளி உறவு அமைச்சர் ஜஸ்வந்த்சிங் சீனப் பயணத்தை மேற்கொண்டார். அப்போது 1998ல் இந்தியா நடத்திய பொக்ரான் அணுகுண்டு வெடிப்பு சோதனையால் உறவு நிலையில் ஏற்பட்ட பாதிப்பு நீக்கப்பட்டது. மேலும் அப்போது இரு நாடுகளும் ஒருவர் மற்றொருவர் பாதுகாப்புக்கு அச்சுருத்தலாக இருப்பதில்லை என்பது ஏற்றுக் கொள்ளப்பட்டது. 1999 ல் இந்திய சீன வியாபாரம் 1.99 மில்லியன் டாலர் அளவுக்கு உயர்ந்தது. இது இதற்கு முந்திய ஆண்டைவிட முன்று சதவீதம் அதிகமாகும்.

2000 ஏப்ரல் 30 ம் தேதி இந்தயாவும் சீனாவும் தங்கள் ராஜ தந்திர உறவு முறைகளை மேற்கொண்ட 50 வது ஆண்டு நிறைவை விழாவாகக் கொண்டாடின. இதன் உச்ச கட்டமாக இந்தியக் குடியரசுத் தலைவர் கே. ஆர்.நாராயணன் ஆறு நாட்கள் அரசு முறைப் பயணமாக 2000, மே 28-ல் சீனா சென்றார். இது, இந்திய சீன நட்புறவை மேலும் வலுப்படுத்த உதவியது. 21 ம் நூற்றாண்டுக்கான இந்திய சீன நட்புறவுக்கு வலிமையான அடித்தளம் அமைக்கப்பட்டது. 2002 ஜனவரி 13-ம் தேதி ஆறு நாள் அரசு முறைப் பயணமாக சீனப் பிரதமர் சுரோங்ஜி (Zhu Rongji) இந்தியா வந்தார். அப்போது ஆசியாவில் அமைதி, செழிப்பு, ஸ்திரத்தன்மை ஆகியவற்றை ஏற்படுத்து வதில் இந்தியாவுக்கும் சீனாவுக்கும் முக்கிய பங்கு உண்டு என்றார். டில்லிக்கும் பெய்ஜிங்கிற்குமிடையே நேரடி விமான சேவை ஆரம்பிக்கப் பட்டது. 2002, மார்ச் மாதம் வெளிஉறவு அமைச்சர் ஜஸ்வந்சிங் சீனாவுக்கு விஜயம் செய்தார். அப்போது தீவிரவாதத்துக்கு எதிராக இருநாடு களும் ஒத்துழைக்க முடிவு செய்தன. இவ்வாறு இரு நாடுகளுக்கிடையே நிரந்தரமாகத் தீர்க்கப்படாத பிரச்சனைகள் இருந்த போதிலும் மாறிவரும் உலக சூழ்நிலையில் இந்தியாவும் சீனாவும் நட்புறவை வளர்த்து வருவது குறிப்பிடத்தக்க மாற்றம் ஆகும்.

## 13.5 அராப் - இஸ்ரேல் மோதல்

யூத சமயமும், கிறிஸ்தவ சமயமும் தோன்றிய பகுதி மேற்கு ஆசியாவில் அமைந்துள்ள பாலஸ்தீனம். அச்சமயங்கள் சார்ந்த புனித தலங்கள் அங்கு உள்ளன. கி.பி 7ஆம் நூற்றாண்டில் அரேபியர் கைப்பற்றினர். அங்குள்ள ஜெருசலேமில் அல்அக்ஷா எனும் புகழ் பெற்ற மசூதியைக் கட்டினர். அதன்பின் அந்த நகர் இசுலாமியரின் புனிதத் தலமாகவும் ஆயிற்று. முதல் உலகப் போருக்குப் பின் பாலஸ்தீனம் பிரிட்டன் ஆட்சிக் கட்டளைப் பகுதியாக அமைந்தது.



**Israeli armoured troop unit entering Gaza during the Six-Day War, June 6, 1967.**

**(a)இஸ்ரேலின் தோற்றம்**

யூதர்கள் ஐ.நா. குழுவின் பரிந்துரையின் படி தங்களுக்கு ஒதுக்கப்பட்ட இடங்களில் தங்கள் ஆதிக்கத்தை ஏற்படுத்தினர். மே 14ஆம் நாள் இரவு யூதர்கள் தங்கள் தாயகத்தின் விடுதலை அறிக்கையை வெளியிட்டனர். அதற்கு இஸ்ரேல் எனப் பெயரிட்டனர். அதன் தலைநகர் டெல் அவிவ். டாக்டர் வெய்ஸ்மே இஸ்ரேல் குடியரசின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பெற்றார். உடனே அந்நாடு ஐ.நா. உறுப்பினராகவும் சேர்த்துக் கொள்ளப்பட்டது.

**(b)முதல் அரபு-இஸ்ரேல் போர் (1948 - 49)**

இஸ்ரேல் நாட்டை அமெரிக்கா, இரஷ்யா ஏற்றன. ஆனால் அரபு நாடுகளான சிரியா, லெபனான், ஜேர்டான், எகிப்து, ஈராக் ஆகிய நாடுகள் ஏற்க மறுத்ததோடல்லாமல் அந்நாட்டின் மீது போர் தொடுத்தன. அரபு நாடுகளின் படையை யூதர்படை தோல்வியுறச் செய்தது. 200க்கும் மேற்பட்ட அரபுச் சிற்றூர்களையும், ஹைபா , ஜாபா முதலிய நகரங்களையும் கைப்பற்றிக் கொண்டது. ஐ.நா. சபை கவுண்ட்பெர்னாட் என்பவரை பாலஸ்தீனத்திற்கு அனுப்பிப் பேச்சு வார்த்தை நடத்தப் பணித்தது. அவர் போர் நிறுத்தம் ஏற்படச் செய்வதில் வெற்றி பெற்றார். அமைதிக்காண ஏற்பாடுகளைச் செய்யும் முன் அவர் யூத பயங்கரவாதியால் கொல்லப்பட்டார். போர் மீண்டும் தொடங்கியது. இஸ்ரேல் நாட்டினுள் வாழ்ந்த ஒரு லட்சம் அரேபியர் வெளியேறினர்.

போர் நிறுத்தத்திற்கு ஏற்றபாடு செய்ய ரால்ப்புஞ்ச் என்பவர் ஐ.நா. நடுவராக நியமிக்கப்பட்டார். அவருடைய முயற்சியினால் போர் நிறுத்தம் ஏற்பட்டது. இப்போரில் யூதர்கள் தங்களைவிடப் பரப்பிலும் மக்கள் தொகையிலும் பல மடங்காண அரபு நாடுகளைத் தோற்கடித்தது வியப்பிற்குரியதாயிருந்தது. அதற்கு யூதர்களின் மன உறுதியே முதன்மைக் காரணமாகும் நாட்டுக்காக எவ்விதத் தியாகத்தையும் புரிய இரண்டாவதாக, மேற்கு நாடுகளின் ஆதரவும் உதவியும் இஸ்ரேலுக்கு இடைவிடாமல் கிடைத்தது. இறுதியாக அரேபியர்கள் ஒற்றுமையின்மையும், பின்தங்கிய நிலையும் யூதர்களுக்கு வாய்ப்பாக இருந்தது. இந்தப் போரினால் ஐ.நா. பிரிவினைத் திட்டமிட்டபடி யூதர்களுக்கு ஒதுக்கப்பட்ட இடங்களைவிட அதிக இடங்களைக் கைப்பற்றினர். ஆனால் தோல்வியுற்ற அரேபியர் துவண்டு போய்விடவில்லை. இஸ்ரேல் பகுதி மீது பல தாக்குதல்களைத் தொடுத்தனர்.

**(c)1956இல் போர்**

1956இல் எகிப்து அதிபர் நாசர் சூயஸ் கால்வாயை நாட்டுடைமை ஆக்கினார். அதனால் ஆத்திரமுற்ற பிரிட்டனும், பிரான்சும் வன்முறையில் அக் கால்வாயை மீட்கத் திட்டமிட்டன. அப்பகுதியில் எகிப்தின் எதிரியான இஸ்ரேலுடன் சதித்திட்டம் தீட்டி இஸ்ரேலை எகிப்து மீது படையெடுக்கத் தூண்டினர். இஸ்ரேல் - எகிப்து மீது தனிப்பட்ட பகைமை இருந்ததால் அந்நாட்டை தாக்கியது காஜா, சினாய்ப் பகுதிகளைக் கைப்பற்றி சூயஸ் கால்வாயை நெருங்கினர். பிரிட்டனும் பிரான்சும் எகிப்து மீது குண்டு வீசித் தாக்குதல் தொடுத்தனர். ஐ.நா. விற்கு இது குறித்து புகார் சென்றது. இச் சமயத்தில் எகிப்துக்கு உதவ இரஷ்யா முன்வந்தது. போரை நிறுத்தாவிடில் ஏவுகணைக் கொண்டு தாக்கப் போவதாக பிரிட்டன் பிரான்சை மிரட்டியது.

குறிப்பு

அமெரிக்காவும் அந்நாடுகளின் செயலைக் கண்டித்தால் பிரிட்டனும் பிரான்சும் போர் நிறுத்தத்திற்கு உடன்பட்டன. இஸ்ரேல் தன் படைகளைத் திரும்ப அழைத்துக் கொண்டது.

### (d)1967ஆம் ஆண்டுப் போர்

இந்தத் தாக்குதலை மறக்காது பழிவாங்கத் திட்டமிட்ட எகிப்து அதிபர் நாசர் படைவலிமையைப் பெருக்கினார். எகிப்து, சிரியா, ஜோர்டான், ஈராக் ஆகிய நாடுகள் தீவிரமான போர் முன்னேற்பாட்டு நடவடிக்கைகளில் இறங்கின. இஸ்ரேல் தாக்குதலைச் சந்திப்பதற்கு ஆயத்தமாயிற்று. 1967 ஜூன் ஆறாம் நாள் இஸ்ரேல் அரபு நாடுகளின் படை நிலைகளைத் தாக்கி அளித்தது. போர் தொடங்கும் முன்னே இஸ்ரேல் வெற்றியை உறுதி செய்தது. அதன்பின் போர் நான்கு முனைகளில் நடைபெற்றது. இஸ்ரேலிய கோலின் குன்றுகள், காஜா , சினாய், ஜோர்டான், மேற்குக் கரை ஆகிய நான்கு இடங்களில் வெற்றி பெற்றன. அப்பகுதிகள் முழுவதும் கைப்பற்றியது. அத்துடன் ஜெருசலேம் நகர் முழுவதும் இஸ்ரேல் ஆதிக்கத்தின் கீழ் வந்தது.

### (e)பாலஸ்தீனியர் பிரச்சனை

இஸ்ரேல் வெற்றி பெற்றாலும் பாலஸ்தீனியப் பிரச்சனை முடிந்துவிடவில்லை. போரின் போது கைப்பற்றிய பகுதிகளிலிருந்து இஸ்ரேல் வெளியேற மறுத்தது. ஜோர்டான் மேற்குப் பகுதியில் வாழ்ந்த இலட்சக் கணக்கான பாலஸ்தீனிய அரேபியர் நாடிழந்தனர். அவர்கள் ஜோர்டானில் புகுந்தனர். அங்கு பாலஸ்தீன விடுதலை இயக்கம் (பி.எல்.ஐ) எனும் அமைப்புகளை நிறுவினர் அதன் தலைவராக யாசர் அரபத் விளங்கினார். அவர்கள் தங்கள் தாயகத்தை மீட்க வன்முறை இயக்கங்களைத் தொடங்கினர்.

### (f)1973ஆம் ஆண்டுப் போர்

எகிப்தின் புதிய அதிபரான அன்வர் சாதத் 1967ஆம் ஆண்டு இழிவைத் துடைக்கத் திட்டமிட்டு நவீன போர்க் கருவிகளை இரஷ்யாவிடமிருந்து வாங்கிப் படையை நவீனப்படுத்தினார். இதற்கிடையில் ஜெருசலத்தில் உள்ள முஸ்லீம்களின் புதிய மசூதியான அல் அக் ஷா தீ விபத்திற்குள்ளானது. உலக இஸ்லாமியர் விபத்திற்கு இஸ்ரேல் தான் காரணம் என்று கூறிப் புனித இடங்களை மீட்க உறுதி பூண்டன. 1973 அக்டோபர் 6இல் திடீரென எகிப்து இஸ்ரேல் மீது தாக்குதல் தொடுத்தது. தொடந்து சிரியா, லெபனான், ஜோர்டான் ஆகிய இடங்களும் போர் தொடுத்தன. எதிர்பாராத இந்த தாக்குதல்கள் இஸ்ரேலை நிலைகுலையச் செய்தது. இஸ்ரேல் எதிர்த்தாக்குதல் தொடுத்தது. அமெரிக்காவும், மேற்கு நாடுகளும் இஸ்ரேலை ஆதரித்தன. ரஷ்யா, அணிசேரா நாடுகள் மேற்கு நாடுகளைப் பணியவைக்கத் தங்கள் எண்ணை ஏற்றுமதியை நிறுத்தி விலையை ஏற்றின. ஐ.நா. போர் நிறுத்தத்திற்கு ஏற்பாடு செய்தது.

### (g)உடன்பாடு

1977ஆம் ஆண்டுப் போர் எகிப்தைப் பொறுத்தமட்டில் வெற்றி தோல்வியில்லாத முடிவு. கால் நூற்றாண்டுகளுக்கும் மேலாக இடைவிடாப் போரினால் களைப்பற்ற இருநாடுகளுக்கும் நடைமுறை நிலையைக் கருத்தில் கொண்டு சற்று விட்டுக் கொடுத்து அமைதிகான முன்வந்தன. அமெரிக்க வெளியுறவுச் செயலர் ஹென்றி கிஸ்ஸிங்கர் இருநாட்டுத்

தலைநகர்களுக்கும் பல முறை தூது சென்றதன் பயனாய் 1974 ஜனவரி 18இல் இருநாடுகளுக்கிடையில் அமைதி ஒப்பந்தம் ஏற்பட்டது. அதே போல் சிரியாவும், இஸ்ரேலும் அமைதி ஒப்பந்தம் செய்து கொண்டன. இஸ்ரேல் சினாய்ப் பகுதியிலிருந்து வெளியேறவும், கோபன் குன்றுகளுக்கு அப்பால் உள்ள இடங்களிலிருந்து பின்வாங்கவும் இணங்கியது. 1978இல் கேம்ப் டேவிட் எனும் இடத்தில் அரபு, இஸ்ரேல் ஆகிய இருநாடுகளும் மீண்டும் ஓர் உடன்படிக்கையில் கையெழுத்திட்டன. எகிப்தின் இந்த நடவடிக்கை தங்கள் முதுகில் குத்திய செயலென அரபு நாடுகள் கருதின. எனவே எகிப்தைப் பின்பற்றிப் பிற அரபுநாடுகள் இஸ்ரேலுடன் ஓர் அமைதி ஒப்பந்தம் செய்துகொள்ள முன் வரவில்லை .

**(h)பாலஸ்தீன விடுதலை மாநாடு 1988**

பாலஸ்தீன அரேபியர் இன்னமும் நாடற்ற அகதிகளாக ஜோர்டானிலும் அதன்பின் லெபனானிலும் அல்ஜீரியாவிலும் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். ஜோர்டான் நதியின் மேற்குக் கரைப் பகுதியில் அவர்களுக்குச் சுதந்திர நாடு அமைத்துக் கொடுக்க வேண்டும் என்ற கோரிக்கைக்கு உலக நாடுகள் ஆதரவு அதிகரித்தது. அமெரிக்கா பாலஸ்தீன விடுதலை இயக்கத்தின் மீதான தடையை நீக்கியது.

**(i)ஈராக் போர்**

1990இல் நடைபெற்ற ஈராக் போரின் போது அந்நாட்டு அதிபர் சதாம் உசேன் அதனைப் பாலஸ்தீன அரசுகளின் விடுதலைக்காகவும் அப்போர் நடைபெறுவதாக அறிந்தார். அராபாத் அதனை வரவேற்று உசைனுக்கு ஆதரவு நல்கினார். ஈரான் போர் வல்லரசுகளுக்கு மேற்கு ஆசியப் பிரச்சனைகள் உடனடியாகத் தீர்வுகாண வேண்டும் என்பதை வலியுறுத்தின. 1981 ஜூலையில் கோர்ப்பச்சேவும், ஜார்ஜ் புஷ்ஷும் மேற்காசியப் பிரச்சனைகளுக்கு தீர்வு காண மாநாடு கூட்டப்படும் என அறிவித்தனர். 1991 அக்டோபர் 30இல் ஸ்பெயினில் கூடிய மேற்கு ஆசிய அமைதி மாநாடு ஏற்பட்டது. ஆயினும் இப்பிரச்சனை இன்றுவரை தீரவில்லை.

**உங்கள் முன்னேற்றத்தைச் சரிபார்க்கவும்**

1. ராஜீவ்காந்தி காலத்தில் இந்திய-சீன உறவு நிலையைக் குறிப்பிடுக?
2. கியூபா பிரச்சினையை பற்றி குறிப்பிடுக?

## 13.6 உங்கள் முன்னேற்றத்தை சோதிக்கும் வினாக்களுக்கான விடைகள்

ராஜீவ் காந்தி தனது ஆட்சிக் காலத்தில் தேக்க நிலையில் இருந்த இந்திய-சீன உறவை புதுப்பிக்க விரும்பினார். சீனாவுடன் நட்புறவையும் கூட்டுறவையும் பலப்படுத்தும் முயற்சிகளை மேற்கொண்டார்.1985, அக்டோபர் மாதம் சீனப் பிரதமர் ஷோன்சியாங் (Zhon Ziang) கைக் சந்தித்துப் பேசினார். ஆனால் எல்லைத் தகராறு தீர்க்க முடியாத பிரச்சனையாக இருந்து வந்தது. இருநாட்டு உயர்மட்ட அதிகாரிகள் 1985-ல் சந்தித்துப் பேசிய போது வடக்கு அஸ்ஸாம் பகுதியிலுள்ள 90,000 கிலோ மீட்டர் பரப்பளவு உள்ள பகுதி முன்பு மஞ்சு பேரரசுடன் சேர்ந்திருந்தது என்று கூறி அப்பகுதிக்கு உரிமை கோரினர் சீனப் பிரதிநிதிகள். இந்தியா சீனா வசம் உள்ள அக்சே சின் (யுமளயை ஊாைை) என்ற பகுதிக்கு உரிமை கோரியது. எனவே பேச்சு வார்த்தைகளில் தொடர்ந்து தேக்க நிலையே நீடித்தது.

லத்தீன் அமெரிக்க நாடுகளில் ஒன்றான கியூபாவில் 1652-ஆம் பாடிஸ்டா (Batista) என்பவர் தன்னுடைய சர்வாதிகார ஆட்சியை நிறுவினார். இவருடைய ஆட்சி ஒரு கொடுங்கோலாட்சியாக விளங்கியது.

இதனால் மக்களுக்குப் பெருத்த தொல்லைகள் ஏற்பட்டது. அத்தருணத்தில் ∴பிடல் காஸ்ட்ரோ (Fidel Castro) என்ற வழக்கறிஞர் தன்னுடன் இரு நூறு நபர்களைச் சேர்த்துக் கொண்டு மான்கடா கோட்டையைத் தாக்கினார். (26 ஜூலை 1503) இம்முயற்சியில் தோல்வியுறவே, அவர்கள் அனைவரும் கைது செய்யப்பட்டு சிறையிலடைக்கப்பட்டனர். ஒரு சிறிது காலம் கழித்து காஸ்ட்ரோ விடுதலை பெற்றார். பின்னர், அவர் மெக்ஸிகோ நாட்டிற்குச் சென்று, 82 பேர் அடங்கிய 'ஊடுருவல் படையை' உருவாக்கினார்.

## 13.7 சுருக்கவுரை

சீனாவுக்கும், இந்தியாவுக்குமிடையே ஓரளவு சகஜ நிலை ஏற்பட்டு வந்த சமயத்தில் வாஜ்பாய் அரசின் பாதுகாப்பு அமைச்சராக இருந்த ஜார்ஜ்பெர்னாண்டஸ் 1998,ல் “இந்தியாவுக்கு முதல் மிகப்பெரிய அச்சுருத்தல் சீனாதான்“ என்று கூறியது பெரிய சர்ச்சையை கிளப்பிவிட்டது. பெர்னாண்டசின் இந்தக் கருத்துக்கு சீனா தனது கடுமையான எதிர்ப்பைத் தெரிவித்தது. இந்தியத் தலைவர் களின் சாந்தப்படுத்தும் சில பேச்சுக்களால் சீனா ஓரளவு சாந்தமானது ஆனாலும் இந்தியாவை ஒரு அணு ஆயுத வல்லரசாக அறிவிக்கக் கூடாது என்பதை சீனா தொடர்ந்து வற்புறுத்தி வருகிறது.

ஆனாலும் இப்படி ஏற்படும் சில பிரச்சனைகளையெல்லாம் பின் தள்ளிவிட்டு இந்தியாவுடன் சீனா நல்லுறவை ஏற்படுத்த விரும்புகிறது. காரணம் சோவியத் ரஷ்யாவின் வீழ்ச்சிக்குப்பிறகு சீனா மிகப்பெரிய ராணுவ மற்றும் பொருளாதார வல்லரசாக மாறி வருகிறது. எனவே அமெரிக்கா இந்தியாவை தன் பக்கம் இழுத்துவிடுமோ என்ற பயம் சீனாவிடம் உள்ளது. எனவேதான் இந்தியாவிடம் தனது அணுகுமுறையை மாற்றி உள்ளது. மேலும் சீனாவிலும் இஸ்லாமிய அடிப்படைவாதம் வளர்த்து வருகிறது. அதற்காக இந்தியாவிடமிருந்து தகவல்களையும், பயங்கரவாதத்தை அணுகும் முறைகளையும் கேட்டறிய நினைக்கிறது. தற்போது இந்தியாவும் சீனாவும் மிகப்பெரிய சந்தைகளாக உருவெடுத்துள்ளன.

## 13.8 முக்கிய வார்த்தைகள்

காங்கோ விவகாரம் கியூபான் நெருக்கடி இந்தோ சீனா மோதல் - அரபு இஸ்ரேல் மோதல்

## 13.9 சுய மதிப்பீடு வினாக்கள் மற்றும் பயிற்சிகள்

**சுருக்கமான கேள்விப் பதில்கள்**

7. காங்கே பிரச்சினையை மதிப்படுக?
8. கியூபா பிரச்சினையைப் பற்றிக் குறிப்பு வரைக?

**விரிவான கேள்விப் பதில்கள்**

1. இந்திய சீன உறவை பற்றி கட்டுரை வரைக?
2. அரபு இஸ்ரேல் போரைப் பற்றி குறிப்பிடுக?

## 13.10 மேலும் படிக்க


- Kirsten E. Schulze. (2013). ***The Arab-Israeli Conflict.*** Routledge.
- M. L. Sali.(1998). ***India-China Border Dispute: A Case Study of the Eastern Sector***. APH Publishing.
- Norman Shakespeare . (2015***). The Congo Affair*** . eBookIt.com.
- Robert F. Kennedy. (2011). ***Thirteen Days: A Memoir of the Cuban Missile Crisis***. W. W. Norton.

குறிப்பு

# தொகுதி IV உலகமயமாதல்

## அலகு 14 பயங்கரவாதம்

14.0 அறிமுகம்
14.1 நோக்கங்கள்
14.2 ஈரான் - ஈராக் மோதல்
14.3 வளைகுடா போர்
14.4 இஸ்லாமிய நாடுகளில் அமைப்பு
14.5 சர்வதேசப் பயங்கரவாதம்
14.6 பயங்கரவாதத்திற்கு எதிரானப்போா
14.7 உங்கள் முன்னேற்றத்தை சோதிக்கும் வினாக்
14.8 சுருக்கவுரை
14.9 முக்கிய வார்த்தைகள்
14.10 சுய மதிப்பீடு வினாக்கள் மற்றும் பயிற்சிகள்
14.11 மேலும் படிக்க

### 14.0 அறிமுகம்

வல்லரசுகள் ஆக்கிரமிப்புச் செயல்களில் துணிந்து ஈடுபடும் போது உலகம் ஒரு பார்வையாளராகவோ அல்லது கண்டனம் செய்பவ ராகவோ இருக்கிறதேயன்றி ஆக்கிரமிப்பை அகற்ற நடவடிக்கையில் ஈடுபடு வதில்லை . 1982-ல் பிரிட்டன் ஆறாயிரம் மைல்களுக்கு அப்பால் அர்ஜென்டைனாவிற்கு அருகில் உள்ள பாக்லாண்ட் ஐலண்டை கைப்பற்றும் போது, பெரும்பாலான நாடுகள் வேடிக்கை பார்த்தன. ரஷியாவும் ஒரு சில அணிசேரா நாடுகளும் கண்டனம் தெரிவித்தன. அதேபோல் ரஷியா ஆப்கானிஸ்தானத்தினுள் படையனுப்பிய போது மேற்கு நாடுகள் கண்டனம் தெரிவித்தன.

தூதரக உறவு இல்லாத ஒரு நாட்டுடன் உடன்பாடு காணுவது என்பது இயலாத காரியம். சீனாவுடன் அமெரிக்க தூதரக உறவு கொள்ளாததால் அந்நாடு கொரியாவிலும், வியட்நாமிலும், இந்தியாவிலும் ஆக்கிரமிப்புச் செய்தபோது பேச்சுவார்த்தை தொடங்க இயலவில்லை . 1970-ல் அமெரிக்க வெளியுறவு அமைச்சர் கிஸ்ஸிங்கர் பீகிங் விஜயம் செய்தபின் நிலைமை மாறியது. 1971-ல் நிக்சன் சீனாவிற்கு வருகை புரிந்ததால் அதனைத் தொடர்ந்து தூதரக உறவும் ஏற்படுத்தப்பட்டது. பன்னாட்டு உறவு மரபுகள் மதிக்கப்படுவதில்லை . ஈரானியர் 1980-ல் அமெரிக்க தூதரக அதிகாரிகளை பணயக் கைதி களாக 444 நாட்கள் பிடித்து வைத்திருந்தனர். ராஜதந்திர மரபு களுக்கு முரணான இச்செயலை உலக நாடுகளில் பெரும்பாலானவை கண்டிக்கவில்லை.

ஒரு முறை கம்யூனிச நாடாகிவிட்ட பின்னர் எப்போதும் கம்யூனிச நாடுதான் என்ற கொள்கையை சோவியத் தலைவர்கள் சொல்லாமல் செய்து காட்டி வருகிறார்கள். 1956-ல் ஹங்கேரியும் 1969-ல் செக்கோஸ்லோவாகியாவும் கம்யூனிசத்தை புறக்கணிக்க முயன்றபோது ரஷிய டாங்குகள் குறுக்கிட்டன. உலக கம்யூனிச இயக்கத்தின் தலைமையகமான மாஸ்கோவிற்கு போட்டியாக பீகிங் கிளம்பியிருக்கிறது. மார்க்சீய கோட்பாட்டிற்கு விளக்கமளிக்கும் உரிமை தங்களுக்குத்தானிருக்கிறது என சீனாவும், ரஷ்யாவும் உரிமை பாராட்டுகின்றன. ஸ்டாலின் காலத்தில் உலக கம்யூனிசத்திற்கு ஏகபோக தலைமையகமாக இருந்த மாஸ்கோவிற்கு எதிர்ப்பு கிளம்பியிருப்பதால் கம்யூனிச உலகமே பிளவுபட்டு வந்தது.

1986-ல் ரஷிய அதிபர் கோர்பசேவ் பிரஸ்த்ரோய்கா, கிளாஸ்நாஸ்ட் என்ற தாரக மந்திரங்களுடன் ரஷ்ய கம்யூனிச சமுதாயத்தைச் சீரமைக்கிறேன் என்று கூறி அதனை சீர்குலைத்துவிட்டார். அதனால் உலகில் கெடுபிடிப்போர் சகாப்தம் முடிந்துவிட்டது. இரு துருவ அரசியல் மறைந்து ஒரு பேரரசு ஆதிக்கம் தலை தூக்கிவிட்டது. இரும்புத்திரை

குறிப்பு

அகன்றுவிட்டது. பெர்லின் சுவர் நொறுக்கப்பட்டுவிட்டது. இரு ஜெர்மனிகளும் இணைந்துவிட்டன. கிழக்கு ஐரோப்பிய நாடுகள் அனைத்தும் கம்யூனிச கட்சிக்கு நிரந்தரமாக விடை கொடுத்துவிட்டன. இரு துருவ அரசியல் இறந்துபோன இவ்வேளையில் அணிசேரா நாடுகள் இயக்கம் இனியும் நீடிக்க வேண்டுமா என்ற நியாயமான கேள்வி எழுகின்றது.

## 14.1 நோக்கங்கள்

சர்வதேச அளவில் உலக நாடுகளின் பயங்கரவாதத்தை எடுத்துரைக்கும் விதத்தில் இவ்வியல் அமையப் பெற்றுள்ளது

## 14.2 ஈரான் - ஈராக் மோதல்

ஈரான் - ஈராக் போர் ஈரானை ஈராக் செப்டம்பர் 1980 ல் ஆக்கிரமித்தபோது ஆரம்பமாகியது. இது ஆகஸ்ட் 1988 ல் ஐக்கிய நாடுகள் சபையின் அனுசரணையுடன் முடிவுக்கு கொண்டு வரப்பட்டது. இந்த யுத்தம் 20ஆம் நூற்றாண்டின் மிக நீண்டதும் கடும் அழிவுகளை ஏற்படுத்திய போர்களில் ஒன்றாகும். இதன் போது சுமார் ஒரு மில்லியன் அளவான நபர்கள் காயமடைந்தோ கொல்லப்பட்டோ யுத்தத்தினால் பாதிக்கப்பட்டனர். இந்த போர் முடிவுக்கு வந்துள்ள போதிலும் யுத்தத்திற்கான அடிப்படை காரணிகள் இன்னும் தீர்க்கப்படவில்லை.

**பின்னணி**

ஈரான் – ஈராக் இடையிலான எல்லைக் கோடு பல நூற்றாண்டு காலமாகவே சர்ச்சைக்குரியதாகவே இருந்து வந்துள்ளது. 1534 ல் தற்போதைய ஈராக்கை ஒட்டமான் பேரரசு ஆக்கிரமித்த பின்பு சாம்ராஜ்ஜியத்தின் கிழக்குப் பிராந்தியமாக ஈராக் மாறியது. இதன்போது ஈரான் இதன் போது கிழக்குப் பகுதியில் ஈராக்கின் எதிரியாக அமைந்தது. முதலாம் உலக யுத்தத்தின் பின்னர் ஈராக் தனி சுதந்திர நாடு ஆகியது. இதன் பின்னர் இரு நாடுகளுக்கும் இடையில் எல்லை சம்பந்தமான இணக்கமின்மை ஏற்பட்டது. 1937 ல் ஏற்பட்ட உடன்படிக்கையின்படி சர்ச்சைக்குரிய ஷாட் அல் அரப் பிரதேசம் ஈராக்கிடம் ஒப்படைக்கப்பட்டது.

எல்லைத் தகராறுக்கு அப்பால் இரு நாடுகளும் தொடர்ந்தும் முறுகல் நிலையிலேயே இருந்தன. காரணம் ஈராக் அரேபியர்களை கொண்ட நாடாக இருக்கின்ற வேளையில் ஈரான் பாரசீகர்களைக் கொண்ட நாடாக இருந்தது. வடக்கே எல்லைப் புறத்தில் குர்து மக்கள் (இவர்கள் அரேபியரோ பாரசீகரோ அல்லர்) இன மக்கள் எல்லையின் இருபுறமும் இரு நாட்டினுள்ளும் வாழ்கின்றனர். அயோத்துல்லா றுகொல்லா கொமேனி போன் ஈரானில் இருந்து நாடுகடத்தப் பட்டவர்கள் ஈராக்கில் குடியேறியமையும் இந்த நாடுகளின் உறவில் விரிசலை ஏற்படுத்தயது.

## 14.3 வளைகுடாப்போர் (Gulf War, 1991)

இருபதாம் நூற்றாண்டின் இறுதியில் நடைபெற்ற நிகழ்ச்சிகளில் முக்கியமானது 1991-ம் ஆண்டில் நடைபெற்ற வளைகுடாப்போர் ஆகும். இதற்கு முன்பு நடைபெற்ற போர்களை விட இப்போர் பலவகை களில்முக்கியத்துவம் பெறுகிறது. உலகத்தில் அமைதியை ஏற்படுத்து வதற்காக அமைக்கப்பட்ட ஐ.நா சபையின் தலைமையில் பல உலக நாடுகள் ஒன்று சேர்ந்து குவைத் நாட்டை ஆக்கிரமித்த ஈராக் நாட்டிற்கு எதிராக நடத்திய போராகும் இது. இப்போரில் இறுதியில் ஈராக் தோற்கடிக்கப்பட்டு குவைத் விடுவிக்கப்பட்டது. இப்போரின் விளைவாக பன்னாட்டுறவில் பல மாற்றங்கள் ஏற்பட்டது. .

**வளைகுடாப் போருக்கான காரணங்கள்**

**(a)சதாம் உசேனின் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகள்**

மத்திய கிழக்கிலுள்ள ஈராக் நாட்டின் அதிபரான சதாம் உசேன் மேற் கத்திய நாடுகளின் உதவியுடன் ஈராக்கின் ராணுவ வலிமையை

குறிப்பு

அதிகப் படுத்திக் கொண்டார். உலகில் நாற்பது சதவீத எண்ணெய் உற்பத்தி செய்யப்படும் வளைகுடாப் பகுதி நாடுகளின் மீது தனது ஆதிக்கத்தை ஏற்படுத்தவும், அராபிய உலகின் தலைமைத் தன்மையைப் பெறவும் ஆசை கொண்டார். குவைத் மற்றும் சவுதி அரேபியா போன்ற பக்கத்து நாடுகளின் எண்ணைக் கிணறுகள் மீது ஆதிக்கம் கொண்டால். உலகப் பொருளா தாரத்தையே கட்டுப்படுத்த முடியும் என்று நம்பினார்.

**(b) ஈராக்கின் மோசமான பொருளாதார நிலை**

1980 - செப்டம்பர் மாதம் ஈராக்கிற்கும் ஈரானுக்குமிடையே போர் ஆரம்பித்தது. இப்போர் 1988 ஜுலை மாதம் வரை நீடித்தது. எட்டு ஆண்டு காலம் நடைபெற்ற இப்போரினால் ஈராக்கின் பொருளாதரா நிலை மிகவும் பாதிக்கப்பட்டது. எனவே ஈராக்கின் பொருளாதார நிலையை மேம்படுத்த பக்கத்திலுள்ள வலிமையற்ற, எண்ணை வளமிக்க குவைத் நாட்டைப் பிடிக்கத் திட்டம் தீட்டினர்.

**(c) குவைத்திற்கெதிரான சதாம் உசேனின் குற்றச்சாட்டுகள்**

1989-ஜுலை 17-ம் தேதி சதாம்உசேன் அராபியக் கழகத்திற்கு (Arab League) கடிதம் ஒன்று எழுதினார். அதில் குவைத் மீது சராமரியான குற்றச்சாட்டுகளைச் சுமத்தினர். முக்கியமாக ருமேனியா எண்ணைக் குவைத் திருடிவிட்டதாகவும், ஈராக்கியப் பகுதியில் குவைத் தனது ராணுவத் தளத்தை அமைத்ததாகவும், குவைத் மற்றும் ஐக்கிய அராபிய எமிரேட் நாடுகள் அமெரிக்காவுடன் சேர்ந்து கொண்டு சந்தையில் அதிக அளவு எண்ணையை விற்பனைக்கு“ விட்டு அதன் மூலம் தேக்கநிலையை ஏற்படுத்தி ஈராக்கின் பொருளாதார வளர்ச்சியைத் தடை செய்ய சதித் திட்டம் தீட்டுவதாகவும் குவைத் மீது குற்றம் சுமத்தினார் சதாம்உசேன்.

**(d) குவைத்தை ஈராக் கைப்பற்றுதல் 1990 ஆகஸ்ட்,2**

மேற்கண்ட குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் 1990 ஆகஸ்ட் 2-ம் தேதி காலையில் திடீரென ஈராக்கியப்படைகள் குவைத் நாட்டினுள் நுழைந்தன. எவ்வித எதிர்ப்பும் இல்லாமல் குவைத் வீழ்ந்தது. குவைத்தின் ஆட்சியாளர் அகமத் அல சபா (Ahmad-al-Saba) தனது குடும்பத்தினருடன் சவுதி அரேபியா ஓடி தஞ்சமடைந்தார். இதன்பின் சதாம்உசேன் குவைத்தை ஈராக்கின் 19 வது மாநிலம் என்று அறிவித்து ஈராக்குடன் இணைத்துக் கொண்டார். தனது கட்டுப்பாட்டின் கீழ் குவைத்தில் ஒரு பொம்மை அரசை நிறுவினார். இதனைக் கண்ட உலக நாடுகள் அதிர்ச்சியடைந்தன.

**(e) உலக நாடுகளின் கண்டனம்**

குவைத்தை ஈராக் ஆக்கிரமித்துக் கொண்டதை உலக நாடுகள் அனைத்தும் ஒருமித்த குரலில் கண்டனம் செய்தன. ஐ.நா பாதுகாப்பு சபை கண்டித்தது .ஐரோப்பிய பொருளாதார சமுதாயம், நேட்டோ போன்ற அமைப்புகளும் கண்டித்தன. பல அராபிய நாடுகளும் கண்டித்ததுடன் மட்டு மல்லாது குவைத்தை மீட்பதற்கும் முன்வந்தன. 1990 - ஆகஸ்ட் 10-ம் தேதி கெய்ரோவில் கூட்டப்பட்ட அராபியக் கழகத்தின் மாநாட்டில் குவைத் தை மீட்க ராணுவம் ஒன்றை அனுப்பும் படியாக எகிப்து கேட்டுக் கொண்டது. அத்துடன் தனது வீரர்கள் 5000 பேரை சவுதி அரேபியாவுக்கு அனுப்பி வைத்தது. ஆனால் இவைகளை யெல்லாம் ஈராக் கடுமையாக விமர்சித்தது.

**(f) மேலை நாடுகளில் நடவடிக்கைகள்**

ஆனால் மேற்கத்திய நாடுகள் வேகமான நடவடிக்கைகளில் ஈடுபட்டன. இங்கிலாந்து, ஜெர்மனி, இத்தாலி, ஸ்பெயின் ஆகிய நாடுகள் தங்கள் நாடுகளில் இருந்த சுமார் 80 மில்லியன் டாலர் ஈராக்கிய முதலீடு களை முடக்கி வைத்தன. அமெரிக்கா ஈராக் மீது பொருளாதாரத் தடை விதித்தது. ஐ.நா. சபையோ ஈராக் மீது ‘உலகளாவிய பொருளாதாரத் தடை’(Global trade embargo) விதித்தது. ஆனால் சதாம்உசேன் இவைகளை யெல்லாம் புறக்கணித்தார்.

குறிப்பு

**(h) பாதுகாப்பு சபை தீர்மானங்கள் 1990 ஆகஸ்ட் 6**

கெடுபிடிப் போரை முடிவுக்கு கொண்டுவந்த அமெரிக்காவும் ரஷ்யாவும் ஈராக் விஷயத்தில் ஒற்றுமையாகச் செயல்பட்டது குறிப்பிடத் தக்கது. இந்த இரண்டு நாடுகளின் ஆதரவுடன் 1990 ஆகஸ்ட் 6-ல் ஐ.நா. சபை கீழ்க்கண்ட பல தீர்மனங்களை நிறைவேற்றியது. குவைத்தை ஆக்கிர மித்தது செல்லாது குவைத்திலிருந்து ஈராக்கியப் படைகள் வாபஸ் பெற வேண்டும். ஈராக்கிய எண்ணை ஏற்றுமதிக்கும் வெளிநாடுகளிலிருந்து பொருட் களை இறக்குமதி செய்யும் தடை போன்ற தீர்மானங்கள் குறிப்பிடத்தக்கது. ரஷ்யா அமெரிக்கா ஜப்பான் போன்ற நாடுகள் தங்கள் கப்பற்படையை வளைகுடாப்பகுதிக்கு அனுப்பின.

**(h) அமெரிக்காவின் நடவடிக்கைகள்**

இந்த வளைகுடாப் பிரச்சனை அமெரிக்க குடியரசுத்தலைவர் ஜார்ஜ் புஷ்ஃக்கு வெளிநாட்டுக் கொள்கையில் ஏற்பட்ட மிகப்பெரிய பிரச்சனை யாகும். மிகக்கவனமாக அமெரிக்கா மட்டுமே சதாம் உசேனுக்கு எதிர்பாளர் என்ற தோற்றம் ஏற்படுவதைத் தவிர்த்தார். மற்ற மிதவாத அராபிய நாடுகளும் ஈராக்கிற்கு எதிராகப்படை அனுப்பியதால் அமெரிக்காவுக்கு ஏற்படவிருந்த சங்கடம் போய்விட்டது. குவைத்தைப் பிடித்தது போல் சவுதி அரேபியாவையும் ஈராக் பிடித்துக் கொண்டால் அமெரிக்கா, ஜப்பான் போன்ற நாடுகள் பெரும்பாதிப் படையும். மேலும் ஈராக் இஸ்ரேலுக்கு எதிராகவும் நடவடிக்கை மேற்கொள்ளலாம் என்பதால் அமெரிக்கா ஈராக்கிற்கு எதிராக கடினமான நிலையை மேற்கொண்டது. 1990 ஆகஸ்ட் 9-ல் அமெரிக்கா தனது படைப்பிரிவு மற்றும் ராணுவ விமானங்களை சவுதி அரேபியாவுக்கு அனுப்பியது. வளைகுடாப் பகுதியில் பதட்டநிலை ஏற்பட்டது அமெரிக் காவின் தலைமையில் பன்னாட்டுப்படை ஒன்று அமைக்கப்பட்டது.

**(i)சதாம் உசேனின் புதிய கோரிக்கை**

1990 ஆகஸ்ட் 12-ம் தேதி சதாம்உசேன் புதிய அறிவிப்பு ஒன்றை வெளியிட்டார். அதில் "இஸ்ரேல் தான் ஆக்கிரமித்து வைத்துள்ள அராபியப் பகுதிகளிலிருந்து விலகினால் தனது படைகளை குவைத்திலிருந்து விலக்கிக் கொள்வதாகவும், அமெரிக்கா மற்றும் பன்னாட்டுப்படைகள் சவுதி அரேபியாவிலிருந்து விலக்கிக் கொள்ளப்பட்டு அதற்குப்பதில் அராபிய மற்றும் ஐ.நா. படைகளை நிறுத்த வேண்டும்" என்று கோரிக்கை விடுத்தார். ஆனால் இதனை ஐ.நா சபையோ அமெரிக்காவின் தலைமையிலான பன்னாட்டுப்படைகளோ ஏற்றுக் கொள்ளவில்லை.

**(j) பன்னாட்டுப் படைகளின் நடவடிக்கைகள்**

அமெரிக்காவின் தலைமையிலான 28 நாடுகளைக் கொண்ட பன்னாட்டுப் படைகள் தங்கள் நடவடிக்கைகளை ஆரம்பித்தன. 1990 ஆகஸ்ட் 14-ல் அமெரிக்க குடியரசுத் தலைவர் ஜார்ஜ்புஷ் ஈராக்கில் கடற்படை முற்றுகைக்கு உத்தரவிட்டார், இதன்படி ஈராக்கிலிருந்து புறப்படும், ஈராக்கிற்கு வந்து சேரும் எல்லாக் கப்பல்களும் தடுத்து நிறுத்தப்படும் என்று அறிவித்தார். இதன்படி ஈராக்கிலிருந்து எண்ணை ஏற்றுமதியும், ஈராக்கினுள் வரும் ஆயுதங்களும் உணவுப்பொருட்களும் தடுத்து நிறுத்தப்பட்டன. ஆனால் இந்த நடவடிக்கைகளை ஈராக் கண்டித்தது. பதட்ட நிலை அதிகரித்தது.

**ஐ.நா. சபை பொதுச் செயலரின் சமாதான முயற்சிகளின் தோல்வி:1990 செப்.5**

இந்தப் பிரச்சனைகளுக்குச் சமாதான முறையில் தீர்வு காண் பதற்காக ஐ.நா. சபை பொதுச்செயலாளர் பெராஸ் டி கொய்யா (Pears de Cueller), ஈராக்கின் வெளிஉறவு அமைச்சர் தாரிக் அசீஸ் (Tariq Aziz) என்ப வருடன் ஜோர்டன் தலைநகரான அம்மானில் (யுஅஅயெ) பேச்சு வார்த்தை நடத்தினார்.

குறிப்பு

ஐ.நா. பாதுகாப்பு சபை தீர்மானத்தின்படி குவைத் ஆட்சி யாளரிடம் மீண்டும் குவைத் ஒப்படைக்க வேண்டும் என்றார் ஐ.நா. செயலர். மேலும் இருவரும் ஈராக்-சவுதி எல்லையில் அராபிய அமைதிப் படை ஒன்றை வைக்கவும். அமெரிக்கப்படைகள் வாபஸ் பெறப்பட வேண்டும் என்றும் ஒப்புக்கொண்டார். ஆனால் ஜார்ஜ்புஷ் நிபந்தனை யின்றி ஈராக்கியப் படைகள் விலக்கிக் கொள்வதைத் தவிர வேறு எந்த ஆலோசனைகளையும் ஏற்க முடியாது என்று உறுதி படக் கூறினார்.

**அமெரிக்க சோவியத்தின் உச்சி மாநாடு 1990 செப்9**

இப்படிப்பட்ட பதட்டமான சூழ்நிலையில் ஜார்ஜ்புஷ், கோர்பசேவ் ஆகியோர் ஹெல்சிங்கி (Helsinki) யில் சந்தித்துப் பேசினார். இந்த மாநாட்டின் இறுதியில் அறிக்கை ஒன்று வெளியிட்டப்பட்டது. அதன்படி ”பிரச்சனையை அமைதியான வழியில் தீர்ப்பதே எங்கள் நோக்கமாகும். ஈராக்கின் ஆக்கிரமிப்புக்கு எதிராக இரண்டு நாடுகளும் ஒரே கருத்தைக் கொண்டுள் ளோம். ஈராக்கின் ஆக்கிரமிப்பைத் தடுப்பதற்கு தற்போதைய நடவடிக்கை களால் முடியாமல் போய்விட்டால் ஐ.நா சாசனத்தின்படி மேற்கொள்ளப்பட வேண்டிய அடுத்த கட்ட நடவடிக்கைகளைப் பற்றி ஆராயப்படும். 1990 ஆகஸ்ட் 2-ம் தேதிக்கு முந்திய நிலைக்கு ஈராக் திரும்ப வேண்டும் என்று அந்த அறிக்கை கூறியது. வல்லரசு நாடுகளின் சமாதான முயற்சிகள் வெற்றி யடைய உலகமெங்கும் வழிபாடுகள் செய்யப்பட்டன. போப் இரண்டாம் ஜாண்பால் அமைதிக்கான பிராத்தனை செய்தார்.

**வரலாற்றுச் சிறப்புமிக்க பாதுகாப்புச் சபை தீர்மானம்**

1990 நவம்பா 6-ம் தேதி அமெரிக்காவும் சவுதி அரேபியாவும் தங்கள் படைகளின் கூட்டு நடவடிக்கைகள் மற்றும் கட்டுப்பாடுகள் பற்றிய ஒரு ஒப்பந்தம் செய்து கொண்டார்கள். நவம்பர் 10-ம் தேதி ஐ.நா. செயலர் ஐ.நா சபை சாசனம் 42-வது விதியின்படி ஐ.நா பாதுகாப்பு சபை நிலம், நீர், ஆகாயம் மார்க்கமாக பன்னாட்டு அமைதி யையும், பாதுகாப்பையும் நிலை நாட்ட முடியும்” என்று அறிவித்தார். இதன் தொடர்ச்சியாக பாதுகாப்பு சபை நவம்பர் 30-ம் தேதி 12-2 என்ற ஓட்டு விகிதத்தில் வரலாற்றுச் சிறப்பு மிக்க தீர்மானம் ஒன்றை இயற்றியது. அதன்படி 1991 ஜனவரி 15-ம் தேதிக்குள் சதாம்உசேன் குவைத்தை விட்டு வெளியேறவில்லையென்றால் ஈராக் கிற்கு எதிராகப் படைபலம் பிரேயோகிக்கப்படும் என்று கெடு விதிக்கப் பட்டது. இவ்வாறு பிரச்சனைகளைத் தீர்த்து அமைதியை நிலைநாட்ட போர் புரிவதற்கு ஐ.நா. சபை அனுமதி அளித்தது.

**இறுதிக்கட்ட சமதான முயற்சி**

ஐ.நா. சபையின் இந்த தீர்மானத்தை சதாம்உசேன் நிராகரித்தார். இது ஈராக்கிற்கு எதிராகப் போர்ப்பிரகடனம் செய்வது போன்றது என்று கண்டித்தார். இதற்கிடையில் இறுதிக்கட்ட சமாதான முயற்சிகளும் மேற் கொள்ளப்பட்டன. அமெரிக்கா வெளிஉறவு அமைச்சர் ஜேம்ஸ் பேக்கர், ஈராக்கின் வெளிஉறவு அமைச்சர் தாரிக் அசீஸ் ஆகியோர் 1991 ஜனவரி 10-ல் ஜெனிவாவில் சந்தித்துப் பேசினர். ஆனால் இதுவும் தோல்வியில் முமடிவடைந்தது. 1991-12 ல் ஐ.நா. செயலர் பெராஸ் டி கொய்யா தனிப்பட்ட முறையில் ஈராக் சென்று சதாம் உசேனைச் சந்தித்துப் பேசினார். செயலரின் யோசனைகளை சதாம் உசேன் நிராகரித்தார். ஆனால் புதிதாக இரண்டு அம்ச சமாதானத் திட்டத்தை வெளியிட்டார். அதன்படி “குவைத்தி லிருந்த எண்ணைக்கிணற்றுடன் கூடிய இரண்டு தீவுகள் கொடுக்க வேண்டும். பாலஸ்தீனப் பிரச்சனையுடன்குவைத் பிரச்சனையை இணைக்க வேண்டும்“ என்றார். ஜார்ஜ்புஷ் இந்த இரண்டு திட்டத்தையும் ஒட்டு மொத்தமாக நிராகரித்தார் போர் மேகங்கள் சூழ்ந்தன.

குறிப்பு

**போரின் ஆரம்பம்**

1991 ஜனவரி 15-ல் பிரான்ஸ் ஆறு அம்ச சமாதானத் திட்டம் ஒன்றை ஐ.நா. பாதுகாப்பு சபையில் வைத்தது. அதன்படி ஈராக் குவைத்தி லிருந்து வெளியேற வேண்டும். மேற்கு ஆசியப் பிரச்சினையைத் தீர்ப் பதற்கு ஐ.நா. சபையின் தலைமையில் அமைதி மாநாடு ஒன்று கூட்டப் படுதல் வேண்டும்" என்று அத்திட்டம் கூறியது. ஆனால் இதனை. அமெரிக் காவும் ஈராக்கும் நிராகரித்தன. இந்த நேரத்தில் இந்தியர் தனது அற்புதமான கொள்கை ஒன்றை வெளியிட்டது. "ஐ.நா. சபைத் தீர்மானத்தின்படி, குவைத்தை விட்டு ஈராக் வெளியேற வேண்டும். ஆனால் குவைத்தை விடுவிப்பதற்காக ஈராக்கை அழித்து விடக்கூடாது". இந்தியாவின் ஒப்பற்ற இந்தக் கருத்தை யாரும் கண்டு கொள்ளவில்லை. பல ஐரோப்பிய நாடு களின் தலை நகரங்களில் போருக்கெதிரான ஆர்ப்பாட்டங்கள் நடை பெற்றன. ஆனால் அமைதியான முறையில் குவைத்திலிருந்து ஈராக்கை . வெளியேற்ற எடுக்கப்பட்ட எல்லா முயற்சிகளும் தோல்வியடையவே ஐ.நா. சபைவிடுத்த கெடுமுடிந்தவுடன் போர் ஆரம்பமானது.

**போரின் போக்கு**

போர் சரியாக இந்திய நேரப்படி 1991, ஜனவரி 17 காலை 3.20 மணி அளவில் ஆரம்பித்தது. ஈராக்கை ஜெயிப்பது எங்கள் நோக்கமல்ல. குவைத்தை விடுவிப்பதே எங்கள் நோக்கமாகும். குவைத்தை விட்டு சதாம் உசேன் வெளியேற வேண்டுமென்று ஈராக் மக்களே நினைப்பார்கள் என்று நம்புகிறாம்" என்று அமெரிக்க அதிபர் ஜார்ஜ்புஷ் அறிவித்தார். 'பாலை வனப் புயல்' (Operation Desert Storm) என்ற பெயரையுடைய வளைகுடாப் போர் ஆரம்பித்தது.

அமெரிக்காவின் தலைமையிலான பன்னாட்டு படைகள் ஈராக்கின் தலைநகர் பாக்தாத், முக்கிய எண்ணைக் கிணறுகள், ஏவுகணைத்தளங்கள், விமானத் தளங்கள் மீது தாக்குதல் தொடுத்தன. போரின் முதல் கட்டத்தில் - ஈராக் எந்தவித எதிர்ப்பும் தெரிவிக்கவில்லை . ஆனால் ஜனவரி 18-ல் ராணுவ நடவடிக்கையில் கலந்து கொள்ளாத இஸ்ரேல் மீது ஈராக் ஸ்கட் (Scud) ஏவுகணைகளைச் செலுத்தியது. பல இஸ்ரேலிய நகரங்கள் தாக்கப்பட்டன. ஈராக்கின் நோக்கம் தெளிவாகப் புரிந்தது. இஸ்ரேலைப் போருக்கு இழுத்து அதன் மூலம் பன்னாட்டுப் படைகளிடையே பிளவை ஏற்படுத்துவதற்கே இந்த நடவடிக்கை ஆகும். எனவே மற்ற நாடுகளின் வேண்டுகோளை ஏற்று இஸ்ரேல் பதில் தாக்குதல் தொடுக்கவில்லை.

போர் தொடர்ந்து நடைபெற்றது. பன்னாட்டுப் படைகள் தொடர்ந்து தாக்குதல் நடத்தி ஈராக் மிது பேரழிவை ஏற்படுத்தின. விதவித மான புதிய ஆயுதங்கள் பயன்படுத்தப்பட்டன. 1991 ஜனவரி 21-ல் போர் நிறுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. 1990-ல் ஐ.நா. சபை இயற்றிய தீர்மானம் எண் 660-ன் அடிப்படையில் அமைதி ஏற்படுத்த முயற்சி எடுக்கப் பட்டது. ஜனவரி 24-ல் குவைத் பன்னாட்டுப் படைகளின் கட்டுப் பாட்டிற்குள் கொண்டுவரப்பட்டது. ஜனவரி 26 -ல் குவைத்தை விட்டு வாபஸ் பெறுவதாக ஈராக் அறிவித்தது. ஆனால் ஈராக் ஆயுதங்களைப் போட்டுவிட்டு பாதுகாப்பு சபை இயற்றிய மொத்தம் 12 தீர்மானங்களை - ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று புஷ் கேட்டுக் கொண்டார்.

1991 பிப்ரவரி 26-ல் குவைத் விடுவிக்கப்பட்டதாக ஜார்ஜ்புஷ் அறிவித்தார். பிப் 28-ல் நிபந்தனையின்றி நிறுத்தத்திற்கிச் சம்மதிப்பதாக ஈராக் அறிவித்தது. மார்ச் 3-ம் தேதி தோற்கடிக்கப்பட்ட ஈராக் பாதுகாப்புசபை விதித்த எல்லா நிபந்தனைகளையும் ஏற்றுக் கொண்டது. 1991 ஏப்ரல் 6-ல் ஐ.நா. சபை விதித்த கீழ்கண்ட எல்லாத் தீர்மானங்களையும் ஏற்று கையெழுத்திட்டது ஈராக்

- 1963 - ம் வருடப்படி குவைத்-ஈராக் எல்லைக்கோடு அமைய வேண்டும்

- ஈராக் தன்வசமுள்ள பேரழிவை ஏற்படுத்தும் - ரசாயன, நச்சு அணு ஆயுதங்களை முற்றிலுமாக அழித்து விடவேண்டும்.
- தனது எண்ணை வருமானத்திலிருந்து ஒரு பகுதியை போர் நஷ்ட ஈடாக கொடுக்க வேண்டும்.
- குவைத்கின் எல்லைக்குள் மூள்று மைல் தூரமும், ஈராக்கின் எல்லைக்குள் ஆறு மைல் தூரமும் ராணுவமில்லாத பகுதியாக அறிவிக்கப் படவேண்டும்.
- ஐ.நா. படை வரும் வரை பன்னாட்டுப் படைகளே இப்பகுதி களில் அமைதிப்பணியில் ஈடுபடும். இவ்வாறு சுமார் ஆறு வாரங்கள் நடைபெற்ற வளைகுடாப் போர் முவைடைந்தது.

**போரின் விளைவுகள்**

- வளைகுடாப் போரின் விளைவாக குவைத் ஈராக்கின் ஆக்கிர மிப்பிலிருந்து விடுவிக்கப்பட்டது. அதன் ஆட்சியாளர் அகமத் அல்சபா . விடம் மீண்டும் ஆட்சி ஒப்படைக்கப்பட்டது.
- குவைத்தின் செல்வம் ஈராக்கினால் சூரையாடப்பட்டது. வங்கி களிலிருந்த தங்கக்கட்டிகள் ஈராக்கிற்கு கொண்டு செல்லப்பட்டன. ஈராக்கிய படைகள் பின்வாங்கும் போது சுமார் 650 குவைத் எண்ணைக் கிணறுகளுக்கு தீ வைத்து விட்டனர். இதனால் குவைத்திற்கு பெருநஷ்டம் ஏற்பட்டது.
- ஈராக்கிற்கும் பேரழிவு ஏற்பட்டது. போரினால் ஈராக்கின் பொருளாதரா நிலை பாதிக்கப்பட்டது. தொழிற்சாலைகள் - மின் நிலையங்கள், அணைக்கட்டுகள், பல நகரங்கள் ஆகியவை அழிக்கப் பட்டன. சுமார் ஒரு லட்சம் ஈராக்கியப் போர் வீரர்கள் கொல்லப்பட்டனர். ஈராக்கின் மீது சுமார் 90,000 டன் வெடி பொருட்கள் உபயோகிக்கப்பட்டது.
- மேலும் ஈராக்கின் மீது விதிக்கப்பட்ட பொருளாதாரத் தடை யாலும், போர் இழப்பீட்டுத் தொகையாலும் அதன் பொருளாதார நிலை தகர்க்கப்பட்டது.
- எல்லாவற்றிற்கும் மேலாக வளைகுடாப்பகுதியில் தனது ஆதிக்கத்தை ஏற்படுத்த நினைத்த சதாம்உசேனின் கனவு தகர்ந்தது. அவர் ஆடிய சூதாட்டம் தோல்வியில் முவைடைந்தது. சதாம்உசேனின் வீழ்ச்சி ஈரான் மற்றும் ஈராக்கின் அராயிய எதிகரிகளுக்கு பலன் அளித்தது. இஸ்ரேல் இப்போரின் விளைவாக அதிக நன்மை அடைந்தது.
- வளைகுடாப் போரின் விளைவாக இப்பகுதியில் மேற்கத்திய நாடுகளின் செல்வாக்கும், நடவடிக்கைகளும் அதிகரித்தது. தனது நாட்டின் பாதுகாப்பிற்காக யாரையும் நம்பால் அமெரிக்காவுடன் பத்து ஆண்டு கால பாதுகாப்பு ஒப்பந்தம் ஒன்று செய்து கொண்டது குவைத்.
- குர்து இனமக்கள் அதிகமாக வாழும் ஈராக்கின் வட பகுதியும், ஷியா இனமக்கள் வாழும் தென்பகுதியும் ஈராக்கின் விமானங்கள் பறக்கக் கூடாத (no flyzone) பகுதிகளாக அறிவிக்கப்பட்டது.

**போரைப் பற்றிய மதிப்பீடு**

வளைகுடாப் போர் ஆரம்பிப்பதற்கு முன்பாக அது உலக மக்களிடையே ஒரு வித பயத்தையும் பீதியையும் ஏற்படுத்தியது என்பதில் சந்தேகமில்லை. “பாலைவனத்தில் அமெரிக்கர்கள் தங்கள் ரதத்திலேயே நீத்த நேரிடும்“ என்று கொக்கரித்தார் சதாம்உசேன். “அமெரிக்க வீரர்களுக்கு ஆயிரக்கணக்கில் சவப் பெட்டிகள் தயாராகி வருகின்றன“ என்று பீதியை ஏற்படுத்தினார். ஆனால் போர் ஆரம்பித்த போது தான்

குறிப்பு

இப்போர் ஒரு "சமநிலை இல்லாத போர்" என்று தெரிந்தது. ஆறு வாரங்கள் போர் நடைபெற்றாலும் தரைப்போர் 100 மணி நேரமே நடந்தது. இதில் 389 அமெரிக்கர்கள் இறந்தனர். பிற நாட்டுப் படையினர் 77 பேர் இறந்தனர். 830 பேர் காயம் அடைந்தனர். ஆனால் ஈராக் ஒரு லட்சம் வீரர்களை இழந்தது. மூன்று லட்சம் பேர் காயம் அடைந்தனர்.

போரில் சதாம்உசேனின் திட்டங்கள் அனைத்தும் தோல்வி அடைந்தன. வளைகுடாப் பகுதியில் உள்ள எண்ணை வளத்தை தன் கட்டுப்பாட்டில் கொண்டு வந்து உலக பொருளாதாரத்தை ஆட்டிப்படைக்க நினைத்தார் சதாம்உசேன். ஆனால் இதே எண்ணை வளத்தைக் கருத்தில் கொண்டே மேற்கத்திய நாடுகள் போரில் இறங்கின. மேலும் சதாம் எதிர் பார்த்தபடி அராபிய நாடுகளின் ஆதரவு அவருக்குக் கிடைக்கவில்லை குவைத்துடன் கிழக்காசியப் பிரச்சினை, பாலஸ்தீனப் பிரச்சனைகளை இணைக்க அவர் எடுத்த முயற்சிகளும் ஈடேறவில்லை அத்துடன் இஸ்ரேலை போருக்கிழுக்க சதாம் செய்த தந்திரமும் பலிக்கவில்லை.

போரின் இறுதியில் ஈராக்குடன் செய்து கொள்ளப்பட்ட உடன்படிக் கைப்படி ஈராக் பொருளதார ரீதியாக, ராணுவ ரீதியாக, அரசியல் ரீதியாக முடமாக்கப்பட்டது. ஈராக்கின் வடபகுதியிலும் தென்பகுதியிலும், பன்னாட்டு கண்காணிப்பு ஏற்படுத்தப்பட்டது. ஐ.நா. சபையின் பொருளா தராக் கட்டுப்பாடு தொடர்ந்து நிலைநாட்டப் பட்டது. ஈராக் எண்ணை விற்க முடியாமல் அதன் வாணிகம் கட்டுப்படுத்தப்பட்டது. பேரழிவை ஏற்படுத்தும் உயிரியல், ரசாயன ஆயுதங்கள், ஏவுகணைகளை அழிக்கவும் அவ்வித ஆயுதங்களின் உற்பத்தி செய்யும் இடங்களைக் கண்டுபிடித்து அழிக்கவும் ரிச்சர்ட் பட்லர் என்பவரின் தலைமையில் ஐ.நா. சிறப்பு குழு (UNSCOM) ஒன்று அமைக்கப்பட்டது. வட ஈராக்கிலிருந்து துருக்கிக்கு ஓடிச் சென்ற குர்து இன மக்களுக்குப் பாதுகாப்பு மற்றும் உதவி அளிப்பதற்காக 'Operation Haven' என்ற பெயருடைய உதவித்திட்டம் செயல்படுத்தப் பட்டது.

இந்த வளைகுடாப் போரானது இந்தியப் பொருளாதாரத்தில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. ஈராக்கிலும் குவைத்திலும் பணி புரிந்து வந்த சுமார் 1,75,000 தொழிலாளர்களை இந்தியாவுக்கு அழைத்து வருவதற்குப் பெரும்பணம் செலவாகியது. சுமார் 965 கோடி ரூபாய் இழப்பு ஏற்பட்டது. இது இந்தியப் பொருளாதாரத்தில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியது.

இறுதியாக, வளைகுடாப் போர் ராணுவ உயர் தொழில் நுட்பத் திறனுடன் நடைபெற்ற போராகும். இப்போரில் தரைப் போர் முக்கியத்துவம் பெறவில்லை. வானவெளிக்கட்டுப்பாடே முக்கிய இடம் வகித்தது. மேலும் உயர் தொழில்நுட்பத் திறன் கொண்ட புதிய ஆயுதங்கள் பல உபயோகிக்கப் பட்டன. லேசர் மற்றும் T.V camera கொண்ட குண்டுகள், இரவில் 11 கி.மீ. தூரம் வரை பார்க்கக்கூடிய Night visions divides, cruise missiles; cluster Bombs. Carpet Bombs, ஏவுகணைகளை வானிலேயே அழிக்கக்கூடிய Patriot missiles. எதிரிகளின் ராடர்களுக்குத் தென்படாத Stealth bomber planes ஆகியவை உபயோகிக்கப்பட்டன, தற்போது எந்தப் போர் நடைபெற்றாலும் வானவெளியை யார் கட்டுப்பாட்டிற்குள் வைக்கிறார்களோ அவர்களே போரில் ஜெயிக்க முடியும் என்ற நிலை ஏற்பட்டுள்ளது.

இவ்வாறு இருபதாம் நூற்றாண்டின் இறுதியில் நடைபெற்ற வளை குடாப் போர் வலிமையற்ற நாடுகளை வலிமை பெற்ற நாடுகள் ஆக்கிர மித்துக் கொள்ள முடியாது என்பதையும், ஐ.நா. சபையானது ஆக்கிரமிப்பு செய்யும் நாடுகளை படை வலிமையைக் கொண்டு தண்டிக்க முடியும் என்பதையும் உணர்த்தியுள்ளது. இதனால் பன்னாட்டுறவில் குறிப்பிடத் தக்க பல மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன.

குறிப்பு

## 14.4 இஸ்லாமிய நாடுகளில் அமைப்பு

இரண்டாம் உலக யுத்தத்தின் பிறகு, பல புதிய நாடுகள் உதயமாகின. அவ்வாறு உருவான ஒரு நாடே இசுரேல் ஆகும். இது பிரித்தானியப் பேரரசின் ஒரு பகுதியான பாலஸ்தீனத்தில் அமைக்கப்பட்டது. யூதர்களுக்காக அமைக்கப்பட்ட இந்த நாட்டினால், பூர்வீக பாலஸ்தீனியர்களின் நாடாளும் உரிமை பறிபோனது. இதன் காரணமாக பாலசுத்தீனிய விடுதலை இயக்கங்கள் தோன்றின. யாசர் அராபத் போன்றவர்கள் தலைமையில் தோன்றிய இந்த இயக்கங்கள் பின்னாளில் நடைபெற்ற இஸ்ரேலிய ராணுவ தாக்குதல், மற்றும் அல்-அக்சா மசூதி நெருப்பிடப்பட்டது காரணமாக தீவிரவாத இயக்கங்களாக மாறின. மேலும் ஈராக் - குவைத் போரின் காரணமாக சவூதி அரேபியா நாட்டில் முகாமிட்ட அமெரிக்க ராணுவ படைகள், அங்கேயே நிரந்தரமாக தங்கியதன் காரணமாகவும், இசுரேல் நாட்டை அமெரிக்கா ஆதரித்து வருவதன் காரணமாகவும் இசுலாமியர்களில் பெரும்பாலோர் அமெரிக்கா மற்றும் மேலை நாடுகளை வெறுக்கத் தொடங்கினர். இதன் காரணமாகவும் அல்-கொய்தா போன்ற தீவிரவாத இயக்கங்கள் தோன்றின. இந்த இயக்கங்களின் காரணமாக இசுலாம் ஒரு தீவிரவாத மதம் போன்ற தோற்றம் பெற்றது. இருப்பினும் ஆசிய-ஆப்பிரிக்க நாட்டு இசுலாமியர்களின் வியாபார பெயர்வு காரணமாக, புதிய பகுதிகளிலும் இசுலாம் பரவுகின்றது. இதைத் தவிர பொருளாதார மற்றும் கல்வியின் பொருட்டு புலம்பெயரும் இசுலாமியர்களின் காரணமாக மற்ற மேற்கத்திய நாடுகளிலும் இசுலாம் மதம் பரவுகின்றது.

**இசுலாமிய பரவல்**

உலகில் ஏறக்குறைய 180 கோடி மக்கள் இசுலாமிய மதத்தை பின்பற்றுகின்றனர். மொத்த உலக நாடுகளில் 30 - 40 நாடுகளில் இசுலாமியர்கள் பெரும்பான்மையாக வசிக்கின்றனர். மொத்த மக்கள் தொகையில் 20 மூ முசுலிம்கள் அரபு நாடுகளில் வசிக்கின்றனர். கண்டங்கள் வரிசையில் ஆசிய கண்டத்தில் அதிக இசுலாமியர்கள் வசிக்கின்றனர். மேலும் இதுவே உலகின் இரண்டாவது பெரிய மதமாக இருக்கின்றது.

மனித அறிவு விரிவடையும் பொறுட்டு எப்போழுதும் சிறந்த அகப்பார்வையை அளிக்கிறது. ஆனால் அது எதுவரை என்றால் சமகாலத்தைய முஸ்லிம்களுக்கு புனித குர்'ஆன் விசயங்களில் முக்கியதுவம் அற்று நடந்து கொள்ளுவதில் அச்ச உணர்வு இருக்கும் வரை.குற்'ஆனின் பொருளில் ஆழமான அகப்பார்வை அடைவதில் இருந்து மிகதூரமாகி குர்'ஆனிற்கு இத்தகு மதிப்பு தேவை என்பது போன்று குற்'ஆனில் இறக்கப்பட்டவைகளைநவீன விஞ்ஞான கண்டுபிடிப்புகள் உறுதிபடுத்துகிறது என்பதை "நிரூபணம்" செய்வதற்காக முஸ்லிம்கள் தங்களின் ஆற்றலை செலவு செய்கிறார்கள். மேலும் சிலர் பைபிளில் உள்ள பிழைகளை கண்டுபிடிப்பதில் தங்களைமும்முரமாக்கி கொள்கிறார்கள்.பைபிளில் உள்ள எத்தனைபிழைகள்ஒருவரை சிறந்த முஸ்லிமாக மாற்றிட செய்கிறது?.இன்னும் மற்றொரு கூட்டம் தீனின் மற்ற எல்லா கட்டளைகளையும் ஒருபக்கமாக ஒதுக்கி வைத்துவிட்டு 'தப்லீக்'கிற்கு சகல முஸ்லிம்களை தூண்டுகின்றனர்.இதன் முக்கியாத்துவத்தை மேலும் குறைத்து கருதிக் கொள்ளும் படியாக,தொளுகையின் போது அவர்களின் கைகளை எங்கே வைக்க வேண்டும் மேலும் 'ஆமீன்' கூறுவதை மெதுவாக கூற வேண்டுமா அல்லது உறக்க கூற வேண்டுமா போன்ற கொடூர வாதங்களின் மூலம் முஸ்லிம்கள் சிக்கி உள்ளனர்.முஸ்லிம்கள் இவற்றை கொண்ட அச்சமிகுந்த தர்க்கங்களின் ஊடாக இதன் முக்கியதுவத்தை மேலும் குறைவாக அளிக்க வைக்க செய்கிறார்கள்.

குறிப்பு

இங்கு எதில் உண்மையில் குற்றம் இருக்கிறது என்பதை புரிந்து கொள்வதும் முக்கியத்துவம் வாய்ந்தது ஆகும்.இங்கு குறைந்த பட்சம் 56 முஸ்லிம் தேசமாகானங்கள் உள்ளன.முஸ்லிம் உலகம் ஏழ்மையானதும் அன்று, ஆனால் அதன் ஆட்சியாளர்களில் மிக சிலரை தவிர மற்றவர்கள் கோழைகளாகவும் மேற்கத்திய கைகூலிகளாகவும் முஸ்லிம் உம்மத்திற்கு எதிராக வெளிப்படையாக போர் பிரகடணம் செய்பவர்களாகவும் உள்ளார்கள். மிகுதியானவர்கள் ஒழுக்கத்தில் ஓட்டாண்டியாகவும், அது அவர்களை ஆளுகைக்கு பொருத்தமற்றவராக ஆக்குகிறது் இருப்பினும் முஸ்லிம்கள் இத்தகு நிலையில் அவர்களின் கடமையில் மிகவும் கவனக்குறைவுடன் இருக்கின்றனர். இதை பற்றி பேசுவதற்கு தைரியமாக உள்ள சிலரும் பிறரால் ∴பித்னாவை கிழப்பபடுவதாக குற்றம் சாட்டபட்டு கண்டிக்கப்படுகிறார்கள்.ஒரு சில அப்பாவி முஸ்லிம்கள் உயிரோட்டமாக இந்த விவாதத்தில் ஈடுபடலாம், ஆனால் இத்தகு சிந்தனைகளை முஸ்லிம்கள் மத்தியில் குழப்பம் விளைவிப்பதற்காக வேண்டும் என்றே ஊக்குவிக்கும் இந்த ஆட்சியாளர்களின் கைகூலி கும்பலும் உள்ளது.இதே காரணத்திற்காக மேற்கத்திய கைகூலிகளால் இதைபோன்றே முஸ்லிம்களின் மத்தியில்சின்ன சின்ன ∴பிக்ஹ் பிரிவினைகளை தூண்டிவிடுகின்றனர்.

இஸ்லாமிய கொள்கைபடி ஒரு மனிதர் எந்த அளவிற்கு உயர்ந்த அதிகாரத்தில் உள்ளாரோ அந்த அளவிற்கு ஆழமாக இஸ்லாமிய கொள்கைப்படி வாழவேண்டியது அவரின் கடமையாகும்.பொய் கூறுவதை சாதாரன மனிதன் செய்தாலேஅது கெட்டது, அனால் அதிகாரிகள் இந்த குற்றத்தை செய்தால் அது மிகப்பெரிய குற்றம் ஆகும்.பிற குற்றங்களிலும் இதே நிலையையே மைப்படுத்துகிறது. இருப்பினும் முஸ்லிம் உலகில், பணக்காரர்களும் அதிகாரம் படைத்தவர்களும் சுதந்த்திரமாக நடக்கையில்பலகீனர்களுக்கும் ஏழைகளுக்கும் எதிராக குரூரமாக சட்டங்கள் நிறைவேற்றுகிறார்கள்.

முஸ்லிம் இந்தியாவில், மௌலானா மௌதூதியை போல் பேரார்வத்தோடு பாகிஸ்தான் இயக்கத்தை ஆதரித்தவர்கள் எவரும் இல்லை. இந்திய முஸ்லிம்கள் ஒரு தனிச் சமூகம் என்றும், அவர்கள் ஹிந்து ஆதிக்கத்தையும் ஒடுக்குமுறையையும் தடுக்க வேண்டுமெனில் தங்களைத் தாங்களே நிர்வகித்துக் கொள்ள வேண்டும் என்றும் தன் எழுத்திலும் பேச்சிலும் அவர் வலியுறுத்தினார். தீவிர விடுதலைப் போராட்ட வீரர்களான மௌலானா முஹம்மது அலி ஜவ்ஹர், மௌலானா ஷவ்கத் அலி மற்றும் காயிதே ஆஸம் முஹம்மது அலி ஜின்னா கூட ஏதோ ஒரு சமயத்திலாவது இந்திய தேசியக் காங்கிரசின் உறுப்பினர்களாக இருந்த நிலையில் மௌலானா மௌதூதி அதில் ஒரு முறை கூட இணையவேயில்லை. ஜமாத்தே இஸ்லாமியில் இணையும்படி காயிதே ஆஸமிடம் கூறப்பட்டபோது, ஜமாத்திற்கும் முஸ்லிம் லீக்கிற்கும் இடையில் முரண்பாடும் எதுவும் இல்லை என்பதை அவர் இவ்வாறு விளக்கினார்: ஒன்று உயர்ந்த நிறைநலனுக்காகப் பணியாற்றுகிறது, மற்றொன்று இந்திய முஸ்லிம்களின் உடனடித் தேவையான தனி நாடு கொள்கையை மெய்ப்பிக்கப் பணியாற்றுகிறது. இது நடக்காவிட்டால் ஜமாத்தின் குறிக்கோள் நடைமுறையில் முழுமையடைவது சாத்தியமின்றிப் போய்விடும்.

தி திங்கர் வார இதழ், கராச்சி, டிசம்பர் 27, 1963 இல் வெளியான கமருத்தின் கானின் கூற்றிலிருந்து மேற்கோள்.

1947 ஆகஸ்டு 14 இன் பிரிவினைக்குப் பின் மௌலானா மௌதூதி, தன் ஆற்றல் முழுவதையும் பாகிஸ்தானில் ஒரு நீர்த்தப்படாத இஸ்லாமிய வாழ்க்கை முறையை நிறுவுவதற்காக அர்ப்பணித்தார். 1948 ஜனவரி-மார்ச் மாதங்களில், ஆன்மீக, ஒழுக்க, சமூக, அரசியல் மற்றும் பொருளாதார விவகாரங்களில் இஸ்லாத்தின் முனைப்பான பண்புகளை விளக்கி வானொலியில் ஒரு தொடர் உரை ஆற்றினார். (6) அவரைப் பொறுத்தவரை இஸ்லாம் ஒரு வெற்று முழக்கம் அல்ல. சொல்லின் உறுதியை செயலால் நிரூபித்த மிகச் சில தலைவர்களுள் மௌலானா

*Self-Instructional Material*

மௌதூதியும் ஒருவர். சோர்வின்றி நாடு முழுவதும் சுற்றுப் பயணம் மேற்கொண்டு பிரச்சாரம் செய்து முழுமையானதொரு இஸ்லாமிய அரசிற்காக ஆதரவு திரட்டினார். இத்தகைய நேர்மையான நோக்கத்தை சகித்துக் கொள்ளாத சில சுயநலச் சக்திகள், அவர் உண்மை இஸ்லாமிய அரசியல் சாசனத்தைக் கோரியபோது, தேசத் துரோக குற்றம்சாட்டி அவரை 1948 அக்டோபர் 4 முதல் 1950 மே 28 வரை சிறையிலடைத்தனர். எனினும், அவரது கோரிக்கைகளுக்கு உருக்கொடுப்பதாக அமைந்த 'குறிக்கோள்கள் தீர்மானத்தை', தேசிய அரசியல் சாசனப் பேரவை 1949 மார்ச் 7 இல் நிறைவேற்றிய போது, இஸ்லாமிய அரசியல் சாசனத்திற்கான அடிப்படையை அமைக்கும் அவரது முயற்சி பலன் தரத் தொடங்கியது.

இஸ்லாமிய வாழ்க்கை முறை, செய்யது அபுல் அ.்லா மௌதூதி, இஸ்லாமிக் பப்ளிகேஷன்ஸ், லாஹூர், டிசம்பர் 1965

குறிக்கோள்கள் தீர்மானத்தின்' உரை மூலம் பின் வருமாறு:

- முழு அகிலத்தின் மீதான இறையாண்மை ஏக இறைவனுக்கு மட்டுமே உரியதாகும். பாகிஸ்தான் தேச மக்கள் வழியாக அவன் வகுத்தளித்துள்ள -அவன் விதித்துள்ள வரம்புகளுக்கு உட்பட்டு செயல்படுத்தப்பட வேண்டிய- அதிகாரம் ஒரு புனித அமானிதம் ஆகும்
- பாகிஸ்தான் மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் இந்த அரசியல் சாசனப் பேரவை, இறைமையுடைய, சுதந்திர பாகிஸ்தான் தேசத்திற்காக ஒரு அரசியல் சாசனத்தை வரைய தீர்மானிக்கிறது
- இது வகையில், அரசு தன் ஆற்றல் மற்றும் அதிகாரத்தை தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகள் வழியாக செயல்படுத்தும்
- இது வகையில் இஸ்லாம் தெளிவுபடுத்தியுள்ளபடி ஜனநாயக, சுதந்திர, சமத்துவ, சகிப்புத்தன்மை மற்றும் சமூக நீதிக் கோட்பாடுகள் முழுமையாக பேணப்படும்
- இது வகையில் குர்ஆன் மற்றும் சுன்னாவில் விதிக்கப்பட்டுள்ள இஸ்லாமிய போதனைகள் மற்றும் கோரிக்கைகளின் அடிப்படையில் முஸ்லிம்கள் தங்கள் தனி மற்றும் கூட்டு வாழ்வை ஒழுங்கமைப்பதற்கான வழிவகை செய்யப்படும்
- இது வகையில் சிறுபான்மையினர் தங்கள் மதத்தை சுதந்திரமாக வெளிப்படுத்தி நடைமுறைப்படுத்தவும், கலாச்சாரத்தை மேம்படுத்தவும் தேவையான ஏற்பாடுகள் செய்யப்படும்
- இது காரணமாக இப்போது பாகிஸ்தானின் அங்கமாகத்திகழும் அல்லது அதன் உரிமையின் கீழ் வரும் பகுதிகளும், வருங்காலத்தில் அதன் அங்கமாக திகழவிருக்கும் அல்லது அதன் உரிமையின் கீழ் வர இருக்கும் பகுதிகளும் ஒரு கூட்டாட்சியாக விளங்கும். அவ்வாறிருக்க, அதன் அங்கம் ஒவ்வொன்றும் தன் ஆற்றல் மற்றும் அதிகாரத்தில், பரிந்துரைக்கப்பட்ட அளவு வரம்புகள் மற்றும் எல்லைகளோடு கூடிய தன்னாட்சி உரிமையுடன் விளங்கும்
- சட்டத்தின் முன் சம வாய்ப்பு மற்றும் அந்தஸ்து சமூக, பொருளாதார மற்றும் அரசியல் நீதி சட்டத்திற்கும் சமூக நல்லொழுக்கத்திற்கும் கட்டுப்பட்ட சிந்தனை, வெளிப்பாடு, நம்பிக்கை, வழிபாடு மற்றும் சங்கமிக்கும் சுதந்திரம் ஆகியவை உட்பட்ட அடிப்படை உரிமைகள் உறுதிப்படுத்தப்படும்
- சிறுபான்மையினர், பின்தங்கியோர் மற்றும் தாழ்த்தப்பட்டவர்களின் முறைமையான நலன்களைப் பாதுகாக்க தேவையான வழிவகைகள் செய்யப்படும்
- நீதித்துறையின் சுதந்திரம் முழுமையாக பாதுகாக்கப்படும்

குறிப்பு

➢ கூட்டாட்சியிலுள்ள பிரதேசங்களின் பேராண்மை, அவற்றின் சுதந்திரம் மற்றும் பிற உரிமைகள் நீர், நிலம் மற்றும் வான்வெளி மீதான இறையாண்மைக்கான உரிமைகள் உட்பட பிற உரிமைகளும்- பாதுகாக்கப்படும்

இதன் மூலம் பாகிஸ்தானிய மக்கள் செழித்தோங்கி, பிற நாடுகள் மத்தியில் தங்கள் உரிமையையும் கண்ணியத்தையும் பெற்று, சர்வதேச அமைதிக்காகவும் முன்னேற்றத்திற்காகவும் மனித இனத்தின் மகிழ்ச்சிக்காகவும் தங்களின் முழுமையான பங்களிப்பை செலுத்த முடியும் பாகிஸ்தானில் மதமும் அரசியலும், லியோனார்ட் பைண்டர், கலி∴போர்னியா பல்கலைக்கழக அச்சு, பெர்க்ளி, 1961, பக், 142-143

பல நூற்றாண்டுகளில் முதன் முறையாக பாகிஸ்தானிலுள்ள எல்லா முக்கிய சிந்தனைப் பள்ளிகளையும் சார்ந்த முப்பத்தியொரு உலமாக்கள் –தேவ்பந்தி, பரேலவி, அஹ்லே-ஹதீஸ் மற்றும் ஷியா உட்பட- மௌலானா மௌதூதியின் வற்புறுத்திலின் பேரில், கராச்சியில் 1951 ஜனவரி 21 முதல் 24 வரை மாநாடு ஒன்றை நிகழ்த்தினர். அப்போது, அரசியல் சாசனத்தில் சேர்க்கப்பட வேண்டிய, நவீன இஸ்லாமிய அரசிற்கு இன்றியமையாத இருபத்தியிரண்டு கோட்பாடுகளை பூரண சம்மதத்துடன் உருவாக்கினர். இவ்வுலமாக்களின் ஒருமித்த முடிவு பின்வரும் கோரிக்கைகளை வலியுறுத்தியது:

இஸ்லாமிய தேசத்தின் அரசியல் சாசனம் கீழ்கண்ட அடிப்படைக் கொள்கைகளை வெளிப்படுத்த வேண்டும்:

- இயற்கை முழுவதின் மீதும், சட்டங்கள் அனைத்தின் மீதுமான இறையாண்மை அல்லாஹ் ரப்புல் ஆலமீனிற்கே உரியது
- நாட்டின் சட்டதிட்டம் குர்ஆன் மற்றும் சுன்னாவின் அடிப்படையில் அமைக்கப்பட வேண்டும். அவற்றோடு முரண்படும் எந்தவொரு சட்டமோ நிர்வாக ஆணையோ பிறப்பிக்கப்படக் கூடாது
- விளக்கக் குறிப்பு:- குர்ஆன் சுன்னாவோடு முரண்படும் சட்டம் ஏதும் தற்போது நடைமுறையில் இருப்பின், அது படிப்படியாக குறிப்பிட்ட காலத்தில் இஸ்லாமிய சட்டத்தோடு இணங்கும் வகையில் திருத்தப்படும் அல்லது நீக்கப்படும் என்று அரசியல் சாசனத்தில் குறிப்பிடப்பட வேண்டும்
- புவியியல், மொழியியல் அல்லது பிற பொருள்முதல்வாத கோட்பாடுகளின் அடிப்படையிலன்றி இஸ்லாமியக் கோட்பாடுகளின் அடிப்படையிலேயே இந்நாடு அமைக்கப்பட வேண்டும்
- குர்ஆன் மற்றும் சுன்னாவில் கூறப்பட்டுள்ளபடி நன்மையை ஏவி தீமையைத் தடுப்பது, இஸ்லாத்தின் அடிப்படைக் கொள்கைகளுக்கு புத்துயிரூட்டி உயர்நிலையடைவதற்கான முயற்சிகளை எடுப்பது, இஸ்லாத்தின் பல்வேறு அங்கீகரிக்கப்பட்ட சிந்தனைப் பள்ளிகளின் தேவைகளுக்கேற்ப இஸ்லாமிய கல்விக்கான வழிவகைகளை செய்வது ஆகியவை அரசின் பொறுப்பாகத் திகழும்.
- உலக முஸ்லிம்கள் மத்தியில் ஒற்றுமைக் கயிற்றை வலுப்படுத்தி சகோதரத்துவத்தை பலப்படுத்துவதும், மில்லத்-ஏ-இஸ்லாமியாவை பாதுகாத்து அதன் ஒற்றுமையை உறுதிப்படுத்தும் பொருட்டு இன மொழி பிராந்திய அல்லது பிற பொருள்முதல்வாத பண்புகளை இந்நாட்டின் முஸ்லிம் குடிமக்களிடமிருந்து மட்டுப்படுத்துவதும் அரசின் கடமையாகும்.
- தற்காலிக அல்லது நிரந்தர வேலையின்மை, உடல் பலவீனம் போன்ற காரணங்களால் தங்கள் வாழ்க்கைத் தேவைகளை ஈட்டும் சக்தி பெறாதவர்களுக்கு –அவர்கள் எந்த மதம், இனத்தைச் சேர்ந்தவர்களாயினும்- அடிப்படைத் தேவைகளான உணவு, உடை,

வீடு, மருத்துவ உதவி மற்றும் கல்வி ஆகியவற்றிற்கான உத்தரவாதம் வழங்குவதும் அரசின் பொறுப்பாக இருக்க வேண்டும்

- இஸ்லாமிய சட்டம் வழங்கியுள்ள உரிமைகள் அனைத்தையும் பெறுவதற்கு குடிமக்கள் உரிமையளிக்கப்பட்டவர்களாக இருக்க வேண்டும் அதாவது சட்ட வரம்புகளுக்கு உட்பட்டு அவர்களது உயிர் உடமை மற்றும் கண்ணியத்திற்கு முழுப் பாதுகாப்பு, சமயம் மற்றும் கொள்கைகளில் சுதந்திரம், தொழில் செய்வதில் சுதந்திரம், இணங்கிச் செயல்படுவதற்கான சுதந்திரம், சமவாய்ப்பு மற்றும் பொதுத்துறைகளிலிருந்து பயன்பெறும் உரிமை ஆகியவற்றை பெறுவதற்கு மக்கள் உரிமையளிக்கப்பட்டவர்களாக இருக்கவேண்டும்
- சட்டப்படியே அல்லாமல் எந்தக் குடிமகனுக்கும் எந்நிலையிலும் இவ்வுரிமைகள் மறுக்கப்படக்கூடாது. தன்னைத் தற்காத்துக் கொள்ளும் உரிமையளிக்கப்படாத நிலையிலும், நீதிமன்றத்தின் தீர்மானமின்றியும் எவரும் எந்தவொரு குற்றச்சாட்டின் அடிப்படையிலும் தண்டனை விதிக்கப்படக் கூடாது.
- அங்கீகரிக்கப்பட்ட முஸ்லிம் சிந்தனைப் பள்ளிகளுக்கு சட்ட வரம்புகளுக்கு உட்பட்ட முழு சமயச் சுதந்திரமும், தங்கள் கொள்கைகளை பரப்பும் சுதந்திரமும், தங்கள் பின்பற்றாளர்களுக்கு மதக்கட்டளை பிறப்பிக்கும் உரிமையும் கொடுக்கப்பட வேண்டும். அவர்களின் தனிப்பட்ட விவகாரங்கள் அவரவர் ∴பிக்ஹின் அடிப்படையில் நிர்வகிக்கப்பட வேண்டும். அவற்றை அவர்களது காஸிகள்ழு மூலம் நிர்வகிக்க வழிவகை செய்வது உகந்தது. காஸி அல்லது காதி என்பவர், முஸ்லிம் நீதிமன்றத்தின் நீதிபதி ஆவார்
- தேசத்தின் முஸ்லிமல்லாத குடிமக்கள் மதம், சமய வழிபாடு, வாழ்க்கை முறை, கலாச்சாரம் மற்றும் சமயக் கல்வி ஆகியவற்றில் சட்டத்திற்குற்பட்ட முழுச் சுதந்திரத்தை பெற்றிருக்க வேண்டும். அவர்கள் தங்கள் தனிப்பட்ட விவகாரங்களை அவர்களது சமயச் சட்டங்கள், வழக்காறுகள் மற்றும் வழக்குகளைக் கொண்டு நிர்வகிக்கும் உரிமையளிக்கப்பட வேண்டும்.
- முஸ்லிமல்லாத குடிமக்களுக்கு ஷரியத்திற்கு உட்பட்டு தேசத்தால் அளிக்கப்பட்ட வாக்குறுதிகள் அனைத்தும் நிறைவேற்றப்பட வேண்டும். பத்தி 7 இல் விளக்கப்பட்டுள்ளபடி அவர்களும் முஸ்லிம் குடிமக்களோடு சேர்ந்து சம குடியுரிமை பெற வேண்டும்.
- தேசத் தலைவர், தனது பக்தி ஆற்றல் மற்றும் நீதத்தன்மைகளில் மக்களின் நம்பிக்கையைப் பெற்ற ஒரு முஸ்லிம் ஆணாகவே இருக்க வேண்டும்.
- தேசத்தின் நிர்வாகப் பொறுப்பு, தேசத் தலைவர் மீதே முதன்மையாக சுமத்தப்பட வேண்டும். எனினும், அவர் தனது அதிகாரத்தின் எந்தவொரு பகுதியையும் வேறொரு நபருக்கோ குழுவுக்கோ பகிர்ந்தளிக்கக் கூடும்.

1952-1953 இல் பஞ்சாபைச் சேர்ந்த பெரும்பான்மையான பாகிஸ்தானியர்கள், காதியானி பிரிவை அரசியலமைப்பில் தனியொரு சிறுபான்மைக் குழுவாக அறிவிக்கக் கோரினர். இக் கோரிக்கையை சீர்குலைப்பதற்காக இராணுவச் சட்டம் விதிக்கப்பட்டது. அப்போது மௌலானா மௌதூதி அக்கோரிக்கைகளை ஆதரித்து, அரசாங்க கொள்கையைக் கண்டித்து ‘காதியானிப் பிரச்சனை’ என்ற தலைப்பில் பிரசுரம் ஒன்றை எழுதினார்.

குறிப்பு

பல்வேறு பிரிவுகள் தங்களுக்கு மத்தியில் சாட்டும் முரண் சமயக்கருத்துக் குற்றச்சாட்டுகளிலிருந்து காதியானிப் பிரச்சனை முற்றிலும் மாறுபட்டது. காதியானிகள், மிர்ஸா குலாம் அஹ்மதை (1839-1908) புதியதொரு நபியாக ஏற்று அவரை நிராகரிப்பவர்களை கா∴பிர்கள் எனக் கண்டிக்கின்றனர். தங்களை முஸ்லிம்களாக பாவித்து, முஸ்லிம் சமூகத்தினுள் ஊடுருவி, மதமாற்றப் பிரச்சாரத்தை தீவிரமாக மேற்கொள்கின்றனர். மேலும் முஸ்லிம் சமூகத்தின் இழப்பில் தங்கள் எண்ணிக்கையை பெருக்கிக் கொள்ள தொடர்ந்து பாடுபடுகின்றனர். தற்போது, காதியானிகளை தனிமைப்படுத்தும் கோரிக்கை, பெரும்பான்மை முஸ்லிம்களிடமிருந்து எழுந்துள்ளது ஏனெனில், இவர்களால் பாதிக்கப்பட்டவர்கள் பெரும்பான்மையினரே. ஒருபுறம் ஈமான் கொண்ட, மைய முஸ்லிம் சமூகத்திலிருந்து தனித்திருப்பது போன்ற தோற்றத்தை ஏற்படுத்தி, அவர்கள் சிறுபான்மையினரின் சலுகைகள் அனைத்தையும் அனுபவிக்கின்றனர். மறுபுறம் முஸ்லிம்கள் என்ற போர்வைக்குள்ளிருந்து பெரும்பான்மையினரோடு இருப்பதனால் கிடைக்கும் நலன்களையும் பறித்துக் கொள்கின்றனர். நுணுக்கமான பிரச்சாரத்தின் மூலம் அறியாமையிலிருக்கும் மக்களை ஏமாற்றி தங்கள் எண்ணிக்கையை பெருக்கிக் கொள்கின்றனர். அதேவேளை, பொதுவாழ்வின் பல்வேறு தளங்களில், அவர்களுக்குரிய பங்கைவிட அதிகமானதை பறித்துக் கொள்கின்றனர். இதனால்தான் அவர்களை தனிமைப்படுத்தும் கோரிக்கை சிறுபான்மையினரடமிருந்து எழாமல் பெரும்பான்மையினரடமிருந்து வந்துள்ளது.

## 14.5 சர்வதேசப் பயங்கரவாதம் (International Terrorism)

பன்னாட்டு உறவில் கடந்த சில வருடங்களாக பயங்கரவாதம் மிகப்பெரிய பிரச்சனையாக உள்ளது. அரசியல் நோக்கத்தை அடைவதற்காக உள்நாட்டிலும், சர்வதேச அளவிலும் பயங்கரவாதம் மனிதன் நாகரிகம் அடைந்த காலம் தொட்டே இருந்து வருகிறது. ஆனால் இருபதாம் நூற்றாண்டில் தான் அது பன்னாட்டு பிரச்சனையாக உருவெடுத்தது. இது பன்னாட்டு சமுதாயத்திற்கும் அமைதிக்கும் ஒரு அச்சுறுத்தலாக உள்ளது. பயங்கரவாதம் ஒரு நாட்டின் எல்லைக்குள் மட்டும் செயல்படாமல் சர்வதேச அளவில் பரந்து விரிந்துள்ளது. எதனாலும் கட்டுப்படுத்த முடியாத அளவுக்கு வளர்ந்துள்ளது. ரஷ்யா, அமெரிக்கா, இஸ்ரேல், இந்தியா, இலங்கை, இங்கிலாந்து போன்ற நாடுகள் பயங்கரவாதத்தால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன.

நவீனகால வரலாற்றில் பயங்கரவாதம் என்பது முதன் முதலில் பிரெஞ்சுப்புரட்சியின்போதுதான் தலைதூக்கியது. புரட்சிக்கு எதிரானவர்கள் பயங்கரவாதச் செயல்கள் மூலம் படுகொலை செய்யப்பட்டனர். அப்போது அமைக்கப்பட்ட ஆட்சிக்கு “பயங்கர ஆட்சி’’ என்றே பெயர் வைக்கப் பட்டது. பயங்கரவாதம் என்பது ஒருவித பயத்தை மனதில் தோற்றுவிப்பது ஆகும். பயங்கர வாதிகளின் நோக்கம் “ஒருவரைக் கொன்று பத்தாயிரம் பேரை நடுங்கவைப்பதே’’ ஆகும். தங்கள் மீதான கவனத்தை ஈர்த்து தங்களது செய்தியை (message) தெரியப்படுத்தவே பயங்கரவாதம் பயன்படுத்தப்படுகிறது.

**பன்னாட்டு பயங்கரவாதத்தின் நோக்கம்**

பன்னாட்டுப் பயங்கரவாதத்தின் நோக்கம் அரசியலமைப்பின் அடிப்படையில் அரசுகளின் அடிப்படையைத் தகர்ப்பதேயாகும் குறிப்பாக நாகரிகம் அடைந்த சமுதாயத்தை அடிப்படை ஒழுக்கம் மற்றும் கட்டுப்பாடு களை மீறச்செய்கிறது. எல்லாவகையான பயங்கரவாதத்தின் நோக்கமும் தங்களது நோக்கத்திற்கு தடையாக இருப்பவர்கள், எதிரிகள் அடக்கு முறையாளர்கள் ஆகியவர்களைப் பயமுறுத்துவதே ஆகும். இதற்காக கடத்தல், கண்முடித்தனமாக சுடுதல், வெடிகுண்டுகளைப் பயன்படுத்து தல் ஆகிய செயல்களில் ஈடுபடுகின்றனர். எனவே ‘‘பயங்கரவாதத்தின் நோக்கம் ஒரு குறிப்பிட்ட குழுக்களிடையே அதிக பயத்தை ஏற்படுத்தி அதன் மூலம்

குறிப்பு

அரசாங்கம் மற்றும் சமுதாயக் கட்டமைப்பில் குறிப்பிட்ட அல்லது பொதுவான மாற்றத்தைக் கொண்டு வருவேதேயாகும்

பயங்கரவாதத்தின் சூழ்ச்சியும் தொழில் நுட்பமும் தற்போது நவீன மயப்படுத்தப்பட்டுள்ளன. அதனுடைய குறு இலக்கும் பரந்த அளவில் உள்ளது. முக்கியத்தலைவர்கள், பிரபலமான மனிதர்கள், தொழிற்சாலை - கள், ஆற்றல் உற்பத்தி மையங்கள் ஆகியவற்றையே பயங்கரவாதிகள் தங்கள் இலக்காக வைத்துள்ளனர். சட்டங்கள் மூலமும், பாதுகாப்பு மூலமும் இப்படிப்பட்ட திடீர் தாக்குதல்களைத் தடுக்க முடியாமல் போய் விடுகிறது. தானியங்கி துப்பாக்கிகள், ரிமோட் மூலம் இயக்கப்படும் வெடிகுண்டுகள் போன்ற தொழில் நுட்ப முன்னேற்றம் பயங்கரவாதத்திற்கு புதிய பரிமாணத் தைக் கொடுத்துள்ளது.

பயங்கரவாதிகளின் நோக்கத்தை நாம் குறைத்து மதிப்பிட முடியாது. இது ஒரு உளவியல் ரீதியான போர் என்பதை ஏற்றுக் கொள்ள வேண்டும். மனிதர்களைக் கொல்வதும், சொத்துக்களை சேதப்படுத்து வதும் தங்களது இலக்குகள் மீது உளவியல் விளைவுகளை ஏற்படுத்துவதும் நோக்கமாகும். அரசாங்கம் மற்றும் தலைவர்களின் உறுதியான நம்பிக்கை யைக் குலைத்தல் சமுதாயத்தை இணைத்துள்ள நம்பிக்கை என்ற நூலை அறுத்தெடுத்தல் ஆகியவற்றை பயங்கரவாதம் நோக்கமாகக் கொண்டுள் ளது. பயம், பாதுகாப்பின்மை , பீதி ஆகியவற்றை ஏற்படுத்துவதும் பயங்கர வாதத்தின் நோக்கமாகும்.

**பன்னாட்டு பயங்கரவாதக் குழுக்கள்**

1980 ம் ஆண்டுகளில் ஒசாமாபின்லேடன் என்பவனால் அமைக்கப்பட்ட அல்கைதா (Alquida) என்ற பயங்கரவாத அமைப்பு இன்று உலகெங்கிலும் பரவி பயங்கரவாதத்தை பரப்பிவருகிறது. உலகில் ஒரு ஒருங்கிணைந்த இஸ்லாமிய அரசை (pan Islamic caliphate) உருவாக்குவதே இதன் நோக்கமாகும்.

பாலஸ்தீனத்தில் பல பயங்கரவாதக் குழுக்கள் உள்ளன. அபுநிடல் (Abu Nidal) என்ற அமைப்பு மேற்கு ஆசியப்பகுதியில் உள்ளது. ஹமாஸ் (Hamas) என்ற அமைப்பு 1987-ல் உருவானது. இதன் நோக்கம் இஸ்ரேல் நாட்டை ஒழித்துவிட்டு அந்த இடத்தில் இஸ்லாமிய பாலஸ்தீன அரசை அமைப்பதாகும். இதே நோக்கத்துடன் ஜிகாத், பெட்டா (குயவயா) போன்ற குழுக்களும் செயல்படுகின்றன. லெபனாவி ஹிஸ்புல்லா (Hizbullah) என்ற பயங்கரவாத அமைப்பும் இஸ்ரேலுக்கு எதிராக செயல்படுகிறது.

பிலிப்பைன்சின் தென்பகுதியில் ஒரு சுதந்திர இஸ்லாமிய நாட்டை உருவாக்கும் நோக்குடன் அபுசையீப் குழு (Abbu Sayyaf Group) செயல்படு கிறது. எகிப்தில் அல்காமா அல்கிய்பாமியா அல்ஹொத் போன்ற தீவிரவாதக் குழுக்கள் அல்கைதாவுடன் நெருங்கிய தொடர்பு கொண்டு அமெரிக்கா மற்றும் இஸ்ரேலுக்- கெதிரான பயங்கரவாத நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகிறது. பயங்கரவாதத்தால் படுமோசமாக பாதிக்கப்பட்டுள்ள நாடு இந்தியா ஆகும். காஷ்மீர் விடுதலைக்காக ஹர்கத் உல் முஹாலின் ஜெய்ய் இ முகமது, லக்சர் இதைபா போன்ற பயங்கரவாதக்ணகுழுக்கள் செயல்பட்டு வருகின்றன. இந்தக் குழுக்களுக்கு பாகிஸ்தான் நேரடியாகவே உதவி செய்து இந்தியாவில் பயங்கரவாத நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**பயங்கரவாதத்தின் வகைகள்**

**அடக்குமுறை பயங்கரவாதம் : (Repressive Terrorism)**

ஒருநாடு தனது மக்களையும் முக்கியமாக எதிரிகளையும் இணக்கம் இல்லாதவர்களையும் அடக்குமுறை செய்வதை “அடக்கு முறை பயங்கர வாதம்“ எனலாம். தொடர்ச்சியாக நீண்டகாலம் மக்களை அடக்குமுறை மூலம் கொடுமைப்படுத்துவது ஆகும். முன்னால் உகாண்டா அதிபர் இடி அமீனை இந்த அடக்குமுறை பயங்கரவாதத்திற்கு உதாரணமாகக் கூறலாம் டி)

குறிப்பு

**புரட்சிகர பயங்க ரவாதம் : (Revolutionary Terrorism)**

புரட்சியாளர்கள் தங்கள் புரட்சியை வெற்றிகரமாகச் செய்வதற்கும், அடக்குமுறை மற்றும் ஊழல் ஆட்சியை தூக்கி எறிவதற்கும் பின்பற்றப் படும் பயங்கரவாத நடவடிக்கைகளே புரட்சிகர பயங்கரவாதமாகும்.

**அரசு ஆதரவு பயங்கரவாதம் : (State Sponsored Terrorism)**

அரசு ஆதரவு பயங்கரவாதம் தோன்றியதற்கு மூலகாரணம் அமெரிக்கா ஆகும். கெடுபிடிப்போர் காலத்தில் சோவியத் யூனியனுக்கு எதிராகச் செயல்பட பல பயங்கரவாதக்குழுக்கள் பணஉதவி, ஆயுத உதவி அளித்து வளர்த்து விட்டது அமெரிக்கா தான். தற்போது பாகிஸ்தான் லக்சர் இ தெய்பா, ஹர் தக்தி தெய்பா போன்ற பயங்கரவாதக் குழுக்களை ஆதரித்து வருகிறது. அல்கைதா, தலிபான் போன்ற பயங்கரவாத அமைப்புகள் ஆப்கானிஸ்தான் அரசு ஆதரவுடன் செயல்பட்டு வந்தது.

**கருத்தியல் பயங்கரவாதம் : (Idological Terrorism)**

இந்த பயங்கரவாத செயலில் தீவிர இடதுசாரி மற்றும் வலது சாரிகள் ஈடுபடுகின்றனர். இந்தியாவில் ஆந்திரா, மேற்குவங்காளம், திருபுரா ஆகிய மாநிலங்களில் உள்ள நக்சலைட் இயக்கம், நேபாளத்தில் உள்ள மாவோயிஸ்டுகள் ஆகிய இயக்கம் ஆகியவை கருத்தியல் பயங்கரவாதக் குழுக்களாகும்.

**தற்கொலை பயங்கரவாதம் : (Suicide Terrorism)**

பன்னாட்டு பயங்கரவாதத்தின் புதிய பரிணாமம் தற்கொலைப் பயங்கரவாதம் ஆகும். பாலஸ்தீனத்தில் உள்ள ஹமாஸ், லெபனாலில் உள்ள ஹிஸ்புல்லா, இலங்கையில் இருந்த விடுதலைப் புலிகள் ஆகிய இயக்கத்தினர் தற்கொலைப் பயங்கரவாதத்திற்கு பெயர் பெற்ற இயக்கங்கள் ஆகும். உடலில் வெடிகுண்டுகளைக் கட்டி வெடிக்கச் செய்து அளவில்லாத உயிர் பலி வாங்குவது தற்கொலை பயங்கரவாதம் ஆகும்.

**சைபர் பயங்கரவாதம் : (CyberTerrorism)**

தகவல் தொழில்நுட்பம், கம்ப்யூட்டர் செயல்பாடுகள், கம்ப்யூட்டர் புரோகிராம்கள் ஆகியவற்றை அழிப்பது சைபர் பயங்கரவாதமாகும். ஈரானின் கம்யூட்டர் செயல்பாடுகளை ரகசியமான ஒரு வைரசை ஏவி அதன் எதிரி நாடு அழித்து விட்டதாக ஈரான் குற்றம் சாட்டியது குறிப்பிடத்தக்கது ஆகும்.

**ரசாயன ஆயுத பயங்கரவாதம் : (Bio-terrorism)**

உயிரியல் மற்றும் ரசாயன ஆயுதங்களைக் கொண்டு தாக்குவது ரசாயன ஆயுத பயங்கரவாதம் ஆகும். பேரழிவை ஏற்படுத்தும் ரசாயன ஆயுதங்களை ஈராக் வைத்திருப்பதாகக் கூறி அந்த நாட்டின் மீது அமெரிக்கா படையெடுத்தது. இந்த ரசாயன ஆயுதங்களை ஆப்கானிஸ் தானில் இருந்த சோவியத் படைகள், லவோசில் வியட்நாமியப் படைகள், ஈரானில் ஈராக்கியப்படைகள் பயன்படுத்தின. சாரின், சோமன், ஹைடிரஜன் சயனைட் (Sarin. Soman and Hydrogen Cyanide) போன்றவை ரசாயன ஆயுதங்களாகக் கருதப்படுகிறது.

இவ்வாறு பயங்கரவாதிகள் பலத்தரப்பட்ட பயங்கரவாத நடவடிக் கைகளில் ஈடுபடுகின்றனர். இந்த பயங்கரவாதச் செயல்கள் பன்னாட்டுற வில் பெரும் பிரச்சனைகளை ஏற்படுத்தி வருகின்றன.

**பயங்கரவாதத்திற்கான காரணங்கள்**

பயங்கரவாதம் தோன்றுவதற்கு பல காரணங்கள் சொல்லப் படுகின்றன. அரசாங்கத்தால் நியாயமான கோரிக்கைகள் ஏற்கப்படாதது, அரசியல், பொருளாதார, சிவில் உரிமைகள் மறுக்கப்படுதல், வேலை யின்மை, சமுதாய அரசியல் அநீதி போன்றவைகளைப் பொதுவான காரணங்களாகக் கூறலாம் .

- தற்கால உலகில் பயங்கரவாதம் தோன்றி வளர்ச்சி அடைந்த தற்கான மூலகாரணம் அரேபிய-இஸ்ரேல் பகைமைதான் காரணம். இவர் களுக்கிடையே 1950-ம் ஆண்டுகளில் தோன்றிய பயங்கரவாதம் இன்றும் தொடர்கிறது. பதிலுக்குப்பதில், பழிக்குப்பழி கண்ணுக்கு கண் என்றரிதியில் பயங்கரவதத்தை ஆரம்பித்த பெருமை அராபிய இஸ்ரேல் பகைமையே ஆகும்.
- காலணி ஆதிக்கமும் பயங்கரவாதம் தோற்றக் காரணமாகும் காலனி ஆதிக்கம் நடைபெற்ற நாடுகளில் அடக்குமுறை, சித்திரவதை போன்ற காரணங்களால் பயங்கரவாதம் தலை துக்கியது. ஒருசில நாடுகளில் கொரியா போர் முறையின் ஒரு அம்சமாக பயங்கரவாதம் பயன்படுத்தப் பட்டது. தங்களது மறைவிடங்கள் அழிக்கப்பட்ட போது கொரியா வீரர்கள் பயங்கரவாதச் செயல்களில் ஈடுபடலாயினர்.
- மத அடிப்படை வாதம் (Religious Fundamentalism) உலகில் பல நாடுகளில் பயங்கரவாதம் தோன்றக் காரணமானது. பாலஸ்தீனத்தில் பயங்கரவாதம் தோன்ற யூத சமய அடிப்படைவாதமும், இஸ்லாமிய அடிப்படைவாதமுமே காரணம். 1980 ம் ஆண்டுகளில் பஞ்சாபில் சீக்கிய சமய அடிப்படைவாதிகளால் பயங்கரவாதம் தோன்றியது. மேலும் ஜம்முகாஷ்மீர் மாநிலத்திலும், ரஷ்யாவில் உள்ள செச்சன்யாவிலும், சீனாவில் சிங்சியாங் ஆகிய பகுதிகளிலும் மத அடிப்படைவாதிகளில் பயங்கரவாதம் தோன்றியது. ஒசாமா பின்லேடனின் ஜிகாதி இயக்கத்திற்கு அடிப்படை காரணமே மத அடிப்படைவாதமே ஆகும்
- திட்டமிட்ட குற்றச் செயல்கள் மற்றும் போதைப்பொருள் கடத்தல் ஆகிய செயல்களாலும் பயங்கரவாதம் அரங்கேற்றம் செய்யப் பட்டது. இலங்கையில் இருந்து பிரிவினைவாதிகளான விடுதலைப்புலிகள், செக்சன்யாவில் உள்ள பிரிவினைவாதிகள், பாகிஸ்தானில் உள்ள தீவிர வாத அமைப்புகள் தங்கள் அமைப்புக்கு நிதி ஆதாரத்தை அதிகப்படுத்த போதை பொருள் கடத்தல் தொழிலில் ஈடுபட்டனர்.
- எளிதாக கிடைக்கும் பயங்கர ஆயுதங்கள் பயங்கவாதம் தோன்றுவதற்குக் காரணமாகும். நவீன ரக யுமு 47 துப்பாக்கிகள் ராக்கெட்டு கள் போன்றவைகள் பயங்கரவாதிகளுக்கு எளிதாகக் கிடைக்கிறது. பாகிஸ்தான் ஆப்கானிஸ்தானிய எல்லையில் இவ்வகை ஆயுதங்கள் வெளிப் படையாக விற்கப்படுகின்றன. 1980-ல் சோவியத் யூனியனுக்கு எதிராக அராபிய - ஆப்கானிய தீவிரவாதிகளுக்கு அமெரிக்கா சப்ளை செய்த ஆயுதங்கள் பயங்கரவாதிகள் கைக்கு சென்று விட்டது. அதே ஆபத்து ஈராக்கிலும், ஈரானிலும் உள்ளது.
- பிரிவினைவாதம் பல நாடுகளின் பயங்கர வாதத்திற்கு வித்திட் டுள்ளது. அயர்லாந்திலுள்ள ஐ.சு.யு. (Irish Republican Army), ஒகோஸ்லேவி யாவில் உள்ள குரோஷியர்கள், துருக்கியிலுள்ள ஆர்மீஸியர்கள், இலங்கை - யில் விடுதலைப்புலிகள் , பிலிப்பைன்ஸில் மாரோஸ், இந்தியாவில் காஷ்மீர் தீவிரவாதிகள் போன்றோர் குறிப்பிடத்தக்க பிரிவினைவாதக் குழுக்களாகும்.

இப்படி பொதுவாகப் பல காரணங்கள் கூறப்பட்டாலும் பலநாடு களில் ஆங்காங்கே தோன்றும் உள்ளூர் பிரச்சனைகளாலும் பயங்கரவாதம் தோன்றுகிறது. பன்னாட்டு பயங்கரவாதச் செயல்களை சுயநலத்துக்காக ஊக்குவித்து அதன் பலனையும் அனுபவித்துவிட்ட நாடு அமெரிக்கா தான். பலநாடுகளில் பயங்கரவாதச் செயல்களை மறைமுகமாக ஊக்குவித்தது.

குறிப்பு

தற்போது பயங்கரவாதத்திற்கு எதிரான உலகளாவியல் போரில் ஈடுபட்டுள்ளது அமெரிக்கா.

**பன்னாட்டுறவில் பயங்கரவாதத்தின் தாக்கம் :**

பயங்கரவாதம் பன்னாட்டு உறவில் புதிய சகாப்தத்தை தோற்றுவித் துள்ளது. 2001- செப்டம்பர் 11-ல் அமெரிக்காவிலுள்ள இரட்டைக் கோபுரங்களை விமானத்தை மோதித் தகர்த்த பயங்கரவாதச் செயல் ஒரு திருப்பு முனையாக அமைந்துவிட்டது. இந்த தாக்குதல் பன்னாட்டு உறவின் தன்மை, அமெரிக்கா உட்பட பல நாடுகளின் வெளிநாட்டுக் கொள் கையில் மாற்றத்தை ஏற்படுத்தியது. சர்வதேச சமுதாயம், அமைதி ஒற்றுமை, நல்லிணக்கம் ஆகியவற்றைத் தேடும் நிலை ஏற்பட்டு விட்டது.

உலகில் இதுவரை தோன்றிய பல போர்களை விட தற்போதுள்ள பயங்கரவாதம் பெரும் பீதியை உலககரங்கில் ஏற்படுத்தியுள்ளது. பயங்கர வாதிகளின் தீடீர்த்தாக்குதல்கள் மக்களையும், அரசையும் நிலைகுலையச் செய்து விடுகிறது. இது ஒரு புதிய முறையிலான பாதுகாப்பு அச்சுறுத்தலை ஏற்படுத்தியுள்ளது.

பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான், லிபியா போன்ற நாடுகள் பயங்கர வாதத்தை தங்கள் நாட்டின் தேசியக்கொள்கையின் ஒரு கருவியாகவே பயன்படுத்தியது. இந்தியாவில் தனி சீக்கிய நாட்டை உருவாக்கவும், காஷ்மீர் மாநிலத்தை இந்தியாவிலிருந்து பிரித்து விடுதலையாக்கவும் பாகிஸ்தான் தனது வெளி உறவுக் கொள்கையின் ஒரு அம்சமாகவே அமைந் துள்ளது. எனவே தான் பாகிஸ்தான் ஆதரவு பயங்கரவாதிகள் மிக எளிதாக இந்தியா வந்து 2008, நவம்பர் 26ல் மும்பையில் பயங்கர வாதத்தாக்குதல் தொடுத்து 166 பேரைக் கொன்றனர்.

இப்படிப்பட்ட பயங்கரவாதத்தால் நாடுகளுக்கிடையே நல்லுறவு கெட்டுவருகிறது. பயங்கரவாதச் செயல்களால் இந்தியா பாகிஸ்தான், இந்தியா-வங்காளதேசம், அமெரிக்கா - அராபிய நாடுகள் ஆகிய நாடுகளின் உறவுகள் மீது மோசமாக உள்ளது.

அமெரிக்கா மீது நடந்த பயங்கரவாதத்தாக்குதல் மேற்கத்திய மற்றும் அராபிய நாகரிகங்களுக்கிடையேயான போர் என்றும் வர்ணிக்கப் பட்டது. அமெரிக்காவும், அதன் கூட்டுநாடுகளும் தங்கள் எதிரிநாடுகளின் மீது ராணுவ நடவடிக்கை எடுக்க அவைகள் அவர்களின் எதிரிகளிடம் மேலும் ஒற்றுமையை ஏற்படுத்தி விடுகிறது.

## 14.6 பயங்கரவாதத்திற்கு எதிரானப்போர்

பயங்கரவாதத்திற்கு எதிரான போர் என்பது அமெரிக்காவும் பிரித்தானியாவும் நேட்டோவினதும் நேட்டோ அல்லாத நாடுகளினதும் உதவியுடன் நடாத்தும் பன்னாட்டு படை நடவடிக்கையைக் குறிக்க பொதுவாகக் கையாளப்படும் பதமாகும். முதலில் அல் காயிதா மற்றும் ஏனைய சன்டையிடும் இயக்கங்களை அழிக்கும் நோக்குடன் ஆரம்பிக்கப்பட்ட படை நடவடிக்கையாகும். இதுவரை நிரந்தர சச்சரவின் நிலைக்களனாக இருந்த பாலஸ்தீனத்தில் அமைதி உதயமாகும் சூழ்நிலை தோன்றி யுள்ளது. மாட்ரீட் மாநாட்டைத் தொடர்ந்து இஸ்ரேல், அரபு பிரதிநிதிகள் பேச்சுவார்த்தை நடத்தி வருகின்றனர். விண்வெளியுகம் தோன்றிவிட்ட இக்கால கட்டத்தில் இராணுவ இரகசியங்கள் செயற்கைக்கோள் கண்பார்வைக்கு இலக்காகி அதனை உலகெங்கும் ஒளிபரப்பி விடுகின்றன. உள்நாட்டில் நடைபெறும் கலகம் மற்றும் முக்கிய நிகழ்ச்சிகள் உலககெங்கும் வெளிப்படையாகி வருகின்றன.

உலக மக்கள் பிரச்சனை குறித்து உலக நாடுகள் சிந்திக்கத் தொடங்கியுள்ளன. போபால் விஷவாயு கசிவும், செர்ணோவில் அணுக்கசிவும் உலக மக்களை அச்சுறுத்திவிட்டது. வீணாகிக் கடலில் கொட்டப்படும் பெட்ரோலியம் மற்றும் எரிந்து வரும் எண்ணெய் கிணறுகள் உலகச் சுற்றுப்புறச் சூழலை விஷமாக்கி வருகின்றன் போதைப் பொருட்கள்

கடத்தலை உலக நாடுகள் அனைத்தும் ஒருங்கிணைந்து தடுக்க வேண்டும் என்ற எண்ணம் வலுத்து வருகிறது. அதேபோல் பயங்கர வாதம் தடை செய்யப்பட வேண்டும் என்று நாடுகள் வேண்டுகோள் விடுக்கின்றன. இவையெல்லாம் பன்னாட்டுறவில் மாறுதல்களை நிகழ்த்தியுள்ளன. இறுதியாக, ஐ.நா. சபையின் இன்றியமையாமையை உலக நாடுகள் உணரத் தொடங்கியுள்ளன. போரற்ற 48 ஆண்டுகளை உலகிற்குத் தந்த ஒப்பற்ற நிறுவனம் எனப் போற்றுகின்றனர். எட்டு ஆண்டுகள் ஈரான், ஈராக் போரை நிறுத்தியது. பன்னிரண்டாண்டு ஆப்கானிஸ்தான் குழப்பத்திற்கு அமைதி வழிகண்டது. நமீபியா சுதந்திரத்திற்குப் பாடுபட்டது. குவைத்தை ஈராக் ஆக்கிரமித்தபோது வெறும் தீர்மானம் மட்டும் இயற்றிக் கொண்டிருக்கவில்லை. ஆக்கிரமிப்பை அகற்ற படை திரட்டி போர்புரிய அனுமதி வழங்கியது. அதனால் ஆக்கிரமிப்பு அகற்றப்பட்டது. அதன் கிளை நிறுவனங்கள் உலகளாவிய சமுதாயத்தை நிர்மாணிக்கும் பணியைப் புரிந்து வருகின்றன. இவ்வாறு மாறிவரும் உலகச் சூழ்நிலை பன்னாட்டு உறவிலும் மாறுதல்களை ஏற்படுத்தியுள்ளது.

குறிப்பு

**உங்கள் முன்னேற்றத்தைச் சரிபார்க்கவும்**

1. ஈரான் -ஈராக் மோதல் பற்றிக் குறிப்பிடுக?
2. வளைகுடா போர் பற்றி விவரிக்கவும்?

## 14.7 உங்கள் முன்னேற்றத்தை சோதிக்கும் வினாக்களுக்கான விடைகள்

ஈரான் – ஈராக் இடையிலான எல்லைக் கோடு பல நூற்றாண்டு காலமாகவே சர்ச்சைக்குரியதாகவே இருந்து வந்துள்ளது. 1534 ல் தற்போதைய ஈராக்கை ஒட்டமான் பேரரசு ஆக்கிரமித்த பின்பு சாம்ராஜ்ஜியத்தின் கிழக்குப் பிராந்தியமாக ஈராக் மாறியது.

இருபதாம் நூற்றாண்டின் இறுதியில் நடைபெற்ற நிகழ்ச்சிகளில் முக்கியமானது 1991-ம் ஆண்டில் நடைபெற்ற வளைகுடாப்போர் ஆகும். இதற்கு முன்பு நடைபெற்ற போர்களை விட இப்போர் பலவகை களில்முக்கியத்துவம் பெறுகிறது. உலகத்தில் அமைதியை ஏற்படுத்து வதற்காக அமைக்கப்பட்ட ஐ.நா சபையின் தலைமையில் பல உலக நாடுகள் ஒன்று சேர்ந்து குவைத் நாட்டை ஆக்கிரமித்த ஈராக் நாட்டிற்கு எதிராக நடத்திய போராகும் இது. இப்போரில் இறுதியில் ஈராக் தோற்கடிக்கப்பட்டு குவைத் விடுவிக்கப்பட்டது. இப்போரின் விளைவாக பன்னாட்டுறவில் பல மாற்றங்கள் ஏற்பட்டது. .

## 14.8 சுருக்கவுரை

பயங்கரவாதத்தில் உலகநாடுகளிடையே மீண்டும் ஒரு பிளவு ஏற்பட்டுள்ளது. பயங்கரவாதிக்களுக்கு எதிரான போரில் எங்களோடு சேருங்கள் அல்லது பயங்கரவாதிகளோடு இருங்கள் என்று அமெரிக்க குடியரசுத்தலைவர் ஜார்ஜ் புஷ் கூறினார். இதனால் உலகம் இரு கூறாக பிரியும் நிலை ஏற்பட்டது. ஆனால் இந்த கருத்தை பின்னர் அமெரிக்கா மாற்றிக்கொண்டது. பயங்கரவாதம் பன்னாட்டுறவில் புதிய கூட்டணி அமையக் காரண மாக அமைந்தது. உலக வர்த்தக மையத்தாக்குதலுக்குப் பிறகு தலிபான் கொட்டத்தை அடக்க பல உலக நாடுகளுடன் கூட்டனி அமைத்து ஆப்கானிஸ்தான் மீது அமெரிக்கா படையெடுத்தது. அங்கிருந்த தலிபான்கள் ஆட்சியை வீழ்த்தியது. பயங்கரவாதத்தை ஒழித்துக்கட்ட அங்கு நேட்டோ படைகள் களமிறங்கி உள்ளன.

கெடுபிடிப்போர்காலத்தில் முதலாளித்துவத்திற்கும் கம்யூனிசத் திற்குமிடையே தான் போட்டியிருந்தது. 1990-ல் கம்யூனிசம் வீழ்ச்சி அடைந்த பிறகு அதன் இடத்தை பயங்கரவாதம் பிடித்துக் கொண்டது. தற்போது மேற்கத்திய நாடுகள் பயங்கரவாதத்திற்கு எதிரான போரில் ஒன்று

குறிப்பு

சேர்ந்துள்ளன. ஆப்கானிஸ்தானில் தலிபான்கள் விரட்டியடிக்கப்பட்டனர். ஈராக்கில் சதாம் உசேன் ஒழித்துக் கட்டப்பட்டார். ஆனாலும் பயங்கரவாதத் தின் செயல்பாடுகள் பல நாடுகளில் பரந்து விரிந்துள்ளது. பயங்கரவாதத்தினால் பன்னாட்டுறவில் அமெரிக்காவின் ஆதிக்கம் ஏற்பட்டுள்ளது. தனது ராணுவ வலிமையை வெளிப்படுத்துவதற்கு இதனை ஒரு சந்தர்ப்பமாகப் பயன்படுத்திக் கொண்டது. தனது படை வலிமையை மத்திய ஆசியாவில் நிலைப்படுத்தியுள்ளது. இதன் மூலம் ரஷ்யா, சீனா, இந்தியா ஆகிய நாடுகளுடன் சில மோதல் போக்குகளும் ஏற்பட்டுள்ளது. பயங்கர வாதத்தை எதிர்க்கொள்ளவும், அதன் சவாலைச் சமாளிக்கவும் பல்வேறு நாடுகளுடன் ஐ.நா. சபையும் பல நடவடிக்கைகளை எடுத்து வருகிறன.

## 14.9 முக்கிய வார்த்தைகள்

ஈரான் -ஈராக் மோதல் வளைகுடா போர் இஸ்லாமிய நாடுகளில் அமைப்பு சா்வதேசப் பயங்கரவாதம் பயங்கரவாதத்திற்கு எதிரானப்போர்.

## 14.10 சுய மதிப்பீடு வினாக்கள் மற்றும் பயிற்சிகள்

**சுருக்கமான கேள்விப் பதில்கள்**

1. இஸ்லாமிய நாடுகளில் அமைப்பு பற்றி மதிப்படுக?
2. ஈரான் -ஈராக் மோதல பற்றி குறிப்பு வரைக?

**விரிவான கேள்விப் பதில்கள்**

1. சா்வதேசப் பயங்கரவாதம் பற்றிக் கட்டுரை வரைக?
2. வளைகுடா போர் மதிப்பிடுக?

## 14.11 மேலும் படிக்க


- Benja Man. (1981). ***International Terrorism: Challenge and Response Transaction***.
- L. Ali Khan. (2006). ***A theory of International Terrorism***. Martinus Nijhoff Publishers.
- Ben Saul.(2014). ***Research Handbook on International Law and Terrorism***. Edward Elgar Publishing.
- Jussi M. Hanhimäki. (2013). ***An International History of Terrorism: Western and Non-Western Experiences***. Routledge.

குறிப்பு

**மாதிரி வினாத்தாள்**

**DISTANCE EDUCATION- CBCS (2019-2020 Academic Year onwards)**

**Question Paper Patterns (ESE) – Theory**

(UG/PG/P.G. Diploma Programme)

Time: 3 Hours Maximum: 75 Marks

Part-A (10X2= 20 Marks)

**Answer all questions**

1. அதிகார சமநிலை
2. கூட்டுச்சேராக் கொள்கை
3. START
4. CTPT
5. வளைகுடாப் போர்
6. IBSA
7. காங்கோ பிரச்சினை
8. ECE
9. யு$_2$ நிகழ்ச்சி
10. அராப்லீக்

Part-B (5X5=25 Marks)

**Answer all questions choosing either (a) or (b)**

11.(a). கூட்டுப் பாதுகாப்பிற்கும், அதிகாரச் சமநிலைக்கும் உள்ள தொடர்புகளை விளக்குக?.

(அல்லது)

(b)ASEAN- குறிப்பு வரைக?

12 (a) உலக அரசியலில் மத்திய கிழக்கு நாடுகளின் எண்ணெய் வளத்தின் முக்கியத்துவத்தை ஆய்க.?

(அல்லது)

(b) OPEC குறிப்பு வரைக.?

13 (a) உலக அரசியலில் தென்கிழக்கு ஆசியாவின் பங்கினைப் பற்றி ஒரு கட்டுரை வரைக.

குறிப்பு வரைக?.

(அல்லது)

(b) OPEC குறிப்பு வரைக.?

14. (a) பயங்கரவாதத்தைப் பற்றிய கருத்துக்களை வரையறுக்க?

(அல்லது)

(b) அரபு- இஸ்ரேல் போரினை விளக்குக?

15. (a) கொரிய போர் மற்றும் வியட்நாம் போர் குறிப்பு வரைக?

(அல்லது)

(b) ஈரான்-ஈராக் போரினை குறிப்பு வரைக?

**Part –C (3x 10=30)**

**Answer any 3 out of 5 Questions**

16.அதிகாரச் சமநிலை என்ற கோட்பாட்டை விளக்குக. அதிகாரச் சமநிரல தோற்றுவிக்கும் வழிமுறைகளையும் அதன் விளைவுகயையும் விவரிக்க.?

17. கடுபிடிப்போருக்கான காரணங்கள் யாவை? ஆதன் தன்மை மற்றும் போக்குகளை விவரிக்க.?

18. இராண்டாம் உலகப் போருக்குப்பின் படைக்குறிப்புப்பற்றி கட்டுரை வரைக.?

19. உலக அமைதியை நிலைநாட்டுவதில் ஐக்கியநாட்டு சபை புரிந்துள்ள சாதனைகளைத் திறனாய்வு செய்க.?

20.கூட்டுச்சேராக் கொள்கை பன்னாட்டு அரசியலில் உருவாக்கிய விளைவுகளை மதிப்பீடு செய்க.?